உ

கடவுள் துணை.

முப்பத்திரண்டு
பதுமைகதை.

இஃது

மயிலம்

சுப்பிரமணிய சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

—*—

1902.

சென்னை - ஆசாரப்பன் தெரு, 84 - ெந.

உ

கடவுள்துணை.

முப்பத்திரண்டுபதுமை கதை.

———)(*)(———

விநாயகர்துதி.

புதுமையாநற் போஜன்புக்கிக்குறப்
பதுமைசொன்ன கதையின்பகுப்பெலாம்
சதுமையான கடகறிகாற்றொழீஇ
முதுமையான தமிழின்மொழிகுவாம்.

கதையினுடைய வரலாறு.

கடல்புடைசூழ்ந்த பூலோகத்தில் உச்சினிமாநகரத்தில்க்ஷத்திரியர்குலத்தில் உற்பவித்தவிக்கிரமார்க்கனென்பவன் கைலாயபதியாகிய பரமசிவனைக்குறித்து கொடியதவஞ் செய்யும்போது விக்கிரமார்க்கன செய்யுந்தபாக்கினியானதுகைலாயத்திற்குப்போய்த்தகிக்கஉமையவள் பார்த்து பரமசிவனைக் குறித்து இந்த அக்கினிச்சுவாலை இங்குவரவேண்டியதென்னவென்று கேட்கச் சுவாமிபூமியிலே விக்கிரமார்க்கன்மிகவும்அகோரமானதபசுபண்ணுகிறான் அவன்தபாக்கினியானது கைலாயத்தில்வந்ததென்றுசொல்லிதானும்உமையவளும்இடபத்திலேறிப்பூமியில்வந்து விக்கிரமார்க்கனுக்குதெரிசனங்கொடுத்து என்னவரம்வேண்டுங்கேளென்ன விக்கிரமார்க்கன்சுவாமிஎனக்குமனிதர்வயதுக்கு மேலானவயதும் தெய்வதத்துவமுங்கூடுவிட்டுக்கூடுபாய்கின்றமுதலான அஷ்டமாசித்தி வல்லமைகளும் சவுரியபராக்கிரமம் சகலகல்விகளும் எல்லாநற்குணங்களும் உண்டாக வரம்வேண்டுமென்றுகேட்க பரமசிவன்மனமகிழ்ந்து நீஆயிரவருஷம் உயிரோடிருந்து உலகத்தையாளவும் நீகேட்டுக்கொண்டபடி எல்லாவரமுங்கொடுத்தேன் இந்திரனால் ஒருசிங்காதனமுனக்கு கொடுப்போமென்றும்பலதேவதைகள்கிருபையும் பெறுவாயென்று முடிவிலேதெய்வதத்துவத்தின்படி ஒருகுயவனது பெண்வயிற்றிலேஒருஆண்பிள்ளைபிறக்கும் அந்தப்பிள்ளையுந்தெய்வதத்துவமுள்ளதாகவிருக்கும் அதன்கைச்சக்கரத்தினாலே நீமரணமாவாயென்றும் வரங்கொடுத்துப்போய்விட்டார்விக்கிரமார்க்கன்வரம்பெற்றுவந்தவுடனே தம்பிபட்டியானவன்எல்லாஞ்சேட்டி காளியிடத்தேகி

தனக்கு இரண்டாயிரம் வயது வரம்பெற்றுக்கொண்டு அரசனிடத்து வந்து பரமசிவன்திருவாக்கின்படி ஆயிரம்வருஷம் அரசாளுகிற தொகையைக் காட்டில்ஆறுமாதம வனசஞ்சாரியாகவும்நாட்டிலாறுமாதம இராசாதிபதியாகவுமிருந்தால்இரண்டாயிரவருஷம்வாழ்வோமே இருக்கலாமென்ன விக்கிரமார்க்கன் அப்படி செய்யலாமென்று சம்மதித்திருந்தான்

காமதேனு கற்பகத்தரு சங்கநிதி பதுமநிதி ஐராவதமுதலியபல வளங்களுமுப்பத்துமுக்கோடிதேவர்களும்நாற்பத்தெண்ணாயிரமுனிவர்களும் புடைசூழும்படி கோடானகோடி சூரியர்கள் உதயமானாற்போலும்விளங்காநின்றநவமணிகளிழைத்த கொலுமண்டபத்தில் அரம்பைமேனகைஊர்வசிதிலோத்தமைமுதலானவர்கள் நடனமாடவும் கின்னரர்கிம்புருடர்பாடவும் தேவகன்னிகள் வெண்சாமரைபோடவும் நவசித்தர்கள்கொண்டாடவும் தேவேந்திரமகாராசன் கொலுவீற்றிருக்கையில்பூலோகத்தில்நெடுநாளாகஇல்லறமுறைமை வழுவாமல்பரிசுத்தமாகநித்தியகருமங்களைமுடித்துவேதபாராயணசாஸ்திரங்களையறிந்துகடவுள்வழிபாட்டிலேமனதைச்செலுத்திதவமேபொருளாகக்கொண்டிருக்கிற சுசீலனென்கிற பிராமணன் ஒருநாள் தேவலோகத்திற்கு தேவேந்திரன் திருக்கொலுவுக்குப்போனான் அவன்வந்ததைதேவேந்திரன்கண்டு இப்பிராமணனை மானிடனாகஅவதாரஞ்செய்திருந்தும் இவன்தெய்வீகமும் பரிசுத்தமுமுடையவனென்றுஎண்ணிகொண்டு அபூர்வமான ஒருமாம்பழத்தை பிராமணனுக்குக்கொடுத்தான் அப்பிராமணனுனசுசீலன மாங்கனியைக்கொண்டு இந்திரனிடத்தில்விடைபெற்றுப்பூலோகத்தில் தன்னிடத்திற்குவந்து அரசனிடத்திலேகி அக்கனியைகொடுத்தாசீர்வாதஞ்சொல்லி பின்னும இராசனேகேள்பிரபுவே இக்கனி இந்திரனாற்கொடுக்கப்பட்டது இதன்பெருமையுமருமையுமுருசியும் ஆதிசேடனாலும்சொல்லி முடியாதினைநீர்புசிக்கவேண்டும் இதனால் வரும்பலன் அனேகமென்றுசுசீலனென்னும்பிராமணன்சொல்ல வேதாந்தகௌசரியென்னும் இராசன் இப்பிராமணன் நம்மிடத்தில்மிகவும் உள்ளன்புடையவனானபடியாலேதனக்குக்கிடைத்த அரிதானமாங்கனியைநமக்குக்கொண்டுவந்துகொடுத்தான் இவனுக்குநாம்சந்திரசூரியருள்ளவரையிலும் சிலகிராமங்களை சொந்தமாகவிடுவோமாகில் இப்பிராமணன்சந்ததிக்குச் சுதந்தரமாயிருக்குமென்று அரசன்யோசித்துசிலகிராமங்களைக் கைகொள்ளும்படி தான்பத்திர மெழுதிக் கொடுத்துவிட்டான் பிராமணன்பற்றிகொண்டுபோனான்

அரசன்மாங்கனியைத்தன்னுயிர்த்துணையாகிய மனோரஞ்சிதவல்லியிடத்திற்கொடுத்தான் அவள்வாங்கித்தனக்குமோகமாகவிருக்கிற இரதசாரதியாகிய மோகாங்கனிடத்திற்கொடுத்தாள் அவன் அதைவாங்கித்தனக்கிஷ்டமான பாங்கிமதனவல்லிகையிற்கொடுத்தாள் அவள்வாங்கி தனக்காசையுள்ள கள்ளநவன்மாலைகட்டிமாப்பிள்ளைராயனிடத்தில் கொடுத்தாள் அவன்வாங்கிதன்தேவி அரண்மனை தாதிகையிற்கொடுத்தான் அவள்வாங்கிகனியைக் கையிலேந்தி இராஜமாளிகைப்பெருக்கவருகையில்வேதாந்த கௌரியென்னும் இராசன எதிர்ப்பட்டு அடிபெண்ணே இக்கனி உனக்கெங்ஙனங்கிடைத்தது இதைத்தாவென்று கேட்க அவ்வரசன்கையிற்கொடுத்து கைகட்டிவாய்புதைத்துநிற்கையில் இராசன் சுசிலனென்னும்பிராமணனை வரவழைத்துஓபிராமணா நீஇம்மாங்கனிஎனக்குக்கிடையாது மிகவும் அருமையானதென்றுபொய்சொன்னாயே ஆக்கனியைப்போலவே யிக்கனியிருக்கின்றதே இவள்கொண்டுவந்ததை நன்றாகப்பாரென்றுசொல்லசுசிலனென்னும் பிராமணன்கேளும் மகாராசனே (கெட்டிக்காரன்பொய் எட்டுநாளில்தெரியும்) என்றபழமொழிப்படி நான்சொன்னபொய் சற்றுநேரத்திலேதெரியும் ஆகையினுமேலுமிக்கனியைக்கொடுத்தவர்களார்இக்கனி இவளிடத்திலெப்படிவந்தது சாமபேததானதண்டம்என்னும் உபாயநான்குஇவற்றுள்தண்டவுபாயத்தினாலே யிவளைவிவரித்தால்உண்மைவிளங்கும்என்று சுசீலன் சொல்லிப்போனான் அரசன்மெய்யென்றுமந்திரிகளைக்கொண்டுஇவளிடத்தில் இந்தமாம்பழம்எவ்விதமாகவந்தது இதைதண்டவுபாயத்தினால்விசாரியுங்களென்ன அரசன்சொற்படிக்கு மந்திரிகள்விசாரிக்கையில் (அடிமேலடியடித்தாலம்மியுநகரும்) என்றபழமொழிப்படிவரன்முறையாக அவரவர்கள்கையிலிருந்து மாங்கனிவந்ததை தெரிந்து இதைவேதாந்தகவுரியென்னும் அரசன்கண்டு மனம்விண்டுவிசனங்கொண்டு (யானைநம்பினாலும்நம்பலாம்பெண்களைநம்பலாகா) தென்றவாக்கியம்உண்மையென்றெண்ணியோசனைபண்ணிதுறவறவழியிலேசென்று தவமுயற்சியிலேநின்று சுத்தசைதன்னியமாகிய நித்தியவஸ்துவின் கிருபையைப்பெறுவதே அரசாட்சி நாமாளுகிறது அரசாட்சியல்லவென்றுநிச்சித்தனுகதம்பிவிக்கிரமார்க்கனைவரவழைத்துதன்றுடைய இராச்சியமுற்றும் அவன்வசத்திலொப்பிவித்துநல்லசுபதினத்தில்விக்கிரமார்க்கனுக்கபிஷேகம்செய்வித்து சபாமண்டபத்தில் நவமணிசிங்காதனத்தில் அவனை எழுந்தருளச்செய்து பொன்முடிசூட்டி செங்கோல் கொடுத்து அப்பாவிக்கிரமார்க்கனே நீதம்பிபட்டியையமந்திரியாகவைத்துக்குவலயமெல்லாம்ஒருகுடைநிழலுக்குள்ளே மநுமுறைப்படிக்குச்

செங்கோல் செலுத்தவசயாகவென்று வாழ்த்திவரங்கொடுத்தும் காட்டிலே தபசுசெய்யப்போய்விட்டான் தமயன் வேதாந்தசௌரியாகியபத்திரகிரிபாசன் சொல்லைசிரமேற்கொண்டு தம்பியாகிய விக்கிரமார்க்கனென்னும் மிராசன் மனுநீதிமுறைமைக்தவறாது புலியும் பசுவும் ஒருகரையிலே தண்ணீர்குடிக்கவும பருந்துங்கிளியும் ஒருகூண்டிலே பட்சமாகவிருக்கவும் பாமபின்மடத்துநிழலிலே எலி -டுக்கவும் ஓநாய்களுக்கு குரங்குகள்பேனெடுக்கவும் ஓநாய்களும் ஆடுகளும் உலாவித்துலாவவும் பாம்புங்கீரியும் பரிந்துவிளையாடவும் பூனையும்எலியும் புகழ்ந்துவிளையாடவும சிங்கமும்சர்ப்பமும் சிரித்துசினேகிக்கவும் யானையும்யாளியும் துதிக்கையோடுதுதிக்கை கோர்த்துக்குலாவவும மயிலும் ஓந்தியும் மகிழ்ந்துசஞ்சரிக்கவும் புலிக்குபூனை சலாஞ்செய்யவும் முயல்களுக்கு நாய்கள் முத்தங்கொடுக்கவும் யாதொருபயமுமில்லாமல்செங்கோலசெலுத்தி வருநாளில் ஒருநாள் ஒருசைவப்பிராமணன் விக்கிரமாதித்தனுக்குச் சினேகிதமாக அப்பிராமணன் முகாந்திரமாய் விக்கிரமார்க்கனுக்கு வேதாளம் வர்த்தமானகாலத்திலே விஸ்வாமித்திரர்கைலையங்கிரிசாரிலே தபசுபண்ணிக்கொண்டிருக்கையில் அவரிடத்திலிருந்துநாரதமகாமுனிவர் பூலோகசஞ்சாரஞ்செய்து பொன்னுலகமென்னும்சுவர்க்கலோகத்திற்குப்போனர் அதுகண்டு தேவேந்திரனெதிர்கொண்டு போய் நாரதருக் கிருப்பிடங்கொடுக்க அவர்வீற்றிருக்கிறபோது இந்திரன்கொலுவீற்றிருந்தார் அப்பொழுது மேனகை ரம்பை திலோர்த்தமை ஊர்வசி இந்நால்வருமநடனமாடினார்கள்.

அந்தநடனத்தை தேவேந்திரன் நாரதரைப்பார்த்து மகா முனிவரே இந்நால்வருக்குள் ஆடலிலும்பாடலிலும் வல்லவளெவள் அவளைக்குறித்துச்சொல்லுமெனை நாரதர்இந்திரபூபதியே பூலோகத்திலேசங்கீதபரதசாஸ்திரங்களிலே வல்லவனாகியவிக்கிரமார்க்கனென்றொரு ராசனிருக்கிறான் அவனைக்கேட்டால் இவர்களுடையஆடல்பாடல்களைப் பகுத்துச்சொல்வான் அவனை இவ்விடத்திற்கு வரவழையுங்களென இந்திரன் பூலோகத்திலும் அப்பேர்ப்பட்ட வல்லவனிருக்கிறானா அப்படியானால்இப்பொழுதவனைதேவதூதரால்இங்குவரவழைக்கிறேனென்று ஒருதேவதூதனைநோக்கி தூதனே நீஒரு புஷ்பரதங் கொண்டுபோய்ப் பூலோகத்தைபாளுகின்ற விக்கிரமார்க்கனை யழைத்துக் கொண்டு வாவென தேவதூதன சுவாமி தங்கள்திருவாக்கின்படி இதோயழைத்துவருகிறேனென்று புஷ்பரதமேறிக்கொண்டு பூலோகத்தில்வந்து விக்கிரமாதித்தனிருக்கிற விடத்திலிறங்கினான்.

ஆகாயத்திலிருந்து புஷ்பத்தேரிறங்கினதைவிக்கிரமார்க்கன்கண்டுபயங்கொண்டு இருகரங்களுஞ்சிரமேற்கொண்டு என்தெய்வமேஎளியேனைக்குறித்து இவ்வுருவத்தகாரணம் என்னமோயானறிந்திலேன் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பணிந்துநிற்கவே தூதன்விக்கிரமார்க்கனே உன்னை என்னாண்டவனாகிய தேவேந்திர மகாராசனழைத்துவரக்கட்டளையிட்டார் நீவரவேண்டுமென்றழைக்க விக்கிரமார்க்கன்தேவராசன் என்னையழைத்துவரச்சொன்னது நான்செய்த பாக்கியந்தான் இதோவருகிறேனென்றுசொல்ல தேவதூதன் அரசனை புஷ்பகவிமானத்திலேற்றிக்கொண்டு இந்திரன்கொலுவில்விட்டான் இந்திரன் விக்கிரமார்க்கன் பண்ணியசாலியானபடியால் அவன்மரியாதையுடன்சிங்காசனத்திலுட்காரவைத்து மனமகிழ்ந்து முகமன்புகூறி விக்கிரமார்க்கபூபதியே நீர் ஆடல்பாடல்களில் வல்லவரென்று நாரதமுனிவனெனக்குசொல்லியிருக்கிறாரதனால் என்சபையிலாடுகிற தேவகன்னிகையர்நாலவருக்குள்ளே எவளெவள் ஆடல்பாடல்களில்வல்லவள் இதைத் தாங்களறிந்து எனக்குந்தெரிவிக்கவேண்டுமென இராசன் தேவேந்திரமகாராசனே யான்பூலோகத்தரசன் அறிவிலாச்சிறியன் நானேயித் தேவமாதர்களுடைய திறமையறிந்துசொல்லவல்லவனல்லவே தாங்களென்னை ஒருபொருட்டாக மதித்துக் கேட்டதால தங்களை யான்காணப்பெற்ற தங்களனுக்கிரகத்தைப்பற்றி என்னாற்கூடியமாத்திரஞ் சொல்லுகிறேன்.

இங்ஙனம் நடனமாடுகிற நால்வருக்குள்ளே அரம்பையானவள்பரதசாஸ்திரமுறைப்படிக்கு சுதிபிறழாது துளைக்கருவிதோற்கருவிகஞ்சக்கருவியென்னு முக்கருவிகளுக்குமொத்த தொனியின்படி பதம்பெயர்த்து அபிநயங்காட்டி தேவருமுவருமயங்கும்படியாடினாள் ஊர்வசியானவள் சங்கீதசாஸ்திரவிதிப்படிக்கு இராசகதியானம்பிசகாமல்சரளிகாங்களும்பிறழாமல் நரம்புக்கருவியும் மிடற்றுக்கருவியும் பகுத்தறியக்கூடாதவண்ணமாய் சுவரிலெழுதியசித்திரம்போல சற்றுமசையாது நின்றுகல்லுங்கரைந்துருகப்பாடினாளென்று விக்கிரமார்க்கன் சொன்னவுடனே தேவேந்திரனிருதயமுங்களிக்கத் திருமுகமலர்ந்து உடல்பூரிக்க விக்கிரமார்க்கனைப்பார்த்து ஓ பூலோகத்தரசனே! உன்போலுஞ்சங்கீதபரதசாஸ்திரங்களிலே வல்லவர்களை சுவர்க்கமத்திய பாதாளங்களிலேயுங் கண்டதில்லையென்று ஒரு பட்டுபீதாம்பரத்தை அவனுடுத்திக்கொள்ளும்படிச்செய்து கோடாகோடி சூரியனுதயமானாற்போலும் நவமணிகள்பிரகாசிக்கும்பெருமையையும சித்திரத்திலுமெழுதப்படாத வடிவுபொருந்திய முப்பத்திரண்டு பதுமைகளையும்படிக்குப்படி அணி

யளியாக உதிரம்பொருந்திய அட்டசிங்கந்தாங்கும் ஒருசிங்காதனத்தை அவனுக்குக்கொடுத்தனுப்பினர் விக்கிரமார்க்கன் பட்டுபீதாம்பரத்தையுஞ்சிங்காதனத்தையும் தேவேந்திரனிடத்திற்பெற்றுக்கொண்டு பூலோகத்தில்தன்னுடையஉச்சினிபுரத்திற்குவந்து அரண்மனையிலரசிருக்கை மண்டபத்தில்சிங்காதனத்தைவைத்து பூசைமுதலானவைகளைச்செய்தான்மிகவும்பரிசுத்தமனமுடையவனாக முப்பத்திரண்டுதருமங்களையும்நடத்திகுடிகளுக்கு தன்னிடத்திற்குறைமுறையில்லாமல் ஆறிலொருகடமைவாங்கி மாதமும்மாரிபெய்யவும்வருஷமுப்போகம்விளையவும்சத்தியந்தவறாது தேவபத்தியுடன் அச்சிங்காதனத்திலிருந்துசெங்கோல்செலுத்திவருங்காலத்தில்பிரதிட்டாபுரியென்றொருபட்டணமுண்டு அந்தப்பட்டணத்திலே தேவசிரோன்மணியென்றொரு பிராமணனிருந்தான் அவன்மனைவிதிவ்யசிந்தாமணிவயிற்றில் அபுரூபகண்மணியென்றொருபெண்பிறந்தது அந்தப்பெண்வயதில்அதிரூபசௌந்தரியமுடையவளாகவிருந்ததை ஆதிசேடன்கண்டுமோகங்கொண்டுபுணர்ந்தான் அவன் புணர்ந்ததினாலே அப்பெண்வயிற்றில் ஒருஆண்பிள்ளைபிறந்தது அந்தஆண்குழந்தையைப் பெண்ணைப்பெற்றபிராமணனும்பிராமணத்தியுங்கண்டுவெட்கங்கொண்டுகையிலெடுத்து குயவன்வீட்டுக்குப்பையிலேபோட்டுவிட்டுப்போய்விட்டார்கள் தேவசகாயனென்கிறகுயவன் வீட்டைவிட்டுவெளியில்வந்துபார்க்கையில் தான்பிள்ளையில்லாதவனாகையால் தேடப்போனமருந்துகாலிற்பட்டாற்போலும் கும்பிடப்போனதெய்வங்குறுக்கேவந்தாற்போலும்பிள்ளையையெடுத்துமார்போடணைத்துமுத்தங்கொடுத்து யார்பெற்றபுத்திரனோநான்செய்ததவப்பயனோ இதுயெனக்குக்கிடைத்ததென்றுவீட்டிற்கொண்டுபோய் தனமனைவி அமிர்தவல்லிகையிற்கொடுத்துபெண்ணே இப்பிள்ளையை தெய்வங்கொடுத்தது அன்பாகவளர்த்துக்கொள்ளென அப்படியவன்வளர்த்துவருகையில் தேவசகாயன் வளர்த்துவருகிறபிள்ளைக்குசாலிவாகனனென்று நாமந்தரித்து சகலகலையுங் கற்பித்தான் அப்பிள்ளை இளையவயதிற் சகலமுங்கற்று மண்ணினாலே யிரதம் யானைசேனைகுதிரை யிவைகளை அனேககோடிகளாகச்செய்துகுழிபோட்டுக்கொண்டு விளையாடிவருங்காலத்திலே விக்கிரமார்க்கனுக்கு துற்குணங்களும் துற்குறிகளும் காணப்படுவதல்லாமலும் தன்னுடையவீரசூரபராக்கிரமங்களும் நாளுக்குநாள் பொறுமையுள்ளவர்கள் செல்வங்குறைதல்போலகுறைந்துவருவதைக்கண்டு விக்கிரமார்க்கன் தன்சபையிலுள்ள பெரியோர்களைப்பார்த்து புண்ணியபுருஷர்களே எனக்குத்துற்குணங்களும் துற்குறிகளும் சம்பவிக்கக் காரணமென்னவென்றுகேட்க சபையார்ஓ விக்கிரமார்க்

ராசனே தெய்வீகத்தன்மைபொருந்திய உமக்குந்தெரியாதகாரியங்கள் எங்களுக்கெப்படித்தெரியுமென்றார்கள் அதற்குவிக்கிரமார்க்கன் முற்காலத்திலே தபசுசெய்து பரமசிவனுடைய காட்சியைக்கண்டு அவரைவரங்கேட்டபோது அவர் உனக்கென்ன வரம்வேண்டுமென்றுகேட்டார் நான் எனக்கு தெய்வதத்துவமில்லை உனக்குமாத்திரந் தெய்வதத்துவந்தந்தேன். உன்னை தேவர்முதலானவர்களும் தியானம் பண்ணுவார்களென்றுசொல்லி இனிமேல் பூமியில் தெய்வதத்துவமாக ஒருவயது பெண்வயிற்றிலே ஒருபிள்ளையுற்பத்தியாகும் அந்தப் பிள்ளையினால் உனக்கு மரணமுண்டாகுமென்று திருவாய்மலர்ந்தருளினார் அந்தப் பிரகாரம் தெய்வீகமாக ஒருவயதுபெண்வயிற்றில் ஒருபிள்ளைபிறந்து வந்தாலல்லவோ அப்பிள்ளையாலே யான்மரணமடையவேண்டும் அப்படிக்கிப்போது பிள்ளை உற்பத்தியாகவில்லையே ஏனிப்படி துற்குறிகளும் துற்சகுனங்களும் காண்கிறதென்று யிராசன்கேட்க சபையார் சொல்லுகிறார்கள்.

எங்களாண்டவனேசகலபுவனகர்த்தாவாகிய பரமசிவனார்திருவாக்குக்கெதிர்வாக்கிருக்கு அவர்சொற்படிக்கு ஒருவயதுபெண்வயிற்றிலே ஒருபிள்ளைபிறந்திருக்கக்கூடும் வெள்ளம்வருமுன்னே அணைபோடவேண்டும் சிறியபாம்பாகிலும் பெரியதடிகொண்டடிக்கவேண்டும் ஆகையால் தீமிஞ்சவைத்தாலும்பகைமிஞ்சவைக்கலாகாதென்பது சத்துருவை கருவறுக்கவேணுமென்று வேதாளத்தைக்கொண்டு கடல்சூழ்ந்தபூமிக்குள் எவ்விடத்திலாகிலும் ஒருவயதுபெண்வயிற்றிலே ஆண்பிள்ளைபிறந்திருக்கிறதாவென்று விசாரித்துவரும்படி கட்டளைகொடுங்கள் அப்படிக்குப்பிள்ளைபிறந்திருக்குமாகில் நாம்யானைசேனை தேர்குதிரையுடன் புறப்பட்டுப்போய் அந்தப்பிள்ளையை சங்கரித்துவிடுவோம் முளையிற்கிள்ளாததுமரம் முற்றினால்கோடாலிகொண்டுவெட்டித்தள்ளவேண்டும் இப்பொழுதேஜெயம்பெற்றால் யாதொருபயமுமில்லாமல் அரசாளலாமென விக்கிரமார்க்கன் வேதாளத்தைப்பார்த்து என்வாகனமாகியவேதாளமே புகைநுழைகிறதற்கு அரிதானவிடமானாலும் அரியகாவலுள்ளவிடமானாலும்விட்டுவிடாமல் உலகமெங்குந்திரிந்து ஒருவயதுபெண்வயிற்றிலாண்பிள்ளைபிறந்திருக்கிறதாவென நீவிசாரித்துவந்துசொல்லென அதற்குவேதாளம் எனையாண்டவனே காற்றுபுகாதவிடமிருந்தாலும் நான்புகாதவிடமில்லை இதோ பார்த்துவருகிறேனென்று எங்குந்திரிந்துவருகையில் மேற்குத்திசையில்கல்யாணபுரியில்ஒருகுசவன்வீட்டில்ஒருவயதுபெண்வயிற்றில்ஒருபிள்ளையானதுபிறந்துவளராநின்றதை

பிறந்தவளாராகின்றதென்றுகேள்விப்பட்டதேயல்லாமல் கைக்குக்கண்ணாடிபோலுங் கண்ணினாலுங்கண்டுவந்தேனென்று ராசனுக்கறிவிக்க விக்கிரமார்க்கன்பொருள் பரிகொடுத்தவர்களிருதயம்போலக் கலங்கி பொறுத்து ஆலோசனைசெய்கிறதருணத்தில் அப்பிள்ளைக்குநாளுக்குநாள் கல்விகற்றவர்களறிவுபிரகாசிப்பதுபோலச் சௌரியம்பிரகாசித்து உலகமெல்லாம்புகழத்தக்ககீர்த்திபரானது பலராலும் விக்கிரமார்க்கன்சபையிலும்வந்துபரவியது அரசன்கண்டு மனதைரியங்கொண்டு நால்வகைச்சேனைகளுடன் தன்பட்டணம்விட்டுப்புறப்பட்டுக் கல்யாணபுரிக்கு எதிராகவந்துநிற்கையில் குயவன்வளர்த்தபிள்ளையானது தன்மேல்பகைமன்னர்கள் யுத்தஞ்செய்யவந்தார்கள் இனியவர்களையுயிருடன் விடுகிறதில்லை உரலிலகப்பட்டவை உலக்கைக்குத்தப்புமா அப்படி என்கையிலகப்பட்டமன்னர்கள் உயிர்வைத்துவாழ்வார்களாவென்று தான் விளையாடும்படியாக மண்ணினாற்செய்தயானைசேனைகுதிரைதேர் இவைகளிடத்தில்நின்று தான்தெய்வமாகச் சிறுபெண்குழந்தை வயிற்றில்பிறந்தசிறுபிள்ளையென்றது உண்மையானால் இந்த உருவங்களெல்லாம உயிர்பெற்றுவந்தசேனைகளுடன் எதிர்த்துப் போர்செய்யவேண்டுமென்று மந்திரப் பிரயோகஞ்செய்து ஒரு பொற்பிரம்பாலடிக்க அந்தவுருவங்களெல்லாம் உயிராகி பூமியெங்கும்பரவி ஒரு எள்விழவிடமில்லாமல் பெருகி விக்கிரமார்க்கன் சேனைகளையெல்லாம் நாசஞ்செய்தான் அப்போது அசரீரி விக்கிரமார்க்கா உன்வயது இன்றுசரியென்றது சாலிவாகனன் தன்னுடையகையிலிருந்த சக்கரத்தை கிறுகிறுவென்றுசுழற்றி நான் கன்னியின்குழந்தை பெற்றபிள்ளையானால் இந்தவிக்கிரமார்க்கன்சிரத்தையறுக்கக் கடவதென்றுசொல்லிவிட்டமாத்திரத்தில் சக்கரம் விக்கிரமார்க்கன்சிரசைதுணித்தது அந்தச்சிரசானது தன்மனைவிமதனமஞ்சரிமடியிலவிழுந்தவுடனே அவள் தன்னாயகனிறந்தானென்று இனிநா தானிருந்தால் கற்புக்குவிரோதமென்று நினைத்துத்தன்கொழுந்தனாகியமந்திரிபட்டியையழைத்துதன்னொருபிள்ளையாகிய அருமைத்திருமகனை அவன்கையிலொப்பிவித்து தன்மகனுக்குப்பட்டங்கட்டி கொழுந்தனைப்பார்த்து நீர்மந்திரியாகவிருந்து இராச்சியபரிபாலனஞ் செய்யுமென்று தன்னாயகனைவைத்த தீயிலேதானும் விழுந்திறந்து நாயகனோடு வீரசொர்க்கஞ்சேர்ந்தாள்.

பட்டியாகியமந்திரி தன்தமயன் விக்கிரமார்க்கன்பிள்ளையாகிய அதிவீரபராக்கிரமனுக்குப்பட்டங்கட்டித் தான்மந்திரியாகவேயிருந்துராசரிகஞ்செய்துவருங்காலத்தில் ஆகாயத்திலிருந்து ஒருவாக்குபிறந்தது அதுயென்னவென்றால் ஓ இராசகுமாரனே பட்டியாகிய மந்திரியே விக்கிரமார்க்கனேறிய சிங்காசனம் நீங்களேறத்தகாது ஆனையினால் அ

உ

கடவுள் துணை.

முதலாம்படிக்குக் காவலாகிய
சிங்காரசிரோன்மணிப்பதுமைசொல்கதை

கேளும்போஜமகாராஜனே எங்களாண்டவனாகிய விக்கிரமார்க்கன் இந்தசிங்காதனத்திலிருந்துசெங்கோல்நடத்தி அரசாளுநாளையிலே சாந்தசீலமகாரிஷியென்றவர் உச்சினிமாகாளி கோவிலுக்குவடக்கேமயானபூமியிலேயாகசுண்டம்வெட்டி அதில் ஒருபிணத்தைவளர்த்தி அதின்மார்பிலேஓமாக்கினிவிட்டு நெடுங்காலமகொடூரவேள்விசெய்துமாகாளிதோத்திரஞ்செய்கையில்அக்காளிதேவிதெரிசனையாகிச்சாந்தசீலரிஷியே உமக்குயென்னவரம் வேண்டும் கேளுமென்ன சாந்தசீலன்மகாகாளிதேவியேயெனக்கொருக்காலும் மரணமில்லாமலும் நானினைத்தகாரியமநிறைவேறவும் நானெப்போது வுன்னை நினைக்கிறேனோ அப்போதூது நீபிரசன்னமாகவும்விக்கிரமார்க்கன் சிங்காதனம்எனக்குக்கிடைக்கவும்வரந்தரவேண்டுமென்ன காளிகாதேவியானவள் சாந்தசீலனே நீநினைத்தபடியேதருகிறேன் மகுடமன்னர்கள்சிரசுஆயிரஞ் சிரசுஎனக்குப்பலிதந்தாயானால் உன்னுடைய மனதின்படி வரந்தருவேனென்று சொல்லிப்போனபின்புசாந்தசீலன்காளிகாதேவிக்குத்தொளாயிரத்தித்தொண்ணூற்றொன்பது மகுடமன்னர் தலைகளைப் பலிகொடுத்து இன்னமொருதலைவிக்கிரமார்க்கன்தலைதானே கொடுக்கவேண்டுமென்றுமனதிலேகபடமாகநினைத்து விக்கிரமார்க்கபூபதியொருநாள் மந்திரிபிரதானி பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர்வேதியர்கள்புடைசூழக் கோடிசூரியப்பிரகாசமாகிய இந்தசிங்காதனத்தில்வீற்றிருக்கிற தருணத்தில் காளிகாம்பரதாரியாகியசாந்தசீலனென்கிறமுனிவர் நித்தியம ஒருமாதளம்பழங்கொண்டுவந்து விக்கிரமாதித்தன் முன்னே வைத்துக்கண்டு போவார் இப்படிக்கண்டு வருகிறகாலத்தில் ஒருநாள் கொண்டுவந்த பழத்தைக்கீழ்வைக்காமுன்ராசாளிணுடையகுமாரனைக்கண்டு அதைகையிலேடுத்துக்கொண்டுபோய்சிக்கரியென்னுங்கடற்கடகத்துக்கொடுக்க அதுவாங்கிபட்சிக்கையில் அதிலுள்ளேயிருந்த விலையில்லாத இரத்தினக்கிழேசொரிவதை இராசனைகண்டு இதுவரைக்கும் மகாமுனிவந்து கொடுத்தபழமெல்லாம் யெங்கேயென்றுகேட்குமளவில் பொக்கிஷக்காரர்பழங்கள இயாவையும் கொண்டுவாந்து இராசன்முன்னே வைக்கஅப்பழங்களைப் பிளந்துபார்க்குமளவில அவைகளிலேயும் அப்படியே இரத்தினமிருக்கக்கண்டு விக்கிரமாதித்தன் ஆச்சரியப்பட்டுஇதுவரைக்கும அந்த முனீஸ்வரரை விசாரியாமற்போனோமென்றுவிக்கிரமாதித்தன் அம்முனிவரைநோக்கி உமக்கென்னவேணுமென்றுகேட்கமுனியானவர் சொல்லுவார் எனக்கொரு காரியமுண்டு அதைச் செய்கிறதானால சொல்கிறேனென்றார் அப்படியே செய்வேனென் றுறுதியான

ரைக்குஅரசன் கொடுத்தபுன்பு இதுவே சமயமென்று கருதிகிர்கிருஷ்ணபட்சசதுர்த்தசியி னன்றிராத்திரியில் நாமிருக்கு மயானத்திற்குவரவேண்டுமென்று சாந்தசிலனென்ற முனிசொல்ல அப்படியே வருகிறேனென்று அம்முனியையனுப்பிவிட்டு இராசாவும் கிருஷ்ணபட்சசதுர்த்தசியினன்றிராத்திரியில் வில்லையெடுத்து கச்சைகட்டிக்கொண்டுவீரசடைபின்னி விபூதிதூளிதம் பண்ணிபதினெட்டுஆயுதங்களைக்கட்டிஅர்த்தராத்திரியில் சாந்தசிலரைத்தேடிக்கொண்டுவந்தார்சாந்தசிலருங்கண்டுசந்தோஷித்து வாரும்விக்கிரமாதித்தனே உம்மையழைத்தகாரியம்இந்தவனத்தி ல்ஒருமுருக்க மரதின்மேல் உயர்ந்தகிளையில் ஒருவேதாளந்தொங்குகிறது அது ஒருவர்கையிலு மகப்படாது மகாபலவானுமபடியினாலே உம்முடையகையி லகப்படும்அதையெப்படியாகிலும் உபாயத்தில்பிடித்துக் கட்டிக்கொண்டுவந்தென்முன்னேவிடவேண்டுமென்றுசாந்தசில சொல்ல அப்படியேசெய்கிறேனென்று இராசாவும்முனீஸ்வரரிடத்து விடைபெற்று மகாவிலாசம் பொருந்தியவனாந்தரத்தில் முருக்கமரத்தைத்தேடிப்போகையில் அம்மரத்தினுயர்ந்தகிளையிற் றலைகீழாகத் தொங்குகின்றவேதாளத்தைக்கண்டுபிடித்துக்கட்டித்தோளில்வைத்துக்கொண்டுவருகிறபோது வேதாளமானது சொல்லும்வாருமையா இராசனே நமக்குவழி தலையவேண்டும் ஆகையால் அதற்கொருகதைசொல்லுகிறேன்நீவிடைகொடுக்காதிருந்தாலும்தலைவெடித்துப்போக சாபமிடுவேனென்றுவேதாளஞ்சொல்லஅப்படியே விக்கிரமாதித்தனும் கதைக்குவிடைகொடுக்கிறேனென்றான் அப்போழுது வேதாளஞ்சொல்லத் தொடங்கிற்று.

சிங்காரசிரோன்மணிப்பதுமைசொல்கதை-முற்றியது.

முதலாவது பத்மாவதிசரித்திரம்.

தேவபுரமென்னும்பட்டணத்தில் பிரதாபவுதானனென்னும் ஒருராசனுண்டு அவனுக்கு வச்சிரகுடமென்றொருபுத்திரனும்அவ்வரசன்மந்திரிக்கொருபிள்ளையுமுண்டு இவ்விருவிலொருவரும விநோதார்த்தமாக மாதமொருநாள் வேட்டைக்குப் புறப்பட்டு யிருண்ட தோப்புகளிலும் அடர்ந்தகாடுகளிலும் வுட்புகுந்துவேட்டையாடுகையில அவ்வாரணியமாகியவனத்தினடுவிருக்கிறதடாகத்தில்ஒருஸ்திரியானவள் சலக்கிரீடைபண்ணுகிறவளை இராசகுமாரன் கண்டு அவள்பேரில்மோகித்துநின்றான் அத்தடாகத்தில் சலக்கிரீடைபண்ணுகிற ஸ்திரியும இவ்விராசகுமாரன் தன்னைநோக்கிநிற்பதைக்கண்டு அதிக விரகங் கொண்டுஅத்தடாகத்திற்புட்பித்திருக்கும் கமலங்களிலதனை துகையிற்றுவி ஒருகமலத்தைக்கொய்துதனவிரு கண்களிலும் ஒற்றிப்பல்லினுங்கடித்துகாதில்மேற்போட்டுக்கொண்டாள் மறுபடியு மொருகமலத்தைக்கொய்துமா

ர்பிலணைத்துத்தலையில் வைத்துப்பட்டணம்போனான் அதன்பின்பிராச குமாரனையழைப்பித்து அவள் சைகைபண்ணின வகைகளைச்சொல்லி இதற்குவிபரமேதென்றுங்கேட்க மந்திரிகுமாரன்சொல்லுகிறான் வாருமையாயிராசகுமாரனே அவள் கமலத்தைக் கொய்து கண்ணிலொத்தினது தானிருப்பது கன்னாபுரமென்றும் பல்லிற்கடித்தது தன்பெயர் பத்மாவதியென்றும் தன்காலிற்போட்டது தன் தகப்பன்பெயர்காளிங்கராசனென்றும் மார்பிலணைந்தது இரசியமாகவரச்சொன்னது இக்கைகைக்கு இதுவேவிபரமென்றும் மந்திரிகுமாரன்சொல்லக்கேட்டு இராசகுமாரன் அதிசந்தோஷத்தோடு பட்டணம் வந்து ரதகெசதுரகபதாதிகளைநிறுத்தி தானும் மந்திரிகுமாரனுமாக அவளிருக்கும்பட்டணத்தைத்தேடிப்போய் அவ்விராசகுமாரத்திற்குபூச்செண்டுகொடுக்கும் ஓரம்மைபார்வீட்டி லிறங்கியிருந்து அம்மையாரைத் தங்கள்கைவசம பண்ணிவந்த வர்த்தமானமெல்லாம் அம்மையாருடன் சொல்லிராசகுமாரத்தியண்டைக்குவனுப்பினார்கள் அவளுமந்தப்படிக்கு பத்மாவதியைக்கண்டு இராசகுமாரன் சொன்னவர்த்தமான மெல்லாம் அவர்களுடன்சொல்ல அதுகேட்டுஇராசகுமாரத்தியும் சைகையாக பத்துவிரலையும் சந்தனக்குழம்பிலேதோய்த்து தவடையிலடித்துஓட்டி விட்டாள் அம்மையார்வெகு மனஸ்தாபத்துடனே திரும்பிவந்துஇராசகுமாரனுக்குஅவள் தன்னையடித்து அடிமைபக்கட்டி நீங்க ளென்னைக்கொல்லவல்லவோபகைசெய்தீர்களென்று துக்கித்தழுது நிற்பதைக்கண்டு இராசாவும் நமக்குள்ளானவ ளல்லவென்று அதிககோபத்துட னிருந்தான்.

அப்படியிருக்கிற ராசாவைப்பார்த்துமந்திரிகுமாரன் சொல்லுகிறான்நிலவு இன்னம்பத்துநாளிருக்கிறது அப்பத்துநாள்கழித்தவுடனே வரச்சொன்ன அடையாளமென்றான் அப்படியேபத்துநாளுஞ்சென்று பதினோராநாள் அம்மையாருக்குடனபடிக்கைசமாதானம்பண்ணிமறுபடியும் இராசகுமாரத்தியண்டைக்கனுப்பினார் அப்படியேயம்மையாரும்போய்இராசகுமாரத்தியுடன்சொல்ல அவள்கோபித்துக்கொண்டு தனதுமூன்றுவிரலாற் குங்குமக்குழம்பிற்றோய்த்து தூரி மார்பிலடித்துடனே வேறொருகள்ளவழியாய்ஓட்டிவிட்டாள் அவ்வம்மைபார்திரும்பிவந்து தன்போனவர்த்தமானமுமவளுடனேசொன்ன விபரமும் அதற்கவளடித்து கள்ளவழியாகப்போகச்சொல்லி யோட்டினதையுந் தெரியச்சொன்னாள் இராசகுமாரனுமவன் அதிகவிசனத்துடனேயிருக்கிறதை மந்திரிகண்டு சொல்லுகிறான் அவளுக்குமாதவிடாயானதால் மூன்றுநாளுங்கழிந்தவுடனேஎப்போதும்வருகிறவழிவராமல்கள்ளவழியுங்காட்டியனுப்பினளென்று மந்திரிகுமாரன்சொன்னதைக்கேட்டு இராசகுமாரன்சந்தோஷப்பட்டு அப்படியேமாதவிடாயானமூன்றுநாளுங்கழிந்தவுடனேநாலாநாள்கந்தபரிமள கஸ்தூரிபூசிக்கொண்டுபுஷ்பஆபரணங்களாலணிந்து உல்லாசமாய் அந்தகள்ளவழியாகநிலவறையி

ந்போய் இராசகுமாரத்தியைகண்டுசந்தோஷித்து அவளுடனேபத்து நாள்கூடியிருக்கிற மன்மதபோகத்தினால் மந்திரிகுமாரன். நினையாமலிருந்துபின்புமந்திரியை நினைத்துக்கொண்டு ஒருநாளும்விட்டுப்பிரியாத நாம் இவனுடையபிரியமாகிய விரகத்தினால்மந்திரியைப் பிரிந்தோமென்று வியாகூலப்பட்டுக்கொண்டிருந்தான் அதுகண்டுயிராசகுமாரத்தியானவள் இராசனைநோக்கி தேவரீர் இத்தனைநாளும்போல சந்தோஷமாகயிருக்கவில்லை இன்றையதினத்துக்கு துயரத்துடனேயிருப்ப தென்னவென்றுகேட்க இராசன்சொல்லுகிறான் வாராயென்னமிர்தமாகியதேனே என்பின்னேவந்தசினேகிதனாகிய மந்திரிகுமாரனிருக்கிறான் அவனைநானொருநாளும் விட்டுப்பிரிந்ததில்லைபத்துநாளாய் விட்டுப்பிரிந்தோமென்கிற மனஸ்தாபமேயொழியவேறொரு சிந்தையுமில்லையென்றானதுகேட்டு யிராசகன்னிகைகோபித்துக் கொண்டவன்போலெழுந்துதனது அரண்மனையில்தன்னைக்காத்திருக்கும்தாதிகளையழைத்துவிஷங்கொண்டுவரச்சொல்லிஅவ்விஷத்தை கச்சாயங்களில்கலந்துவந்துராசன்கையில் கொடுத்துசாப்பிடச்சொல்லிபின்பவரையழைத்துவாருமென்றனுப்பினாள் அப்படியேயிராசாவும்அந்தகச்சாயங்களைக்கொண்டுவந்துகொடுக்கமந்திரிகுமாரனக்கச்சாயங்களைவாங்கிபார்த்து இராசனைநோக்கிஎன்னை கொல்லவல்லவோகச்சாயங்களைக்கொண்டுவந்தீரென்றுசொன்னதை இராசன்கேட்டுதிகைத்துநின்றுநம்மையிவன் இப்படிச்சொல்லலாமோநான்பட்சத்துடனேகொண்டுவந்துகொடுத்தால்வாங்கிச் சந்தோஷமாகப் புசியாமல்யிப்படிச் சொன்னானென்று மனதில் கோபங்கொண்டிருந்தான்.

அதைமந்திரிகுமாரன்கண்டு வெளியிலெழுந்துபோய் ஒருநாயைக்கண்டு அதன்முன்னக்கச்சாயத்தைவைத்தான் அது கச்சாயத்தைப்புசித்து உதைத்துக்கொண்டுசெத்ததை இராசன்கண்டுமந்திரிகுமாரனையணைத்துக்கொண்டு இப்படிகபடம்பண்ணினதறியாமற்போனேனென்றுஇருவரும் ஆலோசனைபண்ணிக்கொண்டு அவளநம்மைக்கொல்லவல்லவோவகைபண்ணினாள் அவளையெப்படியும்வுபாயதந்திரம் பண்ணிநம்முடையபட்டணமேகொண்டுபோவோம் நீர்திரும்பவுமவளிடம்போய் என்னைகண்டு பேசினதாயும் கச்சாயங்கொடுத்த விவரங்களையும் அவளுடனேமார்க்கமாகச்சொல்லி அங்கிருந்திருவரும்சையோகசோப நித்திரைபண்ணுங்கருணத்தில் அவளநித்திரையைச்சோதித்து அவள்கழுத்தில்போட்டிருக்கிற முத்துத்தாழ்வடத்தைகழட்டிக்கொண்டு அவள் மார்பில்நகத்தாள்புறையவூன்றிவைத்துவாருமென்று சொல்லியனுப்பினான் அப்படியேராசகுமாரனும்நல்லதென்றுபோய் அவளுடனேகூடியாடி அவளுக்குச்சரிபோனபடிக்கெல்லாம் மன்மதகிரீடைபண்ணியவள்நித்திரையைச் சோதித்துமுத்துத்தாழ்வ க்தை கழற்றிகொண்டு அவன் அவளுடையமார்பில்மூன்றுவிரல்புதை [illegible]ள்ளிவைத்துலங்கா

ன்பொழுதுவிடிந்தபின்பு மந்திரிகுமாரன் மகாயோகபுருஷனாகவும் இ
ராசகுமாரன் சிஷனாகவும்வேடம்போட்டுகொண்டு சுடுகாட்டிலேபோ
ய்தவம்பண்ணுவாரபோலிருந்து இராசனகையில்முத்துதாழ்வடத்தை
க்கொடுத்து இதைஎடுத்துக்கொண்டுபோய்விலைகூறும் விலைகேட்டால்
ஏறக்குறையச்சொல்லி அரண்மனைவாயில்வழியாகவிலை தெரியாதென்
றுசொல்லி அவ்வரசனைநம்மிடத்திற்கு அழைத்துவாருமென்றுராசகு
மாரனையனுப்ப அடியேனிந்தராசகுமாரன்முத்துத் தாழ்வடத்தை வி
லைகூறி அரணமனைவழியாகப்போகையில் அந்தப்பட்டணத்தரா
சன் அவனையழைத்துதாழ்வடம் விலையென்னவென்றுகேட்க ஆனால்
கேளும் ராசாவேதாழ்வடம்வேணுமென்றால் மசானத்தில் யோகிபுரு
ஷன்தவம்பண்ணுகிறார் அவரண்டைக்குவந்துவிலைபேசிவாங்கிக்கொ
ள்ளுங்களென்றுசொன்னான் அப்படியேராசனும்பெழுந்திருந்துசுடுகா
ட்டில்தவமாயிருக்கிற யோகிபுருஷனை நமஸ்காரஞ்செய்து இந்தத்தாழ்
வடம்மகாசீர்த்தியாக யிருக்கிறதாகையால்யிதுவுங்களுக்கு எவ்வாறு
வந்தது சொல்லவேணுமென தவஞ்செய்கிறவர் சொல்லுகிறார் கேளு
மையாயிராசனேநாம் இந்தசுடுகாட்டிலேதவம்பண்ணிக்கொண்டிருக்
கையில் ஒருநாள்மகாசௌந்தரியமுள்ள ஒருகன்னிகையானவள் அர்த்த
ராத்திரியில்வந்து வேகுகின்றபிணத்தையெடுத்துமுன்னே போட்டுபிடி
ங்கித்தின்று வயிறுநிரம்பினவுடனே இந்தப்பட்டணமபோவாள் இப்ப
டிதினமுந்தின்றுபோகையில் இராத்திரியிவளுடையவிஷமையை யறிய
வேண்டுமென்று அவள்பிணத்தைத்தின்னுகையில் என்சூலாயுதத்தை
யெடுத்து அவள்மார்பிலூனறிநீயாரென்றுகேட்க அவள்பயந்துதனது
கழுத்திலிருந்தமுத்து மாலையைக்கழற்றி என்கையிலேகைக் கூலியாக
கொடுத்துஒருவருடனேயும் இந்தவர்த்தமானத்தைச்சொல்லாதேயெ
ன்றுமதனதுபெயர் பத்மாவதியெனறுந்தான் மனுஷரைப்பிடுங்கித் தி
ன்னுவிடில் தன்பசிதீராதெனறுஞ்சொல்லிப்போனாள் அப்படிப்பட்
ட அதிசயமென்றுசொல்லித் தாழ்வடத்தையிராசன் கையிற்கொடுத்
தான்.

அரசனிதைக்கேட்டுப்பயந்துதனது அரண்மனைக்குப்போய்தன
து குமாரத்தியையழைத்து மார்பைத்திறந்துபார்த்து முத்துதாழ்வட
த்தை அவளுக்காட்டி உன்னுடையதா வென்றுக்கேட்டான் அவளும்
வெட்கிதலைசாய்ந்தாள் அதுகண்டுயிராசன தன்மந்திரியுடனிந்தவர்
த்தமானமெல்லாஞ்சொல்லி இதற்கு ஆக்கினையேதென்று கேட்க மந்
திரிசொல்லுகிறான் பெண்கொலைசெய்தால் ஸ்திரீயத்திவரும் ஆகையா
ல் ஊர்கடக்கவோட்டிவிடுகிறதே தருமமென்றுசொன்னானப்படியே ரா
சாவுஞ்சம்மதித்தவளைபட்டணம்விட்டுகோட்டிவிட்டானந்தவே
ளையிலிராசகுமாரனும்மந்திரிகுமாரனும் பழயவேடங்கொண்டந்தவே

ளையில் இராசகுமாரனுமமந்திரிகுமாரனும் பழயவேடங்கொண்டு அந்த பிராசகுமாரத்தியைக்கண்டு தங்கள் பட்டணத்திற்கொண்டுபோனார்கள் அவள்போனபின்பு இராசபுத்திரசோகத்தினாலேஏங்கியிருந்தான் அதைகண்டுபிராசாவின்தேவியும் புருஷனும் பெண்ணும்போனாளென்றுவிசனமுற்றுவருந்திசீவனைவிட்டாள் அவர்கள் செய்ததோஷமாருக்கென்றுவேதாளம்விக்கிரமார்க்கனைக்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் மந்திரிகுமாரன்சொன்னபடிராஜகுமாரன்செய்தான்செத்துப்போனராஜாவின்மந்திரி விசாரியாதபடிக்குக்கட்டிவிடச்சொன்னமையாலுமந்திரிக்குதோஷமென்று சொல்லவேதாளம் கட்டவிழ்ந்துக்கொண்டுபழையபடியோடி முருக்கமரம்ஏறிக்கொண்டது,

பத்மாவதிகதை-முற்றிற்று.

௨-வது-மந்திரவதி சரித்திரம்.

———()———

மறுபடியும் விக்கிரமாதித்தன்வேதாளத்தைப் பிடித்துக் கட்டிக் கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

பிரமசக்கரமென்னும் அக்கிராரத்தில் சடகோபியனென்றொருபிராமணனுண்டு அவனுக்கொருகுமாரத்தி அவள்பெயர்சின்னியாளென்று சொல்லப்படும் அவளைகலியாணம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று மூன்றுபிராமணப்பிள்ளைகள் வந்து அந்தபெண்ணின் தமையனைபொருமனுவுங்கேட்டார் அவன் தருகிறேனென்றவர்க்குகொடுத்தபின்புஒருவனத்தப்பெண்ணின்தாயைக்கேட்டான் அவளுந்தருகிறேனென்றுகேட்டவனுக்குஉறுதிசொன்னபின்பு வேறொருவன்பெண்ணின்பிதாவைக்கேட்டான் அவனும் அவனுக்குதருகிறேனென்று நிஜவாக்குகொடுத்தான இவ்விதமாகஒருவரறியாமல் ஒருவரொருவரைக்கேட்டுப்போனமூவருர்வந்து உனக்கெனக்கென்றுவியாச்சியப்படுகையில்அந்தப்பெண்மனஸ்தாபத்தினாலேதெய்வீகமாயிறந்துபோனாள் அவளைக்கொள்ளவந்தமூவரும் மகாவிசனமுடையவர்களாகி ஒருவன் தகனம்பண்ணினசம்பலேக்காத்திருந்தான் வேறொருவனஸ்திகளையெடுத்துக்கொண்டு

காசியாத்திரைபோனான் மற்றொருவன்தேசாந்திரியாகப் பூமியெங்குந்திரிகிறபோதுஒரக்ராரத்திலேபிராமணன்வீட்டிலேஅசனங்கேட்கநல்லதென்றபடியால் அக்கிருக்கான அவ்வீட்டுபிராமணத்திதன்பிள்ளையின்மேல்கோபமாகி அக்கினியிலேதள்ள அப்பிள்ளைதகனமாகிப்போனதைக்கண்டு அசனம்பண்ணாமலிருக்கும்பிராமணன்கண்டுவாராய்பிராமணஸ்திரீயே நீபிள்ளையைக்கொன்றாய்உன்வீட்டிலேஅசனம்பண்ணுகிறதில்லையென்றான் அவனுக்குஞ்சிசுபாவந்தால்உடலுண்டாக்கிசஞ்சீவிமந்திரத்தால்உயிர்கொடுத்து அந்தபிள்ளையையுங்கூடவைத்துஅசனமிட்டாள்பிராமணனாச்சரியப்பட்டு அந்தப்பிராமணஸ்திரீயைசாஷ்டாங்கமாகதெண்டனிட்டுசிசுபாவம் யின்னதென்றுவெளிபாக்கிசஞ்சீவிமந்திரத்தையும உபதேசம்பண்ணி சுடுகாட்டில்சேர்ந்தான் காத்திரைபோனபிராமணனும்வந்தான்காத்திருந்தபிராமணன்முன்னேயுவளைதகனம்பண்ணிக்கொண்டுபோனஅஸ்தியையுங்கொண்டுவந்தேனென்றுகொடுக்க மயானத்திலிருந்த அஸ்தியெல்லாமெடுத்தான்சுற்றுவந்தசிசுபாவததாலேசடலமுண்டாகி சஞ்சீவிமந்திரத்தாலேஅச்சடலத்துக்கு உயிர்கொடுக்கவுடன் அவள்பழையபடி எழுந்தமையால்அவளைகலியாணம் பண்ணுவதுநான் நீ என்றபடி வழக்குள்ளவரானார்களாகையால் அவளாருக்கு பாரியாளாகவேண்டுமென்றுவேதாளமராஜா விக்கிரமாதித்தனைக்கேட்கவிக்கிரமாதித்தன்சொல்லுகிறான்அஸ்தியையெடுத்துக்கொண்டு காசியாத்திரைபோனவன் பிள்ளையாகவேண்டும எழுப்பினவன் தகப்பனாகவேண்டும சுடுகாடுகாத்திருந்தவன புருஷனாகவேண்டுமென்று விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துகொண்டு பழையபடிமுருக்கமரமேறிக்கொண்டது.

மந்திராவதிகதை-முற்றிற்று.

௩-வது பிராமணப்பிள்ளை சரித்திரம்.

கேளாய்விக்கிரமாதித்தன்மரத்திலேறி வேதாளத்தைபிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ் சொல்லுங்கதையாவது,

கேளாய்விக்கிரமாதித்தனே அங்கதேசமென்றொருபட்டணம் அந்த பட்டணத்திலே ஆதிவிஷ்ணுவென்று ஓர்பிராமணனுண்டு அவனுக்கு மூன்று குமாரர்கள் அவர்கள் உடயோதனனென்கிற பிராசாவைக்கண்டுகாத்துக்கொண்டிருக்குமளவிலவர்களையந்தராசனழைத்துநீங்களென்னவிதமறிவீர்களென்றுகேட்டான் ஒருவன் போசனசுகமறிவேனென்றானமற்றொருவன் நித்திரைசுகமறிவேனென்றானின்றொருவன் ஸ்திரீசுகமறிவேனென்றானிப்படி மூவரும் மூன்றுவிதமாகச் சொல்ல ராசாவும் இவர்களை சோதிக்கும்படி போசனசுகமறிவோனுக்கு ஓர்பிராமணன்வீட்டிலேசாப்பிடச்சொன்னாரப்படியேசாப்பிட்டபின் ராசாவைக்கொண்டு போசனஞ்சுடுகாற்றமென்றுசொல்லவதுகேட்டுவிசாரிக்குமளவிலே சுடுகாட்டுசாம்பலை எருவாகபோட்ட நிலத்தில்விளைந்தநெல்லரிசியென்றுசொன்னார்கள் இராசாவுஞ் சந்தோஷப்பட்டு ஸ்திரீசுகமறிவோனையழைத்துதன்னுடைய நாடகசாலைப்பெண்களிலே அதிரூபமாயிருக்கிறவளாகளை சிங்காரித்து பள்ளியறையிலே போய்பிராமணனுடனேகூடி இருவென்றுசொல்ல அப்படியேயவளை இந்தபிராமணன் அநுபோகித்தபின் இராசாவின பக்கத்திலே வந்து அவள்சொப்புநாற்றமுள்ளவளென அரசனுந் தன நாடகசாலைப்பெணகளுக்கெல்லாந்தலைவியாயிருக்கிறவர்களையழைத்து இந்தபெண்ணினுடைய வர்த்தமானமேதென்றுகேட்க அவ்வரசனைநோக்கி சுவாமி அந்தப்பெண் ஆடச்குலமென்று சொல்லக்கேட்டு ராசாவும் சந்தோஷித்து நித்திரைசுகமறிவோனையழைத்துஓர்வீட்டில்மெத்தைபோட்டு காம்பரிங்கபுட்பங்களையதில்பரப்பிநித்திரைபண்ணச்சொன்னான் அவனும நித்திரைபண்ணியெழுந்திருந்துஉடம்பெல்லாம் நோகிறதென்றுசொல்லவதைராசன் கேட்டு தாங்களைவிட்டு சோதிக்கச்சொல்லி நிருபித்தபடி சோதித்துபாக்குமளவில்புஷ்பத்திலோர்மயிரிருந்ததைசொன்னார்கள் இராசாவும் சந்தோஷப்பட்டுமூன்றுபேரையுந்தனனிடத்தில்வைத்து நடப்பித்துவந்தான் இந்தமூன்றுபெயருக்குள் ஆரதிகமென்றுவேதாளங்கேட்க விக்கிரமாதித்தன சொல்லுகறான ஸ்திரீசுகமறிந்தவன் அந்தசுகமறிந்தவன்சொன்னதேயதிகமென்றுவிக்ரமாதிததன்சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடியோடி முருக்கமரமேறிக் கொண்டது.

பிராமணப்பிள்ளைகள் சரித்திரம்-முற்றிற்று,

௨-வது-சூரியன் சரித்திரம்.

விக்கிரமாதித்தன் அம்மரத்தடியில்தொங்குகிற வேதாளத்தை பிடித்துக்கட்டி தூக்கிக்கொண்டுவருகையில் வேதாளஞ் சொல்லும் சரித்திரமாவது,

கேளாய் விக்ரமாதித்தனே உச்சினியென்றொரு பட்டண முண்டு அந்தபட்டணத்திலே அர்ச்சுனசுவாமியென்றொரு பிராமண னவனுக்குமகா சௌந்தரியமுள்ள ஓர்பெண்பிறந்தது அவளைநிலவரையில்வைத்துவளர்த்தான் இப்படியிருக்கிறநாளையில அவளுடைய வடிவின் பிரபலியத்தைகேள்விப்பட்டு அவளைவிவாகம்பண்ணிக்கொள்ள வேண்டுமென்றுஞானியென்றுவிக்கிரமனென்றும்சூரனென்றும்மூன்றுபேர்கள்வந்து அவளைதங்களுக்குத்தரச்சொல்லி கேட்கஅவளுடையதாய்தந்தைகள் மூவரிலொருவருக்கு கொடுக்கிறோமென்று சொல்ல இப்படியிருக்கிறசமயத்தில் ஒருராட்சதன்வந்து அந்தபெண்ணை எடுத்துக்கொண்டுபோனான்.

அதைகண்டு தாயுந்தகப்பனும் படுகிறமனஸ்தாபத்தை பார்த்துவிக்ரமனுஞானிசொல்லுகிறான் நானொருரதம் பண்ணிதருகிறேன் அதின் பேரிலேறிக்கொண்டுபோய் இராட்சதனை செயித்து வருவாருண்டோவென்றுசொல்ல சூரனென்கிறவன் நான்போய் செயம்பண்ணிவருகிறேன் ரதம்பண்ணிதாருமென்ன அப்படியே விக்கிரமனுஞ்சாஸ்திரத்தினாலே ஆகாயமார்க்கத்தில் பறக்கத்தக்கதாயொருரதஞ்சோடித்துக்கொடுத்தான் ஞானியென்கிறவன் ஞானம்பார்த்துராட்சதனந்த பெண்ணை எடுத்துக்கொண்டுபோயிருக்கிறதிக்கைசொன்னான் சூரனும்ஆயுதசம்ரட்சணையுடனே ரதத்திலேறிப்போய் அந்தராட்சதனுடனே போர்செய்து கடைசியில்அவனைசிரச்சேதம்பண்ணிபெண்ணைரதத்தின்மேலேற்றிக்கொண்டுவந்து அவள்தாய்தகப்பன்மாரிடத்தில்விட்டான் அம்மூவரில் அந்தப்பெண்ணை யாருக்குவிவாகம்பண்ணிகொடுக்க வேணுமென்று வேதாளங்கேட்கவிக்ரமாதித்தன்சொல்லுகிறான் ஞானத்தினால்சொன்னதும் சாஸ்திரத்தினால் ரதஞ்சோடித்ததும அதிகமல்லஅவ்விராட்சதனைசெயித்து அவளை கொண்டுவந்ததேயதிகம் அவனுக்கு அவளே ஸ்திரியாகவேணும் அவனே அவளுக்குபுருஷனாக வேண்டுமென்றுசொல்லவேதாளங்கட்டவிழ்த்துகொண்டு பழையபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது,

சூரியன் சரித்திரம் முற்றிற்று.

௫-வது நீதிவச்சகேது சரித்திரம்.

மறுபடியும்வேதாளத்தைவிக்கிரமாதித்தன்பிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுஞ் சரித்திரமாவது.

சோமவேதிகையென்றவூர்ப்பட்டணத்திலேநீதிவச்சகேதுவென்று ராசனுண்டு அந்தராசனைக்காக்கின்ற பத்திரகாளிக்குத் தனேகவிஸ்தாரமானசவுக்கியத்துடனே கோயில்கட்டிதேர்திருவிழா நடப்பித்துவருகிறநாளில் அந்தமண்டபத்திலுண்டான சனங்களெல்லாமவந்துபார்க்கையில் அந்தசனங்களிலொருபெண்ணை ஒருவனகண்டு ஆசைப்பட்டு அந்தபத்திரகாளியைப்பார்த்துசொல்லுகிறான் அந்தப்பெண் என்னைவிவாகம்பண்ணினாளானால் என்னுடையசிரசை உன்னுடையபாதாரவிந்தத்திலே செலுத்துகிறேனென்றுபிரதிக்கினைபண்ணி தன்னுடையதாய்தகப்பன்மாருடனே தானந்தப்பெண்ணை விவாகம் பண்ணவேணுமென்றான் அப்படியேயவர்களுமந்தபெண்ணிருக்கிறபட்டணத்தைவிசாரித்துப்போய் பெண்ணின்தாய்தகப்பன்மாரைக் கண்டுகேட்க அவர்களுநல்லதென்று சம்மதித்து கலியாணம் பண்ணிக் கொடுத்தார்கள் அப்படியே யவ்விடத்திலிருந்து தன்பட்டணத்திற்குபோனான் பின்னையுஞ்சிலநாளுக்குப் பின்தாய்தகப்பன் தன்னுடையகுமாரனைக்கூப்பிட்டுதங்கையைப்போயழைத்துவரச்சொல்லியனுப்பினனவனுடனே போய் மைத்துனனையும் தங்கையையு மழைத்துக்கொண்டு வருகையில் ஓர்பத்திரகாளிகோயிலிருக்க அவ்விடத்திலிருக்கிற தடாகத்தில்தண்ணீர்குடித்துநிழலுக்கிரங்கியிருந்தார்கள் அப்படியிருக்கையில்அந்தப்பெண்ணினுடையபுருஷன் காளியைச்சேவித்துவருகிறேனென்றுபோய் கோயிலுக்கெதிராயிருக்கிற மரத்தின்வளையிலதன்தலைமயிரைமுடிந்துகழுத்தையிரண்டுதுண்டாக்கினான்பின்பு அந்தப்பெண்ணின்தமையன்போனமனிதனைப் பார்த்துவருகிறேனென்றுபோய் தன்மைத்துனனவ்விடத்திலேபிரேதமாய்தொங்குவதைக்கண்டு தானும்மப்படியேமயிரைகளையில்மாட்டிக்கொண்டு கழுத்தையறுத்துக்கொண்டான் போனவிருவரும்வரவில்லையென்று அந்தப்பெண்ணும்போய்பார்த்து தமையனும்புருஷனும்கழுத்தறுந்து யிருதுண்டமா யிருக்கக்கண்டு அவளுங்காளிமுன்பாககழுத்தையறுத்துக் கொள்ளப்போகையில் காளியானவள் பதறுதேயென்றுகையமர்த்தி என்னவரம் வேண்டும் கேளென்றுசொல்ல இருவரையுமெழுப்பிவிடவேணுமென்றுசொல்ல அப்படியேயெழுப்பித்தருகிறேனென தலையுமுடலும் ஒன்றாகச்சேரென்றாள்நல்லதென்றுயிருதலைகளையும்மாறுபாடாகவுடல்களோடேசேர்த்துவைத்தாள்காளி

லாய்கழற்றி பத்திரமாககொண்டபின் அவனை ஓர் பாழுங்கிணற்றில்த
ள்ளிப்போட்டு அந்தபரஸ்திரி பண்டைக்குப்போய்சேர்ந்தான் அந்தப்
பெண்கூகூவென்றுகூக்குரலிட்டமுறையில் அவ்வழியிற் செல்லும்பா
ட்டைசாரிகள் கண்டு மிகவுமிரக்கமுற்றுயெடுத்துவிட்டார்கள் அவளுந்
திரும்பி தனதுபுருஷனையுந்தன்னையுங்கள்ளர்கண்டுசூழ்ந்துகொண்டு
உடமைகளையெல்லாம்பறித்துக்கொண்டு அவனையும்பிடித்துக்கொண்
டென்னையும்ஒட்டிவிட்டார்கள் ஆனதினால் இக்கோலமாய் வந்துசேர்ந்
தேனென்றுசொன்னாள் அதைக்கேட்டுமிகுந்தபரிதாபங்கொண்டுநல்லதுப
யப்படாதேயென்றவள் மனதுக்குத்திடம்வரச்செய்துவைத்தார்கள் அ
தன்பின்பவள்புருஷன் அவ்வுடைமைகள்முதலானவைகளையுங் கொண்டு
போய்தான்வைத்திருக்கவேசிகளுக்குக் கொடுத்துசிலநாளிருந்து அவர்
களுக்குக்கொடுக்கவழியில்லாமல் கைவரண்டபின் தகப்பன்முதலான
பேர்களும்வீட்டில்சேர்க்காமலோட்டிவிட்டார்கள் பின்னும்மகாவிச
னமுற்றுமனதிற்கபடங்கொண்டு மாமனார்வீட்டுக்குப்போகிறபோது அ
ந்தப்பெண்ணைககண்டு முன்னிட்டகாலைபின்னிட்டுத்திரும்பினான் அ
துகண்டு தான்செய்தகுற்றத்தினால் பயந்துபோகிறானென்றுநறுக்கே
யோடிசாஷ்டாங்கமாகதெண்டனிட்டு நீர்பயப்படத்தேவையில்லை பெ
ண்சாதியானவளை விற்கவும் ஒத்திவைக்கவும்தானதருமம்பண்ணவும்
தேவரீருக்கதிகாரமல்லவோ ஆனதினால்குற்றமில்லை அய்யாள்தய்த
கப்பன்களுக்கு உடமையெல்லாங்களவர்பறித்துக் கொண்டு உம்மையு
ம்பிடித்துப்போனார்களென்றுசொன்னேன் அவர்கள்நீரெப்போதுவ
ருவீரென்றுவழிபார்த்திருக்கிறார்கள் நீரொன்றுக்குமஞ்சவேண்டியதி
ல்லைவாருமையாவென்று கையைப்பிடித்தழைத்துப்போய்தன் தாய்த
கப்பன்முன்னேவிட்டாள் அவர்களுந்தழுவிக்கொண்டுபயப்படாதேயெ
ன்றுமிலக்ஷணமுகங்கொடுத்து மகாசெல்வமாயெப்போதும்போலவை
த்திருந்தார்களிப்படி சிலநாளிருந்தபின் மறுபடியும் சில ஸ்திரிகளை
நினைத்துப்போகவேணுமென்று இவளையழைத்தால் வருகிறவளுமல்ல
வென்றுநினைத்து அவள்நித்திரை பண்ணுகையிலவளுடையநகைகள்
யாவையுங்கழற்றிக்கொண்டு அவளையுங்கொன்றான் அப்படிக்கொத்த
பெண்ணைத்தீருமேலபுருஷர்களநேகபலாகாதென்று அரசனுடன்பெண்
கிளியானதுஞ்சாலக்கேட்டு ஆண்கிளியையழைத்து நீ பெண்களை நம்ப
லாகாதென்றுசொன்னவிபரமேதென்றுகேட்க ஆண்கிளி யவ்வரச
னைநோக்கிச்சொல்லும். அரிட்டபுரமென்கிறபட்டணத்திலே தர்மகேச
ரனென்னுமிராசன் ராச்சியபரிபாலனம்பண்ணுகையில் அந்தப்பட்ட
ணத்திலேதனவர்த்தனனென்கிறகோமுட்டிக்கோர்குமாரத்தியுண்டாயி
னாளவளையினனொருகோமுட்டிக்குக்கட்டுக்கலியாணம்பண்ணிக்கொடுத்
ன்னூருக்கழைத்துக்கொண்டுபோய் தகப்பனிடத்தில் தானவியாபார

த்துக்குப்போனான் அத்தருணத்திலே அவ்வளவுகாலமானபடியாலொர் பிருமணனுடனேகூடியிருந்தான் இப்படியிருக்கிறநாளில் திரவியந்தேடிக்கொண்டு சிலநாளுக்குப்பின் தகப்பனுடையபட்டணமவந்து சேர்ந்தானன்றிராத்திரிதானுந்தன்பெண்சாதியோர்வீட்டில்படுத்திருந்தார்கள் அந்தப்பெண் புருஷனுக்குச்செய்யவேண்டிய பணிவிடைகளெல்லாஞ்செய்துபுருஷன் நித்திரைபண்ணினபின்பு தனக்குள்வானசாதியையழைத்து தன்கள்ளனுபகனுகிய பிருமணனைத் தன்படுக்கைவீட்டுக்குபின்வந்திருக்கச்சொல்லென்று சொல்லியனுப்ப அப்படியேயழைத்துவந்துதனனுண்டச்சிபாரண்டையிற் சொல்லவந்தாளப்போதுநல்லருத்திரியானபடியினுலப்பட்டணங்காக்கின்றகாவர்காரன்வீட்டில் மின்னுல்லுண்டியாயிருக்கிறவனுறுகள்ளனென்று அப்பாலெய்தான் அவ்வம்புபிருமணனுக்குப்பட்டு குத்துயிருமிருந்தான் அந்தவேளையிலே கோமுட்டிபெண்வந்தழைக்க பேசாமலிருப்பதைக்கண்டு கோபித்துக்கொண்டிருக்கிறுளென்று முத்தமிடபோகையில் அவள்மூக்கு பிருமணன்வாயில்தப்பட்டு அதைகடித்துக் கொண்டு பிருமணன்செத்தான் அவளும்பயந்து திடுக்கிட்டெழுந்து மூக்கைகடவிபோக்கமூக்கில்லாதபடியால்இதற்கென்னவகைசெய்யப்போகிறேனென்றுமகா துயரத்துடனே புருஷன்வட்டுவத்தைஅவிழ்த்துபாக்குவெட்டியையெடுத்து அதிலேதன்மூக்கிலிருந்தவடிவும் உதிரத்தைக்கடவிகோமுட்டிதன்மூக்கையறுத்தானென்றுகூவினள் இந்தவார்த்தையைஅவனுடையதாய்தகப்பன் கேள்விப்பட்டுஎன்பெண்ணைமூக்கையறுப்பானேனென்று முறையிட்டுநீதிசந்நிதானத்திலே அறிவித்து அவனைராசசமுகத்துக்குகூட்டிக்கொண்டுபோய்விட அவ்வரசன்கோமுட்டியையழைப்பித்து நீயோ அப்படிக்கொத்தகாரியஞ்செய்வாரென்னென்றுகேட்கநான்நித்திரைபண்ணுகையில என்னருகேயிருந்தவள் கூவினது அறிவேனுழி யப்பொருளறுமறிந்தவனல்லவென்றுனதன்பின் அந்தபெண்ணையழைத்துகேட்கானவள் புருஷனுக்கோர்கோரமுஞ்செய்தவளல்லவேயென்றுள இராசன்மிகவுங் கோபித்துக்கொண்டென்னதானகுற்றஞ்செய்தாலும் பெண்சாதியை ஆக்கினைபண்ணக்காரியமேதென்றுகேட்டானதற்குஞான்றுஞ்சொல்லமைபால்இராசனகோமுட்டியைஆக்கினைபண்ணக்கொய்க்காரரவசம்பண்ணினுர்கள் அப்படியிருக்கிறவேளையிலே காவற்காரக்கிரவர்கள்வந்துராசனைகண்டு கெட்டபிட்டுவின்னைப்பம்பண்ணினுர்கள்கேளுமையாராசவே நாங்கள்பட்டணஞ்சுற்றிவருகையில்நுங்கோமுட்டிவீட்டிலேஒருவன்பதுங்கியிருந்தானே அவனைதிருடனென்றெண்ணி அம்பாலெய்தோம் அவனிப்படியிருந்து குத்துயிருமிருக்கிறதருணத்திலே

4

கோமுட்டிபெண்வந்து அவனையழைக்கபேசாமலிருப்பதுகண்டு நான்வரநேரமாயிற்றென்று கோபித்திருக்கிறனென்றுசொல்லி அவனைகட்டிக்கொண்டு முத்தமிட்டாளப்போது இவள்மூக்கைகடித்து சிவனைவிட்டான் அந்நேரமேதன்வீட்டிற்புகுந்து தன்புருஷன்பேரில்நிந்தையிட்டுகூவினாள தற்கடையாளம் அக்கள்ளன்வாயிலவள்மூக்கிருக்கிறதென்றுசொல்லக்கேட்டபடியே அப்பிணத்தைசோதித்துப்பார்க்குமளவிலசொன்னசாக்ஷகஞ்சரியாயிருப்பதுகண்டு ராசனுச்சரியப்பட்டு அவளைபிரியாலசுற்றி அக்கினிபிரவேசம்பண்ணகட்டளையிட்டானாகையால் பெண்பிள்ளையை நம்பலாகாதென்று ஆண்கிளிசொல்லிற்று இந்தயிரண்டுகாரியத்திலும் பாவபுண்ணியம் ஆருக்கென்று இராசகுமாரா நீரறிந்துசொல்லுமென்று வேதாளம்விக்கிரமாதித்தனைக்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் பெண்சாதியைவிற்கவும் ஆக்கினைபண்ணவும்புருஷனுக்குசெல்லும்பெண்சாதிக்குசெல்லாதென்றுசொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டுமுருக்கமரமேறிக்கொண்டது.

கிளிக்கதை-முற்றிற்று.

எ-வது வீரவர்த்தன்-சரித்திரம்.

பின்னுமவிக்கிரமாதித்தன் மரத்திலேறி வேதாளத்தைபிடித்து கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங் கதையாவது,

கேளாய்விக்கிரமாதித்தனே சாயகமென்றொருபட்டணமுண்டு அதிலேசுக்ரீவனென்றொருராசன்ராச்சியபரிபாலனம பண்ணுகிறகாலத்திலேர்பிராமணன் வீரவர்த்தனென்கிறவன் மகாசவுரியபராக்கிரமமுடையவனாகவிருந்தான் அவனந்தராசாவைக்கண்டு தன்னுடையஆண்மையைசொல்லிநித்தியம் ஆயிரம்பொன் சம்பளங் கட்டளைபண்ணிக்கொண்டு அந்தப்பொன்னைநாலுபங்காக்கிஒருபங்குதெய்வத்திற்குமொருபங்குபிரதாயத்திற்கும் ஒருபங்குபரதேசிகளுக்கும் ஒருபங்குதன்மனைக்கும் ஏற்படுத்திஎந்நாளுஞ்செய்துக்கொண்டு இரவும்பகலு மரணமனைவாயற்காத்திருப்பானிப்படியிருக்கிறநாளில் ஒருநாள்காற்றுமழையும் அகோரமாகவடிக்க அந்நேரமந்த பட்டணத்திற்கு புறத்திலே கோவென்றழுகிறசத்தமுண்டாக அதையராசன்கேட்டந்நேரமே அவ்விடத்

திற்குப்போயறிந்து வரத்தக்க பெயருண்டோவென்று விசாரிக்குமள
வில் வீரவர்க்கனென்பவன் சகலாயுதங்களைக்கட்டிக்கொண்டு ராசன்
முன்னேவந்துதெண்டம்பண்ணி நானேபோய் அறிந்துவருகிறேனென்
றுவெளியேபுறப்பட்டுப்போனான் அவன்போவானோ போகமாட்டானோவெ
ன்றுசோதிக்கவேணுமென்று அந்தராசாவறியாமற்பக்கமேபோனான்வீ
ரவர்த்தனன்போய் அங்கழுதவளைக்கண்டுஏதுக்கழுகிறாய் நீயாருன்
பேரென்ன உன்னூரென்ன சொல்லென்றுகேட்டான் அப்போதவள்
சொன்னதாவது இந்தப் பட்டணத்தையாளுந் சுக்கிரீபனென்கிற மகாராசன்
வலதுபுசத்திலிருந்துவாழும்பூமிதேவி நானாகையாலவனுக்கின்றுமூ
ன்று நாளுக்குள்ளே மரணம்வரப்போகிறது அவன்மரித்தானேயானா
ல்நாமெங்கேயிருக்கப் போகிறோமென்றழுகிறேனென்றாளந்தவீரவர்த்
தன் அம்மாபூமிதேவியே இந்த யிக்கட்டுதீர்க்கவுபாயமுண்டோவென்
றுகேட்க அவளுஞ்செய்யத்தக்கபேருண்டானால் உபாயமுண்டென்று
சொன்னாள் அதுகேட்டு வீரவர்த்தனன் நான் செய்கிறேனதற்குபாய
ஞ்சொல்லென்றுகேட்க பூமிதேவியானவள் இந்தரணகளத்திலே து
ர்க்கையிருக்கிறாள் அவளுக்கு பதினாறுவயதுள்ளகுமாரனைக்கொண்டுபோ
ய்பலியிட்டால் அவ்வரசனுக்குமரணம் வராதென்றுசொன்னாள் அது
கேட்டுத்திரும்பி பட்டணத்தேவந்து தன்னரண்மனையில்போய் தன்பெ
ண்சாதிபிள்ளைகளுடன் இந்தவர்த்தமானத்தைச்சொல்லிதன்குமாரனை
யழைத்துக்கொண்டு துற்க்கைமுன்னேவிட்டு தோத்திரம்பண்ணி தன்
கைபட்டடத்தையுருவி தன்குமாரன் கழுத்தையறுக்கப்போகக்கு
மாரத்தியும் பெண்சாதியும் இப்பாதகத்தைப்பார்க்கமாட்டாமல் அவர்க
ளுங்கழுத்தையறுத்துக்கொண்டுசீவனைவிட்டார்கள் அதையெல்லாம்ரா
சன்பார்த்து நமக்காகவல்லவோ இவர்கள் நாலுபேரும்மாண்டார்களெ
ன்று தானுங்கழுத்தையறுத்துக்கொள்ளப்போமிடத்திலே துற்க்கையான
வள் பிரசன்னமாய்வந்து நாலுபேரையுமெழுப்ப ராசாவும் அவர்களை
யறியாமல்தன்னுடைய அரண்மனைபுகுந்து நித்திரைபண்ணினான்வீ
ரவர்த்தனும் பெண்சாதி பிள்ளைகுமாரத்தி இவர்கள் தன்னரண்மனை
போகதானுமரசன்வாசலில்வந்துகாத்திருந்தான்பொழுதுவிடிந்து ரா
சாவும் கொலுச்சாவடிவந்து வீரவர்த்தனை யழைத்துராத்திரி நீபோ
னவர்த்தமானஞ்சொல்லென்றுகேட்க அவன்தேவரீரனுப்பியபடியே
அந்தஸ்திரீயைக்கண்டுஏதுக்கழுகிறாயென்றுகேட்டேன் அவளொன்று
ஞ்சொல்லவில்லையென்றுசொன்னான் ராசாவுஞ்சந்தோஷப்பட்டுதன்னு
டையபிரதானிகளுடனே இந்த வர்த்தமானமெல்லாஞ்சொல்லி வீரவ
ர்த்தனனை தன்னுடைய ஆதீனகர்த்தனாகவைத்து நடப்பித்தான் இந்த
ஐந்துபேருள்ளே சகாயஞ்செய்தவர்களியாரென்றுவேதாளங்கேட்கவி
க்கிரமாதித்தன் சொல்லுகிறான் சேவிக்கிறவன்ராசன்சொற்படி செய்ய

வேண்டும் பிள்ளை பெண்சாதியும் வீட்டுக்கு ரட்சகனாக யிருக்கிறவன் சொற்படிக்கேட்கவேணும் ராசாவானவன் தனக்கென்னகாரியமென்று போகாமல்தானுங்கழுத்தையறுத்துக் கொள்ளப்போனானே அதுவேசகாயமென்று விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங் கட்டவிழ்த்துக்கொண்டு பழபடிபோய் முருக்கமரமேறிக்கொண்டது,

வீரவர்த்தன் கதை-முற்றிற்று,

௮-வது. காற்படிகன் சரித்திரம்,

மறுபடியும் விக்கிரமாதித்தன் வேதாளத்தைப் பிடித்துக்கட்டிக் கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங் கதையாவது.

தருமபுரமென்றொருபட்டணத்திலே கண்டசிங்கனென்றொரு ராசன்பூமிமுழுதுமோர்குடைக்கீழ் ஆளுகிறநாளையில் காற்படிகனென்றொருவன்ராசாவைக்கண்டு அவரிடத்திலே சேவகத்திற்கமர்ந்தவா மனதுசந்தோஷப்பட நடந்துவருநாளில் ஒருநாள்சதுரங்கபலத்துடனே வேட்டைக்குப்போகையிலிராசன்குதிரையைமுடுக்க அதிகவேகமாய்நடந்தமையாலொருவருந்தொடர்ந்துவராததுகண்டுகுதிரையைநிறுத்தித்திரும்பிப்பார்க்கையிலந்நேரம் காற்படிகனென்கிறவன்தொடர்ந்துபோய்இராசனுக்குவெல்லமுங்கொடுத்தபின் தாகத்திற்காகஅதிகதூரம்போய்த்தேடி சுனையைக்கண்டுசலங்கொண்டுவர ராசனும் காற்படிகனையழைத்து உனக்குப்பிரதியுபகாரமென்னசெய்யப்போகிறேனென்று சொல்லிவிடாய்தீர்ந்து சந்தோஷப்பட்டு தன்னுடைய வாகனத்துக்குப் பிரதானியாக வைத்துநடப்பித்துக்கொண்டுவருங்காலத்தில் ஒருநாள்ராசாவுங்காற்படிகனையழைத்துசிங்களதேசத்து ராசாவின்குமாரத்தியைக்கொண்டுவரவேண்டுமென்றுசொல்லநல்லதென்று ஒரு வணிகனிடத்திற்சென்று கப்பலேறிப்போகையில் அக்கப்பலுடைந்து அச்சமுத்திரத்தில்முழுகையில் காற்படிகனை மீனெடுத்துவிழுங்க அதன்வயிற்றைப் பீறிக்கொண்டுவெளியில்வந்துநின்று ஓர்கொடியைப்பற்றிப்போக கரைதட்டிமேல்வருகையில் அங்கோர் காளிகோயிற்கண்டு அக்காளியை சேவிக்கப்போயங்கேயனேகக்கன்னிகள்புடைசூழவொரு ராசகன்னிகைவந்து அம்மனை தெரிசனம் பண்ணக்கண்டு அவள்பேரில் மோகித்து அவள் பின்சென்றுவந்து தாதியையழைத்து தன்னுடைய கருத்தைச்சொல்ல அவளும் ராசகன்னியுடனே சொன்னாள் ராசகன்னிகையும் அவனையழைத்து இந்தக்கிணற்றிலமுழுகிவாவென்றாள் அப்படியே அவனும் அக்கணமே யக்கிணற்றிலிறங்கி முழுகவும் அவன் பட்டணத்திலே அவனைக்

கொண்டுபோய்விட்டது அப்போது அவனைக்கண்டபேர்கள் காற்படிகன் வந்திருக்கிறானென்று ராசாவுடன்சொல்ல ராசனும்அழைத்துவரச்சொன்னான் அப்படியே யழைத்துக்கொண்டுபோய்விட அந்த காற்படிகன் ராசாவைக்கண்டு தான்போனதும் மரக்கலமுடைந்ததும் மீனபுமீன்விழுங்கினதும் அதன் வயிற்றைப்பீறிட்டு ஓர்கொடியின்வழியாகக் கரையேறி அங்குகண்ட வதிசயங்களையும் பின்னுந் தான்வந்தவாறுஞ்சொன்னான் ராசாவுமிதைக்கேட்டு தன் னிராச்சியத்திற்கு பிரதானியை அரசாளவைத்துப்போட்டு ராசாவுங் காற்படிகனுமாக புறப்பட்டுப்போகையில் அங்கு ஓர்கொடிவழிதோற்ற அந்தவழியேபோய் காளிகோயிலைக்கண்டார்கள் அங்கேயிருக்கும்போது மற்றுநாளுமந்த ராசகன்னிகைவந்து காளியைச்சேவித்துத் திரும்பும்போது இவ்வரசனைக்கண்டுமோகித்தாள் அப்பொழுதே தன்னுடையதோழியையழைத்து தூதனுப்பினாள் அவள்வந்து ராசாவைக் கண்டு அந்த வார்த்தை சொல்ல நல்லது இங்கேவரச்சொல்லென்றான் அப்படியேதாதிபோய்ச்சொல்ல ராசாவின்முன்னேவந்து சொல்லுகிறாள் நான் நாகலோகத்து இராசகுமாரத்தி உம்மைக் கண்டவுடனே வெகு விகாரமுற்றேன் என்மோகத்தைத் தீர்க்கவேணுமென்றாள் ராசாவுமனமகிழ்ந்து அவளைநோக்கி இவன் என்பிரியமானதோழன் உன்மீதிலாசைகொண்டிருக்கிறான் அவனும்நீயும மன்மதனும் ரதியும்போலக் கூடியிருங்களென்றானப்படியே நல்லதென்று சம்மதிக்க அரசன்காற்படிகனையழைத்து அன்று நீ எனக்கிரண்டு நெல்லிக்கனிகளைக் கொடுத்தாயல்லவோ இன்று உனக்கிது ஓர் கனிக் கிடாயிற்றதென்றுசொல்லி ராசன் அக்கிணற்றில்மூழ்கி தன்னிராச்சியம் வந்துசேர்ந்தானென்று வேதாளஞ்சொல்ல விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் ஒருவரிடத்திலே சேவித்தால் அவன்சொற்படிசெய்வது நீதி ராசன் தன்னை மோகித்ததே நன்று என்று சொல்ல வேதாளங் கட்டவிழ்த்துக்கொண்டு பழயபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது.

காற்படிகன்சரித்திரம்-முற்றிற்று.

௯-வது மணிமான்சரித்திரம்.

விக்கிரமாதித்தன் அம்மரத்தடியில்தொங்குகிற வேதாளத்தைப் பிடித்து கட்டி தூக்கிக்கொண்டு வருகையில் வேதாளஞ் சொல்லுஞ் சரித்திரமாவது.

கேளாய் விக்கிரமாதித்தனே விஷபுரமென்கிற பட்டணத்தில்நபுஜனென்னப்பட்ட ஒரு யிராசனுண்டு அவனுக்கு பணியெக்கிலமென்றொரு குமாரத்தியுண்டானான் அவனை சகல கல்வி யுடையவனாகக்

கலியாணம்பண்ணிக்கொடுப்போமென்று அந்தராசனினைத்திருக்கிறபோது அப்படியேமணிமானகியென்கிற ஒருராசகுமாரன்கல்வியிலும் புத்தியிலும்விவேகத்திலும் சமர்த்தனுமானவன்வந்து அவளைக்கலியாணம்பண்ணிக்கொள்வோமென்றுந் தேடிவருகையில் அவளை ராசன்கண்டு அவன்வித்தைகளைப் பரிசோதித்து அந்தப்பெண்ணை கலியாணம்பண்ணிக்கொடுத்தான் அவனும் கலியாணம்பண்ணிக்கொண்டு தன்பெண்சாதியை தன்பட்டணத்துக்கழைத்துவந்தான் இப்படியிருக்கிறநாளிலே புருஷனும் பெண்சாதியுமாக கச்சை கட்டிலின்பேரில் படுத்துக்கொண்டிருக்க சிற்றெறும்புகள் சாரைசாரையாக கட்டிலின் கீழேவர முன்னேபோக எறும்புகள் நடவாமலநிற்க பின்னேவருகிற எறும்புகள் ஏதுக்கு நிற்கிறீர்களென்றுகேட்க கட்டிலின் கீழே வழியில்லையென்றுசொல்ல பின்னேநின்றஎறும்பு கட்டிலே யெடுத்துப் போட்டுபோகலாகாதோவென்றுசொல்ல புருஷனும் பெண்சாதியுங்கூடிநித்திரைபண்ணுகையிலெடுத்தால் தோஷமென்றறிந்தோமென்று சொல்ல அப்படிச்சொன்ன யெறும்புகளின்பாஷையை ராசன்கேட்டு இதேது ஆச்சரியமென்றுசிரித்தான் ஸ்திரீயுமிராசாவைப்பார்த்து ஏன் சிரித்தீரென்றுகேட்க இராசாவை தங்கள்பாஷையினாற்கூப்பிட்டு நாங்கள்பேசினவார்த்தையை ஒருவருடனேசொன்னால் உன்தலை வெடிக்கக் கடவதென்றுசாபமிட ராசாவும் விசாரத்துடனிருக்கையில் ஸ்திரீயும்நான்கேட்பதற்கு வாய்திறக்கவில்லை என்பேரில் தயவில்லாதபடியினாலே இனிமேல்நான் வலுவிற் சிவனைவிடுவேனென்று சொல்லக்கேட்டு அரசன்மயானத்திலே கட்டையடுக்கச்சொல்லி அதன்மேற்பார்த்துக்கொண்டு பெண்சாதியைக்கிட்டவழைத்து சொல்லப்போகிற தருவாயிலோர் ஆடும் கிடாவும் அங்கேவந்து நிற்கையி லந்த கிடாவானது பொலியப்போக ஆடானது கிடாவைநோக்கி நானுன்னோடு சேர்வதில்லை அதேதெனில் கிணற்றிற்றெருங்குகிற புல்லைப்பறித்துவந்து எனக்குக்கொடுத்தாயானால நானுன்னைச்சேருவேனென அதுகேட்டுகடாவானதாகாசயமுற்று ஆட்டைப்பார்த்து ஓ ஆடே நானந்தப்புல்லைத்தாவிபிடுங்கப்போய் கிணற்றில்விழுந்துசெத்தால் மறுபடியும் நீயோரைச்சேரப்போறாய் நீயென்னைச்சேராவிடில் அதெனக்கு பெரியகாரிய மல்லவேயென்றுசொல்லிற்று இந்தவர்த்தமானமெல்லாம் ராசன்பார்த்து திடுக்கென்றெழுந்து தன்பட்டணம்போய் மறுபடியும் வேறேகலியாணம்பணணிக்கொண்டு சுகசீவியாயிருந்தான் ஆகையால் புத்தியில யாரதிகமென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தனுஞ்சொல்லுகிறான் ஆட்டுக்கடாவானாலும் ஸ்திரீபேச்சைக் கேளாதபடியினால் அதுவே யதிகமென்று விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங் கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடியேயாடி முருக்கமரம் ஏறிக்கொண்டது.

மணிமான்கதை-முற்றிற்று.

௰-வது, மதனசேனையின் சரித்திரம்.

பின்னும் விக்கிரமாதித்தன் வேதாளத்தைபபிடித்து கட்டிக்கொண்டு மிறங்கிவருகையில் வேதாளஞ்சொல்லுஞ் சரித்திரமாவது.

மகததேசத்தில் கொரவமென்றொருபட்டணமுண்டு அதில் வீரவிரனென்றொருராசனுண்டு அந்தப்பட்டணத்தில் வணிகருக்கெல்லாந்தலைமையானவன் தனதத்தனென்றொருவணிகனுண்டு அவன்வெகுகாலந்தவம்பண்ணி தனதத்தனென்றொருபிள்ளையும் மதனசேனையென்றொருபெண்ணும்பெற்றான் அவர்களைவெகு செல்வமாகவளர்த்துசமுத்திரதத்தனென்பவனுக்குக் கொடுக்கிறேனென்று மதனசேனைக்குத்தாயுந்தகப்பனும் பரியமொப்பியிருக்கையில் அப்பெண்ணின் தமையனாகிய தனதத்தனென்பவனுக்கு தருமதத்தனென்றொருதோழனுண்டு அவர்களிரண்டுபெயரும் பிரியாச்சிநேகமானதையால் ஒருநாள் மதனசேனைசிலதோழிகளுடனே பந்துவிளையாடக்கண்டு தருமதத்தன்மோகித்துதோழனுடனேபேசியிருந்து தன்வீட்டுக்குப்போய் அன்றிராத்திரி முப்பதுயுகம்போலயிருந்தமையால் தருமதத்தன்காலமேயெழுந்திருந்து மதனசேனை விளையாடுமேடையினருகேசென்று அவளைக்கண்டுமெகாவுபசாரத்துடனேவேண்டி என்னைச்சேரவேண்டுமென அதுகேட்டவள் ஆனாற்சொல்லுகிறேன்கேளும் முன்னேபரியம்போட்டிருக்கிற சமுத்திரதத்தன்வந்து என்னைக் கலியாணம்பண்ணிச்சேருமுன் உம்மைச்சேர்ந்து மருவி அதன்பின் அவனிடத்திற்குப்போகிறேன் இதற்குமுன்னே கன்னிதகமையழிக்கப் போகாதென்று பிரமாணிக்கமாகச் சொன்னாள் அதுகேட்டு அவனும்நல்லதென்றுசம்மதித்திருக்கபின்பு சிலநாட்சென்றபின் சமுத்திரதத்தன்வந்தவளைக் கலியாணம்பண்ணிக்கொண்டு இருவருமொரு பள்ளியறையிற்படுத்திருக்கையில் புருஷன் அவளைத்தழுவவருகையில் மனதிலேசஞ்சலமில்லாமல் நாயகனைநோக்கிச்சொல்லுகிறாள் என் அன்புக்குரியநாயகனே நான்பக்குவமான காலத்தில ஒருவன் என்பேரில்மோகித்தான் அவனுக்கு நான்கன்னிகையழியப்போகாதென்று என்றுபகன்வந்தபின் அவனைச் சேருமுன்னம் உம்மண்டைக்கு வருகிறேனென்று பிரமாணிக்கம் பண்ணிக்கொடுத்தேன் அதுதப்பாமற் போகவேணுமென்றுசொல்லப்புருஷனவனிலளிடத்திலே கபடில்லையென்றறிந்து சந்தோஷப்பட்டு உன்மனதின்படி போய்வாவென்று சொல்லியனுப்பினான் அவளும்புருஷனனுகையில் அனுமதிபெற்றுக்கொண்டு அர்த்தராத்திரியிலே போகையில் ஒரு கள்ளன

கண்டு அவளழகுக்கு ஆசைபட்டு தன்னுடனே கூடச்சொன்னனைப் போதிவள் அக்கள்ளனைநோக்கி உனக்கு நான்பூண்டிருக்கும் பணிகள் யாவுங் கழற்றித்தருகிறேன் அதனைநீவாங்கிக்கொண்டுபோவென அது கேளாமல் அந்தக்கள்ளன் எப்படியும் முன்னைநான்சேரவேண்டுமென் றான் அதற்கவள் ஆறுதலைக்கு நடந்த வர்த்தமான விவ்விதமானை யால் அங்கேபோய்வருகிறேனென்று பிரமாணிக்கமாகச்சொல்ல நல்ல தென்று கள்ளனும் அனுப்பிவிட்டு சந்தோஷத்தோடு வழியிற் காத்தி ருந்தான் அவளும்போயவனைக்கண்டு முன்னேசொன்ன பிரமாணிக் கந்தப்பாமல் வந்தேன் என்னைக்கூடவாருமென்றாள் அவனுஞ் சிவசி வாவென்று காதைமூடிக்கொண்டு இப்பேர்க்கொத்த பதிவிரதையைச் சேரவொண்ணாதென்று உபசாரவார்த்தையைச் சொல்லியனுப்பினான் அவளவனிடத்தில் கற்புநிலைதவறாமல் அனுமதிபெற்றுக்கொண்டுகள் ளனுடனேவந்து அங்கேபோனதும் அவர்சொன்ன வார்த்தைகளையுஞ் சொல்ல அதுகேட்டு கள்ளனுக்கு தருமநினைவுவந்து சத்தியந்தப்பாம ல்வந்ததேபோதும் எனக்கொன்றும் வேண்டாமெனச் சொல்லி தான் களவுசெய்துவைத்திருந்த சிலபூஷணங்களையும் கொடுத்து அனுப்பிவி ட்டான் அவள் புருஷனிடத்துக்கு வந்து சாஷ்டாங்கமாய்த் தெண்ட ம்பண்ணி தான்போனதும தனக்கு வழியிலேவந்தயிக்கட்டும் தருமதே த்தன் தன்கற்புநிலைகுலையாமல் தப்பவிட்டதையும் புருஷனுக்கு விபர மாகச்சொல்ல அதுகேட்டவன் உள்ளத்திற் களிப்புகொண்டு இவள் மகாபதிவிரதையென்று சந்தோஷித்து உடனேகூடியிருந்தான ஆகை யால் இம்மூவரில் யாரதிகமென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் அறுத்துக்கொண்டுபோகிறகள்ளன் சந்தோஷப்பட் டனுப்பினதே யதிகமென்று சொல்ல வேதாளம கட்டவிழ்த்துக்கொ ண்டு பழயபடியோடி முருக்கமர மேறிக்கொண்டது.

மதனசேனையின்சரித்திரம்-முற்றிற்று.

௰௩-வது, வமிசமாக்கன் சரித்திரம்,

பின்னும் விக்கிரமாதித்தன்மரத்திலேறி வேதாளத்தைப்பிடித்த கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுஞ் சரித்திரமாவது.

கேளாய் விக்கிரமாதித்தனே விஜயநகரமென்றொரு பட்டணமுண் டந்தப்பட்டணத்திலே வையகேதுவென்கிற ஓர் யிராசனுண்டு அவ னுக்குச்சந்தனச்சபத்தியென்றும் சாரகல்லியென்றும் மிருகாங்கவதி யென்கிற மூன்றுதேவியருண்டு அந்தக்காலத்திலேதென்றல்வீசும்போ ர்காலில்தாரகவல்லியு மிராஜனுமாபூங்காவனத்தில் அதிசயமாய்ப்பார்ப

கையில் அவள்கொண்டையில் முடிந்திருக்கும் பூவின்மேலோர்வண்டுவெந்தேறவே அவள் மூர்ச்சையாகிவிழுந்தனள் தாதிகளெடுத்து ஆயாசந்தீர்த்தனர் மற்றோர் சந்தனக்குபத்தியும் ராசனும் மேடையிற்சரசசல்லாபமாயிருக்கையில் நிலவின்பிரகாசத்தினால் அவனுடையமேனி எக்கும்கொப்பளித்தது அதுகண்டு தாதிமார்பன்னீரால்குளிரவீசினார்கள்மற்றொருநாள மிருதங்காலதியுடன் ராசன் சரசமாயிருக்கையிலே உலக்கைசத்தம அவள் காதிலேபட அந்தச்சத்தத்தினாலே கைவிரலெல்லாங் கன்றினவைக்கண்டு அதிசயப்பட்டனள் ஆகையால் இந்தமூவரிலே சுகதேகமாருக்கொன்றுவேதாளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் வண்டானது மேலேறினபடியினாலும் நிலவுவீசினதினாலும் அப்படியாயிற்று உலக்கைசத்தங்கேட்டகைவிரல்கன்றினதே யதிசயமென்றுசொல்லக்கேட்டு வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடியே முருக்கமரமேறினது.

வமிசமார்க்கன்சரித்திரம்-முற்றிற்று

௰உ-வது-மூந்தேவிமார்-சரித்திரம்.

விக்கிரமாதித்தன் அம்மரத் தடியில் தொங்குகிற வேதாளத்தைப்பிடித்துக்கட்டி தூக்கிக்கொண்டுவருகையில் வேதாளஞ் சொல்லுஞ் சரித்திரமாவது.

கேளாய்விக்கிரமாதித்தனேவிசையநகரமென்கிறபட்டணத்திலே வமிசமார்க்கனென்கிற ஒருராசனுண்டு அவருக்கு சந்திரவதியென்றொரு அபூர்வசிங்காரமான ஸ்திரீயானவளிருந்தாள் அவள்பேரிலுள்ள மோகத்தினாலே எந்நேரமும அவளைவிட்டுப்பிரியமாட்டாமல் அதிகவிகாரமாய் நாடுநகரங்களை விசாரிக்காமலிருந்தான இப்படி யிருக்கிறகாலையில் அந்த அரசனுடையமந்திரியானவன் எல்லாக்காரியமுந்தானே விசாரித்து அநீதிதப்பாமல்நடத்திவருகையில் ராச்சியத்திலேயுசனங்கள ராசனையுபாயத்தினால் தள்ளிவைத்து மந்திரியானவனே காரணகர்த்தனாகுமென்கிற அபவார்த்தைகளைச்சொல்ல அதுகேட்டுமந்திரி கிலேசமுற்றுமனந்தாளாமல் தேசாந்திரியனாகப்போனான அந்த ராசனதுகேட்டுமற்றுமுள்ளவர்களை விசாரிக்கக்கட்டளைபண்ணினானப்படியே ராஜா நிருமித்தப் படிக்கு மற்றவர் பரிபாலனம் பண்ணுகையில் முன்னேபோனமந்திரிதேசமெல்லாந்திரிந்து வருங்காலத்திலே சமுத்திரக்கரையினருகேயிருக்கும் ஓர்நகரிற்சென்று அந்நகரிலோர்வணிகனுடனே சிநேகிதமாகி இவ்விருவரும்ஒருவருக்கொருவர் பிரியாமலிருந்தார்கள் இப்படியிருக்கையிலே வர்த்தகனும்மிவனை நோக்கிகப்பலேறிப்போய்வருகிறேன் நானவருமளவும்இங்கேயிருமென்றுசொல்ல மந்திரியுடனாலுடன்வந்து அத்தீவாந்திரத்திலுள்ள அதிசயம் பார்க்கவே

ண்டுமென்ன அப்படியே நல்லதென்று யிருவருங் கப்பலேறிப்போகையில் ஓர்காற்றுவந்து கப்பலில்மோத அக்கப்பலுஞ் சுழிலகப்பட்டுதிசையிருக்குமந்திசைபோயிற்று அப்படியேபோகையில் ஓர்திட்டைகண்டு அங்கேகப்பலைநிறுத்தியிறங்கிப்பார்க்கையில் அதிசயமாய்ஓர்கோயிலும் அக்கோயிலுக்கெதிரே ஒருவிருட்சத்தின்கீழ் ஓர்சிங்காதனமேடையில் அதிரூபசவுந்தரியமான ஸ்திரீபடுத்திருப்பதைக் கண்டு இதேதோ தெய்வீகமாயிருக்கிறதுநாமிங்கே யிருக்கப்போகாதென்று கப்பலேறிக்கொண்டு தங்களுடையதேசம்போனார்கள் வழியில்விழுந்த பொருள் மடியிலிருந்தாற்போல் மந்திரியும் அந்த ராசனைக்கண்டான் ராசனும் வெகுசந்தோஷமாய் உன்னைத் தனியே விட்டுப் போனதும் போனவிடத்தினிற்கண்ட அதிசயங்களைச் சொல்லுகிறோம்.

உனதுராச்சியத்தி லிப்படிக்கொத்த வார்த்தைசொன்னபடியினாலே மனக்களாமற்போனேன் அந்தவிடத்திற் கண்டவதிசய மிப்படியென்றுமந்திரிசொல்ல அரசன்கேட்டு அந்தவதிசயம் நான்பார்க்கவேணுமென்று மந்திரியையழைத்துக்கொண்டு கப்பலேறிப்போய் அந்தத்திட்டிலிறங்கியங்கிருக்குங் கோயிலைக்கண்டு கிட்டப்போய் பார்க்கையில்கன்னிகையை ராசன்கண்டு இப்படிப்பட்ட ஸ்திரீ யானவள் இந்திராதிதேவர்களுக்குங்கிடையாதென்று மனதிலெண்ணியவளையழைத்தாள்ளை நீ மருவவேணுமென்றான் ராசனைநோக்கிப்பார்த்து இவன்கிரீடந்தரித்தமகனேயல்லாமலவேறொருவ னல்லவென்றுமனதிலெண்ணிக்கொண்டுபின்புராசனே அஷ்டமியாவது அமாவாசையாவது வந்தவுடனே கூடுகிறேனென்றாள் ராசனும் நல்லதென்று சம்மதித் திருக்கையில் பருவம்வந்தவையால் யந்நாளில் ஓர்நோன்பு நோற்கவேணுமென்று ஓர்பொய்கையில் ஸ்நானம் பண்ணினாள் இராசன் வாளையுருவிக்கொண்டு பக்கமேபோனான் யந்தருவாயில் களராசனை சனிபற்றியதுபோலவும் சலதுஷ்டனென்கிறவன் வந்தவளை யெடுத்து விழுங்குவதையிராசன்கண்டு அந்த பிராட்சதனைவெட்டி வயிற்றைப்பிளந்தவளைவெளிவிடவிட அவள் அவ்விராசனைப்பார்த்துசொல்லுகிறாள் முன்னாலே சாபம்வந்தவாறுகேளும் தேவேந்திரனிடத்திலிருக்கின்ற வித்துவாமிசத்தி லதிபிரதானமானவனொருவனுண்டு அவர்பெயர்மிருகாங்கிதையவருந்து முக்கினகுமாரத்திறேனா எனக்குப்பிற்பாடு ஆயிரங் குமாரர்களுண்டு என்னுடையதகப்பன என்னையன்றித்தனியே ஒருநாளும்போசனம்பண்ணுகிறதில்லை யப்படியிருக்க ஒருநாள் நானஷ்டமியிற் பார்வதிநோன்பு நோற்கப்போனேன் அப்போதுஎன்தகப்பன்போசனப்பொருட்டாகஎன்னைத்தேடிக்காணாமல் போசனங்கொள்ளாயலிருந்துபின்வந்தபின்பு என்னைக்கண்டு மிகவுங்கோபங்கொண்டு இராக்கதனாவிழுங்கவென்றுசபித்தார் அதுகேட்டுநான்மெத்தவும்பயந்து இந்தச்சாபந்தீரவதெப்போவென்று கேட்டேன் அவருடையமூர்க்கமான கோபந்

தெளிந்து சொன்னது வமிசமார்க்க னென்கிற ஒரு இராசன் உன்னைச்
சேரவருவான் அதினாலே சாப விமோசன மாகுமென்றார் அப்படியே
தீர்ந்ததென்று விரதத்தை முடித்துக்கொண்டு அவ்விருவரும் அந்தத்
தடாகத்தில்மூழ்கிச சந்தோஷமாயிருவருங்கூடித் தன்பட்டணமேவந்
துசேர்ந்து வாழ்ந்திருப்பதை மந்திரிகண்டு கஞ்சைதின்று சிவனைவி
ட்டான அவன்சிவனைவிட்டது எதினாலேயென்று வேதாளங்கேட்கவி
க்கிரமாதித்தன்சொல்லுகிறான் குழந்தைகளுக்கு ருசியானவஸ்துவை
க்கொடுத்தாற்போலுந்துஷ்சனுக்கு நல்லவசனஞ்சொன்னாற்போலு
ங் குருடனுக்கு பாலுஞ்சாதமுங் கொடுத்தாப்போலாயிற்று நான்சொ
ல்லி தேவகன்னிகையைக் கொண்டுவந்தேனென்று விக்கிரமாதித்தன்
சொல்லவேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடியேபோய் முருக்க
மரமேறிக்கொண்டது,

முத்தேவியார்கதை-முற்றிற்று.

௰௩-வது யோகிசரித்திரம்.

மறுபடியும் விக்கிரமாதித்தன் வேதாளத்தைப் பிடித்து கட்டிக்
கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய் விக்கிரமாதித்தனே புஷ்பபுரத்தின் சமீபத்தில் ஓர்பாழு
ங்கோயிலுண்டு அதிலேயொரு பிராமணன் பசியினாலே மெய்தளர்ந்து படு
த்துக்கொண்டிருந்தான அவனை ஒரு யோகிபுருடன்கண்டு அவன்பசி
யைத்தீர்க்க வேண்டுமென்று மனதிலெண்ணி மந்திரத்தினால் ஒருபட்
டணமுண்டுபண்ணிப் பிராமணன்வீட்டிலே அன்னமிடவைத்தானக்
தப்பிராமணனுந்திருப்தியாகசாப்பிட்டான் பின்புகளைதெளிந்தது அப்
போது யோகிபுருடர் அந்தப் பிராமணனுக்கு மந்திரவுபதேசம பண்
ணினார்ஸ்நானம்பண்ணவேண்டுமென்றும்போய் ஸ்நானம்பண்ணுகையி
ல தன்னுடையபிள்ளையந்த கிணறுதும்பால கனவுகண்டு வெளியேவந்
து யோகிபுருடனுடனே நான்முழுகப்போய் சலநிலசிரசையமிழ்த்து
கையிலிருக்கக் கனவுகண்டேனென்று சொன்னான அந்த மந்திரமப
லியாமற்போனதேயென்று வேதாளங்கேட்கவிக்கிரமாதித்தன் சொல்
லுகிறான்-விரதம்-சிரத்தை-தானம் இவை முதலானவை யேகமனதா
யிருந்தாற்பலிக்கும் இல்லாவிட்டால் பலியாதென்று சொல்லக்கேட்டு
வேதாளம்-கட்டவிழ்த்துக் கொண்டு பழையபடியே முருக்க மரமேறி
க்கொண்டது.

யோகிகதை முற்றிற்று.

௰௬-வது, வைசியப்பெண்சரித்திரம்.

———

பின்னும் விக்கிரமாதித்தன் வேதாளத்தைப் பிடித்துக் கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுஞ்சரித்திரமாவது,

கேளாய் விக்கிரமாதித்தனே ஓர்பட்டணத்தில் ஒருவணிகனுக்கு ஒருகுமாரத்தியுண்டு அவள்விபசாரியாக ஓர் பிராமணனைச் சேர்ந்துக்கொண்டிருந்தாளாங்காலில் ஓர்வணிகன்வந்து அவளுடையதாய் தகப்பனாரைக்கண்டு உன்னுடையகுமாரத்தியைத்தரவேண்டுமென்றுகேட்கநல்லதெனறிருவரும்சம்மதித்துக் கலியாணம்பண்ணிகொடுத்தார்கள் புருஷனும்ஸ்திரீயுமனுபோகம்பண்ணிக்கொண்டிருக்கிறநாளில் அத்கள்ளனாகியபிராமணனுடனே சேரக்கூடாமையாலவன்மீதிலுண்டாகியவிருப்பத்தினாலேயவளுமரித்தனள் அவள்மரித்தசெய்திபிராமணன் கேள்விபட்டவுடனே விகாரமுற்றுமரித்தான் பெண்சாதி யிறந்ததுகண்டு காமநோயினாலே அவள்புருஷனுமரித்தான் இம்மூன்று பேரில் யாரதிகமென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் பிராமணன் வைசிய கன்னியை எவ்வளவு காலமுதற்கொண்டு அநேக நாள்முதற்கொண்டு அநேககாலகூடினமோகத்தினாலும் பின்புகூடாதபடியினாலுமரித்தான அவள மீதிலுண்டாகிய விரகத்தினாலவனிறந்தான் இவள்புருஷனிவளுடைய கருத்தறியாமல்விருதாவாய்மரித்ததேபெரிதென்றுவிக்கிரமாதித்தன்சொல்லவேதாளமகட்டவிழ்த்துக்கொண்டுபழையபடியேபோய் முருக்கமரமேறிக்கொண்டது

வைசியப்பெண்சரித்திரம் முற்றிற்று,

———

௧எ-வது-புலியையெழுப்பிய சரித்திரம்

——(*)——

மறுபடியும்வேதாளத்தை விக்கிரமாதித்தன்பிடித்துக்கட்டித்தூக்கிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுஞ் சரித்திரமாவது

கேளாய் விக்கிரமாதித்தனேபிரமபுரமென்னும் அக்கிராரத்திலே விஷ்ணுசுவாமியென்றொரு பிராமணனுண்டு அவருக்குத் தவத்தினால் பெறும்பிள்ளைகள் நால்வருண்டு அந்தப் பிள்ளைகள் காரியத்தினாலே தேசாந்திரம்போனார்கள் இப்படி தேசந்திரிகிற காலத்தில் ஒருயோகிபுருஷனைக்கண்டு அவருக்கனந்தபணிவிடைகள் பண்ணிக்கொண்டிருக்க அவரிந்த நால்வருக்குஞ் சஞ்சீவிமுதலான வித்தைகள் உபதேசம்பண்ணி வைத்தார் அப்படி யவரிட மாகச் சிலநாளிருந்து அவ்வழியிலே துஷ்டமிருகமாகிய புலியொன்று செத்துச சரீரமெல்லா மழிந்து எலும்புமாத்திரங் கிடக்கக்கண்டு நால்வரும்போய் ஒருவனெலும்பைச்சேர்த்து கூட்டுமுண்டாக்கினான் ஒருவன் உதிரமுண்டாக்கினான் மற்றொருவன் ஜீவனுண்டாக்கினான் புலியும் தன சுயரூபத் தோடெழு

துவந்த இந்நால்வரையுங் கடித்துப்போட்டது இந்ததோஷம் யாருக்கென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் இந்நால்வரிலே அதைதுஷ்டமிருகமென்றறிந்து உயிராக்கினவனுக்குதோஷமென்று விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது.

புலியையெழுப்பினகதை-முற்றிற்று.

௰௬-வது அனுமதிசரித்திரம்.

பின்னும் விக்கிரமாதித்தன்மரத்திலேறி வேதாளத்தைப் பிடித்துக்கட்டிக்கொண்டு வருகையில் வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய் விக்கிரமாதித்தனே வனுசிலென்னுமோர் நகரத்திலே தெய்வசாமியென்றொரு பிராமணனுண்டவனுக்கர்ச்சனசுவாமியென்றொருபெண்ணைக் கலியாணம்பண்ணினார்கள் புருஷனும் பெண்சாதியும் ரதியு மன்மதனும்போ லிருக்கிறவேளையி லந்த ளிராக்காலத்தில் புருஷனும் பெண்சாதியுந் தென்றல்வீசுமிடத்தில் நித்திரைபண்ணுகையிலவளுடைய அதிரூ-சிங்காரத்தைக்கண்டு ஒரு இராக்கதனெடுத்துக்கொண்டுபோனானந்த வருச்சனசுவாமி பக்கத்திலே ஸ்திரீயைக்காணாததினாலே வெகுமனஸ்தாபத்துடன் பூமியெங்குந்தேடிக்கொண்டு போகிறபோது அந்தப்புரமெனனும் ஓரகரத்திலே பத்மநாபனென்னும் பிராமணனருகிற்சென்றழுதுகேட்கப் பிராமணன் தன்பெண்சாதியையழைத்தவருக அன்னமிடவென்றுசொன்னபடி அசனமும் பதார்த்தமுங்கொண்டுவந்துகொடுக்க யதையோரிலையில் வாங்கிமுடிந்துக்கொண்டு ஓர்நதியில்மூழ்கித் தனக்குண்டான நியமங்களெல்லாமுடித்துக்கொண்டு தான்முடிந்துவைத்த அன்னத்தையெடுத்து சலத்தைதெளித்துச் சாப்பிடுகையில் இளமையில்வந்தநோய்போலவும் நன்றாய் வாழுங்காலத்தில் வந்த இயமன்போலவுந் தனியாயிருக்கையில் வந்த இக்கட்டுப்போலவும் ஓர்கெருடன் தன்பசியினாலே நல்லசர்பத்தைப்பிடித்தவன் சாப்பிடுகிற அன்னத்துக்கு நேராகக்கொண்டுவந்து விருட்சத்தின்மேல்வைத்து மூக்கினாலேகுத்த அந்தப்பாம்புக்குவேதனையானபடியினால் விஷத்தைக்கக்கதவிஷயம அசனத்திலேவிழ யதையறியாமற் சாப்பிட்டபடியால் பிராமணனிறந்துப்போனான் ஆதலாலந்த பிராமணஹத்திதோஷம யாருக்கென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் தருமத்துக்கு அசனமிடுவித்தான் கருடன்பசியினாலே கொணடுவந்த சர்பத்தைகொல்ல சர்ப்பதுக்குவேதனையானபடியினாலே விஷத்தைக் கக்கிற்று இந்தக்கதி இனனாருக்கென்று சொன்னவர்களுக்கு பாதகமவந்துசேருமென்றுசொல்ல விக்கிரமாதித்தன் சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு முருக்கமரமேறிக்கொண்டது.

அனுமதிகதை-முற்றிற்று.

௧௭-வது இரத்தினவதி சரித்திரம்.

பின்னும் விக்கிரமாதித்தன் வேதாளத்தைப்பிடித்து கட்டிக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லுஞ் சரித்திரமாவது.

கேளாய் விக்கிரமாதித்தனே அயோத்தியென்றொரு பட்டணமுண்டந்தப்பட்டணத்தில வீரதேவனென்கிற ஒருவணிகனுக்கு இரத்தினவதியென்றொரு குமாரத்தியுண்டவளுடைய அழகுக்கு ஒருத்தருமீடில்லை இப்படி யதிரூப சிங்காரத்துடனே சிறந்து வளர்ந்த இளமையையுங் கண்டனேகம்பேர்வந்து கலியாணம்பண்ணிக் கொள்ளும்படி கேட்க ஒருவருக்குநான் பாரியாகிற தில்லையென்று தாய்தகப்பனுக்கு வெகுசெல்வத்தியா யிருந்தாளப்படியிருக்கிற நாளையி லந்தப்பட்டணத்தில் சிலர்கன்னமிடுவது ஒருவராலுங் காணப்படாமையா லந்தவூரில் வாழப்பட்டசெனங்கள் இராசனுடனே முறையிட வதுகேட்டந்தக் கள்ளனைப்பிடிக்கவேண்டுமென்று அர்த்தராத்திரியி லிராசன் நகர் சோதனைக்காக வருகையிலந்நேரத்தில் கறுக்கமேனியையும் விரித்ததலையும் எதிர்த்தவரைத் தணிக்கத்தக்க ஆயுதமுங் கழிக்கச்சையுங்கட்டிக்கொண்டு கள்ளத்தொழிலுள்ளவனைக் கறுத்தமேனியும்விரித்ததலையும் எதிர்த்தவரை முன்னேவர ராசனுமவனையாரென்று கேட்க இந்தவூரைக்காக்கிற பத்திரகாளியின் புத்திரன வூர்ச்சுற்றிவருகிறேனென்றுசொல்ல ஆனால்நல்லதாயிற்று என்னுடையவரண்மனைக்குத் தலைவனாகயிருவென்று உபாயத்தினாலேகொண்டுபோய் அரண்மனைவாசலிலே தந்திரம்பண்ணி ராசனுமரண்மனைக்குள்ளேபோனான் அந்தக்கள்ளனுந் தன்பாஷையிலே மற்றக்கள்ளரையழைக்க கள்ளர்வந்து இராசனைக்கொல்லவேணுமென்று பேசுகையி லந்தவார்த்தையை காவற்காரர் கேட்டரசனுக்குச்சொல்ல அக்கணமே தனதுசேனைகளோடுங் கைப்பிடியாகப் பிடித்துப் பின்கட்டாகக்கட்டி பட்டணத்தைச்சுற்றி வித்துகழுவிற்போட நியமித்தான் அப்படியே கள்ளனையழைத்துப்போய் சரீரமெல்லாஞ் சந்தனம் பூசிக்கழுத்திலேமாலைப்போட்டுப் பட்டணத்தை வலமாகச் சுற்றிவருகையி லவ்வூர் செட்டித்தெருவில் வரும்போது இரத்தினவதியென்பவள் ஒருவர்மேலிலும் ஆசையில்லாதிருந்தவள கள்ளனைக்கண்டாசையானாளதைக்கண்டவள் தாய்தகப்பன் கள்ளனைக்கண்டாசைப்பட்டவள் இவளையுங்கள்ளியென்று சொல்வார்களென்றுசொல்லவதைகேட்டு இரத்தினவதியென்பவ ளந்தக்கள்ளனே எனக்கு புருஷன் அவனுக்கேநான் ஸ்திரீயென்றுசொல்லி எந்தவிதத்திலாவதவனை விடுதலையாக்கினால் என் சீவனிருக்கும் இல்லாவிடில் என்சீவனைவலுமையில் விடுவேனென்பதுகேட்டு யாவரும் இதெனகாரணமென்று நினைக்க அவள் தகப்பன் இராசனையாகிலும்போய்க்காண்போமென்று ஓர்கோமேதகங் கொண்டுபோய் ராசனைமுன்னே வைத்துச்சொல்லுகிறான் ஓமகாராசனே எனக்கனேககாலந்தவமபண்ணிப்பெற்ற ஒருகுமாரத்தியுண்டவள் அக்கள்ளன்பேரிலே மோகமுற்றுள்ளவளைவட்டிரட்சித்தாலுமக்கனேக திரவியங்கள் தருகிறேனென்றான பின்னும இராசனைப்பார்த்து மற்றவென்னகேட்டாலுந் தருகிறேன இத்தனைசனுங்கொள்ளைகொண்ட கள்ளனைவிடப்போகாதென்

ருனதுவுடன்றி கள்ளனுக்குமேல் பேச்சுபேசவர்த நீயுமோர்கள்ளன் என்முன்னே நில்லாமற்போவென்றான் அவ்வசனங்கேட்டுச் செட்டி வெட்கி கிலேசத்துடனே தன்வீட்டுக்கேகி இராசனரண்மனையிலே நடந்தவிங்கைகளைச் சொல்லக்கேட்டமகள் பெருங்கூட்டமூந்து தலைவிரித்து மார்பிலறைந்துக்கொண்டு கள்ளனைத்தொடர்ந் தழுதலறிபோனதையுமிவளைப்பின்றொடர்ந்து இவள் தாய்தகப்பன்மாரழுதுக்கொண்டுபோனதையும் ஆச்சரியமாக வேடிக்கைபார்த்தபேரெல்லாம இவர்களைப்பின்றொடராக கள்ளனைகொலைக்களந்திலே கட்டியிருக்குங் கழுமரத்தைச்சுற்றிவரநடத்திக் கழுவிற்போடுகையிலக்கள்ளன் இந்தச்செட்டிப்பெண்ணையுமவள் தாய்தகப்பன்மாரையும் பார்த்துநகைத்துப் பின்பழுதுமரித்தான் மறித்ததுகண்டு செட்டிப்பெண்ணானவளக்கினியவளர்த்தி அதில்தன்னுயிரைவிடப்போகையில் இவைகளையெல்லாம ஆகாயத்திலிருந்து பார்த்திருந்தபார்வதியும் பரமசிவனும் ரிஷபவாகனத்தின் மீதிலிருந்துபெண்ணைக்கூப்பிட்டு உனக்கென்னவரம்வேண்டுமோ கேளென்னவதற்கவளந்தக்கள்ளனை எழுப்பித்தரவேண்டுமென்றாளவர்களும் இவள் பதிவிரதையென்றெண்ணிச்சந்தோஷித்து அந்தக்கள்ளனை எழுப்பிவிட்டுக கைலாசபர்வதத்துக்குப் போனார்களனைவருங்கூடி யந்தப்பெண்ணை யக்கள்ளனுக்கே கலியாணம் பண்ணிக்கொடுத்து வாழ்ந்திருப்பதை இராசன் கேள்விப்பட்டுச் சந்தோஷமாகி யக்கள்ளனைத் தனதுசேனைக்குத் தலைவனாகயிருக்க நியமித்தான் ஆகலாலக்கள்ளனுயிர் விடுகையில்சிறித்தும் பின்பழுது மரித்ததும் என்னகாரணத்தாலென்றுவேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் முன்னேயிந்தப்பெண் தன்னையறியாவதன் இப்படிவந்தது அதிசயமென்று நகைத்தான் பின்பவன தாய்தகப்பன்படுகிற விசனத்தைக் கண்டிரங்கியழுதானென்றும்விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங் கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடி முருக்கமரமேறிக்கொண்டது இத்துவதிசரித்திரம் முற்றிற்று.

௰அ-வது பகவதியின் சரித்திரம.

விக்கிரமாதித்தன்மரமேறி வேதாளத்தைப்பிடித்து கட்டிக்கொண்டுவருகையில வேதாளஞ் சொல்லுஞ் சரித்திரமாவது.

கேளாய்விக்கிரமாதித்தனே கோலமென்கிறவொருபட்டணத்திலே கார்த்திகேயனென்னுமிராஜனுக்குப் பகவதியென்றொரு குமாரத்தியுடையவளவெகுசிங்காரத்துடனேயிருப்பாள் அவளைச் சந்தியாகாலவேளையில்தன்சுவாமியென்றொருபிராமணன் கண்டுமோகிக்க அந்தஇராஜகுமாரத்தியும் பிராமணனைக்கண்டுமோகித்தாள் அந்தப் பிராமணன் வெகுஆசையினாலே எந்தவுபாயத்திலிவளைச்சேரலாமென்றுவிசாரமுற்றுஉலகவேதனென்கிற தந்திரியோகியைக்கண்டு தான்மோகித்தவர்த்தமானமவருடனேசொல்ல அவரும்நல்லதென்றுபிராமணனைப்பெண்ணாக வேடம்போட்டு ஒருகன்னிப்பெண்ணென் றெடுத்துக்கொண்டுபோய்இராசாவைப்பார்த்து நான்காசியாத்திரைபோய்வருகிறேனான் போய்வருமளவும் அந்தப்பெண்ணை உமதுடைய அடைக்கலமாகவைத்திருமென்றுசொல்லிப்போனான் இராஜனுமந்தக்கபடமறியாமல் தன்கு

மாரத்தியண்டையி லிருக்கச்சொல்லித் திட்டம்பண்ணினபடியே ராசகுமாரத்திபார்த்து இதேது வெள்ளைமார்க்கமென்றுகேட்கஉன்மீதில் கோபமாகி வந்தேனென்று சொல்ல நல்லதாயிற்றென்று இருவருங்கூடியிருந்தார்களப்படியிருக்க இந்த ராசகுமாரத்திக் கெர்ப்பமேயாயினுளந்தநாளில் ஓர்மந்திரிகுமாரன் இராசாவைக்கண்டு உம்முடைய குமாரத்தியை எனக்குகலியாணம்பண்ணிக்கொடுமென்றுகேட்க இராசனுஞ் சம்மதித்து அந்தச்சித்தியோகி வட்டுப்போனபெண்ணைக் கலியாணம்பண்ணிக்கொண்டு தன்னுடைய படுக்கைவீடுபோய் பெண்சாதியை யழைக்க அவள்சொன்னது என்பேரில் ஓர்பூதமிருக்கின்றது அதுஇருவரையுஞ் சேரவொட்டாதென்றுசொல்ல அதற்குசெய்யும் வகைபேதென்றுகேட்க நீர்தீர்த்தயாத்திரைப்பண்ணிவந்தாலதுவிட்டுப்போமென்றுசொல்ல மந்திரிகுமாரன் யாத்திரைப்போனபோது உலகதேவன் பின்னையோர் சிஷனையழைத்துவந்து இராஜாவைக்கண்டு நான்விட்டுப்போன பெண்ணைப்பற்றும என்சிஷனுக்கு கலியாணமபண்ணவேண்டுமென்றுசொல்ல அதற்குராசனப்பயந்து யவளை மந்திரிகுமாரனுக்கு கலியாணம்பண்ணிக்கொடுத்துவிட்டமையால்பதிலுக்கு என்குமாரத்தியை கலியாணம் பண்ணிபழைத்துக்கொண்டுவருகையிலதற்கந்த பிராமணனுக்குச் சொல்லியனுப்ப அட்சணமே யவன் வந்து தன்பெண்சாதியென்று மரிக்க இருவருக்குஞ் சண்டையாகி யுனக்கெனக்கென்பதாய் இருவருக்குள் யாருக்கவள் ஸ்திரீயாகவேணடுமென்று வேதாளங்கேட்கவிக்கிரமாதித்தன்சொல்லுகிறான்பிராமணன்களவிலேமேல கூடினான் தாய்தகப்பன் சம்மதித்து கலியாணம்பணணிக்கொடுத்தவனுக்கே பாரியாகவைத்திடுமென்று விக்கிரமாதித்தன சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது

பகவதியின்கதை-முற்றிற்று

௰௩-வது சர்ப்பத்தினுடைய சரித்திரம்.

விக்கிரமார்க்கன் முருக்கமரமேறி வேதாளத்தைப்பிடித்துக்கட்டிக்கொண்டுவருகையில வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய் விக்கிரமாதித்தனே புதுபுரமென்றொரு பட்டணமுண்டதிலே சிலமுகயாகனென்றொரு ராசனுண்டு அவனை யாசகருக்கெலலாம் ஆதாரமானவன மகாசதுரங்க வல்லவன் எந்நேரமும் இராச்சியத்திலநிசமபார்த்துக்கொண்டு திரிவான் அந்நாளில ஒருவனத்தில நாகங்களெல்லாருங்கூடி அதை ஓர்கருடன்கண்ணிற்கண்ட பாம்பையெல்லாம்பிடித்துப் பட்சிக்கஒருநாளந்த வனத்திலுண்டானநாகமெல்லாங்கூடிகருடனைக்கண்டு எங்களுக்கோர் மனுவுகொடுக்க வேண்டுமையாவென்றுகேட்க நாங்களித்வனத்தில் உம்முடைய பாதத்திலிருக்கின்றோமெங்களித்தனை பேரையும பிடித்துப்பட்சிக்கிறீர்கள் இனிமேல்எங்கள்மேல கிருபைவைத்து அப்படி செயயாமல் வரிசையாய் நித்தம் ஒருவர் வருகிறோம வருமவரை பட்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடியேற்று அந்நாள் முதற்கொண்டு முறை முறையாகப்புசித்து வருகையில சந்தசூடனென்கிற சர்ப்பம் ஓர்நாள்க்கு

ஓர்பிள்ளைபலனுக்கு அன்றைபதினம் முறைவந்தது அவன் தாய்தகப்பன் துக்கத்துடனே ஒர்மரத்தினிழலும் நிழலல்ல ஓர்கண்ணுங் கண்ணல்ல ஓர்பிள்ளையும் பிள்ளையல்லவென்று கோவென்று புலம்புகிறவேளையில் அந்தவன்த்தருகே புற்றைப்பார்க்கவந்த சிவபூதவாகனனைக்கேட்டு வந்து அவ்வேசுபேதுக் கழுகிறதென்று கேட்க அந்தநாகமும் தன்னுடையவர்த்தமான மெல்லாஞ்சொல்லி யழுகைக்கண்டு இராசாவுந்துக்கப்படாதேயென்று தேறுதலைச்சொல்லி நான்கருடனுக்கு இரையாகிறேனென்றானதுகேட்டு நாகமானது என்விதியைமாறு தொலைக்கவேண்டுமேயல்லாமல் உமக்குக் காரியமென்ன நீருமுடைய பிராணனை அதற்குக் கொடுப்பானேனென்று சொல்லிக்கொண்டிருக்கையில் கருடன் ஆகாயம்வேண்டி வெகுகோபத்துடனே வாநவது கண்டு இராசாவும் நாகத்துக்குப்பதில் என்னைப்பட்சித்துப் பசிதீருமென்று சொல்ல கருடனுந் தன்னுடையமனதிலே சத்தியபுருஷனிவனேயென்று சந்தோஷப்பட்டு உமக்குவேண்டும் வரங்களுந் தருகிறேனென்ன ஆனாலின்றுமுதலாக உயிரோடிருக்கிற பாம்பைப்புசிக்கவேண்டாம் இந்தப்படியிறந்துப்போன பாம்பைப்புசியுமிந்த வரமெனக்குக் தரவேண்டுமென்று ராசன்கேட்க கருடனுமப்படியே சந்தோஷமென்றுசொல்லிக்கருடன் தன்பதிக்குப் போய்ச்சேர்ந்தான் பின்புபிராசனும்சர்ப்பத்தினிடத்திலனுமதிபெற்றுக்கொண்டு தன்பதியில்போய்ச்சேர்ந்தானிவ்விரண்டுபேரில் யாரதிகமென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன்சொல்லுகிறான் மனிதனைப்போல சகலகாரியமுந்தெரிந்தவனானபடியினாலே பிராணனைக்கொடுக்கிறேனென்றான் கருடனைப்பட்டவாதப்பட்சிக்கிறதாகையாலதற்கு கருமமில்லைவந்தது பிரதிக்கினைசொல்லிவிட்டதினால் அதிகமென்று விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது.

சர்ப்பத்தினுடைய கதை-முற்றிற்று.

உ௰-வது கோமுட்டிப்பெண் கதை.

பின்னும் விக்கிரமாதித்தன் வேதாளத்தைப் பிடித்துக் கட்டிக் கொண்டு வருகையில் வேதாளஞ்சொல்லுங் கதையாவது.

சோளாய விக்கிரமாதித்தனே கனகபுரமென்றொரு பட்டணமுண்டு அதிலே விசாதரனென்றொருஇராசனுண்டு அவனொருகோமுட்டிபெண்ணைக்கண்டு அவள்பேரிலே ஆசைகொண்டு அவளைக்கலியாணம பண்ணிக்கொள்ள வேண்டுமென்று தன்னுடைய புரோகிதனைக் கேட்க அந்தப்பெண்ணை நீர்கலியாணம்பண்ணுவீராகில் உமது இராச்சியத்தைவிட்டுப்போவீரென்றான் அதுகேட்டுஇராசனும் அந்தப்பெண்மேலிருந்த ஆசையையொழித்துத் தனபிரதானிக்கு அந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொடுத்தான் அந்நாளில் அவள் உப்பரிகையிலேமேலிருக்கையில் அவ்வரசன்கண்டுமோகித்து விரகதாபமாகிறதைப் பிரதானிகண்டு தனது பெண்சாதியான கோமுட்டி பெண்ணையழைத்து இராசனைக்கூடிச் சேர்ந்து வாவென்று சொன்னான் அப்படியே ய

வரும் இராசனிடத்திற்போனள் அதை ராசனுங்கண்டு ஒருவன்பெண்சாதியை ஒருவன் தொடலாகாதென்று அனுப்பிவிட்டு அதுவேமனதில் விகாரமாகிசீவனைவிட்டானதுகண்டு பிரதானியானவன்தம்முடையபெண்சாதியின்பேரிலுள்ள விரகதாபத்தினாலல்லவோமரித்தானென்று விசனமுற்று அவனுஞ்சீவனைவிட்டான் ஆகையால்இவ்விருவரில் யாரதிகமென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் அழகுடனிருந்தாலும் தன்னுடைய மோகத்தைப்பாராமலந்தப்பெண்ணைவேண்டாமென் றனுப்பினதே யதிகமென்று விக்கிரமாதித்தன்சொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடியோடி முருக்கமரமேறிக்கொண்டது

கோமுட்டிப்பெண்கதை-முற்றிற்று.

உக-வது கனககுமாரத்தியின் சரித்திரம.

விக்கிரமாதித்தன் மறுபடியுமரத்திலேறி வேதாளத்தைப்பிடித்துக்கட்டித்தூக்கிக்கொண்டுவருகையில வேதாளஞ்சொல்லுங்கதையாவது.

கேளாய் விக்கிரமாதித்தனே சித்திராபுத்திரமென்னும் பட்டணத்துக்கதிபதியாகியராசன வேட்டைமார்க்கமாக ஓர்வனத்திற்போகையில ஓர் ஸ்திரீயைக் கண்டவள்பேரில் மையலாகி அவளைநோக்கி நீயாரென்றுகேட்க கானகமுனியின் குமாரத்தியென்றுகூற இராசன் சந்தோஷப்பட்டு வேடிமின்கிழவனுடனே போகிறபொழுது ஓரிராக்கதன்வந்து வழிமறித்துக்கொண்டு உங்களை விழுங்கிப்போடுவேனென்பதைக்கேட்ட ராசன்பயந்து நடுநடுங்கி அவ்விராக்கதனுக்கு உபசாரவார்த்தைகளைச் சொல்லுகையில மனமிரங்கி யானுலுன்னை விழுங்காம லிருப்பதற்கோர் தாயுந்தகப்பனு மிருக்கிற பிள்ளையைக் கொண்டுவந்தெனக்கு ஆகாரமாக்கொடுத்தால சம்மதிப்பனென்ன ராசாவும் நல்லதென்று இராக்கதனுக்குப் பிரமாணிக்கம் பண்ணிக் கொடுத்துத் தன்பட்டணமேகினான் ஓர்பிராமணன் மிகவும்வறுமையுள்ளவனானபடியால் அவன்கேட்கும் திரவியங்களை அவனுக்குக்கொடுத் தவன்பிள்ளையைவாங்கி இராக்கதன் முன்னேவிட அவ்விராக்கதன் அவனை பலிகொள்ளப்போகையில் வந்தபிள்ளைநகைசந்ததெதினாலேயென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் பிள்ளையை ஒருவனகொன்றதால் தெய்வந்தடன சொல்லவேண்டும் தெய்வமிப்படிச் செய்யாமல ஆருடன்சொல்லுவனென்று நகைத்தானென்று சொல்லவேதாளங் கட்டவிழ்த்துக் கொண்டு பழயபடிபோடி முருக்கமரமேறிக்கொண்டது.

கானகமுனி குமாரத்தியின்கதை-முற்றிற்று,

உஉ-வது அரபசுண்டன் சரித்திரம்.

விக்கிரமாதித்தன் மரமேறி வேதாளத்தைப் பிடித்துக்கொண்டுவருகையில வேதாளஞ்சொல்லுங் கதையாவது.

கேளாய் விக்கிரமாதித்தனே பிரதஷ்டானமென்னப்பட்ட அக்கிராரத்தில சிரேஷ்டமென்கிற ஒருபிராமணனுக்கு அரபசுண்டனென்கிற குமாரனுண்டு அவன்பல்லப்பிராயத்தில் அபமிருத்திபாகச்செத்துப்

போனான் அவன்தாய்தகப்பன் வெகுதுக்கத்துடனே மற்றுமுள்ளபெ
யருமாக அவனை எடுத்துப்போய் மயானத்திற்கட்டையடுக்கையிலங்கே
ரத்தின் வாமர்த்தனமுனியென்னும் சந்நியாசி யவ்வழியாகவந்து அந்
தசடலத்தைக்கண்டு தன்னுடைய பொந்தியைவிட்டு அந்த வுடலிலே
போகச்சொல்லி அன்னோரஞ் செத்துப்போனவன்பழையபடிக்குயித்
திரைதெளிந்தாற்போலெழுந்ததைக்கண்டு தாயும்தகப்பனு மற்றுமு
ள்ள மனிதருஞ்சந்தோஷத்துடனே வீட்டுக்கழைத்துக்கொண்டுபோ
கையில் அந்தப்பிள்ளை முந்தியழுதான் பின்புநகைத்தான் அவனழுத
தும் நகைத்ததுமேதுக்கென்று வேதாளக்கேட்க விக்கிரமாதித்தன்
சொல்லுகிறான் தாய்தகப்பன் வளர்த்த சரீரத்தைவிட்டு மறுஜென்ம
த்துக்குட் புகுந்தோமென்றழுதான் மறுபடியும்சரீரத்தைவிட்டு இள
மையான சரீரத்திற்புகுந்தோமென்று நகைத்தானென்றதுகேட்டு வே
தாளங்கட்டவிழ்ந்து பழையபடி முருக்கமரமேறிக்கொண்டது,

அரமசுண்டன்கதை-முற்றிற்று.

௨௯-வது அவசந்திகாளென்கிற சரித்திரம்.

விக்கிரமாதித்தன் மரமேறி வேதாளத்தைப் பிடித்துக் கட்டிக்
கொண்டு வருகையில் வேதாளஞ்சொல்லுங் கதையாவது.

கேளாய் விக்கிரமாதித்தனே சேரபுரமென்னும்பட்டணத்திலே
நட்சத்திராசனென்பவன் ஒருநாள் வீதிமார்க்கமே போகிறபோது அவ
சந்திகாளென்கிற பெண்ணைக்கண்டு மோகித்து அவளை யழைத்துக்
கொண்டு மறுபட்டணம் போகிறபோது வழியிலே கள்ளர்வளைந்துக்
கொள்ள அவர்களையுஞ்செயித்துக்கொண்டு பட்டணத்திலிருக்கும் ஓர்
பாழுங்கோவிலில் சமையல் செய்து வரும்படிபோனான் அவளையோர்
தாசிகண்டு மகா அன்போடழைத்து அசனமிக்கிறேனென்றுசொல்லி
அவளை கூட்டிக்கொண்டுபோய் தன்னுடைய நாயகிமுன்விடவே அவ
ளிவளைக்கண்டு மோகித்து தன்னிடத்திலே வைத்துக்கொண்டாள் அ
வளுடனே கூடியிருந்து பின்புகோயிலிலே வைத்துப்போனவளை மற
ந்துவிட்டு அசனங்கொண்டு வரப்போனான் இராசனின்னம்வரவில்லை
யென்று விசனமாயிருக்கையில் அவளையோர் வைசியன்கண்டு தன்வீ
ட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் உடனே அசனமிட்டு அவனுந்தா
னுமாகப் போகத்துடனே யிருக்கையில் அங்கோர் எலிஓடுகிறதைக்க
ண்டு அதையும் அடித்துக்கொன்று போட்டான் பிற்பாடு அநேகம்பி
ரதிக்கினையும் விம்புகளையும் சொன்னதுங்கேட்டு மெலியைக் கொன்ற
தற்கித்தனை வல்லபங்கள் சொன்னாய் முன்னாலே யழைத்துவந்தஇரா
சன் கள்ளரைத் துவித்துப்போட்டு என்னையழைத்துவந்தார் அவரிப்
படி பராக்கிரமஞ் சொன்னதில்லை நீஇப்படி சொன்னாயென்று மனதி
லெண்ணி இனிநாமிவனண்டையிலிருக்கலாகாதென்று சிவனைவிட்டா
ளதுகண்டு வைசியனும் முன்னேவிட்டு வந்த இராசன் கேட்டால் நம
துஆஸ்தியெல்லாம பார்த்துக்கொண்டு நம்மையுங்கொல்லுவானென்று
பயந்துதன்னுடைய ஆஸ்திகளையெல்லாம தானதருமம்பண்ணிப்போ
ட்டு தானுஞ்சிவனைவிட்டான் பின்புமுன்னே வைத்துப்போன ராசர்

அவளைரிஷித்து முன்விட்டு வந்தவிடத்திற்போய்ப்பார்க்கையில் காணாமையால் விசனமுற்று சிவனைவிட்டான் இந்தசேதியெல்லாம் அந்தக்காரிகேட்டு நம்மாலேயல்லோ மூன்றுபேர் மரித்தார்களென்று அவளும்பிராணனைவிட்டாள் இந்நாலுபேருக்குள் பாதகமென்றுவேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான் அவர்கள் மோகத்தினாலேமடிந்தார்கள் காரிமடிந்ததிதே யதிகமென்றுசொல்ல வேதாளங்கட்டவிழ்த்துக்கொண்டு பழையபடி முருக்கமாமேறிக்கொண்டது.

அவசத்திகாளென்கிற சரித்திரம்-முற்றிற்று.

௨௪-வது-முறைதெரியாச் சரித்திரம்.

விக்கிரமாதித்தன் மரத்திலேறிவேதாளத்தைப் பிடித்துக்கொண்டுவருகையில் வேதாளஞ்சொல்லும் சரித்திரமாவது.

கேளாய் விக்கிரமாதித்தனே கர்ணாடமென்னும் ஓர்தேசத்தில்சேனாதிபதியென்னும் இராசன்பூமிபிரதட்சணமாய் வரவேண்டுமென்றெணணி தன்னுடைய ஸ்திரீயையுங் குமாரத்தியும் விட்டுவிட்டுப் பூமிவலமாய்ப்போனான் அந்தஅரசன் பெண்சாதியையும் குமாரத்தியுமஅவனைத்தொடர்ந்துபோகையில் வழிதப்பி அவர்கள் போனவழியறியாமல் வேறுவழியைப்பற்றிப்போகையில் மகாழுக்கோர் மண்டபத்திலிருந்தப்பாற்போகையில் அவ்வழியாகத் தகப்பனும் பிள்ளையுமாகஇரண்டுபிராமணர் போகிறவர்கள் அவ்வடியைக்கண்டு ஏதோ பெண்களடிபோற் காணுகிறதாகையால் அதைத்தொடர்ந்துபோவோமவர்களகப்பட்டால் பெரிய அடி தகப்பனும் சின்ன அடி பிள்ளையுமாகவைத்துக்கொள்ளுவோமென்று பேசிக்கொண்டு தொடர்ந்துபோகையில் ஓர் விருட்சத்தின்கீழவர்களிருக்கக்கண்டதினால் பெரிய அடிபெண்ணுஞ்சின்ன அடித்தாயுமாயிருந்ததினாலே முன்பேசினபடியே தாயைப்பிள்ளையும் மகளைத் தகப்பனுமாக கலியாணம்பண்ணிக்கொண்டிருக்கிற நாளில் இருவருக்கும் பிள்ளைபிறந்து ஐந்துவயதாயிற்று இப்படி யிருப்பதால் இவ்விரண்டுபிள்ளையும் முறைகொண்டாடுவதெப்படியென்று கேட்க விக்கிரமாதித்தனுக்குந் தோன்றாமல் இருப்பதை வேதாளங்கண்டுசந்தோஷப்பட்டு விக்கிரமாதித்தனுக்கு வேதாளம் பிரசன்னமாகச் சொல்லும் தன்னைவெளியில வாருமையா விக்கிரமாதித்தனே என்னுடையபிறப்பு வளர்ப்பைச் சொல்லுகிறேன் கேளும் நான் செவ்வந்தி ஈஸ்வரன் கோயில் ஸ்தானிகன் சுவாமிக்கு பூசைநைவேத்யமுதலானவையானபின் கோயிற்கதவைமூடிப் பூட்டிவிட்டு வெளியில வந்தவுடனேநைவேத்தியமான சாதமுதலானவற்றை யெடுக்கும்படி கோயிலைத்திறக்கப்போகையில் அந்தக்கோயிலினுண் மனிதர்கள் பேசுகிறதுபோலக் காணப்பட்டது அதென்னவென்று கதவின துவாரத்திற் பார்த்தேனப்போது சுவாமி முடியின்மேல் அம்மனிருந்து சொன்னதாவது பதினாலுலகத்திலுமில்லா திருக்கிற அபுருபமானகதை சொல்லவேண்டுமென்று சொல்ல அதற்கு சுவாமி இருபத்துநான்கு கதைசொல்லி இருபத்துமூனறு கதைக்கு விபரஞ்சொல்லி இருபத்துநாலாம் கதைக்கு அர்த்தம் ஒருவருக்குந்தெரியாது

இதுமுறைதெரியாக்கதையென்றுசொன்னார் அந்தயிருபத்துநான்குக
தையுங்கேட்டு நேரஞ்சென்றுவீட்டிற்குவந்தேன்வந்தயிடத்தில் என்
பெண்சாதி இந்நேரந்தாமதமாய் வந்ததென்னவென்றுகேட்டாள் பெ
ண்ணேபரமசிவன் பார்வதிக்குக்கதைகள்சொன்னார் அதைக்கேட்டத
னால்இந்நேரமாயிற்றென்றேன் அவள்முயலுக்குகொம்புகண்டவர்களி
ல்லையென்றார்போலச்சுவாமியை நீகண்டதில்லையென் றெண்ணுகிறே
ன் கண்டிருந்தால் அவர்சொன்னவார்த்தைகளைச்சொல்லுமென்றாள் அ
ப்போது நான்என்பிராணநாயகியே சுவாமிசொன்ன கதைகளை நான்
சொல்லக்கூடாது நீஎன்னுயிர்த்துணைவியானையால் சொல்லுகிறேன்
பிறருக்குச்சொல்லாதேயென்று இருபத்துநான்கு கதைகளையுஞ்சொல்
லி அர்த்தமுந்தெரிவித்தேன் அவள் பொழுதுவிடிந்து குடமெடுத்துக்
கொண்டுதண்ணீர்க்குப்போய் அங்கிருந்த பெண்களிடத்திற் கலந்
துசுவாமிஉமையவளுக்குச் சொன்னகதைகளைத் தன்னுடையன் கேட்டு
வந்துதனக்குச்சொன்னானென்று கதைகளையெல்லாஞ்சொல்லி அர்த்த
முந்தெரிவித்தாள் அதனாலே அக்கதைகளெங்கும் வெளிப்பட்டதைக்க
ண்டுபரமசிவனார் சந்நிதியிலுள்ளே எனக்குபிரத்தியட்சமாகக்காணப்
பட்டு ஸ்தானிகா நான்இரகசியமாக உமையவளுக்குச் சொன்னகதைக
ளை உன் பெண்சாதிக்குச்சொல்லி வெளியாகமாக்கினபடியால்நீவே
தாளமாகக்கடவாயென்று சாபங்கொடுத்தார் அந்தச்சாபத்தையானே
ற்றுக்கொண்டு சுவாமியைத்தொழுது எனக்குயிச்சாபமெப்போது நிவ
ர்த்தியாகுமென்றுகேட்டேன் அதற்குசுவாமிஉச்சினிபட்டணத்திற்கு
பத்துநாழிகைவழிதூரத்தில் ஒரு ஆரணியமிருக்கிறது அதில் பருத்துயர்ந்
த ஒருமுள் இலவமரம்நிற்கிறது அம்மரத்தில் தலைகீழாகத் தொங்கிக்
கொண்டு முப்பதுவருடமிருப்பாய் அதற்குப்பின் அவ்விடத்தில் சாந்த
சீலரிஷியாசம்பண்ணவருவா னவனுக்குசுவியாக விக்கிரமார்க்கராசன
உன்னைப்பிடித்துக்கொண்டுபோகவருவான் அவனைஸ்தம் உன்னுடலிற்
பட்டமாத்திரத்தில் உன்சாபநிவர்த்தியாகுமென்றுசொன்னார் விக்கி
ரமார்க்கனென்று நானெப்படியறிந்து கொள்ளகூடுமென்று கேட்டே
ன்சுவாமிசொன்னது நீமுள்ளிலவமரத்திற் றொங்கும்போது உன்னைப்
பிடிக்கவருகிறவனிடத்தில் இருபத்துநாலு கதைகளையுஞ்சொல்லி இ
வைகளுக்கு அர்த்தஞ்சொல்லென்றுகேள் எவன்சொல்லுகிறானோ அ
வனேவிக்கிரமார்க்கனென் றறிந்துகொள்ளென்றார் ஆகையால் எனக
தைகளுக்கர்த்தம் நீசொன்னபடியால் உன்னைவிக்கிரமார்க்கபூபதியெ
ன்று இப்போதுநானறிந்துக்கொண்டேன் என்னுடையசாபமும் உன்
னுடையதிவ்வியகரங்கள்பட நீங்கியதுயானெப்பொழுதும் உம்மிடத்தி
லேயடிமைத்தொழில்செய்துக்கொண்டு உமக்கு வாகனமாயிருக்கிறே
னென்றுசொல்ல அதற்குவிக்கிரமார்க்கன் வேதாளம்பிராமணனாகை
யாலேவல்செய்யும்வாகனமாக யிருக்கவுந்தகுமோ என்னையாண்டுகொ
ண்டருளும் இனிஎனக்குநீர்எஜமானாகையால் உமக்குவரும் ஆபத்தை
க்காக்கவேண்டுமென்று சாந்தசீலனென்கிறமுனிவனைத்தொளாயிரத்தொண
ணூற்றொன்பதுமகுட மன்னர்தலைகளை முடியோடேவெட்டிக் காளி

கோயிலில்கட்டிவைத்திருக்கிறானின்னொரு தலைகுறைவாகையால் அக்குறைவு நிறைவேறும்படிக்குஉமது தலையைவெட்டவுங்காத்திருக்கிறான் நீரழைக்குமிடத்திற்கு நானவருகிறேன் உனக்கு உண்மையானவார்த்தைசொல்லுகிறேனசேளும் என்னைமிகவுங் கஷ்டப்பட்டு பிடித்துக்கொண்டுபோகிறீர் அந்தசாந்தசீலனென்கிற முனிவனிடத்தில்விட்டால் அவன்வெகுசந்தோஷப்பட்டுஉம்மைமஸ்நானமை பண்ணச்சொல்வான் நீர் தெண்டம்பண்ணுகையிலும்மை ஆக்கினைபண்ணிடநினைத்திருக்கிறான் அப்படியவன்சொன்னபடி செய்யவேண்டாம் நானிராசாதிபதியானபடியால்நீர்முன்னெழுந்திக்காட்டும்நான் பின்புமுழுகிறேனென்று சொல்லும்மறுத்து அவனப்படிச் செய்து தெண்டனிடுகையி லவன் தலையை வெட்டி அக்கினிகுண்டத்தில்போடும் அப்போது காளிகாதேவிபிரசன்னமாகி நீகேட்டவரமெல்லாங்கொடுப்பாளென்று சொல்ல விக்கிரமாதித்தனுஞ்சந்தோஷத்துடனேவேதாளத்தைக்கொண்டுபோய்சாந்தசீலன்முன்னேவிட்டார் அவரும்வெகுசந்தோஷப்பட்டு அந்தநதியில் மூழ்கிவருகிறேனென்றார் கோயிலைவலம்வரச் சொன்னார் நீர்முன்னேவாவென்று இவர்பின்னேவந்தார் பின்புதெண்டம்பண்ணுமென்றார் நானிராசாதிபதியாகையால்எனக்குதெண்டனிட்டத் தெரியாது நீர் முன்னே தெண்டம்பண்ணும்நான் பின்னே தெண்டம்பண்ணுகிறேனென அப்படியேயவனைதெண்டனிட அந்தவேளையியிராசன் தன்கையிலிருந்தகத்தியினால் அவன் தலையைவெட்டி அக்கினிகுண்டத்தில் போட்டார்பின்புகாளிகாதேவிபிரசன்னமாகிவிக்கிரமாதித்தனைப்பார்த்துவாரும்மகாராசனே நீர்செய்தகாரியங்களைக்கண்டுமிகவுஞ்சந்தோஷமானேன் உமக்கென்ன வரம்வேண்டும் அந்தவரத்தைக் கேளும் தருகிறேனென்று சொல்லவிக்கிரமாதித்தன் சர்வசிவதயாபரியேயெனக்கெப்பொழுதும் தருமசிந்தையும்பரிசுத்த மனதையும் சகல வல்லமையும் நானினைக்கும்போது உமமுடையதரிசனமும உலகில்மாதமும்மாரி வருஷமுப்போகமும்விளைவுமுண்டாகவேண்டும் இதல்லாமலும் இங்குவெட்டுப்பட்ட மன்னாகள்யாவரும்பிழைத்திருக்கவுமவர்களுக்குவேண்டியவரமுங் கொடுத்தாட்சித்தவேணுமென்றுகேட்ககாளிகாதேவி அப்படியேவரங்களைக் கொடுத்தனுப்பினாள்விக்கிரமார்க்கன்வேதாளத்தைவாகனமாக யேறிக்கொண்டுஉச்சினிப்பட்டணத்திற்குவந்துமுப்பத்திரண்டுதருமஞ்செய்துஇச்சிம்மாதனத்திலிருந்து செங்கோல்கோணாது அரசுசெலுத்தியவிக்கிரமார்க்கபூபதியைபோலும்எல்லாநற்குணங்களுமபொருந்தியவர்களல்லவோ யிச்சிங்காதனத்தின்மேலேறவேண்டும போசமகாராசனே இப்பரிசுத்தகுணங்கள் உமக்கிருக்குமானால் இச்சிமமாதனத்தின்மேல்வந்தேறுமென்று முதற்பதுமை சொல்லியது போசராசனதைக்கேட்டு வெட்கித்தலைகுனிந்துபோய்விட்டான்

முதற்பதுமைசொல்கதை முற்றிற்று.

இரண்டாம்படிக்குக் காவலாகிய
சித்திரசிந்தாமணிப்பதுமைகதை.

போஜமகாராசன் மறுநாள் ஸ்நானஞ்செய்து பூசை நியமங்களை முடித்து பலவிதகருமங்களைச்செய்து மந்திரிமுதலான பெரியோர்கள் சூழ்ந்துவர பகைமன்னர்தாழ்ந்துவர சிங்காதனத்தை வலம்வந்து முதற்படி கடந்து யிரண்டாம்படியில் வலதுபாதத்தை தூக்கிவைத்தமாத்திரத்தி லிரண்டாமபடிக்குக் காவலாகியசித்திரசிந்தாமணி யென்னும் பதுமையானது இருகரங்களையுந்தட்டி தலையையசைத்து குலுங்கச்சிரித்துச் சொல்லுகின்றது ஓபோஜமகாராசனே கருங்கல்லுக்கு யிரமேறாத்தன்மையால் நேற்றுமுற்றும் முதற்படிபதுமைசொன்னகதை உம்முடைய செவிக்கேறாதிருந்தகாரணமென்ன ஒட்டைக்குடத்தில்நீர்யொழுகிவிட்டாற்போலும நீர்கேட்டநல்லவிஷயங்களை உமதுசெவிவழியாக வொழுகிக்கொள்ளும் இச்சிங்காதனம் எல்லா நற்குணங்களும் பொருந்திய எங்கள்விக்கிரமார்க்க மகாராச னேறத்தக்கது உமக்குத்தக்கதல்லவென்றுசொல்ல அதற்கு போஜராசன் எல்லாநற்குணங்களும் ஒருவனுக்குப்பொருந்தமாட்டாது ஆகிலும்அக்குணங்களால் விக்கிரமார்க்கன் உலகத்தாருக்கு என்னநன்மை செய்தானென்றுகேட்க பதுமைசொல்லுகின்றது.

விக்கிரமாதித்தன் காட்டிலாறுமாதம் நாட்டிலாறுமாதம் வாழ்ந்து வருங்காலத்தில் ஒருநாள்சிங்காதனத்திற் கொலுவிற்றிருக்கும்போது தனதுவாகனமாகிய வேதாளத்தையழைத்து இவ்வுலகத்தில ஏதாவது புதுமையுண்டாவென்று விசாரித்துவரக் கட்டளையிட்டார் அவ்வேதாளம்போய் விசாரித்துவந்து எங்களரசனுக்குச்சொன்னதாவது சித்திரக்குத்தியென்று ஒருமலை இந்தமலையின்மேல்ஒருகாளிகோயில படிகத்தினாலே கட்டப்பட்டிருந்தது அக்கோயில்முன்னாகநெய்தாரை தாரையாக விழுகிறது அவ்விடத்திலொரு பிராமணன் ஓமம்பண்ணிக் கொண்டிருக்கிறான ஓமம்பண்ணின சாம்பல் மலைபோல்விழுந்துகிடக்கிறது அப்பிராமணன் மௌனமாகயிருக்கிறானென்றுவேதாளஞ்சொல்ல விக்கிரமார்க்கனும் வேதாளமும் புறப்பட்டுவந்து நெய்தாரையாகவிழுகிறவிடத்தில்வந்து இதுதேவி மருத்துவமென்று ஸ்நானம்பண்ணினார்கள் விக்கிரமாக்கன பரிசுத்தமான திருமேனியிற் பட்டநெய்யும் பாலாய்விட்டது அரசன் இதுவுந்தேவிசெயலென்று கும்பிட்டு ஓமஞ்செய்கிற பிராமணனிடத்திற்போய இந்தஓமம் எத்தனைநாளாகப் பண்ணுகிறதென்றுகேட்க பிராமணன் நூறுவருஷமாகப் பண்ணுகிறேனெனக்கு தேவிபிரத்தியட்சமாகவில்லையென்றுசொன்னானதுகேட்டு விக்கிரமாதித்தன் அவனுக்கிரங்கி நதியிலேமுழுகி சிவபூசைசெய்து காளிசந்நிதிமுன்வந்து அவள் பிரத்தியட்சமாயவரத் தந்திரஞ்செய்தும் வராதிருந்ததைக்கண்டு கையிலிருந்த வாளையுருவித்தன்கழுத்தையறுத்துக்கொள்ளுந்தருணத்தில் காளிவந்து கையைப்பிடித்துக்கொண்டு

உமக்கென்ன வரம்வேண்டும் சொல்லுமென்ன விக்கிரமார்க்கனிப்பி
ராமணனை நூறுவருஷமாக யாகஞ்செய்து தவம்பண்ணியுமிவருக்கு
வரங்கொடாதிருப்பதென்னவென்று கேட்க காளிகாதேவி இப்பிரா
மணன் தன்னுடைய மனதைக் காற்றிலகப்பட்ட கப்பலைப்போல் அலை
யவிட்டு பலசித்தையாகத் தவம்பண்ணுகையால் யான்வரங்கொடுக்கவி
ல்லையென விக்கிரமார்க்கன் உலகாதாராகியவென்தெய்வமேயென்பொ
ருட்டாகவாவது இப்பிராமணன்கேட்ட வரமெல்லாங் கொடுத்து ரட்
சிக்கவேண்டுமென காளியப்படியே பிராமணன் கேட்டவரமெல்லா
ங்கொடுக்க அவன்வாங்கிக்கொண்டுபோகச் செய்வித்து விக்கிரமார்க்
கன் உச்சினிபட்டணத்திற்குவந்துசேர்ந்தார் இப்படியுதவிசெய்யுங்
குணமுடையவர்கள் யாவரிருக்கிறார்கள் அல்லாமலும் இன்னுமொரு
கதைசொல்லுகிறேன் போசராசனே எங்கள்விக்கிரமார்க்கன் நீதிநெ
றிதவறுதலில்லாமையாக அரசுசெய்யுங்காலத்தில் மாவிசாபுரமென்றொரு
பட்டணம் அப்பட்டணத்திராசனுக்குச்சித்திரரேகையென்றொருபெண்
ணுண்டு அவள் ஏழுநிலைமாளிகையின்மேலேறி விளையாடிக்கொண்டிரு
ப்பாள் தவள்பெருமாளுக்குவாழ்க்கைப்படுகிறதில்லையென்றிருப்பாள
ந்தச்சமயத்தில் சௌரியென்றொருபிராமணன் அவளைக்கண்டுமோகித்
து இந்தப்பெண்ணை எவ்வகையாகிலும்நாமேவிவாகம் பண்ணிக்கொள்
ளவேண்டுமென்றுநினைத்து விஸ்வப்பிரம்மாவைக் கண்டு மரத்தாலே
ஒருகருடவாகனஞ் செய்வித்து அதுபறக்கும்படி சூத்திரமுண்டாக்கு
வித்து அவ்வாகனத்தின்மேலேறிக்கொண்டு போய்வாமாகில் பெருமா
ள்போலிருக்குமென்று அப்பெண்ணிருக்கிற ஏழுமாளிகைக்குள் வந்
திறங்கி அன்னமே சொர்ணமே தேனே மயிலே குயிலே சித்திரரேகையே நீ
மகாலட்சுமியவதாரமாயிருக்கிறபடியினாலே உன்னைவிவாகம் பண்ணிக்
கொள்ளவந்தேனென்றுசொன்னான் அப்பொழுது சித்திரரேகை தன்னு
டையபிதாவிடத்திற்போய்ச்சொன்னாள் சௌரியெனனும்பிராமணன் பிரச
ன்னனென்னுமிராசனிடத்திற்போய் காணிபெருமாள் உன்மகள்என
னையேவிவாகஞ்செய்துகொள்ளுவேனென்று உறுதிகொண்டிருக்கிற
படியால்உம்முடையமகளை எனக்குவிவாகஞ்செய்துகொடுக்கவேண
டுமென்றுகேட்க அரசனப்படியேசெய்துகொடுக்க சித்திரரேகையும
சௌரியெனனும்பிராமணன் பெருமாள்தானென்று உறுதிகொண்டு
ஏகபோகமாய்வாழ்ந்திருக்குங்காலத்தில் தன்னுடையபிதா பிரசன்னரா
சனுடையபட்டணத்தை கைக்கொள்ளவேண்டுமென்னவந்து கோட்டை
யைச்சூழ்ந்துகொண்டு சண்டைசெய்கையில் பிரசன்னராசனுடைய
சேனைகள்புறங்கொடுத்தோடினதையரசன்கண்டு தன்னுடையமகள்சி
த்திரரேகையிடத்திற்போய் மகளே உன்புருஷன்பெருமாளானதையால
வரைக்கொண்டுவந்து சேனைகளைவெல்லச்சொல்லென்ன அவள்தன்புரு
ஷனிடத்திற்குப்போய் சுவாமி பெருமாளானதையால் என்பிதாநகரத்
தில்வந்த பகைவரையெல்லாம் வென்று வாருமென்ன சௌரியெனனும்
பிராமணன் ஐயோ இதென்ன அநியாயம (வினாதுவெட்டப்போயது

மாயிற்றிவசெய்வமே யென்னசெய்வேன் எப்படித்தப்பிப்பிழைப்பேன் கூத்தாடிச்சிலம்பை படைவெட்டுக் குதவாதென்றதுபோல நாமேதற் குதவுவோமென்று நடுங்கிஒடுங்கி விசனங்கொண்டு தன்னைத்தானே தேற்றிக்கொண்டு விக்கிரமார்க்கனிடத்திற்போனால் இந்தஆபத்தைத் தீர்ப்பாரென்று வாகனமேறிக்கொண்டு சீக்கிரம் விக்கிரமார்க்கனிடத் திற்போய்தன்னுடைய குறைமுறையெல்லாஞ் சொன்னமாத்திரத்தில் விக்கிரமார்க்கனும் வேதாளத்தை வாகனமாக ஏறிக்கொண்டு சௌரி என்னும்பிராமணனைக் கருடவாகனமாக ஏறிக்கொள்ளச்சொல்லித்தா ன்முன்னாகவும் பிராமணன் பின்னாகவும் ஆகாய மார்க்கத்திலே வந்து பகைமன்னர்களைச்செயித்துப் பிராமணனுக்கு வெற்றியுண்டாக்கிவை த்துத்தான் உச்சினி பட்டணத்திற்கு வந்துவிட்டார் இதுநிற்க இன்னு மொருகதைசொல்லுகிறேன் போசமகாராசனே எங்கள்விக்கிரமார்க்க ராசர் அஸ்வமேதயாகம் பண்ணத்தொடங்கினார் அப்பொழுது திக்கெ ட்டிலுள்ள மன்னவர்கள்வரும்படி திருமுகமெழுதியனுப்பிவிட்டுச் ச முத்திரராசனை அழைக்கும்படி ஒருபிராமணனைவிட்டார் அந்தப்பிரா மணன் சமுத்திரக்கரையிற்போய் நின்று சமுத்திரராசனை சமுத்திர ராசனேயென் றழைத்தான அங்கொருவருங் காணப்படாமையால்நா ம் புத்தியில்லாமல் சலத்தை யழைத்தோமென்று வந்துவிட்டான் அ தைச்சமுத்திரராசன்கண்டு இவ்வுலகத்தை காக்கப்பட்ட விக்கிரமா ர்க்கனுடைய தூதனென்றறிந்து பிராமணனைப் பணிந்து அவன்கையிற் கொடுமென்று அந்தச் சமுத்திரராசன் அவைகளின் பெருமைகளைச் சொல்லுகிறான் ஒருரத்தினம் சகலதனங்களையுங் கொடுக்கும் மற்றொ ரு இரத்தினம் சகல ஆபரணங்களையும் கொடுக்கும் பின்னுமொரு இ ரத்தினம் இஷ்டபோக காமியங்களைக் கொடுக்குமென்று சொல்லக்கே ட்டுப் பிராமணனும் இரத்தினங்களை வாங்கிக்கொண்டு வந்து விக்கிர மாதித்தன் கையிற்கொடுத்தான் விக்கிரமார்க்கன் பார்த்துச் சந்தோ ஷித்து ஒருரத்தினத்தைக் கொண்டுவந்து பிராமணனுக்குக் கொடுத் தார் பிராமணன்மற்ற மூன்றுஇரத்தினங்களையும் வீட்டிலிருப்பவர்க ளுக்குக் காட்டிவருகிறேனென்று வாங்கிக்கொண்டுபோய் தன்பந்து ஜனங்கள் கையிற்கொடுத்தவைகளின் பெருமையைச் சொன்னான் அ வர்களுங்கேட்டு ஆளுக்கொவ்வொருஇரத்தினமாயெடுத்துக்கொண்டு ஒன்றுஎன்னுடையது அது அவனுடையது இவனுடையது என்றும ஒருவர்க்கொருவர் அடித்துச்சண்டை செய்துக்கொண்டு விக்கிரமார்க் கராசாவினுடைய திருச்சமுகத்தில்வந்து பிரியாதுசெய்தார்கள் அர சனகண்டுநகைத்துச் சந்தோஷித்து அவர்களிஷ்டப்படி இரத்தினங் களை அவரவர்களெடுத்துக் கொள்ளும்படி கொடுத்துவிட்டார் போச மகாராசனே நீ இந்தப்படிக்கு உபகாரமுந்தானமும் பண்ணவல்லவ னானால் இந்தச்சிங்காதனத்தின்மேல் வந்தேறுமென்று இரண்டாம்படி ப்பதுமைசொல்லப் போசமகாராசன்கேட்டு அகம்வேறு முகம்வேறு பட்டுப்போய்விட்டார்.

இரண்டாம்படிப் பதுமைசொல்கதை-முற்றிற்று.

மூன்றும்படிக்குக்காவலாகிய

மாசிலாமணிப்பதுமைகதை

மூன்றுநாட்காலையில் போசமகாராசன் காலைக்கடமைகளை முடித்துப் படிகம்போலும் பரிசுத்தமுடையவராய்ச் சகல அலங்காரத்துடனே சிங்காசனத்தின் முன்வந்து தான்முதற்படி கடவுளை வந்தித்துச் சந்தித்து இரண்டாம்படி கடந்து மூன்றாம்படியில் காலை தூக்கிவைத்தபோது அந்தப்படிக்குக் காவலாகிய மாசிலாமணியென்னும் பதுமையானது தடையைச் செய்து சொல்லுகின்றது கேளும்போஜமகாராசனே அறியாமற் சோற்றின் மதுரத்தை அகப்பை யறியாததுபோல இரண்டாம்படிக்குக் காவலாகிய பதுமைசொன்ன கதைகளைக்கேளாமல் முடவன் கொம்புத்தேனுக் காசைவைப்பது போலும் இந்தச் சிங்காசனத்தின்பேரிலேற ஆசைப்பட்டீர் இவ்வுலகில் நாம் நான்கேட்கிற கேள்விக்கு உத்தரவுசொல்லும் எங்கள்விக்கிர மார்க்கமகாராசனைப்போலும் தயவுயிரக்கம் தருமம் தானம் உபசிபெருமைசாந்தம் ஒழுக்கநீதி அன்புபக்திவிசுவாசம வீரம் உறுதிதனிவு ஆசாரமுதலானவை யுடையவர்களாக்கிறது இல்லையே ஆகையால் இந்தச்சிம்மாசனம் உனக்குத்தக்கதல்ல போய்வாருமென்ன போஜராசன் மாசிலாமணியெனும் பதுமையே நீமுன்சொல்லிய குணங்களாலே விக்கிரமார்க்கன் உலகத்துக்கு என்னநன்மை செய்தான் யென்றுகேட்க பதுமைசொல்லுகின்றது வாரும் போசராசனே யெங்கள் விக்கிரமார்க்கமகாராசனுமவர் சிங்காசனத்தில் மண்டலாதிபதிகள் வணங்கவும் பகைமன்னவர் பணிக்கவும் வேசையராடவும் வித்வான்கள் பாடவும் வேதமோதியர்கூட யோகசாமகானமோடவும் சகலசாத்திரமுழக்கவும் தானங்களவழங்கவும் கொலுவிருந்து நாடாறுமாதம் ஆண்டு காடாறுமாதந் திரிகையில் உச்சினிப்பட்டணத்தில் சோமசுவாமி யென்னொருபிராமணன் அவன்பெண்சாதி குணவதி யெனகிறவள் அவளுக்கு இருபதுவயதுமட்டும் புத்திரசந்தானமில்லாமையால் அவள் தன் புருஷனை அழைத்து என்பிராணநாயகா நீர் சகல சாஸ்திரங்களையும கற்றவர் சகலமந்திரத்தால முக்கால வர்த்தமானங்களை சொல்லி ஆகையால் எனக்கு இவ்வளவுகாலமட்டும் புத்திரசந்தானமில்லாமற்போனகாரணமென்ன அதை உள்ளபடி கைநெல்லிக்கனிபோல சொல்லுங்களென்ன பிராமணன் புத்திவுள்ளவளுக்குச் சகலபாக்கிய முண்டென்று சொன்னான் அப்பொழுது குணவதியானவள் தன்னாயகன திருவாக்கின்படி தானுந் தன்கணவனும கடவுட்பூசை பண்ணினார் அப்பொழுது அவர்களுக்கு கடவுள் சொற்பனத்தில் வந்து சனிதிசையாதலால் சந்திரசம்பந்தப்படி பூசைபண்ணு உங்களுக்கு புத்திர பாக்கிய முண்டென்றுசொன்னார் அவர்களப்படியே செய்யக்கடவுள் சொற்படியே புத்திரன்பிறந்தான் அப்புத்திரனுக்கு பிதாவான பிராமணன் சகலகலையுங்கற்பித்துக் காசிக்குப்போய்விட்டானதன்பின்பு அந்தப்பிள்ளை காட்டுக்குப்போய் மலைச்சாரலில் தபசுசெய்திருக்கையில் விக்கிரமார்க்க மகாராசன்காடாறுமாதந் திரியும்போது வேட்டையாடிக்கொண்டு மேற்கூறிய பிராமணப்பிள்ளை தபசுசெய்யுமிடத்திற்கு விக்கிரமார்க்க மகாராசன் வந்தார் அதுகண்டு பிராமணப்பிள்ளை சர்க்கரை

தலிலே தேன்மாரி பொழிந்தாற்போலும் பழம் நழுவிப் பாலில்விழுந்த தன்மைபோலும் சந்தோஷங்கொண்டு ராசனுக்கு மவர்சேனைகளுக்கும் வந்தமூலபலாதிகளைக் கொடுத்தாந் திவ்விய மதுரமபொருந்திய தீர்த்தமுள்ள தடாகத்தைக் காண்பித்துத் தாகந்தீர உண்ணச்செய்து யாவரையுமிளைப்பாற்றி வைத்தானதைக்கண்டு விக்கிரமார்க்கராசன் (உள்ளங்கையிலுப்பிட்டவரை உயிருள்ளமட்டும்நினையென்ற) முதுமொழிப்படிக்கு ஆபத்துவேளையிலுதவிசெய்த அந்தப்பிராமணனை யழைத்துக்கொண்டு உச்சினிபட்டணத்திற்குவந்து அவருக்கு ஆசைதீரும்படி திரவியங்களைக் கொடுத்தனுப்பினார்கள் பிராமணர் திரவியங்களைக்கொண்டுபோய் வீட்டில்சேர்த்துவிட்டு சிலநாள்பொறுத்து இராசாவினுடைய அரண்மனைக்குவந்து அரசன் மனதறியாதபடிக்கு விளையாடிக்கொண்டிருக்கும் இராசன்பிள்ளையைத்திருடிக்கொண்டுபோய்ஒளித்துவைத்திருந்தான் அப்போது விக்கிரமார்க்கன் போசனஞ்செய்யுந்தருணத்தில் தன்னருமைத் திருமகனைத் தேடினபோது அங்கிருந்தவர்கள் சுவாமி தங்களுடைய புத்திரனைத் தாங்கள்காட்டிலிருந்தழைத்துக்கொண்டுவந்த பிராமணன் கொண்டுபோய் கொலைசெய்துப்போட்டானென்று சொல்ல அரசன் பிராமணனையழைப்பித்து பிராமணா என்பிள்ளையை நீ கொலைசெய்தது மெய்தானோவென்று கேட்டதற்கு அந்தப் பிராமணன் என்னாண்டவனே உமதுடைய அருமைத்திருமகன் அணிந்திருந்த நவரத்தின ஆபரணங்களை இச்சித்து நான் அறியாமையினாலே கொலைசெய்துவிட்டேனென்குற்றத்தைப்பொறுத்தருளுமென்ன ஓ பிராமணா நீ என்னைக்கேட்டால அனேக ஆபரணங்களைக் கொடுப்பேன் நீ கொலைசெய்தது கருமசாஸ்திரத்திற்கு விரோதமல்லவா உன்னைத்தண்டிப்பது கருமம்தான் அன்னமிட்டார் வீட்டிலே கன்னமிடலாகாதென்ற பழமொழிப்படிக்கு (ஒருநன்றி செய்தாரை உள்ளமட்டும் மறவாதே) யென்ற கருமசாஸ்திரவிதிப்படிக்கும் யான்பொறுத்துத் தண்டியாமல் விட்டுவிட்டேன் இவ்விடத்திற் செய்ததுபோலும் இனியெவ்விடத்தும் செய்யாதேயென்று நற்புத்திசொல்லிபின்னும் கனகாபரணங்களையுங் கொடுத்து அனுப்பிவிட்டார் உடனே அந்தப்பிராமணன் கேளும் விக்கிரமார்க்கமகாராசனே உமதுடைய மனதை அறியும்படிக்குப்பிள்ளையைமறைத்துவைத்துக்கொலைசெய்தேனென்று வீணாச்சொன்னேன் பிள்ளையை ஒப்புக்கொள்ளும் உம்மைப்போலும் புண்ணியவான்கள் திரிலோகங்களிலும் கிடையார்களென்றுபுகழ்ந்துபோய்விட்டான் ஆனபடியினாலேபோசமகாராசனே இவ்வளவுவிரக்கமும் நற்குணமும் சகாயமும் ஈகையும் உமக்கிருக்குமாகில் இந்தச்சிங்காசனத்தில்வந்து வீற்றிருந்து மனுநீதிமுறைமை வழுவாமல் செங்கோல்செலுத்தி உலகமெல்லாம் ஒருகுடைக்கீழாண்டுவாழ்ந்திருமென்று மூன்றாம்படிக்குக் காவலாகியமாணிக்கமணியென்னும்பதுமைசொல்லிற்று அதுகேட்டு போசமகாராசன் வெட்கமுற்றுத் திருமுகங்கறுத்து பின்னிறங்கி அரண்மனைக்குப் போய்விட்டான்.

மூன்றாம்படிப்பதுமைகதை-முற்றிற்று.

நான்காம்படிக்குக் காவலகிய

தெய்வசிகாமணிப்பதுமைசொல்கதை.

நாலாநாள் உதயகாலத்தில் போசமகாராசனெழுந்து ஸ்நானஞ் செய்து மலர்கொய்து கடவுளை யெண்ணிப் பூசைபண்ணிச் சகல ஆபரணங்களையணிந்து சிங்காதனமேறத்துணிந்து மகுடமன்னர் மதிக்கவும்பலமன்னர் துதிக்கவும் வெண்குடைபிடிக்கவும்வேசையர்நடிக்கவும் விருதுக்கொடிபறக்கவும்பேரிவாத்தியஞ்சிறக்கவும்யானையேறுபோர்யானைகள்தொடரவும் கட்டியக்காரர்கூறவும்வீராதிவீரர்கள்மீறவும் ஊர்வலஞ்சென்று சிங்காதனத்தின்முன்னின்று மூன்றும்படி கடந்து நாலாம்படியில் வலதுகாலைத் தூக்கினவுடன் அந்தப்படியில் நான்காம்படிக்குக்காவலாகிய தெய்வசிகாமணிப்பதுமையானது நகைத்து இகழ்ந்து மன்னரசனைப்புகழ்ந்துசொல்லுகின்றது வாரும்போசமகாராசனே சுவரில்லிட்டெடுத்த பந்தமானது புரம்பேதுள்ளுஞ் எப்போதும் நேற்று மூன்றும்படிக்குக்காவலாகிய ம சிலாமணிப்பதுமை உம்முடையசெவியிற்சொன்னதை தள்ளுண்டுபோகவேண்டுங் காரணமென்ன நீர்செவிடனா காதிற் சக்குருதிக்காதுமாமோ ஏகச்சக்கிராதிபதியாகிய எங்கள்விக்கிரமார்க்கபூபதிபோலுமெல்லாநற்குணங்களும்உமக்கிருக்குமானாலிந்தச் சிங்காதனம் உமக்கு இடங்கொடுக்குமென்ன போசராசன்எல்லாநற்குணங்களுமுடைய விக்கிரமார்க்கன் உலகத்தாருக்கு என்ன உதவிசெய்தாரென்றுகேட்க தெய்வசிகாமணிப்பதுமை சொல்லினதாவது.

கேளும்போசமகாராசனே பட்டியென்னுமந்திரியுஞ்சிங்கக்குட்டியென்னும் விக்கிரமார்க்கனும் காடாறுமாதம் நாடாறுமாதந்திரிந்துயிராசரிகஞ்செய்துவருநாளில் ஒருநாள் சம்புசாரியென்றொருபட்டணம் அந்தப்பட்டணத்திலே குபேரனுக் கொப்பாகிய தனதத்தனென்றொரு வைசியனாகிய பலத்தவியாபாரி ஒருவனுண்டு அவன் விலையுயர்ந்த சிலரத்தினங்களை யெடுத்துக்கொண்டுவந்து உச்சினிபட்டணத்துக் கதிபதியாயிருந்த எங்கள் விக்கிரமார்க்கமகாராசனைக்கண்டு காணிக்கையாகவைத்தானதைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு அளவில்லாத திரவியங்களைக்கொடுத்து இன்னும் விலையுயர்ந்த ரத்தினங்கள் இருக்கின்றனவோவென்றுகேட்க அதற்கு எனதன்புப்பிரபுவே விலையுயர்ந்த இரத்தினங்கள் எவ்விடத்திலிருக்கின்றன ஒவ்வொரு இரத்தினத்திற்கு விலை எவ்வளவென்று கேட்பீராகில் ஒருஇரத்தினத்தைப் பெருவிரலின்மேல்வைத்து ஆகாயத்தில் சுழற்றி யெறிந்தால் அது எவ்வளவு தூரம் செல்லுகின்றதோ அவ்வளவு பொன்கொடுப்பீராகில்ரத்தினங்களைக் கொடுப்பேனென்றுசொல்ல அரசனும் அப்படியே கொடுக்கிறேன் என்றுசம்மதித்துச் சிலவீரர்களையழைத்து தனதத்தன் பின்னால் அனுப்பிவிட்டுத் தனதத்தன் பத்து இரத்தினங்களையும் உடன்கொண்டுவரக் கட்டளையிட்டார் வியாபாரியுஞ் சம்மதித்து வாள்வீரருடனே தனது ஊருக்குப்போய் வீட்டிலிருந்த பத்து இரத்தினங்களையும் எடுத்துக்

கொண்டுவருகையில் நடுவழியிலே பெரிதாகியஆறொன்று அந்த ஆற்றிலிருகரையும்நீர்புரளும்படியாக பெருவெள்ளம் வருகையில் தனதத்தனும்வாள்வீரர்களும் எப்படி ஐயோஎன்னசெய்வோம் அரசன் பத்துநாளையில்வரக்கட்டளையிட்டாரேயென்று அங்கிருந்த ஓடக்காரரைப்பார்த்து வாருங்கள்ஓடம்விடுபவர்களே நாங்கள் இராசாவுக்குபத்துயிரத்தினங்கொண்டுபோகிறோம் உங்களுக்குஅரசனிடத்தில் வெகுமதிவாங்கித்தருகிறோம் ஓடம்விடுங்களென அதற்கவர்கள் வாள்வீரர்களே ஓடங்கடந்தால்ஓடக்காரனுக்கோர்சொட்டென்ற உலகபழமொழி கேட்டறியீர்களா வெள்ளமோஇருகரையும் புரளுகின்றது இப்போது வெள்ளத்தில்விட்டால் நாங்களும்நீங்களும் ஆற்றிலிறப்பதுநிச்சயமென தனதத்தனும்வாள்வீரரும் எப்படியாகிலுமெங்களை அக்கரையிற்கொண்டுபோய்விடுங்களென ஓடக்காரர்வீரர்களே அடுப்புநெருப்பும்போய் வாழ்ந்தவீடும்போன சம்மந்தம்போல வீணிலேநாங்களுமழிந்து எங்கள்பெண்சாதிபிள்ளைகளையும்நாங்களழிந்துபோனால் எங்களுக்கென்னபலன் உங்களாலே டெங்களுக்கு காணியாட்சி நடக்கிறதொன்றுமில்லையே ஆசையால் நீங்கள்கொண்டுவந்தயிரத்தினங்களில் ஐந்துயிரத்தினங்கொடுங்கள் எங்கள் பெண்சாதிபிள்ளைகளுக்குக்கொடுத்தனுப்பிவிட்டுஎங்களுயிர்போனாற்போல்வென்றோடம்விடுகிறோமெனவியாபாரியும்வீரர்களும் அதற்குச்சம்மதித்துஐந்தியிரத்தினங்களைக்கொடுத்தார்கள் அப்படியேவிட ராசனருகேவந்து மற்ற ஐந்திரத்தினங்களைக்கொடுத்தார்கள் ராசன இன்னும் ஐந்துரத்தினமெங்கேயென தனதத்தனும்வீரர்களும் பிரபுவேதாங்கள் எட்டுநாளைக்குள்வரக் கட்டளையிட்டபடியால் தங்கள்கட்டளைக்குள்ளே நாங்கள்வரவேண்டுமென்று நடுவழியில்உயிர்க்குத்துணிந்து ஓடம் விட்டவர்களுக்கு ஐந்தயிரத்தினங் கொடுத்துவிட்டுவந்தோமென விக்கிரமார்க்கன் மிகவுஞ்சந்தோஷப்பட்டு தனதத்தனுக்குச்சேரவேண்டிய பத்து யிரத்தினத்துக்குள்ள பொன்னையுங்கொடுத்து மற்றஐந்து யிரத்தினங்களையும் வாள்வீரர்களுக்குக் கொடுத்தனுப்பிவிட்டார் ஆகையாலிப்படிப்பட்ட தயாளமுள்ளஎங்கள விக்கிரமார்க்கனைப்போல உதாரகுணம் உமக்கிருக்குமானால் தேசராசர்போற்று போசமகாராசனே இந்தசிங்காதனத்தில் வந்தேறு நான்காம்படிக்குகாவலாகிய தெய்வசிகாமணியென்னும் பதுமைசொலக்கபோசமகாராசன் நாணிமுகங்கோணி தன்னரண் மனைக்குப் போய்விட்டான்.

நான்காம்ட்டிப்பதுமைசொல்லியகதை முற்றிற்று.

ஐந்தாம்படிக்குக்காவலாகிய

மனோரஞ்சிதப்பதுமைசொல்கதை.

ஐந்தாநாள் உதயாதியில் போஜமகாராசன் பஞ்சணைவிட்டெழுந்து காலையிற்செய்யுங்கருமங்களெல்லாமுடித்துக்கொண்டு ஆதிசேஷனாலுஞ்சொல்லக்கூடாத ஆடம்பரத்துடனே பட்டணத்தை வலம்வந்து

சிங்காதனத்தின்முன்னிருபடிக்குத்தேயசம்பைமிடைத்ததும் அவ
னுக்குப்பிரயோசனமில்லாததுபோல இச்சிங்காதனங்கிடைத்ததும் நமக்
குப்பிரயோசனப்படவில்லையென்று வாழ்கிறவீட்டினுள மரமாய்க்கட்டி
வைத்தார்போலும்மரத்தினிழல்மிக்காகத்தை கொடுக்கிறதாகவிருந்து
ம்அம்மரத்தினிலைகளினுள்கூடுகூடாகக்கட்டிக் கொண்டிருக்குமெறும்
புகளாகியமுசறுகள் அந்தநிழலிலிருக்கவொட்டாமலோட்டுகிறதுபோ
லும்ஒவ்வொருபடிகள்தோறும் ஒவ்வொரு பதுமைகளிருந்துநம்மை ஏ
றவொட்டாமல் ஓட்டுகின்றனவே இதுஎன்ன அநியாயம் நாம்தேடிய
பொருளைச்சிலவழிக்க அடுத்தவீட்டுக்காரனை உத்திரவுகேட்டாற்போ
லும்நாம்தேடின சிங்காதனத்தின் மேலேற இப்பதுமைகள் என்னவுத்
திரவுகொடுக்கிறதென்றெண்ணி போசராசன் சிங்காதனத்தைப்
பணிந்து நலாம்படிமீறி ஐந்தாம்படியில் வலதுதிருவடியைவைக்க அப்
படிக்குக்காவலாகிய மனோரஞ்சிதப்பதுமையானது இருகரங்களையுந்த
ட்டிகொட்டி அகங்குலுங்கச்சிரித்துதலையையசைத்து இருவிழிகளா
லும்கோபக் குறிப்பைக்காட்டி கையைநீட்டி அடுத்தடுத்துச்சொல்கின்
றது ஆ ஆ ளாய்பளாய்நன்றாயிருக்கிறது தேசராசர்போற்றும்போசமகாரா
சனே வாரும்வரும் இரும் ஆண்டவர் சராசரங்களைப்படைத்தார் அ
வைகளுக்குள்ளே மக்களையும்தேவர்களையும்மேலான அறிவுள்ளபொரு
ள்களிலொன்றும் ஒருபொருளல்லவோ நேற்றுநாலாம்படிக்குக் காவலாகி
யவைய்வசிகாமணியென்னும் பதுமைசொன்னதையாவது கற்பாறை
யிலடிக்கும்முளைக்குச்சானது அப்பாறையிலிறங்காதவாறுபோல உம்மு
டையசெவிக்கேறாதிருந்த காரணமென்ன ஆறாயிரம்வீரர்கள் விக்கிர
மார்க்கராசனைப்போலும் கொடையானது கொடுக்குந்திறம் உமக்கி
ருக்குமானால் இச்சிம்மாதனம்விடங்கொடுக்குமென போசராசன் அ
ப்படிவிக்கிரமார்க்கன் என்னகொடைகொடுத்தான் சொல்லென பது
மைசொல்லுகின்றது கேளும்போசராசனே எங்கள்விக்கிரமார்க்கராச
ன்இச்சிங்காதனத்திலிருந்து இவ்வுலகில்குடிகளுக்கு குறைமுறையில்
லாமல்முற்று உலகமெல்லாம ஒருகுடைநிழலில் அரசசெலுத்தி வா
ழ்ந்துவருங்காலத்தில் ஒருநாள்மனைவாளவுந்தொட்டு வளர்ந்திருக்குஞ்
சோலைகளுடைய பட்டணங்கள் நெருங்கியிருக்கும் பூங்காவனமாகிய
சிங்காரத்தோப்பிலே வசந்தகாலத்தில் நவமணிகளால் செய்யப்பட்ட
வசந்தமண்டபத்துள்வந்துமகுடமன்னர்போற்றும் யாதர்கள்மலர்மாரி
தூற்ற சிட்டுவர்மத்தளங்கொட்டவும் சிலர் கைத்தாளந்தட்டவும் நா
ட்டியப்பெண்கள்நடிக்கவும்பாவலர் மங்களவாழ்த்துபடிக்கவும் கனக
னையென்றுபேரிகைபறைபவும் அத்தர்புனுகு சாந்துசவ்வாது பனிநீர்ப
ரிமளிக்கவுமல்லி கைமுல்லையிருவாட்சிசண்பகமுதலியமலர்களினதே
ன்கள் துளிக்கவும்சகலரும் கண்டுகளிக்கவும் பலர்பாடவும சாமரமிஸ
ர்போடவும் கொலுவீற்றிருக்கும்போது உச்சினிப்பட்டணத்திலேஇல
ட்சுமிநாதனென்னுமொருபிராமணனொருவன்காளிகாதேவியைக்குறி
த்துமெய்ப்பாகப் பூசைபண்ணிக் கொண்டிருந்தான அனுதினத்தி

யில்காளிகாதேவியானவள் அப்பிராமணன்சொற்பனத்திலவதரித்து பி ராமணா நீசெய்ததவத்தைக்கண்டுநான் மெச்சினேன் விக்கிரமார்க்கம காராசன் சிங்காசனத்திலேவசந்தாண்டபத்துள்ளே ஏகபோகமாயி ருக்கிறானவனிடத்திலேபோய்உனக்குவேண்டுமோ அவைகளை யெல்லாம்வாங்கிக்கொள்ளென்றுசொல்லப்பிராமணன் விக்கிரமார்க்க ராசனிடத்திற்குப்போய் ஆசிர்வாதஞ்செய்யவிக்கிரமார்க்கராசன்பிராம ணனுக்குத் தோத்திரஞ்செய்து தன்னுடையதெய்வதத்துவத்திலேபி ராமணனெண்ணிக்கொண்டுவந்தயெண்ணங்களையெல்லாமறிந்து அவ ன்கேட்குமுன்னமேகுறிப்பறிந்துகொடுக்கின்றகொடையேகொடையெ ன்கிறபழமொழிப்படிக்குவேண்டுவதெல்லாங்கொடுத்துப்பிராமணனைம னமகிழச்செய்துஅனுப்பிவிட்டார் அப்படிப்போல ஒருவர் மனதிலுள் ளிருப்பதைஅறிகிறஅறிவும் அவரவர்எண்ணப்படிகொடுக்கிறகொடை யுமுடைத்திருக்குமானால போசராசனே இச்சிங்காசனத்திலேயேறும இல்லாவிட்டால் வந்தவழியேபாருங்கூடாவிடில்ஆரண்யத்தைப்போய்ச் சேருமென்று ஐந்தாம்படிக்குக்காவலாகியமனோரஞ்சிதப்பதுமைசொ ல்லப்போசராசன முகம்வாடி யிளைத்துக் களைத்துப் போய்விட்டான்,

ஐந்தாம்பதுமைகதை முற்றிற்று.

ஆறாம்படிக்குக்காவலாகிய

அபரஞ்சிப் பதுமைகதை

ஆறுநாள் போசராசன்நித்தியகர்மானுஷ்டானங்களைமுடித்துப் பீதாம்பரப் பட்டாடையுடுத்தி மணிமகுட கேயூரகடகமுதலானவை தொடுத்து முத்துச்சிவிகையிலேறி கட்டியக்காரர்கள்கட்டியங்கூறியிரு பக்கங்களில்வரவும் நாடகசாலைப்பெண்கள் நடனமாடிவரவும்நவமணி களாலமைத்த ஆயிரங்கால்மண்டபத்துள் சிங்காசனத்தின்முன்னேவ ந்துநின்று இணங்கி வணங்கிப்பணிந்துதணிந்து புதையலெடுத்தவர் மனமகிழ்ச்சிபோலவும் திசைதப்பி தீவாந்தரங்களிற்சென்றகப்பல்திர ளானதிரவியங்கொண்டுவரப்பெற்றவர்கள் மனமகிழ்ச்சிபோலவும்மன மகிழ்ந்து ஐந்தாம்படிகடந்து ஆறாம்படிகடக்கத்தொடங்கினதைஅப்ப டிக்குக்காவலாகிய அபரஞ்சிப்பதுமைகண்டுதிடங்கொண்டுமறித்துச் சிரித்துச்சொல்லுகிறது போசராசனே இராத்திரியாமமானாய் கேட்டுபொழுதுவிடிந்தபின ராமருக்குசீதை யென்ன முறையாகவே ண்டுமென்றுகேட்டார்போலும் சிறுமுந்தைதனிலே திருமந்திரமுப தேசித்தார்போலும் நேற்று ஐந்தாம்படிப்பதுமைஉனக்குச்சொன்னா சனைஉபதேசிக்குமின்பப்படாமற்போய்விட்டது நீர்என்காவலைக்க டக்காநிற்கில்லுமெனபோசராசனகப்பட்டார்நெஞ்சம்போலுங்கல ங்கிநீதன்கூண்டில்மொய்த்திருக்குமீக்களைப்போலுஞ்சிங்காசனத்தை மொய்த்திருக்கும்பதுமையை எப்படிக்கடக்கலாமென்று யோசித்து அபரஞ்சிப்பதுமையேபனைமரத்திலிருக்கும்பழத்தைசருக்குமடங்கள்

அறக்கவொட்டாமல் நெருங்கித்தடுப்பதுபோலும்நீங்கள்சிம்மாசனத் தில் என்னையேறவொட்டாமல் தடுப்பதென்ன காரணமென்றுகேட் கபதுமைசொல்லுகின்றது போசமகாராசனே நாங்களுந்தெய்வத்தன் மையுடையவர் அவருக்கொப்ப னயாரேனும் சிங்காசனம்வந்தேறலா மெனபோஜராசன் விக்கிரமார்க்கனெனக்கு மேலானவனென்பதுய விதத்திலென்றுகேட்க பதுமைசொல்லுகிறதுவொருமைபாமகாராச னே உச்சினிபட்டணத்தில் விக்கிரமார்க்கன் நீதிநெறி தவறாது செங் கோற்செலுத்திவருங்காலத்தில் அப்பட்டணத்தில் தனபதியென்றொ ருசெட்டியுண்டு அவன் நூறுகோடிதிரவியத்தேடிவைத்திருந்தான் அ வன் இத்தனைகோடி திரவியங்களைத் தேடிவைத்திருந்தும கணவனில் லாதகற்புள்ளபெண்ணின்கட்டழகு பயன்படாததுபோலுந்தனக்குப யன்படாதென்றெண்ணிஉயிருள்ளபொழுதேபரகதிக்கேதுவாகியபுண் ணியங்களைச்செய்யவேண்டுமென்று திரவியங்களையெல்லாமெடுத்து பலதிக்கிலுஞ்சாலைகளுஞ்சோலைகளும் கோயில்களுந் திருவாயில்களும் தடங்களுமடங்களுந்தண்ணீர்ப்பந்தல்களும்அன்னசத்திரங்களும்இன் னம்பலவிதமான தருமங்களையுமுண்டுபண்ணிதான்சிலவியாபாரத்துட னேகாசிக்குப்போய் சுவாதீனத்தில்சரக்குகளெல்லாம் விற்றுகாசிப்பட் டணத்தில் கங்காஸ்நானஞ்செய்து விஷ்ணுதரிசனைபண்ணிவைரவக்க டளையுங்கண்டுசேவித்துக்கொண்டு யெழுந்திருக்கும பொழுது அந்த யிடத்திலேயொருவோலையெழுதப்பட்டுச் சுருளாய்க்கிடந்தது

அந்தச்சுருளைத் தனபதியெடுத்துக் கொண்டு கோயில்வலம்வரு கையில் அவ்விடத்தில் பெண்ணொன்று பிள்ளையொன்றுகழுக்கமரக்கப் பட்டுக்கிடக்கஅவைகளுக்கெதிராற்போல ஒருபெரியசெப்புக்கொப்ப ரைநெருப்புவரத்தெரியும்அடுப்பிலேற்றப்பட்டுதளதளவென்றுகொ தித்துக்கொண்டிருந்தது அங்குநின்ற தனபதி ஓலையைவாசித்துப்பார்க் கையில் அதனுள்ளே எழுதப்பட்டிருந்ததென்னவென்றால் யாதொரு வன் முப்பத்திரண்டு இலட்சணங்களுஞ்சகலசற்குணங்களும்பொருந்தி யிருக்கிறானோ அவனிந்தக் காய்கிறசெப்புக்கொப்பரையில்குதித்து இர ணம்காளி கடாரிக்குப்பலியாமானாகில் இப்பெண்ணும் பிள்ளையுமு யிரோடெழுந்திருக்கு மென்றெழுதியிருந்தது அவ்வோலையைதனப திச்செட்டியும் வாசித்துகையிலெடுத்துக்கொண்டுஉச்சினிபுரம்போய் விக்கிரமார்க்கராசனைக்கண்டு திருமுகத்தைக்கொடுத்தான் விக்கிர மார்க்கன் தனபதிசெட்டியே நீவியாபாரஞ் செய்யப்போன யிடத்தில் யாதாமொருதிசயங்களுண்டோவென்றுகேட்க தனபதியுந் தான்கண்ட அதிசயமெல்லாஞ்சொல்லிஓலையைவாசித்துப்பார்த்து அதிலிருந்தசெதி களையெல்லாமவனுக்குப்படித்து தன்னிடத்திலெமுப்பத்திரண்டு லட்சணங் களுஞ்சகலசற்குணங்களுமிருக்க படியினாலே உடனே காசிக்குப்புறப்ப ட்டுப்போய்த்தளதளவென்று கொதிக்கும் செப்புக்கொப்பரையிலேகுதித்து இறந்தபொழுதுதன்னையாடினான் அப்பொழுது அருகேகிடந்தபெண

ளைப்பிள்ளையும் உயிரோடெழுந்துவந்தார்கள் விக்கிரமார்க்கன் அவர்களுக்கு அனேகத்திரவியங்கொடுத்து அவர்களை யனுப்பிவிட்டுந்தான் உச்சினி பட்டணத்திற்குவந்துசேர்ந்தார் போசமகாராசனே நீருமப்படிக்குத் தெய்வத்தன்மையினாலே பிறருக்கும் உதவிசெய்யவல்லவராகில் இந்தச்சிம்மாதனத்தில்வந்தேறுமென்று ஆறாம்படிக்குக்காவலாகிய அபரஞ்சிப்பதுமை சொல்லப் போசராசன்பாலனை பறிகொடுத்தமனைப்போல் உள்ளம்பதைத்துத் தன்னரண்மனைக்குப் போய்விட்டார்.

ஆறாம்படிக்குக் காவலாகியபதுமைசொல்கதை-முற்றிற்று.

ஏழாம்படிக்குக்காவலாகிய

கருணாநிதிப்பதுமைசொல்கதை.

ஏழாநாள் உதயகாலத்தில் போசமகாராசன் செபதபமுடித்துச் சுத்தசித்தமுள்ளவனாய் மன்னர்கள் முடிகளோடுமுடிகள் அடிபடவும்வாகுவலயங்களோடு வாகுவலயங்களடிபடவும் யானையோடு யானை தாக்கவும் சேனையோடுசேனை தாக்கவும் கடல்ஆரவாரித்தாற்போலும் வாத்தியஞ்சப்திக்கவுஞ் சபாமண்டபத்தில்வந்து ஏழாம்படியை மிதித்து ஏறும்போது அந்தப்படிக்குக்காவலாகிய கருணாநிதியென்னும் பதுமையானது சொல்லுகின்றது கேளும் போசமகாராசனே நேற்று முற்றும் ஆறாம்படிக்குக்காவலாகிய பதுமையானது நாய்க்குக்கண்ணாடிபோலவும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலவுஞ் சொன்னகதையைமறந்து சற்றகல்லிலூற்றிய பாலைப்போலவும் யாதொரு பயன்பெறாமல் விட்டுவிட்டு இன்றைக்குஞ் சற்றுமொன்றானாலும் யோசனைபண்ணாமலுஞ் சிங்காதனமேறவந்தீர் (சேற்றுச்சலத்திலே தேற்றுவித்தையுடைத்தால் சேறுவேறு சலம்வேறு பிரிந்திருக்கும்) அதுபோல உம்முடைய அஞ்ஞானம்வேறு மெஞ்ஞானம் பெறும்படிக்கு நானொருகதை சொல்லுகிறேன் அந்தக்கதையை நீர்தயவுசெய்து அன்னமானது நீர்வேறு பால்வேறு பகுத்துக்குடித்தாற்போலும் நீர் பகுத்தறியவேணுடும் எங்கள் விக்கிரமார்க்கன் இந்தச்சிம்மாதனத்தில் கொலுவிற்றிருந்து உலகத்தை சமநீதியாக அரசாண்டுவரும்நாளில் ஒருநாள் அவர் தன்னுடைய வாகனமாகிய வேதாளத்தையழைத்து கடல்புடைசூழ்ந்த இவ்வுலகத்தில் தன்னை நல்லவனென்று சொல்லுகிறார்களோ பொல்லாதவனென்று சொல்லுகிறார்களோ வேதாளமே நீர்போய் விசாரித்துவாவென்று சொல்ல வேதாளம் அரசன் கட்டளைப்படிக்கு உலகமெங்குந்திரிந்து விசாரிக்கையில் பலபுருஷர்கள் வீரசூர விக்கிரமார்க்கராசனைப்போலும் நீதிமன்னவரொருவருமில்லை அவராக்கினையினாலே கள்ளங் கொலை களவு கட்குடி பொய் காமம் துன்மார்க்கம் அபிபாயட இவைமுதலிய பாவங்களை நீக்கின தருமம் தவங்கள் நன்னடக்கை ஆசாரம் இவைகளாயின அவரிடத்திலே நீதிநிலைமை நன்னெறி பற்றுளமை சுகிர்தமானசம்பந்த சன்மார்க்கம் விவேகம் வீரம் தெளிவு தெய்வத்துவம் அறிவு அன்பு ஆசாரம் இவைமுதலியன நீங்காதிருக்கின்றன ஆகையால் அவர்தேசமெல்லாம் மாதமும்மாரி பெய்கின்றது வருஷமும்போகம் வி

ளாகின்றது என்று சொல்லிக்கொண்டார்கள் சிலஸ்திரீகள்மன்மதனை
ப்பழிக்கும் அழகுள்ள விக்கிரமார்க்கன் மன்மதனைப்போலும் வடிவு
ள்ளவர்கள் இம்மண்டலத்தில் இவனேயென்றுஞ்சொல்லிக்கொண்டா
ர்கள் வேதாளமிவையெல்லாங்கேட்டுக் காசிதேசத்திற்குப்போய் அவ்
விசாரிக்குமளவில் அக்காசிபட்டணத்தில் தருமசீலனென்றொருசெ
ட்டி நெடுநாளாகமிகவும் பெரிதான ஒருகுளம்வெட்ட அக்குளத்தில்
தண்ணீர் சுரக்காமையினாலே அநேக திரவியங்களைத் தானங்கொடுத்
தும் பின்னும்பொருளைச் செலவழித்துப் பாதாளமட்டும் வெட்டியுந்
தண்ணீரில்லாமற்போய்விட்டது அதுகண்டு தருமசீலன் குன்மனோ
யாளிக்கும் வயிறெரிகின்றவாறுபோலத் தன்வயிறெரிச்சல்பட்டுக் கு
ளத்தைச்சுற்றிவந்து இவ்வளவுபொருள் செலவழித்தும் ஆற்றிற்கரை
த்தபுளியைப்போலாய்விட்டதேயென்று கள்குடித்தவன்போலும்மயங்கிம
யங்கிப் பெருமூச்செறிந்துமடைந்து இனிஇங்குஉயிரைவிடுவோமெ
ன்று நினைக்கையில் கெக்கடலில் விழுந்தலைகின்றவனுக்கு ஓர்தெப்பமகப்
பட்டவாறுபோல் ஆகாயத்திலிருந்தவனுக்கு ஒரு அசரீரிவாக்கியம்பி
றந்தது அது என்னவென்றால் கேளாய் தருமசீலசெட்டியே நீ ஏன்விச
னப்பட்டு உயிரை விட்டுவிட யோசனைபண்ணுகிறீர் பூர்வசெனமத்தி
ற் செய்தபாவத்தினாலே குளத்தில் தண்ணீரில்லாமற் போய்விட்டது
இக்குளத்திற்கு நடுவிலே முப்பத்திரண்டு இலட்சணங்களுஞ்சகலநற்
குணங்களும் உடையவன் தலையைவெட்டி உதிரத்தை பலியிட்டால்
எப்பொழுதும் வற்றாத சமுத்திரம்போல் மதுரமான சலமுண்டாகு
மென்றொருவாக்குப்பிறந்தது அந்தவாக்கியத்தைத் தருமசீலன்கேட்
டுக் கோடி திரவியம் பெறத்தக்கதான ஒருதங்கப்பதுமை முப்பத்திர
ண்டு இலட்சணங்களுமுடையதாகச்செய்வித்து அதைப்பத்து வைரத்தி
னமிழைத்த பொற்பலகையை அமைவித்து அப்பலகையில் முப்பத்
திரண்டு இலட்சணங்களுடைய ஒருவன் தலையைவெட்டி உதிரத்தை
இக்குளத்தினடுவிலே பலியிடுவானாகில் அவன் சந்ததியார் இத்தங்கப்
பதுமையும் இத்தங்கஸ்தம்பத்தையும் இந்தத்தங்கப்பலகையும் எடுத்
துக்கொள்ளக்கடவார்களென்று எழுதுவித்து குளக்கரையின் மேற்கு
கிழக்குமாக நாட்டுவித்தான் இவ்வதிசயங்களெல்லாம் வேதாளம்பா
ர்த்து உச்சினிபட்டணத்திற்குவந்து தன்னுடைய அரசன் விக்கிரமா
ர்க்கனுக்கு எல்லாமறிவிக்க விக்கிரமார்க்கன்கேட்டு இவ்வளவுதருமசி
ந்தையுள்ள தருமசீலனென்னுஞ்செட்டியவனைச் சந்தோஷப்படுத்தவே
ண்டுமென்று விக்கிரமார்க்கன் அனலைக்கண்ட மெழுகுஉருகிறதுபோ
லும்மனமுருகி வேதாளத்தையழைத்துக்கொண்டு காசிபட்டணத்தில்
குளக்கரையருகில்வந்து பதுமையும்பட்டயத்தையுஞ்ஸ்தம்பத்தையும்பார்
த்துக் குளமிருக்கிற அழகும் அகலமுங்கண்டு இதிலேசலநிறையுமா
னால் பலருக்கும் பிரயோசனமாமென்று தருமசீலன் செய்தவிவ்வளவு
பெரிய தருமத்திற்காக தன்றலையைக்கொடுத்துக் கீர்த்தியைநாட்டலா
மென்றும் யோசித்திருக்கையில் அங்கொருகோயிலுக்குள்ளே தவசியொ
ருவரிருந்து சொன்னதாவது விக்கிரமார்க்கனே இந்தசரீரம் நீரிலெழு
ந்த குமிழியைப்போலும் காலையிற்பூத்த மலர்மாலையில் வாடியதுபோ

னும் ஓடிய நீரிலெழுதியவெழுத்தைப்போலும் நிலைநிற்கப்பட்டது. ஆகை
யால் பூர்வுடம்பழிந்தாலும் புதுவுடம்பழியாது ஆனபடியால் உமதுசி
ரத்தைத்துணித்து உதிரத்தை அக்குளத்திற்குப் பலியிடுமென விக்கிர
மார்க்கன் முத்தேர்சொல்வாராந்தயபிரமமென்று தவயோகிவாக்கை
மேற்கொண்டு நடுக்குளத்தில் நின்று உடைவாளையுருவித் தன்கழுத்தை
யறுத்துக்கொள்ளும்போது வசந்தகாலத்திற்காட்டுமுருக்கம்பூ செந்நி
றங்கொண்டு மலர்ந்ததுபோலுஞ் சிவந்த உதிரமானது தாரைதாரை
யாகச்சொரிந்து அப்போது கடவுள் பிரத்தியட்சமாக வந்துவிக்கிரமா
ர்க்கன் வாளாயுதத்தைப் பிடித்துக்கொண்டு அரசனே உனக்கென்னவ
ரம்வேண்டும்கேளுந்தருவேனென்றுசொல்லிவிக்கிரமார்க்கன்கடவுளை
த்தொழுது அழுது என்தெய்வமே இக்குளத்தைவெட்டின தருமசீல
னென்னுஞ்செட்டிமனது சந்தோஷிக்கும்படிக்குத்திருக்குளம் என்று
னும் வற்றாசமுத்திரமாக நீர்நிறைந்திருக்கும்படிக்கு வரமருளவே
ண்டுமென்ன கடவுள் அப்படியே வரங்கொடுத்துப்போகக் குளம் புட்
களமாய் நிறைந்திருந்தது அதுகண்டு விக்கிரமார்க்கன் சந்தோஷங்
கொண்டு உச்சினிப்பட்டணத்திற்குப் போய்விட்டான்.

மறுநாள் காலையில் தருமசீலன் குளக்கரையில் வந்துநின்றுபார்க்கு
மளவில் குளம் புட்களமாயிருந்ததுகண்டு நித்தியதரித்திரனுக்குநிறை
செல்வங்கிடைத்தாற்போலு மகிழ்ச்சியடைந்து பின்னென்ன ஆச்சரியம்
நேற்று மழையில்லாதிருந்தும இவ்வளவு குளஞ்சலம் நிறைந்ததும் தெய்
வச்செயலாக இருக்கவேண்டுமென்று யோசிக்கையில் ஆகாயத்திலே
அசரீரியாக்கொணது தருமசீலனே விக்கிரமார்க்கன் தன்னுடைய சிர
சையறுத்து உதிரத்தைப் பலியிட்டபோது கடவுள் வரத்தால் குளம
நிரம்பிற்று விக்கிரமார்க்கன் உயிரோடெழுந்துபோனானென்றுபிறந்
தது தருமசீலன் கேட்டுச் சந்தோஷப்பட்டு நமக்காக விக்கிரமார்க்கன்
தலையைக்கொடுத்துத் தண்ணீருண்டாக்கிப்போனாரே அவருக்குநான்
என்னவுதவி செய்யப்போகிறேனென்று யோசித்துத் தன்னிடத்திலிரு
ந்த விலையுயர்ந்தஇரத்தினங்கள்பத்தும ஒவ்வொருஇரத்தினம்ஒருகோ
டிபொன்பெறத்தக்கது இந்தப்பத்து இரத்தினங்களையும் தன்னுடைய
சேவகர் ஐந்துபேரிடத்திலுங்கொடுத்து இவைகளை நீங்கள் வீரசூரம
காராசாவினிடத்தில் கொண்டுபோய் காணிக்கையாக வைத்து நான்
கோடி சரணஞ்செய்தேனென்று சொல்லி வாருங்கள் என் சேவகர்க
ள் ஐவரும் தன் எஜமான் கட்டளைப்படிக்கு விக்கிரமார்க்கனைக்கண்டு
இரத்தினங்களை காணிக்கையாகவைத்து எங்களாண்டவன் தருமசீல
ன் இந்தப்பத்துஇரத்தினங்களையுந் தங்களுக்குக் காணிக்கையாகவை
த்துத் தங்களுக்குஅவர்கோடிசரணஞ்சொல்லச்சொன்னாரென்றுசொ
ல்லி நாங்கள் வந்தவழியில் நூறுபேர் திருடர்வந்து எங்களை மடக்கிக்
கொண்டார்கள்.

அப்போயிரத்தினங்களை நாங்கள்வாயிற்போட்டுக்கொண்டோம்
எங்களாடையாபரணங்களைமாத்திரம் கள்ளர்பறித்துக்கொண்டுபோ
ய்விட்டார்கள இரத்தினங்களைப் பத்திரமாகக் காப்பாற்றிக்கொண்டுவ
ந்தோமென்ன அரசனே சேவகர்களைக் கண்ணிமைகாத்தல்போலக்க

ளிரத்தினங்களைக் காத்துவந்தபடியால் உங்களுக்கு ஐந்துஇரத்தினங்
களும் ஐந்துகோடி திரவியங்களுங் கொடுத்தேனெடுத்துக்கொள்ளெ
ன்றுசொல்லி தனக்கு இந்திரனாற்கொடுக்கப்பட்ட பச்சைப்பட்டும் பீ
தாம்பரத்தையும் தருமசீலனுக்குக் கொடுத்து கொடுக்கும்படி சொல
வியனுப்பினர் அதைக்கொண்டுபோய் சேவகர்கள் தருமசீலனுக்குக்
கொடுக்கக் கண்டிருந்த ஏழைப்பிராமணர்கள் ஐந்துபேர்விக்கிரமார்க்
கன் மகாகொடையாளி ஆனபடியால் அவனிடத்தில்போய் நம்முடை
ய வறுமைகளைச்சொன்னால் நமக்குவேண்டுவன கொடுப்பானென்று அ
ரசனைக்கண்டார்கள் அரசன் பிராமணர்கள் மிகவும் எளியவர்களென்
றெண்ணி மற்ற ஐந்துபிரத்தினங்களையுஞ் சிலதிரவியங்களையும் அவர்
களுக்குக்கொடுத்தனுப்பிவிட்டார் மேகமானது உலகத்தாருடைய உ
தவியைவேண்டாதுமழைபெய்கிறதுபோலும் எங்கள் ராசன் விக்கிர
மார்க்கன் பலருக்கு முதவிசெய்துவந்தார் அப்படிப்போல போசமகா
ராசனே நீரும் பலருக்கு உதவிசெய்வீராகில் வருதேமுமென்றுஏழாம்
படிக்குக்காவலாகிய கருணாநிதிப்பதுமைசொல்லப் போசமகாராசன்
நடுப்படையிலே வில்லிழந்திருந்து கையிளைத்து நின்றவன்போலும
லங்கித் தன்மாளிகைக்குப்போய்விட்டான்.

ஏழாம்பதுமைசொல்கதை முற்றிற்று.

எட்டாம்படிக்குக்காவலாகிய
சங்கநிதிப்பதுமைசொல்கதை.

எட்டாநாள் விடியற்காலத்தில் போசமகாராசன்சகலகருமங்களை
யுமுடித்துத்தருமங்களைச்செய்து அலங்கரித்துக்கொண்டுவெண்புரவி
மேலேறிவெண்குடைகவிபச் சகலவேடிக்கையுடனேபலருந்தாழ்ந்து
சூழ்ந்துவரச்சிங்காரமண்டபத்தில் வந்திறங்கிசிங்காதனத்திலுடைய
எட்டாம்படியிலேறும்போது அந்தப்படிக்குக் காவலாகிய சங்கநிதிப்
பதுமை போசராசனைப்பார்த்து உறுக்கிமுறுக்கிப் பற்களை நறநறவெ
னக்கடித்துக் கையைப்படியிலடித்து ஓ அரசனே நேற்று ஏழாம்ப
டிப்பதுமைசொன்ன கதைகளைக் கடலிற்கிடக்குஞ்சிறியதுரும்புகளை
அலைகளோடு தாக்கிக்கரையிற்றள்ளுகிறதுபோலும் தள்ளிவிட்டுஇன்
றைக்கும் சிங்காதனத்தில் ஏறவந்தால் (வான்கோழி மயிலைப்போல் ஆ
டினாலும்) மயிலாகாதல்லவா அதுபோல நீ எங்களரசனுக்கு ஒப்பாக
மாட்டாய் அல்லது நீ இந்தச்சிங்காதனத்திலேறினாலும நாயிருந்த
இடத்திலே பூனையிருந்ததுபோலாகுமென்று சொல்லப் போசராசன்
ஆ ஆ இதென்ன ஆச்சரியம் பணங்காத்தபூதங்கள்போலும் ஒவ்வொரு
பதுமைகள் இருந்துக்கொண்டு நம்மையேறவொட்டாமல் செய்கின்ற
னவென்று தனதுள்ளீளக்கைத்துப் பாகத்துச் சொல்லுகிறான் வாரு
ங்கள்பதுமைகளே கொடுக்கிற புண்ணியவான்களை தடுக்கிறபாவிகளை

ப்போலிருந்தானென்னையென்னீங்களெல்லாம் ஏறவொட்டாமல் தடுக்கிறீர்களென்பதுமைசொல்லுகின்றது எந்தெந்தவிடத்திலே எவரெவர்கள்யிருக்கவேண்டுமோ அந்தந்தவிடத்தி லவரவர்களிருக்க வேண்டுமென அரசன் சிம்மாதனம் இராசர்களுக்குரித்தானபடியால் நானேறலாமென்றுசொல்ல அதற்குசங்கதிநிப்பதுமைஒருகதை சொல்லுகின்றது கேளும்போசராசனே விருபராக்ரமவிதரணயிலட்சணமுள்ள எங்கள் விக்கிரமார்க்கராசன் நாடாளுமாதங்காடாளுமாதமவாழ்ந்துவருகையில்காட்டை பட்டியையாளச்செய்து வேதாளத்தைவாகனமாகக்கொண்டுவனாந்திரங்களுக்குப்புறப்பட்டார் அவர்போம்வழியில்ஒருபெரியபர்வதச்சார்பிலே ஆகாயத்தையளாவிய ஒருஆலமரமிருந்தது அதனடியிலொருமண்டபமிருந்தது அங்கேஅரசனவருப்போ தன்தமானமாய்விட்டதுஅதனாலவராங்கேதங்கியிருக்கையி லந்த ஆலமரத்தின்மேல் சஞ்சீவியென்னுங்கருடன்பட்சிகளுக்கெல்லாம்பிராசாவாகவிருந்தது அதனுடனே அநேகம்பட்சிகளிருந்தன அவைகளைப்பார்த்து பறவைகளே நீங்கள்போனதிசையில் புதுமைகளுண்டோவென அவைகளில்சடாயுவென்னும்பட்சி சேனும்யெங்கள்ராசனே வடதிசையில்உச்சினிமாகாளிபட்டணத்தில்விக்கிரமார்க்கன் இந்திரனாற்கொடுக்கப்பட்டமுப்பத்திரண்டுபதுமைகளுடைய சிங்காதனத்திலிருந்து பட்டியைமந்திரியாகவும் வேதாளத்தைவாகனமாகவும்உச்சினிமாகாளியைத்தனக்குத்துணையாகவுஞ்செய்துகொண்டுஐம்பத்தாறுதேசத்தரசர்களுந்தனக்கு பகுதிகட்டும்படிச் செங்கோல்கோனாது முப்பத்திரண்டுதருமங்களையுஞ்செய்து தெய்வபத்தியுடன் இராசரீகஞ்செய்துவருகிறார்

அவர்நாட்டில் மாதமும்மாரிபெய்துவருஷமுப்போகம்விளைகின்றது அவர் தன்னுயிரைப்போல் மன்னுயிரை யெண்ணுகிறார் அவர்நாட்டில்பறவைகளுக்கும் மிருகங்களுக்குஞ் சத்துருக்களில்லை அவரைச்சொற்பனத்திலும் யாவருந்தோத்திரம்பண்ணுகிறார் அவரைப்போலுந்தேசமுமில்லையென்றுசொல்லக்கேட்டுப்பட்சிகளே நாமிருக்கிறயிக்காட்டிலேஇராட்சதன்கண்ணடைச்சுட்டுகிரையைக்காவல்வைத்தாற்போலும் நாளொன்றுக்குநூறுபறவைகளையும்பிடித்துத்தின்றுப்போடுகிறான் ஆகையால் இக்காட்டைவிட்டு நாமெல்லோருமாகநாட்டுக்குப்போயவரைச்சரணாகதியென்றுஅடைந்தோமானால் அவர்நம்மைக்காப்பாற்றுவார் அவருஞ்சார்க்காவிடில்எல்லோருமிந்த ராட்சதனுக்குத்தப்பி வனாந்திரங்களிற்போயிறந்துவிடுவோமென்று சொன்னதையெல்லாம்விக்கிரமார்க்கன் ஆலமரத்தின்கீழிருந்துகேட்டுக்கொண்டு வெளியேபுறப்பட்டுளையில் ஒருபசுவைபுலிதுரத்திக்கொண்டுவந்தது அப்பசு அரசன்திருவடியில்அடைக்கலமென்றுவிழுந்தது விக்கிரமார்க்கன் யந்திரவாளையுருவிபுலியைவெட்டியெறிந்துவிட்டு பசுவினிடத்தில்வந்துஅதைத்தடவிக்கொடுத்தோட்டிக்கொண்டுபோய்தண்ணீர்குடிக்கச்செய்து அனுப்பிவிட்டார் இதைப்பார்த்திருந்தபட்சிகள் இவர் மகாபுண்ணியபுருஷராயிருக்கவேண்டும் அல்லதுவிக்கிரமார்க்கராசனாயிருக்கவேண்டு மென்றுஎல்லாப்பறவைகளும்பறந்துவிக்கிரமார்க்கனைவலம்வந்துதிருவடி

யில்விழுந்ததன் அரசனைக்கண்டு மகிழ்ச்சிகொண்டுநீங்களெல்லாரு
மென்காலில்வந்து பேன்விழுந்தீர்களென்றுகேட்க கருடராசன் ஐயா
எங்களிக்கட்டுநேர விழுந்தோமென அரசன உங்களுக்கென்னவிக்கட்டு
சொல்லுங்களெனகருடராசன் பிரபுவே இப்பாறைக்குவடவண்டையி
ல்ஒருகுளக்கரையுண்டு அக்கரையில்பிரகாசனென்றொருபிராட்சதனி
ருக்கிறானவன் நாளொன்றுக்கு நூறுபக்ஷிகளைத் தின்றுவருகிறான்
அவனைஒருவராலுஞ்செயிக்கக்கூடாது தாங்களவனைச்செயித்து எங்க
ளைக்காக்கவேண்டுமென்றுசொலலஅதற்குவிக்கிரமார்க்கன் அப்படி
யேஉங்களைக்காக்கிறேன் நீங்கள்பயப்படவேண்டாமெனறுபறவைகளு
க்குச்சொல்லி வேதாளத்தின்மேலேறிக்கொண்டு இராட்சதனிடத்திற்
போய்அளவில்லாதசண்டைசெய்து அவனைச்சங்கரித்துவெற்றிகொண்
டுபறவைகளிடத்திலவந்துபறவைகளே இனிமேல்நீங்கள் பயமற்றுவா
ழுங்களென்றுசொல்லி பட்டணம்போய்நீதிநெறிதவறாது செங்கோற்
செலுத்தி எல்லாவுயிர்களுக்கும் உதவிசெய்து வாழ்ந்திருந்தார் போச
ராசனே நீயுமப்படியே உதவிசெய்யக்கூடுமாகில் இச்சிங்காதனத்தில்
வந்துபேறுமென்று சங்கரிதிப்பதுமை சொல்ல போசராசன் வெட்கம
டைந்துருகிப்போனான்.

எட்டாம்பதுமைசொல்கதை-முற்றிற்று

ஒன்பதாம்படிக்குக் காவலாகிய
பதுமைசிதிப்பதுமைசொல்கதை.

——(*)——

ஒன்பதாநாட்காலையில் போசராசன்செபதபப்பண்ணிச்சிங்காத
னமேறவெண்ணிசபாமண்டபத்துள்வந்துமனம்பொங்க எட்டாம்படி
யைத்தாண்டி ஒன்பதாம்படியைமேவெண்டிவந்து நிற்கையில் அப்படிக்கு
க்காவலாகிய பதுமசிதிப்பதுமை முகங்கறுத்து போசராசனைஉருட்டி
ஞெருட்டிச்சொல்லுகின்றது கேளும்போசராசனேதாமரையிலேதண்
ணீர் சற்றும்பற்றாதது போலும் நேற்றுசங்கிதிப் பதுமைசொன்னக
தை உனசெவியிற் பற்றுக்காரணமென்ன ஈரமரத்திமேல ஆணிகடாவி
னாற்போலும் உன்செவிக்குள்நுழைந்ததைசொல்லுகிறேன் அக்கதையைமு
ட்டுப்பூசி உதிரத்தைபிரக்கிறது போலும பிரகிக்கவேண்டும அக்க
தையென்னவெனில் விஜயநகரமென்னும் பட்டணத்தில் திரிசாஸ்தி
ரியென்றொருபிள்ளையுண்டு அவன் நிறைந்தசெல்வத்தி லிறுமாந்துவே
தாகமபுராணங்களைக்கல்லாது வீண்காலங்கழிப்பதை பிதாவானவன்க
ண்டு அப்ப மகனேசெல்வப்பொருளினும் கல்விப்பொருள்மேலானது
கல்வியாலேது சகலசம்பத்தையும் எல்லாச்சிறேஷ்டத்தையும் கீர்த்தியை
யும்நன்மார்க்கத்தையும் தேவபக்தியையும் முத்திக்குவழியையுமகொ
டுக்குமாகையால் புத்திசொல்லியும் கல்வியைக்கற்காது மிருகங்களைப்
போலுந்திரிகிறாய் இனிஎன்முகத்தின்முன்வாராதே உன்னைஎவ்வளவு

யில்லாதகுட்டிச்சுவராகவென்றெண்ணினேனென அவன்வெட்கிக்கல்
விகற்கவேண்டுமென்று பிதாவைவிட்டு வித்தியாநகரத்திற்போய்ச்சே
ர்ந்து அங்குசாத்திரமென்னும்வித்துவானையெடுத்துசகலகலையுங்கற்று
தன்னூருக்குவருகையில் திருக்காஞ்சிபுரத்தைக் கண்டு சுவாமிதெரிச
னஞ்செய்துக்கொண்டு வீதியில்வருகையில் அவ்விடத்தில்காமமோகினி
யென்றொருதேவதாசிபார்த்து கண்காட்டிசைகைசெய்து மயக்கினாள்
கமலசாஸ்திரி தேவிலிருந்த சமயப்போதும்மதிமயக்கிகிற்கையில் அவ்
வூரார் சாஸ்திரியைநோக்கி வரும்பிராமணரே இவள்மகாவஞ்சகி இவ
ளிடத்தில்ஒரு இராக்ஷதனிருக்கிறானவனிவளை ஆர்கூடுகிறார்களோ
அவர்களைக் கொன்றுவிடுகிறானாகையாலிவள் வலையிற்சிக்கிக்கொள்ளா
தேபோய்விடுமென பிராமணன்கேட்டுபயங்கொண்டுதன்னூருக்குவந்
துபிதாவைச்சேவித்துதான்போய்கல்விகற்றதும்வழியிற்கண்ட அதி
சயமுஞ்சொன்னான் பிதாமகிழ்ச்சியாடிருக்கஒருநாள்கமலசாஸ்தி
ரிஎங்கள்விக்கிரமார்க்கன் சபைக்குவந்தார் அதுகண்டு விக்கிரமார்க்க
ன்கமலசாஸ்திரியே நீஎங்குபோய்கல்விகற்றுவந்தாய்நீபோன விடங்க
ளில்என்னவதிசயங்களுண்டுசொல்லென கமலசாஸ்திரியானவிசயநக
ரத்தில்சாஸ்திரருத்திரனென்னும்வித்துவானிடத்தில் சகலகலையுங்கற்
றுகாஞ்சிபுரத்திற்குவருகையில் காமமோகினியென்னுந் தேவதாசிஎன்
னைக்கண்டுமயக்கினாள் நானந்தபயங்கின்றேனப்போதவ்வூரார்இவ
ளிடத்திலேயவன் சேருகிறானோ அவனை நடுராத்திரியில் பிராட்சதன்வ
ந்துகொன்றுபோகிறானென்று சொன்னார்கள்.

அதுகேட்டுநான்பயந்து வந்துவிட்டேனென்று சொன்னானிச்செ
ய்தியைவிக்கிரமார்க்கனறிந்து பிரமணனையழைத்துக்கொண்டுகாஞ்சி
புரத்தில்தேவதாசிகாமமோகினிவீட்டிற்குவந்தார் அவள்சமையல்வீட்
டுள மூயல்வந்தகப்பட்டாற்போலும் சம்மதாஷப்பட்டு சொம்பில்பனி
நீர்கொண்டுவந்து அரசன்திருவடிகளைக் கழுவிதாம்பாளங் கொண்டு
தைத்த புட்பஞ்சூடித் தூபதீபங்கொடுத்துச் சாஷ்டாங்கமாக தெண்
டனிட்டு இருகரங்களுங்கட்டிக்கொண்டுவாரும்மண்டலாதிபதியேதங்
களைநான்கண்டபொழுதே சூரியனைக்கண்டபனிபோல் என்கலிவிட்டு
நீங்கியதென்றுசொல்லி அரசனை சப்பிரமஞ்சத்துள் வீற்றிருக்கச்செய்து
வெண்சாமரை வெட்டிவேர் விசிறிகொண்டுவீசி அத்தர் பனிநீர்தெளி
த்தும் பரிமளதாம்பூலங்கொடுத்துபின் னுஞ்சொல்லுகிறாள் கேளும்சு
கதீஸ்வரா யான்பயந்துசொல்லுகிறேன் பாவேனுமகாபாவிகோரகளை
வதையாபரர் என்னுமேலதங்களுக்குயாதொருபயமுமில்லை பாயின்வா
ய்னுள்ளே தேரைகுதித்தாப்போலுமகொடியவளாகிய வென்வீட்டின்
புதர்திர்கள் எட்டிக்கனிமேலே அழகாயிருந்தும் அதனுள்ளிருக்கும்
வஸ்துகொல்லும் குணமுடையது அதுபோல நான் அழகாயிருந்தும்
அனேகரைக்கொல்லும் குணமுடையவளாயிருக்கிறேனென அரசன்கா
மமோகினியேநீ அப்படிச்சொன்னதென்னவென்று வினவ காமமோகினி
சொல்லுகிறாள் கேளுமென்னாண்டவனே நான் யாராகிலும்ஒருபுருஷ

னையழைத்துவந்து இச்சப்பிர கூடமஞ்சத்தில் கொஞ்சிக்குலாவிக்கூடி
விளையாடிபரவசங்கொண்டாடி ஏகவைபோகமாயிருக்குந்தருணத்தில்
கோழிக்குஞ்சை பருந்தெடுத்துக்கொண்டுபோய் கொன்றுதின்றவிடு
றதுபோல் என்னிடத்தில்வந்தவனை ஒருராட்சதனெடுத்துக்கொண்டு
போய் கொன்றுதின்றுவிடுகிறான் அதனாலென்னிடத்தில் ஒருவரும்வ
ருகிறதில்லையென்றுசொல்ல ராசன்பயப்படாதேநான்விக்கிரமார்க்க
ன் அவனைச்சங்காரம்பண்ணுகிறேனென்று அங்கேயிருக்கையில் அர்த்
தராத்திரியில் யிராட்சதன் புறப்பட்டு அவ்விடத்தில்வர விக்கிரமார்க்
கன் கண்டு வாளாயுதங்கொண்டு அவனைக்கண்டதுண்டமாகவெறிந்தா
ன். மோகினிக்குண்டான துன்பங்களைத்தீர்த்து சாஸ்திரியுமரமோகினி
யும்யிச்சித்தபடியே இருவரையுமருவச்செய்து அவர்களுக்குவேண்டும்
பொருள்களையுங்கொடுத்து உச்சினிபுரம்வந்துவிட்டார் போசராசனே
உனக்கு அப்படிப்பட்டதிறமிருக்குமாகில் இச்சிங்காசனத்தில்வந்தேறு
மென்று ஒன்பதாம்படிக்குக் காவலாகிய பதுமநிதிப்பதுமை சொல்ல
போசராசனடங்கிப்போய்விட்டான்.

ஒன்பதாம்பதுமைசொல்கதை முற்றிற்று

பத்தாம்படிக்குக் காவலாகிய
சர்க்குணநிதிப் பதுமைசொல்கதை.

பத்தாநாள் போசராசன் சபாமண்டபத்துள்வந்துரத்தினசிங்
காதனத்திலுடையஒன்பதாம்படியைவிட்டுபத்தாம்படியைத்தொட்டு
யேறுகிறபோது அப்படிக்குக்காவலாகிய சர்க்குணநிதிப்பதுமையா
னதுபோசராசனைப்பார்த்துயிவ்விதமாகவுஞ்சொல்லுகின்றது.

கேளும் வீரசூரசெம்பிர உதார சிங்காரமாகுபேர ஒப்பார வதி
சாரபோசமகாராசனே கீர்த்திக்களரசன்விக்கிரமார்க்கனைப்போல் சகல
சற்குணமுஞ்சகலவல்லமையும்பெற்று இச்சிங்காதனத்தில் வந்தேறுவி
ரல்லவென்றால்வாசற்பொருக்கிறதோது மிருக்குமென்போஜரா
ஜன்சற்குணநிதியென்னும்பதுமையே விக்கிரமார்க்கன் என்னிலுயர்வ
லவனலவுறுதியவுடனல்லவனென பதுமை அரசனே தன்னை ஒருவன்புக
ழ்ந்துசொன்னால் அக்கினியைவளர்க்கவேண்டியவன் அதிலே நெய்
யைவிடாது நீரைவிட்டவித்தாற்போலாகும் ஒருவனைப்பிறர்புகழ்ந்து
சொல்லும் மாசடைந்தமணிகளைச் சாணைபிடித்தெடுத்துப் பிரகாசிக்
கச்செய்தாற்போலும் ஆகையால் விக்கிரமார்க்கமகாராசனருமையும
ச்சொல்லுகிறேன் அதைக்கேளும் நீர்வளமும் நிலவளமும்நிறைந்த
மகாசிறப்பையுடைய இந்த உச்சினிமாகாளிபுரத்தில் எங்களுடைய
விக்கிரமார்க்கமகாராசனுக்கு பட்டியென்னப்பட்ட மந்திரியுடனும்
வேதாளமென்னப்பட்ட வாகனத்துடனும சொருபசித்தனுமிருந்து
மகாசிறப்புடனே மனுநீதி செங்கோல் வழுவாமல் மகுடமண்டலாதி
பர்களாகிய ஐம்பத்தாறு தேசத்து இராஜாக்களும் தன்னை வண

க்கும்படியாக இராச்சியபரிபாலனஞ் செய்துவருங்காலத்தில் இந்தப ட்டணத்திலிருந்து நாராயணதீட்சதரென்கிற ஒருபிராமணர் காசியா த்திரைக்குப்போய் கங்காஸ்நானம்பண்ணி செபதபங்களைமுடித்துக் கொண்டு விஸ்வநாத சுவாமியையும் விசாலாட்சி யம்மையுந் தரிசனம் பண்ணித் தம்முடையசங்கற்பத்தை நிறைவேற்றிக்கொண்டு திரும்பு ங்காலையில் கங்காதீர்த்தகாவடி யெடுத்துக்கொண்டு இங்கு விக்கிரமா ர்க்கமகாராசன் கொலுவீற்றிருக்கிற சபையினிடமாக வந்து ஆசிர் வாதம்பண்ணினார் அதுகண்டு விக்கிரமார்க்கனுமெழுந்திருந்து அவ ருக்கு நமஸ்காரம்பண்ணி ஓபிராமணரே நீர் காசியாத்திரைக்குப் போயி ருந்த விடங்களில் ஏதாகிலும் அதிசயமிருந்தால் எனக்குத் தெரியச் சொல்லவேண்டுமென்றுகேட்டார்.

அதுகேட்டு அந்தபிராமணரும் விக்கிரமார்க்கராசனைப்பார்த்து ராஜசிரேஷ்டா நான்வருகிறவழியில் அர்ச்சுனபுரி யென்கிற ஒரு பட்ட ணமுண்டு அந்தப்பட்டணத்தை யாளப்பட்ட பகாவிரதனென்கிற அ ரசனானவன் தனக்குப்பிள்ளையில்லாமல் மகாசாபத்திரியத்துடனே நெ டுநாளாய் தவசுபண்ணினான் அதனால் பரமசிவனுடைய அனுக்கிரக த்தினால் அவனுக்கு ஒருபெண்பிள்ளைபிறக்க அந்தப்பெண்ணுக்கு பேசாமடந்தையென நாமகரணமிட்டு தாயுந்தகப்பனும் மகாசந்தோ ஷத்துடன் நாளொருமேனியும் பொழுதொருவர்ணமுமாக வளர்த்து ச கலவித்தையையுங்கற்பித்து பருவகாலம்வந்தபின்பு வேறேஒருஉப்பரிகை கட்டுவித்து அந்தஉப்பரிகையில் சிலதோழிப் பெண்களுடனே பேசா மடந்தையை வைத்து எந்தராசாக்களாகிலும் உப்பரிகையிலுள்ள கா வலாளிகளைக்கடந்து பேசாமடந்தையைக்கண்டு அவளுடனேபேசி பிர சங்கம்செய்து அவளைபேசும்படிசெய்வார்களாகில் அவர்களுக்கு அவ ளை கலியாணம் செய்துகொடுக்கிறேனென்று அறுட்சியைக்கட்டி அர ண்மனைவாசலில் அனேகம் காவலாளிகளை வைத்து திட்டஞ்செய்திரு க்கிறான் அதைகேள்விப்பட்டு அனேகராசாக்கள்வந்து பேசாமடந்தை யுடன்பிரசங்கம் பண்ணமுடியாமல் அவமானப்பட்டுதோற்றுப்போ ன மனுஷனுடைய ஆடையாபரணங்களை பிடுங்கிக்கொண்டு தலையைச் சிரைத்து துரத்திவிடுகிறார்கள் ஆகையினால் விக்கிரமார்க்கனே அப்ப டிப்பட்ட பேசாமடந்தையின் அவயவ அலங்காரங்களைச் சொல்லு கிறேன் கேளும்.

பேசாமடந்தைவருணிப்பு.

மேகத்தினையுங் கமுகம்பாளையையும் கொன்றைக்காயையும் கூந் தற்பிணையையும் உசாக்கவிருளையும் எரிபமணியையுஞ் செடிப்பாசியினை யுஞ் சதனம்கூட்டங்களையும் பழித்து மயிர்சாந்துபூசி சடைமுடிக் கன னைய் தட வர்ப்பட் மக்கள்தானமுல்லை இருவாட்சிமருக்கொழுந்துஇரு

முதலிய டரிப்பளக்களையணிந்துவிளங்கிய கூந்தலையும்மூன்றாம்பிறை சந்திரனைபழித்தநெற்றியினையும் மன்மதன்வில்லைப்பழித்த புருவத்தினையும் வள்ளிக்கொடியினையும் சித்திரிக் கோலினையும் பழித்தகாதுகளையும் வேலையும் சேலையும்வாளையும் நீலோற்பலத்தையுந் தாமரை மலரையும் மானையும் கடலையுங் கருவிளமலரையு மம்பையும் பாணையும் மாவடுவையும் விஷத்தை பழித்த நாசியினையும் சாணைக் கல்லினையும் கண்ணாடியினையும் அதிக மிருதுவாகிய நீர் நிலையினையும் பழித்த கன்னங்களையும் கொவ்வைக் கனியையும் இலவம்பூவையும் பவளத்தையும் முருக்கமலரைப்பழித்த இதழினையும்முத்துக்களைபழித்த பற்களையும் கருப்பஞ்சாற்றினையும் சர்க்கரையினையும் மாங்கனியினையும் பலாக்கனியினையும் வாழைக்கனியினையும் குயிலோசையினையும் கிளிப்பிள்ளை சொற்களையும் பாலையும் பாவையுந்தேனையும் தேவாமிர்தத்தையும் பழித்தமொழியினையும் பூரணச்சந்திரனை ஒப்பான திருமுகமண்டலத்தையும் வலம்புரிச்சங்கினையும் கமுகமரத்தினையும் பழித்தகண்டத்தினையும் மூங்கிலடியையெதிர்த்த தோள்களையும் பொற்கரும்போ பைங்குமுடமோ பம்பரமோ பர்வதமோ பூங்காவனமோ பூரணகும்பமோ வப்புதமோ சொர்ணச்செப்போ சொக்கட்டான்காயோ தாளம்போ சக்கரவாகமோ யானைமத்தகமோ யாதோ தெரியாதென்று பார்த்தபேருக்கெல்லாஞ் சந்தேகத்தைதந்து கதிர்த்துகுவிந்து சிரித்துபருத்து உருண்டு திரண்டு விசித்துவளர்ந்து ஒன்றோடொன்று நெருங்கி புடைத்துபூரித்து புளகாங்கிதங்கொண்டு கமகமவென்று வாசம்வீசவும் சாந்துசவ்வாது கஸ்தூரிபுனுகு பனிநீரென்று சொல்லத்தக்க சமூகஞ் சாத்து முழுப்புகளின்மேலே அகதரேகை அரசரேகை மயில்ரேகைக் குயில் ரேகை முதலிய சித்திரங்களெழுதி முத்துக்கச்சைகட்டி யிருக்கிறபொற் சரிகைகொண்டுமூடி வாகுமாலை வச்ரமாலைபவளமாலை முத்துமாலையோடணையே முதலிய நவரத்தினமாலைகளணிந்து விளங்காநின்ற கனத்த குசங்களையும் ஆலிலையெதிர்த்த வயிற்றினையுந் தாமரைமலர்போன்ற கரங்களையும் மகிழம்பூவைப்போலாகிய நாபியினையும் சிறுசங்கிலிபோன்ற உரோமத்தாயவரையினையும் சிங்கத்தினையும் சித்துடுக்கையினையும் மின்னற்கொடியினையும் பூக்கொடியும் பூங்கொம்பினையும் மன்மதபடையினையும் நாணிறையும் மூன்றாம்பிறைக் கொழுந்தினையும் தோற்கச்செய்யும் இடையினையும் வாழைத்தண்டையும்யானைத்துதிக்கையினைவென்ற தொடையினையும் கண்ணாடிப்பழித்த முழங்காலினையும் வராலினையும் எக்காலத்திலும் அம்புறாத் தூணியினையும் ஒப்பான கணைக்கால்களையும் தருமக்கொப்பான பரடுகளையும் அனிச்ச மலரினு மெல்லிய செம்பஞ்சுக்குழம்பூட்டிய தாமரைமலர்போன்ற பாதங்களையும் மயிலைப்போன்றசாயலையும் அன்னத்தைப்போன்ற நடையினையும் தங்கம்போன்றமேனியையும் உடையவள்.

பலகோடி திரவியம்பெற்ற நவமணிகள்சேர்க்கப்பட்ட பீதாம்பரப்பாவாடையினையும் கரைகளெல்லாம் விளங்கச்செய்யப்பட்ட முத்துக்கி

நிலையும் ஒருகோடி பொன்பெறத்தக்க பொற்சரிகை உதயத்தையும் சர்ப்பத்தையும் நிகராகப் பின்னியிட்ட சடையிலே யிளம் பிறைபோலும் மாணிக்கங்களாற் சமைந்த அணியணியான தங்கப்பில்லைகளையும் சோடசகலைகளையுடைய பூரணச்சந்திரனை நேர்க்கச்செய்யும் நவமணிசடைப்பில்லையும் திரிலோகங்களையும் விலைமதிக்கும் நவமணிகுச்சுகளும் சந்திரசூரியனைப்போலும் தலையாபரணங்களும் வைரக்கல்செற்றிசுட்டியும் சந்திரசூரியனைப்போல் இருட்டைநீக்கும் நவமணிக் கம்பல்களும் விளக்குசுடர்போலிருக்கும் விலையுயர்ந்தகொப்புகளும் நாகரத்தினங்களாலே நந்தமூக்குத்திகளும் தரணியெல்லாம் விலைமதிக்கும் சந்திரஆபரணமும் மண்டலத்தைமதிக்கத்தக்கதாக மாணிக்கப் பதக்கங்களையும் திரிலோகங்களையும் விலைகொள்ளும் ஒட்டியாண மேகலாபரணங்களையும் அளவில்லா பொருள்பெற்ற அஸ்த கடகங்களும விரலாழிகளுங் நிக்கெட்டி மங்கைகள் செங்கோல் விலைவாய்க்குத் தக்க பாடக பாதசரந்தண்டைக் காலாழிபீலிகளும் இந்திர லோகத்தையும விலைபாகவாங்கும் வாகுவலயங்களுந் தரித்தும் அணிந்தும் கலிர்கலீரென்று சப்திக்கவும் அவர்தாய் தகப்பன்மார் உள்ளங்கண்டு மகிழ்ந்து துதிக்கவும் பஞ்சணையிற் கம்பளிந்தூமரப்பிய மலர்களின்மேல் உலாவுகின்றாள்,

கேளும்விக்ரமார்க்க மகாராசனே பேசாமடந்தை ஒவ்வொருநாளுமெழுந்து அத்தர்பன்னீரால்முழுகி செம்பதுமுடித்து அலங்கரித்துக்கொண்டு கடவுளைவிசுவாசித்து உபசாரஞ்செய்து தேவபத்திநீங்காதவளாய்க் கற்புநிலையில் வழுவாதவளாய் அல்லும்பகலும் வேதாகமசாஸ்திரபுராணங்களைவாசித்து பெரியோர்களை நேசித்து உலகெங்கும் பிரகாசித்தும் மாதாபிதாக்களைதெய்வமென்றுநேசித்தும அவர்களையே பூசித்தும் வருகிறதல்லாமல் சொக்கட்டான்சோழி சதுரங்க முதலிய விளையாட்டிலும வல்லவள் யாருக்கு நலலவள் இப்படிப்பட்ட பேசாமடந்தையினுடைய அழகைப்போலும் விலையுயர்ந்தஆபரணங்களைப் போலும் அவள்குணத்தைப்போலும அவள்வல்லமைகளைப்போலும் நாமெங்குங் கண்டதில்லை இந்தஅதிசயத்தை கண்டுவந்தேன் என்று நாராயணதீட்சதர்சொல்ல அந்தவார்த்தையைகேட்டு விக்கிரமார்க்கன் ஆச்சரியமடைந்து கொலுவைவிட்டெழுந்து அப்பிராமணனையும் அழைத்துக்கொண்டு வேதாளத்தின்மீதேறி ஆச்சுபுரிக்குப் போய் அந்த பேசாமடந்தையிருக்கு மூப்பரிகையைக்கண்டு சற்றுநேரமாலோசித்து காவலைக் கடந்துபோவது அரிதென்றெண்ணி வேதாளத்தை யெச்சரித்து ஆகாச மார்க்கமாய்எழும்பி பேசாமடந்தைக் கெதிராகப்போயிறங்கினார் அப்படியிறங்கினதை பேசாமடந்தைகண்டு இதுவரையில்ஒருவருமிப்படி வந்ததில்லையே இவனொரு மாயாவியா யிருக்கிறான் இவனிடத்திலேயேதோ ஒருஅதிசய மிருக்கிறதென்று நினைத்து தன்னுடைய தோழிகளை யழைப்பித்துத் தனக்கொரு கட்டிலும் விக்கிரமார்க்க மகாராசனுக்கொரு கட்டிலும் போடுவித்து குறுக்கே திரைவிரித்து திரைக்குப்பின்னுள்ள கட்டிலிருள் விக்கிரமார்க்கனை

யுட்காரச்செய்து தான் தன்னுடைய கட்டிலின்மேல் உட்கார்ந்துகொண்டு மவுனமாயிருந்தாள் அப்படி யிருக்கும்போது விக்ரமார்க்கனும பேசாமடந்தையைப் பார்த்து ஓ பெண்ணே நான உச்சினிமாகாளி பட்டணத்தி லிருந்துவந்தேன் என்பேர் விக்கிரமார்க்கன் நானுனது பிரதாபத்தை கேள்விப்பட்டு ஆச்சரியகரமாய் உன்னுடனேசற்றே பிரசங்கம்பண்ணி உன்சாமர்த்தியத்தை யறியலாமென்றுவந்தேன் ஆனால் ஏதாகிலும்பிரசங்கஞ்செய்கிறாயா அல்லது ஒருத்திரவாகிலுஞ் சொல்லுகிறாயாவென்றுகேட்க அதற்குப்பேசாமடந்தையுங் கையமோசம்பண்ண வந்தவனேயல்லாமல்வேறல்ல ஆகிலும் ஆகட்டுமென்று தனக்குத்தானே திட்டம்பண்ணிக்கொண்டு திடமாய்த்தவில்தானே யிருந்து சதுரங்கபலகையைபரப்பி சதுரங்கமாட எத்தனம்பண்ணினாள். அதுகண்டு விக்கிரமார்க்கனும் இவள் நம்மை சதுரங்கத்தில்தோற்பித்து அவமானப்படுத்திதுரத்திவிடயோசித்திருக்கிறாளென்றுநினைத்து தனது இஷ்டதேவதையாகிய உச்சினிமாகாளியை தியானம்பண்ணிக்கொண்டு சதுரங்கமாடும்போது அந்த பேசாமடந்தையே தோற்றுப்போனாள்.

பேசாமடந்தைவருணிப்பு-முற்றிற்று.

திரைச்சிலைசொல்கதை.

இப்பால்விக்ரமார்க்கனும் இனிஎன்னசெய்கிறதென்று யோசித்து வேதாளத்தையழைத்து திரைச்சிலைக்குட் பிரவேசிக்கச்செய்து திரைச்சிலையை பார்த்து பேசாமடந்தைதான்பேசுகிறதில்லை பேசியாகிலும் ஒருகதைசொல்லென்றுகேட்க அதற்கு அந்த திரைச்சிலையும் ஓராசனே என்னகதைசொல்லப்போகிறேன் எனதுநாலுமுழம் கச்சைசபட்டையாற்றைந்து முழந்துக் கொருவனாய்ப்போட்டு கயிறுகோர்த்து கட்டிவைத்திருக்கையில் நானெப்படி பேசுவதென்றுசொல்ல அதைக்கேட்டு பேசாமடந்தையும் இதென்னவிபரீதமென்று மனக்கலங்கி அந்த திரைச்சிலையைவிழுந்தெரிந்துவிட்டாள் அதன்பின்பு அந்ததிரைச்சிலையும் விக்கிரமார்க்கமகாராசனைப்பார்த்து ஓ இராசேந்திரா நீயென்னை ஒருபொருளாக யெண்ணிகதைகேட்கச் சொல்லச்சொன்னீரே ஆனாலுமெனக்குத்தெரிந்த மாத்திரஞ் சொல்லுகின்றேனென சற்றேசெவிகொடுத்துக்கேளும் அதுவென்னவென்றால் விசையபுரமென்றொரு பட்டணமுண்டு அந்தப்பட்டணத்தைஅரசாட்சிசெய்கிற வேதாந்தகேசரியென்று ஓர்இராசனுண்டு அவனுக்குதர்மகேசரியென்றொரு புத்திரனுண்டு அவர்பட்டணசாதிப்போர் மதனசேனை அவள்பிறவிச்செல்வமாய் தாய்வீட்டிலிருந்ததுபோலவே மாமிவீட்டிலும் நாலுதோழிமாருடன் விளையாடிக்கொண்டிருப்பாள் அதனன்பேமாமியார் அவளைமெச்சிரும்

விட்டுக்காரியம்பார்க்காமல் விளையாடிக்கொண்டேயிருக்கிறானே எ
ன்று மனஞ்சகிக்காதவனாய்க் கண்டித்துத் தன்புத்திரனாகிய தர்மகேசரி
யையழைத்து அப்பா மகனே சிலகாலமுன் பெண்சாதியுடனே பேசா
மல் நீங்கியிருவென்று திட்டம்பண்ணி பின்பு மதனசேனைக்கு ஒர
ண்மனைவிட்டு அவ்வரண்மனைவாசலில் நூறுபேர் காவலாளிகளைவை
த்து பத்திரப்படுத்திவைத்தாள் இப்படி சிலநாளிருக்கையில் வேதாந்த
கேசரி தன்தாய்க்குப்படைத்தவனாக தளசேகரம்பண்ணிக்கொண்டு
தன்குமாரனாகிய தன்மகேசரியைப்போகச்சொல்லி திட்டம்பண்ணினா
னதுமட்டு தர்மகேசரியும் அல்லவென்று பிதாவினுடையவுத்திரவின்
படியே சகலசேனசமேதனாய் ரதமேறிக்கொண்டு பட்டணம்விட்டு
புறப்பட்டு இரண்டொருவழியிலேபோயிறங்கி அப்போதவ்விடத்தில்
எத்தனைநாளசென்றுபோடுவன் ஆலோசனை பண்ணிக்கொண்டு ஏகா
ந்தனாய் அந்நேரத்துடனே மதனசேனையரண்மனைக்குத் தாவிநக்கி
யிருக்குமிடத்திற்குப்போய் ஒர்சிலவரையுண்டுபண்ணி அந்சிலவரைவழியா
க ஒருவருக்குந்தெரியாமற்போய பெண்சாதியைக்கண்டு சமாதானம்
பண்ணி அவளுடனே மகாசரசசல்லாபனைவபோகத்துடனே ஏகபோக
மாய் சுகமனுபவித்திருந்து திருப்புன்காலையில் அவளுக்கு அநேகச
மாதானவார்த்தைகள் சொல்லி அவளிடத்திற் செலவுபெற்றுக்கொண்
டு அந்சிலவரைவழியாக புறப்பட்டு தன்பாளையத்திற்குவந்து சேனை
யுடனே கலந்துக்கொண்டு பிரயாணமாய்ப்போனான் இப்பாலன்று
முதல் மதனசேனைக்கு கெற்பமுண்டாகி ஐந்துமாதமாய் விட்டது அ
ச்செய்தியை மாமியாரறிந்து இவள்விசாரமபண்ணி பிள்ளையுண்டாயி
ருக்கிறாளென்று தன்புருஷனாகிய வேதாந்தகேசரியென்னும் மகாதும
ரிப்படிப்பட்ட அடங்காத்திவாளாமோவென்று விசனமடைந்த தன்
மருமகளாகிய மதனசேனையையழைத்து கண்ணைக்கட்டிகாட்டிலேவி
ட்டுவிட சட்டனைபிட்டாள் அதன்பிறகு மதனசேனையானவள் அக்கா
ட்டெல்லாமலைந்துதிரிந்து பிரதாபப்பட்டுக்கொண்டு அந்திராதிரி
பதினைந்துநாழிகைக்குமேல் வழிதெரியாமல் காட்டைவிட்டு வெளி
யேபுறப்பட்டுவந்து நிதானித்துப்பார்க்குமளவில் விஜயபுரத்துச்சமீப
த்தில் ஒருவெளிச்சங்கோன்றிற்று அவ்வெளிச்சம் விஜயபுரத்திலிருக்
கிற மோகனுமென்றதேவடியாளுக்கு மகாகாமியென்றொரு பெண்
ணுண்டு அவள் ஆறுமாதக்கெர்ப்பமாயிருந்து வெளிக்கண்டு அதற்கு
மேல் ஐன்னிப்பிரசூதுமரித்துப்போனாள் அவளையெடுத்து தகனமபண்
ணினார்கள் அதனையறியாமல் மதனசேனையும் சுடுகாட்டிற்போய அப்
பிணத்துக்குச்சமீபத்திலிருந்தாள் அப்போது அந்தேவடியாளும்மகள்
பேரில்வைத்திருந்த வாஞ்சையினால் துக்கமடைந்து மனஞ்சகிக்காமல்
சுடலைக்குறவழியிலே பிரலாபித்துக்கொண்டுவருகையில் அங்கிருக்
கிற மதனசேனையைப்பார்த்து மகளென்றுநினைத்து அலங்கடியா
ணைந்து முத்தமிட்டுக்கொண்டு அடிமகளே நீபோனதென்ன வந்ததெ
ன்னவென்றுகேட்க அதற்குமதனசேனையும் இதென்ன அதிசயமாயி
ருக்கிறதென்று ஒன்றும்தெரிந்துச்சொல்லாமல் நானொருகாரியமுத்தி
யேன் என்னையோ யவ்விடத்திலிருக்கவும் நீகண்டுமறிவேனென்

றுசொல்ல அதுகேட்டு தேவடியாளும் சந்தோஷமாய் என்னிஷ்ட தெய்வமே யெனது துக்கம் நிவர்த்தியாகும்படி இறந்துபோனவுன்னை திரும்பவு மிங்கேகொண்டுவந்துவிட்டது என்பாக்கியமென்று மகாமகிழ்ச்சியுடனே மதனசேனையழைத்துக்கொண்டு தன்வாவுக்குப்போயுட்கார்ந்து அம்மா மகளே நீ கைலாயத்திற்குப்போனதும் வந்ததும் கேள்விப்பட்டு உன்னுடனிதுவரையில் சினேகமாயிருந்த மாப்பிள்ளைமார் ஆச்சரியமாகக்கேட்டுவருவார்கள் அவர்களுடனிதவாகப்பேசி பத்துபணஞ்சம்பாதிக்க யெத்தனம்பண்ணிக்கொள்ளென்று சொல்ல அதைக்கேட்டு மதனசேனை ஆலோசித்துக்கொண்டு நல்லதம்மா அப்படியேயாகட்டும் ஆனாலும் கைலாயத்திற்குவந்து மறுபடியும்பூலோகாத்திற்குப்போகிறபடியால் நீ பன்னிரண்டுவருடபரியந்தம் ஓர்விரதமனுஷ்டிக்கவேண்டுமென்றுசொல்ல அதுகேட்ட தேவடியாளும அம்மா நீ ஆபுருஷனுடனேயிருந்தாலதுவே எனக்குப்பதினாயிரம் நீ ஒருவருடனும்பேசாமல் தானேயிருவென்று திட்டம்பண்ணி ஓர்நிலவறையில்வைத்து பின்பு சீமந்தமுகூர்த்தமுஞ்செய்வித்து பூரணகெர்ப்பமாய் பிரசவகாலஞ்சமீபித்து பிரசவவேதனைப்படும்போது ஓர்மருத்துவக்கிழவியையழைப்பித்து ஓபாட்டி பெண்மகள்வயற்றில பெண்பிள்ளைபிறந்தாலிருக்கட்டும ஆண்பிள்ளைபிறந்தால் கொன்றுவிடென்று கட்டளையிட்டாள்.

அதற்கு மருத்துவக்கிழவியும் சம்மதித்து மதனசேனையினிடத்திலிருக்கும்போது மதனசேனையினுடையவயிற்றில் ஆண்பிள்ளைபிறந்தது அதுகோடிசூரியப்பிரகாசம்போலிருக்கிறபடியால் பிள்ளையைக்கொல்ல மருத்துவச்சிக்குமனம்வராமல் சற்றுநேரங்கவலையடைந்து ஐயோ இவ்வளவழகுள்ளபிள்ளையையெப்படிகொன்றுவிட்டுசிசுஅத்திதோஷந்தேடிக்கொள்ளுகிறதென்று விலேசப்பட்டுக்கொண்டிருக்கையில் மோகனாவென்கிற தேவடியாளும் மருத்துவச்சியைப்பார்த்து என்மகள்பிள்ளைபிறந்ததென்றுகேட்க ஆண்பிள்ளைபிறந்தது கொன்றுவிட்டேனென்றுசொல்ல அதற்கு தேவடியாளும் நீநல்லகாரியஞ் செய்தாய் அதைக்கொண்டுபோய் சீக்கிரத்தில் ஒருவருக்குந்தெரியாமல் குப்பைமேட்டிற் குழிபறித்து புதையென்று சொன்னாளதற்கு நல்லதென்றுசொல்லி மருத்துவச்சியும் அப்பிள்ளையையெடுத்துக்கொண்டுபோய் அரசனுடைய அரண்மனைவாசலில் சாளரமுகப்பில் வைத்துவிட்டு மறுபடியுமெப்போதும்போல மதனசேனையிடத்திற்றுவந்திருக்கையிலுடனே மதனசேனைக்குசோகந்தெளிந்து கண்ணைவிழித்து மருத்துவச்சியைப்பார்த்து ஓபாட்டி பிள்ளையெங்கேயென்றுகேட்டாளதற்கு மருத்துவச்சியும் பிள்ளைபிறந்தபொழுதே யிறந்துவிட்டது அதைக்கொண்டுபோய் புதைத்துப்போட்டேனென அதுகேட்டு மதனசேனையும மகாவிசனமடைந்து ஐயோ நான்பிறந்ததென்ன எனக்குயித

விதியாலேரிட்டதென்று ஒன்றும்வெளியிடாம லடித்துக்கொண்டிரு
ந்தாள் இதுவரைக்கும் நானறிவேனென்று திரைச்சீலைசொல்லிற்று.

திரைச்சீலைசொல்கதை முற்றியது.

இரவிக்கைசொல்கதை.

அதைக்கேட்ட விக்கிரமார்க்கனும் சந்தோஷித்தவனாய் பேசாம டந்தைபோட்டுக்கொண்டிருக்கிற ரவிக்கையைப்பார்த்து பேசாமடை ந்தைதான் நம்முடனேபேசுகிறதில்லையே நீயாகிலும் ஒருகதைசொல் லென்றுகேட்க அதற்குரவிக்கையும் விக்கிரமார்க்கனைப்பார்த்து ஓரா சசேகரா நானொருகதைசொல்லப்போகிறேன் நான்பருத்தியாய்ப் பிறந்து பஞ்சென்றபெயரெடுத்தபின்பு என்னைப்படாதபாடுபடுத்தி நூலாய்நூற்றுக்கிடாகஞ்செய்து தறியிலேபூட்டி உடைபோட்டுநெய் து சுருட்டிப்பிடித்துகிழித்து தைத்து ரவிக்கையென்று மறுபேரிட்டு இப்பேசாமடந்தையினுடைய ஸ்தனத்திற்போட்டு இறுக்கிக்கட்டியி ருக்கிறதே இந்தனை அரிகண்டத்திலிருந்து எப்படி நான் கதைசொல் லுவேனென்றுசொல்ல அதுகேட்டு பேசாமடந்தையுந் திடுக்கிட்டு நாம் உயிரானவஸ்துவைஸ்தனத்திற்போட்டிருந்தோமே இதனால்நம க்கு மானபங்கமாய்விட்டதென்று அந்தரவிக்கையை கழற்றியெறிந்து விட்டாள் அதன்பின்னந்தரவிக்கை விக்கிரமார்க்கனைப்பார்த்து ஓரா சசிரேஷ்டா இனிநான்கதைசொல்லுகிறேன் சற்றேசெவிகொடுத்துக் கேளும் அதென்னவென்றால் முன்பு திரைச்சீலைசொல்லிவிட்டகதை யில் மதனசேனைபெற்ற பிள்ளையானது அரண்மனைவாசல் சாளரமுக ப்பில் அழுதுக்கொண்டிருந்தது அவ்வேளையில் விஜயபுரத்தையாளப் பட்ட சக்கரேஸ்வரரானவர் இருந்திரிபதினைந்துநாழிகைக்குமேல் சே வகர்களுடனே நகர்சோதனைவருகையில் அப்பிள்ளையினழுகுரலைக்கேட் டு அதையெடுத்துவரச்சொல்லி இரண்டுகண்களாலும்பார்த்து மகாச ந்தோஷித்தவராய் இரண்டுகையாலும்வாங்கிக்கொண்டு தன்னரண்ம னைக்குப்போய் தன்பெண்சாதிகையிற்கொடுத்து வளர்க்கச்சொல்ல அவளும்மனமகிழ்ச்சியாய்ப்பார்த்து மகாசந்தோஷமடைந்து முலைகொ டுக்க இதுவரையில்பிள்ளைபிறவாதவளாயிருந்தும் சிவகடாட்சத்தினால் பாலுண்டாயிற்று இப்படிநாளொருமேனியும் பொழுதொருவண்ணமு மாக வளர்த்து ரதகேசரியென்று நாமகரணமிட்டு ஐந்துவயதானபி ன்பு சகலவித்தைகளையுங்கற்பித்து யானையேற்றங்குதிரையேற்றம்வில் வித்தைமுதலானவைகளையுங் கற்பித்துக்கொடுத்து மகாசந்தோஷமா

மாய் வைத்திருந்தார்கள் இப்படியிருக்க அந்தராசகுமாரனும் உல்லா சமாய் ஒருயானைமேலேறிக்கொண்டு தேவடியாள் வீதிவழியேவரு கையில் மோகனாள் வீட்டிலிருக்கிற மதனசேனையைக்கண்டு மோகாக் கிராந்தனாய்த் தன்பின்வருகிற சேவகரையழைத்து ஓசேவகர்களே யதோ உன்னிப்போலுலாவிக்கொண்டிருக்கிற பெண்யாரென்றுகேட்க அந் தச்சேவகர்களும் ராசகுமாரனைப் பார்த்து ஐயா இவள் மோகனாளென்கிற தேவடியாள்மகள் இவள்பத்துவருஷத்துக்குமுன்னே யிறந்துபோய் மறுபடியும்பிறந்து இதுபரியந்தம் நிலைகடவாமல் ஒருபுருஷர்முக மும்பாராமல் ஏகோருநோன்பு நோற்றுக்கொண்டிருக்கிறாளென்று சொல்ல அதைக்கேட்டிராசகேசரியும் அதிகவிரகதாபமடைந்துநாம் இப் படிப்பட்ட ஸ்திரீயைக்கூடி அநுபவிக்கவேண்டுமென்றுகருதி மோக னாளையழைப்பித்து நான் உன்மகள்மேல் மோகங்கொண்டேன் ஆகையா ல் ராத்திரிக்கு வருகிறேனென்றுசொல்ல அதற்குமோகனாள் ஐயாதே வரீர்வருகிறபடி நாங்களெத்தனை புண்ணியம்பண்ணினோம் சித்தமிருந் தால் அப்படியேஒருதடையுமின்றி வரலாமென்றுசொல்ல மதனகேச ரியும் அப்படியேயல்லவென்று அரண்மனைக்குப்போனான் பின்புமோ கனாளும் மதனசேனையிடத்துக்குவந்து அடியம்மாமகளே ராசகுமார னானவர் உன்மேல்மோகங்கொண்டு இன்றிராத்திரிக்கு வருகிறதாகச் சொன்னார் எதுக்கடைசொல்லவேண்டாம் நீசம்மதியாவிட்டால் இச் சக்கணமே ஆக்கினைசெய்விப்பாரென்று மிகவுங்கெஞ்சியிரண்டுகாலை யும்பிடித்து வேண்டிக்கொண்டாள் அதைக்கண்டு மதனசேனையுந் துக் காக்கிராந்தியாய்ச்சோர்ந்து பூமியில்விழுந்துபுரண்டு ஐயோ தெய்வமே நான்பிறந்தநாள்முதல் இதுபரியந்தமும் புருஷனையன்றி வேறொருவ னைக் கனவிலும் நினைத்ததில்லையே அவ்வகைப்பட்டவெனக்கு இந்த விதி எவ்வகையாய்நேரிட்டது இச்சேருடே என்பதிவிரததனம் அ ழியத்தக்ககாலம்வந்து நேரிட்டதோவென்றுபுலம்பிக்கொண்டிருந்தா ள் இதுவரைக்கும் நானறிவேனென்று ரவிக்கையானதுசொல்லிற்று.

இரவிக்கைசொல்கதை முற்றியது.

பாவாடைசொல்கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கன் அதிகசந்தோஷித்தானாய்ப் பேசா மடந்தைகட்டிக்கொண்டிருந்தபாவாடையைப்பார்த்துச் சுவதாவந் தைப்பிரவேசிக்கச்செய்து பாவாடையே பேசாமடந்தையுடனேபே

போகிலும் ஒருகதைசொல்லென்றுகேட்க அந்தப்பாவாடையும் விக்கிர
மார்க்கமகாராசனைப்பார்த்து ஓ ராசவல்லப நான் என்னகதைசொல்
லப்போகின்றேன் என்னை கலைவென்னும்பெயரைமாற்றிபாவாடையெ
ன்று மறுபேரிட்டு அவளிருப்பில் கட்டியிருக்கிறமுடிபோட்டிருக்கின்ரு
ளே நான்புழுக்கிபபோயிருக்கிறேனே அப்படிப்பட்ட வேதனையிலிருக்
குமெய்ப்படிநான்கதைசொல்லப் போகிறேனென்றுசொல்ல அதுகேட்
டு பேசாமடந்தையும் கிலேசமடைந்தவேறே ஒருசேலையெடுத்து உடுத்
திக்கொண்டு அந்தப்பாவாடையை அவிழ்ந்தெறிந்துவிட்டாள அப்
போது பாவாடையும் விக்கிரமார்க்கனைப்பார்த்து ஓராசாவே இங்கப்
பேசாமடந்தையும் என்வருத்தத்தைப்பார்த்து கட்டிகட்டதும் கைவி
ட்டதுபோலும் என்னை அவிழ்த்தெறிந்துவிட்டாள் ஆனதால் கதை
சொல்லுகிறேன் சற்றே செவிகொடுத்து கேளும் அக்கினவெனுரு
ல் முன்பு ரக்ஷிக்கைசொல்லிவிட்டகதையில் அந்தராசனும்பரதேசசி
யும் இராத்திரி இரண்டுசாமத்திற்குமேல் எழுந்திருந்து திகளமுக்கா
டாய்த்துப்பட்டியைப்போர்த்துக்கொண்டு புழக்கடைவழியாக வரு
ம்போது அவசரமாய் அவ்விடத்தில் கட்டியிருந்த பசுவினகன்றை தா
ண்டிக்கொண்டுபோக அதைப்பார்த்த கன்றானது தெரிந்து பசுவைப்
பார்த்து அம்மா யிக்க வீராசகுமாரன் உனனைத் தாண்டிப்போகிரு
னே அவனுடைய செல்வத்தை பார்த்தாயாவென்றுசொலல அதற்கு
ப்பசுங்கன்றைபார்த்து ஆ என் கண்ணே என்செல்வமே அந்த
வேண்டாம் அவனபெற்றதாயைப் பெண்டாளப்போகிறபடியால் அவ
னுக்கு புண்ணியமேது பாவமேதென்றுசொல்ல அந்தப்பாவையும்
இவனறிந்தவனுகையால் இதைமுழுதும்போயறியவேண்டுமென்றும்
மோகனுள்வளவுக்குப்போனான் அந்தமோகனுளிருந்து தம்பிஉள்ளே
வாருமென்றழைத்துப்போய் தலைக்கடையிலுட்காரவைத்துவிட்டு மத
னசேனையிடத்திற்சவந்து ராசகுமாரர் வந்திருக்கிறசெய்தியை யெச்
சரித்து அவளை ஆடையாபரணங்களாலலங்கரித்து திலகமிட்டு புஷ்ப
முடித்துப் பள்ளியறையுஞ் சிங்காரஞ்செய்து பின்பு ராசகுமாரனை எச்
சரிக்க அவனுஞ்சந்தோஷமாய் கட்டிலின்மேலுட்கார்ந்தான அப்பொ
ழுது மதனசேனையும் உருத்திராவிணையைக் கையிலெடுத்துக்கொண்டு
அன்னபட்சிபோல ராசகுமாரனுக்கெதிரே வந்துநின்று அந்தவீணை
யை மீட்டிவாசித்தாள் அப்பொழுது ராசகுமாரனும் மதனசேனையுந்
தன்னுடைய பூர்வோத்திரஞ்சொலல அதனைப்பண்ணுமுனே அவளு
டைய இரண்டுஸ்தனமும் வியபால்சுரந்து அவனது முகத்தில் பனிநீ
ர்விசினதுபோலத்தெரிக்க அதுகண்டு ராசகுமாரனுந் திகைத்திட்டு அங்
கிருந்த நிலைக்கண்ணாடியில் தன் முகத்தைப்பார்த்துக்கொண்டு ஆலோ
சனை பண்ணும்போது அவனமுகமும மதனசேனைமுகமும் மாறுபாடி
ன்றி ஒருமுகமாயிருக்க இதென்ன ஆச்சரியமென்றுநினைந்து பனித்
தலத்தமாய மதனசேனையைப்பார்த்து நீயார் உனதுபிறப்பென்னவெனப்
பெண்ணே நீயிறந்தாள் முதலின் பழுபவமாக்குமே உண்டானசெய்தியை
ஒன்றும் ஒளியாமல் சத்தியமாகச்சொல்லென்றுசொல்ல மதனசேனை

யும் மகாதுக்கத்துடனே தான்பிறந்ததும் வளர்ந்ததும் தர்மகேசரிக்கு
மாலையிட்டதும் தனைபுருஷனைப் போகவேண்டாமென்று மாமியார் க
ட்டு பண்ணினதும் நிலவறையில் சிறைவைத்ததும் இரகசியமாக இந்த
நிலவறைவழியேவந்து தர்மகேசரிகூடிப்போனதும் அதுவேகர்ப்பமா
ய் ஐந்துமாதமானதும் அதை மாமியாரறிந்து வேறாக்க கேசரிக்குச்
சொல்லிக் கண்ணைக்கட்டி காட்டில்கொண்டுபோய்விட்டுவிடக் கட்ட
ளையிட்டதும் அந்தகாட்டெல்லாந்திரிந்து வழிதெரியாமல் அலைச்சல்ப
ட்டு இராத்திரிப்பதினைந்துநாழிகையில் காம்விட்டுவெளிப்பட்டுச் சுடு
காட்டு வெளிச்சங்கண்டு அங்கேவந்துநின்றதும் அப்போது மோகனு
ளும் தனமகளென்றுநினைத்து தனனைக் கட்டிக்கொண்டு இறந்துபோ
ன நீமறுபடியும் வந்தாயாவென்று புலம்பினதும் அந்தசாடையெரிந்
து நான்கயிலாயத்திற்குப்போனவிடத்தில் பூலோகத்திற்குப்போய்
ஒருபுருஷர் முகமும் பாராமல் பன்னிரண்டுவருஷபரியந்தம் விரதம்ப
ண்ணினால் தீர்க்காயுசா யிருப்பாய் இல்லாவிட்டால் இறந்துபோவா
யென்று சிவகணங்கள் கட்டளையிட்டதாகத் தான்சொன்னதும் உயி
ரோடுவந்ததே பதினாறுமென்று மோகனுளழைத்துக்கொண்டு வந்து
வீட்டில்வைத்துப்பின்புபிள்ளைபெற்றதும் அந்தப்பிள்ளையெங்கென்று
கேட்க ஆண்பிள்ளை பிறந்தது பிறந்துவிட்டது அதைக்கொண்டுபோ
ய்புதைத்துவிட்டேனென்று மருத்துவச்சிகிழவிசொன்னதும் அதன்
பின்பு சிலநாள்கழித்து இன்றைக்கு ராசகுமாரன் வருகிறானென்று
மோகனுள்சொன்னதும் அதற்குத்தான் சமயமறியாமல மன்னுறக்கம
டைந்ததுமாகிய இவைகளையெல்லாஞ்சவிஸ்தாரமாகச்சொல்ல அது
கேட்டு ராசகுமாரனும் இவள்தமதுதாயேயல்லாமல் வேறல்லவென்று
மனதில் நிர்க்க ஆலோசித்துக்கொண்டு ஒன்றுஞ் சொல்லாமல் பள்ளி
யறைவிட்டுவெளியேவந்து அந்தமருத்துவக்கிழவியையழைத்து இந்த
மோகனுள்குமாரத்திக்கு மருத்துவம்பார்த்தையே அப்போது பிறந்த
பிள்ளையெங்கே அதை நீ உண்மையாகச்சொல் அப்படிக்குச்சொல்லாவி
ட்டால் உன்னை ஆக்கினைசெய்துவிடுகிறேனென்றுசொல்ல அதுகேட்
டு மருத்துவச்சியும் பயந்துவாய்பொத்திக்கைகட்டிக்கொண்டு ஐயாசி
ரேஷ்டா ஆண்பிள்ளையாகப்பிறந்ததால் கொன்றுவிடும்படி மோகனுள்
உத்தரவுபண்ணியிருந்தாள அதைக்கொல்ல மனமவராமல் அரசனு
டைய அரண்மனைவாசலில் சாளரமுகப்பில் வைத்துவிட்டுவந்தேனெ
ன்றுசொல்ல அதுகேட்டுக்கொண்டு மருத்துவச்சியையனுப்பிவிட்டு
இராசகுமாரனு மரண்மனைக்குவந்து மிகவுமுக்காடாய் முகக்காடிட்டுக்
கொண்டு சப்பிரமஞ்சத்தின்மேல் படுத்துக்கொண்டிருந்தான் அதுக
ண்டு வளர்த்ததாயும்வந்து இன்னமென்னதூங்குகிறாய் நீயெப்பொழு
தும் வெளியேபோய்வந்தால் எத்தசெய்தியுமென்னோடு சொல்லுகிறவ
னாயிற்றே இன்றைப்பகிலமை எதிருல ஒன்றுஞ்சொல்லாமல் படுத்துக்
கொண்டிருக்கிறாயென்றுகேட்க அதற்கு இராசகுமாரனும் அந்த அ
ம்மன்பார்த்த தாயே நானொருசெய்திகேட்கிறேன் அதையொளியா
மல உள்ளபடியாகச்சொல்லவேணுமென்று நயக்கமாகப்பற்றிக்கொண்
டு எழுந்திருந்து ஓ அம்மா நான்பிறந்ததென்ன நான்வளர்ந்ததென்ன

என்னுடைய மாதாபிதாக்கள் யாவர் அதைவுள்ளபடிசொல்லவேண்டு
மென்று வருந்திகேட்க அதற்கு அந்தஅம்மாளும் அப்பாநீசத்தியமா
கக் கேட்கிறாயே ஆனால்சொல்லுகிறேன் என்னவென்று உனபிதா
வாகிய சர்வேஸ்வரராசன் இராத்திரியிரண்டுசாமத்தின்மேல் நகரிசோ
தனை வரும்போது அரண்மனைவாசலின் சாளரமுகப்பில்பிறந்த ஈரம்
உலராமல் காகாவென்று அழுதுக்கொண்டிருந்த உன்னையெடுத்துவந்
து என்கையிற்கொடுத்தார் நாஞ்சந்தோஷமாய் நமக்குச் சிவகடா
ட்சத்தினால் உண்டான பிள்ளையிதுவென்று இரண்டுகையினாலும்வாங்
கி அன்றுமுதல் இன்றையவரைக்கும் பெற்றபிள்ளையாய் அருமைப்ப
ருமைபாராட்டிவளர்த்தேன் இதுவல்லாமல் வேறேயொன்றுமில்லை
யென்றுசொல்ல அதுகேட்டுக்கொண்டு மகாசந்தோஷத்துடனே இரா
சகுமாரன்காலை யநுஷ்டானங்களைமுடித்துக்கொண்டு பிதாவினிடத்
திற்குபோய்த்தெண்டனிட்டுக் கைகளைக்கட்டிக்கொண்டு நிற்க அது
கண்டு சர்வேஸ்வரராசனு மிதென்ன அதிசயமென்று ஆச்சரியத்து
டனே எழுந்திருந்து குமாரனை எடுத்து மார்போடணைத்து முத்தமி
ட்டு படிமேல்வைத்துக்கொண்டு அப்பாமகனே நீ ஒருநாளும் ஆசார
வாசலுக்குவந்தவனல்லவே இன்றைக்கு அத்திபூத்ததுபோல் வந்த
காரணமென்னவென்றுகேட்க இராசகுமாரனும்பிதாவைப்பார்த்து ஐ
யா எனக்கொரு காரியமிருக்கிறது அதைதீர்மானமாய்க்கண்டறிய
வேண்டும் ஆதலால்தேவரீர்திருவுளம்பற்றியருளவேண்டுமென்றுசொ
ல்ல அதற்குஅரசனும் அப்பாநீஎன்னகேட்டபோதிலும் உன்கருத்தி
ன்படி தடையில்லாமற் சொல்லுகிறேனென்றுசொல்ல அதற்குராச
னும் ஐயா நான் பிறந்ததும் வளர்ந்தது மங்கள் சித்தத்திற்குதெரிய
த்தோன்றிருக்குமே அதைவெளியாமல் எனக்குரைக்கவேண்டுமென்
றுகேட்க இதற்குராசனும் நீபிறந்தவகையில் சொல்லு நான்சொல்லு
கிறேனென்ன என்னுடைய பட்டணம் விஜயபுரம் என்பாட்டனார்
வேதாந்தகேசரி அவர்தம்முடைய தாய்வார்த்தையைக்கேட்டு என்
தாயாருடனேபேசாமல் சிறையில்வைத்திருந்தாரென்று ஆதியோடந்
தமாய் அதுமுதல் நாளதுவரைக்கும் நடந்தசெய்திகளை சவிஸ்தாரமா
கச் சொல்லவதுகேட்டு சர்வேஸ்வரராசனும் சந்தோஷித்தனாய் அப்
படிச்சொன்ன புத்திரனைப்பார்த்து அப்பாஉன்கருத்தின்படியே யாக
ட்டும் இப்போது என்னாலாகவேண்டிய காரியமென்னவென்றுகேட்க
ராசகுமாரன் பிதாவைப்பார்த்து ஐயா நான் விஜயபுரத்திற்குப்போய்
என்பிதாவைக்கண்டு எனதாயாரெங்கேயென்று கேட்கவேண்டுமெ
ன்றுசொல்ல அப்படியேநல்லதென்று அப்போதேராயசக்காரனைய
ழைப்பித்து நம்முடையகுமாரன் ரதகேசரிவருகிறான் அவனை நாமம
ப்பாவித்து ஒருபாளையக்காரன் வசத்தில் யதையுந்தன் மோதிரத்தை
யும் முத்திரையக்கொடுத்தனுப்பிவிட்டு தன்குமாரனையும் போய்வரும
டி ஆசிர்வாதம்பண்ணியனுப்பிவைத்தார் அப்படியே ரதகேசரியும்
சர்வாலங்காரமுடைய நாலுவகைச்சேனைகளுடனே ரதாரூடனாய்ப்பட்ட

ணத்தைவிட்டு விஜயபுரத்துக்குச் சமீபமாகப்போய்த் தளங்களை விட்டிறங்கினான் அதற்குள்ளே வேதாந்தகேசரியும் இது செய்தியைக்கேள்ளாக்கு மேலாயறிந்து சிலபெரியோர்களுடனே ரதகேசரிக்கெதிர்கொண்டுபோனார்.

அதுதெரிந்து ரதகேசரியும் யெழுந்திருந்து வேதாந்தகேசரிக்கு எதிர்போய் ஐய்யா நீரெனக்குப் பாட்டனாகவேண்டும அதலால் உம்மை எதிர்கொண்டுவந்தேனென்று அவருக்குத்தெண்டனிட்டு அவரை ஒருஆசனத்தின்பேரிலுட்காரவைத்து தானுமிருந்தான் அப்போது வேதாந்தகேசரி சற்றுநேரம் ஆலோசித்து அய்யங்கொண்டவனாகிரதகேசரியைப்பார்த்து அப்பா உனக்கு பாட்டனானமுறையெப்படியென்றுகேட்க அதற்கு ரதகேசரியும் அய்யாவுனதுகுமாரன் தர்பகேசரியையும மாது பெண்சாதி மரகதவல்லியாரையும ஊழியக்காரர்களையும யழைப்பித்தால அவர்முன்னிலையில் தெரியப்படுத்துகிறேனென்று சொல்ல அப்படியேயவர்களெல்லாரையு மழைப்பித்தவுடன ரதகேசரியும் பாட்டனாரைப்பார்த்து அய்யா உம்முடைய குமாரனுக்கு கலியாணம பண்ணிர்களே யந்தப்பெண்ணெங்கே அவள் பிறந்ததெவ்விடம் அவள் எங்கராசனுடையாகள் அவைகளையெல்லாஞ் சற்றே தெரியச்சொல்லவேண்டுமென்றுகேட்க அதற்குவேதாந்தகேசரியும இதென்னகாரணமோவென்று பயமும ஆச்சரியமு மடைந்து ரதகேசரியைப்பார்த்து நளினபுரமென்றொருபட்டணம் அந்தப்பட்டணத்தை யாளப்பட்டவர் தூரந்தரனென்கிறராசன் அவருடைய குமாரத்தி மதனசேனை யென்பவளை என்குமாரனுக்கு விவாகஞ்செய்வித்துக் குடும்பத்தில் வைத்திருக்குங்காலத்தில் அந்தப்பெண சமசாரவாழ்க்கையில் கவனமில்லாமல் எந்தவேளையிலும் தோழிமார்களுடன் விளையாடியிருப்பதைக்கண்டு யவள்மாமியார மனம் பொறுமலதன் பிள்ளையையழைத்து நீ உன பெண்சாதியிடத்தில் பேசவேண்டாமென்று கட்டுபண்ணி யவளைவேறொரிடத்தில் நாறுபேர் ஊழியப்பெணகளையும நாற்பேர்காவற்காரரையும வைத்திருக்க எப்படியோ அந்தப்பெண ஐந்துமாதங்கெர்ப்ப முண்டாயிருக்கிறதென்றுசொன்னாகள் அதுகேட்டவுடன இலைப்பழுப்பானாலுங் குலப்பழி யாகாதே உலைவாயமூடினாலும் ஊர்வாயை மூடலாகாதே யென்று மனங்கலங்கி யந்தப்பெண்ணையழைத்துக் கண்ணைக்கட்டிக் காட்டிற்குப்போய்விட்டுவிடக்கட்டளையிட்டேனென்று சொல்ல ரதகேசரிதகப்பனுகிய தர்பகேசரியும் புத்திரனைப்பார்த்து அப்பா நான் முன்பு ஒருபட்டணத்தைநோக்கி சிலசேனைகளுடனே பிரயாணப்பட்டுப்போகும்போது என பெண்சாதியை நினைத்துக்கொண்டு ஓர்இடத்தில என்சேனைகளை நிறுத்தவிட்டு என்பெண்சாதி யிருக்குமிடத்திற்குப் போமபடி ஓர்வழி யுண்டபண்ணி அதுவழியேபோய் அவளைகூடியனுபவித்து மறுபடியும அந்தவழியை யடைத்துப்போட்டு தன சேனைகளோடே வந்து சேர்ந்துகொண்டு முன் குறித்தப் பட்டணத்திற்குப்போய் அந்தகாரியந்தனைதமைறவேற்றிக்கொண்டு மறுபடியும் பட்டணத்திற்குவந்து விசாரிக்குமு அளவில் அவள சோரம்போய் ஐந்துமாதமாய்கொப்பமா யிருந்தாள அ

தைமாமனார்மாமியாரறிந்து கண்ணைக்கட்டிச்சாட்டிக் கொண்டுபோய்
விட்டுவிடக் கட்டளையிட்டார்களென்று சொன்னார்கள்

அதைக்கேட்டு மகா துக்காசகிரந்தனாய் அன்றுமுதல்யின்றைவரைக்
கும் ஒருவருடனுஞ்சொல்லாமல் குற்றமில்லாதவளென்று மதன
சேனையை நினைத்து கிலேசப்பட்டுக்கொண்டு ஓர்பார்ப்பினி உப்புக
ண்டம்திருடின கதைபோலென்று உலகத்தார்சொல்லுஞ் சொல்லுக்கு
உவமையாக ஒருவரோடும்வாய்விட்டுச்சொல்ல யிடமில்லாமல் மனங்
கலங்கிக்கொண்டு அந்தமான காட்டில்விட்டுவிட்டார்களே ஐயமெ
ன்னமாய்ப்பயந்து நிற்கின்றாளோ எப்படியலைகின்றாளோ எந்தக்காட்
டானை சிங்கம் கரடிபுலிகள் விழுங்கிப்போட்டனவோவென்று நினைத்
து எந்நேரமும் மனோவியாகுலமாய்த் தேடித்திரிகின்றேனென்று மி
குந்த துன்பமாகச்சொல்ல அதைக்கேட்டு ரதகேசரியும் பிதாவைப்பார்
த்து ஸ்திரீ அத்திதோஷம்பொல்லாதென்று சாஸ்திரங்களிலுமென்ணிடபாராமல
காட்டிலோட்டிவித்ததென்னவென்று கேட்க அவ்வார்த்தையைக்கே
ட்டு வேதாங்கசேசரியும் மரகதவல்லியாரும் அப்பா நமது ராசவமிச
த்திற்கு அவமானம்வருமேயென்று செய்தோமென்றுசொல்ல அதற்கு
ரதகேசரியும் பாட்டனைப்பார்த்து ஐயா உமது மருமகள் மதனசேனை
யிருக்கின்றாள். நீங்களெல்லாரும் எங்கள்பட்டணத்திற்குவரவேண்டு
மென்றுசொல்ல அதனைக்கேட்டவர்களெல்லோரும பிரயாணப்பட்டு
வந்தார்கள் அதுசெய்தியை சர்வேஸ்வரராசனறிந்து சகலமேளவாத்
தியத்துடனெதிர்கொண்டுபோய் யழைத்துவரும்படி மந்திரியையனு
ப்பிவிட்டு பட்டணத்தையும மாவிலைத்தோரணங்கட்டி அலங்கரிக்கு
ம்படி திட்டம்பண்ணினார் அதிலே ரதகேசரியும் சகலமேளவாத்திய
ங்கள் தாம்தாமென்று முழங்கத்தக்கதாக தன் பாட்டன் பாட்டிமுத
லான சகலசேனைகளுடனே மகாவைபவமாய்க்கொலுச்சாவடியில் வந்தி
றங்கி அவர்களையெல்லாம் அங்கே நிறுத்திவிட்டுத் தெண்டனிட்டு
தானபோனது மவ்விடத்தில் நடந்ததும சவிஸ்தாரமாகச்சொல்லவது
கேட்டு சர்வேஸ்வரராஜனுஞ் சந்தோஷப்பட்டு பிள்ளையை யெடுத்து
மடிமேல்வைத்துக்கொண்டு வேதாங்கதேசரிமுதலானபேர்களையும் அ
ழைப்பிக்க அவர்களெல்லோரும்வந்து சர்வேஸ்வரராசனைக்கண்டு ஓ
ராசவல்லபா நீங்களென்னுடையகுற்றத்தை பொறுத்தருளவேண்டு
மென்று தெண்டனிட்டு நிற்கிறார்களது கண்டு சர்வேஸ்வரராசனுமெ
ழுந்திருந்து அவர்களைத்தழுவிக்கொண்டு அவர்களுக்கெல்லாம் ஆச
னங்கொடுப்பித்து அவர்களையுட்காரச்சொல்லி கட்டளையிட மரகதவ
ல்லியாரும் ராசாவைக்கண்டு அண்மனைக்குள்ளேபோயிருந்தாள் இப்ப
டியிருக்குங்காலத்தில் ரதகேசரியுந் தன்னை வளர்த்தபிதாவைப் பார்
த்து ஐயா என்தாயாகிய மதனசேனைமோகனாள் வீட்டிலிருக்கிறு
ளவளை யிங்கே அழைப்பிக்கவேண்டுமென்றுசொல்ல அப்படியே நல
லதென்று மந்திரியாகிய மரகததேவனையழைத்து ஓ மந்திரி சீக்கிரத்
திற்போய் மோகனாளையும் அவள்வீட்டிலிருக்கிற மதனசேனையையும
ஆதிதேவியென்னும் பருத்துவசசிங்கிவிளையும் அழைத்துவாவென்று
சொல்ல ஆயபந்திரியும அப்படியேபோய் மதனசேனையை தண்டிகை

பின்மேல் வரவழைத்துக்கொண்டு மற்றவர்களையும் அரசனுக்கினைப்படியே அழைத்துவந்தானது கண்டு சர்வேஸ்வரராசனும் மதனசேனையைப்பார்த்து அம்மா உன்பேரென்ன உன்புருஷன்யார் நீ இந்தமோகனுள்வீட்டிலவந்த வாலாரென்ன இவையெல்லாமொன்றுமொளியாமல் சகலருமறியத்தக்கதாகச் சொல்லவேணுமென்று கேட்டான்.

அதுகேட்டுமதனசேனையும் மகாசந்தோஷத்துடனே பெருவிரலைப்பார்த்துக்கொண்டு ஐயா நான் களிங்கபுரத்துத் துரந்தரராசனுடைய மகள் என்பேர் மதனசேனை என்தகப்பன விசயபுரத்து ராசகுமாரனுக்கு என்னைபாணிக்கிரகணஞ்செய்துக்கொடுத்தார் நான மாமியார்வீட்டில்வந்தும் வேலைசெய்யாமல் என்தாய்வீட்டைப்போல் செல்வமாக விளையாடிக்கொண்டிருந்ததைகண்டு என்மேற்கோபமாய்தன்மகனை அழைத்து என்னிடத்தில பேசவேண்டாமென்று திட்டம்பண்ணி என்னை சிறையிலவைத்திருந்தாளப்படியிருக்க ஒருநாள் என்புருஷனெப்படியோ என்னிடத்தில்வந்து கூடிப்போனார் பின்பு ஒருநாள் கெர்ப்பமானதுதெரிந்து என்னை கண்ணைக்கட்டி காட்டிலோட்டிவிட்டார்களென்று விபரமாகச்சொல்லி அதன்பிறகு நான வனாந்தரமானகாட்டில் பரதவித்து நின்றதும் காட்டைவிட்டு கடலைவெளிச்சங்கண்டு மயானத்திற்கு வந்ததும் அங்கேமோகனுள்வந்து தன்னைகட்டிக்கொண்டழுது தன்மகளென்று நினைத்து வீட்டிற்கழைத்துவந்ததும் நான் பிள்ளைபெற்றதும் அப்பிள்ளையைக்காணாமல் மருத்துவக்கிழவியைப் பார்த்து பிறந்தபிள்ளை பெண்ணேயென்றுகேட்டதும் அது இறந்துவிட்டபடியால் எடுத்துக்கொண்டுபோய்புதைத்துவிட்டேனென்றுமருத்துவக்கிழவிசொன்னதும் தானவீட்டிலிருந்ததும் ராசகுமாரன் தான்சேரவேணுமென்று விரும்பிவந்ததும் மறுபடிவந்துவிட்டதும் சவிஸ்தாரமாகச்சொல்லினுளவைகளையெல்லாம் ரதகேசரி விபரமாகக்கேட்டுக்கொண்டு அங்கிருந்தவர்களைப்பார்த்து நீங்கள், இந்தமதனசேனை சொன்ன வார்த்தைகளை நன்றாய்க்கேட்டீர்களோவென்று சொல்லிமதனசேனை புருஷனாகிய தர்மகேசரியையழைத்து ஐயா நீரும் நடந்தசெய்தியை ஒளியாமல சொல்லவேண்டுமென்றுசொல்ல அதற்கு தர்மகேசரியும் ரதகேசரியைப்பார்த்து அப்பா சிலநாளைக்குமுன் என் தாயாராகிய மரகதவல்லியும என்னை யழைத்து உன்பெண்சாதியானவள் என்றிட்டப்படி நடவாமல் தாய்விட்டுப்பெண்போல் விளையாடிக்கொண்டிருக்கிறாள்.

அதனாலவளிடத்தில் சிலகாலம் பேசாமலிருவென்று திட்டம்பண்ணியிருந்தாள் நானும் தாய்சொற்றுரந்தால்வாசகமில்லையென்னும்பழமொழிப்படி என்தாய்சொற்கடக்கநடவாமலிருந்தேன் அதனாலாரும்

தனியேயொரு அரண்மனையில் நூறுபேர் ஊழியப்பெண்களுடனே என்
பெண்சாதியைச் சிறைபாகவைத்து வாசற்படியில் நூறுபேர்காவற்கா
ரரையும்வைத்துதிட்டம்பண்ணியிருந்தானப்படியிருக்குங்காலத்தில்
சிலநாள்பொறுத்து நாகலாபுரிக்குப்போகிறபோதுநான் ஒருவருக்குந்
தெரியாமல்நிலவறையுண்டுபண்ணி அந்நிலவறைவழியாகப்போய்என்
பெண்சாதியுடனேகூடி சுகமனுபவித்துவிட்டுமறுபடியு மவ்வழியை
மூடிவிட்டு நாகலாபுரிக்குப்போய் அவ்விடத்துக் காரியங்களை நிறைவே
ற்றிக்கொண்டுவந்துஎன் தாயாரைக்கண்டு அம்மா உன்மருமகளெங்கே
யென்றுகேட்க அதற்கென்தாயாரும் அப்பா நானத்தனை காவலில்வை
த்திருந்தும் அவள் ஐந்துமாதம் கெர்ப்பமாயிருந்தாளதையறிந்து உன்
தாய்தகப்பனிடத்தில் ஆலோசனைசெய்து விபசாரத்தனம்பண்ணிகெ
ர்ப்பமுண்டாயிருக்கிறவளை வீட்டில்வைத்திருந்தால் சூரியசந்திராளுள்
ளபரியந்தம்நமதுகுலத்திற்கு பழிச்சொல்வருமேயென்று துணிந்து இர
ண்டுகண்களையுங்கட்டி காட்டில்கொண்டுபோய்விட்டுவிடக்கட்டளையி
ட்டோமென அச்செய்தியைக்கேட்டெனக்குமிப்படிப்பட்டவிதியிருந்த
தாவென்று எனக்குள்ளே துக்கப்பட்டு நாம்நமதுபெண்சாதியிடத்திற்
குப்போய்கூடினநாள்முதல்கெர்ப்பமானது போலிருக்கிறதுஇதுசெய்தி
நமதுதாய்தகப்பனும் அறியமாட்டார்களே நாமும் சொல்லாமற்போ
னோமே இனியென்னசெய்யலாமென்று அதிகதுக்காக்கிராந்தனாய் இன்
றுகாட்டிலேபோனவளைமிருகங்கள்கொன்றுவிட்டனவோவென்றுகோ
விசனமாய்ஆகாரநித்திரையில்லாமலிருக்கிறேனென்றுசொன்னானதற்
குரதகேசரியும் அங்கிருந்தவர்களைப்பார்த்து ஆ ஆ நீங்களெல்லோரும்
நன்றாய்க்கேட்டீர்களாவென்று எச்சரிக்கைபண்ணி பாட்டியாராகிய
மரகதவல்லியையழைத்து உன்மருமகள் உனக்காகாமலிருந்த செய்தி
யைச்சொல்லென்றுகேட்க அதற்குமரகதவல்லியும் அப்பா என்குமார
ன்தர்மகேசரிக்குமதனசேனையைவிவாகம்பண்ணியிருக்கையில் அவள்
கொஞ்சமாகிலுமமாமியாரென்கிற மரியாதையில்லாமல்நடந்துவருவா
ள்அதனால்நான்கோபமாய்என் குமாரனையழைத்து அவளுடனொருச
ங்கதிகளும்பேசவொட்டாமல்திட்டப்படுத்தி அவளுக்குவேறொருஅ
ரண்மனைகட்டுவித்து அவ்வரண்மனையில் அவளை சிறைவைத்திருந்தே
னப்படியிருக்கஐந்துமாதங்கெர்ப்பமென்று தாதிகள்சொல்லக்கேள்விப்
பட்டு என்குமாரன்போயிருந்தசெய்தி எனக்குந்தெரியாதபடியினால்
அவள் விபசாரத்தனம் பண்ணினாளென்றுநினைத்துஎன் புருஷனுக்கு
த்தெரிவித்துஅவள்கண்ணைக்கட்டி காட்டில்கொண்டுபோய் விடும்படி
செய்தேனென்றுசொன்னாள் அதுகேட்டுரதகேசரியும் மோகனையென்
கிறதேவடியாளையழைத்துநீநடந்தசங்கதியெல்லாமொன்றுமொளியாமற்சொ

ல்லென்றுகேட்க அதற்கவளும் ஓசுவாமியென்மகள்காமியென்பவள்ஐந்துமாதங்கெற்பமாயிருந்துமசுதியிலக்கெற்பம் பின்னிடைந்துஅதனுல்ஜன்னிகண்டுமரித்துப்போக அவளையெடுத்துக்கொண்டுபோய்தகனமபண்ணிவந்தபின்பு அன்றிராத்திரி யென்மகளாசையினுல் சபத்தைய திரும்பப்போய் பார்த்துவருவோமென்று சுடுகாட்டுச் சமீபமாய் போகையில் இந்தமதனசேனையைக்கண்டு என்மகளுடையரூபலாவண்ணியமும்மிருதுவானவசனமும் ஒத்திருந்தபடியால் இவளைக்கட்டியணைத்து முத்தமிட்டுக்கொண்டு எனதுதுக்கத்தைப்பார்த்து மகளைமறுபடியும் சுவாமிபறப்பிவிட்டாரென்று சந்தோஷமாய் விட்டுக்கழைத்துவந்து மேற்படி கெற்பம்வெளிபானபிறகுநமது சிவனத்துக்கு யிடம்பண்ணிக் கொள்ளலாமென்றுநினைத்து மதனசேனையைப் பார்த்து அம்மாநீபிரசவித்தபின்பு நல்லபுருஷனைச்சேர்த்து திரவியஞ்சம்பாதிக்கவேண்டுமென்றுசொன்னதற்கு மதனசேனையும் அம்மா நான்யமபுரத்திற்குப் போயிருந்தவிடத்தில் யமதர்மராசனென்னைப்பார்த்து இன்னம் மாயுசுயிருக்கின்றதுபூலோகத்திற்குப்போய் பன்னிரண்டு வருடபரியந்தம் ஒரு புருஷர்முகம்பாராமல் விரதம்பண்ணிக் கொண்டிருக்கவேண்டும அப்படிச்செய்யாமல் வசக்கப்பிடேந்தால் தலைவெடித்துச் சாவாயென்று சொல்லியிருக்கிறுனென்று சொன்னதைக்கேட்டு சந்தோஷமென்று வளைஒருநிலவறையில்வைத்து வளர்க்கபிரசவேதனையாயிருக்கிற சமையத்திலமருத்துவச்சியையழைத்து பிள்ளைபிறந்தால் நமதுபிழைப்புக்கு பின்னமுண்டாகும் பெண்பிறந்தால் மேலுதொழிலுக்கு சாதகமாயிருக்கும் ஆகையினுல் பெண்ணானால் வைத்துக் கொள் பிள்ளையானால் கொன்றுபோடென்று உக்கிரவு பண்ணியிருந்தே னப்படிமருத்துவச்சியும் ஆண்பிள்ளை பிறந்ததாகவுங்கொன்று புதைத்துவிட்டதாகவுஞ் சொன்னுளென்றுசொல்லஅவைகளெல்லாம் ரதகேசரிகேட்டுஅங்கிருந்தவர்களைப்பார்த்து நீங்களெல்லாருங் கேட்டீர்களாவென்று எச்சரித்துக்கொலோவளாத்த சர்வேஸ்வரராசனைப்பார்த்து ஐயாநான் பிறந்ததென்ன நட்சத்திரமென்னவென்றுகேட்கஅதுகேட்டுச் சர்வேஸ்வரராசனும் அச்சபையாரைப்பார்த்து சகலமானபேருங் கேளுங்கள் நான்ஒருநாளிராத்திரி ௰ நாழிகைக்குமேல நகர்சோதனைவரும்போது ஆரைச்சுவரிலேருமாய்சாலவாசலில குழந்தையழுகிறசத்தங்கேட்டுக்குழந்தையைப்போய்பார்த்தெடுத்துக்கொண்டுவந்துநமதுபத்தினிகையிலகொடுத்துவளர்க்கச்சொன்னேனவளிக்குழவியைக்கண்டவுடன்பிள்ளையில்லாதவளாகையால் மகாவபேட்சையாய்வாங்கிபிள்ளையைப்பார்க்கினுமதிகப்பிரியமாய் வளர்த்தாளென்று சொல்ல அப்போ இச்சந்நிதியிலிருந்த சபையிலுள்ளவர்கேட்டு ஆச்சரியப்பட்டார்கள

பென்பவனால் வேதாங்கதகேசரியினுடைய வம்சமுழுதும்பிரகாசமடைந்ததென்று தேவர்களெல்லாம் சலசலவென்று புஷ்பவருஷம்சொரிவித்தார்களதன்பின்பு ரதகேசரியும் எழுந்திருந்து பட்டனாகிய வேதாங்கதகேசரிக்கும் பாட்டியாருக்கும் தகப்பனருக்கும் வளர்த்தபிதாவாகிய சர்வேஸ்வரராசாவுக்கும் தாயாரைவைத்து சம்ரட்சணைசெய்த மோகனனுக்கும் மாதக்கவக்கிழவிக்கும் தாயாராகிய மதனசேனைக்கும் சாஷ்டாங்கதெண்டன்பண்ணி கைகட்டிக்கொண்டு நின்றான் அப்போது மதனசேனையும் புத்திரனாகிய ரதகேசரியை, அப்பாபுத்திராவென்றெடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு மார்போடணைத்துஉச்சிமோந்து கன்னத்தில் முத்தமிட்டுக்கொண்டு அப்பா நீசேற்றிலே செங்கழுநீர் பூத்ததுபோல என்வயிற்றில பிறந்தபடியினாலே எனக்கு பதிவிரதாதர்மமும் உன் தகப்பனுடைய வம்சத்திற்கு கீர்த்திபிரதாபமும் உண்டாயின உன்னை வளர்த்தெடுத்த சர்வேஸ்வரராசனுடைய அருமை பெருமையும் இந்தசபையில் சகலமானபேர்களுக்குந்தெரியலாயின ஆதலால் சகலசனங்களையும் சம்ரட்சணை செய்துக்கொண்டு தீர்க்காயுசாய் சகலசம்பிரமத்துடனே பல்லாண்டு பல்லாண்டாய் வாழக்கடவையென்று வாழ்த்தினாள் சர்வேஸ்வரராசனும்அப்பொழுதே ரதகேசரிக்கு விவாகமுடித்துவைக்கவேணுமென்றுஉத்தேசித்து மிதிலாபுரிபட்டணம் பிரமதேவராசனுடைய குமாரத்தியாகிய சந்திரரேகையைக்கலியாணம் பண்ணுவித்து தன்னுடைய பட்டணத்தையும் அவனுக்கே பட்டங்கட்டுவித்தார் பிறகு ரதகேசரியும் மகாசம்பிரமத்துடனே இரண்டு பட்டணத்திற்கு மரசனாயிருந்து ராசநீதிவழுவாமல் ராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தானென்றுசொல்ல.

சேலைசொல்கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கனும் மகாசந்தோஷப்பட்டு பேசாமடந்தையுடுத்தியிருக்குஞ் சேலையைப்பார்த்து வேதாளத்தை யதனுள்ளேபோயப் பிரவேசிக்கச்செய்து இந்தப்பேசாமடந்தைதான் பேசகிறதில்லையே இனியாகதைசொல்லப்போகிறார்கள் நீயாகிலும் ஒருகதைசொல்லென்றுகேட்க அந்தச்சேலையும் விக்கிரமார்க்கனைப்பார்த்து ஐயா இந்தப்பெண்ணானவள் தன்னுடைய யிடுப்பில் என்னையுறான்றுசுததாய் வருத்திக்கட்டியிருக்கிறாள் இவளுக்கு உட்பாவாடையுமில்லை இப்படி நானிருக்கிற வருத்தத்தைப்பாராமல் நீ எப்படி கதைசொல்லச்சொல்லுகிறீரென்று சொல்ல அதுகேட்டு பேசாமடந்தையும் இதுவென்ன விபரீதகாலம் நேரிட்டதென்று பயந்துநடுங்கி உடுத்தும்வஸ்திரமே பாம்பாய்க்கடிக்குமென்கிற உலகவார்த்தை நமக்கு மெய்யாயிற்றென்று வெட்கப்பட்டு வேறே ஒரு சேலையை உடுத்திக்கொண்டு அந்த சேலையை யவிழ்த்தெறிந்துவிட்டாள் அந்த சேலையும் விக்கிரமார்க்கராசாவைப்பார்த்து ஐயா நீர் என்னை ஒருபொருளாக வெண்ணிக்கதைசொல்லச்சொன்னீர் ஆகிலும் எனக்கு தெரிந்தகதையைச் சொ

ல்லுகிறேன் நீர்சாவதானமாகச் சற்றேசெவிகொடுத்துகேளும் அக்கதையென்னவென்றால் மல்லிகார்ச்சுனமென்றொருபட்டணமுண்டு அந்தப்பட்டணத்தையாளப்பட்ட பல்லவராயனென்றொருராசனுண்டு அந்தராசனானவன் பிள்ளையில்லாமல் வெகுநாள் தாபந்திரியப்பட்டுப் பகவானை நோக்கி தபசுபண்ணுகையில் அப்போது பகவானும் அவருடையதபசுக்கிரங்கிப் புத்திரனுண்டாகும்படி வரங்கொடுத்தருளினார் அதுகெர்ப்பமாய் அவரது பத்தினியாகிய ..த்தினியினுடைய வயிற்றில் இரட்டைப்பிள்ளைபிறந்தது அதுகேட்டு ராசாவும் மகாசந்தோஷித்தனாய் அந்தப்பிள்ளைகளை நாளொருமேனியும் பொழுதொரு வர்ணமுமாக வளர்த்து ஒருபிள்ளைக்கு அட்சயகேசரியென்றும் ஒருபிள்ளைக்கு சத்தகேசரியென்றும் பெரியோர்களாகிய பிராமணர்களால் நாமகரணமிட்டு பிறகு அந்தபிள்ளைகளுக்கைந்துவயதானபின்பு பள்ளிக்கூடத்திலவைத்துச் சகலவித்தியாப்பியாசமுஞ் செய்வித்துச் செல்வத்துடனே வளர்ந்துவந்தார்கள் அந்தபிள்ளைகளுக்கு நாளுக்குநாள பூரணசந்திரனைப்போல விருத்தியடைந்து சகலசாஸ்திர சம்பன்னராய் பதினாறுவயதுள்ள பாலகுமாரரானார்கள்.

அப்படியிருக்குங்காலத்தில் அந்தபல்லவமகாராசாவின் இளையபத்தினியாகிய மந்தாகினியென்பவளுக் கைந்துமாதங்கெற்பமுண்டாயிற்று அதையறிந்து அந்தமந்தாகினியும் நமதுவயிற்றிலிருக்கின்ற பிள்ளை ஆணாகப்பிறந்தாலந்தபிள்ளைக்கு பட்டமில்லாமல் போகிறதே நமது சக்களத்திபிள்ளைகளுக்கல்லவோ பட்டங்கிடைக்கும் ஆதலால் இந்தயிரண்டுபிள்ளைகளையுங் கொன்றுவிட்டால்நமதுபிள்ளைகளுக்கே பட்டம்வருமென்று ஆலோசித்துபுருஷனுந்தானுஞ் சையோகமாய்க்கேளியனுபவிக்குங்காலத்தில்புருஷனைப்பார்த்து சுவாமிநீர்சுகமாயிருக்கும்பொழுதே பருவத்திற்பிறந்தபிள்ளைக்கு இளவரசுபட்டங்கட்டிக்கண்ணாரப்பார்க்கவேணும் இந்தசரீரம் நீர்மேற்குமிழிபோல் நிலைமையையுடையதென்று பெரியோர்கள் சொல்லியிருப்பதல்லாமலும்சாட்சிபுராணத்திலுங்காண்கிறோமாதலாலிந்தட்சணமே என்சக்களத்திப்பிள்ளையையழைத்து மூத்தவனாகிய அட்சயகேசரிக்குப்பட்டங்கட்டிவைத்து இளையவனையும்என்னிடத்தில்தானேயிருக்கச்சொல்லவதைக்கேட்டுதராசனும்சந்தோஷித்தனாய் அப்படியேசெய்கிறேனென்றுசொல்லிப்பிற்பாடு அட்சயகேசரியையும்அழைப்பித்துஅப்பாநீங்கள்உங்களுடையசிறியதாயாராகியமந்தாகினிசொன்னபடியேகேட்டுக்கொண்டிவ்விடத்தில்தானே சுகமாயிருங்களென்று சொல்ல அதுகேட்டு அப்படியே நல்லதென்று அந்தஇரண்டுபிள்ளைகளுஞ்சிறியதாயாரிடத்திற்குப் போய்ச்சாஷ்டாங்கதெண்டனிட்டுநின்றார்கள் அவர்களையும்மந்தாகினியும் அதிகவிருப்பமுடையவளைப்போலே வாரியெடுத்துமார்போடணைத்து கன்னத்தில் முத்தமிட்டு அப்பா நீங்கள் பட்டங்கட்டிக்கொண்டு தீர்க்காயுசாய் வாழ்ந்திருங்களென்றுசொல்லி பிற்பாடு மூத்தவனாகிய

அட்சயகேசரியைப் பார்த்து அப்பா நீஉன்தாயார் பேச்சைக்கேளாமல்நான் சொன்னபடிகேட்டுக்கொண்டிருந்தால் உனக்கேபட்டமுங்கட்டிவித்துவிவாகஞ்செய்கிறேனென்று சொல்லஅப்படியேநல்லதுகாயே என்றுசிலகாலமிருந்தபொழுது அந்தபட்டணத்திலிருக்குமவாசுதேவரென்கிறஒருபிராமணோத்தமர் தினந்தோறும் வந்துஅந்தபிள்ளைக்கு அட்சதை கொடுத்துஆசிர்வாதம்பண்ணிப்போவார் யிப்படி யிருக்குநாளில் ஒரு நாளந்தபிராமணரும் அந்தராசகுமாரர்களையழைத்துஅப்பாநானுங்களுக்கு ஒருபதேசஞ் செய்கிறேன் யிவ்வுபதேசத்தின்படி நடப்பீர் உங்களுக்கு அஷ்டஅயிஸ்வரியமும் திர்க்காயுசுமுண்டாக்குஞ்சகலஆபத்துகளும்விலகிப்போம்நீங்கள் ஒருவரைவிட்டொருவர் பிரிந்திருக்கவேண்டாம்சகாபியைசாப்பிட்டபோதிலும அணுவளவாவது தவ்புகாகத்திற்குக்கொடுத்துப்பிறகுநீங்கள் சாப்பிடுங்கள்ஒருவராய்த்தனிவழி போகவேண்டாமென்று உபதேசித்தருளினார்,

அன்றுமுதல் அத்வேமந்திரமாகக்கொண்டு நடந்து வருகையில் ஒருநாள் மந்தாகினியும் அவர்களையழைத்து அப்பாநீங்கள்கார்க்கோடகன்வனத்திற்குப்போய் நான்விளைபாடுதற்கு ஒருகவரிமான் பிடித்துக்கொண்டுவந்து தரவேண்டுமென்றுசொல்ல அதுகேட்டு அவர்களிருவருமப்படியேகொண்டுவந்து தருகிறோமம்மாவென்று சொல்லிச்சகல ஆயுதங்களையு மெடுத்துக்கொண்டு அப்பொழுதே பிரயாணப் படுகையில்அப்பாநீங்கள்பசியாய் போய்வரமாட்டீர்கள்கட்டமுதுகட்டித்தருகிறேனதையெடுத்துக்கொண்டுபோய் ஒருவருக்குங்கொடாமல் பத்திரமாய்வைத்துக் கொண்டு கவரிமானகப்பட்டபின்பு இந்தக்கட்டமுதை சாப்பிட்டு ஆயாசந்தீரசற்றுநேரம் இளைப்பாறியிருந்துவாருங்களென்று உபசாரமாகச்சொல்லிஅந்தக் கட்டுசாதத்தில்வசநாபியைக்கலந்துகட்டிக்கொடுக்கஅதையவர்கள்களங்கமில்லாமல்மெய்யென்றுவாங்கிக்கொண்டுகார்கோடகவனத்திற்குப்போய் அக்கவனமுழுதும்சுற்றியலைந்து கவரிமானைக் கண்டுபிடியாமல்வெசாரிபோய் குடிக்கத்தண்ணீர்கிடையாமல எங்குந்தேடிஒருமலையிலுள்ள சுனையைக்கண்டுபிடித்து அந்தகட்டுசாதத்தையவிழ்த்துப் புரோகிதருபதேசப்படி ஒருபிடிசாதத்தையெடுத்துக்காகத்திற்குமுன்னேவைத்தார்கள் அந்தசாதத்தைக்காகமானதுசாப்பிட்டவுடனே கிறுகிறுவென்று சுழன்றுவிழுந்திறந்து விட்டது அதைக்கண்டந்த யிரண்டுபிள்ளைகளும்ஒருவரையொருவர்பார்த்துநம்முடையசிறியதாயார் செய்தனுப்பினசாபினைநமக்குதெரியாமற் போய்விட்டதல்லவா நாம் இனிமேல் பட்டணத்திற்கு போனால்கட்டுசாதத்தில்வசநாபிகலந்திருந்தசெய்தியை நாம்தெரிந்துகொண்டோமென்று ஆலோசித்து எத்தவிதத்திலும் நம்மை கொல்லுகிறதற்கேஎத்த

ளைப்பண்ணுவார்களைநம்பிராவாகிய பல்லவருசாவும்இளையபெண்சாதி மோகத்தில் அவளைசொல்லியே முச்சியமாகக் கேட்டு நடப்பார் ஆகையினால்நாம் எங்கேயாகிலும்போய் பிழைப்போமென்று நடக்கும்போது அவர்களிருவரும்பசிதாபத்தினால் மூர்ச்சையடைந்தொருவடவால விருட்சத்தின் நிழலிற்போயிருந்தார்கள்,

அப்போது அட்சயகேசரியும் இளைப்படைந்து சத்த கேசரியின் மடியின்மேல்தலையைவைத்துக்கொண்டு நித்திரைபண்ணினான் அந்த ஆலவிருட்சத்தின்மேற் சொர்ண பட்சிகளானவை ஆணும்பெண்ணுமாய்கூண்கட்டிக்கொண்டு வெகுநாளாயிருந்தன அந்தப் பட்சியின்பிரசைசாப்பிட்டவனுக்குநகைக்கும்போதெல்லாம் வாயிலிருந்து மாணிக்கங்கள விழும் உடலை சாப்பிட்டவனுக்கு மகத்தாகிய போகபாக்கியஙகள் உண்டாகும் அந்தமகிமைதெரிந்து இராகவ னென்கிற ஒருவேடன் நெடுநாளாய் யந்தப்பட்சியைப் பிடிக்கிறதற்கு கன்னிவைத்து இடைவிடாமல்காத்திருந்து அன்றையதினம் வீட்டுக்குப்போய்ச்சாப்பிட்டுவர வேண்டுமென்றுபோனான் அந்தசமயத்தில் அந்தபட்சியிக்கன்னியிலகப்பட்டு அந்த கன்னியைச் சுற்றிக்கொண்டுபூமியில்விழுந்தது அதைசத்தகேசரிகணடுபட்சியைமாத்திரம்பிடித்து துப்பட்டிக்குள் மறைத்துவைக்கையில் அந்தவேடனும் மகா அபேட்சையாய் வந்துபார்த்தான் வைத்துப்போன கன்னியைக்காணமல் வெகுதாபந்திரியமடைந்து அய்யோநான் பத்துவருஷமாகக்காத்திருந்தும் வீணாய்ப் போய்விட்டதென்றுபுலம்புகிற அந்த வேடனைச்சத்தகேசரியும் அழைத்து அடாவேடா நீயேன்இப்படிபுலம்புறாயென்றுகேட்க அவனும்சுவாமிநான பத்துவருஷமாய் ஒருபட்சியைப்பிடிக்க கன்னிவைத்து காத்திருந்தேனது யின்றைக்குக கன்னியிலகப்பட்டு அந்த கன்னியையும் தூக்கிக்கொண்டு பறந்துபோய்விட்டதையா வென்றுசொல்லஅதுகேட்டசத்தகேசரியும் அடாவேடா நீபத்துவருஷமாய் காத்துக்கொண்டிருந்தாயே அந்தபட்சியிடத்தில் என்னமகிமை யென்று கேட்க சுவாமி அந்த பட்சியின் பிரசைசாப்பிட்டவர்கள்நகைக்கும்போதெல்லாம் வாயிலிருந்துமாணிக்கங்கள்விழும் உடலைசாப்பிட்டவர்கள் ராசபோகங்களை அனுபவிப்பார்கள் ஆகலால்தான் தாபந்திரியப்படுகிறேன்எனக்குப்பிராபதியில்லாமற்போய்விட்டதென்றுஅழுதுக்கொண்டுபோனான் அவன் போனவுடனே அட்சயகேசரியும்நித்திரைவிட்டெழுந்துமகாசந்தோஷமாய் சத்தகேசரியைபார்த்து அப்பா தம்பி சூரிய வம்சமானவேளையாகின்றசேதரமின்னேரம் மென்னை யெழுப்பாமல் சிறுபிள்ளை புத்தியாயிருந்துவிட்டாயே இம்மரத்தின் கீழ் நம்மிருவருடையகாலடிமாத்திரந்தானேயிருக்கவேண்டும அப்பா வேறெசெருப்பு காலடியாயிருக்கின்றதிது யேதென்னவென்றுகேட்க அவனு நீர்த்திரை பண்ணின

வேளையில்ஒருசொர்ணமேகபட்சி என்னிடத்திலகப்பட்டு என்முன்னிருந்தது அதைகொண்டுபிடித்து பத்திரப்படுத்தி வைத்தேன் பின்பாடு அக்கன்னியைவைத்திருந்த வேடன்வந்து இப்படியெல்லாஞ் சொல்லி யமுநானென்று அம்மகிமைகளைச்சொல்லி அப்பட்சியைக்காட்டினானதுகேட்டு அட்சயகேசரியும் மகாசந்தோஷத்துடனே தம்பியுந்தானும் அவ்விடம்விட்டுப்புறப்பட்டு அப்பால்ஓரிடத்திற்குபோயிருந்து அப்பட்சியைச்சுட்டு மூத்தவன் இளையவனைப்பார்த்து தம்பி எனக்கு தாகமாயிருக்கிறது தண்ணீர்வேண்டுமென்றுசொல்ல அப்படியேகொண்டுவந்துதருகிறேன்நான்வருகிறமட்டும் இவ்விடத்தில்தானேயிருமென்றுசொல்லி ஒருசொம்பையெடுத்துக்கொண்டு தண்ணீரைத்தேடிப்போனான் இப்படியிருக்க யமுனாபுரியென்றொருபட்டணமுண்டு அப்பட்டணத்தையாளப்பட்ட இந்திரசேனனென்கிற அரசன் சந்திரகுசனென்கிறமந்திரியுடனேநெடுங்காலம்ராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டிருந்து அந்தராசனுக்குபுத்திரசந்தானமில்லாமற்போனபடியால்பகவானைநோக்கிதவஞ்செய்யப்போனவிடத்தில் யிறந்துவிட்டார் அதுதெரிந்துமந்திரிமுதலானசகலமானபேர்களும் ஆலோசனைபண்ணி பட்டத்துயானையைச்சிங்காரித்துவிட்டு அது யாரையெடுத்துவருகிறதோ அவரையே அரசராக்கிக்கொள்ளுவதென்று நிச்சயித்துயானையைச்சிங்காரித்துவிட்டார்கள் அந்தயானையும் பட்டணத்தைச்சுற்றிக்கொண்டு கார்க்கோடகவனத்துக்குப்போய் அட்சயகேசரியைக்கண்டு அவனைமூன்றுதரம் பிரதட்சணம்பண்ணி அந்தராசகுமாரனையெடுத்து தன்னுடையமத்தகத்தின்மேல்வைத்துக்கொண்டு வந்துதன துதிக்கையினால் அஸ்தத்தைகமுகந்தது அதைகண்டு மந்திரி முதலானபேர்களும் எழுந்திருந்து அட்சயகேசரிக்குதெண்டனிட்டுகைகட்டி வாய்பொத்தி நின்றார்களப்போது அட்சயகேசரியும் அவர்களெல்லாரையும ஆதரணைபண்ணிமனுநீதிவழுவாமல் முன்னிலும் எண்மடங் கதிகமாய் அரசாட்சிசெய்துக்கொண்டிருந்தான்.

முன்புபட்டத்துயானை யெடுத்துவந்தபோது தண்ணீர்கொண்டு வரப்போனசத்தகேசரிதேடுவானே யென்று அடையாளமாய வருகிற வழியில்தழைகளையுருவிட்டுபோட்டுக்கொண்டேபோனார் இப்பால்சத்தகேசரியும் கண்ணீர்கொண்டுவந்து தமையனைக்காணாமல் என்னவிபரிதமென்றுசிங்காக்கிரகனாய் புலம்பிநிற்கையில் அவ்விடத்தில் யானையடியைக்கண்டு அதன்வழியேநடக்கையில் தழைகளுருவிப்போட்டிருக்கும்அடையாளத்தைக்கண்டு அதன்வழியேபோகும்போது பட்டணத்துக்குசமீபத்தில ஒருஆலவிருட்சத்தினிழலிலுட்கார்ந்து தாங்கள்பிறந்ததும்வளர்ந்ததும்சிறியதாயார்செய்ததுப்பவைகளும் கார்க்கோடகவனத்தில்அகப்பட்டு தமையனைப்பிரிந்துதான்தனியேநின்றதுமதி

னைத்து ஓ தெய்வமே இப்படியும்விதியிருந்ததாவென்று நகைத்தானப்
படிநகைத்தமாத்திரத்தில்சொர்ணமேகப்பட்சியின் சிரசின்மகிமையினா
ல்பத்துபடிமாணிக்கம்குபீல்குபீலென்று விழுந்தன இந்தவதிசயம்பக
வற்சங்கற்பத்தினால்வேடன்சொற்பலித்ததென்று அம்மாணிக்கங்களை
யெடுத்து மூட்டையாகக்கட்டி யமுனாபுரிபட்டணத்துக்கடைவீதியில்
வரும்போது அங்கேஒருகோமுட்டிமுதன்மையாகக்கடைவைத்திருந்
தான் அவனஷ்டதரித்திரனாகையால் உடுக்கவஸ்திரமில்லாமல் கந்தை
யைசுற்றிக்கொண்டு ஐந்தாறுசொத்தைப்பாக்கும்இரண்டுபடி மூசற்ப
யறும்வைத்துக்கொண்டிருந்தான் அக்கோமுட்டியைக்கண்டுஐயா நான்
சாப்பிட்டுவருகிறமட்டும இவ்வரிசிமூட்டையை பத்திரமாகவைத்திரு
மென்று மாணிக்கமூட்டையைக்கொடுத்துவிட்டு அப்பட்டணத்திலிரு
க்கும் ஒருஔவையார்வீட்டிற்குப்போய் ஒரு பணத்தைக்கொடுத்து அ
ம்மா எனக்குபசியாயிருக்கிறபடியால்சாதம்போடென்று கேட்டுச்சாப்
பிட்டு பின்புஅந்தஔவையாரையழைத்து அம்மா இந்தபட்டணத்தில்
ஏதாகிலும் அதிசயமுண்டோவென்றுகேட்க அவளும்சத்தகேசரியை
ப்பார்த்து அப்பாமற்றொரு அதிசயமுமில்லை இந்தபட்டணத் திராசன்
யிறந்துபோய்ச்சிலநாளாயின ராசனிறந்தபிறபாடுபட்டத்துயானையை
ச்சிங்காரித்துவிட்டார்கள் அந்தயானையானதுபோய்யாரோஒருராசகு
மாரனைக்கொண்டுவந்துசிங்காதனத்தின்மேல்வைத்தன அந்தராசகுமா
ரனுக்குத்தான் பட்டங்கட்டியிருக்கிறது அவர்வெளியே வருகிறதில்லை
சந்திபாயனென்னும் மந்திரிதானசகலகாரியமும்நடப்பித்துவருகிறானெ
ன்றுசொல்லஅதுகேட்டுசத்தகேசரியும் மகாசந்தோஷகரமாய் நமதுத
மையனெப்போதுவெளியே புறப்படுவரோ அப்போதுகாணலாமென்
றுநினைத்து ஔவையார் வீட்டில் தானேயிருந்தான்

அப்படியிருக்கஒருநாள் அட்சயகேசரியும் சிங்காதனத்தின்மேல்
கொலுவாயிருக்கும்போது பட்டணத்திலிருக்கப்பட்டகாரியக்காரர்வர்
த்தகர்முதலானபேர்களும் புதுராசாவுக்கு காணிக்கை கொண்டுவந்து
கொடுத்துக் கண்டுகொண்டார்கள் இச்செய்திதெரிந்து அம்மாணிக்க
மூட்டையைவைத்துக்கொண்டிருக்கிற அற்பசிரோமணியாகிய கோமுட்டி
யுந் தன்பெண்சாதியாகிய மூக்கியென்பவளை யழைத்து அடி நானும்
போய் புதுராசாவைக்கண்டு வரவேண்டும் சீக்கிரமாயெங்கேயாகிலும்
அரைபடியரிசி கடன்வாங்கிச்சமையல்பண்ணடியென்றுசொல்ல அவ
ளும் சுவாமிநமக்குயாவர்கள் அரிசிகடன் கொடுக்கப்போகிறார்கள் நம்மி
டத்தில ஆரோஒருவழிப்போக்கன் கொடுத்துவைத்த அரிசிமூட்டையி
ருக்கிறதே அதையெடுத்துச்சமைக்கிறேனென்று அம்மூட்டையைஅ
விழ்த்த மாத்திரத்தில் அவையெல்லாம்மாணிக்கமாயிருந்தன அது

கண்டு ஆச்சரியப்பட்டு தன்புருஷனாகிய கோமுட்டியிடத்திற்சொல்ல அந்த அற்பமூடனும் செலவுக்கு சிலமாணிக்கத்தை வைத்துக்கொண்டு மற்றவைகளையெல்லாம் தன்வீட்டில் ஒருகுழிபறித்து அதில்பத்திரப்படுத்திவிட்டுபத்து மாணிக்கங்கொண்டுபோய் இராசாவுக்குகாணிக்கையாக வைத்துக்கண்டுகொண்டான் இராசாவும் அற்பமூடனாகியகோமுட்டிமேல்சந்தோஷப்பட்டுச் சோடசவெகுமானமும்பண்ணி பல்லக்குங்கொடுத்துப்பட்டணச்செட்டியென்னும் பெயர்வைத்து மகா சம்பிரமத்துடனே அனுப்பிவைக்க அம்மூடனும் இராசாவினிடத்தில் தண்டிகைவெகுமானமும்பெற்றோமென்றகெர்வத்தினால் பட்டசிறுமையெல்லாமறந்துவிட்டு அரணமனைவீடு அயல்வீடு அவைகளிலிருக்கிற குடிகளையெல்லாம்துரத்திவிட்டு அவ்வீட்டையெல்லாம் அரணமனையாகக் கட்டிக்கொண்டுபட்டணத்திலிருக்கிறவர்த்தகர்களெல்லாம் கொள்ளல்விற்றல்முதலியவியாபாரங்களிலே தன்சொற்படி செய்துக்கொண்டுவர ஒருவரும்தனக்கெதிரில்லையென்று கெர்வித்திருக்கிறகாலையில் இவ்விடத்தில் சத்தகேசரியும நாம ஔவையார்வீட்டிலிருக்கிறதினால் பிரயோசனம் என்னமெதுதமையனாரும் நாமெங்கேயிருக்கிறோமென்று விசாரியாமற்போனாரே நாமாகிலுங்காணலாமென்றால் அரணமனையிலிருந்து வெளியேபுறப்படவில்லையே ஆதலால் நாமும்எல்லாரைப்போலுங் காணிக்கைகொண்டுபோய்க் கண்டுவரவேணுமென்று நிச்சயித்துக் கொண்டுகோமுட்டியைத்தேடிவருகையில் அக்கோமுட்டி வீடு காணாமலரண்மனையுமாஸ்தானமுமாயிருப்பதைக்கண்டு அங்கிருந்தவர்களைப்பார்த்துவிசாரிக்குமளவில்எங்களூரிலிருக்கிற நாட்டிராசாவும்அற்பமூடனாகிய ஒருகோமுட்டிகொண்டுபோய்க்கொடுத்தமாணிக்கத்தைக்கண்டுசந்தோஷப்பட்டு அவனுக்குவெகுமதியையளிக்க அதைப்பெற்று பட்டணத்திலுள்ளவர்த்தகர்களெல்லாரும் இவன்சொற்படிகேட்கத்தக்கதாகஅதிகாரம்பண்ணிக்கொண்டிருந்தான் இப்போது அவனைப்பட்டணசசெட்டியென்றுசொல்லுகிறதேயல்லாமல் அற்பமூடசெட்டியென்றுயாராகிலுமொருவர்சொன்னால்ஆக்கினைபண்ணிவிடுவார்களென்று சொன்னார்கள்.

அதுகேட்டு சத்தகேசரியும் நல்லதுவர்த்தகனிடத்தில் அடைக்கலம்வைத்தபொருளையெடுத்துக்கொள்ளுகிறமோவென அங்கிருந்தவர்கள் பட்டணச்செட்டியாருக்கு எப்படிச்சமதியோ அப்படிகொடுக்கும் அதற்கெதிருத்தரஞ்சொல்லத்தக்கவர்பேரில்லையென்று சொன்னார்கள சத்தகேசரியுந்திரும்பிவந்து அற்பமூடன் பெண்சாதியாகிய மூகபெண்பயலைக்கண்டு அம்மா உங்களிடத்தில் அரிசிமுட்டைவைத்துப்போனேனே அம்முட்டையையிப்போது கொடுக்கவென்றுகேட்க அம்மூக்கியென்பவள் நல்லது அரிசிமுட்டையைத் தருகிறேன் இங்கேயிருமே

ன்றுசொல்லித் தன்புருஷனாகிய அம்பலூடசெட்டிக்குச்சொல்லியனுப்பி னான் அவனும்வந்து சந்தகேசரியைப்பிடித்து ஒரு அறைவீட்டிலே அ டைத்துப்போட்டான் இப்படியிருக்க ஒருநாள் அம்பலூடசெட்டி சந் தோஷமாயிருக்கும்போது சந்தகேசரியும் செட்டியைப்பார்த்து என் னைஎன் காவலில்போட்டுக்கொண்டிருக்கிறீர் நீர்சொன்னபடி கேட்டுக் கொண்டிருக்கிறேனென்றுசொன்னான் அதற்குச்செட்டியானவன் மெ ய்தான் இவனாலென்னகாரியமாகப்போகிறது நம்முடையகையில்ரத்தி னத்தைக்கொடுத்தானென்று சொன்னால்பாவருக்குமதிசயமாயிருக்கும் தா அ தைநாம்தள்ளிப்போடமாட்டோமோ வென்று பெண்சாதியுந் தானும யோசனைபண்ணிக்கொண்டுசந்தகேசரியை வெளியேவிட்டு நமக்குஊ ழியம்பண்ணிக்கொண்டிருவென்றுசொன்னார் அதற்குசந்தகேசரியும் நம்முடையகவலொழிந்து இப்படியுமிருக்கிறதாவென்று அம்பலூடச் செட்டிக்கு ஊழியஞ்செய்துக்கொண்டிருக்கிறபோது அப்பட்டணத்தி ற்கு அதிபதியான அட்சயகேசரியென்கிற ராசாவுக்கு கலியாணம்பண் ணவேணுமென்று துவாரகாபுரிபட்டணத்தையாளுகிற மகேந்திரயிரா சாவினுடையமகள் கோமளவல்லியென்கிறபெண்ணைக்கேட்டுகலியாண முகூர்த்தமுங்கிலவரமும்பண்ணக் கலியாணத்திற்கு சரக்குசாமான்க ட்டுமூட்டுவேண்டுமென்று அம்பலூடசெட்டியை யழைப்பித்து நீர்பா ம்ப்பாணத்திற்குப்போய் இவ்விடத்தில் கிடையாத அபுரூபமானசரக் குகளைவாங்கிக்கொண்டுவரவேணுமென்று சொல்லியனுப்பினார்.

அந்தட்சணமே செட்டியானவன் தன்னுடைய சாக்கிரிப்பையனா கியசந்தகேசரியையழைத்துக்கொண்டுதனக்குவேண்டியதிரவியங்களை யுமெடுத்துக்கொண்டு கப்பலேறி சுக்கானைபிடித்துயிறங்கி அபுரூப மானசரக்குகள் வஸ்துக்களை யெல்லாம்வாங்கி கப்பலிலேற்றிக்கொண் டிருக்கிறபோது சுத்தமானப்பட்ட சந்திராசனாகிய ஆதிபராசன் பிள் ளையில்லாதிருந்து சிவனைநோக்கித்தவம்பண்ணிசிவனுடையகடாட்சத் தினால் ஒருபெண்பிள்ளை பிறந்தது அந்தபெண்ணை நன்றாகமேலியு ம்பொழுதுதாருவர்ணமுமாகவளர்த்து சமுத்திரவல்லியென்று பெயரு மிட்டு பதினெட்டு பாஷையும் ஆயுதப்பிரிட்சையும் அப்பியாசம்பண்ணி யனிரண்டுவயதாயிருக்கிறகாலத்தில் ஆதிபராசன் தன்மகள் சமுத் திரவல்லியின ரூபலாவண்ணியத்தையுங் கல்வி வல்லமையுங் கண்டு இந்தப்பெண்குணத்திற்குத்தகுந்தமாப்பிள்ளைஎங்கிருந்துவரப்போகி றதென்று சிந்தனைசெய்து பிற்பாடுஎன்னதன குதிரைலாயத்தில்கட்டி யிருக்கிற ஆகாயபுரவியென்கிற புரவியைப்பிடித்து அதின்மேலேறிக் கொண்டு பட்டணமுழுதுஞ் சவாரிவந்து மறுபடியும் லாயத்திற்கட்டி வைத்திருந்து அவ்வசமுத்திரவல்லிக்கு நாயகமென்று ஆராட்சிம ணியைப்போட்டான அந்தச்சேதியை பட்டணச்செட்டியிடத்தில் ஊழி யஞ்செய்திருக்கிற சந்தகேசரிகேள்விப்பட்டு அக்குதிரையைக்கவ னமிக்கமுட்டிச்சுப்பணிவிடைச்செய்துஅவர் நித்திரைபோனபிறகு

ஒருவருக்குந்தெரியாமல் வெளியேபுறப்பட்டு இராசாவினுடைய குதி
ரைலாயத்திற்குள் நுழைந்து அந்த ஆகாயபறவையென்னும் புரவியி
னிடத்திற்குவந்து அதை ஒருவருஞ்சேரவொட்டாமல் பாய்கிறதைப்
பார்த்து அந்தக்குதிரையின்மேல் பாய்ந்து ஏறிக்கொண்டு நிமிஷநேர
த்தில் அந்தப்பட்டணமுழுதுஞ் சவாரிவந்து மறுபடியுங் குதிரைலா
யத்திற் கட்டிவிட்டுப் பட்டணசெட்டி படுத்திருக்குமதிரைக்குப்பின்
னாகப் போய்ப்படுத்திருந்தான்

இப்படியிருக்க யிந்தச்செய்தியை அந்தராசனறிந்து குதிரைலா
யத்திற்குவந்து குதிரையை யேறிட்டுப்பார்த்து அந்தக்குதிரையின்சரீ
ரமெல்லாம் வேர்த்திருப்பதும் கடைவாயில் நுரைதள்ளுவதுங் கண்டு
ஓ குதிரைக்காரர்களே இந்தக்குதிரையை நடத்தினவனார் அவனைப்பேரெ
ன்ன ஊரென்னவென்றுகேட்க அவர்களும சுவாமி நாங்கள் இராத்தி
ரிபதினைந்துநாழிகையில் விழித்திருந்தபிறகுநித்திரைபோய்விட்டோ
மந்தச்சமயத்தில் எவனோ எங்கள் நித்திரைசோதித்து வந்துபோயிரு
க்கிறானென்றுசொல்ல அதுகேட்டு இராசனும அடா நேற்றுவந்தவ
ன் இன்றைக்கு வருவானல்லவா நீங்கள் பத்திரமாய் விழித்திருந்து அ
வனைப்பிடித்துவாருங்களென்று திட்டம்பண்ணிவிட்டுத்தன்னுடைய
அரண்மனைக்குப்போய்க் குமாரத்தியையழைத்து நடந்தசெய்தியைச்
சொல்ல அதுகேட்டவளும் சந்தோஷமாய் தகப்பனைப்பார்த்து நமது
குதிரையை நடத்தவல்லவன்யாரோ ஒரு இராசகுமாரனாகியிருக்கவே
ண்டும ஆதலால் அவனையெவ்விதத்திலுங் கண்டுபிடித்து அழைத்து
வரவேண்டுமென்றுசொல்ல அப்படியே நல்லதம்மாவென்றிராசாவும
அரண்மனையிற்போயிருந்தானப்பால் மறுநாளுமசத்தகேசரியானவன
இராத்திரி பதினைந்துநாழிகைக்குமேல்குதிரைல யத்திற்குவந்தந்தக்
குதிரையைப்பிடித்து சீனிபோடுகையில் குதிரைக்காரர்கள்கண்டுபிடி
த்துகொண்டுபோய் இராசாவின் சமுகத்தில் விட்டார்கள்.

இராசனும் சத்தகேசரியைப்பார்த்து அப்பா நீயாருடையபிள்ளை
யென்றுகேட்க ஐயா நான் ஒருதவிட்டுச்செட்டிமகன் இப்போது பட்
டணச்செட்டியாருக்கு ஊழியஞ்செய்துக்கொண்டு அவர்வார்த்தகஞ்
சியை குடித்துக்கொண்டிருக்கிறேன் என்றுசொல்ல அதைக்கேட்டிரா
சாவும் தன்மகளையழைத்துச் சத்தகேசரிசொன்ன வரன்முறையைச்
சொல்ல அதுகேட்டவளும் சத்தகேசரியைப்பார்த்து நீயாருடையகு
மாரன் உன்பெயரென்ன உள்ளபடி சொல்லென்றுகேட்க அதற்கவ
னும் நான் ஒரு தவிட்டுச்செட்டி மகன் தானென்றுசொல்ல அதுகேட்
டு சமுத்திரவல்லியும் இவன் சொல்லுகிறசொல கபடமாயிருக்கிறதெ
ன்றுயோசித்துக்கொண்டு தந்தகப்பனைப்பார்த்து இவன எவனாயிருந்
தாலும் இருக்கட்டும் நானை இந்தட்சணமிவனையே மாலையிடுவே
மென்று சொன்னாள்.

அதுகேட்டராசனும் பட்டணசெட்டியாரை யழைப்பித்து ஓ
செட்டியாரே உமதிடத்தில ஊழியஞ்செய்துகொண்டிருக்கிறபிள்ளை

யை நீக்கப்பல்விட்டிருக்கும்போது உப்பரிகைமேலுலாவிக்கொண்டிருந்த என்குமாரத்திகண்டந்தப்பிள்ளைக்கே என்னைக்கலியாணம் பண்ணுவிக்கவேண்டும் அப்படிச்செய்யாவிட்டால் பிராணத்தியாகம்பண்ணிக்கொள்ளுகிறேனென்று பிரதிக்கினைபண்ணியிருக்கிறாள் ஆகையாலவனுக்கு எசமானாகிய நீர் உத்தரவுசெய்யுமென்று கேட்டதுகேட்டவுடனும அற்பசந்தோஷமாய்த்தானே இராசாவைப்பார்த்து ஐயா உமது இஷ்டப்படியே உமது குமாரத்தியின் பிரதிக்கினை தப்பாமல்நமது ஊழியப்பயனுக்கு கலியாணமுடித்துச் சீக்கிரமாய்என்னிடத்திலனுப்பிவிடுமென்று சொல்லிப்போட்டு கோமுட்டியுந் தன்னிடத்திற்குப்போய்விட்டான்.

பிற்பாடு இராசாவுஞ்சந்தகேசரியைக் கூட்டிக்கொண்டுபோய்மகளிருக்கும் அரண்மனைவாசலில் விட்டுத் தன்னுடைய அரண்மனைக்குப்போனாரப்பால் சமுத்திரவல்லியுமசந்தகேசரியைப்பார்த்து நீருமது பூர்வோத்திரத்தை உள்ளபடிசொன்னால் நானுயிரோடிருப்பேன் இல்லாவிட்டால்நான்பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளுவேனென்று பிரகாசச்சொல்லவதற்குச் சந்தகேசரியுமிவள் நமதுலாபலோபத்திற்குடன்பட்டவளல்லாமல வேறல்ல ஆகலால் இவளிடத்திற் சொல்லவேண்டுமப்படிச்சொல்லாதிருப்போமானால் நமக்குஸ்திரீஹத்திதோஷம் உண்டாகுமபோலிருக்கிறதென்றுலோசித்துக்கொண்டு கண்ணிந்துசமுத்திரவல்லியைப்பார்த்து நீஇவ்வளவுநிர்ப்பந்தமாக கேட்கிறபடியாலே உண்மையைச்சொல்லுகிறேன்கேள் அதென்னவென்றால்என்னுடையபட்டணம் மல்லிகார்ச்சுனபுரம் என்பிதா பல்லவமகாராசா என்தாயார் பத்மினி என்சிறியதாயார் மந்தாகினி என்தமையன் அட்சயகேசரி இப்படியெல்லாமிருக்க என்சிறியதாயாராகிய மந்தாகினியுமசக்களத்திபிள்ளைமார்களென்கிற விரோதத்தினால் மாறுபாடாய்த் தான்விளையாடுகிறதற்குக் கவரிமான்பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்றென்னையும் என்தமையனையும் அழைத்துவந்து காயிக்கலந்தகட்டமுது கட்டிக்கொடுத்துப்பாரமாகச்சொல்லிக் காக்கோடகவனத்திற்கனுப்பினாள்கள் மெய்யென்றுவந்து அந்தவனங்கள்முழுதுந்தேடிக்கவரிமானைக்காணாமல் வேசாரிபிறகுகட்டுச்சாதத்தையவிழ்த்து சிறுபோது எங்களுக்கு ஒரு பிராமணருபதேசித்திருந்தபடி ஒருபிடிசாதத்தையள்ளிக் காகங்களுமுன்னேவைக்க அதைத்தின்றந்தக்காக்கையிறந்துபோனபடியினால் நாங்கள் கட்டுச்சாதத்தையெறிந்துவிட்டு நம்முடையசிறியதாயாரசெய்தவஞ்சனையைப் பார்த்தையாவென்று எங்கள் விதியை நொந்துகொண்டப்பால் கொஞ்சதூரங் கடந்துபோய் ஒருஆலவிருட்சத்தின்மூலயிலிருந்தோம் அங்கே ஒருபட்சியகப்பட்டதப்பட்சியின் மகிமையை டனுலதரித்துக்கொண்டு அவன் சொன்னபடி நான்சிரசும என்தமையன் உடலுமாகப்புசித்தோம் பிற்பாடு என் தமையனுக்கும் தண்ணீர் கொணர்வரும்படி அவனைவிட்டுப் பிரிந்துபோயிருக்கையில் வேடுவிலேயல வழுப்புரியிலிருந்துபட்டத்துயானைவந்தவனையெடுத்துக்கொண்டுபோய இராசாவாக்கிவைத்தது.

அவர்போகும்போது னைக்கடையாளந்தெரியும்படிவழிமுழுதுந்தழைகளையுருவிப்போட்டுக்கொண்டுபோனார் நானும் உடனேவந்து அண்ணனைக்காணாமல் துயரப்பட்டு இப்படியும் விதியிருந்ததாவென்றழுதுக்கொண்டு தழையடையாளப்படி நடந்துபோயந்தப்பட்டணத்திற்குச்சமீபத்தில் ஒரு ஆலவிருட்சநிழலில உட்கார்ந்துக்கொண்டு எங்கள் பூர்வோத்திரமெல்லாம் நினைத்து நகைத்தேன் அந்தபட்சியின்சிரசைத்தின்ன மகத்துவத்தினால்என்வாயிலிருந்துபத்துபடிமாணிக்கம் விழுந்தன அவைகளைச் சந்தோஷமாயெடுத்து மூட்டை கட்டிக்கொண்டு யமுனாபுரிக்கடைத்தெருவிற்போயொருகோமுட்டியிடத்தில் அந்தமாணிக்கமூட்டையை அரிசிமூட்டையென்று சொல்லி வைத்துவிட்டு நான் ஒருவளவையார் வீட்டிலிருந்தேன் பிறகுசிலநாள்பொறுத்தந்த யமுனாபுரிக்குஎன்தமையனுடைய அட்சயகேசரியைக்காணவேண்டி இந்தகோமுட்டியிடத்திற்குவந்து மேற்படி மூட்டையைக்கேட்டமாத்திரத்தில் என்னைப் பிடித்துச் சிறைச்சாலைவைத்தானப்படி ஒரு வருஷகாலமிருந்து ஒருநாள் கோமுட்டியைப்பார்த்து ஐயாநீயென்னை விடுவித்துவிட்டால் நீசொன்னவேலை செய்துக்கொண்டிருக்கிறேனென்று சொல்ல அவனுமதற்குச்சம்மதியாய் என்னைவிட்டானென்றுமுதல் அவனுக்கு ஊழியக்காரனாயிருக்கிறேன்,

இப்படியிருக்க அந்தகோமுட்டியும் என்தமையனுடையகலியாணத்திற்காக சிலசாமான்கள் கொள்ளவேண்டி இந்தபட்டணத்திற்கு கப்பலேறிவந்தான் நானும வந்திருக்கிறேனிவ்விடத்தில் வந்தபிறகு நடந்தசங்கதிகளுனக்குத் தெரிந்திருக்குமேயென்றுசத்தகேசரிசொல்ல அதைக்கேட்டுசமுத்திரவல்லியும சந்தோஷசமுத்திரத்திலழுந்தினவளாய் பரவசப்பட்டிருந்தாள் அப்பால்சத்தகேசரியும அரண்மனைக்குள்ளிருந்த சிங்காரவனத்தைச்சுற்றிஉலாவிக்கொண்டிருக்கும்போதவ்விடத்திலுள்ள குளத்திலிருக்கும் ஒருமுதலையைப் பெரும்பாம்பு பிடித்துக்கொள்ள அந்த முதலையும சத்தகேசரியைப்பார்த்துஇந்தவேளை என்பிராணனைக் காப்பாற்றினால் நான் ஒருவேளை உன்னுடைய ஆபத்திற்குதவிசெய்வேனென்று சொல்ல இவன் அதினுடைய பாஷைதெரிந்தவனாகையால் மெய்தானென்று தன்னுடைய துடைச்சதையையறுத்து அந்தப்பெரும்பாம்புக்கு முன்போட்டானந்தப்பாம்பு மிந்தச்சதையைக்கவ்விக்கொண்டு முதலையை விட்டுவிட்டதப்பாலே சத்தகேசரியு மரண்மனைக்குள்ளே சமுத்திரவல்லியிடத்திற்குப்போக அவளுந் துடையிலேகாயமென்னவென்றுகேட்க அதற்கவன் ஒருமுதலையை பெரும்பாம்பு பிடித்துக்கொண்டதற்கிந்தச்சதையை யறுத்துப்போட்டு முதலையை விடுவித்தேனென்று சொல்லஅதுகேட்டிதுவும் சிவகாருண்ணியந்தானென்றெண்ணிக்கொண்டு சமுத்திரவல்லியுஞ் சத்தகேசரியைப்பார்த்து நீர்மறுபடியும் உம்முடைய பூர்வோத்

க்கிலங்காரத்தகேசரியிடத்திற்கொடுத்து அப்பாபின்னமும்நேர்மையா கக்கட்டித்தாவென்றுசொல்ல சத்தகேசரியுமசந்தோஷமாய்ச்சமுத்தி ரவல்லிக்குந் தன்மோதிரத்தை புஷ்பச்செண்டில்வைத்து கட்டிக்கொ டுக்க அதை ஆண்டிச்சி வாங்கிக்கொண்டுபோய் சமுத்திரவல்லி யிடத் திற்கொடுக்க அவளுமதைவாங்கி தன்புருஷன்மோதிரத்தைக்கண்டு இ ரண்டுகண்களிலும்ஒத்திக்கொண்டு ஆண்டிச்சியை யழைத்து அம்மா உன்மகன் கெட்டிக்காரன அவனுக்கு ஸ்நானத்திலும் போசனத்திலு ங்குறைவுபடுத்தாமல் சௌக்கியமாய் வைத்திருவென்றுசொல்லிநமது புருஷன் சமுத்திரத்திலவிழுந்துபிழைத்துவந்தாரல்லவா நமதுபாக்கி யமேபாக்கியமென்றுநினைத்துக்கொண்டு பட்டணசெட்டியாரையழை ப்பித்து ஐயாஎனக்கு நோன்புமுடியவேண்டுமே நாளைந்தனைநாளைக் குச்சிறையிலிருப்பேனென்றுசொல்ல அதற்குபட்டணச்செட்டியும்சந் தோஷப்பட்டு உன்னுடையநோன்புமுடிக்கிறதற்கு என்னாலாகவேண் டியதெனனவென்றுகேட்க அதற்குஉத்தமியாகியசமுத்திரவல்லியு மந் தமுடனேப்பார்த்து ஆயிரம் பிராமணருக்கு போசனமும் ஆயிரமயேஸ் வரபூசையுஞ்செய்வித்து சிவாலயபிரமாலயங்களுக்கு அபிஷேகப்பண் ணிவித்து கோதானம்பூதானம் கன்னிகாதானமுதலியசோடசதானங் களுஞ்செய்வித்து சிவதரிசனம் விஷ்ணுதரிசனம்பண்ணிக்கொண்டு அ ரண்மனைக்குவந்து அந்தவிரதமகிமையை வாசிக்கவேணடும் அதைவா சிக்கும்போது இந்நயமுனுபுரிக்கதிபதியாகிய இராசாமந்திரிபிரதானி முதலியசகலசனபேர்களையும் வரவழைக்கவேண்டுமென்று சொல்ல பட்டணச்செட்டியும் அப்படியேநல்லதென்று பொக்கிஷத்தைத்திறந் துநாலுலட்சம்பொன்னெடுத்து முறைசொல்லிய நாலு மகாதானங்கள் சத்கருமங்களையெல்லாஞ்செய்வித்தபின்பு சமுத்திரவல்லியுங்காவேரி ஸ்நானஞ்செய்து சிவதரிசனமும்விஷ்ணுதரிசனமுஞ்செய்துமுடித்து கோமுட்டியைப்பார்த்துநாளைப்போது விரதமகிமையைவாசிக்கவேண் டும்அதைக்கேட்கிறதற்குச் சகலமான பேர்களையும் நானசொன்னபடி யழைப்பித்தீரோவென்றுகேட்க கோமுட்டியும்இந்தட்சணமேபோய் அ ழைத்துவருகிறேனென்று பத்துமாணிக்கத்தையெடுத்துக்கொண்டு அ ட்சயகேசரிமகாராசனுனவர் கொலுவாயிருக்கும்போது அவருடையச முகத்தில காணிக்கையாகவைத்து சுவாமி ராசசேகரா னைக்கொருவி ண்ணப்பமிருக்கிறது அதுவென்னவென்றால் மனைவியாகிய சமுத்திரவ ல்லியாரும் ஒரு விரதமனுஷ்டித்திருந்தாள் அவ்விரதம் இன்றோடேமு டிந்தது அவ்விரதமகிமையைக்கேட்பதற்குத் தேவரீர்முதலான சமஸ் தானத்திலுள்ள அனைவரையும் அழைப்பிக்கச் சொன்னாள் ஆகலால்

நீங்களெல்லோரும்வரவேண்டுமென்றுசொல்ல அதுகேட்டுஅட்சயகே சரியும் அப்படியேவருகிறேமென்று சம்மதித்துச் சகலமானபேர்களும்வந்துசேர்ந்தார்கள்

அதுகண்டுசமுத்திரவல்லியும் குறுக்கேதிரைபோடச்சொல்லி அந்தத்திரையில் தானுட்கார்ந்துக்கொண்டுதிரைக்கப்புறம் ஒருகட்டில் போடுவித்துஅதன்மேலிராசாவையுட்காரச்செய்து மந்திரிபிரதானிகள்முதலானசகலசெனங்களையும் மேயுட்காரப்பண்ணி தன்னெதிரே ஒருதீபம்வைத்துக்கொண்டுபிறகு தன்கொசவனத்தில்வைத்திருக்கும் புஸ்தகத்தையெடுத்துச் சந்தோஷமாயவிழ்த்துத் தீபத்தின்முன்பாக வைத்துக்கொண்டு அச்சபையைப்பார்த்துஐயா இராசசேகராநீர்சாலருக்குந்தாய்தகப்பனுகையால் எனக்குநீர் பராமுகமாயிராமல் ஏகமனதாயவதரியத்துடனேயிருந்து சற்றேசெவிகொடுத்துக் கேட்டருளவேண்டும் அதுவுமல்லாமல்இப்போ திவ்விடத்திலவந்திருக்கிறசனங்களில்ஒருவரையும்வெளியிற்போகவொட்டாமற்கதவைச்சாத்தி முத்திரைவைத்து அம்முத்திரையடையாளத்தை நீரேவைத்துக்கொள்ளுமென்று திட்டப்படுத்தி அப்பாலப்புஸ்தகத்தை ஆதியோடந்தமாய் வாசிக்கத்தொடங்கினுள கேளுமையாராசாவேமல்லிகார்ச்சுனபுரமென்றொரு பட்டணமுண்டு அப்பட்டணத்தை பரிபாலனம்பண்ணப்பட்ட பல்லவராயனென்றொருஇராசனுண்டு அந்தராசாவுக்கு இரண்டு தேவிமார் அவர்களில் மூத்தாளுக்கு அட்சயகேசரியென்றும் சந்தகேசரியென்றும் இரண்டுபிள்ளைகளுமுண்டு இப்படியிருக்க அந்தராசாவினுடைய இளையபெண்சாதிமந்தாகினியும் வெகுநாள்கெர்ப்பமில்லாமலிருந்து பகவற்சங்கற்பத்தினால் ஐந்துமாதக்கெர்ப்பவதியாயிருந்தாள் அப்போதவளும்மூத்தவள்பிள்ளைக்கு பட்டங்கட்டுவதேயல்லாமல்நமதுவயிற்றிற்பிறக்கப்போகிறபிள்ளைக்கு பட்டங்கட்டாரென்றுயோசித்துநாமிந்தயிரண்டுபிள்ளைகளையுங்கொன்றுவிடவேண்டுமென்றுத்தேசித்துக்கொண்டு ஒருநாள் இராசனுந்தானும் சந்நிதியிலிருக்கும்போது இராசாவைப்பார்த்து சந்தோஷத்துடனே அப்பிள்ளைகளையழைத்து அப்பா நீங்களின்றுமுதல் உங்கள்சிறியதாயார்சொற்படி நடந்துகொண்டு அவளிடத்தில்தானேயிருங்களென்று திட்டம்பண்ண அப்படியேநடந்துவருங்காலத்தில் ஒருநாள் மந்தாகினியுங்கபடமாயப்பிள்ளைகளிடத்தில் வசநாபிகலந்தபட்டமுறுக்கட்டிக்கொடுத்துகவரிமானையடித்துக்கொண்டுவருப்படி காக்கொடகவனத்திற் கனுப்பிவைத்தாள் அவர்களுமதவா

ம்பிக்கொண்டுசிறியதாயாரிடத்திற்செலவுபெற்றுக்கொண்டு சாலஆபு
தமுஸ்தீப்புகளுடனேபுறப்பட்டு கார்க்கோடக வனத்திற்போய் கவரி
மானைக்கண்டுபிடியாமல் வேசாரிகவர்களாய் அக்கட்டமுதுமுட்டை
யைபவிழ்த்து சிறுவயதில் ஒருபிராமணர்கங்களுக் குபதேசஞ்செய்த
படி ஒருபிடிசாதம்காக்கைமுன்வைக்க அதைத்தின்றமாத்திரத்தில்அ
க்க.க்கைபிறந்துபோனதைக்கண்டு அச்சாதத்தைபெறிந்துவிட்டு அப்
பாலிரண்டடிதூரம்போய் ஒரு ஆலவிருட்சத்தினிழலிற் படுத்திருந்த
ப்போது ஒருபட்சியகப்பட அப்பட்சியின்மகிமை வேடனால்தெரிந்து
அதன்சிரசை ஒருவரும் உடலை ஒருவருமாகப்புசித்து பசிதணிந்து மூத்
தபிள்ளையானவர் தண்ணீர்கேட்க இளையவர் தண்ணீர்கொண்டுவரும்
படி தனியேபோயிருக்கச்சே பட்டத்துயானையானது யமுனாபுரியிலிரு
ந்துவந்து பட்சியினுடலை புசித்திருக்கிற மகிமையினால் அட்சயகேசரி
யையெடுத்துக்கொண்டுபோய் சிம்மாதனத்தில்வைத்து இராசாவாக்ச்
செய்தது இவ்விடத்திற்சத்தகேசரியும் தண்ணீர்கொண்டுவந்து தமை
யனைக்காணாமல் விசனப்பட்டுபிற்பாடு அட்சயகேசரி போகும்போது
தம்பிக்குத்தெரியவேணுமென்று உருவித் தெளித்துக்கொண்டுபோன
தழைகளை அடையாளமாய்ப்பற்றிநடந்துபோய்யமுனாபுரிக்குச்சமீபத்
திலிருக்கும் ஒருஆலமரத்தடியிலுட்கார்ந்து தாங்கள்பிறந்ததுமவளார்
ந்தபசிறியதாயார்செய்தகுரூதும்நினைத்து விதிப்பயனிப்படியிருந்ததா
வென்றழுதகைத்தமாத்திரத்தில்சுவர்ணமேகப்பட்சியின் சிரசைத்தின்ன
மகுந்துவத்தினால் வாயிலிருந்து ம படிமாணிக்கம் விழுந்தன அவைக
ளையெடுத்து மூட்டையாகக்கட்டிக்கொண்டு யமுனாபுரியின்கடைவீதி
வழியேவந்து சொத்தைப்பாக்கு விற்றுக்கொண்டிருக்கிற அம்பமுடச்
செட்டியையும் அவன்பெண்சாதி மூக்கியையுங்கண்டு அம்மாணிக்கமூ
ட்டையை அரிசிமூட்டையென்று அவர்கள் கையிற்கொடுத்துவிட்டுஒள
வையார்வீட்டிற்குபோயிருந்த தன்தமையன்ராசாவாயிருக்கிறசங்கதி
யைதெரிந்துகொண்டுசிலநாள்கழித்து தன்தமையனைக்காணவேணு
மென்கிற அபேட்சையால் கோமுட்டியிடத்திற்குப்போனார்.

ஐபா சத்தகேசரியும் கோமுட்டியிடத்திற்குப்போய் அரண்மனை
யும் ஆள்தானத்தையுங்கண்டு அதிசயப்பட்டு அவனுக்குமுன்னிருந்த
சிறுமையும் இப்போதுண்டாயிருக்கிற பெருமையும் நினைத்து ஆச்ச
ரியப்பட்டாரென்றுவாசித்தையில் பட்டணச்செட்டியும்பயந்துபோனு
னட்சயகேசரிதிடுக்கிட்டுசமுத்திரவல்லியைப்பார்த்து அம்மாணிக்கமு

டையெங்கே தம்பியெங்கே மாணிக்க மூட்டையைவாங்கிக்கொண்டம
ணிநனெங்கேயிருக்கிறனென மாணிக்கமூட்டையுமிருக்கின்றது தம்பி
யெங்கேபோனுரேன்று சொன்னமாத்திரத்தில் தம்பியைக்கா
ணேமென்று விசனப்படுகையில் சமுத்திரவல்லியும் ராசாவைப்பார்
த்து நான் முன்னேதானே தைரியமாயிருந்து கேட்கவேண்டுமென்று
மனுவு பண்ணிக்கொண்டேனே இப்போ நீர் விசனப்படலாமோ கோ
முட்டியைமாத்திரம் பத்திரப்படுத்துங்களென்றுசொல்ல அப்படியே
அவனை ஒரு அறையிலடக்கஞ்செய்து அப்பால் அட்சயகேசரியும் நட
ந்தசெய்தி என்னவென்றுகேட்க சமுத்திரவல்லியுஞ் சொல்லுகிறாள்.

ஐயா சத்தகேசரியுமிந்த கோமுட்டியைகண்டு அரிசிமூட்டை
யைகேட்க அதுதெரிந்து கோமுட்டிவந்து சத்தகேசரியை பிடித்து
சிறைச்சாலையில் ஒருவருஷகாலமடைத்துவைத்திருக்க அப்போது
ஒருநாள் கோமுட்டி சந்தோஷமாயிருக்கும்போது ஐயா நானுமக்கு
என்ன அபசாரஞ்செய்தேனென்று சிறையில் வைத்திருக்கிறீர் என
னை விட்டுவிட்டால் உமக்குஊழியஞ்செய்கிறேனென்ன அவன்விட்டு
விட்டான் இப்படியிருக்க சிலநாளசுழிந்து அட்சயகேசரி ராசாவினு
டைய கலியாணத்திற்குவேண்டிய சரக்குகள் வாங்கும்படி சத்தகேச
ரியையழைத்துக்கொண்டு அற்றூடசெட்டியாரும் ஒருகப்பலேறி
ஈழதேசத்திற்குவந்து சாமான்கள் சாக்கிரதைபண்ணிக்கொண்டிருந்
தானப்படியிருக்க ஈழதேசத்துராசனும் நெடுநாள் புத்திரவில்லாதிரு
ந்து தபோபலத்தினுல் ஒரு பெண்ணைப்பெற்று சமுத்திரவல்லியென்
று பெயரிட்டு பிரஸ்ச்செல்வமாக வளர்த்து பருவகாலமானபின் னப்
பெண்ணை தன் குதிரைலாயத்திலிருக்கிற ஆகாயபறவையெனகிற புற
வின்மேலேறி நாலுவீதியும் நடத்துகின்றவனுக்கு மாலையிடுகிறதென
று ஆரோட்சிமணிகட்டியிருந்தா ரந்தச்செய்தியை சத்தகேசரியுங் கே
ளவிப்பட்டு குதிரைலாயத்திற் புகுந்து ஆகாயபுறவியின்மேலேறிக்
கொண்டு பட்டணமுழுதுஞ் சவாரிவந்து ஒருவருக்குந்தெரியாமல் கு
திரைலாயத்திற்கட்டிவிட்டு கோமுட்டி படுத்திருக்குந் திண்ணைக்கு
பின்னுகப்போய்படுத்திருந்தா ரிந்தச்செய்தி அந்தராசனறிந்து கோமுட்டிக
ளிடத்திற்சொல்ல அவனுமப்படிப்பட்ட குதிரைநடத்தின மகாபுருஷ
னெவரோ அவரைநான் பார்க்கவேண்டுமவரையென்னிடத்திற் கழை
த்துவாருங்களென்று சொல்ல அப்படியே இராசனுங் குதிரையைகா
த்திருக்கிறவர்களுக்கு திட்டம் பண்ண அவர்கள்மறுநாள் கண்டுபிடி
த்தழைத்துக்கொண்டு வந்திராசாவின சமுகத்தில்விட அவரும் கண்ம
களுக்கெதிரே இட்டுக்கொண்டுபோய்சத்தகேசரியைப்பார்த்து நீயாரு
டையகுமாரன் உன பெயரென்னவென்று கேட்க அதற்கு சத்தகேச
ரியும் நான் தவிட்டுசெட்டிமகனா பட்டணசெட்டியாருடைய ஊழிய
னென்றுசொல்ல பிற்பாடுசெட்டி சம்மதியின் பேரில் சமுத்திரவல்லி

யை விவரம் டண்ணிக் கொடுத்தவுடனே சரக்குகளெல்லாஞ் சேர்த்துக்கொண்டு கோமுட்டி கப்பலேறும்போது சொல்லியனுப்ப சமுத்திரவல்லியும் சத்தகேசரியும்வந்து கப்பலேறி சமுத்திரத்தில் வரும்போது கோமுட்டியும் மோகாந்தகாரனாய் கபடமாகச் சத்தகேசரியை தண்ணீர்மொள்ளச்சொல்லிய சமுத்திரத்தில் தள்ளிவிட்டானென்று வாசிக்க அதைச்சொல்லும்போது அக்ஷயகேசரியுந் திடுக்கிட்டு ஐய்யா தெய்வமே தம்பியைக்கொன்றுவிட்டானேயென்று எழுந்திருந்து கோமுட்டிவீட்டை கொள்ளைபிடுவித்தந்தகோமுட்டியை மொட்டையடித்து கழுதைமேலேற்றி பட்டணத்தை சுற்றிவித்து கழுவில் போடும்படி செய்துதானுஞ் சந்திராயுதத்தை யுருவிக்கொண்டு வெட்டிக்கொள்ள போகையில் சமுத்திரவல்லியுந் திடுக்கிட் டெழுந்துபோய் புருஷனுடைய் கையைப்பிடித்துக்கொண்டு நான்முன்னாலேதானே நடச்சித்தமாக கேட்கவேணுமென்று சொல்லியிருக்க இப்படி செய்யலாமா உமதுடைய தம்பி சத்தகேசரிராசாவும் முன்பு அமிர்தவல்லியெனனும் ஔவையார்வீட்டி லிருந்து யிப்போது சண்பகவதியென்கிற பூவாடிச்சி வீட்டிற் சுகமாயிருக்கிறானஞ்சவேண்டாமென்று சொல்ல அதுகேட்டவுடனே சந்தோஷசமுத்திரத்தில் மூழ்கினவனாய் க்ஷணமே ஏவலாளிகளையனுப்பி தம்பியையழைத்து வரச்சொல்லியந்த பிற்பாடு தம்பியைப்பார்த்து அப்பா தம்பி நீ எப்படிபிழைத்து வந்தாயென்று வாய்விட்டழுது அவனைமார்போடணைத்துக் கொண்டு நீ யிதுவரையி லெங்கிருந்தாய் சகலசெல்வமும் உன்னாலல்லவிருக்க மூடனாகிய கோமுட்டியப்பால் நானும் அற்பபுத்தியினாலுன்னை நினையாமல் அயிஸ்வரியத்தினால கர்வித்திருந்தேனுன்னை சமுத்திரத்தில் தள்ளிவிட்டானே நீயெப்படிபிழைத்துவந்தாய் சற்றே வுன் வாயை திறந்துசொல்லுமென்று கேட்க சத்தகேசரியுந் தமயனைப பார்த்து அண்ணா முன்னேநான் ஒருமுதலைக்குபகாரஞ்செய்திருந்தேனந்த முதலையி னுதவியால பிழைத்துகரைசேர்ந்து சண்பகவதனி வீட்டில யிருந்து சமுத்திரவல்லி என் கையிற்கொண்டிருந்தமோதிரத்தை பூச்செண்டில்வைத்து கட்டியனுப்பினேனதுதெரிந்துகொண்டு சமுத்திரவல்லியும் என்னையழைப்பிக்கும்படி உங்களுடைய முகத்தைப் பார்க்க இத்தனைநாள்சென்றது இனிமேலாகிலும் நமது மல்லிகார்ச்சுனபுரத்துக்கு போகவேணுமென்று சொல்ல அதுகேட்ட அக்ஷயகேசரியும் நல்லதென்று சமுத்திரவல்லியைப் பார்த்து அம்மா பாக்கியவதி உன்னுடைய் பதிவிரதாதர்மத்தினால் என தம்பியும்பிழைத்து வந்தான் எங்கள் வம்சமும் கீர்த்தியடைந்ததென்றுமே விசேஷமாக வுபசரித்தபால தம்பியையும் சமுத்திரவல்லியையு மழைத்துக்கொண்டு மந்திரிபிரதானிகளுடனே அரண்மனைக்குப்போய் சந்தோஷமா யிருந்தார்கள்.

இப்படியிருக்க ஒருநாள்சமுத்திரவல்லியும் தன்புருஷனாகிய சத்தகேசரியைப்பார்த்து உமதுடைய தமயனாகிய அட்சயகேசரி ராசாவுக்கு கல்யாணம்பண்ணிவைக்கவேணுமென்ன தானுஞ் சத்தகேசரியும்புறப்பட்டு துவாரகாபுரிக்குப்போய் மகேந்திரராசாவையும் அவ

தேவியாகிய கர்ப்பூர வல்லியையுங் கண்டு உங்களுடைய குமாரத்தி
கோமளாங்கியை யமுனாபுரி பட்டணமாளப்பட்ட அட்சயகேசரி
ராசாவுக்கு கொடுக்கிறோமென்று சம்மதிசொல்லி யனுப்பிவைத்திருக்க
ளாகையால் கலியாணத்திற்கு வேண்டிய சகலசாமான்களும் முஸ்தி
புசெய்து சகலரேச்சங்களும் முகூர்த்தநிலவரம்பண்ணி ஓலையெழுதியி
ருக்கின்ற திப்பொழுது நாளைமுகூர்த்தம் பெண்ணை யழைத்துக்கொ
ண்டு சிக்கிரம் வரவேண்டுமென்றுசொல்ல யமுனாபுரி பட்டணத்தி
லட்சயகேசரிராசாவின் சமுகத்திற்கு வந்து துவாரகாபுரிக்கு போன
தும் கலியாணமுகூர்த்தம் நிலவரம்பண்ணிக்கொண்டு வந்ததுஞ் சொ
ல்லி அந்தட்சணமே புரோகிதரையழைப்பித்து முகூர்த்தகால்நாட்டி
ஆகாயமளாவிடத்தக்கதாய்ப் பந்தலும்போட்டு மேற்கட்டுங்கட்டிசந்
தனத்திலேகோலமிட்டு அரசாணி கால்நட்டு முஸ்தீபுசெய்து மல்லிகா
ர்ச்சுனபுரிக்கு மனுஷரையனுப்பி தகப்பனாகிய பல்லவ ராசாவுக்கு
தெரிவித்து மந்திரிபிரதானிகாரியக்காரர்கள்சகலமானபேரையுமழை
த்துக்கொண்டு வந்தார்கள்,

அவர்கள்வந்தவுடனே அட்சயகேசரியும் சமுத்திரவல்லியும் மெ
முந்திருந்து தகப்பனாகிய பல்லவராய ராசனுக்குந் தாயார் கற்பினி சி
றியதாயார் மந்தாகினி இம்மூன்று பேருக்கும இவர்கள் மூன்றுபேரு
ம் சாஷ்டாங்கமாகதெண்டன் சமர்ப்பித்தார்கள் பல்லவராயராசா த
ன் பிள்ளைகளிரண்டுபேரையும் கட்டிக்கொண்டு உச்சியை முகர்ந்துமு
த்தமிட்டப்பாயிதுவரைக்கு மெங்கே யிருந்தீர்களென்று கேட்க மல்
லிகார்ச்சுனபுரம் விட்டநாள்முதல் இன்றையவரைக்கும் நடந்த சங்
கதிகளெல்லாம் அட்சயகேசரிவிபரமாய்ச்சொல்ல அதுகேட்டிந்தபெ
ண்ணழகத்தா ஆதிராராசாவினுடையமகள சமுத்திரவல்லியென்று பெய
ர் இவளை சம்பிசந்தகேசரி கலியாணம்பண்ணினா சிறியதாயாராகியமந்
தாகினியயந்து நடுங்கிக்கொண்டிருந்தா ளட்சயகேசரியும நீஏன்பயப்
படுகிறாய் எங்களுடைய அதிஷ்டத்திற்குநீயென்னசெய்வாய் நீபச்சை
நாயினையக்கலந்துசாதங்கட்டிக்கொடுத்தபடியினாலுன்பாக்கியத்தினால்
யெங்களுக்குஅஷ்டஅயிஸ்வரியமுமவந்தநீபோய்உன்பிள்ளைகளுக்கே
பட்டங்கட்டிசுகமாயிருமென்றுமசொல்லி பிறகுமுகூர்த்தநாள்எத்தன
ம்பண்ணிபிறுமறுநாள் இராசாக்களசகலமானபேரையுமழைப்பித்து ம
ணப்பொங்கலிட்டு ஓமசாந்தியும்பண்ணி அக்கினிசாட்சியாய்அட்சய
கேசரிக்கும் கோமளாங்கிக்கும் கலியாணமபண்ணிமுடித்துதகப்பனை
யும் சிறியதாயாரையும் மல்லிகார்ச்சுனபுரத்திற கனுப்பிவிட்டுஅட்ச
யகேசரியும் கோமளாங்கினியும் மதனும் ரதியும்போல வாழ்ந்துக்
கொண்டிருந்தார்கள் இப்படி யிருக்கும்பொழுது சத்தகேசரியும் சமு
த்திரவல்லியும் உறவின் முறையாருக்கு கலியாணவிருந்து செய்யவே
ண்டுமென்று சகலபேரையுமழைப்பித்து நளபாகத்துடனேசமயல்செய்
து சாப்பாடுபோட்டுத் தாம்பூலங்கொடுத்து அவரவர்களரண்மனைக்கு
அவரவர்களை யனுப்பிவிட்டுஅட்சயகேசரியுஞ்சத்தகேசரியும் இராமல

ட்சுமணைப் போலேயும் சமுத்திரவல்லியுங் கோமளாங்கினியும் வள்ளியம்மை தெய்வானைபோலேயுஞ் சுகமாகவாழ்ந்துக்கொண்டு யிருந்தார்களென்று பேசாமடந்தையுடுத்திக்கொண்டிருந்த சேலையானதுசொலலிற்று.

சேலைசொல்லியகதைமுற்றிற்று

———*———

கட்டிலின்முதலாவதுகால் சொல்லியகதை

———

அதைக் கேட்டு விக்கிரமார்க்க ராசாவும் வேதாளத்தைப் பார்த்து பேசாமடந்தைகட்டிலின் முதற்காலுடன் பிரசிங்கிக்கச் செய்து கட்டிலின்முதற் காலைக்குறித்து பேசாமடந்தைதான் நம்முடனே பேசுகிறதில்லையே அவளுக்குமனது வந்தாலல்லவோ பேசுவாள் நீயாகிலும் ஒருகதைசொல்லென்றுகேட்க அதுகேட்டுக் கட்டிலிற்காலும் ஒருகதை சொல்லும் பேசாமடந்தை எனமேலேறிக் கொண்டிருக்கிறாள் எனக்கு நிற்பந்தமா யிருக்கிறது நானெப்படி கதைசொல்வே னென்றுசொல்ல அது கேட்டு பேசாமடந்தையும் வெட்கிப்போய் கட்டிலைவிட்டெழுந்திருந்து நம்முடைய மனைப்போயிற்று விக்கிரமார்க்கருசாவுக்கும் நாம் அடிமையாகிப் போனோம் நம்முடையவிதிப்பயன் யிப்படி யிருந்ததோவென்று யோசனைசெய்துக் கொண்டிருக்கும் போது கட்டிலின் முதற்காலும் விக்கிரமார்க்க ருசாவைப்பார்த்து யென்னைநீ ஒருபொருளாக யெண்ணிகதைசொல்லச்சொன்னீரே நான்சொல்லுகிறேன் சற்றேகியாபகமாகச் செவிகொடுத்துக்கேளும் அதென்னவென்றால் அஸ்தினாபுரமென்றொரு பட்டணமதை யாளப்பட்ட சுத்தவீர இருசனென்றொரு இருசா அந்த ருசாவுக்கு சித்திரரேகையென்றொரு இருச புரோகிதரான சோசியர்களை அழைப்பித்து தமக்குபிள்ளையுண்டோ யில்லையோவென்று சாதகம் பார்த்துச் சொல்லச்சொன்னார் அதுகேட்டு சோசியர்கள் சாதகத்தைப் பார்த்து உமக்கு யேழுபெண்சாதிகளென்றிருக்கிறது ஆகையால்ஒருமிக்க இந்நம் ஆறு பெண்விசாரித்துக்கலியாணம பண்ணிக கொள்ளென்று சொன்னார்க ளந்தட்சணமே மந்திரியாகியசம்பிரலோலனை யழைப்பித்துபெண்கள் விசாரித்துவரச சொல்லியனுப்பினாரதுகேட்டு மந்திரியுமந்நேரமே பிரயாணப்பட்டு மகாருசபுரமென்றொரு பட்டணம் அந்தப் பட்டணத்தையாளப்பட்ட மகேந்திர னென்றொரு இராசா அந்த யிராசாவுக் குசுந்தரமின னென்றொருதேவி அவளுக்குஆறுபெண்ணுண்டு அந்த பெண்களினுடைய பெயர் உமாபதி [illegible] ஞாதுபதி சாதுபதி சி[illegible] [illegible]பதியென்று ஆறுபெண்க ளிருந்தார்க ளாகையாலந்தரு.

சாவைக்கண்டு நம்முடைய ராசனாகிய சுத்தவீரராசனுக்கு பெண்க
ள்வேணுமென்றுசொன்னதுகேட்ட மதுரேந்திரராசனும்பெண்கள்
வேணுமென்றுகேட்கிறது ஒருபெண்கேட்கிறவசனமாய்க் காணவில
லேயே யென்று சொன்னருமக்கு ஆறுபெண் பிறந்திருக்கிற தென்று
சமாச்சாரங்கேள்விப்பட்டு ராசாவும்அமரிக்கை பண்ணிக்கொண்டு
வரச்சொன்னாரென்றுசொன்னார்.

கல்லது ஒருத்தருக்கு ஆறுபெண் யேழுபெண்கொடுப்பார்களா
லேஉலகத்தில் நடவாதகாரியமாய் கேட்கலாமோவென்று மதுரேந்திர
ராசன் சொன்னதைகேட்டு மந்திரியாகிய சம்பிரமவேலாலனும் சுத்த
வீரராசாவுக்கு ஏழுபெண் விவாசம்பண்ணுகிறதா யவருக்குசாதகமெ
ழுதியிருக்கிறது அதற்குஒருபெண்ணை கலியாணம்பண்ணியிருக்கிறார்
இன்னங்குறை ஆறுபெண்ணைக் கலியாணம்பண்ணினால் அப்பால்யே
ழுபிள்ளைபிறக்குமென்றுஜோசியர்கள்சொல்லியிருக்கிறார்கள் ஆகையா
லுமது பெண்கள் ஆறையுங்கொடுத்தாலுமக்கு வேண்டியதிரவியமும்
சீமையுங்கொடுக்கிறோமென்றுசொன்னா ரதற்கு அப்படியேதருகிறோ
மென்று மதுரேந்திரன்சொல்ல அட்சணமே நிட்சயதாம்பூல மாற்றிக்
கொண்டுபோய் ராசாவுடனேசமாச்சாரஞ் சொன்னதைகேட்டு சுத்த
வீரராசாவு மகாசந்தோஷமாய் அந்தட்சணம் கலியாணத்திற்குவேண்
டிய சாமான்களெல்லாஞ் சீக்கிரஞ்சேகரஞ்செய்யச்சொல்லிமந்திரிக்கு
திட்டம்பண்ணி புரோகிதரையழைப்பித்து கலியாணமுகூர்த்த நிலவ
ந்தனம்பண்ணச்சொல்லி தேசத்துராசாக்களுக்கெல்லாம் தாம்பூலம்
வைக்கச்சொல்ல அப்படியே தாம்பூலங்கொண்டுபோய்வைத்தார்கள்
அப்பொழுது உறவின்முறையார் உற்றார் சகலமானபேரும்வந்தார்கள்
அதன்பின்பு முகூர்த்தத்திற்பந்தற்கால்நடுகிறநிமித்தம் ஈழத்திற்குபத்
துகப்பலனுப்பிஆச்சாவந்தேக்குமரமுமழைத்து புரோகிதரையழைத்
து முகூர்த்தக்கால்நட்டு மருக்கொழுந்துகளினாலே பந்தலும்போட்டு
முத்துபவளத்தினாலே சிங்காரித்து மகாதோரணமுங்கட்டி அரசாணி
யும்நட்டு மணப்பொங்கலுமிட்டு மந்திரியாகிய சம்பிரமவேலாலன் மகா
ராசபுரத்திற்குப்போய் மதுரேந்திரனைக்கண்டு பெண்களுக்கு பரி
யம் கோடிதிரவியமும கோடிபொன்னும் சீமையுங்கொடுத்து பெண்
களை தண்டிகைமேலேற்றிக்கொண்டு மதுரேந்திரராசனையும் யானை
சேனை பரிவாரத்துடனேகூட்டிக்கொண்டுவந்தான் வந்தவுடனே மாப்
பிள்ளைக்கும் பெண்களுக்கும் நலங்கிட்டு மாப்பிள்ளைக்கு ஒருகட்டிலு
ம் பெண்கள் ஆறுபேருக்கும் ஒருகட்டிலும்போட்டுஉபசாரம்பண்ண
சுத்தவீரராசனும் மூத்தபெண்சாதியாகிய சித்திரரேகையை பக்கத்தி
ல்வைத்துக்கொண்டிருக்க ஆறுபெண்களுக்கும் அக்கினிசாட்சியாக
திருமங்கிலியந் தரித்துபிறகு வந்தராசாக்களுக்கும் உறவின்முறையா
ருக்கும் சாப்பாடுபோட்டு சாப்பிட்டவுடனே பிராமணர்மற்றுமுண்டா
னபேருக்கு வெகுமதிபண்ணி அனுப்பிவிட்டபிறகு தன பெண்சாதி
மார் ஏழுபேருடனே சுத்தவீரராசாவும சுகமாய்வாழ்ந்துக்கொண்டி
ருக்கும்போது சுத்தவீரராசனிடத்தில் ஏழுரைநாட்டுச்சனியன பிர

வேசமாய் அவருடைய தர்மமும்பெருமையும்பார்த்து பயந்துநின்றுனதுகண்டு யிராசனும் சாஷ்டாங்கதெண்டம்பண்ணி வாய்பொத்திகைகட்டிக்கொண்டு நின்றாரப்போது சனிபகவானுக்கு சந்தோஷம்பிறந்துகானிளமையில் வரவோமுதுமையில் வரவோவென்றுகேட்க அதற்கு தன்தாயாகிய உச்சாதேவியையழைத்து இப்போது சனிபகவானுக்குஎன்மேல் தயவுவந்து இளமையில் வரவோமுழுமையில் வரவோவென்று கேட்கிறாரென்றுசொன்னார்.

அதற்கு தாயாரும் இளையவர்களாறுபேரும் இதற்குமேல் பெறவும் வளர்க்கவுமாயிருக்கிறார்களாகையினாலே முதுமையிலேவந்தால் நலமென்றுசொன்னாளதுகேட்டு மூத்தபெண்சாதியாகிய சித்திரரேகையும் நான்கெர்ப்பமாயிருக்கிறேன் எனக்குபிள்ளைபிறந்தபின் வருவதாய்த்தயவுசெய்யவேணுமென்று சனீஸ்வரனைத்துதிக்க அவரும் தயவுபண்ணினார் பின்புசித்திரரேகையும் புருஷனைப்பார்த்து சனிபகவான் யிளமையில்தானேவரட்டும் முழுமையில்வந்தாலுமக்குதளர்ந்தவயதாயிருக்கும் பெண்கள் யேழுபேருக்கும் பிள்ளையும் பெண்களும் சமுசாரம் பெருத்திருக்கும் உமக்கு தள்ளாதகாலமாகிப்போமே இளமையில் வந்தால் நிர்வகித்து வருவோமென்று சொன்னாளதுகேட்டு இராசாவும் சனிபகவானுக்கு தெண்டனிட்டு நீர்முதுமையிலேவந்தால் நிர்வாகஞ்செய்யமாட்டேனிப்போது இளமையில்தானேவந்தால் நிர்வாகஞ்செய்வேனாகையால் என்பெண்சாதி சித்திரரேகை கெற்பமாயிருக்கிறாளவளுக்கு பிள்ளைபிறந்த பிறகுவந்து என்னையிரட்சிக்கவேண்டுமென்று சொல்வதுகேட்டு சனிபகவானும் உனக்குபிள்ளைதானேபிறக்கும் அப்பிள்ளைக்கு கலியாணம் பண்ணினபின்பு வருகிறேனென்று சொல்லிப்போனாரதனபின்பு சுந்தவீரராசனுக்கு பிள்ளைபிறந்தது அந்த பிள்ளையானாளொருமேனியும பொழுதொருவண்ணமுமாகவளர்த்து சகலமானவித்தைகளும் ஆயுதபரிட்சையுங்கற்பித்து அதிவீரராசாவென்று பெயருமிட்டு அப்பிள்ளைக்குக் கலியாணம் பண்ணவேணுமென்று யோசனைபண்ணி அஸ்தமாநகரமென்றொருபட்டணம அப்பட்டணத்தையாளப்பட்ட ஆர்ச்சுனகேசரியெனவொருராசன் அந்தராசனுக்குசிரோமணியென்றொருபெண் உந்தபெண்ணைக்கேட்டு அதிவீரராசனுக்குகலியாணம்பண்ணி அதிவீரராசனும் சிரோமணியும்மதனும் ரதியும்போல வாழ்ந்துகொண்டு கலியாணம்பண்ணினநாள்முதல்சிரோமணியைவிட்டுப்பிரியாமல் ஒருவருஷம்வரைக்குமந்தப்புரம்விட்டு வெளியே புறப்படாமல்காமசிந்தையிலேமூழ்கிப்போயிருந்தானிதைதெளியப்பண்ணவேணுமென்றுபிள்ளையாகிய அதிவீரராசனை யழைத்துநாம்வேட்டைக்குப்போகவேணடும் வாவென்றுசொல்லி அழைத்துக்கொண்டு போனானந்தவேளையில்மாயாவதியென்கிறராட்சதன் சகமவடிவாய்வந்துசிரோமணியைப்பிச்சைகேட்க சிரோமணியும்வெளியில்வந்துபிச்சையிடவந்தாளதுகண்டுராட்சதன் ஆகாயமார்க்கமாய்சிரோமணியை

எடுத்துக்கொண்டுபோய் சமுத்திரங்கடந்து இமயகிரிபர்வதத்திலவைத்து சிரோன்மணியைப் பார்த்து ராட்சதனென்று யோசனை பண்ணுதே என்னுடையசொரூபத்தைப் பாரென்றுசொல்லி பதினாறு வயதுள்ள ரூபத்தைக் காண்பித்தான் அதை சிரோன்மணியும் பார்த்து இவன்மாயாவாதி யென்கிறதற்குசந்தேகமில்லை நாமென்னசெய்யப்போகிறோமென்றுபயந்து நடுங்கிக்கொண்டு நம்முடையவிதி இப்படியிருந்ததோ முப்பதுநாள்குழந்தையை விட்டுவந்தோமே அதுஎப்படிபோய்விட்டதோவென்று யோசனைபண்ணி ராட்சதனைப் பார்த்து உம்முடைய அழகும் வல்லமையும் யாருக்குவரப்போகிறது உம்மைப்போல் நாயகன் எனக்குக்கிடைத்தது முன்செய்தபுண்ணியவசந்தான் ஆனால் எனக்கு பத்துவருஷத்திற்கு ஒருநோன்புண்டு அந்நோன்பு முடிகிறவரைக்கும் புருஷர்முகம் பார்க்கப்போகாதென்று சொன்னாள் நல்லது அப்படியே நோன்புமுடிகிறவரைக்கும் உன்முகம் பார்க்கிறதில்லை நீ சுகமாயிருவென்று சொல்லி சிரோன்மணிக்குத் தேவையானவஸ்துக்களெல்லாம் கொடுத்துக்கொண்டிருந்தான் இந்தமட்டுந்தானறிவேனென்று கட்டிலின் முதற்கால் சொல்லிற்று,

கட்டிலின்முதற்கால்கதை முற்றிற்று.

கட்டிலின் இரண்டாங்கால் கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கனும்வேதாளத்தைக் கட்டிலின்காலிற் பிரவேசிக்கச்செய்து கட்டிலினிரண்டாங்காலைப்பார்த்து நீயாவது ஒரு கதை சொல்லென்றுகேட்க அதற்குஇரண்டாங்காலும் வாருமையா விக்கிரமார்க்கராசனேகதையைசொல்லுகிறனதைக்கேளும் அந்தசிரோன்மணியைராட்சதனெடுத்துக்கொண்டுபோனசெய்தி சுத்தவீரராசன கேள்விப்பட்டு சிரோன்மணிக்குகுழந்தைபிறந்து ஒருமாதங்கூடவில்லையே அக்குழந்தை எப்படிபிழைக்குமென்று அதிகக்கோபமாய் தளச்சம்ரம பண்ணி சகலமானபேரையுங் கூட்டிக்கொண்டு ராட்சதனிருக்கிற இமயகிரிபர்வதத்திற்குப்போனார்கள் அதுகண்டுராட்சதனும் சுத்தவீரராசனை அதிவீரராசனையும்யானைகுதிரை சகலமானபேரையுங் கலவாகச் சமித்துப்போட்டான் சுத்தவீரராசனும் அவனுடைய பிள்ளையும அவனுடையதளமும் முழுகிப்போனசெய்தி அவனுடைய யெதிராளியறிந்து அஸ்தினாபுரிபட்டணத்திற்கு படையெடுத்து வந்து பட்டணத்தைச் சுற்றிக் கொண்டான் அதைப்பார்த்து உச்சாதேவியும் சுத்தவீரராசனுடைய தேவிமாரேழுபேரும்குழந்தையை யெடுத்துக்கொண்டு இரவில்தானே புறப்பட்டு சிங்காரபட்டணத்திற்குவந்து ஒருதர்மசாலையிலே யிருந்தார்கள் அந்தப்பட்டணத்தை யாளப்பட்ட மாளவராசா ராத்திரிப்பதினைந்து நாழிகைக்குப் புறப்பட்டுநகர்சோதனை பார்த்துவருகிறபோது தர்மசாலையிலேயிருக்கிற சுத்தவீரராசனுடை

யதேவிமாரேழுபேரும் தாம்பிறந்ததும் வளர்ந்ததும்ராசாவும்பிள்ளைகளும் மூழ்கிப்போனதும் அப்பட்டணத்தில் தர்மசாவடியில் வந்திருக்கிற குழந்தைக்கு பாலில்லாம லவஸ்தைபடுகிறதுஞ்சொல்லி நமதுதலையெழுத்து இப்படியிருந்ததோவென்று வருந்தப்படுவதைமானபராசன்கேட்டு அரண்மனைக்குவந்து விடிந்தவுடனேமந்திரியையழைத்துதர்மச்சாவடியிலிருக்கிற அதிவீரராசன் தேவிமாரேழுபேருக்கும் உச்சாதேவிக்கும் எட்டுபல்லக்கனுப்பி அழைத்துவரச் சொன்னார் அப்படியே யழைத்துக்கொண்டு வந்தார்கள் அதன்பின் அவர்களுக்கு ஒருவீடுவிட்டு அவர்களுக்கு வேண்டியதெல்லாங்கொடுத்து குழந்தைக்கு பாலுக்காக பத்துபசுவுங்கொடுத்து குழந்தையை பத்திரமாய் பார்த்துக்கொண்டு வரச்சொன்னார் அப்படியே காளொருமேனியும் பொழுதொருவர்ணமுமாக வளர்த்து அகாசூரனென்று பெயருமிட்டு பதினெட்டு பாஷையுஞ்சகலகற்பனைவித்தையும் ஆயுதபரிட்சையுங் கற்பித்து சாமார்த்தியனாய் பத்துவயதா யிருக்கும்போது ஒருநாள்பாட்டிமாரேழுபேரையு மழைத்து என்னுடைய தாயாரெங்கே தகப்பனாரெங்கே நீங்களேழுபேரும் சுமங்கலிபர்களா யிருக்கிறீர்களே ஆனபடியால் என்னுடையபாட்டனெங்கே உள்ளபடி சொல்லுங்களென்று கேட்க அதுகேட்டு சித்திரரேகையும் நம்முடைய பட்டணம் அஸ்தினாபுரி உன்பாட்டன்பேர் சுத்தவீரராசன் உன்தகப்பன்பேர் அதிவீரராசன் உன்னுடையதாயார் சிரோமணி நாங்களேழுபேரும் உனக்குபாட்டிமார் உன்னுடையதகப்பன் அதிவீரராசனும உன்பாட்டன் சுத்தவீரராசனும் சேனைகளை யழைத்துக்கொண்டு ஒருநாள்வேட்டைக்குப்போனார்கள் அந்தவேளையில் மாயாவதியென்கிற ராட்சதன சத்த சமுத்திரமுங்கடந்துவந்து உன்தாயாராகிய சிரோமணியை ஆகாயமார்க்கமாக யெடுத்துக்கொண்டு போய்விட்டான் வேட்டைக்குப்போனராசனும் அவர்குமாரனுங்கேட்டு அதிககோபமாய் அரண்மனைக்கு வந்து எங்களுடனே சொல்லிவிட்டு தளசேகரம் பண்ணிக்கொண்டு மாயாவதியென்னும ராட்சதனிருக்கிற இமயகிரிபர்வதத்தை நோக்கிசத்தசமுத்திரமுங்கடந்துபோனார் அதைராக்ஷதன்கண்டு அடிபெண்ணே உன்னுடைய புருஷன்மாமன் இன்னுஞ்சகலமானபேரும ஆயுதமுஸ்திப்புடனே தளசேகரம பண்ணிக்கொண்டு வருகிறார்கள் பார்த்தையாவென்றுசொல்லி புறப்பட்டு அவனுக்கெதிரேவந்த சகலமான பேரையுங் கல்லாகச்சபித்துப்போட்டா னச்செய்தி தாயாதிதெரிந்து படையோடு புறப்பட்டுவந்து எங்களைத்துரத்திவிட்டு பட்டணத்தைச் சுற்றிக்கொண்டா னதுகண்டு நாங்களுன்னை யெடுத்துக்கொண்டு வந்துவிட்டோ மப்போமுப்பதுநாளையகுழந்தையா யிருந்தாய் இப்பட்டணத்தில் தர்மசாவடியில்வந்துசேர்ந்து அழுதுக்கொண்டிருக்கும்போது யிப்பட்டணத்தையாளப்பட்ட மானபரராசராத்திரி 1௫ நாழிகையில் நகர்சோதனைக்குவந்தவர் நாங்களெட்டுபேரும் தாபந்திரியப்பட்டுக்கொண்டிருக்கிறதைக்கேட்டு இவர்கள் இன்னாரென்று தெரிந்து அரண்மனைக்குப்போய் பொழுதுவிடிந்தவுடனே எங்களுக்குப் பெருக்

களுக்குப்பேருக்கோர் பல்லக்கனுப்பி அழைத்துவரச்சொல்லி ஒரு அரண்மனையில்விட்டு அன்றுமுதல் இன்றையவரைக்கும் ஒரு குறைவுமில்லாமல் நடப்பித்துவருகிறானென்று பாட்டியாகிய [illegible]த்திமோகை சொன்னாள் அதாசூரனும் இதைக்கேட்டு மகா துயரப்பட்டு ஈஸ்வரனைத் தோத்திரஞ்செய்து முக்காடிட்டிப்படுத்துக்கொண்டிருக்கக்கண்டு பாட்டிமாரேழுபேருமவந்து தமபி அப்பா இன்றைக்கேன் நீகிலேசமாய்ப்படுத்திருக்கிறாயென்று தட்டியெழுப்பி சாப்பிடச்சொன்னார்கள்.

அதுகேட்டு அதாசூரனும் பாட்டிமாரைப்பார்த்துநான்நித்திரை செய்யும்போது ஒருசொற்பனங்கண்டேன் அக்தென்னவென்றால் நானொருவனாகவடதிசைக்குப்போய் அந்தஇராட்சதனைக் கொன்றுஇருச்சியத்தையும் எனவசப்படுத்தி எனதாயாரையு மழைத்துக்கொண்டு என்தகப்பன் பாட்டன் சகலமானபேரையும் எழுப்பிக்கொண்டுஉங்களையழைத்துக்கொண்டு நம்முடைய பட்டணத்திற்குப்போய் இராச்சிய பரிபாலனஞ்செய்யும் படிகண்டேன் ஆகையால்எனனைப்பிரயாணஞ்செய்து அனுப்பிவையுங்களென்றுசொன்னான் அதுகேட்டு பாட்டிமாரும் நீ ரக்ஷதனைசெயிக்கப்போவதும்வருவதும் உன்னாலாகுமோ நீயோசிறுபிள்ளையாகையால் உனக்குச்சமர்த்துண்டானால்நம்முடையபட்டணத்தை பிரதேசத்தான் ஆண்டுக்கொண்டிருக்கிறானே அவனைச் சயித்துப்பட்டணத்தை அரசாட்சிசெய்யும்படிவல்லமையுண்டானால் அதற்குப்பிரயத்தனஞ்செய்யுமென்றுசொன்னார்கள்அதுகேட்டுநான்அசத்தியம் இமயகிரிபர்வதத்திற்குப்போயஎன்தாய்தகப்பனைப்பார்க்காமல் என்பிராணனைவைத்திருக்கிறதில்லையென்றுசொன்னான் அதைஜாவினிடத்திற்குப் போய்ச்சொல்லி அவருடைய வுத்திரவுபெற்றுக்கொண்டுபோவென்று சொன்னார்கள் அதுகேட்டு அப்படியே மானிடராசாவினிடத்திற்குப்போக அவரும் அதாசூரனென்கிற ராசகுமாரனைப் பார்த்து மகாசந்தோஷமாய் எங்கேவந்தாயென்று கேட்டதற்கு என்னையுமபயணப்படுத்தி அனுப்பிவையுமென்று சொன்னான் அதுகேட்டு தாய்தகப்பன் யானைசேனைபரிவாரங்களெல்லாமழிந்து தங்களிடத்தில எத்தனைநாளைக்கு இப்படிவாங்கிச் சாப்பிடுகிறது பத்துவருஷமாயெங்களைக்காப்பாற்றிரட்சித்தீரே இப்பவும்நான் இமயகிரிபர்வதத்திற்குப் போய்வருகிறவரைக்கும் இவ்விடத்திலிருக்கிறபேரை ரட்சித்து என் மானிடராசனும் அதாசூரனுடைய மிகுந்தவல்லமைக்கு மகாசந்தோஷப்பட்டு அவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்து தன்பாட்டிமார் ஏழு பேரையும்பார்த்து மானிடராசாவிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டுவந்தேன் ஆகையால் நான் இமயகிரிபாவதத்திற்குப் போய்வருகிற வரைக்கும நீங்கள் பத்திரமாயிருங்களென்றுசொல்லி அவர்களிடத்தில்விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான் இதுவரைக்கும்நானறிவேனென்று இரண்டாங்கால்கதை சொல்லிமுடித்தது.

கட்டிலிரண்டாங்கால்சொல்கதை முற்றும்.

கட்டிலின்மூன்றுங்கால் கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கராசாவும் இனிமேலாகிலும்பேசாமடந்தைபேசப்போகிறாளா அதில்லை ஆசையால வேதாளகதைப் பார்த்துக்கட்டிலின மூன்றுங்காலில் பிரவேசிக்கச்செய்துநீயாவது ஒருகதைசொலலென்றுகேட்க அதுகேட்டு மூன்றுங்காலும் விக்கிரமார்க்கனைப்பார்த்து நீரென்னை ஒருபொருட்டாக எண்ணிக்கதைச்சொல்லச்சொன்னீரே நானசொல்லுகின்றகதையைச் சற்றே செவிக்கொடுத்துக்கேளும அஃதென்னவென்றால் அந்தஅகாசூரன் அப்படியே இமயகிரிபர்வதத்திற்குப்போக பயணப்பட்டு செண்பகவனத்திற்குப்போனான் அவ்விடத்திற்குப்போகும்போது இவனுக்குமெத்த ஆயாசமும் இளைப்புமவந்தும்கிடடது அவ்விடத்திலிருந்த பத்திரகாளிகோயில்முன்பாக ஒருமரத்துநிழலிற்படுத்துககொண்டிருக்கையில் பத்திரகாளிபிரசன்னமாய்வந்து நித்திரைபண்ணுகிற இராசகுமாரனைப்பார்த்து மகாயோகசாலியாயிருக்கிறானென்று சந்தோஷப்பட்டு எழுந்து நீ உம்முடைய சங்கதிக்குவந்ததேதென்றுகேட்டாள்.

அதுகேட்டு அகாசூரனும் அம்மனுக்குசாஷ்டாங்கமாகதெண்டம்பண்ணி கைகட்டிககொண்டுநின்று நான்பயணமாய்ப் போகிறசங்கதியைச்சொல்லி அம்மாஉன்கடாட்சத்தினாலேநானினைத்துவந்தகாரியமெல்லாஞ்செயமாகவேணுமென்றுசொன்னான் அதுகேட்டுபத்திரகாளியும நீபோகிறகாரியமெல்லாம்சித்திக்கும் அதற்கொருஉபாயஞ்சொல்லுகிறேன்கேள் அஃதென்னவென்றால் ஒருகுளிகை தருகிறேன் அதைப்போசித்தால் பசியாமலிருக்குமென்று ஒருகுளிகைகொடுத்து எப்படிபபட்டவிடையூறும்வந்தாலும அதுநீங்கும பொருட்டு ஏழுமணியாம்பருக்கைகல்லைக்கொடுத்து என்ன இடர்வந்தபோதும் அதற்கெல்லாம் ஒருகல்லைப்போட்டால் விலகிப்போகுமென்றுசொல்லி ஒருதங்கக்குதிரைகொடுத்து இந்தக்குதிரைமேலேறிக்கொண்டு சுகமாகப்போயவருவாயென்று பத்திரகாளியம்மன் சொல்ல அப்படியே அதையெல்லாம வாங்கிக்கொண்டு அம்மனிடத்தில்விடைபெற்றுத் தங்கக்குதிரைமேலேறி வலதுகாலைத்திருகினான் அப்போது அந்தக்குதிரையானது ஆகாசமார்க்கமாய்ப்பறக்க அப்போதுஇமயகிரி பர்வதத்தைக்கண்டு அந்தப்பர்வதத்தின் உச்சியிற்போயங்கிருந்து குதிரைவிட்டிறங்கிப் பர்வதமுழுதுஞ் சுற்றிப்பார்த்துவருகையிலே ஒருகுகையில்தன்தாயாகிய சிரோமணியிருந்தாள் அந்த அம்மாளைக்கண்டு இந்தப்பர்வதத்திலிருக்கின்ற மாயாவதியெனகிறராட்சதன் அஸ்தினாபுரியையாளப்பட்டசுத்த வீரராசனுடையமருமகன் சிரோமணியம்மாளை இராட்சதன்ஆகாயமார்க்கமாக எடுத்துக்கொண்டு வந்திருக்கிறானே காணவில்லையோ நீயாரென்னகேட்டான் அதற்குச்சிரோன்மணிஅம்மாள்நான்தான்சுத்தவீரராசனுடையமருமகள என்பேர்சிரோன்மணி அப்பாநான்தானுன்தாயார் என்னைராட்சதனெடுத்துவரச்சே நீ மூப்பதுநாளைய குழந்தையென்றுசொல்லும்போது சிரோன்மணிஸ்தன்னியமிரண்டும்பால்சொ

ரிந்து அதாசூரன்முகத்தில்விசிரியது அதுகண்டு அதாசூரனும் இவன் நம்முடையதாயார்தானென்றுதெரிந்து என்னுடையதகப்பன்பாட்டன் இன்னுமற்றுமுள்ளசகலமானபேருங்கல்லாய்ச்சமைந்திருக்கிறார்களே அவர்களெங்கேயென்றுகேட்டான் அவர்கள்தென்திசையிலே கல்லாய்ச்சமைந்திருக்கிறார்கள் மேலும என்னைப்போல் நூறுபேருடையராசகன்னிகைகளை எடுத்துக்கொண்டுவந்து இப்பேர்ப்பட்டகுகையில் அடைத்துவைத்திருக்கிறான் அந்தகன்னிகைகளுக்குரியவர்கள் தளமெடுத்துவந்தால் அவர்களையெல்லாம் கல்லாய் சபித்துப்போட்டான் அவனைச்செயிக்கத்தக்கினபேர் ஆருமில்லையாகையால் இப்பொழுது இருட்சதன் வருகிறவேளையாயிற்று நீ இருக்கிறதைக்கண்டால்உன்னைக்கொன்றுபோடுவான் உன்னாலே ருட்சதனை வெல்லுதற்காகுமோ போவென்றுசொன்னான் இப்படிதாயார் சொன்னவார்த்தையைக்கேட்டு அம்மா பத்திரகாளிகிருபையினாலே ராட்சதனை வென்றுபோடுவேன் இன்றைக்குருட்சதன்வந்தால அவனைக்கண்டு எவ்விதத்திலாவது அவனுடைய உயிர்நிலையையறிந்துசொன்னால் நானெப்படியாகிலும் அவனைச்செயிக்கிறேனென்றுசொன்னான் அதுகேட்டுத் தாயாரும் அப்படியேயறிந்துசொல்லுகிறேன் நீஇப்பொழுது இவ்விடத்திலிருக்கவேண்டாம் கண்மறைபப்போயிருந்து நாளைக்குவாவென்று மகனையனுப்பிவைத்தாள் அப்படித்தாயார்சொன்னபடியே மறுவனத்திற்குப் போயிருந்தான் அப்படியிருக்க இவ்விடத்தில் சிரோன்மணியானவள் முக்காடிட்டுப்படுத்துக் கொண்டிருந்தாள சாயங்காலமராட்சதன்வந்துசிரோன்மணியைப்பார்த்து தினகாலம நான்வருகிறவேளைபார்த்து முன்னதாகவே எதிர்கொண்டுவருவாயே இன்றைக்கு முக்காடிட்டுப்படுத்திருக்கிறதென்னவென்றுகேட்க அதுகேட்டுசிரோன்மணியும நான்உன்னை நம்பியிருக்கிறேனே நீகாலமேபோனாலசாயங்காலம்வருகிறீர்நீர்வருகிறவரைக்கும் வழிபார்த்திருக்கிறேன் ஆகையால்உமக்கும எனக்கும்உயிரிருக்கிறது நீர்வருகிறதும வராததும அறிகிறதற்கு உம்முடையஉயிர்நிலையைச்சொல்லவேண்டும் அப்படி நீர்சொல்லாமற்போனால் என்னுடையஉயிரைமாய்த்துவிடுவே னென்றுசொன்னாள் அப்படிச்சொன்ன சிரோன் மணியைப்பார்த்து நாம் வஞ்சனையாய்ச் சொல்லலாகாதென்றெண்ணி நல்லதுபெண்ணே என்னுடைய உயிர்நிலை வடதிசையிலே சிங்காரவனத்தில் ஒருதிருக்குளமுண்டு அக்குளத்தினடுவே ஒருமண்டபமிருக்கின்றது அந்தமண்டபத்திற்கு வாசற்படிக்குகதவிட்டிருக்கும் அந்தக்கதவைத்திறந்து பார்த்தால் உள்ளேகிளிகூண்டிருக்கும்அதில்பஞ்சவர்ணக்கிளியிருக்கிறது அந்தகிளிதான் என்னுடையவுயிரென்று உண்மையாகச் சொன்னான் அவைகளைக்கேட்டுச் சிரோன்மணியும்நீர் சொன்னது மெய்தானோவென்றுகேட்டாள் அதற்குநான் தப்பிதமாய சொல்வேனோவென்று சத்தியமபண்ணிக்கொடுத்து இருட்சதனுங்காலமேபுறப்பட்டு வெளியேபோனான் அந்தச்சமயத்தில அதாசூரனவந்துதாயாரைக்கண்டு ருட்சதனுடைய உயிர்நிலையையறிந்தாயாவென்று

கேட்க அதற்குச்சிரோன்மணியும் ராட்சதனுயிர் நிலையை அடையாளப்படிசொன்னான் அதுகேட்டுநல்லது நான்போய்வருகிறேனென்றுசொல்லி தாயாருடைய அனுமதிபெற்றுக்கொண்டு தன்குதிரையின்மேலேறிவடதிசைநோக்கிப் போகும்போது மல்லிகார்ச்சுனமெனவொருபட்டணம் அந்தபட்டணத்தையாளப்பட்ட வல்லமை கேசரியென்றொருராசனந்தராசனுக்கு இந்திரரேகையென்றொருபெண் அந்தப்பெண்ணுக்கு சகலவிற்பன்னனாயிருக்கிற மாப்பிள்ளையைத்தேடிக் கலியாணமபண்ணிக் கொடுக்கவேண்டுமென்று ஒரு உப்பரிகையில்வைத்து நூறுபேர்தாதிமாரையும் ஊழியஞ்செய்யவைத்தான அவள்குளிக்கிறநீர் ஒருஆறாய்ப்போகிறது அந்தஆற்றங்கரையிலே சிலராசாக்கள்காமினியினாலடிப்பட்டு அந்தஆற்றில்சாகந்நீர ஸ்நானஞ்செய்கிறபேரும்இப்படிவெகுபேர் இருக்கிறதைக்கண்டு அதாசூரனென்கிற இராசகுமாரன் குதிரையைநிறுத்திப்பார்த்து இந்த ஆற்றிலேமஞ்சள்வர்னமாகத்தண்ணீர்வருகிறது இதல்லாமல் முல்லையிருவாட்சி செண்பகபுட்பங்களும் வெற்றிவேர் மருக்கொழுந்து எலுமிச்சம பழங்களுமாய்த் தண்ணீரெல்லாம் மயிர்கலந்துவருகிறதே இதென்ன அதிசயமென்றுஅந்த ஆற்றங்கரையிலிருக்கிறபேரைக் கேட்டான் அதுகேட்டுஅவர்கள் இந்தசலம் இந்திரரேகை ஸ்நானமபண்ணின பரிமளகங்காநதியென்றுசொன்னார்கள் அதுகேட்டு சந்தோஷப்பட்டு ஒரு பெண்ணைகப்பிறந்த கன்னிகை ஸ்நானஞ்செய்கதில நாமகனேகிறதாவென்று சொர்னகுதிரையின்மேலேறிக்கொண்டு ஆகாயமார்க்கமாக ஆறுகடந்து அக்கரையிற்போய் ஒருதடாகத்தி னருகேயிறங்கி ஸநானஞ்செய்து ஜெபதபமுடித்துக்கொண்டிருந்தான் அப்படியிருக்கும்போது இந்திரரேகையானவள் அந்தராசகுமாரன் ஆகாசமார்க்கமாய்ப்போனதைப் பார்த்தால் மெத்தவும் வல்லமைசாலியாயிருக்கிறான் ஆகையால் அவனுக்கே மாலையிடவேண்டுமென்று மகாசந்தோஷமாகத் தகப்பனாகியவல்லமைகேசரியினிடத்திற்குப்போய் தெண்டம்பண்ணித் தகப்பனைப்பார்த்துச் சொல்லுகிறாள் ஓயா ராசகுமாரன் சொர்னகுதிரையின்மீதி லேறிக்கொண்டு பட்டணத்திற்கு மேற்புரமாகச் சநதனத்தடாகத்தருகே யிறங்கியிருக்கிறான் அந்தராசகுமாரனுக்கே நான்மாலையிட வேணடும ஆகையாலஇதற்குத்தடைசொல்லாமல நீஇந்தட்சணமேபோய் அழைத்துவரவேணடுமென்றுசொன்னாள் மகள்சொன்னதைக்கேட்டு அப்படியே அந்தராசகுமாரனையழைக்கப்போகும்போது அதுகண்டு அதாசூரன்தானவந்ததைஇந்திரரேகைபார்த்து நம்மை அழைத்துவரும்படிமனுஷரை அனுப்பிவித்தாளென்று யோசனைசெய்து பத்திரகாளி தனக்குக்கொடுத்தமணியாமபருக்கைக் கல்லையெடுத்துத் தனகுதிரைக்குக் கொடுத்துத்தானுஞ்சாப்பிட்டு அதைச்சாப்பிட்டவுடனே நூறுவயதுசென்றகிழவனுமார்கள் இப்படியிருக்க வல்லமை கேசரிராசன்வந்து பார்க்கும்பொழுது கிழவனும கிழக்குதிரையுமா யிருக்கிறதைக் கண்டு நமமுடையகுமாரத்தி இந்தக்கிழவனுக்கு மாலையிடவேண்டுமென்று சொனனாளே இவனைப்பார்த்தால் அசங்கியமாயிருக்கிறதேயென்று திரும்பிப்

பேரய் தன்மகளையழைத்து அம்மா நீநல்லயோசனைசெய்தாய் நீசொன்னருசகுமாரனைப் போய்ப்பார்த்தால்மெத்தவும் விருத்தாப்பியமாயிருக்கிறான் வாயில்நீர்வடி றது கண்ணில்கீரைவிரைப்போல் இருக்கிறது அவனேருகிறகுதிரையோ மெத்தவும் அசங்கியமாக யிருக்கிறதென்றுசொனனன் அதுகேட்டுத் தகப்பனைப்பார்த்து அவரெப்படியிருந்தாலுஞ்சரி அதெல்லாம் மாயாசித்தாயிருக்கும் நானறிவேன்நீர்போயழைத்துவாருமென்றுசொல்லி ஒருபெரியபலலக்குகொடுத்து அனுப்பினையத்தாள் அப்படியே அந்தப்பல்லக்கையெடுத்துக் கொண்டுபோய் அந்தருசனைப்பார்த்து ஓ கிழவனாரே நம்முடைய குமாரத்தியாகிய இந்திரரேகை உம்மை அழைத்துக்கொண்டு வரச்சொன்னாள்வாருமென றழைக்க அதாகுரன் நம்மையேன் அழைக்கிறீர் உம்முடையகுமாரத்திசிறுபெண் நானோவிருத்தாப்பியன் என்னை அவள கண்டால் அரங்கியப்படுவாளென்றுசொலல அதுகேட்டு வல்லமைகேசரியும் நீரென்னமாயிருந்தாலுஞ்சரி அந்தப்பல்லககின்மேலேறிக்கொணடு நமமுடையஅரணமனையக்து போகவேண்டுமென்று சொ னார் அதற்குநான்இதுவரைக்கும் பல்லககுமேலேறினதில்லை இந்தக்குதிரையின்மேல்என்னைத்தூககிவையுங்களென்று சொலல அப்படிதூக்கும்பொழுது குதிரை இரடிவிழுந்திட அந்தருசன்கண்டு பத்துபேரைவிட்டுக் குதிரையும அவனையும விழுவொட்டாமல பிடித்துக்கொண்டு அரண்மனையிற்சேர்ந்தான்.

அதுகண்டு இந்திரரேகை சந்தோஷமாக எதிரேவந்து கைலாகுகொடுத்து அழைத்துக்கொண்டுபோய சிமமாதனத்தின்பேரில் உட்காரவைத்து அவருககுக்கால்பிடித்து உபசாரம்பண்ணிக்கொண்டிருக்கையில் தாதிமார்கள்வந்து சமையலாச்சுதென்றுசொன்னார்கள் அது கேட்டு இந்திரரேகையும் கிழவனைப்பார்த்துக்குளிக்க எழுந்திருமென்றுசொல்ல அதற்குநான் எழுந்திருக்கமாட்டேன் எனக்குத்தள்ளாதென்றுசொன்னான் அதுகேட்டு சித்திரரேகை எழுந்திருந்து நாற்காலிபோட்டு அதன்பேரில் கிழவனாரைத்தூக்கிவைத்து வெந்நீர்விட்டுதேகமுழுதுஞ்சுத்திபண்ணி இந்திரவர்ணப்பட்டாலே சாரமெல்லாந்துடைத்து மேகவாணத் துகிலெடுத்துககொண்டுவந்து ரத்தினக்கம்பளியின்பேரிலுட்காரச்செய்து பொற்பளளயத்தில் நல்லபதார்த்தகளுடன் சாதம்பரிமாறி சாப்பிடுமென்று சொன்னாள இநம்பலா யிரும்பிக்கொண்டு வாயில நீர்வடியச்சாப்பிட அதில்கொஞ்சஞ் சாப்பிடமாட்டாமல்வைத்துவிட்டார் அதுகணடு இந்திரரேகைஅவருடையவாயைக்கழுவித்திண்ணக்கப்பிளியின்பேரில் உட்காரவைத்து தாம்பூலம் இடித்துக்கொடுத்தாள் அதைப் போட்டுக்கொணடு நித்திரை பண்ணினான் அதன்பிறகுசித்திரரேகை எழுந்திருந்து கிழவனார்சாப்பிட்டமீந்திருந்தசாதத்தைத் தான்சாப்பிட்டிருக்கையில கிழவனார் நித்திரைநீங்கியெழுந்திருந்து இந்திரரேகையைப்பார்த்து அடிபெண்ணே நீருசகுமாரத்

வருகையில் அந்தவழியில ஒருபத்திரகாளிகோயிலிருந்தது அவ்விடத்திற்குவந்து அம்மனைத்தோத்திரஞ்செய்து வது அந்த அம்மனுடையவரப்பிரசாதத்தினலே சதசமூத்திரங்கடந்து இமயகிரிபர்வதத்திற்குப்போய் என்னுடைய தாயாராகிய சிரோன்மணியம்மாளைக்கண்டு அவளுக்குத் தெரிபஞ்சொல்லி விட்டு அந்தருட்சதன் உத்திரதிசையிருக்கிறன் அவனைச்சம்மாரஞ்செய்து என்னுடைய பாட்டன் தாய் தகப்பனையுஞ் சிந்தனையில்லாமல எழுப்பிக்கொண்டு என்னுடையபட்டணமேபோய்ச் சேரவேண்டி வந்தேனென்று சொன்னன் இதுகளையெல்லாஞ் சித்திரரேகைகேட்டு அதிக சந்தோஷமாய் தன்தகப்பனகிய வல்லமைசேசரியண்டைக்குப்போய தேவரீர் அழைத்துவந்த கிழவனுடைய சரித்திரம் இனனவிதமென்று புருஷன சொன்ன வசனப்படி தகப்பனுக்குத் தெரியப்படச்சொன்னன் அதை ராசன்கேட்டு மிகுந்த சந்தோஷததையடைந்து அதாசூரனுகிய ராசகுமாரனிடத்திற்குவந்து அவனைத்தழுவிக்கொண்டு உமமுடைய மகத்துவந் தெரியாமல அசங்கிதப்படுக் கொண்டிருந்தோம இப்போதுஎங்களுக்குமிகவுஞ்சந்தோஷமாயிற்று ஆகையால் நம்முடைய குமாரத்தியாகிய இந்திரரேகையைவிவாகஞ் செய்துக்கொண்டு நமமுடைய ராச்சியமெல்லாம பரிபாலனஞ்செய்து நம்மைரட்சித்துக் கொணடிருமென்று சொல்லித் தன்னுடைய கொலுச்சிம்மாசனத்திற்குவந்து தன்னுடையமந்திரிபிரதானிகளையழைத்து இந்தட்சணம் சௌபாக்கியவதியாகிய குமாரத்திக்கு சுபமங்கிலிய கல்யாணமுகூர்த்தம் நடப்பிக்க வேண்டுமாகையால் அதற்குவேண்டிய சாமக்கிரகங்களுஞ் சீக்கிரத்தில் ஜாக்கிரதைப்டுத்துமென்று வேதபுரோகிதனை யழைப்பித்து முகூர்த்தத்திற்குநாளிட்டு அரசாணிகால்நட்டு ஆகாயமளவிடத்தக்க பந்தலும்போட்டு ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களுக்குத் தாமபூலமும்வைத்து மணவரையுஞ்சோடித்து மணப்பொங்கலிட்டு பெண்ணுக்கும் பிளளைக்கும் நலங்கெடுத்து ஸ்நானஞ்செய்து சுகந்தபரிமளாதிகளுடனே ஆடையாபரணந் தரிப்பித்தபிறகு மணவரையின்பேரி லுட்கார்ந்து அக்கினிசாட்சியாகவும் ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களுமரிய இந்திரரேகைக்கு அதாசூரன திருமங்கிலியந்தரித்து யானையினபேரில் பட்டணப்பிரதிஷணமவந்து அரண்மனைக்குப்போய்பிள்ளையும்பெண்ணு மதனும்ரதியும்போல ஏகபோகமாயிருக்கும்போது ஒருதற்கு ராசன்இந்திரரேகையைப்பார்த்து அடிபெண்ணேநான் சிங்காரவனததிற்குப போயவர வேண்டுமென்றுசொல்ல அதுகேட்டு சந்தோஷமாய்த் தன் னுடைய சொர்னக்குதிரையின்மேலேறிக்கொண்டு ஆகாயமார்க்கமாக வெழும்பிச் சிங்காரவனத்தின் சுனையருகேநின்று நிதானித்துப்பார்க்கும்போது அந்தச் சுனையினருகேமண்டபத்திற்குப் போகவேண்டுமென்றால் ஜலமானது மிகுதியாயிருப்பதைக்கண்டு பூமியைக் கண்டுபிடிக்கக் கூடாதாகையால இதற்கெப்படியென்று யோசனைசெய்து 'பத்திரகாளி கொடுத்தமணியாம் பருக்கையையெடுத்து சுனைக்குள்ளே போட்டு பிரங்கி

மண்டபத்தினருகேபோய்பார்த்து அகனுடையகதவைச்சாற்றி முத்திரைபோட்டு மகாபலர்கூடனிருக்க அந்தக்கதவைத் திறக்கக் கூடாதென்றெண்ணி பக்கிரகாளிகொடுத்த மணிபாம்பருக்கையிலொன்றையெடுத்துக கதவின்மேற்போட அந்தக்கதவானது திறந்தவுடன் உள்ளேநுழைந்து பார்க்கையில் ஒருகிளிகூண்டில் பஞ்சவர்ணக்கிளியிருந்தது அக்கிளியைப்பிடித்துக்கொண்டு பாதாளச்சுனையைவிட்டுக்கரையேறிவந்து சொர்ணக்குதிரைமேலேறி புறப்பட்டு இமயகிரிபர்வதம்வருகிறதற்குமுன் அந்தராட்சதனுக்குச் சுரங்கண்டு வருத்தமாயிருக்கிறபோது அதாசூரன் அவன்முன்னேபோய்நிற்க அதுகண்டு ராட்சதன் நீயாரடா மானிடவன் என்னுடைய பர்வதத்திற்குள்ளாகச்சற்றுகிலும்பயப்படாமல்வந்து நிற்கிறாயென்றுகேட்க அதுகேட்டு அதாசூரன் அடாராட்சதா என்பட்டணத்திற்குவந்து எனக்கொருவருமில்லாமல் சிறையெடுத்துக்கொண்டு வந்தாயே உன்னைநான் விடுகிறதில்லை உன்னுடையவுயிற்கிளி என்கையிலகப்பட்டதென்று கிளியைக்காட்டி நீதேசத்தராசாக்களையெல்லாம் கல்லாய்ச்சபித்தாயே என்வீட்டிலுஞ்சிறையெடுத்தாயே ஆகையால் இந்தக்ஷணம் கிளியைக்கொன்றுபோடுவேன் நீயும் திருதாவாய்ச் செத்துப்போவாய் ஆனபடியால் எனசிறையைவிட்டுவிடென்றுகேட்க அதற்கு ராட்சதனானவன் உன்சிறையாரென்றுகேட்க என்தாயாகிய சிரோன்மணியம்மாள்தான் அவளைவிட்டுவிடென்றுசொல்ல அதுகேட்டு ராட்சதன் உன்தாயாரை எடுத்துக்கொண்டுவந்ததேயல்லாமல் நானொன்று மறியமாட்டேன் மேலும்அந்தச்சிரோன்மணி தனக்குப்பத்துவருஷத்திற்கு ஒருநோன்புண்டென்றுசொன்னாள் அவள்சொன்னபடிக்குக் கற்பழியாமல்வைத்திருந்தேன இப்பொழுது குகைக்குள்ளிருக்கிற சிரோன்மணியையழைத்து உம்முடனே கூட்டிவிடுகிறேன் என்னுடைய வுயிற்கிளியை மாத்திரம் விட்டுவிடென்றுசொல்லஅதற்கு அதாசூரனும் கிளியைவிட்டுவிடுகிறேன் என்னுடைய தகப்பன்பாட்டன் சகலமானபேரையுங் கல்லாய்ச் சபித்துப்போட்டாயே அவர்களையெல்லாம் நரனாயெழுப்பிக்கொண்டுபோகிறதற்கு அந்தமந்திரத்தை யெனக்குச்சொல்லவேண்டுமென்றுகேட்டான் அதுகேட்டு ராட்சதனும் காம்பிறைத்தால்போதுமென்று அதாசூரனுக்கு அந்தமந்திரத்தைக்கற்பித்துக்கொடுத்தான்.

அந்தராசகுமாரனும் சிரகித்துக்கொண்டு பரீட்சைபார்க்கவேண்டுமென்று ஒருதிசையில அநேகர் ராசாக்கள் கல்லாயிருக்கிறதைப்பார்த்து அந்தராட்சதன் சொல்லிக்கொடுத்த மந்திரத்தைச் சொல்லச்சொன்னான் அதைச்சொன்னமாத்திரத்தில் கல்லாயிருந்த ராசாக்களெல்லாம் நிஜரூபமானார்கள அதுகண்டு அதாசூரன் நமக்கு மந்திரஞ்சித்தித்ததென்று மகாசந்தோஷமாகக் கிளியைக் கொன்றுபோட்டான் கிளியைக்கொன்றுபோடவே ராட்சதனெழுந்திருந்து அலறிக்கொண்டு மலைபோல்விழுந்தான் அதுகண்டு அதாசூரன்தாயார் தன்மகனைக்கட்டிக்கொண்டு அப்பா இறந்துபோனவர்களுக்கெல்லாம் உயிர்கொடுத்

தாயேயென்று வாழ்த்தினாள் அதற்கு அதாசூரனும்தாயாரைப்பார்த்து அம்மா நீ என் தகப்பன்பட்டன் மந்திரிபிரதானிசகலமானபேருங் கல்லாய்ப்போயிருக்கிறார்களாமே அவர்களெங்கேயிருக்கிறார்களம்மாவென்றுகேட்க அப்படியே மகனையழைத்துக்கொண்டுபோய் அவர்களையெல்லாங்காண்பிக்க அதுகண்டு அதாசூரனும் மந்திரத்தைச்சொன்னான் அதைச்சொன்னவுடனே சகலமானபேருமெழுந்தார்கள இதுவரைக்கும் நானறியேனென்று கட்டிலின்மூன்றாங்கால் சொன்னது

கட்டிலின்மூன்றாங்கால் சொல்கதைமுற்றிற்று.

கட்டிலின்நாலாங்கால்சொல்கதை.

அதுகேட்டு விக்கிரமார்க்கராசனும் இனிமேலாகிலும்பேசாமடந்தைபேசப்போகிறாளா இனிமேல் ஆர்கதை சொல்லப்போகிறார்களென்றுவேதாளத்தைக் கட்டிலின்நாலாங்காலிற் பிரவேசிக்கச்செய்த நாலாங்காலைப்பார்த்து நீயாவது ஒருகதைசொல்லென்றுகேட்க அதுகேட்டு நாலாங்காலும் விக்கிரமார்க்கராசனைப்பார்த்து நீர்என்னை யொருபொருட்டாகவெண்ணிக்கதைசொல்லச்சொன்னீரே நான்சொல்லுகிறதைக் கவனமாய்க்கேளும் அதென்னவென்றால் அந்த அதாசூரராசகுமாரன் கல்லாய்ச்சமைந்திருந்த தகப்பன்பட்டன் சகலமானபேரையும் எழுப்பிவிட்டான் அவர்களெழுந்திருந்து பார்க்கும்போது சொர்ணமயமாயிருக்கிற ராசகுமாரனையும் குதிரையையும்பார்த்து இவனாரோ தேவனோ ராட்சசனோ பிர்மாவோ விஷ்ணுவோவென்று பயந்து நடுங்கி ஓடிப்போகும்போது அதுகண்டுசிரோணமணியானவள் தன்புருஷனாய அதிவீரராசனுடைய கையைப்பிடித்துக்கொண்டாள் அப்போதுபெண்சாதியைப்பார்த்து உன்னை ராட்சதனெடுத்துக்கொண்டு போனானே இப்பொழுது நீவெளிப்பட்டவயணமென்னமேலும் நாங்களெல்லோருமகல்லாய்ப்போனவர்கள் இப்பொழுது நிசரூபமானதென்னவென்றுகேட்க அதுகேட்டுசிரோணமணியும் என்னைராட்சதன் எடுத்துக்கொண்டுபோனவுடனேநீங்களபுறப்பட்டு யுத்தத்திற்குவந்தீர்கள அதுகண்டுராட்சதன் உங்களையெல்லாங் கல்லாய்ச்சமைத்துவிட்டு என்னிடத்திற்குவந்து பலவத்காரம் பண்ணினான் அதற்கு நான்எனக்கொருநோன்புண்டு அந்தநோன்பு முடிகிறதற்குப் பத்துவருஷஞ்செல்லும் இதற்குள்ளாகநீபலவத்காரம்பண்ணினால் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளுவேனென்றுசொன்னேன் அதுகேட்டு அப்படியேகாலது இவள்நாணமிட்டுஎங்கேபோகப்போகிறாளென்று என்னைக்கொண்டு அந்தமலையிலிருக்கப்பட்ட குகையில் என்னையடைத்துவைத்தான் அன்றுமுதல் இன்றையவரைக்கும் அந்தச்சிறையிலிருந்தேன் அப்படியிருக்குமுன்னாலே நம்முடையபட்டணத்தில் நம்மிருவருக்கும்பிள்ளைபிறந்ததே அந்தப்பிள்ளையை பாட்டிமாவளர்த்து அதாசூரனென்றுபேருமிட்டு அவனுக்குப் பத்துவயதானவுடனே நம்முடையவூர் வோத்திரமெல்லாங் கேளவிப்பட்டுப் பத்திரகாளிசந்நிதிக்குப்போய்த்

தெண்டனிட்டு அவள்வரப்பிரசாதத்தினால் சொர்னக்குதிரைமேலேறிக்கொண்டு சத்தசமுத்திரங்கடந்துவந்து ராட்சதனைக்கொன்று உங்களையுமெழுப்பினேன் அதற்குநீங்கள பயப்படுவதென்னவென்றுசொல்ல அதிவீரராஜன் ஆச்சரியப்பட்டு அதாசூரன இறங்கியிருக்குமிடத்திற்குப்போய் அப்பாமகனேயென்று ஆலிங்கனமிட்டு தன்தகப்பனாகிய சுத்தவீரராஜனிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோக அவனும்பேரனைக் கண்டு அப்பா உன்னுடைய பாட்டிமாரெழுவரும் எங்கேயிருக்கிறார்கள் உன்தாயார் எங்கேயிருக்கிறாள் நீ இங்கேவந்தவகையென்னவென்று கேட்க அதாசூரனும் பாட்டனுக்கு நமஸ்காரமபண்ணி ஐயா என் தாயாரை ராட்சதனெடுத்துப்போனதும் அதுதெரிந்து நீங்கள்தளமெடுத்துவந்ததும் ராட்சதன் உங்களைக் கலலாச்சமைத்துவிட்டதும் அமைச்சத்திராதியறிந்து நம்முடைய பட்டணமுழுதும் பிடித்துக்கொண்டு என் பாட்டிமாரெழுவரையும் உச்சாதேவியையுந் துரத்திவிட அன்றிராத்திரி பதினைந்து நாழிகையில் அவர்களெழுவரும் மனங்கலங்கி குழந்தையாகிய என்னையுமெடுத்துக்கொண்டு சிங்காரபட்டணமவந்துசேர்ந்து அந்தப்பட்டணத்துக் கதிபதியாகிய மானபரராஜாவின் ஆதரணையினால் நாளதுவரையில் சுகமாயிருந்தோம் இப்படியிருக்க ஒருநாள் நமது பூர்வோத்தரமெல்லாவென்றும் பாட்டிமாரைக்கேட்க அவர்களால் தெரிந்து நமது தலைவிதி இப்படியிருந்ததாவென்று பத்திரகாளி சந்நிதிக்குப்போய் ஸ்தோத்திரமபண்ணி அந்த அம்மனுடையவரப் பிரசாதத்தினால் சொர்ணக்குதிரையும அட்டசித்தியையும் பெற்றுக்கொண்டு சத்தசமுத்திரமுந்தாண்டி இந்தப்பர்வதத்திற்குவந்து என்தாயாரைக்கண்டுபேசி ராட்சதனுயிர்க் கிளியையுங்கொன்று அவனையும நாசமபண்ணி உங்களையுமெழுப்பினேனென்றுசொல்ல அதுகேட்டு சுத்தவீரராஜனுஞ் சந்தோஷமடைந்து அப்பாவுங்களைப்போல் அநேகமராசாக்கள கல்லாயிருக்கிறார்கள அவர்களையுமெழுப்பி அவர்களுடைய சிறையையும் விடுவித்தால் உனக்குக் கீர்த்தியுண்டென்றுசொல்ல அப்படிநல்லதென்று அவர்களையெல்லாமெழுப்பிவிட்டு பாட்டன்முதலாகிய சகலமானபேரையு மழைத்துக்கொண்டு மல்லிகார்ச்சுன புரத்திற்குச் சமீபத்தில் வந்து பாளையமிறங்கி வல்லமைகேசரிராஜனுக்குத் தெரியப்படுத்த அதுகண்டு அந்தராஜனுஞ் சந்தோஷகரமாய்த் தன்மகளாகிய இந்திரரேகையுடனே விருந்துசெய்வித்தார்கள்.

இப்படியிருக்க இரண்டுநாளைக்குப்பிறகு அதாசூரனும் இந்திரரேகையைப்பார்த்து நாம் நமதுபட்டணத்திற்குப் போகவேண்டுமென்று சொல்ல தகப்பனைக்கண்டு தெண்டனிட்டு என்னைப் பெற்றுவளர்த்து இதுவரையில உங்களிரண்டுபேரில வைத்துக்காப்பாற்றி இப்பொழுது ஒருவருக்குப்பாணிக்கிரகஞ் செய்துகொடுத்தீரே அவரூருக்குப்போகவேண்டுமென்று என்னையழைக்கிறார் ஆதலால் நீங்கள சந்தோஷமாயனுப்பிவையுமென்றுசொல்ல அதுகேட்டுத்தாயுந்தகப்பனுஞ்சந்தோஷமாக பெண்ணுக்குக் கொடுக்கவேண்டியபலவரிசைகளுங் கொடுத்துத்தாங்களும் அஸ்தினாபுரியைப் பார்க்கவேண்டுமென்று புறப்பட்டு ஒருமுக

மாய் வருகையில் அதாசுரனும் மந்திரபலத்தினால் இவர்களெல்லாரை
யுஞ் சொர்ணக்குதிரையின்மேலேறிக்கொண்டு சத்தசாகரமுங்கடந்து
பத்திரகாளிகோயிலுக்கு முன்வந்திறங்கி அந்த மாகாளியைக்கண்டு
அம்மா உன்கடாட்சத்தினால் சகலசெயமும் பெற்றுவந்தேனென்று
விண்ணப்பஞ்செய்ய அந்தத்தேவியுஞ்சந்தோஷமாய் அப்பா அதாசு
ரா எல்லாரும் பசியாயிருக்கின்றபடியால் சகலரையுஞ்சாப்பிடச்சொல்
லென்று ஒருகுளிகைகொடுத்தமாத்திரத்தில் எல்லாரும் பதினெட்டு வ
கை பச்சடியுஞ்சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள் பிறகு அதாசுரன் ப
த்திரகாளிக்கு நமஸ்காரம்பண்ணி ஊருக்குப்போகவேண்டுமம்மாவெ
ன்று உத்திரவுகேட்க காளியுஞ்சந்தோஷமாய்ப் போயவாவென்று வா
ழ்த்தி ஒருவனுக்குபல்லக்கும் சகலதோஷபரிகார குளிகையுங் கொடுத்
தனுப்ப அந்தமகாகாளியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன்பா
ளையத்துடன் சிங்காரபட்டணத்திற்குச் சமீபத்திலவந்திறங்கி அந்தப்
பட்டணத்துச்சனங்கள் ஆரோசத்துராதி வந்திறங்கினானென்று பயந்
தோட அதாசுரனும் அவர்களைஓடவிடாமல் நிறுத்தி தன்மனுஷரை
யனுப்பி மானபரருசனுக்குத் தனவரலாறுமுழுதுந் தெரிவிக்கச்சொ
ன்னான் அதுகேட்டு மகாசந்தோஷமாய் தான்காற்றை அதாசுரன்
பாட்டிமாரெழுவருக்குங் கோலப்பாட்டிக்கும் அதாசுரன் பெதிர்வந்
து தெண்டம்பண்ணி அழைத்துக்கொண்டுபோய்த்தன்பாட்டன்முத
லானபேரையுங்காண்பித்து தங்களுடைய கடாட்சத்தினாலேவந்து சே
ர்ந்தோமென்று விண்ணப்பஞ்செய்தான் அதைக்கண்டு அதாசுரனை
கட்டியணைத்துக்கொண்டு சுத்தவீரருசாவைப்பார்த்து ஐயா அதாசுர
னென்று உங்கள்வமிசத்தில் ஒருபிள்ளையிருந்தபடியினாலே நீங்களெல்
லோருமபிழைத்துவந்தீர்கள் இப்படிப்பட்டபிள்ளையைப்பெற்றவர்களு
டையோகமேயோகமென்றுசொல்ல அதற்குச் சுத்தவீரருசனும் எல்
லாந் தங்களால்வந்தயோகமேயல்லாமல வேறல்லவென்று ஸ்தோத்திர
மபண்ண அதைக்கண்டு மானபரருசன் சகலமானபேரையுந் தன்பட்
டணத்திற்கழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்குச்செய்யவேண்டிய
மரியாதைகள்செய்து அரண்மனைக்கனுப்பிவிட்டுத் தானுந்தன்னரண்
மனைக்குப்போனார் பிறகு அதாசுரனும் கோலப்பாட்டியாகிய உச்சாதே
வியும பாட்டிமாரெழுபேர்களும் அதாசுரனைக் கட்டியணைத்துக்கொ
ண்டு நாங்களெழுவரும் விதவையாயிருந்தோமே எங்களுக்குச் சுமங்கி
லியாயிருக்கும்படி இரட்சித்தாயேயென்று வாழ்த்தி சிரோன்மணியை
ப்பார்த்து உன்னாலேவந்த ஆபத்திற்கு உன்மகன் அதாசுரனும் சகலமா
னபேரையுமிரட்சித்தான் சகலரும் மானபரருசாவினுடைய தருமமா
கையால அவர்பேரைச் சொல்லிக்கொண்டு சுகமாயிருப்போமென்று
சொல்ல அப்பொழுது அதாசுரன்தேவியாகிய இந்திரரேகை பாட்டி

மாரேழுபேருக்குந் தெண்டம்பண்ணினான் அப்படிக்கண்டு இந்திரரேகையைவாழ்த்திச் சகலமானபேரும் சந்தோஷமாயிருந்தார்கள் இதுவரைக்குநாலாமிவ்வென்று கட்டிலின்நாலாங்காலசொல்லிற்று.

கட்டிலின்நாலாங்காலகதை முற்றிற்று.

கட்டில்சொல் கதை.

அதுகேட்டு விக்கிரமாதித்தனுஞ் சந்தோஷப்பட்டுஇனிமேலாகிலும்பேசாமடந்தை பேசப்போகிறாளென்று வேதாளத்தைக்கட்டிலிற்பிரவேசிக்கச்செய்து கட்டிலைப்பார்த்து உன்காலநாலுங்கதைசொல்லிற்று இனிமேல் நீதான்குறையுஞ் சொல்லவேண்டுமென்று கேட்க அதுகேட்டுகட்டிலும் விக்கிரமார்க்கராசனைப்பார்த்து ஐயா நீரென்னை ஒருபொருட்டாகஎண்ணி கதைசொல்லச்சொன்னீரே நான்சொல்லுகிறேன்கேளும் அதுதென்னவென்றால் அயோத்திசுத்தவீரராசன் குமாரனாகிய அதிவீரராசன் அவன்குமாரன் அதாசூரன் இவர்கள மானபராசன் அரண்மனையிலிருக்கும்போது சனியீஸ்வரபகவான் அவ்விடத்திற்குவந்து சுத்தவீரராசனைப்பார்த்து நான்உன்னைப்பிடித்து வெகுசாய்த்தொந்தரவுபடுத்தினேன் நீ மகாதர்மிஷ்டி என்பேரில் கோபமவைக்கவேண்டாம் இப்பவும் நீர் சகலமும் ஒப்புக்கொண்டு இராச்சியபரிபாலனம்பண்ணிக் கொண்டிருமென்று சனிபகவான்சொல்ல அதைஅதாசூரன்கேட்டு சனிபகவானுக்குத் தெண்டம்பண்ணி இனிமேல்என்னையும் இப்படிதானபிடித்து இமிசைபண்ணுவீர் எங்களுக்கு இந்தராச்சியம்வேண்டாமென்று அதாசூரன்சொல்ல அதற்குச் சனிபகவான் முன்னாலே உன்னுடைய நாலாம்பாட்டன் நமமைநோக்கி தவஞ்செய்தான்நம்முடைய அதிகாரபணமாலேயும் நிறுத்தக்கூடாது ஈஸ்வரன் கிருபையினாலே ஆகவேண்டியதை ஒருவிதமாய் நடப்பித்தேனென்று சொன்னார்கேட்டு அதாசுரன் என்னுடையநாலாம்பாட்டனைநீர்பிடித்ததும் ஒருவிதமாய் நடப்பித்ததும் அவர்பேருமூரும சொல்லவேணுமென்றுகேட்க அதற்குச்சனிபகவான் வாருமபிள்ளாய் அதாசூரா உன்னுடைய நாலாம்பாட்டிமேர் மாணிக்கவல்லி மரகதவல்லி கோமேதகவல்லி வைடூரியவல்லி தங்கவல்லி புஷ்பகெந்தி முத்துரேகை பவளகெந்தியென்று ஒன்பதுபேர் அவருடைய மந்திரிகள்சகலவிற்பன்னர்கள் இப்படி அஸ்திநாபுரியை நீதிவழுவாமல் ராச்சிய பரிபாலனமபண்ணிக்கொண்டிருக்கும்போது அவருக்கு நம்முடையோகம்வருங்காலமாச்சுதுஅப்போதுநான் அஸ்திநாபுரி பட்டணத்திற்குட்போய்உக்கிரபாண்டியராசாவைக்கண்டு களிகொண்டு நாழிப்பொழுதுவரம்வா பின்னிட்டு வரவோவென்றுகேட்டேன் அதற்கு உக்கிரபாண்டியராசன்என்தாயார் ரூ-கெந்தியையும தேவிமார் ஒன்பதுபேரையுங்கேட்டுவந்து சொல்லுகிறேனென்று அரண்மனைக்குள்ளேபோய்த் தேவிமாருடனேசொல்ல அவர்களும் சனீஸ்வரர் இப்போது பிடித்தால் எங்களு

க்குப்பிள்ளையில்லையுங்கள் தாயாரோ வயதுகாலமாகிபிள்ளைகளைபிறக்கவும் வளர்க்கவு மிருக்கிறபடியால யிளமையிலே வந்தாலாகாது முதுமையிலே வரச்சொல்லிக்கேளுமென்று சொன்னார்கள அவர்களின் ஒன்பதாந்தேவியாகிய பவழக்கெந்தி முதுமையிலேவந்தால் எங்களுக்கெல்லாம குழந்தைபிறந்திருக்கும் உம்முடையதாயார் மெத்தவும் விருத்தாப்பியமாயிருப்பாள் உமக்குச் சரீரந் தளர்ந்துபோகும் ஆகையால்இளமையிலே தானே பிடித்தால் திருலாகம் பண்ணலாமென்றுசொல்ல அப்படியே அவருஞ்சம்மதித்துவந்து நம்முடனேசொன்னார் அந்தப்படியேநாமவந்துசண்டைபண்ணினோம் உக்கிரபாண்டியராசன் தோற்றுப்போய் தாயாரையுந் தேவிமாரையுங் கூட்டிக்கொண்டு நித்திரைபண்ணும்பொழுது உக்கிரபாண்டிய ராசனுக்கு மதிகலங்கிப்போய் காமிவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு காப்பாற்றுகிறதற்கு நம்மாலேயாகாதென்று யோசித்துப் பாதைத்துப்பட்டி ஆபுத முஸ்தீபாணதுகளை சகலமும்வைத்துவிட்டு தன்தாயாரைமாத்திரம் முதுகின்மேலெடுத்துக்கொண்டு அப்பொழுதே அயோத்தியாபுரி பட்டணத்தில ஒருதர்மச்சாவடியில்வந்து தன் தாயாரைவிட்டுவிட்டு அந்தப்பட்டணத்தில் பிச்சைவாங்கித் தாயாருக்குவயிறுநிறைய சாப்பாடுபோட்டுத் தானுஞ் சாப்பிட்டுக்கொண்டிருந்தான் இப்படியிருக்கிற நாளையில் உக்கிரபாண்டியராசனுக்கு குஷ்டரோகம்வந்து கையுங்காலுங் குறைந்து அவகவிகாரமாயிருக்கையிலஉக்கிரபாண்டியன் காண்டாவனத்திலேவிட்டுவந்ததேவிமார்கள் நித்திரைதெளிந்தெழுந்து பார்க்கார்கள் இராசனையும்மாமியாரையுங் காணாதபடியால இதுவுஞ் சனிபகவானுடைய மகத்துவந்தானென்று யோசனைபண்ணினார்கள் அதில் பவழகெந்தியாரும் தன்சக்களத்திமா ரெட்டுபேரையும்பார்த்து வேறொன்றுக்கும் யோசனைபண்ணவேண்டாம் சனிபகவான்நமக்குத் தயவுபண்ணுவாரென்று தைரியஞ்சொல்லி புருசன்றரித்திருந்த ஆடையாபரணமெல்லாம் தான் தரித்துக்கொண்டு சக்களத்திமார் எட்டுபேரையுங் காத்துக்கொண்டிருந்தாள்.

அன்றிராத்திரிபோய் பொழுதுவிடிந்துசூரியோதயமானது அந்தவேளையில் அயோத்தியா புரியையாளப்பட்ட அயிறுவதராசனிறந்துபோனான் பிறகு அந்தப்பட்டணத்திற்கு அவனுடையதாயாதிகள் பத்துபேருண்டு அவர்களைசிங்காரஞ்செய்து ஆசாரத்கிலிருக்கவைத்துபட்டத்துயானையைச் சிங்காரித்துவிடுவோம்அந்தயானை ஆரையெடுத்துக்கொண்டுவந்து சிங்காதனத்தில் வைக்கிறதோ அவர்களுக்குத்தானபட்டமென்று யோசனைபண்ணி பட்டத்துயானையைச் சிங்காரித்துவிட்டார்கள் அந்தயானை காண்டவனத்துக்குப்போய் அந்தக்காட்டி லிருக்கிற உக்கிரபாண்டியன்தேவிமார் ஒன்பதுபேருக்குள் புருடவேடமாயிருக்கிற பவளகெந்தி யென்பவளை எடுத்து மத்தகத்தின்பேரில் வைத்துக்கொண்டு அரண்மனைக்குள்ளே போய்ச் சிங்காதனத்தின் பேரில் வைத்து கையைமுகந்தது அதுகண்டு துரைமகன் மந்திரிமுதலாகியசகலமானபேரும் தெண்டம்பண்ணி கைகட்டி வாய்பொத்திக்கொண்டு

நின்றார் அப்போது பவளகெந்தியென்கிற ராசனும்மந்திரியை யழைத்
து நம்முடையதேவிமார் எட்டுபேர் காண்டாவனத்திற்குள்ளே அமிர்
தகனியருசேயிருக்கிறார் அவர்களெட்டுபேருக்கும் எட்டுபல்லக்கை
யனுப்பி அழைத்துவாருங்களென்றுசொல்ல அப்படியே அவர்களை
யழைத்துவந்து அரண்மனையில்விட்டு ராசனுக்கு அறிக்கைசெய்தார்கள்
அதுகேட்டு மந்திரிமார்முதலாகிய சகலமானபேரையும் அவர்களரண்
மனைக்கனுப்பிவிட்டு தன்னரண்மனைவந்து சக்காளத்திமாரெட்டுபே
ரையும்பார்த்து நீங்கள் பயப்படவேண்டாம் நமக்குச் சனிபகவான் தய
வுசெய்து காப்பாற்றிவருவார் ஆகையால் நான் உங்களுக்குப்புருஷனு
ம் நீங்கள் எனக்குப்பெண்சாதியுமாக நடந்துக்கொண்டிருங்கள் அப்
பால் ஈஸ்வரன்கிருபையால் உள்ளபடிநடக்குமென்றுசக்காளத்திமாரு
க்கு திட்டஞ்செய்து அன்றுபோய்மறுநாள் கொலுவைச்சிங்காரஞ்செ
ய்யச்சொல்லி சிங்காதனத்திலிருந்து இராச்சியபரிபாலனம் பண்ணிக்
கொண்டிருக்கும்போது பவழகெந்தியார் தன்புருஷனையும் மாமியா
ரையுங்கண்டுபிடிக்கவேண்டுமென்று தன்பட்டணத்தில யார்வந்தாலு
ம் தடைபண்ணாமல் சாதம்போட்டு அவர்களுக்குப்போட்டசாதத்தில்
பாதியாயெடுத்துவைக்கிறார்களோ அவர்களை என்னிடத்திற்கழைத்து
உக்கிரபாண்டியராசன்தாயார் மகனைப்பார்த்து அப்பா இந்தப்பட்டண
த்தில் அன்னசத்திரத்தி லன்னம்போடுகிறார்களாம் இந்தவேளை எனக்
குமெத்தபசியாயிருக்கிறது நீபோய் அன்னம்வாங்கிவாவென்று வருந்
திச்சொல்ல அதைக்கேட்டபடியே புறப்பட்டுச் சத்திரத்துக்குவந்து
அங்கிருக்கிறவர்களைப்பார்த்து ஐயாவொரு நோயாளி எனக்கு மெத்
தபசியாயிருக்கின்றது இன்னோர்தாங்கள் தயவுசெய்யவேணுமென்
றுசொல்ல எல்லோருக்கும்பரிமாறி எல்லோருஞ்சாப்பிட்டார்கள் அதி
ல் உக்கிரபாண்டியராசன் தனக்குப்போட்டசாதத்திலும் பதார்த்தத்தி
லும் பாதிபங்குவைத்து மற்றபாதியைத் தான்சாப்பிட்டான் சத்திரத்
தில்சாப்பிடுகிறவர்களில் யாதாமொருவர் பாதியெடுத்துச்சாப்பிடுகிறார்
களோ அவர்களையழைத்துவரும்படி ராசனுத்திரவுபண்ணியிருக்கிற
படியால் அப்படியே யன்றுடஞ் சோதித்துவிடுகிறபடிக்கு அன்றைக்
குமணியக்காரன் பார்த்துவரும்போது உக்கிரபாண்டியராசன்மாத்தி
ரம்பாதியெடுத்து வைத்திருக்கிறதைக்கண்டு அழைத்துக்கொண்டுபோ
ய்ராசன்முன்னேவிட்டார்கள் அதைராசன்பார்த்துதன்புருஷனென்று
தெரிந்து சிங்காதனத்தைவிட்டிறங்கி பஞ்சவர்ணக்கிளியுடன் பேசுகிற
துபோல் நீயாரென்றுகேட்க நானொருபரதேசி என்தாயோ விர்த்தாப்
பியம் அவள் அன்னத்திற்கும் பதார்த்தத்திற்கும் ஆசைப்பட்டு சத்தி
ரத்திற்குப்போய் வாங்கிவரச்சொல்ல நானிங்கேவந்து எனக்குப்படைத்
தசாதத்திலும் பதார்த்தத்திலும் பாதி எடுத்துவைத்துக்கொண்டு மற்
றதைநான்சாப்பிட்டேன் இப்படியிருக்கசாதத்தைத்திருடினனென்று
பிடித்துவந்தார்களென்ன அதுகேட்டு நல்லது உங்கள்தாயாரெங்கேயி

ருக்கிறாளென்றாளிலை அந்தம்மாள் சாவடியிலே இருக்கிறாளென்று சொல்ல அந்தட்சணமே பல்லக்கனுப்பிவைத்து மாமியாரையழைத்து வரச்சொல்லி புருஷனை வண்டகசாலையிற் கொண்டுபோய்விட்டுத் தலை முழுகவைத்துச் சுகசோபாசனத்துடன் சவரட்சணைசெய்வித்துவருங்கா லையில் குஷ்டரோகமும் நீங்கிப்போயிற்று பிற்பாடுநான் உக்கிரபாண்டி யராசனிடத்திற்குபோய் ஓ இராசனே இதுவரையில்நான்உங்களைவெ குவருத்தப்படுத்திவைத்தே னினியுங்களுக்குநல்லகாலம்வந்தபடியால் நீங்கள்சுகமாய் உங்கள்ராச்சியத்திற்குப்போய் சேருங்களென்றுசொல் லிவந்தேன் பிறகு பவழகெந்தியும் வண்டகசாலைக்குப்போய்புருஷனை யும் மாமியாரையும் பார்த்துசந்தோஷப்பட்டுசக்களத்திமாரிடத்திற்கு வந்து அவர்களையழைத்து நமதுபுருஷனும்மாமியாரும்வந்தார்கள்நீங் கள் ஒன்றுக்குங்கிலேசப்படவேண்டாமென்றுசொல்ல அதுகேட்டுஏ ழுபேரும் சந்தோஷமாய் அவர்களெப்படிவந்து சேர்ந்தார்கள் அம்மா வென்றுகேட்க தான் அனைசத்திரமவைத்ததும் அதிலதன்புருஷன் வந்துசாப்பிட்டதும்பிரகுநடந்தசேதியும் விபரமாகச்சொல்லக்கேட்டு அவர்களெட்டுபேரும் பவழகெந்தியைக் கூட்டிக்கொண்டுஅம்மாஉன் னுடைய புண்ணியவசத்தினலெங்களுக்கு மங்கிலியபிட்சை கிடைத் ததென்று வெகுவாய்த்தோத்திரம் பண்ணினார்கள் பின்புபவழகெந்தி யும் மாமியாரையும் புருஷனையழைப்பித்தாள் அவளைக்கண்டு அவர்க ளெட்டுபேரும்வந்து புருஷனுக்கு மாமியாருக்குந் தெண்டனிட்டொரு வரையொருவர் தழுவிக்கொண்டு நாங்களஸ்தினபுரியைவிட்டுப் புறப் பட்டநாள்முதல் பட்டபாடுகளையெல்லாம் சொல்லிப்பிரலாபித்துஇன் றோடேசமதுசனி விமோசனமாயிற்றென்றுசொல்ல உக்கிரபாண்டிய னும் சந்தோஷமாய் தேவிமாரைப்பார்த்துநேற்றையதினம்சனி பகவா ன் என்னிடத்திற்குவந்து இனிமேலுங்களுக்கொருதொந்திரவுமில்லை உங்கள் பட்டணத்திற்போய்ச்சுகமாய் வாழ்ந்திருங்களென்று சொல்லி ப்போனார் ஆதலால் இனிநமக்கு உபத்திரவம் வாராதென்றுசொல்ல பவழகெந்தியும நீங்களிங்கேதானேயிருங்கள்நான்கொலுச்சாவடிக்குப் போய் பட்டணத்துக்கொருவரை நேமித்துவிட்டு நமது பட்டணத்தி ற்கு போவோமென்றுசொல்ல புருடனிடத்தில் விடைபெற்றுக்கொ ண்டுபோய்வரவேண்டும் ஆகலால் ஆயிருவகராசன் பங்காளியாகிய பத்துபேரையும் அனுப்பிவையுங்களென்று திட்டம்பண்ணி அவர்க ள்வந்தபிறகு அவர்களில் மூத்தவனுக்கு பட்டங்கட்டி மற்ற ஒன்பது பேருக்கும் இளவரசு பட்டங்கொடுத்து மந்திரி முதலானசகலபேரும வர்கள் சொற்படி நீதிவழுவாமல் நடந்துவருமபடி திட்டப்படுத்தி அர ண்மனைக்கு வந்துதன்புருடனைக்கண்டு தெண்டனிட்டு இனிநமதுசொ ந்த பட்டணம்போகலாமென்று நால்வகைச்சேனைகளுடன்புறப்பட்டு

புருஷனை யானைமேலேறிச்செய்து தானுஞ்சக்களத்திமாரும் ஒவ்வொரு பல்லக்கி லேறிக்கொண்டுபதினெட்டு வாத்தியங்களும்தாம்தாமென்று முழங்கத்தக்கதாகச் சர்வசம்பிரமத்துடனே அஸ்தினாபுரிக்குப்போய்ச் சேர்ந்திருந்தார்கள்.

கேட்டீரோ அதாசுரராஜசனேஎன்று சனிபகவான்சொல்ல அதைக்கேட்டு அதாசுரனும்சந்தோஷமாய் சனிபகவானைப்பார்த்து தேவரீர் கிருபையுள்ள வரையில்எங்களுக்குக்குறை யென்னவென்றுதோத்திரம பண்ணி சனிபகவானுஞ்சந்தோஷமாய் அப்பாநீ யின்றையதினமே உன்தகப்பன் முதலானவாகளுடனே அஸ்தினாபுரிக்குப்போய்ச் சேர்ந்து சுகமாக வாழ்ந்திருவென்று ஆசீர்வதித்துபோயினார்பிறகு அதாசுரனும் மான்பராஜனைக்கண்டு பூரிப்புகொண்டு தெண்டனிட்டு ஐயா இது வரையில் உங்களகெப்பத்தில்லைததது எங்களைக்காப்பாற்றினீரே நாங்கள் இனிமேலெங்கள் பட்டணத்திற்குப்போய் வருகிறோமென்று வெகு வாய்தோத்திரம்பண்ணி அவரிடத்தில் விடைப்பெற்றுக்கொண்டு தளசேகரத்துடன் தகப்பன்முதலான பேருடனேபுறப்பட்டு அஸ்தினாபுரிக்குப்போய்ச் சேர்ந்துசுகமாயிருந்தார்களென்று கட்டில்சொல்லிற்று.

கட்டிலின்கதை-முற்றிற்று,

—o[o]o—

கிளிக்கதை.

அதுகேட்டு விக்கிர மாதித்தன் சந்தோஷமாய் வேதாளத்தைய ழைத்துப்பேசாமடந்தை பயந்திருக்கிறாள் அலள்பயந்தெளியத் தக்கதாய் நீஒருபஞ்சவர்னக்கிளியாய் அவள்மடியிலிருந்து ஒருகதைசொல் லென்று சைகைபண்ணிவிட்டுத்தான் பராமுகமாயிருக்கவேதாளம் பஞ்சவர்னக்கிளியாயுருவங்கொண்டு பேசாமடந்தையைக்கண்டு மெள்ள உலாவிக்கொண்டிருந்து அதைக்கண்டுபேசாமடந்தையும் சாதிக்ளைவிட்டு அந்தக்கிளியைப்பிடித்து வரச்செய்துமடிமேல்வைத்து விநோதமாகவிளையாடிக்கொண்டிருந்தாள் அப்படியிருக்க விக்கிரமார்க்கனுங் கிளியைப்பார்த்து பேசாமடந்தைதான் உன்னுடனேபேசிக்கொண்டு ஏகப்போகமா யிருக்கிறாளே நான ஆருடனே பேசப்போகிறேன் நீயாகிலுமொருகதைசொல்லென்றுகேட்க ஐயா உம்முடையவூநர்பேரும்சொன்னால்அப்படியே கதைசொலலுகிறேனென்றுசொலலஉச்சிய ஒங்காளிபட்டணம்என்பேர்விக்கிரமார்க்கன்இந்தப்பேசாமடந்தையானவள்ஒருவரிடத்திலும்பேசுகிறதில்லையென்றுவெற்றிக்கொடிகட்டிவைத்தவளாதலாலக்களையெல்லாஞ் சதுரங்கமாடிதோற்கப்பண்ணி மோசஞ்செய்தனுப்புகிறாளென்றுகேட்டு நானும்வந்திருக்கறேனென்றுசொல்ல

அதுகேட்டந்தக்கிளியும் விக்கிரமார்க்கராசனைப்பார்த்து ஐயாஉம்முடை
ய அழகுக்கும்வல்லமைக்கும மற்றராசாக்களீடாவார்களா உம்முடை
யமகத்துவம் யாருக்குதெரியும் இவள்சிறுபெண்ணானையாலும் இவளை
ச்சனிபிடித்திருப்பதினாலும் தெரிந்துக்கொள்ளவில்லை அந்தச்சனியினு
டையமகிமையை யார்சொல்லுவார்கள் ஏகசக்கிரேஸ்வரனாகியசகஸ்திரா
திபசக்ரவர்த்தியுமல்லவோ அந்தச்சனியினிடத்திலகப்பட்டுபலவருத்த
முமடைந்து பிறகுராச்சியபரிபாலனம் பண்ணினாரென்றுசொல்ல அது
கேட்டுபேசாமடந்தையுமாச்சரியப்பட்டு அந்தக்கிளியைப்பார்த்து அந்த
சகஸ்திராதிபதி சக்கிரவர்த்திவரலாறுமுழுதுஞ் சற்றேதெரியச்சொல
லென்றுகேட்க கிளியும்பேசாமடந்தையைப்பார்த்து அம்மா தருமாபுரி
யென்றொருபட்டணமுண்டு அந்தப்பட்டணத்தையாளப்பட்டவர்சக
ஸ்திராதிபதிசக்கிரவர்த்தி அவர்தேவிபஞ்சலக்ஷணைகெந்தி அவர்தேவ
மூவாமல் இராச்சியபரிபாலனஞ்செய்துவருங்காலத்தில் அவருக்குகெ
டுவேள் பிள்ளையில்லாமலிருந்து பிறகுஈஸ்வரகடாட்சத்தினாலே இரட்
டைபிள்ளைபிறக்க அதுகளைஒரொருமேனியும் பொழுதொருவர்ணமு
மாகவளர்த்து ஞானதேவவுக்கிரதேவனென்று பேரிட்டுச்சகலவித்தையுங்
கற்பித்துவைத்தார் அப்படியிருக்கசகஸ்திராதிப சக்கிரவர்த்திக்கு ஏழ
ரைநாட்டுச்சனி பிரவேசகாலமாச்சுது அதுதெரிந்து சனிபகவானும்வ
ந்துசகஸ்திராதிபதி சக்கிரவர்த்தியைப்பார்த்து காளமையில்வரவோ
முதுமையில் வரவோ என்றுகேட்க அவரும்சனிபகவானுக்குத் தெண்ட
னிட்டுசுவாமி நீர்முதுமையில்வந்தால் நாங்கள் நிறுவாகம்பண்ண மாட்
டோம் இளமையில்வந்தால் நிறுவாகம்பண்ணுவோமென்று அவரிடத்
தில்அனுமதிபெற்றுக்கொண்டு பெண்சாதியிடத்திற்குவந்து சனிபகவா
ன்சொன்னதும் தான்சொன்னதும் விபரமாகச்சொன்னார் அதைக்கேட்
டு பஞ்சலட்சணைகெந்தியும் பயந்துசப்தசிவன் செயலப்படிநடக்கயிரு
க்கிறதேதாவென் றெதிர்பார்த்திருந்தார்கள் சக்ராதிபுர்தளமெடுத்து வந்
து தருமாபுரிக்குச்சமீபத்தி லிறங்கினான்யதைக்கண்டு சகஸ்திராதிபசக்
கிரவர்த்தியுமபயந்து இதுவுஞ்சனிபகவான் மகத்துவந்தானென்றெண்
ணிக்கொடு பெண்சாதியையும் பிள்ளையையு மழைத்துக்கொண்டு புறப்
பட்டுச் சாமான்யப்புறத்திற்குவந்துசேர்ந்து அந்தப்பட்டணத்துப் பத்தி
ரகாளிகோயில் திருப்பணி செய்கின்றநூறு பேருக்குமேஸ்திரியாகிய சி
லவிற்பன ஆசாரிஎன்பவனோடு ஐயாநாங்கள் ராசவம்சம் நாங்க
ளிருப்பவுத்திரதேசம் சனிமகத்துவத்தில்சகல ஐஸ்வரியத்தையும் சத்
ராதிக்குத் தோற்றுவிட்டுவந்தோம் எனக்கொருவேலையுஞ் செய்யத்தெ
ரியாது நீர்பத்துவேலைக்காரரைவைத்து சவரட்சணைசெய்கிறபடியால
என்சமுசாரத்தை யுங்களைப்பாற்றுவீரென்று என்குறையைச்சொல்லிக்
கொண்டேனென்றுசொல்ல அதுகேட்டுவிற்பன ஆசாரியும்மனமிரங்கி
நீரும்எங்களோடுகூட ஒருவீட்டுகாரனாயிருமென்று தங்கள்குடிசைப
க்கத்தில் ஒருகுடிசைகட்டிகொடுத்து ஒருகுறைவுமில்லாமல் நடப்பித்து

வந்தான் இப்படியிருக்க ஒருநாள் அந்தப் பட்டணத்தை யாளப்ப
ட்ட சத்துருசேன னென்பவன் பத்திரகாளி தரிசனத்திற்கு வந்து
அரண்மனைக்குப் போகையில் இராசன் வருகிறதைக்கண்டு சகலசெ
னங்களும் பார்த்தார்கள் சகஸ்திராதிபதி சக்கிரவர்த்தி பெண்சாதியு
ம் குடிசைக் குள்ளிருந்து எட்டிப்பார்த்தாள் அதைராசன்கண்டு ஆ
சைகொண்டு மோகாந்தரனாய் மேஸ்திரியை யழைத்து இந்தக் கு
டிசைக்குள்ளே தேவரம்பையைப்போல் ஒருபெண்ணிருக்கிறாளே
யவளாரென்று கேட்டமாத்திரத்தில் மேஸ்திரியும் அரசனைவாயெடுக்
கவொட்டாமல் ஐயா அந்தம்மாளெங்கள் குருபத்தினி யென்றுசொ
ல்ல அதுகேட்டு ராசனும் அப்படியாவென்று தலையையசைத்து மற்ற
தச்சர்களையழைத்து உங்கள்பெண்டுகளை அரண்மனைக்கு அனுப்பி
வித்தால் அரிசிபடிமுதலான வெகுமதியுந் தருகிறோமென்று சொல்
லிப்போனான் அப்படியே மறுநாள்பஞ்சலட்சணகெந்தியையு மழை
த்துக்கொண்டு அந்தப்பெண்களெல்லாரும் அரண்மனைக்குப் போனா
ர்கள் அதுகண்டு சத்துருசேனனுஞ் சந்தோஷத்துடனே பஞ்சலட்
சண கெந்தியை மாத்திரம் நிறுத்தி மற்றவர்களுக்குப் படிகொடுத்த
னுப்பிவிட்டு அந்தப்பதிவிரதா சிரோன்மணியைப் பார்த்து நீயேன
தச்சருக்குள்ளிருந்து வீணாய்வருத்தப்படுகிறாய் என்னோடு கூடியிருந்தா
ல் சகலபோகங்களையும் அனுபவிப்பா யென்று மோகாந்தனாகவெ
ழுந்திருக்க அந்தம்மாள்கண்டு நாமுயிரோடிருந்தால் கற்பழிந்துவிடு
வோமென்றாலோசித்து சிவத்தியானஞ் செய்து தன்கையிலிருந்த கூ
டையைத் தலைமேலகவிழ்த்துக் கொண்டுநான்பதிவிரதாதர்ம முடை
யவளானால் என்புருஷன்வந்து தேடுகிறவரையிலும் இந்தக்கூடையும்
நானும் ஒருகுண்டுக்கல்லாயிருக்கவேண்டு மென்றுசொல்ல அப்படி
யேகுண்டுக்கல்லாயிற்று அதுகண்டு சத்துருசேனனும் பயங்கொண்
டு அந்தக் கல்லையுருட்டிப் பொக்கிஷத்திலே போட்டு விட்டான் இ
ப்படியிருக்க சகஸ்திராதிபதி சக்கிரவர்த்தியும் சாயங்காலமட்டும் மனை
விவருவா ளென்று வழிபார்த்து சத்துருசேனன் பிடித்துக் கொண்
டானென்று தீர்மானித்து இனிநாமிருந்தால் நம்மையும் பிடித்துவெ
ட்டுவா னென்று அந்தட்சணமே பிள்ளைகளை யழைத்துக் கொண்டு
விந்தை நகரத்தை நோக்கிவருகிறவழியில ஓராற்றைக்கண்டு நீந்தமு
டியாமல் அதின்கரையி லிருக்கிறபிள்ளையார் கோயிலின் பக்கத்தாவி
ல் ஒருபிள்ளையைக் கட்டிப்போட்டு திரும்பிவரலாமென்று ஒரு பிள்
ளையைத் தோளில்வைத்துக்கொண்டு ஆற்றிலிறங்கி அக்கரையில வைத்
துவிட்டு திரும்பிவருகையில் அவ்வாற்றில் வெள்ளம்வந்து இராசனை
யடித்துக் கொண்டுபோய ஒரு திட்டிலே தாக்கிவிட இராசனுஞ் சோப
மாய்க்கிடைந்தார் அந்தச்சமயத்தில் சாமளிபுரத்தில் சத்துருசேனன்
அரண்மனையில் கன்னமிட்டுத் திருடிக்கொண்டு வருகின்ற சிலகள்
ளர்களைச் சேவகர்கள் துரத்திவர அவர்கள் ஆற்றிலிறங்கி யோடிவரு
ம்போது இராசன்பேரில சிலநகை யெறிந்துவிட்டுப் போனார்கள
பிறகேவந்த தலையாரிகள் அதைக்கண்டு இவன்தான் திருடனென்று
கட்டி சகஸ்திராதிபதி சக்கிர வர்த்தியை சத்துரு சேனன் எதிரே

கொண்டுபோய் விட்டார்கள் அதுகண்டு சத்துருசேனனு மிவனைப் பார்த்து அடா கள்ளா உன்னுடனே வந்தகள்ளரெல்லா மெங்கே போனார்களென்று கேட்க இவர்சும்மாயிருக்க அந்தத் தலையாரிகளை ப்பார்த்து இவனைக் கொண்டுபோய் ஒருகாலையும் கையையும வாங்கிவி டுங்களென்றுசொல்ல அப்படியே செய்துவிட்டார்கள் பிறகு சகஸ ராதிபசக்கிரவர்த்தியும் ஒருகோலையூன்றிக் கொண்டு ஆறுகடந்து விந்தைநகரத்துக் குப்போய் ஒருதாதின் வீட்டுவாசற்படியில் கிலே சமாய்கிடக்க அவளிவரைக்கண்டு ஐயா நீயார் உமக்குக் காலுங்கை யும் போன விதமென்ன வென்றுகேட்க அப்பாகான் வயத்திற்கில் லாமல் சாமான்யபுறத்தில் சத்துருசேன னரண்மனையில் திருடக்க ண்டு கைகால் வாங்கிவிட்டார்க ளென்றுசொன்னர் அந்தத்தருமதாசி ரியும் இவரைப்பார்த்தால் இராசவடிவா யிருக்கிறது இதென்னகார ணமோ தெரியவில்லை யென்றுநினைத்து அந்தக்காய மாறுமபடிசெய் துவிடுகிறேன் நீயொன்றுக்கும விசனப்பட வேண்டாமென்று சொ ல்லி அப்படியே ஆதரித்துவந்தான் இப்படி யிருக்க அவ்வாற்றங்க ரைவழியாக இரண்டு இடைப்பெண்கள் மோர்விற்க வந்தார்கள் அவர் களுக்குப்பிள்ளை யில்லாததால் அந்தப்பிள்ளையார் கோயிற் பந்தக்கா லிற்கட்டியிருந்த பிள்ளையை ஆசையோடுயெடுத்துத் தனக்குப்பிள்ளை யார்தயவு செய்தாரென்று மூத்தவளெடுத்துக் கொண்டு சந்தோஷமா ய்க்கரையருகில்வந்து இங்கேயிருந்த பிள்ளையை இளையவ ளெடுத்துக் கொண்டு முத்தமிட்டு இருவருஞ் சந்தோஷத்துடனே வீட்டிற்குப் போய்ச் செல்வமாய வளர்த்தார்கள் அந்தப்பிள்ளைக்கு எட்டுவயதான பின்பு ஆட்டுமந்தைக்குப் போகச்சொல்ல அவர்கள் போகாமல் அ ம்புவில்லும் எடுத்துக்கொண்டு விளையாடிவர அதுகண்டு அவர்களை யழைத்துக் கொண்டு போய் ஒடத்துறையில் சேவகம்வைக்க அவர்க ளப்படியே செய்துவந்தார்கள் இப்படி அந்தப்பட்டணத்தை யாளப் பட்ட சத்துருசங்கார ராசனுக்குப் பிள்ளையில்லாமல் அருமையாய் ஒரு பெண் பிறந்து அந்தப்பெண்ணைச் செல்வமாக வளர்த்து அன் னவதனை யென்று பேரிட்டு பத்துவயதா யிருக்கையில் மாலையிடவ ந்த ராசாக்களை யெல்லாம் அந்தப்பெண் இகழ்ச்சி பண்ணிக் கொண் டுவந்தாள் அப்படியிருக்க அந்தப் பெண்ணுக்குக் கலியாணஞ் செ ய்யாமல் வைத்திருக்க லாகாதென்று தாயுந்தகப்பனும் யோசித்து சகலராசாக்களுக்கும் ஓலையனுப்ப அவர்கள எல்லாரும் வந்துசேர் ந்தார்கள் அந்த நந்த வனத்தைக் காத்துக் கொண்டிருந்த சகஸ்ரா ராதிப சக்கிரவர்த்தியுங் கோலையூன்றிக் கொண்டு வேடிக்கைப்பார்க் க வந்திருந்தார் இப்படி சகலதேசத்து ராசாக்களும் வந்த வுடன்ச த்துருசங்காரராசனும் பெண்ணைச் சிங்காரித்து அந்தச்சபையிலழை த்துவந்து ஒருபுட்பமாலையைக் கொடுத்து அம்மா நீயிதைச் சுற்றியெ றிந்தால் அதுயார்கழுத்தில் விழுகின்றதோ அவர்தானுனக்கு நாய கனென்றுசொல்ல அதற்கிந்தப் பெண்சம்மதித்துச்சிவத்துச்சிவபானஞ் செய்து அந்தமாலையைச் சுற்றியெறிய அதுபோய் முடவனாகிய சகஸ் ராதிபசக்கிரவர்த்திகழுத்தில் விழுந்தது அதைத்தாயுந் தகப்பனும்

கண்டுமனம்விண்டுஐயோ எவ்வகைப்பட்ட ராசாக்களையெல்லாம் பழி
த்தமகளுக்கு இவ்வகைப்பட்ட மூடவன் வாய்த்தானென்று அழுதுசு
வாமியைத்தொழுது அன்னதனையை மூடவனிடத்தில்விட்டுப்போனா
ர்கள் அன்னவதனையும்மூடவனைப்பார்த்து ஐயாமெது விடெங்கே நா
ம்வீட்டுக்குப்போகலாம் வாருமென் றழைக்க அவருஞ் சம்மதியாமல்
நீயோராசகுமாரத்தி நானோமூடவன் நானொரு நந்தவனத்தை காப்பா
ற்றிக்கொண்டு ஒருபடிநெல்லு கூலிவாங்கிச் சீவனஞ்செய்கிறேன் நீஎ
ன்னிடத்திலிருக்கத் தகாதென்று தடுக்க அதுகேட்டு அன்னவதனையு
ம் நானுனக்கு மாலையிட்டபொழுதே உமதுசுகத்துக்கு முரியவளென்
றெழுந்திருந்து அவர்கையை பிடித்துக் கொண்டு நந்தவனத்திற்குப்
போய்குடிசைக்குள்ளிருந்தநெல்லையெடுத்து அரிசியாகச் சமைத்துக்
கலவைக்கீரையும்பறித்துச்சமைத்து வெந்நீர்வைத்து மூடவனைக் கு
ளிப்பாட்டி அவர்சாப்பிட்டமீதியைத் தானுஞ்சாப்பிட்டு யிருந்தாளிந்
தச்சேதி தருமதாசிரியறிந்து ஓஜயாசமுசாரம்பலத்தபடியால்தினம்இ
ரண்டுபடிநெல்வாங்கிக்கொள்ளுமென்று கொடுக்க அதைச் சந்தோஷ
மாய்வாங்கி புருஷனைபோஷித்துக்கொண்டுதான்உடுத்தியிருந்தசேலையி
ல் பாதிகிழித்துக்கொடுத்துச் சவரட்சணை செய்துவந்தாள்இப்படியிரு
க்க ஒருநாள்இராத்திரிபதினைந்துநாழிகையில்நித்திரைவேளையில் சனி
பகவான் குடிசைக்குப்புறம்போய்னின்று இவர்பேரைச்சொல்லிக்கூப்
பிட்டார் அவர்காலைப்பிடித்திருந்த அன்னவதனைகேட்டு புருஷனிடத்
திற்சொல்ல அவர்ஆரென்றுகேட்கச்சொன்னார் இப்படி கேட்டவுடன்
நான்சனிபகவான் அவருக்குக் காலுங்கையுமவரும் எழுந்துவரச்சொ
ல்லென்றுசொல்ல அதுகேட்டுச்சந்தோஷமாகஎழுந்துபோய் தெண்
டனிட்டு இதுவரையில்படவேண்டிய தண்டமெல்லாமபட்டுத்தீர்ந்தே
ன் இனியாவதுதேவரீர் இரட்சிக்க வேண்டுமென்று சொல்ல சனிபக
வானுஞ்சந்தோஷமாய் இன்றோடே உங்கள் துக்கம்போச்சுது இனிஉ
ன்பெண்சாதியும் பிள்ளைகளுமவந்துசேருவார்கள் சுகமாய் உன்பட்ட
ணத்திற்குப்போய் வாழ்ந்திருங்களென்று ஆசீர்வதித்துப்போனார்பிற
கு அன்னவதனையும் புருஷனைபார்த்து ஐயாயிந்தமட்டும் உம்முடை
ய சவிஸ்தாரத்தைச் சொல்லாமற்போனீரே இப்போதாவது சொல்லு
மென்றுகேட்கதன்னுடைய ஊரும்பேருஞ்சொல்லித்தன்னைச்சனியன்
பிடித்தநாள்முதல் பட்டபாடுகளை விபரமாகச் சொல்ல அன்னவதனை
கேட்டு சந்தோஷசமுத்திரத்தில் முழுகினவளாய் புருஷனிடத்தில வி
டைபெற்றுக்கொண்டுபோய்த் தாய்தகப்பனைக்கண்டு மகிழ்ச்சிகொண்
டு இந்தச்சேதி முழுதுஞ்சொல்லஅவர்கள்சந்தோஷமாய் மருமகனிட
த்திற்குவந்து ஐயாநீர் எங்கள்பெண்ணை மாலையிடஎன்னபாக்கியம்பெ
ற்றோமென்று மனதிலெண்ணிப்பலவிதமாகத் தோத்திரம்பண்ணி ம
களையும்மருமகனையும் அரண்மனைக்கழைத்துக்கொண்டுபோய் சர்வால
ங்காரமுஞ்செய்வித்து பட்டணமுழுதுஞ்சிங்காரித்து ஐம்பத்தாறுதே
சத்துராசாக்களையும்அழைப்பித்து அக்கினிசாட்சியாய்சகஸ்ராதிபசக்
ரவர்த்திக்கு அன்னவதனையைத்தாரைவார்த்துக் கொடுத்தபிறகுஅன்

னவதனையுஞ்சகஸ்திராதிபசக்கிரவர்த்தியும் அவ்விடத்தில்தானே மன்
மதனும் ரதியும்போல சுகமாய்வாழ்ந்திருந்தார்கள் இங்கச்சேதியெல்
லாம் சத்துருசேனன் கேள்விப்பட்டுமெத்தவும்பயந்து பொக்கிஷத்திலி
ருந்த குண்டுகல்லைக் கொண்டுபோய் ஆற்றில் போட்டுவிடச்சொல்ல
அதைஒடத்துறைகாக்கிற பிள்ளைகள்கண்டு எடுத்துக் கொண்டுபோய்
வைத்துப் பொழுதுவிடிந்தவுடன் ராசனுக்குத்தெரிவிப்போமென் று
லோசித்து தலைமாட்டில்வைத்துப்படுத்துக்கொண்டிருந்தான் அப்படி
யிருக்கமூத்தவன்தம்பியைப்பார்த்து அப்பா என குக்கிநித்திரை வரவில்
லையே நீஒருகதைசொல்லென்றுகேட்க எனக்கென்னகதைதெரியும் நீ
தான்சொல்லென்றுசொல்ல அப்பாவெனக்குத்தானென்னகதைதெரியு
நம்முடையகதைசொல்லுகிறேன்கேளென்று தாங்கள்பிறந்ததும் வளர்
ந்ததும் சனிபிடித்தநாள்முதலாக இதுவரையில்நடந்தசேதிமுழுதுஞ்
சொல்லி அப்பா இனிநமது தாய்தகப்பனையும் காணும்படி ராத்திரி
நான்சொற்பனங்கண்டேனென்று சொன்னான் இதுகளெல்லாங் குண்
டுகல்லிலிருந்த பஞ்சலட்சணகெதிகேட்டு நம்முடைய பிள்ளைகள்தா
னென்று சந்தோஷமாயிருந்தான் இப்படியிருக்க பொழுதுவிடிந்தவுட
ன் அவர்களிருவருங் குண்டுக்கல்லை யெடுத்துப் போய்ச் சகஸ்திராதிப
சக்கிரவர்த்தி சமுகத்தில்வைத்து அது வந்தவழியைச் சொல்லிப்போ
னார்கள் பிறகு சகஸ்திராதிபதி சக்கிரவர்த்தியும் அந்தக்கல்லைத்தொட்
டுப்பார்த்தவளவில் அந்தக்கல் நிமிர்ந்து பஞ்சலட்சணையெழுந்தும்வெளி
யேவந்து புருஷனுக்கு தெண்டனிட்டுநிற்க அதைக்கண்டு ராசன்மிக
வும் ஆச்சரியப்பட்டு உன்னைச் சத்துருசேனன் பிடித்துக் கொண்டபா
னே நீ இந்த குண்டுக்கல்லி லிருந்து புறப்பட்ட வயணமென்னவென்
று கேட்க அந்த அம்மாளும் புருஷனைப் பார்த்து தான் படிவாங்கப்
போனதும் அவன்சொன்னதும் தான் சபித்துக் கொண்டதும் விவர
மாகச் சொன்னவுடன் ராசன் பெண்சாதியைப் பார்த்து அதுமுதல்
தான் பட்டபாடுகளையும் பிள்ளைகள்போன செய்தியையுஞ் சொல்லிப்
பிரலாபிக்க பெண்சாதியும் புருஷனைப் பார்த்து நீ யொன்றுக்கும் விச
னப்பட வேண்டாம் இந்தக்குண்டுக்கல்லை எடுத்து வந்தவர்கள் தான்
நம்முடைய பிள்ளைகளென்று சொன்னாள் அது கேட்டு ராசன் அந்த
ப் பிள்ளைகளையும் அவர்களை வளர்த்த இடைச்சிகளையும் அழைப்பித்
து இந்தப் பிள்ளைகள் உங்களுக்கு அகப்பட்ட வரலாறு சொல்லுங்க
ளென்று கேட்க அவர்களும் ராசனைப் பார்த்து ஒரு சேதியும்
ஒளிக்காமல நடந்தபடி சொல்ல அதைக்கேட்டு இராசனும் சந்தோ
ஷமாய்ப் பிள்ளைகளை யெடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு அந்தஇ
டைச்சிகளுக்குப் பலபலவெகுமதிசெய்து சந்தோஷமாயனுப்பிவித்து
த் தம்மையாதரித்த காசரியையும் அழைப்பித்து அவனுக்குப் பலப
ல வெகுமதிகள் அனுப்பினார் அதன்பின்பு அந்தஇராசனும் வெகுசந்
தோஷத்துடன் மாமனாரைக் கண்டு தம்முடைய பட்டணத்திற்குப்
போக வேண்டு மென்று சொல்லிப் பல வரிசைகளும பெற்றுக்
கொண்டு சதுரங்கபல சேனைகளுடன் புறப்பட்டுச் சாமான்யபுரத்தை

னேக்கிவருகையில் இந்தச்சேதியைச் சத்துருசேனனறிந்து அந்தப்பட்டணத்தைவிட்டு ஓடிப்போய்விட்டான பிறகு சகஸ்திராதிபசக்கிரவர்த்தியும் அந்தப்பட்டணத்திற்குப்போயிருக்கி முன்னால் தனக்குஉதவிசெய்தவிற்பன ஆசாரியையழைத்து அவரை அந்தப் பட்டணத்திற்குராசாவாக்கி அவரிடத்தில்செலவுபெற்றுக் கொண்டுதள சேகரத்துடனே புறப்பட்டு கர்மாபுரியைய நோக்கிவருகிறபோது இதுதெரிந்துஇவரிடத்தில் முதல்மந்திரியாகயிருந்த புத்திசாலியென்பவன் எதிர்கொண்டுவந்து ராசனைக்கண்டு தெண்டனிட்டுநிற்க ராசனும்அவனையாதரித்து மகா சந்தோஷத்துடனே நமமுடைய பட்டணத்திற்குப்போய் சத்துருசெயம்பண்ணி பட்டணத்தை யரசாட்சி செய்துக் கொண்டிருந்தா னென்றுசொல்ல அதைக்கேட்ட பேசாமடந்தையுங் கிளியைப்பார்த்து இனிஎனக்கென்ன கதியென்று கேட்க அம்மா இன்றோடேஉன் சனியன் விமோசனமாச்சுது நீ கோபம்விட்டு விக்கிரமார்க்கனுடைய பாதத்தில் சரணாகதியென்று விழுந்தால் அவர் என்னகெதி சொல்வாரென்று சொல்ல அந்தட்சணமேஎழுந்திருந்து விக்கிரமார்கராசனுக்குத்தெண்டனிட்டு தேவரீருக்கு நான் அடிமையானேன் என்னைவிவாகம் பண்ணிக்கொள்ளென்று சொல்லநீ நமக்கு அடிமையானபோதே நானுனக்கு தகப்பனாச்சுது ஆதலால் நான் வேறொருவருக்குக்கலியாணம் பண்ணி வைக்கிறேனென்றுசொல்லி பேசாமடந்தையை யழைத்துக்கொண்டு விக்கிரமார்க்கனும் உச்சினி பட்டணத்தை நோக்கி வருகையில் ஒரு ராசகுமாரன் குறுக்கேவந்து ஐயாநான்சிங்களதேசமன்னபேர் மன்மதசிங்கன் எனக்கிஷ்டமானபெண்கிடையாமல் காமநோயால்வருந்துகிறேன் இந்தப்பேசாமடந்தையைக் கொடுத்தால் உயிரோடிருப்பேன் இல்லாவிட்டால் இறந்துபோகிறேனென்று சொன்னவுடனே விக்கிரமார்க்கன் பேசாமடந்தையைப்பார்த்து உனக்குசம்மதியாவென்று கேட்க ஐயா அவர் பிராணத்தியாகஞ் செய்துக்கொள்ளுகிறேனென்றீரா ஆம் எனக்கு வேண்டாம தங்களுக்கும்வேண்டாம் என்னையே கலியாணம பண்ணிக் கொடுமென்று சொல்லி யவ்விடத்தில் தானே அவர்களிருவருக்குங் கலியாணமுடித்து வைத்துபத்துக்கோடிராச்சியமுஞ் சீதனமாகக்கொடுத்து பிற்பாடு விக்கிரமார்க்க ராசனுமவர் தம்முடைய பட்டணத்திற்கு வேதாளத்துடனேவந்து சேர்ந்து நடந்தசமாச்சாரத்தையெல்லாம் பட்டியாகியமந்திரியுடனே சொல்லிக்கொண்டு தேவசிம்மாசனத்திலிருந்து நீதிவழுவாமலிராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தார் போசராசனே உமக்கிப்போர்க்கொத்தவல்லமையிருக்குமாகில் இந்தச்சிங்காதனத்தில் வந்தேறுமென்று பத்தாம் படிக்குக்காவலாகிய சாருகுணநிதிப்பதுமை சொல்ல போசராசன் அகம்வாடி முகங்கோணி இளைத்துக்களைத்துப்போனான்.

பத்தாம்பதுமைகதை.

முற்றிற்று.

பதினோராம்படிக்குக்காவலாகிய,

சகலகலாவல்லிப் பதுமைசொல்கதை.

—····—

பதினோராநாளையில் போசமகாராசன் ஸ்நானஞ்செய்துசெப தப தானதருமம் பண்ணிச் சிங்காதனத்துக்குப் பூசைநைவேத்தியங்கொடுத்து இன்றைக்கு எப்படியாகிலுஞ்சிங்காதனமேறவேண்டு மென்கிற ஆசையினாலே சிங்காதனத்தண்டைவந்து நமஸ்கரித்து நின்றார்மண்டலிகர் பெரியோர்கள் மந்திரிபிரதானிகள் சகலமானபேருங்கூடி யிருக்க மேளவாத்தியங்கள்முழங்கவும நாடகசாலைப்பெண்கள் நாட்டியமாடவும் கின்னரர்கிம்புருடர் சித்த வித்தியாதரர் கெருடகாந்திருவர்பாடவும் இப்படிவெகு சம்பிரமத்துடனே கொலுவிறைந்திருக்கும்போது போசராசன் வலதுகாலைத்தூக்கிப் பதினோராம்படியில வைத்தான் அப்படிக்கு காவலாகிய சகலகலாவல்லியென் னும்பதுமையானதுகைக்காட்டிக் குலுங்கச்சிரித்து சொல்லுகின்றது,

வாராய்போசமகாராசனே சம்பாபுரியென் றொருபட்டண முண்டு அந்தப்பட்டணத்திலே பத்திரசேனனென் றொருசெட்டி அவனுக்கநேககோடிதனமுண்டு அவனுந்தான் தருமம்பண்ணி தன்னுடைய பிள்ளைசுபகேந்திரனென் கிறவனுக்குஇருபதுகோடிதிரவியம்வைத்து அவன் காலங்கழித்துப் போனான் அந்தப்பிள்ளையும் தானதருமம் பண்ணுதவன் மனிதனாவென் றெண்ணி இருக்கிறதன மெல்லாம் எடுத்துத்தானதருமம் பண்ணினான் பெரியோர்களா யிருக்கிறபேர்கள் இப்படிசெலவு பண்ணலாமோ பிதாவானவன் தேடிவைத்த திரவியத்தை பதிரம் பண்ணிக்கொண்டு தான்தேடியதன மெலலாம் கான தருமஞ்செயது கொண்டு இதுவல்லாமல்தான் தேடியலாபத்திலே தான் தருமங்களை பண்ணவேண்டிய தேயல்லாமல் முதல்செலவழிக்கப் போகாதென்றெண்ணி புத்திசொன்னார்கள் சொன்னபுத்திகேளாமல் சிலவுசெய்து அழித்துக்கொண்டிருந்தான் பின்பு எல்லாரையுங் கூட்டிக்கொண்டு தகப்பன்வைத்தபொருளைசிலவு பண்ணிவிட்டுகெட்டுபோனானென்று எல்லாருஞ் சொல்லத்துவக்கினார்கள் அவனும் பெரியோர்சொல்லைக் கேளாமல் இப்படிவந்து நேரிட்டதென்று இனிஇந்தப்பட்டணத்திலே இருக்கப்போகாதென்று புறப்பட்டு தேசாந்திரியாய் சஞ்சரித்தான் இப்போது மதுராபுரியென்கிற பட்டணமே வந்தான் அங்கே ஒருபிராமணன் வீட்டிலே அசனம்பண்ணி அன்றையதினம் பட்டணத்திலே யிருந்தான் ராத்திரியிலே ஒரு பெண்ணானவள ஒத்தைக்குரலாக அபயமிட்டழுதாள் அதுகண்டு மறுநாள் உச்சினியென்றபட்டணம்வந்து விக்கிரமார்க்கனைக் கண்டு தன்னுடைய வர்த்தமானமெல்லாஞ் சொல்லி தான் தேசாந்திரமபோய் திரிந்தவ

யனமுஞ் சொன்னவுடனே ராசாவே நீர்போய்வந்த தேசங்களிலே அதிசயங்களுண்டோவென்று கேட்டார் அதற்குச் செட்டிசொன்னது நான்வருகிறவழியிலே மதுராபுரியென்கிறபட்டணத்தில் ஒருஅதிசயமுண்டென்று சொன்னான் அப்போது விக்கிரமார்க்கன் எழுந்திருந்து அந்தச்செட்டியைக்கூட்டிக்கொண்டு மதுராபுரிபட்டணமேவந்தொரு பிராமணன் வீட்டிலே யிருந்தார்கள அன்றிராத்திரியும் அந்தப்பட்டணத்திலே ஒருபெண்ணானவள் அபயமிட்டழுதாள் அதைக்கேட்டவிக்கிரமார்க்கன் ஒருவனாகப்புறப்பட்டுப்போனான் அத்தருணத்திலே மேகம்போல ஒருராட்சதன் வந்து ஒருபெண்ணினுடைய தலைமயிரைச்சுற்றிப்பிடித்துக்கொண்டு அடிக்கிறதைக்கண்டு வாராய்பெண்ணே நீஅழவேண்டாமென்றுசொன்னார் அந்தவார்த்தையைராட்சதன்கேட்டுகோபாக்கினியாய்க்கண்களில் நெருப்புப்பொறிபறக்க விக்கிரமார்க்கனுடனே சண்டைக்குவருகிறபோது அந்த ராட்சதனை இரண்டுதுண்டாய் வெட்டியெறிந்துவிட்டான் அப்பொழுது ஆச்சரியமாகஆகாயமார்க்கத்திலே அசரீர்வாக்காகஒருவார்த்தைபிறந்தது அதேதெனில் அந்த ராட்சதனானவன் தேவேந்திரனுடனே எதிர்த்துநின்று தர்க்கவாதம்பண்ணினவன் அப்படிப்பட்ட தேவர்களுக்குப்பயப்படாதவன் அப்பேர்க்கொத்தராட்சதனைக்கொன்று விட்டீரென்றுசொல்லிற்று,

அப்பொழுது விக்கிரமார்க்கன் அந்தச் செட்டியைக் கூட்டிக்கொண்டு மதுராபுரி பட்டணம்வந்து ஒருபிராமணன் வீட்டில் போசனஞ்செய் திருந்தார்கள் அன்றிராத்திரியும் அந்தப் பெண்ணானவள் கொண்டு தனியேபுறப்பட்டு ஒருவருக்குந் தெரியாமல் அந்தப் பெண்குரலோசையை நாடிப்போய் ஒருபக்கத்திற் பதுங்கிப் பார்த்துக்கொண்டிருக்கும்போது செவ்வானைக் கலந்ததைப்போல் சிவந்த மயிருங்கருத்தவுருவமும் கோரப்பல்லும் வெடித்தகுரலும்நெருப்பாகிய கண்களுமுடைய ஒருராட்சதன் அழகிய ஓர்பெண்ணின் தலைமயிரைப்பிடித்துத் தரையிற்றள்ளிக்கொண்டு யானை வாலாலடிக்கிறதைவிக்கிரமார்க்கன்கண்டு தைரியத்துடன்எதிர்சென்றுஏன் அடிக்கிறாய் அடிக்காதே அப்பா இந்தப்பெண்பேரி லென்னகுற்றமென்று அரசன்கேட்கராட்சதன்கோபித்து டலைக்கடித்து வெறித்துவிழித்து என்பெண்சாதியை நானடித்தால் நீயாரடா கேட்கிறவனென்று ராசன்மேரிலெதிர்த்திட அப்போது சிலம்பசாகரமும்பாணமுதலிய வாள்பாங்குவரிசையுந் தேர்ந்த விக்கிரமார்க்கராசன்ஒடிப்பதுக்கி துஷ்டனைஇரண்டுதுண்டாகவெட்டியெறிந்து அந்தப்பெண்ணைப்பார்த்து அம்மா நீபயப்படாதேயென்றுதிட்டஞ்சொல்லும்போது அந்தராத்திரியில் ஆச்சரியமாய்ஆகாயத்திலிருந்து அசரீரிவாக்கியமொன்றுபிறந்தது.

அதென்னவெனில் ஓதிடகாத்திரதேக விக்கிரமார்க்கனே கேளு ம் இந்த அரக்கன் தேவர்களுக்குக் கொடியபகை யைச்செய்து மகா னுக்களுடைய தவத்தையழித்து யாகாதிகிர்த்தியங்களைக் கெடுத்தவ வர்களுக்கும் பயப்படாமல் அக்கிரமமென்னும் மூட்டையைக்கட்டிக் கொண்டுதிரிந்தவன் இவனெப்போதுலேவானென்று எல்லோருஞ்சா பஞ்செய்து அவனுக்கு நடுங்கிக்கொண்டிருந்தார்கள் அப்பேர்ப்பட்ட கொடியபாவியை நீர்கொன்று விட்டபடியால் அவனுடையபலங்களு ம்வரங்களும் உன்னைச்சேரக்கடவதென்றுஇந்தவாக்கியம் பிறந்தபோ து தேவர்கள் புஷ்பமாரி பொழிந்து வாழ்த்தினார்கள் அவர்களைப்ப ணிந்துக்கொண்டு அரசனானவன் அந்தப்பெண்ணை நோக்கி அம்மணிநீ யார் உன்பெயரென்ன இந்தப்பாவி கையிலகப்பட்டு இப்படிவருத்தப் படுவானேனென் உன்னுடைய விர்த்தாந்தத்தைச்சொல்லுமென்று வேந்த ன்கேட்க அந்தப்பெண்ணானவள் ராஜனை வணங்கி என்றந்தையாகியதெ ய்வமே விந்தமாநகர மென்னும்அந்தப்பட்டணத்தில் மூத்தமிழுணர்ந் த வித்துதான் தருமனென்பவொருவருண்டு அவருக்கும் அவர்பெண் சாதிசந்திரரேகைக்கும் பெண்ணாகப்பிறந்துவளர்ந்து பருவபக்குவமா னகாலத்தில்என் தாயாகிய சந்திரரேகைக்குந்தெரியாமல் மனவஞ்சமா கிய சோரதோஷஞ்செய்வேன் அந்த நர்நடத்தையை தெரிந்துக்கொ ண்ட என்தாயாரானவள் ஒருராட்சதனிடத்திலகப்பட்டு இதற்குத்த குந்த தெண்டனை நீயனுபவிக்கக்கடவதென்றுஜபித்தாள் உடனேநா ன்பயந்து அவள்காலடியில் விழுந்துதாழ்ந்து அம்மா நான்செய்தபிழை யைத்தாய்பொறுக்கவேண்டுமென்று வேண்டினேன்பெற்றமனம் பித் தாகையால் மனமிறங்கிப்பிரதிசாபமிட்டாள் அதாவது என்னுடை ய வாக்குதப்பாமல் நீ சிலகாலம் வருந்தப்பட்டிருக்கும்போது உச்சி னி ஒங்காளிபுரத்தை ஆளாநின்ற விக்கிரமார்க்கராசன் ஒருஉதவினா ல் அந்தக் காட்டுக்குவந்துநீ வருத்தப்படுகிறதைக்கண்டு இரக்கப்படு வார்அப்போது அந்தராட்சதனுக்கும் அவருக்குஞ் சண்டைவிளைந்து அந்தராஜனால் ராட்சதனிறந்துபோவான்அந்தப்புண்ணியவானுடைய கண்ணாட்டப்பட்டவுடனே நானிட்ட சாபம் நீங்கும் அப்பால் என்னி டம்வந்து சேருவாயென்று எங்கள் தாயார்சொல்லஅன்று முதலின்றை வரையிலும் மாதாமனமெறிய வாழுமொருநாளுமென்னும் பழமொ ழிக்கிணங்கிப் படாதபாடும் பட்டுக்கொண்டிருந்தேன பாக்கியவானே உம்மாலே இன்றுயோக்கியமானேன்மேலும் இந்த அரக்கனுடையஅ னியாயங்களை வாக்கினாற்சொல்லப்பட்டஅநேகம் அரசரையழித்து அவர்களுடைய ராசகிஷ்தாக்களையெல்லாங் கொள்ளையடித்துக்கோடா னுகோடிதிரவியங்களை இவ்விடத்திற் புதைபச்செய்திருக்கிறான் அந்த த்திரவியங்களையெடுத்து உமதிஷ்டப்படிக்குச்சிலவுசெய்துக்கொள்ளுமெ ன்று அந்தஸ்திரீயானவள் சொல்ல அதைக்கேட்டுஅரசனானவன்அ ந்தத்திரவியங்களையெல்லாமெடுத்துஇந்தப்பெண்ணுக்குப் பாதியும்த ன்னையழைத்துவந்த செட்டியாருக்கும பாதியுங்கொடுத்துஅந்தப்பெ

ண்ணை அவளுடைய தாயிடத்திற்கனுப்பிவிட்டு செட்டியையக்கொண்டு போய் அவனுடைய பட்டணத்திலவிட்டு அவனுக்குக்கொடுத்ததிரவியத்தைவேதாளத்தால் கொண்டுபோய்க்கொடுத்து தானும்உச்சினிமா காளிபட்டணம் போய்ச்சேர்ந்தானதுபோசராசனேகேளும்சரீரசகாயமும பரவுபகாரமும் பிறருடைய துயரமாகவும் பார்த்து பெண்ணாசையும் பொனனாசையும் மற்ற எங்களிறைவனாகிய விக்கிரமார்க்க ராசனைப்போல் செய்யத்தக்கவல்லமை உம்மிடமிருக்குமாகில் இந்தச் சிங்காதனம் உம்மைத் தாங்கும் உமக்கிந்தகுணங்களில்லாவிட்டால் நீர்பின் வாங்குமென்றுசொல்லிப் பதுமை யுள்ளடங்கிப்போக அதைக்கேட்ட போசமகாராசன விக்கிரமார்க்கனுடைய புகழைக் கொண்டாடி தனக்கிவ்வளவு தன்மையில்லையென்று மனந்தளர்ந்து வெட்கிப்போனான்.

பதினோரும்பதுமைசொல்கதை-முற்றிற்று.

பன்னிரண்டாம்படிக்குக்காவலாகிய,

விவேசிந்தாமணிப்பதுமைசொல்கதை.

பன்னிரண்டாநாட்காலமே போசமகாராசனெழுந்து ஸ்நானசந்திசெபதபமுதலிய கருமங்களை முடித்துச் சோடசமகாதானங்களும் கொடுத்துச் சாஸ்திரிகள் தவமுனிவீஸ்வரர் மந்திரிசாமந்தர் காரியஸ்தாள் படைமுதலியபேர்களுடன் சகலவிருத்தாங்கங்களும்படிக்கச் சகலவாத்தியங்களு முழங்கவந்து சிங்காதனத்துக்குப்பூசை நைவேத்தியங்களும் நடத்தி தங்களிஷ்டதெஷ்டதெய்வத்தைப் பிரார்த்தித்து இன்றைக்கெப்படியாகிலுஞ் சிங்காதன மேறவேண்டுமென்று சிந்தைகவிகொண்டு சந்தனபுட்பதாம் பூலாதிகளும் வழங்கி ஜெயம்ஜெயமென்றுகட்டியர் பட்டுவான்கள் புகழுபடியாட் தனதுவலதுகாலைஎடுத்துப் படிமீதில் வைக்கப்போம்போது பன்னிரண்டாம்படி யைக்காத்திருந்த விவேகசிந்தாமணியென்னும் பதுமை கலீரெனக்கைகொட்டி நகைத்து சரீரலென்று தடையில்லாமல் சிங்காதன மேறவந்தீர் போஜனே இந்தச்சிங்காதனமேறுவதற்குஎன்ன துணிவுகொண்டு வந்தீர்கள் எங்கள் விக்கிரமார்க்கமகாராசனொருவரைத்தாங்குகின்ற இந்தச்சிங்கதனமானது இன்னொருவரைத்தாங்காது அதேனெனில் அந்த விக்கிரமார்க்க மகாராசனைப்போல் புருஷலட்சணங்களும அமைந்திருந்தவர்கள் யாருமில்லாமையால் தாங்கா தெனச்சொன்னேனென்று பதுமை சொல்லஅந்தப்பதுமைநோக்கிஒவிவேகசிந்தாமணியே அந்தஉத்தமனுடைய நற்குணங்களும நல்லசரித்திரங்களையும் என் காதாரக்கேட்கச் சொல்லுமென்று போசராசன் விசுவாசத்துடன் கேட்க பதுமைசொல்லுகிறது,

வாராய்அரசனே எங்கள் மகாபிரபுவாகிய விக்கிர மார்க்கராசன் கடாறுமாதந் திரியவேண்டிய காலத்தில் சகல பாவங்களையுந் தி

ர்க்கும் கங்கைக்கரையிற போயிருந்து நல்ல வித்தையும் பார்த்துக்கொண்டிருக்கும் காலையில் தர்மபுரியாகிய பட்டணத்தை யாண்ட மந்திரிசேனனும மகாராசன் தனது சேனைசனியங்களும் கங்காஸ்நானத்திற்கு வந்து வஸ்திரமுதலிய நவமணித்தானங்களுஞ்செய்து சங்கற்பமபண்ணிகொண்டு ஸ்நானம நித்திய விதிகள் முடித்து வழக்கப் பிரகாரம் புராணமுதலிய தர்மநூலகளை சாஸதிரிகள்பாலிக்க அவர்களை நமஸ்கரித்து ஆசிர்வசனத்துடன அட்சதைவாங்கிக்கொண்டுசிங்காதனத்திலிருந்து கர்மங்கேட்டு வருமபோது அந்தப்புராணத்திற் சொல்லிவருந்தர்மமாவது மனி சென்ன மெடுத்தவர்கட்கு சிங்கம்போன்ற தீயமும் தர்மமூலிய சத்தியமும் பிராமணாள் பசுக்கள் சிசுக்கள்ஸ்திரிகள் முதலாகிய பேர்களுககு ஆபத்துவருமாகில பிராணனைக்கொடுத்தாகிலும்ரட்சிக்கவேண்டு மென்று சாஸ்திரங்கள் படித்துக் கொண்டிருக்குஞ்சமயத்தில் கங்காஸ்நானஞ் செயதுகொண்டிருந்த ஒருபிராமணனை முதலை பிடித்துக்கொண் டிழுக்குதென்று அந்தப்பிராமணனுடைய பெண்சாதி யானவள் இராசனிருக்குமண்டபத்திலோடிவந்து ஐயோ அரியாமா அபயம் அபயமென்று அழுது மணவாளனையும மஞ்சளையும் மங்கிலியத்தை யுமிழந்தேன் ஐயோ அரசர் கூட்டங்களே எனக்கு தாலிபிச்சை கொடுங்களென்று தரையில் வீழ்ந்து புரண்டு எழுந்து மிகுந்ததுன்பப்படுகின்ற அந்தஸ்திரீயைப் பார்த்துக் கொண்டிருந்தார்களேயன்றி ஆபத்துக்குதவவேணுமென்று கேட்டசாஸ்திரதர்மமும் தீரத்துவமும் யாருக்கு மில்லாதருப்பதை அந்தப்பிராமணஸ்திரீ கண்டு ஓதர்மங்கேட்குந்தாஷ்டீகரே நீங்கள் ஆணுடன்பெண்ணுடன்பிறக்கவில்லையோவென்று வயிற்றிலிடித்துக் கையை நெறித்துமுகத்திலறைந்துக்கொண்டு புண்ணியந்தேடவந்து புருஷனை யிழந்தேனென்று புலமபிவருவதை விக்கிரமார்கன்கண்டுகஜேந்திரனெனியானை முதலைவாயிலகப்பட்டு பிழைத்துவர வகையறியாமற் சிலநாளுழன்று ஆதிமூலமேயென்றழைக்க அப்போதுவந்த யானையைக்காத்தருளியசக்கிரவாதனைப்போல்கால்விரைந்தோடிதங்கையிற்குதித்து கரநவைவதைத்துபிராமணனைவிடுவித்துகரையேற்றி அவருடைய பெண்சாதிகையில் ஒப்புவித்தார் அப்பிராமண ஸ்திரீயானவள் என்மங்கிலியம்போலுன்மனைவியின் மங்கிலியம் நீடித்திருக்கடவதென்று ஆசீர்வதித்தாள்.

அந்தவேளையில் முதலைவாயினின்று மீண்டவேதியன் வேந்தனைநோக்கிஆசிர்வதித்து சந்தோஷமடைந்து முதலைவாயில் பிள்ளையை மீட்டமூர்த்தியைப்போல் எனக்குபிராண பிட்சைகொடுத்தபுண்ணியனே உன்னுடையதர்மத்தினாற்பிழைத்தேன்நீர்செய்த உதவிக்குநானென்னசெய்தாற்றகும் வையகத்தார் மழைக்கு என்னஉதவிசெய்யலாம் அதுபோல என்தந்தைதாய்க்கும் ஆசாரியருக்கும என்கடவுளுக்கும் உமக்கும் நான்நித்தியவந்தனஞ்செயவது பேதமில்லைநீர் ஒருவருக்குபகாரியேயல்லது ஒருவருபகாரத்திற்கு நீர்கார்க்கிறவரல்ல ஆகிலும் எ

ன்னுடைய ஆசையைகெடுக்காமல் நான்செய்யப்போகிற உபகாரத்தை உபகாரமாய்ப் பெற்றுக்கொள்ளுமென்றுபிராமணன்சொல்ல அரசன் வெகுண்டு ஐயரே நானொருவனுடைய உதவிபெற்றுவுதவிபெறுவதற் காகச் செய்வதல்லகடவுளொருவனறிந்து எனக்குதவிசெய்ய வேணு மேயல்லதுநீங்கள் செய்யவுங்கூடாது நானதைப்பெறவுங்கூடாதென்று விக்கிரமாக்கனடுக்க அதற்கந்தப் பிராமணன் மனஸ்தாப மடைந்து நானென்னமகாபாவியா நான்கொடுக்கும் உபகாரத்தை நீர் பெறமாட் டோமென்று தள்ளிவிடுகிறதும் நான் மாத்திரம் நீர் காப்பாற்றிவிட்ட தேகத்தைவைத்துக் கொண்டிருக்கிறதா இதோ அந்த நதியிலுலாவுகி ன்றமுதலைக்கே இரையாக வீழ்கிறேனென்றுவேதியனோட இதை அ ரசனுணவன் அவனைப் பின்னாலோடிப் பிடித்துவந்து ஓசுவாமி என்பே ரிலதேவரீருக்கு இஷ்டமிருந்தால் உலகமதிக்கும்படியாகிய ஒருமந்திர ம உபதேசித்தருளுமென்றுகேட்க அப்படிக்கே அந்தப்பிராமணன் த வத்தினாலுஞ் செபத்தினாலுந் தன்னுயிர்க்குயிராயச் சம்பாதித்துவைத் திருந்தமந்திரத்தை உபதேசித்தருளி ஓமகாராஜனே யிந்தமந்திரத்தை ஒன்பதுதரஞ்செபிப்பையாகில் தேவேந்திரவிமானமும் உனக்கிஷ்டமா கியபொருளுமவரும் அவைகளைநீயனுபவித்து விமானத்திலேறிக்கொ ண்டாவ எந்தவிடமநினைக்கிறீரோ அந்தயிடங்களெல்லாம் கண்டுவரலா மென்று மங்களவசனஞ்சொல்லி வாழ்த்திவிடைபெற்றுக்கொண்டு தன் னகரத்தைநோக்கி மனைவியுமமறையவனும் போனார்கள

இப்பால் விக்கிரமார்க்கராஜன் அவ்விடம்விட்டுபுறப்பட்டுச் சந்தி ரசூரியகிரணம் நுழையாமலடர்ந்துபடர்ந்து கொடிகளிந்துசெடிகணி றைந்த ஒருமலையின்மீதேறிவேடிக்கையாய் வுலாவிக்கொண்டிருந்து அ வ்விடத்திலிருந்தபெரிய அரசமரத்தைக்கண்டு அந்தமரத்திலிருந்து ஒ ருபிரம்மராட்சதனிறங்கினான் அவனைக்கண்டுபயப்படாமல் எதிரேநிற் கபிரம்மராட்சதன் நீயாரென்றுவினவநானே விக்ரமார்கனென்னுமரச ன் இம்மரத்திலிருக்கியநீயா ரென்றரசன்தட்டிக்கேட்க பிரம்மராட்சத ன்நயந்து தேவர்முனிவர்புவியயாவரும் என்னைக்கண்டு பயப்படும்படி யாயிருக்க நீபூமியிலிருமரசன் என்னைமிரட்டுகிறாயோவென்று கண்ணு முகங்கருகசெவக்கதை யோங்கிக்கனவரையினுமுயர்ந்து கருவிநிற்காநி ன்ற பிரம்மராட்சதனைநோக்கி உனக்குகாலஞ்சமீபித்ததென்று மன்ன னெழுந்துமந்திர வாளைவீசிவருமபோது அப்பாயிவன் தைரியசாலிதே வதானுக்கிரகமுடையவனென்றுதிகில்கொண்டுபிரம்மராட்சதனடங்கி சிறியதிவ்யவுருவமாய்வந்து ராசனுக்குமுன்னேநிற்கப்பார்த்துநீயானா யாமுன்னே ராட்சதரூபமாயிருந்தாயிப்போது திவ்யவுருவமாய்வந்தாய் உன்னுடைய வரலாற்றை சொல்லென்றுமன்னவனவினவ இந்தப்பிரம ராட்சதன்சொல்லுகிறானரசனேநானிந்தவுலகத்தில் செவ்வையாய்ப்பி டித்துக்கொண்டு சுற்றத்தன்மைக்கிணக்கமாகிய நடையில்லாமற்கெர்வங் கொண்டு நல்லோர்பெரியோரரையிகழ்ந்து சமயமுதலியதெய்வங்களைப்

பழித்துவாழ்நாளை வீணுக்கழித்த மகாபாவியாகியஎன்னை ஆயிரவருஷம்வேகவிறியாகி அன்னமாகாரநித்திரையில்லாமல் அலக்கழியக்கடவதென்றுமகா முனீஸ்வரர்கள்சாபமிட்டார்கள் அவர்களைபணிந்துதவமேற்கொண்ட அடியார்களே இந்தச்சாபத்தையனுபவிக்க என்னால்முடியாது தயைசெய்யவேண்டுமென்று இரந்துவேண்டிக்கொண்டேன் அப்ப்போது அவர்கள் அருள்செய்ததாவது உன்னைக்கண்டுநீ பயப்படத்தக்க மனிதர்களைக்கண்டு நீபயப்படும்படியாகியகெர்வமெப்போதுவருமோ அப்போது உனக்கு சாபவிமோசனமென்று சாற்றினார்கள் அதுமுதற்கொண்டு என்னைக்கண்டெல்லோரும் திகிலடையும்படியாய் அந்தயரசமரத்திற் றொங்கிக்கொண்டிருந்தேன் என்னைமிரட்டிஉன்னைக்கண்டவுடனே சூரியனாலிருள்நீங்கிய தன்மைபோல் வுன்சரசமாகிய கர்மவினை இன்றுநீங்கிக்கடைத்தேறினேன் என்னைக்காப்பாற்றிய புண்ணியவான்கள் உம்மைவிடவேறொருவருமில்லை ஆகையாலினிமேல்நான் பிழைக்கும்விதம் இன்னதென்றறியேனிதற்கும் நீரேவழிசொல்லவேண்டும் ஐயனேயென்றுபிரம்ம ராட்சதவுருவமாயிருந்துநீங்கிய உத்தமன்கேட்க அரசன்சந்தோஷமடைந்து எந்தவிதத்தால்நீபிழைக்கலாம் என்னாலுனக்கு ஆகவேண்டியதைக்கேளென்று ராசன்சொல்லராட்சதரூபன் நாவுநோக்கி கோவிந்தகுலமணிகேளும் கங்கையிலமுதலையைவெட்டிப் பிராணனைக்காப்பாற்றியபலத்தையும அந்தப்பிராமணன் உமக்குபதேசித்த அருமையாகியமந்திரத்தையும் எனக்கு கொடுத்தாள நான் சவுக்கியமாய்ப்பிழைப்பேனென்று ராட்சதரூபன்சொல்ல அதற்குடன்பட்டுமனப்பூர்வமாய் மகிழ்ந்து விக்கிரமார்க்கன் அதுகளைக்கொடுக்க அதைப்பெற்றுக்கொண்டு ஒன்பதுபராஞ்செபித்தவுடனே தேவவிமானம் வந்தது அந்தராட்சதனாயிருந்தமுத்தமிழ்வித்துவான் அந்தவிமானத்திலேறிக்கொண்டு உபயசாமரைமுதலிய உபசாரங்களுடன் மேன்மையாய் விக்கிரமார்க்கராசனை வாழ்த்தி லோகங்களிற்சஞ்சரித்து சவுக்கியமடைந்திருந்தான் இவ்விடத்திலரசன்பேரில் தேவர்புட்பமாரிபொழிந்துதேவதுந்துமி முழங்கிவாழ்த்தினார்கள் இப்படிப்பட்டதிராணியும ஔதாரியமும்பொறுமையும பேராசையுமில்லாதகுணமும் இருப்பவரெவர்களோ அவர்களிந்தசிங்காதனமேறலாமுமக்குண்டாயிருந்தால் இரும்மென்று பன்னிரண்டாமபடிப் பதுமைசொல்லி உள்ளேதலைவாங்கிக்கொள்ள போஜராஜன நாமவ்வளவு புண்ணியம் பண்ணாமற்போனோமென்று விக்கிரமார்க்கனுடைய புகழைநினைத்து நினைத்துருகி அரண்மனைக்குப்போனான.

பன்னிரண்டாம் பதுமைசொல் கதை - முற்றிற்று.

[0:0:0]

பதின்மூன்றாம்படிக்குக்காவலாகிய

நீதிசிந்தாமணிப்பதுமைசொல்கதை.

பதின்மூன்றாநாட் காலமேபோசராசனெழுந்து ஸ்நானஞ்செய்து செபதபமுதலாகிய நித்தியவிதிமுடித்துக்கொண்டு கோதானம்பூதானம் கன்னிகாதானங்கொடுத்து தவமுனிவர்கள்வித்துவான்கள் சாஸ்திரிகள் படைத்தலைவர் உழையர் முதலிய பேர்களுடன்பேரிமுழங்கச்சென்று சிங்காதனத்திற்குப் பத்திரபுட்பங்களால் அர்ச்சித்துப்பூசைநைவேத்தியம் புரிந்து தீர்க்கதெண்டமாகப்பணிந்தெழுந்துசத்துராதிகளின்முடிமேலிருக்குங்காலை சிங்காதனப்படிமேலெடுத்து நாட்டப்போம்போது பதின்மூன்றாம்படிப் பிரதமையானது ஓ அரசனே பொறும் பொறுமென்று பேபாடுவதுபோற் றலையாட்டி புன்னகை காட்டிகரங்கொட்டிவரும் போசமகாராசனே என்னையாண்டவனாகிய விக்கிரமார்க்கமகாராசனென்னும் பாண்டியனைச்சுமந்த நாங்கள் இன்னொருவரைச்சுமக்கோம் அதுவேதினாலென்னின்கல்வியிலும் செல்வத்திலும் வில்லிலும்சத்தியசொல்லிலும் வீரத்திலும் திடசீரத்திலும் கல்வியிலும் கல்விக்குரியபுலமையிலும் இனத்திலும் கனத்திலும் ஜனத்திலும் உறுதினத்திலும் சிறந்தமன்னனாதலால் அவரைப்போன்ற அரசர்கள் யாரிருக்கிறார்கள் அருள்வடிவாகிய போசராசனேயென்றுபதுமை சொல்லஅதைக்கேட்ட அரசன் நாளுக்குள் தன்னுடையகாதுகள்சிறப்புகதைகேட்டு கண்ணீர்சொரிந்து நமக்கன்னாரொருவனென்றுகருத்துவந்து நாங்கசிங்காதனப்படி யேறவிட்டாலும் இதைத்தரிசிக்கவும் அந்தப்புண்ணியவானுடைய புகழைக்கேட்கவும்பாக்கியஞ் செய்தேனாதலால் அவருடையபிரதாபத்தைச் சொல்லுமென்றுபோசராசன்வினவ பிரதமை சொல்லத்தொடங்கியது

கேளும் ராசசிரேஷ்டனே ஆக்கினை சக்கிரஞ்செலுத்தி வாக்கினால் மனுக்களைத்திருத்தி சகல மனுவிக்கியான நீதியுடன் உலகமகாக்குநாளையில ஒருநாள் சப்தபுரியிலுஞ் சிறந்த காஞ்சிபுரத்திற்கு வந்து கம்பாநதியிற் றீர்த்தமாடி கச்சியரைப்பணிந்து காமக்கோட்டிபீடத்தை தரிசித்துக் காமாட்சியம்மனையுந் துதித்து ஏகாம்பர நாதரையுந்திப்போற்றிக் கருணையக்காட்சியளிக்குந் திருவடியே யென்று ஸ்தவுதிரயஞ் செய்துகொண்டு நிற்கும்போது அந்தக் கடவுளுடைய சிரத்தின்மேற்கவிந்திருக்கும் மாமரத்தின்மீது ஒருயோகீஸ்வரனிருந்து அரசே நீயெங்கிருப்பது உன்பெயரென்ன நீ இவ்விடத்தில் வந்தகாரியம் யாதென்றுகேட்கஐயானானிருப்பது வுச்சினிமாகாளிப்பட்டணம என்பேர்விக்கிரமார்க்கன் இந்தமூர்க்கியமாகியஸ்தலத்தில் ஏதாகிலுமதிசயங்களும் விநோதங்களும் புதுமைகளும்உண்டாயிருந்தால்பார்க்கலாமென்றுவந்தேன் சுவாமிஎன்ன அந்தமொழியைக்கேட்ட

யோகீஸ்வரன்நகைத்து அப்பா இவ்விடத்தில்யென்னபுதுமையுண்டெ
ன்றுமில்லைஉன்னாட்டிலில்லாதவினோதமாஇன்னாட்டிலிருப்பது இறை
யேயென்றுரைக்க அதைக்கேட்டராசன் ஐயையோ ஈஸ்வரரேஎன்னா
ட்டில் என்னவதிசயம் தேவரீர் கண்டிருப்பது அதையாவது எனக்கு
த்தெரியப்படுத்த வேண்டுமென்றுகேட்கயோகீஸ்வரன் சொல்லுகிறார்
முற்காலத்தில் இந்தத்தமிழ்நாட்டிலே வீரசேனனென்றொருராசனிரு
ந்தான் அவனுக்குஊழ்வினைவினால் விருத்தகாலமவந்துபதினெண்பா
ஷைமன்னருமபகைத்து மேல்விழுந்து சண்டையிட்டு நாட்டையும்பி
டுங்கிக்கொண்டது மல்லாமல் காராக்கிரகத்திற்போட்டுவைக்க நினைத்
தார்கள் அந்தச்சங்கதியை அரண்மனை தாதியறிந்துராசபத்தினிக்குச
சொல்லஅந்தவார்த்தையை ராஜனுக்குத்தெரிவித்துநாம்பிழைத்த பி
ழைப்புக்கு காவலிற் கட்டுப்படவேண்டுமோ என்னுண்டவனே காட்
டிற்றுண்டி விடுவதே யோக்கியமென்று இராசாவுக்குச்சொல்லி இரவி
ல்தானேபுறப்பட்டு புருஷன் பெண்சாதியிருவரும பொழுது விடியும்
போது மூனுயோசனைதூரம் காட்டுவழியே நடந்துபோய் அவ்விடத்
திலொரு ஆலமிருக்கக்கண்டு இளைப்பாற உட்கார்ந்துபெண்சாதிமடியிற்
றலைவைத்துபடுத்து பொறுமையுடைய அரசனானவன்பெண்ணே நாம்
ஆருக்கும் அநியாயஞ் செய்ததில்லையே அதிதிபரதேசிகளை யடித்ததி
ல்லையேஊருக்குஅபகாரம் புரிந்ததில்லையே உற்றார் ப்பகைவைத்ததி
ல்லையே பழைபரிசத்தைப் பகைத்ததில்லையே பார்ப்பாரைக் கவிஞ
ரைக்குறைத்ததில்லையே பாவஞ்செய்யாதஎனக்குஇத்துன்பம் எப்படி
வந்ததோ நாலுபேர்நடக்கும்பாதையிலிருக்கும் ஆலமரமேயென்று ப
த்தினியுந்தானும மெத்தவருந்திக்கொண்டிருக்கும்போது அந்தமரத்தி
லொற்றிலிருந்தஒருசடாமுனியானது மனதிரங்கி இவர்களை மகாராச
ராக வேண்டுமென்று நினைத்து அவர்க ளிருவருக்கும் தூக்கமயக்க
முண்டாகிஅவர்களைத்தூக்கிக்கொண்டுபோகும்போது துவிக்கமாநகரமெ
ன்னும பட்டணத்துராசன் இறந்துபோய் வேறுபிள்ளைகளும் இல்லா
மையால்தர்மவேதைபால் அரசனைப்பெறவேண்டுமென்றுபட்டத்துயா
னையை அலங்கரித்து நவரத்தினகசிதகுண்டலத்தில் ஜலமும புஷ்பமா
லையும பிடரியில்வைத்துபதினெட்டு வாத்தியங்களு முழங்கப்பதி
னெட்டுவிருதுகளுந்தயங்க குடிபடைமுதலாகியகுருவும் சூழ்ந்துவரு
கும்போது அவருக்கெதிரில் இவர்களைக்கொண்டுபோய்வைத்துயானை
யினதுதிக்கையில்சடாமுனிபோயிருந்தது அந்தஜலத்தை அந்தஇராச
ன்மேலிற்கொட்டிமாலையைசூட்டிமத்தகத்தின்மீதில எடுத்துக்கொள்ள
மந்திரிபிரதானி முதலியபெரியோர்களுஞ் சிந்தைமகிழ்ந்துஇந்திரதேச
ராசனென்றுசொல்லிசுதந்தரமபட்டாபிஷேகஞ்செய்துராசபத்தினியை
யும்ராசனையும்வெகுசனங்கள்வந்துவணங்கிப் பூசிக்கும்படியாயசெய்து
பழைய ஆலமரத்துச்சடாமுனிபோனபிற்பாடு அந்தநகரத்தைஇந்தரா
சன் துரைத்தனம் பண்ணிக்கொண்டு வந்தான் அப்படிவரும்போ

துபாதாளத்திலிருந்து சிலராக்ஷதர்வந்துமலைமா முதலியதைபிடுங்கியெறிந்துஎவர்களையும் அண்டவொட்டாமற் சண்டைசெய்கிறார் அதனாலந்தராசன் மெத்தவருந்திசித்தநொந்து கர்த்தனேயென்றுயுத்தம்பண்ணி. இளைத்து கோட்டையைவிட்டுவிட்டு காட்டிலோட்டிக்கொண்டிருக்கிறானென்று மாமரத்திலுள்ள யோகபுருஷன் சொல்லியதைக்கேட்ட விக்கிரமார்க்கராசன் அதிசீக்கிரத்துடனே வித்தமாநகரம் போய்ச்சேர்ந்து இந்நகரத்தையாண்ட அரசனெங்கேயென்று விக்கிரமார்க்கன்கேட்க ராக்ஷதரைவெல்லவேவிட்டு நீயவனுக்குப்படைத்துணையாக வந்தாயோவென்று அரசனை மடக்கிக்கொண்டபோது சத்தியமேநித்தியம் தர்மமேசெயமென்று மாகாளிகொடுத்த அரிவாளெடுத்துமண்டியிட்டு கண்டகண்டயிடத்தில் அரக்கரைக்கண்டதுண்டமாக்கி எண்டிசையும்புகழ அண்டர்மகிழுபுண்டரீகராகிய பெருமான்வாழ்த்தகட்டியர்மந்திரியர்மந்திரிமுதலாகிய தொண்டர்கள்பெற்ற அவ்விடத்திலிருந்த ராக்ஷதபிணங்களெல்லாமவாரிக் கடலிற்கொட்டிவிட்டு பட்டணத்தைப்புண்ணிய வசனஞ்செய்து தேவாலயம் விஷ்ணுவாலயம் பிராமணாளுடைய அக்கிராரம் தர்மச்சத்திரம் சாவடிமண்டபமும் யாவத்தும்புதுக்கிக் குடிபடைகளை நிலைக்கச்செய்து காட்டிலோடிப்போன இந்திரசேகர மகாராசனையும் அவருடைய பத்தினியுடன் கண்டுபிடித்து நாட்டிற்கொண்டு வந்து அரண்மனை வீட்டிற்செலுத்திதன்கையால் வீரபட்டங்கட்டி அந்தப் பட்டணத்தை அவருக்குச் சொந்தமாக்கி இனிமேலும்மெந்தவிதத்திலும் பகைவரில்லையென்று விக்கிரமார்க்க மகாராசனுடையஅபிமானஸ்தலமென்று கோட்டைவாசலிற் கொடிபோட்டு வைத்தகொள்கையை இன்னொருதேசத்தரசனாகிய சிந்துவாசனென்பவன்கேட்டு சிந்தைமகிழ்ந்து மண்டலத்தையாளும் மன்னவர்கள் மண்ணாசை இந்த மூன்றும யாவரையும் விடாது அப்படியிருக்க உமக்குக்கைவசப்பட்ட இந்நகரத்தை நீர் ஆசையையாமல் இந்தராசனுக் குதவிசெய்த நன்மைமையக்குறித்து நான்புகழுகிறேன் என்னுள்ளமகிழுகிறேன் அரசனே நம்முடையவுதவினைநினைக்கநினைக்கஎனக்காறவில்லை ஆதலால்நான்கொடுக்கிறவஸ்துவை நீர் அங்கீகரிக்கவேணுமென்று உச்சரித்து சந்திரகாந்தக் கல்லினாலமைந்த ஒரு சிங்காதனந்தனிலிருமென்று தன்கண்ணாக்கண்டு ஒருவரையொருவர்தழுவிசெலவுபெற்றுக்கொண்டுசிந்துவாசனாநகரம்போய்ச் சேர்ந்தா இந்நகரத்தையாளும் இந்திரசேகரராசன் விக்கிரமார்க்கனைப்பணிந்து தாழ்ந்துநின்ற அரசனை தயிரியப்படுத்தி அவ்விடத்தில் நிலைநிறுத்திசெலவுபெற்றுக்கொண்டு அந்தப்பட்டணத்துச்சனங்களை சொல்லிவிடைபெற்றுக்கொண்டுவரும்போதுகாஞ்சிபுரத்தில் மாமரத்திற்கண்டயோகபுருஷர்எதிர்வந்து தடுத்துநான்யோகபுருஷனல்லசடாமுனியாக்களும்இந்தராசனுக்குப்பட்டங்கட்டிவைத்தவன்நான் தான் ராட்சதாள்வந்தெதிர்த்தபோதுஎன்னு

ற் கூடியவரையிலும் ராஜனுக்குச் சகாயமாய்ப்போர் புரிந்துமாளாமல் கீர்காஞ்சிபுரம வந்திருக்கிறீரென்றுக் கேள்விப்பட்டு பரவுபகாரியாகிய உம் மிடத்திற்குவந்து சொன்னவனும்நானதான் அரசனேயிவ்வளவு சகாயபுருஷனாகிய உமக்கு நானென்ன செய்யப்போகிறேன் உமக்குநான் அடிமையென்பதற்கு மிஞ்சியஉபகாரமொன்றுமில்லை எனறுவுபசரித்து நானிந்தவழியிலிருக்கும் ஆலமரத்திற்குப்போரேனென்று அரசனிடத்தில விடைபெற்றுக்கொண்டு சடாமுனிபோனபிற்பாடு விக்கிரமார்க்கன் தன்னுடையநகர்நோக்கி போகுமபோது வருகிறமார்க்கத்தில் ஒரு ஏழைப்பிராமணன் மிகுந்தவிர்த்தன் அனாதியாய் யழுது புலம்பிக்கொண்டிருந்தான்.

அவனைப்பார்த்து ஐயரேநீயார் எங்கிருந்துவந்தீர் உமதுபேரென்ன உமக்குவூரேது நீரெவ்விடமிருந்து துக்கப்பட்டுவருநீர் சொல்லுமென்று விக்கிரமார்க்கன்கேட்க வேதியன்சொல்லுகிறான் என்குலதெய்வம்போன்றகோவே நான்பிறந்ததுமாயாபுரி எனபேர்மலைக்கண்ணன் நான்வளர்ந்தது வேதியநகரமெனக்கு தொண்ணூறுவயதாய்விட்டது இதுவரையிலும் முஷ்டி எடுத்துநித்தியதரித்திரமாய் அண்ணுடனுசேவனஞ்செய்து வந்தேனேயன்றி ஒருபொழுதாகிலும் உண்டென்றுபுசித்ததில்லை இப்பேர்ப்பட்டபாவஜெனனம் இருந்தென்னவென்றெண்ணி இந்தவனத்தில் உயிரைவிடவந்தேன்பிறர் துயர்தன் துயரென்று பார்க்குப்புண்ணியசீலனாகியஉமமைக்கண்டேன்என்குறையெல்லாம்விட்டேன் விக்கிரமார்க்கமகாராசனே பல்லாண்டுபல்லாண்டாய் நீவாழ்கவென்று ஆசீர்வதித்தனன் தன்குறைபச் சொல்லிக்கொண்ட அந்த ஏழைப்பாப்பானுக்கு வேதாளமெடுத்துவந்தசந்திரகாந்த கற்சிங்காதன கதையுஞ்சகலசமபத்தையுங்கொடுத்து ஆலமரத்திலிருக்குமஜடாமுனியையமைத்து ஐயாஇந்தப்பாப்பானிடத்தில் என்பேரில்வைத்தபட்சததை வைத்தருமென்றுகைபிடித்தொப்பில்வைத்து தன்னுடையபட்டணஞ்சேர்ந்தான் இப்பேர்ப்பட்ட உதாரகுணமும் பொருமையும கிராசையும்பரவுபகாரமும்மன்னுயிர்தன்னுயிரென்றும்பட்சமும் மறமுந்திறமும்உடைய அரசர்கள ஆராகிலுமுண்டோ தேசவிசுவாச போஜனே உமது மனத்திற்குத்திருப்தியாயிருக்குமாகில்இந்தச் சிங்காதனமேறலாமென்று வெடுக்கெனச்சொல்லிபதுக்கெனத்தலையை உள்ளேவாங்கிக்கொள்ள அதைக்கண்டபோஜராசன் அதிக வெட்கமுடையவனாய்ஒருபட்சம்நாமப்படியில்லையேயெனமிகுந்த துக்கமுடையவனாய் இந்தமகானுபாவனுடையசரித்திரத்தையுமபூரணமாய்க்கேட்டுவிடுவோமென்று பொழுதுபோம் வேளையில்தனதுவீடுபோய்ச்சேர்ந்தான்.

பதின்மூன்றம் பதுமைசோல்கதை-முற்றிற்று

பதினான்காம்படிக்குககாவலாகியமனுநீப்பதுமைசொல்கதை

மறுநாட்காலையில் போசமகாராசனெழுந்திருந்துஸநானசந்திசெபதபித்ருபிதுர்க்கருமங்களை முடித்துக்கொண்டு அநதானங்களுதானங்

களுக்கொடுத்து வேதவேதியர் மனுநீதிபுணர்தமந்திரியர்சாமந்திரிய ர்சேனைத்தலைவர் யானைத்தலைவர்வந்திப்பார் கடிப்போர்யாவரும்நெ ருங்கிவர சுவேதசுஷத்திரங்க விக்குமணிமுரசு காகளம் கொம்புசின்ன ம் பூரிதாரைவீராணபேரி உடுக்கைதவண்டைமல்லரி கங்கம்சங்கு கோ ணகொம்புமுழங்கிவரகூடக்கொம்புநெருங்கிவரசிங்காதனத்தண்டை யில்வந்து பூஜாவிதியெல்லாம் நடத்தி பிரதட்சணம் வந்து நமஸ்கரித் துப் பெரியோர்களுக்கெல்லாம் முத்துகளை மாரிமாரிபோற்பொழிந்து அவர்களுடைய ஆசீர்வசனங்களும அட்சதையும்பெற்றுக்கொண்டுக டவுளைவணங்கி வலதுகாலைத்தூக்கி சிங்காசனப்படியிலவைக்கப்போம் போது அந்தச்சிங்காதனத்தின் பதினன்காம்படியிலிருக்கும் மனுநீதி ப்பதுமை படபடவென்றுகை கொட்டியெழுந்து பற்பலபேருடனி ருந்து நிற்கின்ற போசராசனைப் பார்த்து ஓ அரசனேநீர் இந்தச்சிங் காதனமேறுவதற்குத் துணிவீராகில் சும்மாயேறலாம் ஆனால் ஒருகா ரியஞ் சொல்லுகிறேன் அதாவது இந்தச்சிங்காதனத்தில் முன்னும்வீ ற்றிருந்த விக்கிரமார்க்க மகாராசனைப்போல் நீர் மேன்மைக்குண முள் ளவராகில் இந்தச்சிங்காதனம உம்மைச்சுமக்கும் இல்லாவிட்டால் பூ மியிற்றள்ளி அழுக்குமென்று பொம்மைசொலலக்கேட்டு உடல்பூரித் து ஓபிரமையே அந்தவிக்கிரமார்க்கமகாராசனுடைய சகாயமேன்மை க்குணங்களை எனக்குவிபரித்துரைக்க வேண்டுமென்று போசராசன் கேட்கப் பதுமைசொல்லத் துடங்கிற்று.

தேசதேசமேயாளும் போசமகாராசனே கேளுங்கள் விக்கிரமார் க்கமகாராசனிடத்தில் வெகுகாலமாய் அவருடைய அன்பையும் அரு ளையும்பெற்ற சூரனென்னும் புரோகிதன் புத்திரமித்திரகளத்திராதி பந்துக்களுடனே போகபாக்கியத்தை அனுபவித்து நெடுநாட்கழித் துசாஸ்பதி விசாரணைசெய்து நக்ஷத்திரத்தை விடுத்து அறுபகை யைஅறுத்து அரசனிடத்தில் செலவுவாங்கிக்கொண்டு தாவியாய்ப் புறப்பட்டுபூமிப்பிரதட்சணஞ்செய்துவரும்போதுதெய்வப்பிரயாகைசம ணிகர்ணிகையமுனைமுதலியதீர்த்தங்களில் அனேகம்பெரியோர்கள்ஸ் நானம்பண்ணிபிண்டங்களிட்டு காவடிகட்டிக்கொண்டு இராமேஸ்வர த்திற்குப் போகுமபடியாகவேடிக்கையை இந்தப்புரோகிதர்கண்டுதன க்கிதுஒருவிளையாட்டாகக்கொண்டு தானும்ஸ்நானஞ்செய்துகாவடியெ டுத்துக்கொண்டு மனம்போனவழியாகக்கொண்டுதிரும்பி வரும்வழியி லே சிங்காரபுரமென்னும் பட்டணத்தைக்கண்டு உள்ளேபுகுந்துபோ ம்போது அந்தப்பட்டணத்து ஈசானியத்தில் ஒருகோயிலிருந்தது அந்தக் கோயிலின் சந்நிதானத்திற்குநேரே செப்புக்கொப்பரைநிறம்பஎண் ணைவிடுத்து திருதிருதளதளவென்றுகொதிப்புடனே எரியக்கண்டுஇ தென்னவதிசயமென்றுயோசித்து அவ்விடத்து நிரைந்துநிற்கின்றமந்தி ரிமுதலாகிய காரியஸ்தர்களைககண்டு இந்தக்கொப்பரையிலஎண்ணைக் காயுங்காரணமென்னவென்றுகேட்டான் அதற்கவள் சொன்னதாவது ஐயா இவ்வுலகத்தையாளும் விரதசிலராசனுடைய தவத்திற்பிறந்தஒரு பெண்கொடிக்குசுயம்வரநாட்டுத் தன்மையைப்போல்திருமுகமெழுதி யனுப்பினார்கள் அந்தஓலையைக்கண்டுதேசத்துராசாக்களும் பிராமணர்

முதலியபேர்களும்வந்துநெருங்கினார்கள எந்தபுருஷன்உனக்கிஷ்டமென்றுகேட்டாலுஞ்சொல்லவில்லை கன்னிகைவிலவருவித்துமாலைசூட்டிக்கொள்ளவுமில்லை இந்தப்பெண்ணினுடையதந்தையோகல்வியையுடையவனுக்குக் கொடுக்கவேணுமென்றால் ஒருவர்க்கொருவர் சேஷசமியாயிருக்கிறார்கள் தாயானவள் மகாராசனுக்குக்கொடுக்கவேணுமென்றுஎண்ணினால் எளியவரொருவருமில்லை ஆகையால் இந்தக்கொப்பரையில் என்னைகாயவைத்து இதில்முழுகிவந்தவர்களுக்குஇந்த ராச்சியப்பட்டாபிஷேகமும் அணிமாற்றுயர்ந்த பொன்தண்டிகையும் அரனுடையகுமாரத்தியையுங் கொடுப்போமென்றுஎங்களரசனேற்படுத்தி எங்களையுமிவ்விடத்தி லிருக்கவைத்தார் அப்படிஎக்குலத்தான்முழுகிருந்தாலும் அப்போதேவிவாகநடப்பதற்கு சந்தேகமில்லைஎன்றுசொன்னார்கள்.

அந்தப்பிராமணன் இவ்வசனத்தைக்கேட்டுதிகிலடைந்து, இன்னொருவனால்ஆகத்தக்கதோ அசாத்தியமானகாரியமென நடுச்சினிகைகாளிபட்டினத்திற்குப்போய் விக்கிரமார்க்கனுடைய ராசசபைக்குப்போம்போது அந்தவிக்கிரமார்க்கராசனானவன் தேசாந்திரியாய்வந்தவர்களுக்குஇஷ்டபாக்கியங்களுங்கொடுத்து இருபதுகோடிதிரவியம்பூரியுங்கொடுத்து அரண்மனைக்குப்போகவெத்தனித்திருக்குங்காலத்தில் மந்திரிவசனனென்னும் ஒருபிராமணன்கையைப்பிடித்துக்கொண்டுவந்துமகாராசனேஎன்னுடையபெண்ணுக்கும் இந்தப்பிள்ளைக்குங் கலியாணஞ்செய்யவேண்டிப் பருவகாலம் வந்தபடியால்சேருங்களென்று சொல்லுகிறார்கள் இந்தக்குறைகளை தீர்க்கத்தக்கபேர்உம்மைவிடவேறொருவருமில்லையென்றுசொல்லிக்கொள்ள அதுக்கேட்டவரசன் அந்தப்பெண்ணினுடையமுகத்தைப்பார்க்கப்போறேனென்றுஅலறியழுதகாலையில் தன்னிடத்திலிருக்கும் வேதாளத்தையழைத்து அந்தப்பெண்பேரிலிருக்கும்பேயையகற்றச்செய்து அவர்களுடனேதுணையாகப்போய் விவாகமுடித்து வைத்துவரக்கடவதென்று உத்தரவுசெய்து அந்தப்பெண்ணுக்குரிய மணவாளப்பிள்ளைக்கும் வேண்டியஆபரணங்களும்ரொக்கமுங்கொடுத்து தானணிந்திருக்கும் கண்டசரத்தையும்அந்தப்பெண்ணின்கழுத்திற்போட்டார அப்போது ஆலமரத்திற் கண்டஅடிமையாகிய சடாமுனிபெண்ணின் முடியைவிட்டிறங்கி மகாபிரபுவேகானிச்சையைவைத்துப்பிடித்தஇந்தகன்னிகைக்கும் தேவரீரணிந்ததிருவாபரணத்தைப் பூட்டியபடியால்நான்இனியிருக்கமாட்டேனென்று தன்னாற்கூடிய உபசாரமுஞ்செய்துராசனிடத்தில்விடைபெற்றுகொண்டு சடாமுனிபோய்விட இந்தப்பிராமணன்பெண்ணையுமழைத்துக்கொண்டு சகலசந்தோஷத்துடனேவேதாளத்தையுங்கூட்டிக்கொண்டுதன்பட்டணஞ்சேர்ந்துவிவாகம்நிறைவேற வேதாளத்துக்கும் மரியாதைசெய்து அனுப்பினான்.

அந்தச்சங்கதிகளை யெல்லாம் வேதாளம்வந்துசொல்லக்கேட்டுசந்தோஷத்துடனே சங்கீதங்கேட்டுக் கொண்டிருக்குஞ் சமயத்தில்

ல்புரோகிதன் காசிகாவடியுடன்வந்து ஆசீர்வதிக்கக்கண்டு வாருங்கே சவிசுவாசரே காசிக்குப்போனீரா கங்கைகொண்டுவந்தீரா இராமேஸ்வரருக்கும்பூசைமுடித்தீராவென்று க்ஷேமங்களையெல்லாம்விசாரித்து தேசங்களிலுள்ள அதிசயங்களைக்கண்டிருப்பீராகிற் சொல்லுமென்று கேட்க அப்போதுபுரோகிதன்சொல்லுவான் அரசனேதேவரீருடைய புண்ணியவசத்தினாலே சகலதேசமுங்கண்டேனதேவாலயங்களெல்லாந்தெரிசித்தேன ஆனால்சிங்காபுரியென்னும்பட்டணத்திற்குவந்தேன்அவ்விடத்தில் ஒருகாளிகாதேவியம்மன்கோயிலுக்கெதிரிலிருக்குங்குளத்தில் மூழ்கினித்தியவிதிகளை முடித்துக்கொண்டு அந்தகோயிலைவலமாகச்சுற்றிவந்து தேவியைப்பணிந்து ஆவியைத்திரணம்மென்னணி அந்தக்கொப்பரையிற்குதித்துமூழ்கினர் அந்தஎண்ணெய தண்ணீர்போற்குளிர்ந்திருக்க அதிற்குதித்துவிளையாடும்போது அந்தநகரத்துஅரசன்முதலியாவரும்வந்துவணங்கி என்னையிற்குசித்த இவருக்குப் பொற்றண்டிகையும்இந்தராஜ்யபட்டாபிஷேகமும் பெண்ணையுக்கொடுத்தார்கள் இவ்வார்த்தையையும் தீண்டாசரூத்திரமாகப் பெறறு காசிக்காவடிகொண்டுவந்துதுறவியாகிப்புரோகிதனுக்குக்கொடுத்த தன்னை யார்பட்டமுங்கட்டிவைத்துப்போட்டுதன்பட்டினம்வந்துசேர்ந்தார்.

இப்பேர்ப்பட்ட கொடியசூரனெனவனோ அவளைத்தாங்குகின்ற இந்தச்சிங்காதனம் உமமைத்தாங்குமா தேகங்கமழுமாலையணிந்தஜெயபோசனேயென்று தலையைஉள்ளேவாங்கிக்கொண்டதுபதினான்காம்படிப்பதுமைகண்டு இன்றுநன்றாயிருக்குதென்று இறையவணங்கியபோசன்தன்னுடைய அரண்மனைக்குப்போனான்.

பதினான்காம்படிப்பதுமைசொல்கதைமுற்றிற்று.

-பதினைந்தாம்படிக்குக்காவலாகிய

சுந்தரமணிப்பதுமைசொல்கதை.

இராத்திரிமுழுதும்நித்திரையில்லாமல் எண்ணமிட்டுக்கொண்டிருந்தபோசராசனானவர் உதயாதியிலெழுந்து விதிமுறைக்கடன் முடித்துக்கொண்டு அதிபதிமுதலாகிய அரசரும்மதிநூகிளாகியமந்திரிமார்களும் கவிவிரும்பியபெரியோர்களுக்கற்றுணர்ந்தவித்வான்களுஞ்சுற்றிவரும்படியாய்நத்திலிதாவெனவிர்த்தனமிட்டுபரத்தையராடிவரவும ச

ந்திரவட்டக்குடைநிழலில்வந்து சிங்காதனத்துக்கு தீபதூபமுதலாகிய உபசாரங்கள்செய்து அன்னதானஞ்சொர்னதானங்களுங்கொடுத்தும மைமிட்சியுடனே நெருக்கி படிமீதுகாலைப்படியவைக்கும்படி தூக்கிய போது இன்னாந்தாம்படியிலிருந்தபதுமையானதுதலையெடுத்துப்பார்த்து தகாதுதகாதுபோஜராசனே சகலலோகத்திற்குங்காய்போன்ற விக்கிரமார்க்கமகாராசனுடையமேன்மையைச்சொல்லுகிறேன்கேளும் அவருடையசரீரசகாயமுந்தர்மமும் பொறுமையும்பெருமையும் நூறிலொருபங்கு ஆறுக்காகிலும் உண்டென்றுநான்சொல்லமாட்டேன்நீர்சொல்லுவீரு நீதிபரனே விக்கிரமார்க்கமகாராசன் மேதினியாண்டநாளையில்நேபாளதேசத்துராசனுமவிக்கிரமார்க்கனைப்போல்தானும்மேன்மையடைய வேணுமென்று பெரியோரைப்பணிந்துநித்தியமுந்தானங்கொடுத்துவரும்போது உத்தரதிசையிலிருந்து ஒருதார்க்கீகன்வந்தான் அவனைக்கண்டுவணங்கி அவருடையதர்க்கசாஸ்திரங்களைக்கேட்டுச்சந்தோஷமடைந்து இவருக்கெவ்வளவுவெகுமதிசெய்யலாமென்று தன்னாசாரியனையும் மந்திரியையுங்கேட்க ஆசாரியர்யோசித்தப்போது அந்ததர்க்கீகன் பேரிலிருக்கும் இஷ்டத்தால் எவ்வளவுகொடுக்கச்சொன்னாலும் அரசன்கொடுத்துவிடுவான அதனால்நமக்கென்னலாபம்அந்ததர்க்கம்படித்தவருடன் பேசிக்கொண்டால் பேர்பாதியாகிலும் அடித்துக்கொள்ளலாமென்று தனக்குள்நினைத்துநேர்பாளராசரைநோக்கி நிருப அருமைதெரிந்ததேவரீரென்னை ஆலோசித்தபடியால் நான்நாளைக்குச்சொல்லுகிறேனென்று இரகசியமாய்ச்சொன்னார்மந்திரியானவர்வந்தவர்களுக்கெல்லாம கொள்ளையாகக்கொடுத்துவிட்டால் அரசாட்சிநேர்ந்துபோமேயென்று தஞ்சிந்தைவருந்தி இப்போது வந்தவுடன்நாம்கலந்துபேசிராசன்எவ்வளவுகொடுத்தாலும இவ்வளவுவெகுமதிபெற்றுக்கொள்ளுகிறனென்றுநிச்சயம்பண்ணிக்கொண்டால் மற்றவெகுமதியை பொக்கிஷத்திற்சேர்த்துவிடலாமென்று நினைத்துராசனைவணங்கிஐயா சொல்லுகிறேனென்றான்.

அரசனும் அதற்குச்சம்மதித்துக்கொண்டுவந்த வித்துவானைப் பார்த்து நாளைக்குவாருமென்றுவிடைகொடுத்தனுப்பினார் அந்தஉத்தரவின்படி தார்க்கீகன்சென்று ஒருசத்திரத்திலிறங்கியிருக்க அன்றிராத்திரி ஆசிரியனபோய் எவ்வளவுராசனுக்குத் தெரிவித்து உமக்குவேண்டியவெகுமதிவாங்கித் தருகிறேன் உமக்குகிடைப்பதில் எனக்குப்பாதிகொடுக்கிறையா வென்றுகேட்க அதின்பேரில் தர்க்கீகன்கொடுக்காவிட்டாலே கொடுக்கஉந்தனாலாமோ தானபடித்ததற்கம்தற்கமோகேட்கும்செவியடைத்த இறையோவென்று ஆசாரியனை விடாமல்மடக்கிக்கொண்டு சிலதர்மம்பண்ணும்போது ஆசாரியன்பயந்து நாம் இசைபத்திரவோமம் ராசனுக்குத்தெரிந்தால் மானக்குறையுந் தான்பிழைக்குஞ்சீவனத்திற்கு ஆனியும்பிராணவேதனையும் வருமேதெய்வமேயென்றுஇந்தத்தார்க்கீகனுடையகாலில்விழுந்து என்னை வெளிப்படுத்தாதே என்னுஸ்திபிற்பாதிதருகிறேன் என்னுயிருள்ள வரையிலுமுன்னைமறவேன் என்குலதெய்வம் நீ யென்றுவிளக்கேற்றி வைத்துத்

கொழுகிறேன் ஐயா உயர்ந்தவன் அற்பநினைவு நினைத்தால் உடனே கேடென்கிறவாக்கியம் பலித்தது என்னைகாப்பாற்று மென்றார் இப்படிபேசிகொண்டிருக்கும்போதே மந்திரியும் வந்திறங்கினார்.

அவனுக்கு ஆசீர்வதித்து உட்காரவைத்தபோது ஆசாரியருங்கண்டுவாருமென்றுபசரிக்க சற்றுநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்து அப்பால் மந்திரியானவர் தார்க்கீகனைத் தனிமையி லழைத்து உனக்கெவ்வளவு கொடுத்தாற் போதுமென்று மந்திரிகேட்க மூனுவிரலைகுவித்து இவ்வளவுகொடுத்தாற் போதுமென்று வந்தவித்துவான் சொல்ல அதென்னவென்று மந்திரிகேட்க அதுதானது வென்றுதாற்கீகன்சொலல மந்திரியானவர் மிகவுமிளைப்பினால் மதிமயங்கி இன்னதென்றறிந்துகொள்ளாமலிவனைக் கேட்கவெட்கமடைந்து ஆசாரியனிடத்திற் சொல்லிபேசிக் கொண்டுவருகிறோமென்றுபோனார்களிந்ததார்க்கீகன்காலமே யெழுந்துநித்தியகடனை முடித்துக்கொண்டு ராசாவினுடைய அரண்மனைக்கு வந்தார்ராசனானவன் சிலநேரம் பேசிக்கொண்டிருந்து இவருக்குபரிசுகொடுப்பதற் காசாரியரைப்பார்த்தார்ஆசாரியர் தன்கழுத்துக்குகயிறு மாட்டிக்கொண்டானே என்றுதன்கையைக்கழுத்தில்வைத்துக் குறிப்பாற் காட்டினார் அதையரசனறிந்துகொள்ளமாட்டாமல் மறுபடியுங்கேட்டால் தனக்குமுட்டாள் தனம்வருமென்று தெரிந்து கொண்டவன்போல் தலையாட்டி மந்திரிமுகத்தைபார்த்தார் மந்திரியானவன் மூனுவிரலைக்குவித்து தார்க்கீகன் காட்டியபடி காட்டினான் அந்தச்செய்கை ராசனறிந்து கொள்ளாமலுந் தெரிந்துக்கொள்ள வில்லையென்று மூடத்தனத்தை வெளிக்குக்காட்டாமலும் தெரிந்துக் கொண்டவனைப் போலிருந்து தன்பொக்கிஷக்காரனைப்பார்த்து ஆசாரியர்காட்டிய குறிப்பின்படி கழுத்தைகையிற்றடவிக்காட்டி மந்திரிகாட்டிய சைகையின்படி மூன்று விரலைக்குவித்துக்காட்டினது சைகைதலையை யசைத்தார் இக்குறிப்பை யறிந்த தொழிலாளிகள் கண்டத்தைத் தழுவியபடியாலு மூன்றுவிரலைக்குவித்துக்காட்டிய தன்மையிலும் எலுமிச்சங்காயத்தனை விஷமெடுத்துக் கொண்டு பொற்றட்டில்வைத்து சால்வைமுதலிய சாதருவினால்மூடித்துக்கொண்டு வந்தார்கள் அந்தத்தட்டுடனே அந்த வித்துவானுக்குக் கொடுக்க அதைவாங்கி விவேகசூனியர்கள் கொடுத்த வெகுமதியென்று சாதராவைக் கிளப்பிப் பார்த்தபோது விஷமிருக்கக் கண்டு மனம்வெகுண்டு அருமைதெரியாத அரசனே பதினாயிரம் மந்திரிகூடினாலும் சிந்துவாகிய கடலாகாது ஆதலால் கீர்த்திமானாகிய விக்கிரமார்க்கனுக்கு ஒப்பாகியபேர்கள் இப்புவியிலுள்ள தென்பது தப்பு இதற்கு ஆமென்று சொல்லாமல் அல்லவென்று சொன்னால் அவர்கள்தப்புயென்று வார்த்தையாடி அருமை தெரியாமல விஷமிடடவேந்தனென்று பேரிட்டு அந்தத்தார்க்கீகன் உச்சினிபட்டணம் நோக்கிப்போனான்.

இவ்விடத்தில் இந்தருசனவன் மெத்தப்பயந்து வருந்தி காட்டுக்குப்போய்ஒருமகாமுனிவரையடுத்துஐயாதிரிலோகத்திலும்விக்கிரமார்

க்கனுக்கு மிஞ்சினபேரில்லை யென்று சொல்லுகிறார்களே நானவரை
விடமேலானபு ழையும் பிரபலத்தையுமுடையவனா கதைகளையபுரியவே
ண்டுமென்று சாஷ்டாங்கமாகவிழுந்து வணங்கியபோது அந்தப்பெரி
யவர்சொல்லுகிறார் ஓவேந்தமேகீ அந்த விக்கிரமார்க்கனைப் போலவர
வேணுமென்றால் யானையுபரம்குழி வெட்டிவிசேஷஓமம்பண்ணி அந்
தஅக்கினியில் உன்னுடைய முப்பத்திரண் டுறுப்பையும் அறுத்துப்
போட்டுமனது தவராமல் கண்ணீர்விடாமலோமஞ்செய்வாயாகில் அள
விறந்தபாக்கியமும் உனக்குண்டாமென்று ஒருமந்திரத்தையுபதேசித்
தருளினார் அந்தராசா ஒரேஉறுதியாய் தன்சரீரத்தையறுத் துப்போ
ட்டு அந்தமுனிசிரேஷ்டரையும் வைத்துக்கொண்டு ஓமம்பண்ணி வரு
ம்போது பிராமணாள் முதலியசாஸ்திரிகளும் ஆச்சரியப்படும் படிக்கு
நாளொன்றுக்குநாற்பது மரக்கால்பொன வரும்படிநேரிட்டது அந்தத்
திரவியங்களை எல்லாம்நாளைக்கு வேணுமென்றுவைக்காமல் தானதரு
மம் தியாகங்களுங்கொடுத்துக்கொண்டு வருநாளையில் முன்சொல்லிவ
ந்த தார்க்கீகனென்னும் வித்துவான் விக்கிரமார்க்கனிடத்திற்கு வந்து
தன்னுடைய வித்தைத்திறத்தைக் காட்டியபோது மகாசந்தோஷம
டைந்துஐயா நீ எந்ததேசம் எப்போது புறப்பட்டீரென்று கேட்டார்
அரசனேநான்பொன்வளைநாடு நான்புறப்பட்டு வருஷகாலமாச்சுது
ஆறுவழிகளிருக்கும் பட்டணங்களுக் கிபோது அரசர்களைக்க
ண்டு பரிசுபெற்றுக் கொண்டுதா மிஷாயவந்தேனென்று தார்க்கீகன்
சொல்ல நல்லதுவாரவழியில் எந்தராசன் என்னமெகுமதி செய்தா
ன் அந்நகரத்தில் அதிசயங்களேதாகிலு முண்டானால் சொல்லும்வி
த்துவமாணிக்கமேயென்று மிகுந்தவுபசார மாகக்கேட்க வித்வான்
சொல்லுகிறார் புகழ்பிரதாபனேகேளும் நேர்பாளதேசத்தி வந்தே
ன் அந்தராசன் மந்திரிவார்த்தையும ஆசாரியன் பேச்சையுங்கேட்
டுவிஷங்கொடுத்தானென் று அதனுடையவிரிவுகளைச்சொன்னான்.

அதைக்கேட்ட விக்கிரமார்க்கன் வேதாளத்தை யழைத்து
அதின்பேரில் தானும் தார்க்கீகனும் ஏறிக்கொண்டு நேர்பாளதே
சத்திற்குவந்து அந்தராசனுடைய சேரியை விசாரிக்கும்போது ஓமம்
பண்ணி சரீரத்தை யறுத்து நெருப்பிற் போட்டு நிதநியம் திரவியஞ்
சம்பாதித்து செலவு செய்கிறானென்று கேள்விப்பட்டு அந்தவூரில்
ஈசானியமூலையி லிருக்கும பத்திரகாளி கோயிலுக்குப் போய்ஸ்தான
ம்பண்ணி அவ்விடத்திலொரு ஓமகுண்டமேற்படுத்தி அந்தஓமகு
ண்டத்தில் விக்கிரமார்க்கராசன் குதிக்க அதைக்கண்ட தார்க்கீகன் அ
து ஐய்யா இதற்காகவோ நான் பாவிவந்தே னென்றுஏங்குயபோதமு
ந்தக்கோயிலிருந்து மாகாளிவந்து தீயிற்குதித்த திடவானைப் பார்
த்து அருள் புரிந்த அப்பனே என்னுடைய சந்நிதானத்திற்கு மு
ன்னேநீவளர்த்த தீயேல் விழுந்தாய இப்படிச் செய்யப்ப

போமோவென்றுகேடக காளிகாதேவி அவளேவணங்கி அம்மணிஅரு
மைதெரிந்து பெருமைபெற்று கிருபையுணர்ந்து பிறகு உபயோகமில்
லாததேகம் பெற்றிருந்ததென்ன அந்தத் தார்க்கீகன் மெத்தவுங் கற்ற
வன் இவருடைய வறுமைதீரவும் இந்த வுலகத்தரசன் சரீரத்தை யறு
த்து அக்கினிக்குத் தத்தம்பண்ணி தனர் தேடுகிறாராம் அவருக் கந்த
கொடுமைதீரவும நீவெளிவ்ரும் நானிந்த தீயிற் குதித்தேனென்று விக்
கிரமார்க்கராசன் சொல்லநாராயணி நகைத்து உன்கருத்தென்ன உன
க்குவேண்டிய வரமென்னவென்று திரிபுரகாணிகேடக விக்கிரமார்க்
கன்சொல்லுகிறார் அக்கரமம்பூண்ட அபிமகமாயிஇந்ததேசத்தராச
ன்நினமானஞ்செய்யும் ஓமத்தினுலவரும் நாற்பதுமரக்கால்திரவியமும
இவருடையபொக்கிஷத்திற்சேர்ப்பித்து இவருடைய தேசத்தையறுத்
து ஓமம்பண்ணுமல் என்போலொத்தவர்களின் பெருமையும் புகழும
இவர்பெற்று வச்சிரதேகமாயிருக்கும்படி வரமருளவேண்டும் மாதங்கி
யென்றுவணங்கி அந்தராசனுடைய ஆசையெவ்வளவோ அவ்வளவு
செல்வம் அந்தத்தார்க்கீகருக்குக் கொடுத்தருளவேண்டுமென்று கொ
ண்டாடி நிற்கும்போது அந்தத்தேசத்து ராசனும் மந்திரிபிரதானியர்
முதலியபேர்களும் இந்தச்சேதிகேட்டுவந்து விக்கிரமாக்க ராசனையுங்
காளிகாதேவியையும தாங்கற்ற வித்துவானையுங்கண்டு ஆச்சரியங்கொ
ண்டுநிற்கும்போது தார்க்கீகனுவை னந்தராசனைப்பார்த்து விக்கிரமார்
க்கராசனுக்கிணையாக தலைகீழிருந்து தவஞ்செய்தாலும் வாராவிஷயங்
கொடுத்தவேந்தனே உனக்குத் தினமொன்றுக்கு நாற்பதுமரக்காற் ற
னக்கொடுக்கவந்த வடிவேற்கந்தனேராகிய இந்தராசனைப்பாருமென்று
காட்ட அந்தராசனும் ஒருவரையொருவர்தழுவி அணைத்துக் கொண்
டு பராசத்தி கொடுத்தவரத்தைச் செல்வமாகப்பெற்று தார்க்கீகனுங்
கொடுப்பித்துஆசாரியினுடைய ஆசை மோகத்தையும் மந்திரியின் எ
ண்ணத்தையும் அவர்களின் சவுக்கியினுடைய விபரீதத்தையும் பயிர
ங்கமாய் வெளிப்படுத்திஎல்லோருக்கும் நன்மைசெய்தபோது அந்தவூ
ராசனெழுந்து விக்கிரமாக்கனுடையகாலில்விழுந்து உனக்கிணையாகு
ம்படிநினைத்தஎன்னுடைய பேதமனதைக் குறித்து விசனப் படுகிறே
னென்று தன்னைத்தானே நொந்து விக்கிரமார்க்கனுக்கு விடைதந்து த
ன்னரண்மனைக்குப்போனுன் இப்பால்தார்க்கீகனை சம்பிரமத்துடனனு
ப்பிவைத்து வேதாளத்துடன்நேர்ப்பாவதேசததைவிட்டுஉச்சினியோ
ங்காளிபட்டணம் வந்துசேர்ந்தார்கள் கேட்டீரே போசனே இந்தவுப
காரஞ்செய்த விக்கிரமார்க்கனுடைய வஞ்சகமற்ற நெஞ்சமுதலிய ந
ன்மைகளைப்பாரும் இரவில்லன்றுயோர்ந்தபோது நாளைக்குவாருமென்
று யதுமைதனை சாய்க்கவே போசராசன் திருமபி அரண் மனைக்குப்
போனுன்.

பதினைந்தாம்படிப்பதுமைசொல்கதை-முற்றிற்று.

பதினரும்படிக்குக்காவலாகிய

சத்தபரிபூரணப்பதுமைசொல்கதை,

பதினொருநாட்காலமே போசராசனெழுந்து தீர்த்தமாடி சிவார்ச்சனைபண்ணிக்கொண்டு தேவஸ்தானம் தர்மசத்திரம்ஊர் விசாரணைதானகருமமுதலான தாம் நடத்துவதற்குத் திட்டப்படுத்தி சிங்காதனமேறவேணுமென்னுஞ் சிந்தையும் அந்தமன்னனுடைய கீர்த்தியைக்கேட்கலாமென்னும் வாஞ்சையு முந்திசொல்லவுந்தும்பதிவந்து பூசைநைவேத்தியம்நடத்தி பூமியிற்றீர்க்கதண்டமாய்விழுந்தெழுந்த வீரகண்டைகட்டியகாலையெடுத்து மடிமேல்நாட்டப்படும்போது மேட்டிலிருந்துபார்ப்பவரைப் பார்த்துத்தபரிபூரணப்பதுமை தலையெடுத்துமலையை எடுக்குஞ்சத்ருப்போற்கூவி ஓபோசமகாராசனே பதினோந்தாம்படிக்குக்காவலாகிய எங்களினமானபதுமை இந்தச்சிங்காதனமுமக்குத் தகாதுநீயேறவேண்டாமென்றுசொல்லியிருக்க ஒருவனைப்பந்தியைவிட்டெழுந்திருவென்றால் இலைபோத்தலெனுந் தன்மைபோல் இந்தச் சிங்காதனமேறிவருகிறீர் ஐயோவிக்கிரமார்க்கனுடைய திறம் உமக்கிருக்குமாகில் அதிகசொற்பமாமேராலாம் அப்படிக்கில்லாமையாலநீர்ஏறத்தகாது மிஞ்சியேறினுலோ இந்தச்சிம்மாதனம்உமமைத்தாங்காது எட்டாபழத்திற்குத் கொரடுகூட்டி எட்டினாற்போல என்வினைகாரியத்தில் முயலுகிறீர் அரசனேநானசொல்லுகிறேனென்று சொல்லி உமக்குக் கோபம்வேண்டாம் எங்களிறைவனாகிய விக்கிரமார்க்கராசனுடைய சரித்திரத்தைச் சொல்லுகிறேன் நீரேகேளும் யோசித்துப்பாருமென்று சொல்லத் தொடங்கியது,

வாரமாலையணிந்த போசராசனேகேளும் எங்கள் விக்கிரமார்க்கராசன் இந்தச்சிங்காதனத்திலிருந்து பசுபதியாகிய சிவபெருமானைப்போலு பாற்கடலுற்றுயின்றோனாகிய மகாவிஷ்ணுவைப்போலுந் தர்மதேயானுவாய் துரைத்தன நடத்திவருங்காலையில் ஒரு சித்தபுருஷன் வந்து ஆசீர்வதித்தான் அவரைக்கண்டவுடனே வருந்தி உபசரித்து வணங்கி அர்க்கியபாத்திய ஆசமனீயங்கொடுத்து அவர்கொடுத்தவிபூதியைவாங்கித்தரித்துக்கொண்டு மேலாகியபரிவிலியினுடைய தேவரீர் திருவடிபெயர்ந்தபடியால் இந்தப்பட்டணத்திற்கு யாதொரு குறைவுமில்லையென்றுபோற்றி இவவிடம்வந்தகாரியம்யாதென்று விக்கிரமார்க்கவேந்தன்கேட்கசித்தபுருஷன் சொல்லுகின்றான் வெற்றியைப்பெற்றவீரனே நான்புத்திபுர்வமாகபூலோகத்திற்குப்பிரவேசித்த நாள்முதல் இதுவரையிலுங்காணுத அதிசயமொன்றுகண்டேன் அதைப்பரிசோதிக்கவேணுமென்று என்னூறகூடியவரையிலும் பார்த்தேன் என்புத்திக்கு கெட்டாமையால் உமமிடத்திற்சொல்லி அந்தச் சந்தேகத்தை உம்மால் நிவாரணம்பண்ணிக் கொள்ளலாமென்று வந்தேன் நான் சொல்லுங்காரியஞ் சொற்பமாயினும் விற்பனமுடையவேந்தனே நீர் விசாரிக்கவேண்டுமென்று சித்தபுருடன் சொன்ன திரத்தைப்பார்த்து தேவரீர் திருவடிக்கடிமையாகிய தினன்என்னூறறியத்தக்கதொன்றுண்டோ இறைவனேயெல்லாஞ் சிவன்செயலாதலால்தேவரீர் திருவாய்மலர்ந்தருளுமென்று விக்கிரமார்க்கராசன்வினவ சித்தபுருடன் நகைத்துச் சொல்லுகிறான் சுத்த சைதன்யநெறியை மறவாததுயனேகேளும் உதயகிரி யோரத்

னில் புரகாசமந்திரகிரியென்று ஒருபட்டணம் அந்தப் பட்டணத்தில் அந்தப்பட்டணத்தில சாம்புவாதநாராயணன் கோவிலும் சமயப்பிரயாகையென்றொரு குளமிருக்கிறதென்றுசொல்ல அதை அரசன்கேட்டு சந்தோஷமடைந்து அக்கிருக்கின்றது உதயகாலத்தில் அந்தக் குளத்திற்கு நடுவேயொரு பொற்கம்பமெழுந்து அந்தசூரியனுடைய தேரைக் கிட்டி அஸ்தமானத்தில் குளத்துக்குள்ளே அமிழ்ந்துப் போகுது இதனுடைய தன்மை இப்போப்பட்டதென்றுஎனக்குத் தெரியவில்லை இறைவனேயென்று சித்தபுருடன் சொல்ல இவ்வார்த்தையை மெய்த்தவமூர்த்திக்கேட்டு வைத்தமனதில் பொருந்திச்சந்தோஷங்கொண்டு அருந்தவமேற்கொண்ட விக்கிரமார்க்க ராசன் தனது மந்திரியாகிய பட்டியை அழைத்து சித்தபுருடன் சிந்தையாய்ச் சொல்லிய விந்தையைத் தெரிவித்து நான்போயதை இன்னதென்று அறிந்துவருகிறேன் நீ ராசாட்சியைப்பார்த்துக் கொள்ளுமென்று அவர்சந்நிதியொப்பி வைத்து விடைபெற்றுக்கொண்டு வேதாளத்தையழைத்து மேலேறிக்கொண்டு குளிகைகைவல்யமில்லாத சித்தபுருஷனும் தன்னைத் தொடர்ந்துவரும்படியாய் உதயகிரிச்சாலையில் பிரகாச மந்திரகிரியென்னும் பட்டணத்திற்போயிரங்கி சமயப்பிரயாகை யென்னுங் குளத்தைக் கண்டு அந்தவூரின வளங்களையுமபார்த்து அந்தக் குளத்தில ஸ்நானஞ்செய்து சமயவாரிநாராயணனையும் வணங்கிப்பணிந்து உபவாசமாய் அன்றிராத்திரி முழுவதும் நித்திரையிலலாம லிருந்தார் பொழுதுவிடிந்தவுடனே அந்தக்குளத்திலிருந்து பொற்கம்பமெழுந்தது அதைப்பார்த்துக் கொண்டிருக்கும்போது கொஞ்சங்கொஞ்சமாய்வளர்ந்தது அப்போது விக்கிரமார்க்கராசன் வெகுவீரத்துடனே சலத்தி லிறங்கி நீந்திக் கொண்டுபோய் அந்தக்கம்பத்திலேறி நுனியிற்செல்லுமபோது சூரியனுஞ்சமீபித்து உச்சியில்வந்தார் இந்தக்கம்பமும் அசைச்சலில்லாமல் சூரியனுக்குச்சமீபத்திற் சென்றபோது சூரியவெப்பத்தால் தளதளவென்று உருகிசொற்குழம்பாறோடி வரும்போது அக்கினிக்கட்டு மூலிகைப் பெரியோர்களின் அருளுமபெற்றிருக்கிற அரசனுனை நல் பயப்படாமலிருந்து சூரியமந்திரத்தை உச்சரித்து சூரியவேதத்தைச் சொல்லிஸ்தவுத்தியுஞ்செய்யும்போது சூரியனமகிழ்ந்து ஆஆ அரசனே எப்பேர்ப்பட்டகல்லும இரும்பும் எவ்வேளைநிலவில்லாமலிருக்கும்போது எனக்குச் சமீபத்தில் வந்து இந்தப்பொற்கம்பமும் உருகியோடுவதைக்கண்டு பயப்படாமல் தேகாபிமானம் பிராணாபிமானம யாவற்றையும்விட்டுலோகோபகாரமாய்வந்த உந்தனுடைய தைரியத்துக்கு நான்மெத்தவுஞ்சந்தோஷப்படுகிறேனென்றருள்புரிந்து உன் நிடத்துக்குள்ள காரியங்களுஞ்ஜெயமாமென்று தான்அணிந்திருக்கிற கதிர்குண்டலத்தையுக்கழற்றிக் கொடுத்துவாழ்த்திப்போமென்றுரைக்க அவ்வாயிந்தக்குளத்திலெழுந்த பொற்கம்பத்தின் காரியமெனக்குத் தெரியவில்லை கட்டளையிட்டமென்று காவலன்கேட்க சூரியபகவானவிண்ணவனுமுரைக்க ஓ அரசனேநான்தாமரைகளுக்கு நாயகனானபடியால் இந்தத்தடாகத்தில் திரு

பொற்றாமரையிருக்குது அதனுடையகாளும் உதயத்திலெழுந்து என்னைக்கண்டு மத்தியானத்தில் என்னைக்கலந்திருகி சாயங்காலத்தில் தண்ணீர்க்குள் அடங்கிப்போம் இதுகாலமாயிருக்க இக்கமபத்தின்தன்மையை அறிந்துகொண்டு சூரியபகவானிடத்தில விடைபெற்றுக்கொண்டு சூரியபகவான் தேவியாகிய தாயாதேவியையமலரிக்தபோதுபிள்ளைப்பெற்ற உத்தமியாதலால் இரங்கி அடாமகனேயென்றுமகிழ்ந்து நீயினைத்தயிடத்திற்குப்போகும்படியாய உனக்குளொருகுளிகைகொடுக்கிறேனென்று தயவுசெய்தாள் அந்த அம்மானைப்பணிந்து அதையும்பெற்றுக்கொண்டுசூரியனுடைய சாரதியாகிய அருணனைக்தொழுதபோது அளன்கற்றுககொண்டு மறுபடியும் கம்பத்தின்வழியே குளத்திலிறங்கி கம்பத்தையும் கும்பிட்டு இவ்வுலகத்திற்கண்டகர்த்தாவாயிருக்கிற சூரியநாராயணனுடைய சொந்தமே உந்தன்தயவினால் இந்தப் பலனெல்லாம் நான்பெற்றேனென்று சிங்கதபால்வணங்க இந்த மகாராசனுக்கு சலத்துக்குள்ளே எந்தலோகப் போகவேணுமென்றாலும் போகும்படியாக ஒருசக்தியும் அதற்கிசைசக்கமந்திரமும அனேகமணிமுதலியன்னைகளுங்கொடுத்து மங்களஸ்நானஞ்சொல்லிவிடுக்க அவ்விடம்விட்டுப்புறப்பட்டு அந்தப்பட்டணத்திலிருக்குமசமயவாதநாராயணன்கோவிலுக்கு உற்சவமுதலியது நடத்திபூசை நடக்கும்படியாய் வேண்டிய திரவியங்களும் வைத்து திருவாபரணங்களுமபூட்டி அந்தவூரி லிருக்கும் குடிடைகளையெல்லாஞ் சவுக்கியப்படுத்தி அவ்விடமவிட்டுத திரும்பும்போது சித்தன்வகுத்தமனே பொக்கம்பத்தின் பூர்வோத்திரக் தெரிந்துக்கொண்டராமென்றுவிவை அரசன் நான்தெரிந்துக் கொண்ட பெருமையைச்சொல்ல ஒருநாள் நான் கேசரிமார்க்கமாய இந்தவழி வருமபோது என்னுடையவாயசவறி வனக்குளிகை இந்தத் தடாகத்தில் விழுந்து மறுகாட்சாலமே இந்தப்பொற்கம்பம் புறப்படும்போது இதன்மத்தியிலகப்பட்டுக்கொண்டுபோய் சூரியபகவா னிடத்திற் சேர்ந்தது அவர் அதைப்பார்த்து சாயாதேவியாரிடத்தற்கொடுத்தார் அந்த அம்மாள் அதைத்தன்வாயிற்போட்டுச்சொண்டிருந்தார்கள் நானுமனம்வருந்திவாடி நிலையில்லாச் செல்வத்தைநமபி நிலைகெட்ட நிர்மூடரைப்போல சிலகாலஞ்சந்தோஷமடைந்து மேலேறிடந்து சிலகாலம் துக்கப்படாதுபினேரேன் மகாப்பிரபுவாகிய உன்னால் எனக்கு மனவருத்தம் நீங்கவேணுமென்று வணக்கமாய்க்கேட்க விக்கிரமார்க்க மன்னவன்கண்டு ஆச்சரியங்கொண்டு சித்தனே நீர் இழந்தகுளிகைபெறுநிமித்தம் என்னையனுப்பி இவ்வளவுபெருமை நான்பெறுமபடியாய்ச்செய்து வைத்த எனகுலதெய்வ மாதலால்தேவரீருடமை தேவரீருக்கே யென்று அந்தகவனக்குளிகை அந்த சித்தபுருஷனுக்குக்கொடுத்து தீர்க்கதண்டமாக விழுந்தபோது அச்சித்தபுருஷன் அந்தகவாதனெறியைதத்தெரிசித்து குளிகையைப்பெற்று இராசனனுப்ப விடைபெற்றுக்கொண்டுபோய்விட்டார்.

இப்பால் விக்கிரமார்க்க ராசன் பட்டணம் நோக்கி வரும்போது ஒருஏழைப்பிராமணனும் அவன்பெண்சாதியும உச்சினி நகரத்

துக்குச் சமீபத்தில் ஆற்றங்கரையி லிறங்கினார்கள் அந்தவிடத்தில்இந்த ராசாபோயிரங்கி நித்தியவிதிமுடித்துக்கொண்டு வரும்போது அந்தபிராமணன் இவரைக்கொண்டு தம்மைபபோல் இவரும்பிராமணனுக்களுமென்று நினைத்துசுவாமிஉச்சினிமாங்காளி புரத்தையாளும்அரசனிடத்திற்குப்போய் எமதுதரித்திரத்தை அதமபண்ணி கொள்ளலாமென்றுஉத்தரபூமி குருக்கண்டத்தி லிருந்துவந்தோம்அந்தஉ தமராசனுடைய தரிசனம் எமக்குநகிடைக்கும் நாங்களேழைகளாச்சே அரண்மனைக்குள்ளே போகவிடுவார்களா நீதவரீரெங்கே போகிறீர் நாங்களிந்த ஊருமல்ல பதியுமல்ல எங்களுக்கு ஒருவழி சொல்லிப்போமென்று அவர்மடக்கிக்கொள்ள அரசனுங்கைத்தி ஐயா நான்தான் விக்கிரமார்க்கன் இந்தாருங்கள் குண்டலம் இது சூரியபகவான் எனக்குக்கொடுத்தார் நான்வுமக்குக் கொடுத்தேனநீர் எட்டுதிக்கும் பிரகாசிக்கும்படிவாழ்வு பெற்றுக்கொண்டிருமென்றுவணங்கிவேதாளத்தையழைத்துஇவர்களிருவரையும் இவர்களுடையபட்டணஞ் சேர்ப்பித்துவாருமென்றனுப்பிவைத்தான காலநடையாய் போகும்போது வழியில்சிலவித்துவான்களும் இன்னஞ் சிலமனிதர்களும் வருகிறார்கள் அவர்களைஇருதுஷ்டர்களமடக்கிக்கொண்டார்கள் அவர்கள்எப்பேர்ப்பட்டவரென்னில் சாதினையீர் மெத்தவுஞ்சிறுமையிற் சிறுமைபட்டவர்பெருங் குடியர் சூதாடுகிறவர் தாசிமுதலிய ஸ்நீகவனமுடையவர்கள் சிநேகமாய்இருந்துகொலைக் காரரைப்போல தீங்குசெயபவர்கள் திருடடுக்கையெழுத்துப்போட்டு பணத்தைத்தேடிக கொள்ளுவார்கள் அசாத்தியஇஷ்டபொருளை எடுத்துக்கொண்டு நஷ்டஞ்செயயுமபடி மனதிலொன்றுவாக்கி லொன்றுமாகவைத்துக்கொண்டு விடுவாசலெல்லாம்வேறொருவரைப்போலவைத்துவிடடு ஒருமுழுக்காய் முழுவிட வேணுமென்று வெளிச்சம்போடடுக்கொணடிருக்குமமுழு மூடரிரணடுபேர்பெரியவொட்டகம்புறப்பட்டுவந்து வழியில்வருமவ்வேலைகளைவம்புவினைத்துக் கும்பலைக்கலைத்து புத்திமயக்கத்தால் நமகளுக்கு வருங்கேட்டைத்தாங்களறியாமல் மத்தளிக்கச்செய்யும்போ துவிக்கிரமா க்கன்கண்டு நாயைப்போறை யீ றை ஒரேவெட்டில் நறுக்கிகாசமடையயெதிர்த்து வங்கித்தான்களை ஆதரித்துயவந்தப் பொருள்யாவத்தையுங்கொடுத்து மழியும்விடுத்து தன்னகரம்யாந்துசேர்ந்துகாமுவீற்றிருந்தான இப்பேர்பட்டராசனே இவ்வளவுநலமைகளும் உமக்குண்டாயிருக்குமாகில் நீ ரிந்தசிங்காதனமேறலாமென்று பிதுமைசொல்லஅம்மமாவென்றுசிரித்துத்தடுத்து அவ தக்கண்ட போசராசன் அடங்காமகிழ்ச்சியுடையவனுய் தன்னுடைய அரண்மனைக்குப்போயச் சேர்ந்தான்.

பதினாறும்படிப்பதுமைசொல் கதை-முற்றிற்று

பதினேழாம்படிக்குக்காவலாகிய
அணிமணிப்பதுமைசொல்கதை

மறுநாட்காலமே போசமகாராச னெழுந்துவாசநீர்குடைந்து ஆசாரபூசாவிதியை முடித்துக்கொண்டு சூரியநமஸ்காரஞ் செய்து ஆரிய

ருக்குபசாரதானங்களும் கியானங்களுங்கொடுத்து சிங்காதனத்திற்கு தூபதீபங்கள் சத்தசாமரங்கள்செய்து வலம்புரியாய்வந்து பணிந்து சந்தனுட்சுதையணிந்து தர்மமேசெயமென்று துணிந்துமாணிக்கப்படியினமேல்காலையெடுத்து வைக்கப்போம்போது பதினேழாம்படியிலிருந்த அணிமணிப்பதுமை பார்த்திபனைத் தலையெடுத்துப் பார்த்துபாராக்கிரம விசுவாசபோசனேகேளும் பாராதுரயங்கரனுகிய எங்கள்விக்கிரமார்க்கமகா ராசனைப்போலும் நீரும் பக்குவசாலியாக யிருப்பீராகில் இந்தச்சிங்காதனமேறலாம அப்படிக்கிலலாமற்போனுல்உமது அரண்மனைக்குப் போகலாமென்று பதுமைசொல்லபோசராசன்கேட்டு விக்கிரமார்க்கமகாராசனுடைய பராராஜபரங்கா பக்குவத்தை யெனக்குக்கொஞ்சஞ் சொல்லவேணுமென்று போசராசன்கேட்கஅணிமணிப்பதுமை சொல்லத்தொடங்கியது.

வாரும் போசராசனே எங்களருமையறிந்த துரையாகியவிக்கிரமார்க்கமகாராசன அரசாட்சிசெய்துவரும்நாளையில் உச்சினியோங்காளிககரத்தைச்சேர்ந்த காட்டில் ஒருகாட்டுப்பன்றிவந்துவிழுந்து பயிர்புலன்களை எல்லாங்கிளைஎடுப்பதுபோற்பறித்துகிழக்குமுதலாகியவரும்புகளையும் குத்துச்செடிகளையும குளிப்பயிர்கொடிகளையும் பாழாக்கிஎறிதுளங்களையும் பறித்திடித்து இன்னமிருக்கும்படியாகிய மிருகங்களையெல்லாங் கொன்றுமாகன்றுகளை கொம்பினுற்கீறிப்பாய்ந்து அதனுல் அவைகள்மாய்ந்துபோயின இந்தஅலங்கோலத்தை இந்தவூரார்கேட்டுத்தடி தாம்புகளுடன்வரக்கண்டு அவர்களையுஞ்சாய்த்துஓட்டிமற்றடியோட்டும்போது லொட்டர் மலைவாசிகளாகிய வேடர்களையழைத்து இந்தப்பன்றியைக் கொன்றுவிடுங்களென்றுசொல்ல அவர்களப்படியே உண்டைவில் பாணவில்பாலாடலையம்வாய்க்குவழக்கோல்பிடித்து குடிதடிகுண்டாந்தடிவளைதடி எறிதடிமுதலியசல்லஆயுதங்களுங்கொண்டுவந்து பன்றியைமடக்கிக் கொல்லுமபடியாய் அண்டையில்வரும்போது அவர்கள்பெண்டுகள் பிள்ளைகள கண்டழும்படிக்கு வேடர்களைக்கொன்று ஒருவர்கையிலும் சிக்காமற்றிரியும்போது சிறுவலையெறுவலை பலிவலை முதலியதுங் கட்டிபடுகுழிகளைவெட்டிவைத்துக்கொண்டு காட்டைக்கலைத்து காட்டைவளைத்துத் தோட்டக்காலிற் புகுந்துபன்றிவரும்வழியில் காட்டமாகயிருந்து கூப்டங்காட்டும்போது அந்தப்பன்றியானது ஓட்டமாவந்து தாஷ்டீகனைப்பிளந்து வலைகளையறுத்துமலைகளிலேறி எதவித்தாலும் இளைக்காமலிருக்கிறதை வேடிக்கைபார்க்க வந்த வெகுஜனங்களும் பயந்து திப்பிரமைகொண்டு தியங்கி இனிகமோலாகத் தக்கதில்லை நமக்குப்பக்குவமாகிய விக்கிரமார்க்கனிடத்திற்குப்போய் அழுதுதொழுது முறையிட்டுக் கொண்டார்கள் அப்போது ராஜனுனவன் வெகுசனங்களின் வருத்தத்தையும்பயிர்ப்புலம்போய் விட்டதாட்டையும கேட்க மனந்தாளாமல காற்றிலும் கடுவேகமுள்ள குதிரை கொணர்வரச்சொல்லி அதின்பேரில்ஆரோகணித்துச்சென்று கொடிப்படைகளும வேடக்குப்புகளும் சூழ்ந்துவரும்படியாய் காட்டுக்குப்போய் விசாரிக்கும்போது பொழுதுவிடிந்து

பத்துநாழிகை யாய்விட்டபடியால் காட்டுக்குப்போய் விட்டதுகரும்
பன்றியொன்று நாட்டாருரைக்க அதைக்கேட்டு அரசன் காட்டிற்கு
ப்போய் தப்பட்டைமுதலாகிய வாத்தியமுழக்கி வேட்டை நாயகளை
முடுக்கி அந்தப்பன்றியைத்தேடி சேனைக்கும்புகளுடன் திரியும்போது
ஸ்ரீராமருடைய அம்புபோலெழுந்து படைக்குட்பில்வந்துவிழுந்து சி
லபேரைக்கிழித்து வெகுபேரை மாய்த்து வெறித்து பார்த்தவரும்ப
ன்றியைவிக்கிரமார்க்கமகாராசன் கண்டு வேலாயுதமெடுக்கும்போதுகா
லாகோலஞ்செய்த வராகமானது காற்றிலும் கடுவேகமாகச்சென்றோ
டிய காலத்தில் உங்களிறைவனானவர் பன்றியை விடாமற்றொடர்ந்து
குதிரையைவிட்டுக் கொண்டோடுங்காலையில் காடுகள் மேடுகள்செடிமு
தலாகிய இடங்களெல்லாம் கடந்துபோம்போது சேனைகளும்வேடர்க
ளும் பின்னுமுன்னுமாய் நின்றுவிட்டார்க ளந்தவேளையில் மன்னனா
னவன் விடேன்தொடேனென்று தன்னை துரத்திக்கொண்டுவருவதை
யந்தபன்றிகண்டு ஆர்பகைவந்தாலும்பெரிதல்லஇந்த ஆண்டவன்பகை
யாகாதென்று பூணாங்கன் முளைத்த புதரில் விழுந்து ஒருதாண்டிற்
போய் சந்திரகிரியென்னும் பெருமலைக் குகையிற்புகுந்தது அதைக்க
ண்ட விக்கிரமார்க்கராசன் குதிரைவிட்டிறங்கி சேனைகளையெல்லாமிங்
கேயிருங்களென்று நிறுத்திப்பட்டமந்திரவாளையுருவிக் கொண்டு அ
ந்தமலைக்குகை வழியேசிலம்பஞ்செய்துக்கொண்டு நெடுந்தூரம்போய்
ப் பார்க்கும்போது ஒன்றுந்தோணாமல் சற்றுநேரம் அவ்விடத்திலிரு
ந்து இந்தத் துவாரத்திற் புகுந்த பன்றிதிரும்பிவரக்காணோமே இந்த
குகைக்குள்ளாக இரண்டுஇடுக்குச்சந்து பொந்துக்க ளொன்றுமில்லை
மத்தியிற் றங்கியிருந்து நம்மைக்கண்டு எதிர்த்துவரக்காணோமாதலால
ந்தப்பக்கத்தில் வழியிருக்கவேணுமென்று நிதானித்துக்கொண்டுமறு
படியுமெழுந்து முப்பது யோசனை தூரம்போம்போதுகோடி சூரியனு
டையமானது இதென்ன விந்தையாயிருக்கிறதிந்த வழியானது மறு
படியும்பூலோகத்துக்குக் கொண்டுபோய்விடுமோ என்னமோவென்று
பின்னையும் பத்துயோசனை தூரம்போகும்போது அவ்விடத்தில்பொ
ன்மயமாகியதகடுகளிட்டு மாணிக்கதீபங்கள் வைத்திருப்பதைக்கண்டு
அந்தவாசலின்வழியே உள்ளேநுழைந்தபோது அநேககோபுரங்களு
ம் தண்ணீர்த்துறைப்பட்டிகளும சலசலவென்றுபறக்கக்கொடிகளும்த
கதகவென்று சொல்லிக்குடிகளும் தெய்வலோகச்செடிகளுமபேரிகை
முழக்கத்திலுண்டாகிய இடிகளும் சித்திரவீதியும்உத்தரவீதியும்பொ
ன்மலைகளும வெள்ளிமலைகளும் இன்னம்பற்பலவித சிங்காரங்களுமு
டைய ஒப்பற்றராஜ மண்டபக் கொலுக்கூடத்தைக்கண்டான்.

அந்தமண்டபத்தினடுவிலே கயிலைக்கிரியும் மகமேருவும்இவ்விட
த்தில்வந்து எழுந்ததோ அல்லதுவிழுந்ததோவென்று சொல்லும்படி
யாய் ஒருசிங்காதனமேடையிருந்தது அதின்மேல் ஒரு ராட்சதராஜ
ன்தேவேந்திரபோக வைபவத்துடன் வீற்றிருந்தான் கட்டியர்கள் ப
ட்டுவாங்கனவந்திபோர் சிந்திப்போர் புகழ்வோரநேகர் மந்திரிசேனா
த்தலைவர்முதலாகிய பேர்களுஞ்சூழ்ந்து நிற்குடைகொடிசாமரைமகர

தோரணம் மேற்கட்டி. முதலாகியவின்ன மூள்ளவிருதுக்கொடிகளுமிருக்கை இந்தவட்டோலங்களையெல்லாம் எங்கள்ராசன்கண்டுஎன்னைத்தனையுமனதிஷ்டமில்லாமல் அந்தச்சபாமண்டபத்தை நோக்கிவரும்போது காட்டினிடத்திற் பன்றியாய்வந்துடயிர்ப்புலன்களையும்உயிர்ப்புலன்களையும அழித்தஒருராட்சதாள் பன்றிருபத்தைவிட்டு அரக்கனுருவங்கொண்டு சிங்காசனத்திலிருக்கும் ராட்சதராசாவினுடையவாதுக்கு சேராகவரயை வைத்துகொண்டு ஓ ஓ இராட்சதமகாராசனே நான்பன்றிருபமாய் பூலோகத்திற்குப்போய் வெகுகஷ்டப்பட்டதன்மையைக்குறித்து என்னைக்கொல்ல வந்தவிக்கிரமார்க்க மகாராசனுடைய கையிலகப்படாமல் சமதுசங்கிரகிரி வாசலால் நான்வந்துவிட்டேன் அந்தவிக்கிரமார்க்க ராசனென்னைத்தூக்கிக்கொண்டு இதோவருகிறனென்று சொல்லக்கேட்டு மிகுந்தசந்தோஷத்துடன அந்தராட்சன் எதிர்கொண்டுவந்து விக்கிரமார்க்கராசனைத் தழுவிக்கொண்டுஐயாமுன்னொருநாள் இவ்விடத்தில் சிலபேச்சுகள் பேசிக்கொண்டிருக்கும்போது உம்முடைய கீர்த்தியைக்குறித்து சிலவார்த்தைகளாடிக்கொண்டோம் உம்மைப்பார்க்க வேணுமென்னும் இச்சையையுடையவர்களாய் உமக்குச்சொல்லியனுப்பினுல் வரமாட்டீரென்று வல்லமையாகிய ஒருபன்றியாய் ராட்சனை விட்டதுஉம்மைபெடுத்து அழைக்கவரச்செய்தோம் நீகோபஞ்செய்யவேண்டாம் குலபதியாகியகோவே எங்களைரட்சிக்குந்தேவே ஐந்து சர்ப்பத்தாவேயென்று வங்கனைபுரிந்துஅந்தராசனை அழைத்துக்கொண்டுபோய் பாதாளக்கட்டியபோதுஒருதட்டில் தெட்சணுமூர்த்தியிருக்கக்கண்டுதிக்குநோக்கிதெண்டஞ்செய்து அருட்பிரசாதம பெற்று அப்பாற்போகும்போது மாவலிசக்கிரவர்த்தியை கண்டகாலத்தில் அவ்ருமஎழுந்துவந்து விக்கிரமார்க்க ராசனைத்தழுவி புயத்துடன் புயமவைத்து முகத்துடன்முகம்வைத்துஉம்மைப்பார்க்கவேணுமென்று பேராசையால் மற்றொருவிதத்தில்வரமாட்டீரென்று இவ்விதத்தி லழைப்பித்தோர் எங்கள்பாக்கியமேயதிக சிலாக்கியமே சத்தியவாக்கியமே ஆசாரசிலை பூசையின்யோக்கியமேனன்றுபுகழ்ந்து மகிழ்ந்து உமக்குநாங்களென்ன உபகாரஞ்செய்யப்போகிறோம் நாங்களசெய்வது சொற்பமாயிருந்தாலும் நீங்களதையங்கீகரிக்கவேணுமென்று பத்துவிஷாமிர்த கலசங்கொடுத்து இந்தஉமிர்தத்தைத்தினமுங் கொஞ்சம்புசித்தால் தேகத்தில்வலுவுண்டு நரைதிரைமூப்பில்லாமியாதிகிட்டாது நல்லகியானசம்பத்துண்டாம் யோகபலன்சித்தியாகுமென்று சொல்லி சிலநவரத்தினங்களுங் கொடுத்துஒருநாகனைக்கூட்டி வழிகாட்டிவாவென்று ஓட்டி இந்தஅரசனுடையகீர்த்தியைதுஜஸ்தம்பத்தில் நிலைகாட்டினார்கள்.

இப்பால் விக்கிரமார்க்கமகாராசன் அந்தப்பட்டணத்தில் இன்னமிருக்கவிநோதங்களையும் மாவலியவர் முதலாகிய அரக்கரெல்லாரையும் பார்த்துக்கொண்டு சந்திரகிரியின்குகை வாயிலுக்குவந்து குதிரையேறிக்கொண்டு சேனைசயினியங்களுடனேபட்டணம்நோக்கிவரும்போது அந்தவழியில் ஒருவளைப்பிராமணன் அவனுடையபிள்ளையோபே

குவியாகினால் உடலெல்லாம் வருகிரணமாயழிந்துசீழும்உதிரமும்வழிந்தொழுகும்படியாகவர வருந்திருக்கும் படியானவர்களைக்கண்டுமனதிறக்கங்கொண்டுவிஷாமிர்தத்திலொன்றைக்கொடுத் ததைப்புசிக்கும்பக்குவமும்சொல்லி அநேகமணிக்குழுங்கொடுத்தனுப்பிவிட்டு தன்னுடையநாட்டில்வந்து பன்றியாளிறந்தபசுபட்சிமுதலியமனிதரையும்பயிர்களையும்பழையபடியுண்டாக்கிமற்றொன்பதுகலசத்தையும்மாணிக்கத்தையுங்குடிபடைகளுக்கெல்லாங்கொடுத்து அவர்களைச்சவுக்கியப்படுத்திவைத்துதானும்உச்சினிபோய்ச்சேர்ந்தார் இப்பேர்ப்பட்டதன்மை உம்மிடத்திலுண்டாயிருக்குமாகில்இந்தசிங்காதனமேறலாமென்றுபிரதமைசொல்லதன்மனதுகரைகரவென்றறுக்கச்சென்றான்காவலனாகியபோசராசன்

பதினேழாம்பதுமைகதைமுற்றிற்று

பதினெட்டாம்படிக்குகாவலாகிய
பரிபூரணகலாநிதிப்பதுமைசொல்கதை

பதினெட்டாநாட்காலமேபோசராசனெழுந்துஸ்நானஞ்செய்தபமுடித்துக்கொண்டுபூதானங்கோதானங்கொடுத்துபெரியோர்களாகியபுண்ணியர்களைப்பணிந்து சூரியநமஸ்காரஞ்செய்து சுற்றத்தார்முதலியவர்களுஞ்சூழ்ந்துவரச் சௌந்தர்யசிங்காதனத்தைத்தெரிசித்துவணங்கிவழிபடுதெய்வத்தைவாழ்த்தி மகிழ்ச்சியுடன் சிங்காதன மேறப்போம்போதுபதினெட்டாம்படிப்பதுமை போசராசனைநீக்கி பார்த்திடனே மூர்த்திகரமாகிய எங்கள்முதல்வன் வீற்றிருந்த சிங்காதனத் திலேறும்படியாய் என்னிடம் நெருங்கிவந்தீர் வேந்தனே விக்கிரமார்க்கனுடைய மேன்மைக்குணத்தில் எள்ளத்தனையேனும் உம்மிடத்திருக்குமாகில் நாங்கள் தடுக்கவேண்டியதில்லை அப்படியில்லாததினால உம்மைத்தடுக்கிறோம் எதாகிலுங் கொஞ்சமுஞ்சமெங்கள்எசமானுடையஔதாரியகுணமும் அறமதிறம் பெருமைவறபதிரம் தயை தாட்சண்ணியம் எதாகிலுங் கொஞ்சமிருக்குமாகில் சொல்லுமென்று பிரதமையுரைக்க அதைக்கேட்டு போசமகாராசன வெட்கிப் பொம்மையைநோக்கி உங்கள் அரசனுடைய அன்புமுதலிய யாவற்றையும் எனக்குச் சொல்லுங்களென்று போசராசன் நேசமாய்க்கேட்க ஈசனுக்கொப்பாகியவிக்கிரமார்க்கராசனுடைய நன்மைகளை பரிபூரணகலாநிதிப்பதுமைபேசத்தொடங்கியது ஐயாபோசனுடைய சமுகத்தில் பிலாதமும் பேசுமென்னும் புண்ணியநெறிபொற்கண்மணிபனே கேளும் எங்கள் விக்கிரமார்க்கராசன் காடாறுமாதம் அனுபவிக்கும்படியாய்புறப்படும்போது வேதாளத்தின் மீதேறிக்கொண்டுபத்மாபுரியென்னும்பட்டணத்திற்குப்போய் அவ்விடத்திலிருக்கும் பரமேஸ்வரனைத் தெரிசித்து அங்கிருக்கும் புண்ணியநதியில் ஸ்நானமபண்ணி திரும்பிவரும் போது தேசாந்திரியாய் நாலுபேர் பிராமணர்கள் வந்தார்கள் அவர்களை அரசன் கண்டு வணங்கி சுவாமிகளே நீங்கள் எங்கிருந்துவந்தீர்களென்று கே

ட்க ஐராகங்கள் இமயகிரியிருந்து புறப்பட்டு எட்டுமோதம்ச்சுது இதன் மத்தியிலிருக்கும் தேசங்களையும் பார்த்து தீர்த்தங்களாடி வருகிறோமென்றான் அந்த இமயகிரியில் ஏதாகிலுமதிசயமுண் டோவென்று அரசன்கேட்கஐயா அதிசயமநேகமுண்டு ஆனாலும் அந்தஇமயமலைச்சாரலிலிருக்கும் ஒருகுகையில திரிகாலக்கியானி யென்று ஒரு பெரியவரிருக்கிறார் அவரே வருங்காரியம் வந்தகாரியம் வந்துபோனகாரியமூன்றுஞ் சொல்லுகிறாரென் கேள்விப்பட்டு நாங்கள்போனோம் அவ்விடத்தில் மகா நாகங்கள் வாசமாயிருக்குதாம் எப்பேர்ப்பட்டவர்களையும் அந்தமலைமீதேறவொட்டாமற்றடுத்துக்கடிக்குதாம் இந்தப் பெரியவர்வரச்சொல்லி வுத்தரவுசெய்தாலமாத்திரம் போகலாம் இல்லா விட்டால் சாகலாம் இப்படிஅநேகஜனங்கள் காத்திருக்கிறார்கள் நாங்களுஞ்சிலநாளிருந்து பார்த்தோம் வெகுபாடுபட்டு முகம்வேர்த்தோம்காரியமில்லையென்றுவந்து விட்டோம் இதுசங்கதியென்றுதேசாந்திரியர் சொன்னார்கள் அவர்களுக்கு வேண்டியதிரவிய முதலாகியதுங்கொடுத்தனுப்பி விட்டுவேதாளத்தின் மீதேறிச்சென்று சவுரிய வீர ருஷனாதலால் தைரியமாகப்போய் மலைமேலேறும்போது ஐராகா சர்ப்பங்கள் புறப்பட்டது நாலுலக்ஷம் ஐந்துலக்ஷம் பத்துலக்ஷம இன்னம் பலலக்ஷம் கிருஷ்ண சர்ப்பங்களும் நானாவிதமாகியபாம்புகளின் பேதங்களும் வந்துவிக்கிரமார்க்கனைச்சுற்றிக் கொண்டு விடமாட்டோமென்றுகடித்து விஷங்களைக கக்கியபோது அது அந்தப்பெரியவருடைய மாய்கையாதலால் நிசமாகியகடியல்ல விஷத்தலைக்கேறவுமில்லைஇப்படித் துணிந்தவர்கள் இதுவரையிலுமில்லை பாம்பென்றால்படைநடுங்கு அதலினும் பாம்பைக்கண்டவுடனே எல்லாரும் பயந்து போய்விட்டார்கள்.

இவன் அக்காரத்துக் கொண்டனுகையால் பயப்படாமல் பாம்புகளையெல்லாஞ்சேர்ந்து மாட்டிக்கொண்டு தான்கீழும பாம்புகள் மேலும் பாம்புகள்கீழும் தான்மேலுமாய்க் கட்டித் தடமாடிக் கொண்டு போய் அந்தமலைக்குகையிலிருக்கும் திரிகாலக்கியானியைக் கண்டான் அந்தஞானியானவன் அரசனைப்பார்த்து மகாசந்தோஷமடைந்து மகாராசனே ஏது இவ்வளவுதூரம் வந்ததென்று முனிவன்கேட்க ராசன்சொல்லுகிறார் ஸ்ரீதவசீர் திரிகாலக்கியானியென்று பிராமணன் சொன்னார்கள் தன்விளம்பிரபஸ்திக்கப் பெரியவர் சொல்லுகிறார் பெருமைபெற்ற விக்கிரமார்க் காராசனே நீசாந்தசீலனுடைய தவத்தை நிறைவேற்ற வந்தீர் அதனால்வந்த பலன்களையெல்லாம பெற்றீர்சகல புண்ணியமும் தவமுந்திரிகாலக்கியானமும உமக்குண்டாயிருக்கும் போது இன்னொருவரிடத்தில் இருப்பதை நீர் விசாரிக்கவேண்டுமா உமக்கருமையான நல்லலோ போகட்டும் இவ்வளவுதூரம பிரயாசை யெடுத்துக்கொண்டு இந்தமலைக்குகைக்குவந்த பந்தபாசமபோய்ச் சேர்ந்து உமமைகட்டிய பாம்புகளைக்கூட பயப்படாமல நமமைக்கண்ட படியால் நீர்ச்சும்மாய்ப்போவது நியாயமல்ல ஆகையால இந்தாரும என்னிடத்திலிருந்தமாத்திரைகோல ஒப்பில்லாத ஒருகுளிகைஇந்த இரணை

யும்பத்திரமாய்வைத்துக்கொள்ளும் இதனுடைய குணமென்னவென்றால் இந்த மாத்திரக்கோலை வலதுகரத்தால் பிடித்தால் ஆகாயத்திற் கொண்டுபோய் இடதுகரத்திலே பிடித்தால் பூலோகத்திற்கொண்டுபோய் இந்தகுளிகையை கரத்தில் வைத்துக்கொண்டு நீரென்ன நினைக்கிறீரோ அவைகளெல்லாங்கிடைக்கும நூறுவருஷத்திற்குப்பின்னேநடக்கப்போகிறகாரியங்களெல்லாந்தெரியும இப்பேர்ப்பட்ட இந்தமாத்திரக்கோலையும் குளிகையையும் நீர்கொண்டுபோமென்று கொடுக்க அதைபெற்றுக்கொண்டு அவரைப்பணிந்து செவுவாங்கிக்கொண்டுவேதாளத்திலேறி உச்சினிமாகாளி கோயிலுக்கெதிரில் ஒருபிரமாண்டமாகிய அக்கினிகுழியேற்படுத்திக்கொண்டு ஆரோஒருபிள்ளை மஞ்சள்வஸ்திரங்கட்டிக்கொண்டு தீயிலேவிழப்போறாரென்று அந்தப் பட்டணக்காவற்காரர்வந்து இராஜன்சமுகத்திற் சொன்னார்கள் உடனேயக்கிரிபிரதானி முதலாகியபேர்களுடன் அந்தபிள்ளை கையைப்பிடித்துக்கொண்டு நீயாரப்பா ஏன் அக்கினியில் விழுகிறாயசொல்லென்று அரசனகேட்க அந்தப்பிள்ளை ஐயோ முறையோவென றழுதுஎன்தகப்பனாகிய தெய்வமேகனிருந்து அளகாபுரிபட்டணம் எனதகப்பன் இறந்துபோனார் அவருக்குச்செய்யவேண்டிய கடன்களை முடித்துமந்திரிமுதலிய பெரியோர்களால நான்பட்டங்கட்டிக் கொண்டுவாழ்ந்துவருங்காலையில பெருங்குடிகைர வேதபார்த்தபோரங்கனென்னும் துஷ்டாள் வாசனுநிகளுடனே வந்து என்னுடையசேனைக்கும்புகளில் விழுந்து என்கரத்தைப்பிடித்துக்கொண்டு என்னைக்காட்டிலோட்டினார்கள் நானுந்தெய்வமேகதியென்று அக்கினியில்விழஎத்தனித்தேன் தேவரீரைக்கண்டபடியால் எனக்குத்தயிரியம்வந்தது அந்தத் துஷ்டாளிருவரும் சாபமடைந்து வேடக்குலேந்திரன்கெட்டுப்பழிசொற்புண்பட்டு பட்டமிழந்து துஷ்டர்தனத்தாலழிந்து போம்படிச்செய்து என்னுடைய சுகத்தை எனக்குக்கொடும சத்துருசங்காரராசன் வேனுக்கொத்தஉத்தமனேயென்று வணங்கியபோது விக்கிரமார்க்கராசன் மெத்தவிசனப்பட்டுதனக்குத்திரிகாலஞ்ஞானிகொடுத்தமாத்திரக்கோலையுங்குளிகையையுங்கொடுத்து அதனுடையகுணாதிசயங்களுஞ்சொல்லிதன்னுடைய சேனைகளுடன் தனையெடுத்துக்கொண்டுபோய் அளகாபுரியில இப்போதிருக்கும் துஷ்டர்களாகியவேடார்த்தன்போரங்கனென்னும் இருவரையுமவெட்டிமடித்து நஷ்டப்படுத்தி அவன்புத்திரமித்திரகளத்திராதிகளை யெல்லாங்காலிலேகைக்கொள்ளும்படி சமர்புரிந்துஇராகிபிள்ளைக்குத் தன்கையினாற்பட்டங்கட்டிவைத்துத்தானுந்தன்னகர்வந்துசேர்ந்தார்கள்.

இப்பேர்ப்பட்ட அருமையாகவேவஸ்துக்களையும் அலட்சியமாகப்பார்த்துபரோபகாரஞ்செய்தபார்த்திபனைப்போ லுமக்குண்டாயிருக்குமாகில இந்தச்சிங்காதனமேறுமென்றுபதுமைசொல்ல போசராசன பதிற் சொல்லவிதியில்லாமல மதிமருண்டு மாளிகைக்குப்போனான்

பதினெட்டாம்பதுமைகதைமுற்றிற்று.

கொண்டு இவர்மெத்தவும் புத்திசாலியென்று சந்தோஷமடைந்துசகல
சாஸ்திரங்களும் தனுர்வேதங்களும் இராஜநீதியும் இவருக்குண்டாகு
ம்படியாய் அனுக்கிரகஞ்செய்து அநேகபாக்கியங்களும் கிடைக்கத்தக்
கவனுய் யோக்கியத்துவன் அருள்புரிந்து சிலாக்கியப் படுத்திவிட்டுப்
போவார்கள் அவர்களெட்டுபேரும் போனபிற்பாடு அவ்விடம்விட்டுப்
புறப்பட்டு உச்சினிமாகாளி பட்டணம்வந்து சேர்ந்துதாய் தந்தை
யைப்பணிந்து அவர்களாற் பெருமையடைந்தஎல்லா திரங்களிலும்வ
ல்லவனென்றுபேர்பெற்று எங்கள் விக்கிரமார்க்க ராசனுடையகோயி
லுக்குவந்தான் அந்த பிள்ளையை ராசன்கண்டு இதுவரையிலும் எங்
கேபோயிருந்தாய் எந்தேசமபார்த்தாய் நீபோன பட்டணங்களில் எ
ன்ன அதிசயங்கண்டாய் உனக்கு யிவ்வளவுவித்தையும் ஐஸ்வரியமும்
திரமும் எப்படிவந்தது எனக்குச் சொல்லென்று எங்களரசன்கேட்க
காவபுறப்பட்ட நாள்முதல் இதுவரையில்நடந்த சங்கதிகளும் தான்க
ண்ட விந்தையாகிய சமாச்சாரங்களையும் வேந்தனுக்குச்சொன்னான்.

அதைக்கேட்டு இந்தமந்திரிகுமாரனை யழைத்துக்கொண்டு வே
தாளத்தின்மேலேறி அந்தக்கோயிலுக்கருகாவமயா லோடிவாரகினறு
கிராந்திசீ போயிரங்கி அங்கமைவனவாசஞ் செய்துக்கொண்டிருக்கு
ம்போது தேவகன்னிய ரெட்டுபேரும்வந்து மாமூல்பிரகாரம் பஞ்சகா
ட்டியங்களுஞ்செயலவிகவுபசாரங்களுஞ் செய்யக்கண்டு மகிழ்ச்சியடை
ந்து அந்தப்பெண்கள் யெட்டுபேரும் எந்தவழிபோனார்களோஅந்தவ
ழியே விக்கிரமார்க்கராசன முன்னும்பின்னு மாய்ப்போய் பார்க்குமி
டத்தில் அந்தப்பெண்களெண்மரும் அஷ்டசித்தருக்கும் அன்பாகஉப
சாரம்பண்ணிக்கொண்டு அனந்தத்துடனிருக்கக்கண்டு அரசன்போய்
ப்பணிந்தான் அவர்களெல்லோரும் அரசனைப்பார்த்து மெத்தவும் ஆ
ச்சரியங்கொண்டு நீரந்த இவ்விடத்தில்வந்தது எப்படி வந்தீரென்று
கேட்க அதற்கு எங்கள் வேந்தன் சொன்னது ஐயா அனல்தீர்த்தத்தி
ல்அஷ்டகன்னியரும் ஸ்நானஞ்செய்து அகோர வீரபத்திரனைபூசித்து
ஆட்டபாட்டங்களாடிவரும்போது நானுங்கூடவந்து விட்டேனென்
றுஅடிமேல் முடிபடத்தொழுந்துதானவர்கள் சந்தோஷமடையஅஷ்ட
சித்தரும்இஷ்டசித்தியளித்தார்கள் அவைகளையெல்லாம்பெற்றுக்கொ
ண்டுதிரும்பும்போது சுவாமிகளே அந்ததீர்த்தம் நெருப்பாவானேனெ
ன்றுகேட்க அதாஈஸ்பரனுடைய கடாட்சவராத்திலிருந்ததுவழிந்தகண்
கைநெற்றிக்கண்வழியேவிழுந்தது நெருப்பாகிறதுதான்பாதாள அக்
கினியென்றுசொலலஅந்தவல்லவர்களைப்பணிந்தெழுந்து உச்சினியோ
ங்காளிபட்டணம்வந்து சேர்ந்துமந்திரிமகனுக்கு மாணிக்கமளித்துமக
ராசனுமிருந்தார் நீரும இப்போபட்ட தைரியமும் காரியமும் உயாளு
மாகிடகுணமும் எடையலராயிருப்பாயாகில் இந்தச்சிங்காசனம் மேறு
மென்றுதெருவித்து அருவிபாற்படிந்த பிரதமையைப்பார்த்து போச
ராசன் வெட்கிப்போனான்.

இருபதாம்படிக்குக்காவலாகிய

இந்திரலீலாவதிப்பதுமைசொல்கதை.

[0:0:0]

இருபதாநாட்காலமே எழுந்துபோசராஜன் இந்திரநிக்கைநோக்கிச் சந்திர புஷ்கரணியில் ஸ்நானம்பண்ணி மந்திராட்சதை முதலியமணிப்பணி யணிந்து கொன்றைமாலைப் புனைந்து வாதிப்பொருமல் மகிழ்ந்துசெங்கழல்வேள்வியளர்க்கும் அந்தணர்தம் மைப்பணிந்து சிங்காதனக் திருவில்வந்து கங்காதரனைத் தொழுதுவந்து நவமணித்தானம்புரிந்துநவமணியாகியராசன்ம சமணி படிமீது வலதுகாலெடுத்து வைக்கும்போதுசந்தரவடிவமைந்த இந்திரலீலாவதிபதுமை மந்திரபுயனே மன்னனேகேளும் தேவேந்தரிற் சிறந்த விக்கிரமார்க்கன் வாழ்ந்தவருநாள் வனத்துக்குச்சென்று காடாறுமாதங்கடந்துபோனர் சித்திரைமாதங் கத்திரிகாலம் மேகப்பொழிமே சலில்லாடையால் மெத்தவும் காய்ச்சல்காய்ந்து காடெல்லாங்கர்ம வெடிப்புவெடித்து வாவியிற்குளத்தில் மலையருகில் சலமில்லாமையால் ராசனுடைய நாக்குவரண்டு விடாய்ப்பட்டு தண்ணீர்த்தேடித் தவிக்கும்போது ஓரிடத்தில் ஒருமண்டபமும் தாமரைத்தடாகமும் இருக்கக்கண்டுசமீபத்தில்நெருங்கி தாகவிடாய்தீர்ந்து சௌக்கியமா யிருக்கும்போது அந்தமண்டபமுந் தாமரைகுளத்திற்கும் படித்துறையும் ஒன்பதுவகைரத்தினங்களால் அலங்கரமைந்திருப்பதை விக்கிரமார்க்கவேந்தன் பார்த்துசந்தோஷித் திருக்கையில் ஒருபிராமணன் சகலவேதசாஸ்திரங்களைக்கற்று தேசசஞ்சாரஞ்செய்து அம்மண்டபத்தன் வந்திரங்கினர் அந்தப்பிராமணன் இராசாவைப்பார்த்துச் சொன்னதுவாரும் இராசனே உமமைப்பார்த்தால் முப்பத்திரண்டு லட்சணமுள்ளவரு யிருக்கிறீர் எந்தேசம் இவ்விடம்வந்தகாரிய மேதென்றுகேட்டார் அதைக்கேட்டுவிக்கிரமார்கன் பிராமணனை நமஸ்கரித்துச் சொல்லுகிறார் நானிருப்பது உச்சினிநகரம் என்பேர்விக்கிரமார்க்க னென்றுசொல்ல அதைக்கேட்டு அந்தபிராமணன் சொல்லுகிறான் அரசனேசகலவளங்களுந் தருமமிகுந்த உச்சினிபட்டணம்விட்டு இந்தக்காட்டிலொன்றியாய் வந்திருப்பானேன் தனிமையாயிருப்பதினால் உமக்குப்பயமில்லையா வென்றுகேட்க சுவாமிகளே எனிஷ்டதெய்வமாகிய ஓங்காளியென்னும் பராசக்தியும் தேவரீரைப்போன்ற மகானுக்களுடைய ஆசீர்வசனமுமிருக்கும்போது எனக்குயாதொருபயமில்லை எஞ்சொல்லி ஐயாநீங்களெங்கிருந்து வந்தீர்களுங்கள் பேரென்ன வென்றுகேட்க அந்தப்பிராமணன் மெத்தவுகந்து புத்திமானாகிய ராசனே நானிருப்பது தர்மபுரியிலே போயிலே அவ்விடம்விட்டுப்புறப்பட்டு தேசசஞ்சாரஞ்செய்து மகேஸ்தராகிய காளி ஓங்காளிநாயகியென்னும் பராசக்தியைப் பூசிக்கபடி இச்சைகொண்டு இவ்விமாகாளியின் சந்நிதானத்துக்குப்போய் பொய்கையில்ஸ்நானம்பண்ணி நித்தியசெபதப முடித்துக்கொண்டு சர்வலோககாரணியைப் பூசித்துவணங்கித்

தொழுது பத்மாசனத்திலிருந்து பன்னிரண்டு வருஷமாய்ப் பராசக்தியைக்குறித்து வணங்கித்தவமிருந்தேன் அந்தஅம்மாளானவள் எனக்குப்பிரசன்ன மாகாததினால் மனவருத்தமடைந்து பாவியாகியஜனனம் இந்தக் குளத்தில்விழுந்து இறந்துபோகலா மென்றுவந்தேன் வந்தவிடத்தில் உம்மைக்கண்டேன் சிந்தைகளிகொண்டேன் உமதுகுளிர்ந்தசந்திரவிம்பமுகத்தைக் கண்டபேர்களுடைய அண்டையிலுந்துன்பம் நிற்காது மண்டலாதிபனே என்றுமறையவன் சொல்லயிவ்வரையவன் கேட்டுபயப்படாமல் வாருமென்று இந்தப்பிராமணரை அழைத்துக்கொண்டு இல்லமாகாளி சந்நிதானத்திற்குப்போய்த்தீர்த்தத்தில்மூழ்கிகோயிலைச்சுற்றிக் கும்பிட்டுப்பணிந்து அவ்விடத்திலிருக்கும் ஒருகுகைக்குள்ளே போய் மூணுநாள்வரைக்கு மௌனத்திலிருந்து ஞானபிரசூரியனை கண்ணிவருத்த பிரதிபட்சமாக அம்மன் பெயருதிக்க கண்டுதாயேசரணம் தாயேசரணம் அம்மாள்சரணம் நாயேனுக்கார்வரம் நல்காதென்னவென்று பணிந்திருக்கும்போது அசரீரிவாக்கிய மொன்றுபிறந்து ஓ அரசே முப்பத்திரண்டு லட்சணமுள்ள முடித்தலையாவது சடைத்தலையாவது எனக்குபலிகொடுத்து அந்தவுதிரங்கள் என்கோயிலிற் புகுணுமாகில் நானெதிர்வருவே னென்றுசொல்ல அதைக்கேட்டு விக்கிரமார்க்கன் முடித்தலை நாமிருக்கச்சடைத்தலையை எங்கேதேடப்போகிறோமென்று அரையிற்கட்டிய மந்திரவாளை யுருவிக்கொண்டு தன்கழுத்தில்வைக்கும்போது திரிபுரநகனி சிங்கவாகினிசிரிசூலிஎன்னுந்தேவி பிரசன்னமாய்வந்து அரசனுடைய கையைப்பிடித்துக் கொண்டுசொல்லுகிறாள் அதிவீர விக்கிரமார்க்கனே கேளுமவுமைப்போல் இவ்வளவுமன வுறுதியாய் தவஞ்செய்யுந் திறமில்லாதசக்திபற்ற பிராமணருகலால் அவனுக்குநான் பிரசன்னமாகவில்லை நீசெய்தவுறுதியின்பேரில் பிரசன்னமானேன் உமக்குவேண்டிய வார்த்தைகேளும தருகிறேனென்று சாம்பவிசொல்ல அரசன்தொழுது அம்மாஉன்னுடைய திருவடியனுக்கிரகத்தில் எனக்கு எல்லாமிருக்கிறது பின் ஒருகுறைவுமில்லை இந்தவேதியர் பன்னிரண்டு வருஷ தவஞ்செய்து பலனில்லாமற் போனேனென்றுசொலவுங் குறைவுமொன்றுமாத்திரம் இல்லாமற்செய்யுந்தாயே யென்றுவேண்டிக்கொள்ள அப்படியேயாகட்டுமென்று அப்பவேதியனைபார்த்து உனக்கென்ன வேணுமென்றுகேட்க அவர்பிரதக்ஷணம் வந்துநமஸ்கரித்து எப்போதுங்கனுடைய இருதயத்திலெப்போதும்நீயிருக்கவும நான் உன்னைநித்தியகாலம் பூசிக்கவும் தயவுசெய்வாய் ஜகதீசனி என்றுசரணம்புரிந்தபோது சவுகரியமிகுந்த மங்களகரமாகிய வாழ்வையுமளித்து அவர்கேட்டவரமுங்கொடுத்து மறைந்துபோனாள்.

அப்பால் விக்கிரமார்க்கராசன் அந்தப் பிராமணனை அழைத்துக்கொண்டு உச்சினிபட்டணம் வந்துசேர்ந்து வேண்டியபாக்கியங்களுங்கொடுத்து அவருடையபட்டணம் போய்ச்சேரும்படிக்கு விடைதந்தனுப்பி விட்டுத்தான் தன்னரண்மனையில் சம்பிரம சந்தோஷமாயிருந்தா

ஸ்நானம் பண்ணிக் கொண்டிருந்தான் அந்தஸ்திரீயைக் கண்டு மோ
கங்கொண்டு காமவிடாயாற்கருகழிந்து செறிதலைத்து நாமனுடைபரதி
போசோடசகலைகொண்டமதியோ அந்திரபுரியோ அழகிய சிந்திரகிரி
யோ மாமலைமானோ மாதுரிபத்தேனோ மாசற்றமணியோ கோதற்றத
னியோ மலரின்மணமோ மணத்தின்குணமோ சோலைசேர்மயிலோ சுந்
தரக்குயிலோ நீருறைமகளோ நிலநிறைபவளோ என்றுளநாடி எழி
லெல்லாம பாடியவிண்டோ குழலோசைபண்டோ விழியோ விச்செ
ண்டோ முலையோ வாழைத்தண்டோ தொடையோசெண்டோ முழந்
தாளோகற்கண்டோ மொழியோ இடையுண்டொ இலையோஇன்னதெ
ன் றுணர்கிலேனென்று அந்தப்படிக்குப்புலம்பி சைகை முதலியதுஞ்
செய்துபார்த்து அந்தப்பத்தினிக்குச் சமீபத்திற்போய் தொந்தரவுபடு
த்தி பலவந்தமாயழைத்தான் அந்த மகாபதிவிரதைக்குக் கோபம்வந்
து உன்னுடைய பட்டணம் நிர்ச்சிவியாய்ப்போகக் கடவதென்று சாப
மிட்டுப்போய்விட்டாள் அந்த மகாபதிவிரதையாகிய உத்தமியின்சாப
ப்படிக்கு பகற் காலமெல்லாம் நிற்சிவனுகிப்பிர தேசம் போலிருந்து
இராக்காலமெல்லாம் பிழைத்தெழுந்து உலாவிக்கொண்டிருந்தது ம
றுபடியும பொழுது விடியற்காலத்தில் பிணமாய்ப்போய்விடுகிறது இ
தல்லாமல் அந்தராஜனுடைய பெண்ணான பதுமைரேகை யென்பவள்
ராத்திரியிலெழுந்துஸ்நானஞ்செய்து கந்தசுகந்த பரிமளங்களும் வங்க
பொடி சவ்வாதுபுனுகு பன்னீர் முதலியதுஞ் சந்தனபாளி கங்களும்
அணிந்துக்கொண்டு இரவிலுலாவும்போது இமோத்கரிபர்வதக்குகை
யிலிருந்து ஒருராட்சதன் செமபட்டமயிரும் சிறுத்ததேகமும் கோர
தந்த முங்கொடுமையுங் குடிகொண் உருக்கும குலபாதகன் மாம்சமுத
லியயாவுந்தின்று மதுபானங்கொண்டு வானவர்களையுந் தவஞ்செய்
வோர்களையும் வருத்தப்படுத்தி தெய்வலோகத்தை கொள்ளைகொண்டு
யாகாதிதாமங்களையும் கெடுத்து கெர்வங்கொண்டுஉலகமெல்லாங் கிடு
கிடுவென்ற நடுங்கும்படி விரபாரக்கிரமத் தைக்காட்டிக் கடல்நீரைக்
கலிட்டிரைத்து நீட்டி அண்டமுகட்டைதலையாலிடித்து மலைகளையெ
ல்லாம பொடியாகப் படுத்தி மலைக்குகைப்போன்றவாயைத்திறந்து வ
டவாமுகாக்னியை யொத்த கண்களைவிழித்து அரமபாஸ்திரீகளையும
நாகக் கன்னியரையும் சிறைபிடித்து அவர்களுடைய வியிற்றெரிச்சலை
க் கொட்டிக் கொண்டு எவர்களுக்கும்பயப்படாமல் எந்தஆயுதங்களா
லும்இறப்பில்லாமல்பொய்யேகுடிகொண்ட புத்தியையுடையவன் பூமி
யெல்லாந் திரிந்து காடுகளை யெல்லாங் கலக்கி மலைகளைத் தூக்கிம
லைமேலெறிந்து விளையாடி மதம் பொருந்திய யானைகளைப் பிடித்து
மலைப்பாம் புகளை வரிசையாக கோர்த்தணிந்து தாரகை முதலிய
நவக்கிரகங்களை யெல்லாம் கலக்கிக்கொண்டு மடமடவென்று பெரு
ங்காற்றோசை புண்டாகும்படி தட தடவென்று கேசரிமார்க்க

மாய் வரும்போது பூலோகத்திலிரைச்சலும்சந்தடியும் தீப்பிரகாசமும கண்டு இதென்னசூரியன் அஸ்தமப்பிற்பாடு இப்பேர்பட்ட கூச்சலுண்டாயிருப்பதென்னவென்று சற்றுநேரம் நிதானித்து தானித்து தன்புத்தியைஸ்திரப்படுத்திக்கொண்டு தான்கொண்டு வந்தயானைவரிசைகள் மிருகங்கள்யாவும் பூலோகத்திற்போட்டு நாலுபக்கத்திலுங்கோபுரநிறைந்தமாடமாளிகையுடன் மதிற்சுவர்பொருந்தியசிரஞ்சீவிபட்டணத்திற்கு நேராகவரும்போது பதுமைரேகையென்னும் பெண்ணானவள் உப்பரிகையின்மேலில்உலாவிக்கொண்டிருப்பதை இந்தராக்ஷதன்கண்டு அநேகமோகங்கொண்டு அந்தப் பெண்ணை மாயமாகத்தூக்கிக்கொண்டுபோய் தானிருக்கும் இமோத்கிரிபர்வதத்தின்குகைக்குள் வைத்துக்கொண்டு அந்தப்பெண்ணுக்கு அநேகங்கனிவர்க்கங்களுந்தேன் களுங்கொடுத்து யானைக்குட்டி சிங்கக்குட்டி புலிக்குட்டி கவரிமான்குட்டி மயில் குயில் அன்னமுதலியயாவுங் கொண்டுவந்துவிளையாடக்காட்டி என்கண்ணுட்டி விண்ணுட்டி மாதரழகிற் சிறந்தமேட்டி கிரீடையிற் கிரீட்டி உனக்குநான்காமட்டி என்னையாட்கொள்ளுஞ்சிராட்டிஎன்று காலில் விழுந்து கொண்டானப்போது பெண்டாளப்போனான் அந்தசண்டாளனைகண்டபதுமைரேகை யென்னும்பெண்ணானவள்பூனைவாயிலகப்பட்ட கிளியைப்போல்நடுங்கி தனதுபுத்திசாதுரியத்தால் ஒருயுக்தி சொன்னாள்ஓபரிசுத்தனே எப்போதென்னைக்கைக் கொண்டு வந்தீரோ அப்போதே உமக்குநான் சொந்தமாய்விட்டேன் இனிதப்பிபோகிறதில்லை ஆனைவாயிலகப்பட்டகரும்புமீளுமாஅதுபோலும்மைவிட்டு தப்பிப்போகிறதில்லை உமக்குநானே எனக்குநீயே இனிமேலும்நாம்சவுக்கியப்படவேண்டியிருப்பதால் ஆதலால்விரதமென்னும் ஒருவிரதமுண்டு அந்தவிரதத்தை மூன்றுவருஷகாலமாய் அனுபவித்துவந்தேன் இன்னமூன்றுமாதமிருக்கிறது இந்தமூன்றுமாதமும் போனபிறகு ஸ்நானஞ்செய்து ஒருகோயிலுக்குப்போய் பிராமணபோஜனஞ் செய்வித்து நானும பார்த்துக்கொள்ளுமோமென்று அவனுடையமனதுக்குச் சந்தோஷம்வரும படியாய்ச்சொல்லி அரக்கனை சமாதானப்படுத்தித்தன்னை அவ்வரக்கன் தீண்டா திருக்கச்செய்துக் கொண்டாள் அந்தப்பெண்ணினுடைய தாய்தகப்பனும் சாயங்காலம் பிழைத்தெழுந்து பொழுது விடிகிறவரைக்கும் பெண்ணைக்காணாமல் புலம்பி மனவேதைய டைந்து போஜனமுதலியது மில்லாமலிருக்கிறது பொழுது விடிந்தவுடனே இருக்கிறதுமாய் இப்படிசங்கிலேசத்தை யனுபவித்துக்கிறார் களென்று வேதாளஞ்சொல்ல அந்தவார்த்தையை விக்கிமார்க்கமகாராஜன் வெகுவிந்தையாய்க்கேட்டு சிந்தைமகிழ்ந்து சொந்தமந்திரியாகிய பட்டியினிடத்தில பட்டியினிடத்தில் பட்டணத்தை ஒப்பித்துவிட்டு சிரமுடிபுயக்கவசம் தேகபந்து மந்திரவாள முதலிய திருநீறுக்காப்புமணிந்து வேதாளத்தின்மீதேறிப் புறப்பட்டசிரஞ்ஜீவிபட்டணம்

பேய்ச்சேர்ந்து அந்தப்பட்டணமெல்லாஞ் சுற்றிப்பார்த்து அந்தரா
ஜனுடைய அரண்மனைக்குப் போகும்போது சிற்றெறும்புமுதலாகியசீ
வன்களும் செத்தாப்போற்கிடைப் பதைக்கண்டு ஐயோ பாவமிப்பேர்
ப்பட்ட ஆபத்தென்று இரக்கமடைந்து ஆகிலும ஈஸ்வரியிருக்கிறளெ
ன்று அந்தப்பட்டணத்துக்கு தென்பக்கத்திலிருக்கும் ஒரு தடாகத்தி
ல் தீர்த்தமாடி நித்தியவிதிகளைமுடித்துக் கொண்டு சிம்மாசனம்வை
த்துபத்மாசனத்திலிருந்து தனக்கிஷ்டதெய்வமாகிய உச்சினியோங்கா
ளியைச்சிந்தித்து உருச்செபித்தான் அப்போது அந்ததேவிபிரசன்
னமானுள் அரசன்விழுந்து அடிமலரைப் பிடித்துக்கொண்டழுது அ
ம்மாஎனக்கொருகுறைவுமில்லை என்காதிற்கேட்டகுறை இந்தப்பட்ட
ணத்தைப்பாரென்று வேந்தன்சொல்லவிஷ்ணுசகோதரிகேட்டுடமக்கி
ஷ்டமிருந்தால எழுப்பிவிடுமென்றுவிபூதியையும் தீர்த்தமும்பிரயபுக்
கொடுத்து அப்பாமகனே எப்பேர்ப்பட்ட வல்லமையுனக்கிருந்தாலும்
மென்னு பொருளுனக்குத் தெரியாதோ இப்பவும் இந்தப்பட்டணத்
தையாண்டராசன் மெத்தக்கெட்டவன் ரிஷிபத்தினியைச்செய்த அனி
யாயத்தால் இந்தசாமம் வந்தது இப்பவுமந்த வத்தமியைக்கொண்டு தீ
ர்த்துக்கொண்டால் மெத்தவுபாயம் இல்லாவிட்டால் இன்னஞ்சிலகா
லையில் இந்தப்பணத்துக்கு யின்னம்வருமென்றுசொல்லி விக்கிரமார்
க்கமன்னனுக்கு வேண்டியவரமுங்கொடுத்து அந்நிலைவிட்டுநீங்கி தன்
னிலைபோய்ச்சேர்ந்தாள் கன்னியாகிய சிங்கவாகனி அதன்பின்புவிக்கி
ரமார்க்கராஜன் நூற்றிருபதுவயது சென்றவொருகிழப் பிராமணனைப்
போல் வடிவமெடுத்துக்கொண்டு அந்தரிஷிபத்தினியிருக்கும் வனத்து
க்கருகாமையில் வேதாளத்தி னுதவியால் பிரம்மாண்டமாகிய அக்கி
னிகுழி ஏற்படுத்தி அந்தக்குழியைச்சுற்றிச்சுற்றி அரகரா சம்போவெ
ன்றிரைந்து ஒருஅடியைப்பேர்த்துவைக்கஒருநாழிகைசெல்லும்படியா
ய்த்தள்ளாடிதடமாடிக்கொண்டுவருந்தி அக்கினிகுழியில்மெய்யாய் வி
ழப்போகிற தன்மையைப்போல விழவருடபோது அந்தரிஷி பத்தினி
யானவள் திடுகிட்டுசஞ்சலமடைந்ததையோ இந்தபிராமணர் விர்த்தப்பி
ராமணர்விர்த்தப்பிராமணராயிருக்கிறார் இவருடைய தேககாந்தியோ
ஆயிரத்தெட்டிமாற்றபராஞ்சிபோலும்ருக்கிறது நரைதிரையில்லை ரூப
புமாத்திரமவிலக்குகிறது ஆகிலும்சந்திரமுகவிமபமுடையவராயிருக்
கிறார்இவர் அக்கினியில்விழவேண்டியகாரணமென்னமுகாந்திரந்தெரி
யவில்லைஇதை யின்னதெனறறிந்து பிராமணனுக்குவந்த ஆபத்தை நீ
க்கவேணுமென்று அக்கினிகுழியண் டைக்குவந்து அந்தபிராமண
னைப்பார்த்து மிகுந்தபயபக்தியுடன் உபசரித்து வணக்கமாகநின்று ஓம
காசுவாமி இந்தத்தீக்குழியில்விழப் போகிற காரணமென்னநீயெந்தவூ
ர் உமதுபேரென்னசொலலுமென்று குறுக்கேபோய்நடுநகதுக் கேட்க
அப்போதந்தபிராமணன் அடங்கா துக்கம் கொண்டவரைப்போல் ஆ

ராதுயரத்துடனெழுந்து பூரணச்சந்திர விம்பமுகத்தை நோக்கிநாரணி கொப்பாகியபூரணிவிண்மணி போன்ற குமமணி ஆபத்தைநீக்கிக்கா க்கும் அருள்வடிவாகிய மனோன்மணி மாபதிவிரதையாகிய சிந்தாமணி வேண்டியபாக்கியந் தரும்ருக்குமணி அவமதிப்பில்லாதவளுங்கவமணி யேஎன்னுடைய துயரந்தீர்க்கஈசனாலுமில்லை இந்தத்தேசத்தில்நான் பழி ச்சொல்லேற்கும்படியாய்ப் பிறந்தமகாபாவியாக்களும் நீரெந்த உத்த மனுடைய பத்தினியோ தெரியாது தீவினையாளனாகிய என்னைநோக்கி நீயேன்பிரயாசையெடுத்துக்கொள்ளுகிறீர் க்ஷேமமாய்போய்வாரும் அ ம்மாவென்று பிராமணன் தீக்குழியைச்சுற்றிவலம்வந்துபாயப்போனான் அப்போதுதன்னுடையகையால அந்தப்பிராமணனைத்தடுத்துஎன்னு லானமட்டும உமக்குபகாரம் பண்ணுகிறேன் உம்முடையகுறையைச் சொல்லுமென்று உறுதிசொல்லிகேட்க அந்தவேதியனானவர் மிகவும்ம னமுருண்டுமகாரிஷிபத்தினியாகியமாசிலாமணியேகேளு நானிருப்பது சரஸ்வதிபட்டணம் என்பெயர்கெக்குபட்டன்நான்சகலசாஸ்திரங்களு ங்கற்று ஆசாரிபட்டமாயிருந்து அநேகபாக்கியங்களை அனுபவித்துக்கொ ண்டுவெகுநாளையில நூறுவருஷமவரைக்கும் எனக்குபுத்திரனில்லாமல் கங்காஸ்நானஞ்செய்து விஸ்வேஸ்வரனுடைய அனுக்கிரகத்தினால் ஒரு பிள்ளைபிறந்தான் அந்தப்பிள்ளைக்கு சகலகர்மமுஞ்செய்து சாஸ்திரபு ராண ஆகமநீதிகர்மநூல் உபநிடதமகாமசதுர்வேதங்கற்பித்துஈரேழுல கத்திலும்இவனுக்கொப்பாகியபேர்களெவர்களுமில்லையென்றுகலைவல் லோர்களுஞ்சொல்லும்படியாய் வளர்ந்துவந்த காலையில் அந்தப்பிள்ளை க்குவிவாகமகோற்சவஞ் செய்வதற்காகநிச்சயித்து புத்திசாலியாகியபெ ண்ணை விசாரிக்கும்போது நிச்சிவிபட்டணத்திலே வேதசாஸ்திரபட்ட ருடைய குமாரத்தி கீதசாஸ்திரவதியைக்கேட்டு இரா முகூர்த்தம் வை த்துக்கொண்டு பாணிக்கிரகணக்கலியாணம் பண்ணிவைத்து பெண்ணு ம்பிள்ளையும் நமதுவீட்டில் வந்திருந்து மறுவுண்ணுவதற்கு மாமியார் வீ ட்டுக்குப்போனான் இராத்திரிமுழுமையும மங்களகரமாயிருந்து பொழு துவிடியும்போது எறும்புமுதல்யாவரும்செத்தபிணம்போலிருந்தார்கள் மறுபடியும்சாயங்காலம்எல்லோரும்எழுந்திருந்தார் இந்தஆச்சரியத்தை என்பிள்ளையானவன்கண்டுபயந்துஐயோ இந்தபட்டணத்தில்இப்பேர்ப ட்டஆபத்துஎந்தவிதத்தால்வந்ததென்றுவிசாரமடைந்து நல்லகுணசா லியாகியதன்பெஞ்சாதியையும் அவளைப்பெற்றமாமன்மாமிமுதலிய மச் சினிமைத்துனனையுமவிட்டுவரமனமில்லாமல்அவர்களுக்கொத்தது நம க்குமென்றுமாமியார்வீட்டிற்றானேயிருந்துவிட்டான் அப்போது நான் அந்தப்பிள்ளையும்பெண்ணையும அழைக்கப்போனேன் அந்தப்பட்டண த்திலுண்டாகியயாவர்களும் தீபாவளிபண்டிகைப்போல் இராத்திரிமு ழுமையும் தீபவலங்காரம பண்ணிக்கொண்டு சிந்தைகலங்கி யிருந்

தார்கள் அந்தவகையை நான்தெரிந்துக்கொண்டு இந்தப்பட்டணத்து
க்கு இப்பேர்ப்பட்ட பொல்லாங்குவரவேணடிய தென்னவென்று எங்
கள்சமமந்திரியை கேட்கும்போது பக்கத்தி லிருந்தபிராமணர்களும் மற்
றபேர்களும் நுப்யோமுறைஎன்றுகூவி அடாபாவியிதுவரையிலும் ஒ
ருவருக்கும் உயிருக்கட்டில்லாமபரமபதம்போல் இந்தப்பட்டணத்தக்
குளங்கள் வேதசாஸ்திரப்பட்டருடையபெண்கொடியை உன்பிள்ளையா
கிய நிற்பாக்கியபாவிகிட்டென்று அடிவைத்துத் தொட்டுதாலிகட்டின
வுடனே பொட்டென்றவிக்கையைபோல் இந்தபட்டணங்கெட்டுபோய்
விட்டது அவனுடையபோகனையில் அகப்பட்டுகொண்டுராசனும்புத்தி
கெட்டுபோனான் இனிவேறுயோசனை என்னவிருக்கிறதென்று ஆளுக்கு
ஒருவார்த்தைசொல்லிநிந்தித்தார்கள் அந்தவார்த்தையைக்கேட்டிருந்த
என்குமாரனானவன் சொல்லேதள்ளாமல் காளிகோயிலண்டைக்குப்போ
ய் கழுத்தையறுத்துக்கொண்டுசெத்தான் அவ்விடத்திலே அவளாம்பி
டையாளாகியகீதசரஸ்வதியும் தீபாய்ந்திறந்தாள் அப்பெண்ணுக்குரியதா
யும் தகப்பனுங்கண்டு சத்திராதிமுதலியபேர்களும் ஒன்றைப்பற்றிஒன்
றாக மாண்டுபோனார்களென் ஆண்டவன் துணையாகிய அம்மாள் இத்த
னைபேர்களும் புத்திமானாகிய என்பிள்ளையும் இறந்துபோயிருக்க நானி
னிச்சிறந்து அடையபோகிறலாபமென்ன அவர்களுடைய ஜீவனைப்பா
ர்க்கிலு என்ஜீவன்கறுப்புட்டியோ தாயே என்மைக்கிருந்தாலு மழியு
முடலிது கெட்டுதென்று அக்கினியில்விழத்துணிந்தேன் ஏன்தடை
செய்கிறாய் அப்புறம்போ அம்மாவென்று அந்தப்பிராமணன் அலறிவி
ழுந்தபோது ரிஷிபத்தினியாள் எடுத்தணைத்து ஆயாசந்தீர்ந்து ஐயரே நீ
பயப்பட வேண்டாமென்று தயிரியஞ்சொல்லி சற்றுநேரம் யோசித்து
வேத வேதியரேகேளும் அந்நகரத்தையாண்ட ராஜன் காமததினால் மா
ண்டு போங்காலம்போல் மயங்கிஎன்பேரில் மோகங்கொண்டு அடுத்த
கையாற்றடுத்துவிட்டான் அப்போதெனக்கொருவருந்துணையில்லாமை
யினால்மனமருண்டு தர்மமேஜெயமென்றெண்ணிஉன்பட்டணம்நிர்சிவி
யாய்ப்போகக்கடவதென்றுசபித்தேன் அந்தசாபத்தால்இப்பேர்பட்ட
தன்மை உண்டாயிருக்கிறதையா அப்படியிருந்தால் உன்பிள்ளைக்கு ம
ருமகளாகிய பெண்ணுக்கும்மற்றபேருக்கும் யாதொருதுன்பமில்லை நீர்
நெருப்பில் விழவேண்டாம் எப்போதும்போல இந்தப்பட்டணஞ் சுகசீ
வியாயிருக்கவும் உன்குடும்பம ஓங்கித்தழைக்கவும மீட்டித்தமனுகவேண்
டியது என்றுவரங்கொடுத்தாள் உடனேவிக்கிரமார்க்கராசன் தீர்க்கத்
தெண்டமாய் வணங்கித்தாயே மகாபதிவிரதைகளின் மகத்துவங்களை
வர்களாலுஞ் சொல்லிமுடியாது மும்மூர்த்திகளுக்குமேற்பட்ட தென்
றுவணங்கி விடைபெற்றுக்கொண்டு அந்தப்பட்டணத்துக்குப்போய்ப்
பார்த்தால் சகலவுயிர்களுடன் சந்தோஷமாக சுகசீவியாயிருக்கக்கண்டு
தானுஞ் சந்தோஷமடைந்தார் அந்தவேளையில் அந்தபட்டணத் தரச

னும் அவருடையபத்தினியும் தங்கள் புத்திரிபைக்காணுமல் கலங்கும்போது அந்ததுயரத்தைக்கேட்ட விக்கிரமார்க்கராஜன் காளிகாதேவியைச் சிந்தித்துவேதாளத்தை வரவழைத்துயதின் மீதேறிக்கொண்டு அந்தப்பெண்ணை எடுத்துப்போன ராட்சதனிருக்குமிமோத்திரிபர்வதகுகைக்குப்போய் அந்தக்குகைக்குள்ளிருந்த பெண்ணைக்கண்டு அழகியபெண்பாவாய் இந்தமலைக்குகைக்குள் நீஒண்டியாகயிருக்க வேண்டியகாரண மென்னவென்று அரசன்கேட்க அந்தப்பெண்கொடி யானவள் கண்ணீருதிர்த்து ஆரோஎவரோ ராட்சதமாய்கையோவென்று பிரமைகொண்டு தனதுவேகத்தினால் விக்கிரமார்க்க னென்றுணர்ந்து ஐயா என்னைக்காக்குந் தெய்வமேஎன்கதி இப்பேர்ப்பட்டதென்று தனக்குநேரிட்ட சஞ்சலக்குறையைச்சொல்லி அழும்போது உன்னுடையதுக்கந்தீரச்செய்து உங்கள்தாய்தந்தை யிடத்துக்குகொண்டுபோய் விட்டுவிடுகிறேன் உன்தாய்தந்தையும் சுகசீவியாயிருக்கிறார்கள் உன்தகப்பனுர்பட்டணத்துக்குவந்த சாபத்தையுந்தீர்த்தே னென்றுவார்த்தை யாடிக்கொண்டிருக்கும்போது ஆகாரத்துக்குப்போன அந்தராட்சதன்வருவானேவந்தால் உமமையும்என்னையுங் கொன்றுபோடுவானே என்தாயாகிய இறையேயவன்வருவதற்கு முன்னேஎன்னையழைத்துக் கொண்டுபோய்விடுமென்று பெண்ணரசிசொல்ல அந்தவசனத்தை இந்தவிக்கிரமார்க்க ராஜன்கேட்டுஐயோ அம்மாயப்படிதிருட்டு தனமாய்செய்தால் என்பெருமைக்குங் குறைவுபிறபாடுவுனக்குந் துயர்வாகையால் அவனைநகுவிற்கண்டு அவனைக்கொன்று செயம்பெற்றுன்னை எடுத்துச்செல்வது ஞாயமென்றுராசன்சொல்ல அந்தவார்த்தைகேட்டு அந்தப்பெண்சொல்லுகிறாள் அரசனே அந்தராட்சதாள் தேவர்கள்முதலிய யாவர்களாலுஞ் சாவில்லாவரம்பெற்றிருக்கிறான் அவனைநீர்எப்படிகொல்வீரென்றுசொல்ல கல்லதுயின்றைக்கு நீயுமவனும்சந்தோஷமாகபேசி உன்னுடைய உயிர்நிலைஎவ்விடத்தி லிருப்பதென்று கேட்டறிந்துகொண்டால் பிற்பாடுபார்த்துக் கொள்ளுவோமென்று அவ்விடம்விட்டுநீங்கி வெளியேவந்து ஒருவனத்திலிருந்து காய்கனியைத் தின்றுகொண்டு அவ்விடத்தில் அன்றைக்கிருந்தார்.

அவர்வந்துவிட்ட சற்றுநேரத்திற்குள்ளே அந்தராட்சதன் கனிதேன் புஷ்பங்கள் முதலியதுங்கொண்டு தனதுகாதலியைநோக்கி என்கண்ணே என்பிராணனேயென்று கூப்பிட்டான் அதற்கவள் ஒன்றும் பேசாமலிருக்க அந்தராட்சதன்கிட்ட நெருங்கிகிளம்பப்போகும்போது திடுக்கென்றெழுந்து திகைத்துநிற்கக்கண்டு என்னவின்றைக்கு உன்முகம வேறுபட்டிருக்கிறது ஒருவிதமாய் இருக்கிறாய் என்பேரிலுனக்கெப்போதயவுவரும் இன்னமுனக்குவிரதம நீங்கவில்லையாவென்று ராட்சதனகேட்டான் அதற்கந்தப்பெண் சொல்லுகிறாள் எனக்கு விரதம் நீங்கிவிட்டது இனிமேலும்முடைய உயிர்க்குயிராகியகாலந்தான் ஆனு

லும் உம்மைநான் நம்பமாட்டேன் அதேதனென்றால் ராட்சதாள்மெத்த வும் வஞ்சமன்னிடத்திலுண்மையாய் வைத்திருப்பது நிசமானால் உயிர் நிலையைச் சொல்லும்பார்ப்போமென்று அந்தப்பெண்கேட்க அடிபவித் தியக்காரியே என்னுடைய உடல்பொருள் ஆவிமூன்றும்உனக்குத்தத் தம்பண்ணியிருக்கிறேன் அதையுண்மையாய்த் தெரிந்துக்கொள்ளவே ணுமானாற் சொல்லுகிறேன்கேளும் மல்லிகார்ச்சுனமென் றொருமலையு ண்டு அந்தமலையினடிவாரத்தில் ஒருவிநாயகருண்டு அரைத்தள்ளி அப் புறம்போனால் ஈசான்யகுகையென்றொரு பிலத்துவாரத்தில் கூர்மநின ன்றொரு ஆமையுண்டுயவ்வாமை வயற்றில்என்பொழியாக்கை என்றொ ருபுழுவுண்டு அந்தப்புழு வின்றலையில் என்னுடைய பிராணனிருக்கிற துஎப்பேர்ப்பட்டவர்களாலும்என்னைக்கொல்லமுடியாது நானிதுவரை யிலும் ஒருவருக்குஞ்சொல்லவுமில்லை அந்த புழுவின்றலையை யறுத்து என்முன்போட்டால் அன்றைக்கு எனக்குகேடுவரும் இதன்மத்தியிற் எல்லோருமென்னைக் கேட்டுபோவார்களல்லது நானைநக்கலும் அழி யே னென்றுசொன்னான் அதைக்கேட்ட அந்தப்பெண்ணவன் இது உண்மைதானாவென்றாள் உன்னுடனான்சொல்வதுயுண்மைஎன்றுரை த்தான் ஆனாலினிஎனக்குப்பயமில்லை என்றுசரசபுத்ரிசொல்லராட்சத ன்கேட்டு அன்றிராத்திரி அக்குகையிலிருந்து மறுநாள் காலமெழுந்து அப்பெ ண்ணுக்கு ஆகாரங்கொண்டு வரப்போனான் அப்போ தெங்கள் விக்கிரமகாராசன் அந்தப் பெண்ணிடத்திற்குப்போய் அவளாலந்த ராட்சதனுடைய பிராணநிலையை அறிந்துகொண்டு மல்லிகார்ச்சுனமலை க்குபோய தன்னிடகாளியை வந்தித்துவணங்கி ஓமயேஸ்வரிஎன்று பா தத்திறைஞ்சி அவ்விடத்திலிருக்குஞ் சுனையைக்கண்டு அச்சுனையிலிற ங்கி நாலுபுறமுந்தேடிப் பார்த்தங்கிருந்த பிள்ளையார் கோயிலைக்கண்டு கோயிலுட்புகுந்து விக்கினேஸ்வரரை வணங்கிப்போற்றி ஸ்தோத்திரஞ்செ ய்து தான்வந்தகாரியத்தை சொல்லிக் கொண்டபோது துஷ்டநிக்கிரகம் சிஷ்டப்பரிபாலனஞ் செய்யவந்தவிக்கிரமார்க்க வேந்தனுக்காய் விநாய கமூர்த்தி லோகோபகாரத்தை குறித்துவழி காட்டிவிட்டார் அந்தவழி யேவந்து துவாரத்துட்புகுந்து தேடிபார்க்கும்போது ஒருமலைபோல் ஓ ராமைபடுத் திருக்கக்கண்டு மந்திரவாளினால் ஓரேவெட்டாக வெட்டி அதனுடைய வயிற்றைக்கிழித்து குடல்களைஎடுத்துப் பார்க்கும்போது ஒருமொகப்பெரி மூறகளைப்போன்ற நீலப்புழுவொன்றிருக்கக்கண்டு அ ந்தப்புழுவை இரண்டாய்வெட்டி எடுத்துக்கொண்டு பிலத்துவாரத்தை விட்டு வெளியேவந்து மல்லிகார்ச்சுனமலையை சேர்ந்தவழியில் கொண் டுவரும்போது இவ்விடத்திலிருந்த ராட்சதனுக்குப்பல மொடிக்கி அ ட்டலும் புரட்டலும் படுக்கையிடத்திற்றானே பிராணமூர்ச்சை போனா ன் அவ்வேளையில் விக்கிரமார்க்கராசன் இந்தமலைகுகைக்குவந்து சோ பித்துக்கிடந்த ராட்சதனைக்கண்டு தான்கொண்டுவந்தபுழுவை அவனு

க்கெதிரிலேபோட அந்தப்புழுதுடிப்பதுபோல சாவுக்கூச்சலிட்டுக் கொண்டிறந்தான் உடனே அந்தப்பதுமைரேகை என்னும்பெண்ணும் தானும் வேதாளத்திலேறிக்கொண்டு உச்சினியோங்காளி பட்டணத்தை நாடிவரும்போது வழியிலொருசிங்கார வனத்திலிறங்கி இளப்பாறி தாகவிடாய்தீர்த்து ராட்சதனுடையசவுரியங்களைபேசிக்கொண்டிருந்தார்கள் அந்தவேளையில் கங்கைத்துணிகட்டிகொண்டிருக்கும் ஒருபிராமணன் இந்தப்பதுமைரேகையைக்கண்டு மோகங்கொண்டுதெரியாமல் மயங்கிநாடி தூரத்திலோடிதுணிக்குற்றி விழ்ந்துமூர்ச்சையாய்ப்போனான் அவ்வதிசயத்தை விக்கிரமார்க்கனைக்கண்டு பிராமணனைத்தேற்றி உமக்கென்னமயக்கம் ஒருவிதமாய்பயித்தியம் பிடித்தவரைப்போலிருக்கிறீரேயென்றுகேட்க அரசனேநானேழை எனக்குப்பருவம்வந்த நாள்முதல் இதுவரைக்கும் மன்மத விசாரத்தினால் வருமையடைந்து விகாரம்பிடித்து வெந்திருக்கிறேன் இப்போதிந்தப்பெண்ணைக்கண்டேன் மோகங்கொண்டேனமக்குகிட்டுமாவென்றுவேதியன்சொல்ல வேந்தன்நகைத்து ஐயோபாவமென்று அலங்கரித்து ஐயரேயுமக்கிந்த நங்கையைதருகிறேன் மணம்புரிந்துவாழுமென்று அவனுக்கந்தபதுமை ரேகையைச் சகலவலங்காரமாய் கன்னிகாதானமாகக்கொடுத்து அநேகதிரவியங்கள் அரண்மனைகள்பட்டண முதலியயானைசேனைபரியாள்களுஞ் சீதனமாகக்கொடுத்து அனுப்பிவைத்துத் தன்னுடையபட்டம்போய்ச்சேர்ந்தார் ஓபோஜராஜனே இப்பேர்ப்பட்ட சாமர்த்தியமும் உதாரகுணமும் உமக்கிருக்குமானால் அந்தச்சிங்காதனத்திலே ஏறத்தகுமென்று இருபத்தோரும்படிப்பதுமைசொல்ல அதைக்கேட்டு அன்புமேற்கொண்டு ஆச்சரியமடைந்து போஜராஜன் தன்னரண்மனைப் போய்விட்டான்.

இருபத்தோரும்படிப்பதுமைசொலகதை-முற்றிற்று.

இருபத்திரண்டாம்படிக்கு காவலாகிய வேளபார்த்தவிரத்னபதுமைகதை.

இருபத்திரண்டா நாட் காலையில் போஜராஜ னெழுந்து ஸநானஞ்செய்து புஷ்பங்கொய்து வழிபடுகடவுளை யெண்ணி மனதுக்கிசையப் பூசைகள் பண்ணி சகலாபரணங்களு மணிந்து சுகமாய் சிங்காதன மேலத் துணிந்து மகுட மன்னர் துதிக்கவும் பகை வரென்னணித் துதிக்கவும் வெள்ளைக் குடை விரித்துப் பிடிக்கவும் ஜயசயர்பாத மிதித்து நடக்கவும் விருதுக் கொடி பறக்கவும் மேளவாத்தியஞ் சிறக்கவும் யானையுடன் தேர்களுந் தொடரவும் சேனை யுடன் பரிகளுடன்சவும் கட்டியங் கூறவும் காவல்வீரர்கள் மிகவும் சிங்காதனத்துக் கருகேவந்து இன்றைக் கிலு மேறலாமா மென் றெண்ணி துணிவு முன்னே இருபத் திரண் டாம் படிக்குக் காவ லாகியப் பதுமைக் கண்டு மனம் விண்டுப் போச ராசனைப் புகழ்ந்து

ந்து தங்களுடையவிக்கிரமார்க்கமகாராசன் இராச்சியபரிபாலனம் ப
ண்ணிக்கொண்டிருக்கும காலையில் அளகாபுரியென்னும் பட்டணத்தி
ல் நீதிபரனென்னுஞ் செட்டியொருவனிருந்தான் அந்தசெட்டிக்குப்
பருகத்தன் தருதத்தன் குணதத்தன் கனதத்தனென்று நாலுபிள்
ளைகளுண்டு இவர்களுடைய தந்தை தாயிருவருஞ் சிலநாளிலிறந்து
போனார்கள் அவர்களுக்குரிய கடன்முறைகளையெல்லாமுடித்து கர்
மங்களைஞ்செய்தபிறகு அவனுடைய பிள்ளைகள் நால்வரும் பொரு
ந்தியாழ சமமதமில்லாதவர்களாய் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டு
பங்குபிரித்துக் கொள்ள வெத்தனித்து ஆஸ்திகளை பரிசோதிக்கும்
போது வீடு, வாசல், மனைதவிரவேறொன்றுமில்லாதிருக்கக்கண்டு மி
குந்த விசனங்கொண்டு கணக்கைப் பார்த்தார்கள் அதிலெழுதியிரு
ந்த விபரமானது அந்தக்கட்டிலின் காலிலாநிறை செம்புதவலைகள்
வம்பு வழக்கில்லாமல் பங்குபிரித்துக்கொண்டு செம்பொன்னைதிரவா
ளெடுத்துக்கொண்டுசுக்களைத் தானங்கொடுத்து விட்டுபன்னிர் பேர
விருக்கவென்றுயெழுதியிருக்கக்கண்டுபிள்ளைகள்நாலுபேருங்கூடிதங்
கள தகப்பன் படுத்திருந்த கட்டிலையெடுத்து அப்பாற்போட்டுவிட்ட
ந்தக்கட்டிலினுடைய முன்காலவைத்தவிடத்தை வெட்டிப்பார்க்கும்
போது அந்தக்குழியில் பத்தச்செங்கரியும் இரண்டாங் காலிருந்த
தை வெட்டிச்சோதிக்கும்போது ஒருகூடாவில் பன்னிரும் மூன்றாங்
காலிருந்த விடத்தைச்சோதித்தபோது ஒருமொந்தையில் பெருமண
லும நான்காவது காலிருந்தவிடத்தில ஒருமொந்தை எலும்புமஇருக்
கக்கண்டு இவைகளையெல்லாமெடுத்து வெளியேவைத்து விசனபபட்
டுஎன்னடா நமது தகப்பன மெத்தவுஞ் செல்வந்தனாயிருந்தானே இ
தென்ன ஆச்சரியமென்று மனவெறுப்புடன் வருந்தி இதனுடைய ச
ங்கதியொன்றுந் தெரியாதவர்கள் விக்கிரமார்க்கராஜனிடத்துக்கு வ
ந்து தகப்பனெழுதி வைத்த கணக்கையுங் காட்டி அந்தப்படிகட்டிலி
ன்கால்வைத்த இடங்களை வெட்டிப்பார்தது அவவிடத்திலிருந்த பண
டங்களைக்காட்டி எங்களுடைய வாயையுமவயிற்றையுங் காட்டி வரு
ந்தி எங்களைப்பொருந்தச்செய்யும் பூபதியென்று போற்றினார்கள் அ
ப்போது விக்கிரமார்க்கராஜன் ஆலோசித்து அப்பாபிள்ளைகளே உ
ங்கள்தகப்பன் செவ்வையா யெழுதிவைத்தான் நீங்கள அதைதெரி
த்துக்கொள்ள மாட்டாமற் மயங்கினீர்கள் இப்போது நான்தெரியச்செ
ய்கிறேன்பாருங்களென்று அவர்கள் வீட்டுக்குப்போய் ஒருமொந்தை
யிலிருந்த எலும்புகளைஎடுத்து எண்ணிப்பார்த்து இதனை பசுக்க
ளையும் தன்பேரால தானஞ்செயது விடச்செய்கிறார் அவரிஷ்டப்படி
யே உத்தமபிராமணருக்குதானங் கொடுத்துவிடுங்கள் ஒருமொந்தை
யிலிருந்த மணலகளை யெடுத்துப்பார்த்து இவ்வளவுவெண்கலம் பித்த
ளை இவைகளினலாகிய இத்தனைசாமான்களிருக்குது அதுகளைநீங்கள்
நால்வரும் பங்கிட்டுக்கொள்ளுங்கள ஒருசொம்பிலிருந்த கரிகளைப்பா
ர்த்து இத்தனைபொன்காறுகள் கரிகியகொண்டிருக்குது அவைகளை
யெடுத்துச் செலவுபண்ணாமல தானதேடும்பொருள ஆஸ்திசேர்க்கி
ற மூத்தப் பிள்ளையினிடம ஒப்பித்துவிடுங்கள் நீங்கள் நாலுபேரும்

பன்னீர்போல் லேசாயிருந்து வெகுதேட்டையாய் சூரியனைப்போல் காய்வார் கண்ணுக்கெதிர் நில்லாமல் வியாச்சிய விலலங்கத்துக்குப் பளுவாகக் காட்டாமல் மேகங்களைப்போல் பொழிந்து போகாமல்வேள்பார்த்தனைப்போல் கண்கெட்டுவெந்து போகாமல்மனக் குளிர்ச்சியாயிருக்கவென்று குறிப்பினால் தெரிவித்தான் உங்கள்தகப்பனென்று விக்கிரமார்க்கராசன் சொல்ல அந்தப்படியே கட்டிவைத்திருந்த பூமியை வெட்டிப்பார்த்து அதனுகுள்ளாக யிருந்தபொருள்களை எடுத்துக்கொண்டு பூமமென்னு நகரிலிருந்தப்பசுக்களை தானம் கொடுத்துவிடும்படி உத்தரஞ்சொல்லித் தமையனதம்பிகள் நால்வருஞ் சந்தோஷமடைந்து வாழ்ந்திருந்தார்கள் எங்கள் விக்கிரமார்க்கராஜனை வாழ்த்தினார்கள் அப்படிநீ நம் புத்திமானையிருந்து பூமியிலிருக்கும்பொருள் ராசனுக்கு பாதி என்றிருக்க அதையும்விட்டு சாதேகப் பொருளுக்கு சாமயிரதாயமுஞ்சொலலி பிறநுடைமைக் காசைப்படாமல நீதிசெலுத்தும றெியுமயிடத்திலிருக்குமாகில் இந்தச்சிங்காதன மேறத்தகு மென்று பதுமைசொல்லி சிரிக்கும்போது போஜராஜன் உள்ளம்பதைத்து வள்ளலாகிய விக்கிரமார்க்கராஜனை வாழ்த்திப் புகழ்ந்து தன்னரண்மனைக்குப் போய்விட்டான்.

இருபத்திரண்டாம்பதுமைகதை முற்றிற்று

மாணிக்கவாசகவல்லிப்பதுமைகதை.

இருபத்துமூன்று நாட்காலமே போசராசனெழுந்து கங்காஸ்நானம்பண்ணிகடவுளை வணங்கி சூரியநமஸ்காரஞ் செய்துக்கொண்டு பாலைப்போலும் பளிங்கைப் போலும் பரிசுத்தமுடைய பெரியோர்களை கும்பிட்டு பட்டுப்பட்டாவளி முதலிய பீதாம்பரமுந் தானங்கொடுத்து சகலவித அலங்கார பரிசுத்தமாய் சதுரங்கபடைகளுஞ் சூழ்ந்துவரும்படியாய்வந்து சிங்காசனத்துக்கு வந்தனந்தந்தும் மந்திரிப்ரதானி முதலிய மகானுபாவர்களும் சிந்தைமகிழ சிங்காதனமேறப் போம்போது இருபத்துமூன்றாம்படிப் பதுமை எழுந்து போசராசனையிறைஞ்சிபேரும்மகாராசனே எங்கள் விக்கிரமார்க்கராசன இந்தச்சிங்காதனமேறி உலகாளும்போது சோதிப்பிரகாச சுந்தரநாராயண ரிஷிஎன்பவர் ஒருவர்வந்தார் அவரைக்கண்டு எதிர்கொண்டு சென்று நமஸ்கரித்துஸ்நானவஸ்திரத்தியஞ் செய்யும்போது அந்தமகாரிஷி மனமகிழ்ந்து ஆசீர்வதித்து ஓராசிங்கமே இவ்வுலகத்தில் உன்னைப்போல அறிவிலும் திறமையிலும் நீதிமுறையிலும செல்வத்திலுங் கல்வியிலும் வல்லமையிலும பலவுபகாரத்திலு மிகுந்த வல்லவர்கள் ஒருவருமில்லை ஆனால உனக்கோர் ரிக்கட்டுவருகுது அதனாலுன்னுடைய மனமெத்தவருந்து மென்றுசொல்ல வந்தேகொடைமுரர் அசந்திருசன் முடியால் வணங்கிபடிமீது நெடியோனாகிய திருமாலைப் போன்றசுவாமி அப்படிவாராநின்ற வருத்தமின்னதென் றடியேனுக்கு அதினுடைய வருத்த மில்லாமலிருக்க அருள்செய்யவேணுமையனேயென்று கைபிறந்துகேட்க வையகங்காக்கும் விக்கிரமார்க்கனே கேளும் இனிமேப்போகிற வசந்தகாலத்தில் சனியானவன் ரோகணி நக்ஷத்திரத்திற்கு வரப்போகிறான் அவனவந்தால் துவாதசவட்சாமாரி வந்துநேரிடும்போது ஓமயாகம் சத்தியநெறி உத்தம முதலியவைகள் எல்லாம் செத்து

ப்போய்மன்னுயிர்கள் மெத்தவும் கசக்கிவருந்துவார்கள் அதனுலுயிருமொருங்கிவருந்துமென்று மகாரிஷி சொல்லவே அவனைப்பணிந்தாண்டவனே இதற்கெப்படிபரிகாரமேதகிலுமுண்டோ தங்களுடைய திருவடி பெயர்த்தருளிய இந்தப்பட்டணத்துக் கிப்பேர்ப்பட்டபொல்லாங்கு வரப்போமா தங்களுடையகடாட்ச வீக்ஷண்யம்பட்டகாலசஞ்சலப்பட்டு தளரலாமா இதற்கொருதந்திரஞ் சொல்லுஞ்சுவாமியென்று சரணகமலத்தில் தாழ்ந்தெழுந்துரைக்க மகாமுனிவர்நோக்கிமனமகிழ்ந்து சொல்லுகிருர் மகாராசனேகேளும ஏதோஈசனடியாரைகுறித்து மகாபூசை பண்ணிப்பாரும் தானதர்மமுஞ்செய்து ஒருவேளை மழைவந்தால வாநமென்று சொல்லிவாழ்த்தி விடைபெற்றுக்கொண்டு விசேஷமாய் தேவாலயமஹிமாலய பூசைமுதலியதும் சிவனடியார்களுக்குபகாரஞ் செய்துவந்து மழையின்றி உலகந்தத்தளிக்கிறதைப் பார்த்து எக்கள்விக்கிரமார்க்கராசன வெகுவிசாரங்கொண்டுமன்னமையோர்ச்சொல்லும் விருதாவாச்சுதே அடியார் பூசையாலாவதொன்றில்லையென்றுவிசாரங்கொண்டு இப்பேர்ப்பட்ட துன்பத்தை உலகமநுபவிக்க நாம்உயிரோடிருப்பது ஞாயமல்லவே நாமிருந்து இப்படி நடந்ததென்று பேராசைகொண்டு தன்னுயிரைத்தானேவிட யோசித்தெழுந்தகாலத்தில் அசரீரிவாக்கியமொன்றுபிறந்தது ஓராஜகுலதிபராசனேகேளும் எங்குந்துதிக்குந் தேவகெங்குவென்பவனிடம்நேசமாயிருந்துமோசஞ்செய்து கைசாரணையாற் கலைகெட்டவோர் பார்த்தனென்னும் ராக்ஷதனொருவன உலகத்திற்சிறந்தவனென்று பாகசாலைவீதியில்மேற்பட்டிருக்கிருன் அவனைநாசப்படுத்தி உயர்ந்த பெரியமேட்டில்போகச் ஞானென்னும் பொய்யனிருக்கிருன் அவனையுமழித்து ஆசைபுரிஎன்னும் தேசத்தில் வாசவசேனுபதி யென்னும ஒருதேவனிருக்கிருர் அந்ததேவனை குறித்துப் பூசைமுதலியது நடத்தி விசுவாசிப்பையாகில் அவர்பிரசன்னமாகவந்து ஒருதேரும் பெரிய வில்லும் அதற்குத்தகுந்த அம்புருத்தூணியுங் கொடுப்பார் அவைகளைப்பெற்றுக் கொண்டு ஆகாயமார்க்கமாயபோய் வில்லைவளைத்து காணேறிட்டு திவ்வியாஸ்திரந் தொடுத்து ரோகணியிற் பிரவேசித்த சனியின்வரவை அடிப்பையாகில் அந்தக்கதியைவிட்டு அப்பால் விலகிப்போய்விடுவார் அப்போதுதான் தாராளமாய் மழைபொழியும் உலகமெல்லாஞ்செழிக்கும் அக்கிரமங்களும அழிந்து போவார்களென்று சொல்லக்கேட்டு விக்கிரமார்க்கராஜன் விரைவாகச்சென்று வேதாளத்தின் மேலேறிக் கொண்டு யாகசாலையிற்சென்று அவனிடத்திலிருமாந்து ஒருத்தருமகிலில்லையென்று வெகுபேரை மோசம்பண்ணின நல்லோர் பெரியோர்மனநோவச் செய்திருக்கும் துஷ்டமகா பாவியாகிய இராக்ஷதவேன்பார்த்தனை வெட்டிமடித்து நாய் நரி பேய் காக்கை கழுகுகளுக்கிரையாக்கவிட்டு அவனிருந்தவிடத்தையு மிடித்து பொடியாக்கி இடிவிழுந்தபள்ளம் போற்செய்து அவ்விடம்விட்டுப் புறப்பட்டு உயர்ந்தபெரியமேட்டிலிராநின்ற பேற்றசகுதப் புளுகனையு நாசமாக்கி அவனிருந்தவிடத்தையுமிடித்து கிறகி ஈ எறும்பு மொய்க்கும்படியாய்ச்செய்து அப்பால்நடந்து ஆசைபுரிஎன்னுந் தேசத்திற்சென்றுவாசவசேனுபதி யாழுந் தலத்தைக்கண்டு ஸ்நானசந்திசபதப முதலியது

முடித்துக்கொண்டு அபிஷேகமுதலிய பூஜாவிதிகளெல்லாங் குறைவில்லாமற்செய்து தானும் நிஷ்டையிலிருந்து நேர்பாகிய தவத்தைப் புரிந்தார் அப்படி தவஞ்செய்யுகாலையில இந்தராஜனுடையமனோகிடத்தைக்கண்டு இவனமெத்த வுறுதியை யுடையவன் பிடித்தகாரியஞ் சாதிக்கதக்கவனென்று வாசவசேனுதிபதி பிரசன்னமானா அவரைக்கண்டு அரசனெழுந்துவிழுந்து வணங்கியபோது அவ்வரசனை யணைத்து ஓராஜனேபயப்படாதீர் நீர்மகாதீரன் உன்னாலாகாத காரியமொன்றுமில்லலைலோகோபகாரமாய் பாடுபட்டீர் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ்செயதீர் ஆகையால் நீர்நினைத்து வந்ததேரும் வில்லும பாணமும் இதோ தந்தேன் இதைக்கொண்டு லோகரக்ஷகரென்னும் பெயர்பெற்ற துவாதசசாமத்தைநீக்க கடவீர் போவென்று விடைகொடுத்தனுப்ப அப்படியேயவணங்கி செலவுபெற்றுக்கொண்டு வேதாமூந் தானும் ரதத்தின்மேலேறிக்கொண்டு ஆகாயத்திற்சென்று ரோகணியிற் பிரவேசித்து ஆடசிபாயிருக்கிற சனிக்கிரகத்தை ஓடடித்த போது சனீஸ்வரனர் சந்தோஷமடைந்து எதிர்வந்துநின்று ஓய் உத்தமனே தேவர்களைச் செயிப்பவ ரொருவருமில்லை அப்படியிருந்த போதிலும் நவக்கிரகங்களை அலைக்கச் செய்பவராருமில்லை இப்போதும்மைக்கண்டேன் ஆகலால் நீர்மெத்தவும் வல்லமைசாலி நல்லருளைப் பெற்றிருக்கிறீர் உமக்குவேண்டியவரத்தை கேளுந்தருகிறேனென்றுசனிபகவான்சொல்ல அந்தவார்த்தையைக்கேட்டமகாராசன் தனக்கொரு வரமுங்கேட்டு கொள்ளாமல் சுவாமி நீஎந்தகாலத்திலும் ரோகிணிநக்ஷத்திரத்தில் பிரவேசித்தாலும் மழையைமாத்திரம வளரச்செய்யா திருக்கவும் மாதமும்மாரி பொழியவும துஷ்டாளிடஞ் செல்லவும் இஷ்டர்களை ரட்சிக்கவேணுமென்று வரம்பெற்றுக் கொண்டு உச்சினி பட்டணம்வந்து சேர்ந்தார அக்காத்தாரையர்ம்மழை பொழிபக்கண்டு மனமகிழ்ந்து வாழ்ந்தார்கள் விக்கிரமார்க்கராஜன் அவரைப்போல லோகோபகாரமுமபிரான அக்ஷபமும் அவர்களாகிய ஆசையில்லாமையும் தன்னுயிர்போல் மன்னுயிரைக்காக்கும் வலலமையும் உமக்குண்டாயிருக்குமாகில சிங்காதனமேறலாமென்று இருபத்துமூன்றும்படி பதுமைசொல்லக்கேட்டு போஜராஜன் தலையிரங்கிக்கொண்டு தன்னுடைய அரண்மனைக்குப்போயச்சேர்ந்தான.

இருபத்துமூன்றும்படிப்பதுமைகதை முற்றிற்று

இருபத்துநான்காம்படிக்குகாவலாகிய

சுரசுலீலைபுரியும் மரகதவல்லிப்பதுமைகதை

மறுநாட்காலமே போஜராஜனெழுந்து மங்கள்ஸ்நானஞ் செய்து மலர்கொண்டு சூரியனைப்பணிந்து மாதவர்முதலிய ஆதுலர்க்குதானதருமங்கள்பண்ணி மந்திரிபிரதானியர்முதலிய நால்வகைசேனைகளுஞ் சூழ்ந்துவருமபடியாய்வந்து சிங்காதனமேறத்துணிந்தபோது இருபத்துநான்காமபடிக்குக் காவலாகிய பதுமைபார்த்து ஓ போஜமகாராஜனே கேளுமென்று சொல்லத்தொடங்கிற்று ஐயா அரசேமுதற்படி முதலநாளிருக்கிற படிவரைக்கும் காவலாயிருக்கும் பதுமைகள்சொன்னசங்கதிகளை மனதில்வைத்தீரா யோசித்துப் பார்த்தீரா செவ்வையாய் நிதானித்திருப்பீராகில மறுபடியும் இந்தச்சிங்காதனத்

தினிடத்தில் வராமாட்டீரே நீ யோசிக்க வில்லைபோலு மிருக்கிறது ஆ
ஆ அரசனே இதென்னவாச்சரியம் எங்களிராஜனுடைய தயாளகுண
த்தை சொல்லுகிறேன் கேளும் எங்கள்விக்கிரமார்க்கராசன இந்தச் சி
ங்காசனத்திலிருந்து நீதிதன்றுமல நெறிமுறைதப்பாமல் சத்தியவா
னுகத்துரைத்தனஞ்செய்துவரும்போது காடாருமாதம அனுபவிப்பத
ற்கு காலநேரிட்ட படியாலதான் புறப்பட்டு காடகத்துக்குப்போய்சந்
தோஷத்துடன்காலங்கழித்துவருங்காலத்தில் ஒருநாள் தெய்வலோகத்
தில் தேவேந்திரன்சபை கூடியிருக்கும்போது தவரிஷிகள்முதலியமு
னிவர்களைப்பார்த்து ஐபாவையமென்று சொற்கமதிய பாதாளத்தில்
ஈவிரக்கம பசியாதாபம பூததயவு பண்ணிய நீதிபொருளை புக்தியுத்
தி இவைமுதலியதுமுடைய அரசர்கள்பாராகிலும் இருக்கிறார்களா
வென்று தேவேந்திரன்கேட்க அவர்களசொன்னது ஆண்டவனாகிய
ஐயனேகேளும் பூலோகத்தில் விக்கிரமார்க்க மகாராசனென் றொருவ
னிருக்கிறான் அவனுக்குமிஞ்சியபேர்களொருவருமில்லையென்று முனி
ஈஸ்வராள் சொல்ல அதைக்கேட்டு காமதேனுவையழைத்து நீபூலோ
கத்துக்குப்போய் விக்கிரமார்க்கராசனுடையமேன்மைக்குணத்தை ய
றிந்துவாவென்றனுப்ப அப்படியே காமதேனு பூலோகத்திற்குவந்து
எங்களவிக்கிரமார்க்கராசன் திரிகிறநாட்டுக்குச்சமீபத்தில ஒருசேற்றி
ல்காலைபுதைத்து அவதிப்படுவதைப்போலிருக்க அதனுடைய துன்ப
த்தை எங்களிராசன்கண்டு அதிசீக்கிரத்திலேயோடி அந்தப் பசுவைப்பி
டித்துத்தூக்கி வெளியே கொண்டுவந்து தண்ணீர்தடாகத்தில் குளிப்
பாட்டி தன்னுடையபீதாம்பரவஸ்திரத்தால்துடைத்து பசுவுக்குவாயி
ரைகொடுத்து பக்ஷமாய்நிற்கும்போது அகோதாரைகாரையாய்மழை
பொழியக்கண்டு தன்னுடையஉத்தரியத்தைமடித்துமேல்போட்டு ஒ
ருதுளிமழை அந்தப்பசுவின்பேரில் விழவொட்டாமல் காத்துரட்சித்
தார் அப்பால் அந்தப்பசுவானது சந்தோஷமடைந்து தன்னுருவங்கொ
ண்டு விக்கிரமார்க்கவேந்தனுக்கெதிர்நின்று ஓஓ ராசனே தெய்வலோ
கத்தையாளும் தேவேந்திரராசன உமதுநற்குணங்களை விசாரித்துவர
சொல்லி என்னையனுப்பிவைத்தார் அதற்காகநான்வந்தேன் நானகாம
தேனுவாக்கும உன்னுடையநிலைமுதலிய நன்னெறியைச்சோதித்துப்
பார்த்தேன் திரிலோகத்திலும் உனக்குமிஞ்சிய தயாளுருள் ஒருவ
ருமில்லை ஆகையால நானுமப்பாயவருகிறேன உமக்குவேண்டியவரத்தை
க்கேளும் தருகிறேனென்று காமதேனுசொலல அரசன்வணங்கி அம
மா உன்னைக்கண்டு தரிசித்தவரமே எனக்குபோதுமென்று ராசன்சொ
ல்ல உடனே அந்தக்காமதேனுவானது சந்தோஷமடைந்து தன்னைப்
போல ஒருபசுவைசிருஷ்டித்துக்கொடுத்து என்னைப்பார்த்தாற்போல
நீரிதை வைத்துக்கொள்ளுமென்று கொடுத்துவிட்டு விடைபெற்றுக்
கொண்டுவிண்ணுலகத்துக்குச்சென்று இந்திரர்முதலிய பேர்களைக்க
ண்டு இவ்விடத்தில் நடந்தசங்கதிகளையெல்லாஞ்சொல்ல தேவேந்திர
னுந் தேவரிஷிகளுங் கேட்டு ஜெயங்கூறி விக்கிரமார்க்க மகாராசனுக்
கு நினைத்தகாரியங்களெல்லாங் குறைவில்லாமல முடியக்கடவதென்று
ஆசீர்வதித்து புஷ்பமாரிபொழிந்தார்கள் இப்பால் விக்கிரமார்க்கமகாரா
சன் அந்தக்காமதேனுவினால் கொடுக்கப்பட்ட பசுவைவாங்கிகொண்

டு வரும்போது வழியில் ஒருயேழைப்பிராமணன் ஓர் சிறிய குறுத்துக்
குழந்தையைக் கையிலெடுத்துக்கொண்டு வழியேபோகும்போது இந்
திராசன் அந்தப்பிராமணனையழைத்து இந்தக்குழந்தைஉமதுபெயரெ
ன்ன நீரெங்கிருந்துவருகிறீர் சொல்லுமென்று கேட்க அந்தப் பிராம
ணன் கண்ணீர்சொரிந்துஐயா நான்மகாபாவி என்பெண்சாதியும் நானு
ம்மனதுபிரியாமையாய் வாழ்ந்துக்கொண்டுவருநாளையில் பிள்ளை யில்
லாமல் மெத்தவும்வருந்தி தெய்வானுகூலத்தால் இந்தப்பிள்ளைபிறந்த
து இதுபிறந்தஆறுநாள் என்பெண்சாதியிறந்தாள் அதுமுதல் நாலு
மாதகாலமாய் இந்தக்குழந்தையையெடுத்துக்கொண்டு வருந்தித்தியக்கு
றேன் இதுவோ அன்னப்பால்குடிக்கமாட்டாது நல்லபசுவின் பால்கொ
டுத்தால் பிழைக்கும் பசுவாங்குவதற்கு எனக்குப் பணமில்லைநானோ
ஏழைபாலிந்துவார்த்து வரலாமென்றால் ஒருநாளைப்போல்யார்கொ
டுப்பார்கள் இப்படியிருக்கிறதென்னுடைய வருத்தமென்று சொல்ல
வே தனக்கு காமதேனு கொடுத்தபசுவை அந்தப் பிராமணனுக்குக்
கொடுத்து அனேகதிரவியமுங் கொடுத்தனுப்பிவிட்டுத் தன்னுடைய
உச்சினிபட்டணம்போய்ச்சேர்ந்து சுகமாக வாழ்ந்திருந்தா ராகையால்
பெறுதற்கருமையாகிய பொருள்களை லட்சியம்பண்ணாமல் பரவுபகார
மாய்கொடுத்து ரட்சிக்குந்தயாளுவாகிய எங்கள் விக்கிரமார்க்கராசனை
ப் பால்நேரும் நற்குண முடையவராயிருந்தால் இந்த சிங்காதன மேற
லாமென்றுபதுமைசொல்ல அந்தவார்த்தையைக் கேட்டு போசராசன்
வெட்கித்தான் வீடுபோய்ச்சேர்ந்தான்.

இருபத்துநான்காம்படிப்பதுமைசொல்கதை முற்றிற்று.

இருபத்தைந்தாம்படிக்குக்காவலாகிய.

கற்பகவல்லிபதுமைசொல்கதை.

மறுநாட்காலமே போசராசன்எழுந்து ஸ்நானசந்திசெபதபமுத
லிய கருமங்களை முடித்துக்கொண்டு தொழுங்கடவுளைத்தொழுதுகே
யூரகுண்டல மணிமகுடம் பீதாம்பரம்முதலிய அலங்காரங்க ளெல்
லாந் தரித்துக்கொண்டு நற்குணம்பார்த்து பிராமணர் முதலிய பேர்க
ளுக்கு தானதர்மபரவுபகாரமுநடத்தி கட்டியர் பட்டுவான்கள் மந்திரி
சாமந்திரி மகுடவர்த்தனர் பட்டவர்த்தனர் முதலிய பேர்களெல்லாம்
இஷ்டமாய்நெருங்கிவர பத்துபேர்சுமக்கும் முத்துப் பல்லக்கிலேறிக்
கொண்டு பரதநாட்டிய கன்னியராட சங்கீதம்பாட சித்திர விசித்திர
மாகிய சிங்காசனத்தண்டையிலவந்து தினர்கண்டசெம்பொருள்போலு
ம நியர்தபயிர் மழைகண்டதுபோலும் மைந்தனைப்பெற்ற மலடியின்ம
கிழ்ச்சிபோலும் இனறைக்குச்சிங்காதனமேறலாமென்று பல்லக்குவிட்
டிறங்கு சிங்காசனத்தைவணங்கிப் பணிந்து இணங்கி எழுந்து மனந்
துணிந்து சிங்காசனமேறிப் போம்போது இருபத்தைந்தாம்படிக்குக்
காவலாகிய பதுமையெழுந்துநகைத்து ஓ போசமகா ராசனேகேளும்
எங்கள் விக்கிரமார்க்கராசன் இந்தச்சிங்காதனம்மேறி அரசு செலுத்தி
தன்னுயிர்போல் மன்னுயிரை காப்பாற்றி வரும்போது தருமமும் நா
லுபாதத்துடனடக்கவும் வருணாச்சிரமதருமந்தப்பாதிருக்கவும் சிறியோ
ர்பெரியோரைப் பணிந்து வாழ்த்திப்போற்றவும் தேவாலயம விஷ்ணு
வாலயம் சிறக்கவும் தீவினையாகிய சத்துருக்கள் பறக்கவும் மாதமும்மா

ரிபொழியவும் மாந்தர்க்கு வியாதிகளெல்லாம் ஒழியவும் வாயிடும்
புக்காரரழியவும் காடாறுமாதம் நாடாறுமாதமிருந்து நீதிசெலுத்தி
செங்கோற்கோணுமலாளுவந்தார் அந்தக்காலத்தில் சக்ரபுரியென்னும்
பட்டணத்தை ஆண்டுகொண்டிருந்த தாரியவர்மனென்னும் ராசன்பா
ம்புகடித்திறந்தானென்றும் அவனுடைய பெண்சாதி அக்கினிக்குழியி
ல் விழப்போகிறாளென்று வேதாளத்தால் சமாச்சாரந் தெரிந்துகொ
ண்ட எங்கள் விக்கிரமார்க்கராசன் அந்தப்பட்டணத்துக்குப்போய் அ
க்கினியில்விழப்போகிற அவ்வரசன்பத்தினியைக்கண்டுசங்கதிவிசாரித்
துகவலதம்மா சற்றுநேரத்தில்உன்புருஷனெழுந்துவரும்படிசெய்வோ
ம் அதுவரைக்குமநீர் மனமபொறுமென்றுநிறுத்தி உச்சினி யோங்கா
ளி தனக்குக்கொடுத்திருந்த மாத்திரைக்கோலை எடுத்திறந்துகிடக்கின்
றவன்மேலிற்றட்டிஎழுப்பி அவனுடைய பத்தினிகையிலொப்பிவைத்
தார் உடனே அவர்களிருவரு மிவரைப்பணிந்து எங்கள் குலதெய்வ
மேயென்று உபசரித்து நாடுநகர்களையெல்லாம் மிவருக்குத்தத்தஞ்செ
ய்தார்கள் அவைகளைப்பெற்றுக்கொண்டு மறுபடியும் அந்தராசனுக்கு
பட்டங்கட்டிவைத்துவிட்டு அதுவேகதியாயக் காட்டுக்குப்போய் சம
புஞ்ரியமென்னும் ஒருநகரத்தைக்கண்டு அந்தப் பட்டணத்துக் குள்
ளாகப்பிரவேசித்து அவ்விடத்திலோராளின்ற ஒருகோயிலும் நீராழிம
ண்டபமுமுடைய பெரிய தடாகமும் ஆயிரக்கால மண்டபமு மிருக்கக்
கண்டு அந்தப் பட்டணத்திற்போயிருந்து தேவஸ்தானத்தில்நித்தியபூ
சை பஞ்சதாமங்களினுச்சவம் பிரம்மோச்சவமுதலிய சம்பிரமங்களைவி
சாரித்துக்கொண்டு அதற்கு வேண்டிய உபகரணங்களெல்லாந் தனனு
ற் கூடியவரையிலுஞ் செய்து மனமகிழ்ச்சியுடையவராய்த் திரும்பும்
காலையில்ஒரு ராசபுத்திரனைப் பின்கட்டாகக்கட்டி நாலுபேரிழுத்துக்
கொண்டு வந்தார்கள் இந்தராசகுமாரனை எங்கள்விக்கிரமார்க்கமகாரா
சன்கண்டு இவரார் இவரையேன் கட்டிக்கொண்டு வந்தீர்கள் இவனு
டைய விர்த்தாந்தத்தைச் சொல்லுங்களென்று சேவகரைக்கேட்கஅவர்
களிவரைவணங்கி ஐயாராஜபுத்திரனே இந்தமகாராசன் கேட்கிறகேள்
விக்கு உத்தரவுசொல்லுமென்றுசொல்ல அப்போ தந்தராசகுமாரன்
வணங்கிகண்ணீர்விட்டழுது ஓசுவாமி தேவரீர் இன்றென்றனக்கு
த் தெரியவில்லையே கொஞ்சந் தெரிவிக்கவேணுமென்று ராசபுத்திரன்
கேட்க அதற்கெங்கள் விக்கிரமார்க்கன் காடாறுமாதங் கழிப்பதற்கா
க வந்தேன் உன்னுடைய சேதியையபிஷேகஞ்செய்துவைத்துதானும்
ஸ்தானம்பண்ணி நைவேத்தியம்வைத்து சந்நிதிக்கெதிரிலவாநின்று
தன்தலையைவெட்டிமாகாளிபக்கத்தில் வைப்பதற்குத்தேசித்துக்குறிப்
பு முதலியதும் பார்த்துக்கொண்டு மந்திரவாளையுருவி வெட்டிக் கொ
ள்ளும்போது ஆங்காரியாகிய ஓங்காளிபிரசன்னமாய்யோடிவந்து
விக்கிரமார்க்கனுடையகையைப்பிடித்துக்கொண்டு அப்பனே இந்தா
நானிப்பால்வந்துவிட்டேன் இதிலிருக்கும பாக்கியங்களைஎல்லாம்நீயே
ஒப்புக்கொள்ளென்று வேண்டியவரங்கொடுத்துப்போய்விட்டாள் இ
ப்பால் வேதாளத்தைக் கண்டு புதையாக இருந்த திரவியங்களை யெல்
லாமெடுத்து அகிலசிங்காரவீரனென்னும் ராசனுக்குக் கொடுத்து அ
வன் புத்திரன் பத்தினியுடன் வழிபட்டு வாழும்படியாக மேலேறிக்

கொண்டு உச்சிடத்திற்கனுப்பி மாறுபாட்டால் என்னைத் தோக்கச்
செய்து என்னுடையநாடு நகரங்களுமெல்லாம் பிடுங்கிக்கொண்டு
பெண்சாதிபிள்ளைகளைப் பிடித்துக்கொண்டு என்னை இந்த சம்புசூரிய
னென்னுங் கோயிலிற்கொண்டுவந்தடைந்து விடும்படிக் கனுப்பிவைத்
திருக்கிறார்கள் என்னுடையசேதி இப்படியிருக்குது என்தெய்வமே
என்னைக் காப்பாற்றவேணுமென்று இறைந்து அழும்போது விக்கிர
மார்க்கராசன அந்தராசகுமாரனுடையகட்டுகளையவிழ்த்துவிடச்சொ
ல்லி அவனையழைத்துக்கொண்டு அவனுடைய நகரம்போய்ச் சேர்ந்து
இவனுக்குப்பகையாளிகளை எல்லாமவரவழைத்து மறுபடியும் சதுர
ங்காடச்செய்ய வேதாளத்தின் சகாயத்தில இந்த ராசனைஜெயிக்கப்ப
ண்ணி அந்தராச்சியத்தை அவனுக்கேகொடுத்து மற்ற சத்துருக்களை
எல்லாம்பார்த்து இதென்னுடைய நகரம் இதிலிந்த சிங்காரவீரனென்
னும்ராசனை பட்டங்கட்டிவைத்திருக்கிறேன் நான் விக்கிரமார்க்கன் நீ
ங்களென்னசொல்லுகிறீர்கள் பகைத்து சண்டைபோட வருகிறீர்களா
உங்களெண்ணமென்னவென்று விக்கிரமார்க்கனைகேட்க அவர்க ளெல்
லாம் மண்மேல்விழுந்து புரண்டழுது ஆண்டவனே உம்முடனெதிர்
த்தபேர்கள் உலுத்தனைப்போலழிந்து பொன்னைப் பொருளையிழந்து
போவார் ஆகையால்நீர் இருமுகவிலங்களுக்குத் தெய்வம்போலிருந்து
எங்களெல்லாரையுமாட்சியும இதுமுதல்நாங்கள் பகையில்லாமற்கலந்
துவாழ்கிறோமென்றுவணங்கிப்பணிந்து சிங்காரவீர ராசனுடன்கூடி
போசனமுதலிய நடமுண்டு தாங்கள் தங்களிடம்போய்ச் சேர்ந்தார்கள்
இப்பால் எங்களவிக்கிரமார்க்கராசன்சம்புசூரியனென்னுந் தலத்துக்கு
வந்து இந்திரசித்தென்னுமொரு மலைமீதேறி அவ்விடத்தில் சூழ்ந்து
பார்க்கும்போது ஒருமகாகாளியுடையகோயிலும் எட்டு வைரவமூர்த்
திகளிருக்காலுமாகவிருக்கக்கண்டு இதென்னவெழுதியிருக்குதென்று
வாசித்துப்பார்க்கையில் இந்தப்பராசத்தியின் பீடத்தில வேண்டிய ச
ம்பத்துகளிருக்குது இதைப்பாக்கியம்பெறவேணுமென்றபேர்கள் தன்த
லையாவது ஒருவன்தலையாவது வெட்டி உதிரபலியிட்டால் அவர்களு
க்குக்கிடைக்குமென்று எழுதியிருக்கப்பார்த்து இனி ஒருவனரஎங்கே
தேடுவது மனனறுகிடைக்காமே பலியாவோமென்று மாகாளிக்கு சொல்
லென என்னுண்டவனேநான் புனிதனுமேனன் எனக்கினிப் பயமில்லை
என்னுடைய நல்லகாலம காரியணரைப்போல்வந்து கிடைத்தியெ
ன்று மனமகிழ்ந்து உவகைகொண்டு சொல்லத்தொடங்கினன விக்கி
ரமார்க்க ராசனேகேளும் இராச கேந்திரத்தில வாழும படியாகிய சிங்
காரவீரனென்னும ராசன்என்பேர் எனக்கு சத்துருக்கள் வெகுபே
ருண்டு அவர்களுக்கிடங்கொடுக்காமலிருந்து வாழ்ந்துகொண்டு வந்
தேன் அவர்களானமட்டும் பார்த்து ஏதேது இவனை ஜெயிக்க முடியா
தென்று ஒருமந்திரஞ்செய்தார்கள் அதாவது சதுரங்க மாடுகிறதில்
மெத்தக்கெட்டிக்காரன் எனக்கு யிந்தினபேர்களொருவருமில்லை
அப்பேர்ப்பட்ட என்னை சதுரங்கமாடலாமவாருமென்று என்சத்
துருக்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஓர் பிராமணனை எண்ணி

லென்னுடைய நற்காலம் நாராயணனைப்போல்வந்து கிடைத்தீரென்று மனமகிழ்ந்து உவகைகொண்டு சொல்லத் தொடங்கினன் அக்கிரமத்தையழித்து சுக்கிரமத்தைசிறுத்தி எக்கமஞ்செலுத்திய விக்கிரமார்க்க ராசனே கேளும் ராமகேந்திரத்தால் வாழும்படியாக சிங்காரவீடு அவர்களுக்கு இடங்கொடுக்காமலிருந்து வாழ்ந்துக்கொண்டுவந்தேன் அவர்களாலானமட்டும் பார்த்து ஏதேது இவனைச்செயிக்க முடியாதென்று ஒருதந்திரஞ் செய்தார்கள் அதாவது நான் சதுரங்கமாடுகிறதில் மெத்தகெட்டிக்காரன் எனக்குமிஞ்சினபேர்கள் ஒருவருமில்லைஅப்பேர்ப்பட்டஎன்னைச்சதுரங்கமாடாமல்வாருமென்றுஎன்சத்துருக்களெல்லாம் ஒன்றாகச்சேர்ந்து. ஒருபிராமணனை என்னிடத்திற்கனுப்பிமாறுபாடாய் என்னைத்தோர்க்கச்செய்து என்னுடையநாடுநகரங்களைஎல்லாம் பிடுங்கிக்கொண்டு உன் பெண்சாதி பிள்ளைகளையும் பிடித்துக்கொண்டு என்னையிந்தச் சம்புசூரிய னென்னுங் கோயிலிற் கொண்டுவந்து அடைத்துவிடும்படிக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்னுடைய செதி இப்படி யிருக்குது என்தெய்வமே என்னைக் காப்பாற்றவேணுமென்று உரைத்து அழும்போது விக்கிரமார்க்கன் அந்தராசகுமாரனுடையகட்டுகளை அவிழ்த்துவிடச் சொல்லி அவனை யழைத்துக்கொண்டு அவனுடையநகரம்போய்ச் சேர்ந்து இவனுக்குப்பகையாளிகளையெல்லாம் வரவழைத்து மறுபடியுஞ் சதுரங்கமாடச்சொல்லிவேதாளத்தின்சகாயத்தால் இந்தராசனைக் கெலிக்கப்பண்ணி அந்தராச்சியத்தை அவனுககுக்கொடுத்து மற்றசத்துருக்களைஎல்லாம்பார்த்துஇதுஎன்னுடையநகரம் இதிலிந்தச்சிங்காரவீரனென்னும்ராசனுக்குப்பட்டங்கட்டிவைத்திருக்கிறேன்நான்விக்கிரமார்க்கன் நீங்களென்னசொல்லுகிறீர்பகைத்துச் சண்டைபோடவருகிறீர்களாஅல்லதுநகைத்துகலந்துவாழ்ந்துசப்பணங்கட்டிவருகிறீர்களாஉங்களெண்ணமென்னவென்றுவிக்கிரமார்க்கன்கேட்க அவர்களெல்லாம் மண்மேல்விழுந்து புரண்டழுது ஆண்டவனேஉம்முடனெதிர்த்தபேர்கள் உளுத்தபயிர்போலழிந்துபொன்னைப்பொருளையிழந்துவிடுவார்கள் ஆகையால்நீ இன்றுமுதல் எங்களுக்குக் குலதெய்வம்போலிருந்து எங்களெல்லாரையும்ரட்சியும் இதுமுதல் நாங்கள் பகையில்லாமற் கலந்து வாழ்கிறோமென்று வணங்கிப்பணிந்து சிங்காரவீரராசனுடன்கூடி போசனமுதலியதுண்டு தங்கள்தங்களிடம்போய்ச்சேர்ந்தார்கள் இப்பால் எங்கள்விக்கிரமார்க்கராசன் சம்புசூரியனென்னுந்தவத்துக்குவந்து இந்திரசித்தனென்னும் ஒருமலைமீதேறி அவ்விடத்திலிருந்து பார்க்கும்போது ஈருமாகாளியுடையகோயிலும் எட்டுவயிரமூர்த்திகளின் காவலுமாக யிருக்கக்கண்டு இதென்னவென்று யோசிக்குங்காலத்தில் அவ்விடத்திலொருபாறையிலெழுதியிருந்தது இதென்ன எழுதியிருக்கிறதென்று வாசித்

துப்பார்க்கையில் இந்தப்பளுசத்திபின்பீடத்தில் வேண்டிய சம்பத்துகளிருக்குது இந்தப்பாக்கியம் வேணுமென்றபேர்கள் தன் தலையாவது ஒருவன் தலையையாவது வெட்டி உதிரம் பலியிட்டால் அவர்களுக்குக் கிடைக்குமென்று எழுதியிருக்கப்பார்த்து இனி ஒருவரை எங்கே தேடுவது மன்னனாகியநாமேபலியாவோமென்று மாகாளிக்கு அபிஷேகஞ் செய்துவைத்து தானம் ஸ்நானம்பண்ணிநைவேத்தியம்வைத்து சந்நிதிக்குள் திரிலேவந்துநின்று தன் தலையை வெட்டி மாகாளி பாதத்தில் வைப்பதற்கு உத்தேசித்து குறிப்புமுதலியதும் பார்த்துக்கொண்டுமந்திரவாளையுருவி வெட்டிக்கொள்ளப் போம்போது மாகாளியாகிய ஓங்காளிதேவி பிரசன்னமாயோடிவந்து விக்கிரமார்க்கனுடைய கையைப் பிடித்துக்கொண்டு அப்பனே இதோநானிப்பால்வந்துவிட்டேனிதிலிருக்கும்பாக்கியங்களை எல்லாம் நீயே ஒப்புக்கொள்ளென்றுவேண்டிய வரமுங் கொடுத்துப்போய்விட்டாள்.

இப்பால்வேதாளத்தைக்கொண்டு புதையலாக யிருந்ததிரவியங்களையெல்லாமெடுத்து அந்தச்சிங்காரவீரனென்னும் ராசனுக்குக்கொடுத்து அவன்புத்திரன் பத்தினியுடன்வழிபட்டுவாழும்படியாகச்செய்து தானும் வேதாளத்தின்மீதேறிக்கொண்டு உச்சினிபட்டணம் வந்துசேர்ந்துவாழ்ந்தார் இப்பேர்ப்பட்ட திடகாத்திர குணமும் பரோபகாரமும்உம்மிடத்திலிருக்குமாகில் இந்தச்சிங்காதனமேறலாமென்றுஇருபத்தைந்தாம்படிப் பதுமைசொல்ல போசராசன்கேட்டு வெட்கமுற்றுத் தலையிறங்கிபடியிறங்கித் தன்னரண்மனைக்குப்போய்விட்டான்.

இருபத்தைந்தாம்படிப் பதுமைசொல்கதை-முற்றிற்று.

இருபத்தாறும்படிக்குக்காவலாகிய

அமுர்தவல்லிப் பதுமைசொல்கதை.

மறுநாட் காலமே போசராசனெழுந்து நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு சோடசமகாதானங்கள்செய்துசிங்காதனத்தண்டைக்குவந்து பூசை நைவேத்தியங்களும் புரிந்து பெரியோர்களுடைய ஆசீர்வசனங்களைப்பெற்று சிங்காதன மேறும்போது இருபத்தாறும் படிக்குக் காவலாகியபதுமை எழுந்துவந்து போசராசனே நேற்றையதினம் இருபத்தைந்தாம்படிப்பதுமைசொல்லியதன்மைகளைமறைத்து இன்றைக்கிப்படியேறவந்தீர் ஆசைவெட்கமறியா தென்பதுபோலிருக்கின்றது ஆகிலும் எங்கள் விக்கிரமார்க்கராசனுடைய வுதாரகுணத்தைச்சொல்லுகிறேன்கேளும் எங்கள்விக்கிரமார்க்கராசன் மேதினியாளும்போது திங்கள் மும்மாரி பொழியவும் எங்கும் மங்கள சம்பிரமம் நடக்கவும் தேசங்கள்செழிக்கவும் பூசைகள் தழைக்கவுஞ் செங்கோல் செலுத்திவந்தார் அந்தக்காலத்தில் ஆசுமதுரம் சித்திரவித்தார முதலிய நாற்கவி பாடவும்காவலனொருவன் காடெல்லாந் திரிந்து வறுமையால்மெலிந்து

உச்சினி பட்டணத்துக்கு வந்து விக்கிரமார்க்கராசனைக் கண்டு வாழ்ப்பாவாகிய வண்ணப்பாமுதலிய வெண்பா குறப்பா கொச்சகப்பா தாழிசைப்பா சந்தப்பாவிருத்தப்பா வெல்லாம்பாடிப் பிரசங்கித்து ஐயா நான்பிறந்தநாள் முதலியவரையிலும் என்னைவிட்டுநீங்காதிடஞ் செய்துக்கொண்டிருக்க கலியனென்பவன் தங்கள்சமுகம்நோக்கிவரும்போது என்னைவிட்டுவிட்டோடினான் அவன்மகா துன்மார்க்கன் இன்னம் ஆரையாகிலும்பிடிப்பான் அவனை இவ்வுலகத்திலாரையுந் தொடாமற்றெண்டிக்கவேண்டுமென்றுசொல்ல அந்தவார்த்தையைக் கேட்ட எங்களிராசன் உலகத்தில்தரித்திரமென்னும்வியாதியிலகப்பட்டவராரோ அவர்களெல்லாம் வருகிறதென்று பறையறைவித்து அவர்களுக்குவேண்டியபாக்கியங்கள்கொடுத்து முதல் வித்துவானுக்கும் சரித்திரமங்களசுபயோகமுண்டாகி இந்திரபோகமனுபவிக்கும்படிவைத்தான் அப்போது மற்றவித்துவான்களெல்லாம் அரசரைப்புகழ்ந்து அவர்களிஷ்டப்படி கற்பனையலங்கார வித்தவஞ்சொல்லி ஓ ஓ அரசனே யமுனாநதிக்குவடக்கே புஷ்பபுரியென்றொருபட்டணமுண்டு அந்தப் பட்டணத்தை யாளுகிற இராசாதிராசனென்பவன் வசந்ததியாகம் பண்ணுகிறேனென்று துசங்கட்டி வித்துவான்களை யெல்லாஞ் சேர்தது அவர்களுடையவித்துவத்திறத்தையும் ஜாதிசமயஆசாரங்களையும்பாராமல்குடியன் வெறியன் முறியன் எல்லாரையும் ஒன்றாகச்சேர்த்து வருதன்மையில்லாமையால் பரிசுகொடுத்தான் நல்விநிலந் தெரியாதாகையால் யாவரும் அவனையிகழ்ந்து உம்மைப்புகழ்ந்தார்கள் அப்போதுராசாதிராசன் உம்முடையகீர்த்தியை மெத்தவுங்கொண்டாடினரென்றுவித்துவான்களெல்லோரும்விளம்பிவிடைபெற்றுக்கொண்டுபோனார்கள் அப்பாற்றினசரிகணக்கு ஒப்பிவைக்காநின்ற காரியத்தலைவர்வந்து விக்கிரமார்க்கராசனைப்பணிந்து ராசாதிராசனே ராசகெம்பீரனே இன்றையதினம் வித்துவான்களுக்குக்கொடுத்ததிரவியம் ஐம்பதுலட்சம்பொன் செலவாச்சுதென்று கணக்குக்கொடுத்தார்கள் அதைக்கேட்டுஅரசன் மெத்தவுஞ்சந்தோஷமடைந்து அந்த.காரியஸ்தருக்கு நல்ல வெகுமானஞ்செய்து இப்படியே தினமானம் வித்துவான்களுக்குக் கொடுத்து கணக்குச்சொல்லுங்களென்று கட்டளையிட் டருளினர் ஆதலால் இப்பேர்ப்பட்ட உதாரகுணசீலத்தாருக்குக் கொடையாளாகிய பேர்களெவர்களோ இவர்களை இச்சிங்காதனந் தாங்குமென்று இருபத்தாறும்படிப்பதுமைசொல்லலட்சாலட்சங்கொடுக்கும் போசராசன்நானதற்கிடல்லவென்றினைத்து ஏங்கி அரண்மனைக்குப்போய்விட்டார்.

இருபத்தாறும்படிப் பதுமைசொல்கதை முற்றிற்று.

இருபத்தேழாம்படிக்குக்காவலாகிய

சிவசிவாக்கியவல்லிப்பதுமைகதை.

மறுநாட்காலமே போசராசனெழுந்துஸ்நானசந்தி செபதபமுடித்துக்கொண்டு தானதர்மங்களுஞ்செய்து இன்றைக்காவது சிங்காதன

மேறுவோ மென்று போனபோது இருபத்தேழாம்படிப் பதுமையா
னது போசராசனைத்தடுத்து ஐயாஎங்கள்விக்கிரமார்க்கராசன் ஒருநா
ள்மந்திரிப்பிரதானி சேனுபதி ஆசாரியர்பிராமணுள்முதலியரூடிபடை
க்காவற்காரர் பெரியோர் யாவருஞ் சூழ் திருக்கும்போது கங்காஸ்நா
னத்திற்குப் போகவேணுமென்றுபோய் கங்கையில்முழ்கி விஸ்வேசர்
விசாலாட்சி காளபயிரவர்முதலிய ஸ்தலங்களெல்லாந் தரிசித்துக்கொ
ண்டு ஒருபெரியசோலையி லிறங்கி யிருந்தார்கள் அப்போது இந்திரஜா
லம் மயேந்திரஜாலந்தெரிந்த ஒருவன்வந்து விக்கிரமார்க்கமகாராசனை
க்கண்டு அரசனேதேவரீர் அணிமாகிரிமாமுதலிய அறுபத்து நான்கு
கலைக்கியானமுந்தெரிந்த உத்தமராகையால் தேவரீரிடத்திற்றுன் என்
னுடைய அருமையைக் காட்ட வேணும் மற்றோரிடத்திற் காட்டினுல்
என்னருமையை அறியமாட்டார்களென்றுசொல்லி இதோ வருகிறே
னென்றுபோய்விட்டான் இவனுரிவன்பயித்தியக்காரனு யிருக்கிறுனெ
ன்று யாவரும் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு சித்தபுருஷன்வெ
ள்ளைக்குதிரைமே லேற்றிக்கொண்டு சீதேவிக் கொப்பாகிய ஸ்திரீயுட
ன்வந்துஅரசனுக்கெதிரிலிறங்கி நமஸ்கரித்து சகலவித ஆயுதங்களுட
ன்நின்றுன் நீயாரப்பா வென்று அரசன்கேட்க ஐயா நான் பாக்ஷாவி
னிடத்திலிருக்கின்ற பதினுயிரங்குதிரைக்குச் சர்தார் வெகு காலமாய்
அவ்விடத்தி லிருந்தேன் இப்போ தவர் என்பேரிற் கோபமாய் உத்தி
யோகம்நீக்கிவிட்டார் உங்களுடையபேரும் பிரக்கியாதியுங் கேட்டுவந்
தேன் நானும் என்பெண்சாதியும் நாங்களிரண்டுபேர்தவிர வேறில்லை
என்னையேதாகிலும் ஒருஉத்தியோகத்தில்வைத்துக்கொண்டு ரட்சிக்க
வேணுமென்றுவணங்கினுன் அப்போது இவனைப்பார்த்து இவன் நல்
லசிப்பாயென்று சந்தோஷித்துக்கொண்டிருக்கும்போது வடதிசையி
லிருந்து பதினுயிரங்குதிரைகளுடன் மண்ணும்விண்ணும் ஒண்ணுகும்
படிபகைவர்வந்து விக்கிரமார்க்கராச னெங்கேயென்று தேடுகிறுர்கள்
அந்தச்சேதி யானறிந்து நமக்கேதுபகைவர் இதென்னஆச்சரியமாயி
ருக்குதென்று யோசித்திருக்குங்காலையில் எதிர்நின்றசுத்தவீரன்பணி
ந்து ஐயா இந்தப்பகைவர்பேரில் என்னையனுப்பினுலவர்களைக் கரணை
யாடி வருகிறேனென்றுன் அந்தப்படியே செய்யன் றாசன் உத்திரவு
கொடுக்க அப்போது தன்பெண்சாதியையரசனிடத்தில் நிறுத்தி மகா
பிரபுவே தாயுந்தங்கையுந் தேவரீருகையால் நான் வருமளவும் என்ப
த்தினியை உமது புத்திரி போல பத்திரமாகக் காருமென்று சொல்லி
விட்டுத் தன்னுடைய குதிரையின்மே லேறிக்கொண்டு வடதிசைபோ
கும்போது சேனைகளெல்லாம் ஆகாயத்தில் வந்துவிட்டது அவர்களை
யெல்லாம் விடாமற் றுரத்திக் கொண்டுபோய் யுத்தஞ் செய்து யானை
த்தலைகளும் உடல்களும் குதிரைத் தலைகளும் வீரருடைய தலைகளு
ம புயல் மடல்களும் வெட்டுப்பட்டுத் திடீரென பூமியில்விழ ரத்தமய

மாய்ப்பொழிய இறைச்சலு முழக்கமு முண்டாயிருக்க இப்படியிருக்கும்போது அங்கிருந்துபோனவீரனுடைய வெள்ளைக்குதிரையும் வீரனும்வெட்டுபட்டு துண்டமிரண்டாகப் பூமியில் விழுந்தான் அதை ராசனிடத்திலொப்பிவைத்திருந்த அந்தஸ்ரீயானவள்கண்டு ஐயோ என் புருஷனுடைய குதிரை இது என்புருஷன் தலையிதுவென்று புரண்டழுது பிழைக்கவந்தவிடத்தில் பெருமோசம் வந்துதே இனிநான்பிராணனை வைத்துக்கொண்டிருக்கமாட்டேன் அக்கினிக்குழியில்வீழ்வேனென்று அக்கினிக்குழி வளர்த்தச்சொன்னாள் அரசனமுதல்யாவரும் மாட்டோமென்றார்கள் அந்தஸ்திரீயானவள் ஆவென்றலறினாள் உடனே ஆகாயபரியந்தம் அக்கினிவளர்த்தினள்புருஷன் இறந்தபாவம்இராசனைசேரக்கடவதென்று அந்தத்தீக்குழியில் வீழ்ந்தெரிந்துபோனாள் அவளுடைய சொல்லைக்கேட்டு மெத்தவுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கும்போது முன்னேபோன சுத்தவீரன் சத்துருக்களை வெட்டிச் செயித்து வெள்ளைக்குதிரையுடன் வந்திறங்கி தான்போய் செயித்த சங்கதிகளைச்சொல்லி சந்தோஷமடைந்தபிற்பாடு என்பெண்சாதிஎங்கேயென்றான் இவ்விடத்தில் நடந்தசங்கதியை ராசன்சொல்லக் கேட்டுநகைத்து அழகாயிருந்தாளே ஆகையால் அவளை நீர் மோசஞ்செய்தீரோவென்றான் இத்தன்மையாகிய சங்கதிகளை யெல்லாந் தெரிந்துக்கொண்ட விக்கிரமார்க்கராசன் மந்திரிபிரதானி முதலியவர்களைப்பார்த்து என்னசொல்லுகிறீர்களென்றுகேட்டார் எல்லோரும்பசபசவென்று முழிக்கிறார்கள் இப்பேர்ப்பட்ட சமயத்தில் பாட்சாவிடத்திலிருந்து ஐயாயிரங்குதிரையும் ஐந்நூறுயானையும் ஐம்பது லட்சம் பொன்னும் முத்துச்சரங்களநேகம் அரம்பாஸ்திரீபோன்ற ஒருஸ்திரீயும் விக்கிரமார்க்கராசனுக்கு காணிக்கைகொடுக்கச்சொன்னாரென்றுவந்தது அவைகளையெல்லாம் விக்கிரமார்க்கராசன்கண்டு கண்களித்து மகிழ்ந்து பாக்ஷாவுக்குமரியாதை சொல்லியனுப்பி விட்டு அந்தக்காணிக்கை முழுமையும் இந்தவீரனுக்குக்கொடுத்து நீ அருமையானவித்தை கற்றுக்கொண்டாயென்றுசொன்னார் உடனே அவன் மகாபிரபுவேயென்றுமுதலிலேவந்த ஏழைப்பயித்தியக்காரனைப்போல்நின்று வணங்கினான் யாவர்களும் ஆச்சரியப்பட்டார்கள் இதுதான் இந்திரசாலமென்னும் வித்தையென்று அவர்களுக்கு அரசன்தெரிவித்தார் அந்தஜாலக்காரனுவுடனே தன்பத்தினியை யழைத்துக்கொண்டு சந்தோஷத்துடன் விடைபெற்றுக்கொண்டுபோனான் இராசனும் மற்றபேர்களும்வுச்சினி பட்டணம்வந்து வாழ்ந்திருந்தார்கள் இப்பேர்ப்பட்ட சூரமும் பத்தியும் ஔதார்யமும் வுமக்கிருக்குமாகில் இந்தச்சிங்காதன மேறலாமென்று பதுமைசொல்ல போசராசன் தலையிறக்கமாய்த் தன்னரண்மனை போய்ச்சேர்ந்தான்.

இருபத்தேழாம்படிப் பதுமைகதை முற்றிற்று.

இருபத்தெட்டாம்படிக்குக் காவலாகிய பூங்காவனப் பொற்பதுமை சொல்கதை.

இருபத்தெட்டாநாள் போசராச னெழுந்து நித்திய செபதபங்க

ளை முடித்துக்கொண்டு வித்துவான்கள் முதலிய பேர்களுஞ் சற்றிலு நிறைந்த மதிவல்லோர்களு நெருங்கும்படிக்குச் சிங்காதனத்தண்டைக்குவந்து புங்கராநுபுங்கமாய்த் தானங்கள்செய்து எங்கோனுகியபுணர்பொல்லாம்புரிந்து தானும் வணங்கும்படியிற்காலோங்கியேறும்போது அந்தப்படிக்குக் காவலாகிய பூங்காவனப் பொற்பதுமை கையைக்கொட்டி கனக்கரகைத்து அண்டையசல்கள் அறியப் படும்படியாய்ச் சொல்லத்தொடங்கியது.

ஓ போசமகாராசனேகேளும் நீர் மகாபிரக்யாதி யுடையவரானுலும் எங்கள் விக்கிரமார்க்கராசனுடைய புகழைப்போல்பெற்றவர் ஒருவருமில்லையாதலால் அவருடைய பெருமையைச் சொல்லுகிறேன் கேளும் இந்தச்சிங்காதனமேறி துரைத்தனஞ்செய்துவருநாளையிலோர்நாள்நான்குதிக்கும் தூதர்களை விட்டு அதிசய மேதாகிலு முண்டாகில் அறிந்துக்கொண்டு வாருங்களென்றார் அதில்கிழக்குதெற்குமேற்கு இந்தமூன் று திசையிலுஞ்சென்றவர் திரும்பிவந்து எங்களாண்டவனே நாங்கள்காணத்தக்க அதிசயமொன்றுமில்லைஎன்கிறார்கள் வடதிசையிற்சென்ற ஒருவன்வந்து வணங்கி ஐயா மகதபுரியென்னும் பட்டணத்தையாளுகிற சோமப்பிரதாபமென்னும் ராசன் தானதர்மம் பரவுபகாரமுதலிய பூசைகளெல்லாஞ் செய்து சதுரங்கசேனையுடன் யானைமேற்பவனிவந்து அரண்மனையிலிறங்கியபோது அரம்பாஸ்திரீகளுக்கொப்பாகிய லட்சம் பெண்கள் முத்தாலாத்தி பவளாலாத்தி அன்னலாத்தி முதலிய நீருலாத்திகளு மெடுத்துவந்து அரசனைச் சுற்றி ஊருக்கு ஈசானியமூலையிற்கொட்டிவிட்டுப்போனார்கள் அவ்விடத்திலென்ன அதிசயமென்று பார்க்கப்போனேன் அங்கே அநேகபூதங்கள்வந்துசாதங்களைத்தின்றுகொழுத்து மற்றரத்தினங்களைக் கைப்பற்றிக்கொண்டு ஒரு ஆலமரத்திலேறிப்போய் விட்டதுகள் அப்பாலெனக்கு ஒன்றுந்தோன்றவில்லையென்று தூதன்சொல்லக்கேட்ட விக்கிரமார்க்கராசனுனவர் பட்டணத்தை பட்டிவசத்தி லொப்பிவித்துப்போட்டு வேதாளத்தை நினைத்து அதன்மேல் ஆரோகணித்துக்கொண்டு வுத்திரதிசையிலிருக்கும் அந்தப் பட்டணத்துக்குவந்து அன்றைக்கு அவ்விடத்தில் நடந்த ஆலாத்திமகுத்துவங்களைப்பார்த்து அந்த ஆலாத்திகொட்டிய ஈசான்யதிசையிற்போயிருக்கும்போது அநேக பூதங்கள் வந்து அந்த ஆலாத்திசோற்றைத்தின்ன முத்துமுதலிய மணிகளைக்கொண்டு போவதை அரசன் கண்டு பின்றொடர்ந்துபோம்போது அந்தப்பூதங்கள் வழியிலிருக்கும் ஒரு ஆலமரத்திலேறி அப்பால் மறைந்துபோனதைக்கண்டு சற்றுநேரமவ்விடத்திலிருந்து வுச்சினிமாகாளியை மனதுட்கொண்டு மந்திரவாளையுருவிக்கொண்டு மனத்துணிவுகொண்டு போம்போது சுவர்க்கலோகத்துக்கு ஒப்பாகத் தெய்வகன்னியர்களின் சலக்கிரீடை தடாகவிடுதியுஞ் சுகந்த மிகுந்தபரிமளமிறைந்து நிறைந்தமலர்வனங்களும் கந்தகஸ்தூரி கதப்பங்களின் மணமுங்குணமுங்குலாவிக்கொண்டிருப்பதைப் பலவிதயோகங்களுமுணர்ந்த விக்கிரமார்க்க

ராசன்கண்டு வீதிவீதியாய்த்திரிந்து அவைகளிற்சிறந்தமாடமாளிகை கூடகோபுரங்களுடைய கொலுமண்டபச்சாலை யரண்மனை யென்றை கண்டு அநேக நவமணிச் சிங்காரங்களை யுடைய இந்த அரண்மனையானது இவ்விடத்திலிருக்கும் எல்லாருக்கும் எஜமான்வீடுபோலிருக்குதென்று யுத்தினிதானித்துள்ளேனுழைந்தார் இவர்போனவழியில்செப்புத்தொட்டியில் வெந்நீர்காய்ந்துக்கொண்டிருப்பதைக்கண்டு பக்கத்தில்வைத்திருக்கும் பரிமளப்பொடிகளையுந் தேய்த்துக்கொண்டு ஸ்நானம்பண்ணி அப்பாற்போனார் அவ்விடத்தில் கதம்பகஸ்தூரி சந்தன பாளித குங்குமம் பன்னீரும் வைத்திருக்க அதையெடுத்து தரித்துக்கொண்டு அப்பாற் போம்போது கச்சாயவர்க்கமும் வைத்திருக்க அவைகளைப்புசித்து தாம்பூலமணிந்துக்கொண்டு தூங்காவிளக்கு முதலியமணிவிளக்குகளேற்றியிருக்கும் அம்சதூளிகாசயனத்தைக்கண்டு அதன்மேற்படுத்து இளைப்பாறி நித்திரைபோய்விட்டார் அந்தச் சமையத்தில் அந்தவீட்டுக்கதிகாரியாகிய நவமோக சஞ்சரியென்னும் நாயகி வந்து சுகந்தபரிமளங்களைப்பார்த்து வெந்நீர்முதலிய கச்சாயவர்க்கங்களும் தாம்பூலம் சிலவழிந்திருப்பதால் இதென்னவயணமென்று படுக்கையறைக்குள்வந்துபார்த்தாள் அவ்விடத்திலொருமகாபுருஷன்முப்பத்திரண்டு லட்சண முடையவராய் நித்திரை போகிறதைக் கண்டு பூலோகத்தில்வாழும் நரமனுஷன்பயப்படாம லிவ்வளவுதூரம்வந்து நமதுவீட்டில்நுழைந்தா னல்லவாவென்று கோபித்து தன்னிடத்திலிருக்கும் ஏவற்பூதத்தையழைத்து இந்தமனிதனைத் தூக்கிக்கொண்டு போய் நமதெல்லைக்கொல்லையாகிய ஆலமரத்துக்கப்பால் யெறிந்துவா வென்றனுப்ப அப்படியே அந்தப் பூதந் தூக்கிக்கொண்டுபோய் எறியும்போது விக்கிரமார்க்கராசன் விழித்துக்கொண்டு மந்திரவாளைக் கையிலுருவி அந்தப் பூதத்தை ஒரேவெட்டாக வெட்டியெறிந்து மறுபடியும்புறப்பட்டு அந்தமோகினியிருக்கிற வீட்டுக்குப் போய் அவ்விடத்திற்காவலிருக்கின்ற பூதங்களையெல்லாம் கரணையாய்வீசி வேதாளத்தையழைத்து இந்தமோகினிபடுத்திருக்கும் வித்தையாகியமஞ்சத்துடன் நமது பட்டணத்துக்குக் கொண்டுவாவென்றுசொல்லித் தானும்அந்த மஞ்சத்திலிருந்தபோது விக்ர க் கொப்பாகிய மோகினிவிழித்துப்பார்த்து ஐயோ இதென்னஆச்சரியம் இந்தநரமனிதன் எறிந்தவரும்படி நமது ஏவற்பூதத்தை யனுப்பினோமே அந்தமனிதன் நாம்படுத்திருந்த மஞ்சத்துடன் நம்மை இவ்விடத்திற்கொண்டுவந்துவிட்டானே இனி எப்படி பிழைக்கப்போகலாம் கூடாது கூடாதென்று சற்றுநேரம் யோசித்து நமது வினைவசத்தால் இந்த பூலோகத்து மனிதருடன் இணங்கியிருக்கும்படியா யேற்பட்டது ஆ கயால்நாம்வேறு நினைக்காமல் இவ்விடத்தி லிருந்துவிடுவதே காரியமென் றெண்ணி விக்கிரமார்க்கராசனுடைய தாஷ்டீகமும் மன்மதகீர்த்தியாகிய அழகும் அலங்காரமுஞ் சௌரியபராக்கிரமமும் அநேகபூத காவலிருந்த தன்னைபகரி அத்துவந்த ஆண்மிக்கையுங் கண்டு ஆனந்தங்கொண்டு அரசனைக்கண்டு

பழகினவளைப்போற் பரிந்து தேவரீராரென்று கேட்டால் நானிவ்வுல குக்கிறைவனாகிய விக்கிரமார்க்கராசனென்றுசொல்ல அதைக்கேட்டவு டனே நவமோகமஞ்சரிமகிழ்ந்து இருவருமனமொத்துப் புகழ்ந்து அ ரண்மனைக்குப் போகும்போது பட்டிமுதலாகிய மந்திரிகளையழைத்து ஆயிரம்பிராமணர்களுக்குச்சோடசமகாதானங்கொடுக்கச்சொன்னகா லத்தில் ஒரு பிராமணனோடிவந்து ஐயாநான்வெகுநாளாய் நல்லபெண் சாதி அகப்படாமையால் கலியாணம்பண்ணிக்கொள்ளாமல்காமத்தினா ல்வெந்துபோனேன் இப்போது தேவரீர்கைபிடிக்க தேவகன்னியின் பேரில் சிந்தைவைத்தேன் நான் ஏழைப்பிராமணன் தேவரீருக்குஇப் பேர்ப்பட்டபெண்வேண்டியதசப்படும் எனக்குக்கிட்டாது ஆகையால் என்னிச்சையைத்தட்டாமற் கொடுக்கவேணுமென்று கேட்கவே அர சன்சந்தோஷமடைந்து அநேகதிரவிய ஆபரணங்களுடன் அந்த நவ மோகமஞ்சரியைக்கொடுத்துப் பட்டணப்பிரவேசங்காட்டி சகலவித சம்பிரமத்துடன் சுபஞ்செய்துவைத்தார்.

கேளும் போசமகாராசனே வுலகத்திற் பெண்ணென்றால் பேயு மிரங்குமென்பார்கள் அதிலேயும் இவ்வுலகத்திற் பெண்ணுமல்ல மே லும் தன்னையெறிந்துவிடும்படி பூதத்திடத்திற்கொடுத்தனுப்பிய அவ னைமறுபடியும் அவமானப்படுத்தி நாமேகூடவேணுமென்று சூதாத்தி ரங்கொண்டு எடுத்துவந்தார் இப்படியெல்லாமிருந்து தேகியென்ற பி ராமணனுக்குக்கொடுத்துவிட்டதை யோசிக்குமிடத்தில் ஆராகிலுமிப் பேர்ப்பட்ட திடதயிரிய வுதாரகுணசீல ரிருப்பார்களோ நீரேசொல் லும் போசமகாராசனே இந்தக்குணமுதலிய நன்மைகளெல்லாமுமக் குண்டாயிருக்குமாகில் இந்தச்சிங்காதன மேறலாம் இல்லாவிட்டால் இறங்கிப்போகலாமென்று பூங்காவனப்பொற்பதுமைசொல்லப் போ சராசன்திரும்பித் தன்னரண்மனைபோய்ச்சேர்ந்தான்.

இருபத்தெட்டாம்பதுமைகதை-முற்றிற்று.

இருபத்தொன்பதாம்படிக்குக் காவலாகிய சிரோன்மணிப்பதுமை சொல்கதை.

மறுநாட்காலையிலெழுந்து ஸ்நானஞ் செய்துதொழுங் கடவுளரை த்தொழுது துதித்து சூரியநமஸ்காரஞ்செய்து சொர்னமுதலிய தான ங்கள்கொடுத்து இன்றைக்காகிலும் படியேறவைக்குமோ என்னுடை யவினைப்பயனெப்படியோவென்று சோதிடநூல்வல்லோர் முதலியபரி சுத்தவான்களுடைய சொல்லுறுதியைக் கேட்டுவருந்திவந்து படியே றும்போது அப்படிக்குக் காவலாகிய சுப்ரதீப சிரோன்மணி பதுமை யானது கைகொட்டிக்குலித்து சிரமாட்டி யழைத்து கனைத்து நகைத் து வாரும் போசமகாராசனே யென்று விசுவாசத்துடன் சொல்லத் தொடங்கியது.

எங்கள் விக்கிரமார்க்கராசன் இந்தச் சிங்காதனமேறி அரசாளு கையில் திங்கள் மும்மாரி பொழிய மக்கள் கல்யாண வைபவங்க

ளோங்க ஆறிலொரு கடமைகொண்டு அரசாளுகையில் தங்கபுரியென்னுநகரத்தையாளுகின்ற தூர்க்கேஸ்வரனென்றொரு ராஜன் சகல சுகபோக வைபவத்துடன் வாழ்ந்துவரும்போது எல்லா பாக்கியமுமிருந்து புத்திரபாக்கியமொன்றில்லாமையால் மெத்த மனம் வருந்தி இந்தமுஞ் சிந்தனைப்பட்டுத் தர்மபத்தினியுந்தானும் பராசத்தியாகியமாகாளியைக்குறித்துத் தவமிருந்தார்கள் அந்த மாகாளி பிரசன்னமாகவே இவர்களிருவரும் பணிந்து வணங்கித் தோத்திரம்பண்ணும்போது அந்த அம்மன் மகிழ்ந்து நீங்களெத்தனைவிதஞ் செய்தபோதிலும் உங்களுக்கு ஒரேபெண் பிறக்குமென்று அநுக்கிரகம் பண்ணிப் போய்விட்டாள் அப்பால் இவர்கள் தங்களுடைய பட்டணம்வந்து பராசத்தியையவணங்கியிருக்குநாளையில் அதுவே குளிபாயிருந்து பத்துமாதஞ்சென்று ஒரு பெண்பிறந்தது அந்தப்பெண்ணுக்கு புத்திரோற்சவங்கொண்டாடி ஜாதகன்மஞ்செய்து நாமகரணமிட்டு தொட்டிலிலேற்றுக் கைகொட்டி விளையாடி கன்னடமுதலிய பாஷைகளெல்லாங் கற்றிந்து விற்பத்தியுடையவாள் விசித்திரகலையென்று யாவருங்கொண்டாடி யழைக்கும்படியாய்ப் புத்தியறிந்திருந்தாள் அத்தருணத்தில் இப்பெண்ணுக்குரிய புருஷன் வேணுமென்று உலகெல்லாந் தேடித்திரியும்போது அந்தப்பெண்ணாகிய விசித்திரகலையானவள் பொன்னாபரமுதலிய பூவாரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு அநேகம பாக்கியர் தாதியர்தோழியர் சேடியருடனே வேடிக்கையாய் அம்மானைக்கழங்கு நிலாச்சோராங்கல்முதலிய விளையாட்டுகளில் அதிகஆசையுடையவளாயும் பூப்பறித்தல் நீராடல் அலங்கரித்தல் இதுமுதலிய தன்மைகளிலுஞ் சிறந்திருந்த தந்தையர்களும் விந்தையாய்ச் சிந்தைகளித்திருந்தார்கள் அந்த வேளையில்மல்லிகார்ச்சுனமென்றொரு மலையுண்டு அந்தமலைக்குகையில் பெருநாளாய் வழ்ந்துவருகின்ற மிர்காங்கதனென்னுமொருராட்சதன் அவனொருபிரமமாவினுல் அநேகவரம்பெற்று ஒருவருந் தனக்கெதிரில்லாமல் உலகமெல்லாஞ் சஞ்சரித்து அநேக உயிர்களை வதைத்துக்கொண்டு திரிவான் அப்பேர்ப்பட்ட ராட்சதன் ஒருநாள் இந்தராசபுத்திரியாகிய விசித்திரகலை பாங்கியருடன் விளையாடிக்கொண்டிருக்குமுபரிகைக்கு நேராகப்போகும்போது இந்தப்பெண்ணைக்கண்டு கண்களை விழித்துக்கொண்டு இன்றைக்குலமித்தென்று மோகித்து எவ்விதத்திலும இவளைக்கைக்கொள்ளவேணுமென்று சற்றுநேரம் நின்று கலங்கி பவலைகொண்டு இவளைக்காவது கொண்டுபோகவேணுமென்று எண்ணுதுமெண்ணிப்போனான் அந்த ராட்சதன மோகித்துக் கலங்கிய குறிப்பினை இந்தப்பெண்ணறிந்து இதேதுமோசமலைந்ததென்றெணி பாங்கியற்றுமுதலியபேருடன் அன்றிரவில் நித்திரைசெய்து மறுநாட்காலையிலெழுந்து தாய்தந்தையபாதயில் விழுந்து வணங்கி ஐயா நேற்று சாயங்காலம நான் உப்பரிகையில் விளையாடிக்கொண்டிருக்கும்போது ஒருராட்சதனை கண்டு கலங்கி மோகத்தோடானவன் கருவிப்போய் மறுநாளையில் வருவேனைப்பற்றுவேனென்று திரும்பிப்போனான் ஆதா

யால் நான் பிழைப்பதற்கேது எப்படியென்று பெண்ணானவள் சொ
ல்லக்கேட்டு தாய்தந்தையிருவருஞ்சகித்து ஐயோ அந்த ராட்சதன்மூ
வுலகுங்கெலித்தவனுச்சே அம்மா அவனை வெல்லவேனுமென்றால்யா
வருக்கும் பொருமுச்சே அவனைச்செயிக்க நம்மாலில்லை நீ சும்மாபோய்
நமது கிராமதேவதையா யிப எல்லம்மாளிடத்தில்முறையிட்டுக்கொண்
டால் அந்த அம்மாளுன்னைக் காப்பாற்றுவாளென்று தாய்தந்தைசொ
ன்ன வார்த்தையைக்கேட்டு இந்தப்பெண்ணானவள் ராத்திரி பதினை
ந்துநாழிகை வேளையில் மந்திரவாளை யுருவிக்கொண்டு காளிகோயிலுக்
குவந்தாளப்போது காளி வெளியே போயிருந்தபடியால் உள்ளேநு
ழைந்து கதவைச் சாத்திக்கொண்டிருந்தாள் பின்னுஞ் சிலநாழிகைக
ழித்து காளிகாதேவி கதவைத்தட்டியபோது திறவாமலிருக்க அதற்க
ந்த அம்மன் கோபித்து ஆஆ யாரவர்கள் என்கோயிலுக்குள் நுழை
ந்து கதவைச்சாத்திக்கொண்டு திறவாமலிருப்பதென்றுதட்டிக்கேட்
க அதற்கந்த ராஜஸ்திரீயானவள் அம்மா நானுனது புத்திரி என்பேர் வி
சித்திராவலை ஒரு ஆபத்தானகாரியத்தால் உனனிடத்தில் அடைக்கல
மாகவந்தேன் என்னைக்காப்பாற்றுவையாகில் உனக்குக்கோடிபுண்ணி
யமுண்டு நானும்இந்தக்கதவைத் திறந்துவிடுகிறேனென்றுதிறக்கவே
ஆ மகளே நீ பயப்படாதே ஆனால்நீ வந்த அடைக்கலமென்னவென்று
கேட்க மல்லிகார்ச்சுனபர்வதத்திலிருக்கும் இராட்சதன் என்னையெடு
த்துக்கொண்டுபோகவிருக்கிறானென்றுசொல்ல அம்மனானவள் அதை
க்கேட்டு அம்மா நான்சொல்லுவதைக்கேள் அந்தப்பாவிபரக்கன்யாரா
லுஞ்சாகான் எந்த வாளாயுதத்தாலும் போகான் அக்கினி போட்டுக்
கொளுத்தினாலும்வேகான் அப்பேர்ப்பட்டசாவான் ஆனபடியா லவனு
க்குரையில் உச்சினிபட்டணமாளுகிற விக்கிரமார்க்க மகாராசனிருக்கி
றார் அவரொருமெத்தவுஞ்சத்தியம்சௌரியசாரமெறிபூசாவிதியினையுடை
யவர் அவரிடத்திலடைக்கலம் புகுந்தால் அவருன்னையு மென்னையுங்
காப்பாற்றுவார் இல்லாவிட்டால் உனக்கிடங்கொடுத்த கோயிலும் நா
னும் கட்டிச்சுவராகச்செய்வான் மகாதுஷ்டன் ஆதலால் நீ தயவுசெ
ய்து விக்கிரமார்க்கனிடத்துக் கடைக்கலமாகப் போவென்று வயது
தோன்றாமற் கிழவிபோலிருக்கும்படி ஒரு சமர்த்தால் மூடி மறைத்து
காளிகாம்பிகை யனுப்பிவைக்கவே அந்தப்பெண்கொடியானவள் தன்
னுடைய தாய்தந்தையரிடத்தி லனுமதி பெற்றுக்கொண்டு அவர்களுத்
தரவின்படி உச்சினிபட்டணத்துக்குப்போய் விக்கிரமார்க்கராசனைக்
கண்டு தெரிசிக்கும்படி நினைத்து அந்தப்பட்டணத்தில் அன்னமிடுங்
கைம்பெண்பலை வீட்டிற்போயிருந்து பணங்கொடுத்து போசனம் பண்
ணிக்கொண்டிருக்கும்போது ஒருநாளிராத்திரி உல்லாசமாகியநிலவில்
வீணை மீட்டிக்கொண்டு அந்த வீணைக்கிணங்கக் கோகில சுரத்தைக்
கூட்டிப்பாடும்போது அவ்விராத்திரி நகர்சோதனைவந்த விக்கிரமார்க்
மகாராசனக்கேட்டுப் பிரமானந்தமடைந்து தெரியாமல் மயங்கி மந்திரியை
யழைத்து இராத்திரியில் வந்தபடிக்கவிருந்து வீணாகமத்தால்
யமனாதைகண்ணமிட்டான்னதைப்போ அவளையின்மார்மேல்கொண்டு

வரச்செய்யுமென்றுசொல்லிமன்னவர்பெருமாள்நித்தியஸ்தானபூசை முடித்துவரப்போனர் அதற்குள்ளாகமந்திரியானவர் காரியசித்திபெ ன்னுங்காரியக்காரனை யழைத்து ராசன்சொன்ன அடையாளப்படிவீ ட்டைக்கண்டுபிடித்து அந்தவீட்டில் வந்திருக்கிற பெண்ணையழைத் துவாவென்றனுப்ப அப்படியேயவன்போய் அந்த அன்னமிடுகிறவ ளைக்கண்டு வார்த்தையாடி புதிதாய்வந்திருக்கும் பெண்ணையுங்கண்டு பேசிராசனழைத்துவரச்சொன்னானென்று அவளையுங்கண்டுபேசி அ ழைத்துவந்து ராசசமுகத்தில்விட ராசனானவன் கொலுக்கூடத்திலு ட்காரவைத்து பாடச்சொல்லியபோது தும்புருநாரதர்கந்திருவர்முத லியபேரும் தங்களைத்தாங்கள் மறக்கும்படியாய்ப் பதங்களைப்பாடினா ள் அதைக்கேட்டு விக்கிரமார்க்கராசன் மெத்தவும் மகிழ்ந்து இப்பேர் ப்பட்ட யுக்திபக்தி வித்தை நல்லிசையுள்ள வீணைக்கானமுதலியயாவ ற்றையுங்கொடுத்ததெய்வம் சரீரத்தை புதுமைப்படுத்த வேண்டிய தென்ன இந்தப் பெண்ணுக்கு வயதோ பதினறு பருவவயதினையுடை யபுட்பவதியென்னலாம் இப்படியிருக்க இவளுக்குக் கிழத்தனம் வந்த தைப்பரிசோதிக்கவேணுமென்று அந்தப்பெண்ணை தனிமையிலழைத் து நீஎந்தவூர் உன்பேரென்ன உன்தாய்தந்தையார்யாவர்கள் நீ இவ்வி டம்வருவானேன் இந்தக் கிழத்தோலுடம்பெற்றிருப்பானேன் என்னிட த்திலுண்மையைப் பேசுமென்று ராசன்கேட்க விசித்திரகலையென்னு மெல்லிசொல்லுகிறாள்.

ஐபாசத்துருக்களைசெயித்துமித்துருக்களைப்பறித்து தரித்துசத் தியவதியாகிய உத்தமவரசேசேகரனும் நாமுரென்னில் தர்க்கபுரியையா ளுமதுர்க்கேஸ்வரனுடைய குலத்திற்பிறந்த விசித்திரகலையென்பவள் என்னை பிர்காங்கிதனென்னும்ராட்சதன் கொண்டுபோகநினைத்தபடி யால்காளிகாதேவியம்மனுடன்சொல்லி முறையிட்டுக் கொண்டேன் அந்தம்மன்உன்தேகத்தைமறைத்து தேவரீரிடத்துக்குப் போகச்சொ ன்னாள் அதனால் வந்தேனென்றாள் விக்கிரமார்க்கராசன் அந்தப்பெ ண்ணினுடைய வார்த்தையைக்கேட்டு இனிமேல்நீ ஏதொன்றுக்கும் பயப்படாதேஉன்னுடைய கிழத்தனத்தைப் போக்கிவிடு இப்போது தெட்சணாயனமாகையால் உத்திராயணம்பிறக்கவுடன் அந்தப்பெண் ணானவள் காளிகாதேவியைச் சிந்தித்து வந்தித்து அவளால் மறை க்கப்பட்ட கிழத்தனத்தை வாங்கிவிட்டாள் அப்போதந்தப் பெண் ணரசியினுடையசுந்தர உருவத்தைப்பார்த்து மெத்தவுஞ் சந்தோஷ மடைந்துதனிக்கைவீடொன்று ஏற்படுத்தி அனேகதாதியார் முதலிய பேரும் ராசோபசாரம் நடக்கும்படியாய்த் திட்டப்படுத்தி வீணைக்கா னமுதலியதுங்கேட்டு வெகுசாயலுடனே வைத்திருந்தார் அப்படியி ருக்க நாடாறுமாதமாய் காடாறுமாதம் போம்போது பட்டியையழை த்து பட்டணத்தைப் பாதுகாக்கும்படி திட்டப்படுத்திஇந்தவிசித்திர கலையென்னும் பெண்ணரசியானவள் ஒருராட்சதனுக்குபயந்து நம்மி

டத்திலடக்கப்பட்டிருப்பதினால் ஒருவேளை அந்த ராட்சதன் மோசம்
பண்ணி யெடுத்துக்கொண்டு போய்விடுவான் அவனோ மகாமாய்கைவ
ல்லபமுடையவன் ஆனதால் மெத்தவுஞ்சாக்கிரதையாகக்காக்கவேணு
மென்று பத்திரமாக வுந்தாஞ்சொல்லிப்போட்டு விசித்திரகலையினி
டத்திலும் செலவுவாங்கிக்கொண்டு வேதாளத்துடனே காடாறுமாத
த்திற்குப் போய்விட்டார்.

இவ்விடத்திலிப்படியிருக்க மிருகாங்கிதனென்னும் ராட்சதன் ம
றுநாட்காலமே தர்மகேஸ்வரனுடைய பட்டணம்வந்து விசித்திரகலை
யைப் பார்க்கும்போது காணாமையால் மெத்தவும் வருந்தி நாம் கண்ட
நேற்றையதினமே கொண்டுபோகாமல் காலைக்காகட்டுமென்று போன
படியால் மோசம்வந்தது ஆனாலுமென்ன இந்த ஐம்பத்தாறுதேசத்தி
லும் பதினாலுலோகத்திலும் ஏழுசமுத்திரத்திலும் இதற்குள்ளாகவிரு
ப்பாளேயன்றி மற்றெங்கே போகப்போகிறாள் நித்தியமொருவிடமா
கத்தேடி அவளைகண்டுபிடிக்கிறதென்று புகைநுழையாவிடங்களிலுஞ்
சலம் நுழையாவிடங்களிலுங் காற்றுநுழையா விடங்களிலுந் தேடிக்
கொண்டு வரும்போது விக்கிரமார்க்கனுடைய பட்டணத்தில் நுழை
வதற்கு அச்சமுடையவனாய் வளையற்காரனைப்போல் வேஷமெடுத்துக்
கொண்டு நாலுவளையல் நாலுலட்சம் வராகனென்று விலைகூறி வரும்
போது அந்த வளையலைப்பார்த்த ஸ்திரிகளெல்லாம இவ்வளவு விலை
கொடுத்து ஆர்வாங்கிப் போட்டுக்கொள்ளப்போறார்கள் ஆனால் விக்கி
ரமார்க்கராசன் புதிதாய் விவாகம்பண்ணிக்கொள்ளும்படியாய் விசித்
திரகலையென்னும் பெண்ணை யாதரித்துவருகிறாரே அவர்வாங்கி அந்த
ப்பெண்ணுக்குத் தரிக்கலாமென்று சொன்னார்கள் அவர்களால் உளவ
றிந்துகொண்ட ராட்சதனானவன் ஆசாரவாசலுக்கெதிர்போய்நின்று
இந்தவளையல் வாங்கிக்கொள்ளுவார்களாவென்று விசாரிக்கும்போது
அங்கசவகறியைப்பற்றி படிந்து அந்தவளையலை வாங்கிப்பார்த்து வெ
குசந்தோஷப்பட்டு அந்தப்புரத்துக் கனுப்பி வைத்தான் பட்டபுஸ்தி
ரீயாகிய பாங்கியரேகை பார்த்து எனக்கு வேண்டாமென்று சொன
னாள் விசித்திரகலைக்குக் காண்பித்தபோது எனக்கு இது வேண்டிய
தென்று சொல்லியனுப்பினாள் உடனே பட்டியானவனை விலைகொடுத்
து வாங்கி விசித்திரகலையினிடத்துக்கு அனுப்பிவைத்தபோது இந்த
ராட்சதவளையற்காரன் ஐயா இதுமெத்த உயர்ந்தவளையல் இதினுடை
ய அருமையெனக்குத் தெரியுமல்லாது மற்றயாருக்குந் தெரியும் ஆகையா
ல் நானேபோய்ப்போட்டால் போடலாமேயன்றி இன்னொருவர் போடப்
படாதென்று சொன்னான் இவனுடைய சொல்லுறுதியைப் பார்த்து
இவனை நம்பி செல்லம்மோ சந்தேகந்தோன்றுது மேலும்ம ராக்ஷச
னொருவனிந்தப் பெண்ணின்மேலிச்சைவைத் திருக்கிறானும் அவ
ன்பொல்லாத மாய்கையை யுடையவனாதலால் நீர் வெகுசாக்கிரதை
யாய் இருக்கவேணுமென்று நமதுராசன் சொல்லிப் போயிருக்க இவ
னைநாம அந்தப்புரத்துக்கு அனுப்பலாகாதென்று வேறுயுக்தி செ
ய்து அப்பா உன் பேரென்னவென்று கேட்கவளையற்காரன் போரங்க

னென்றுசொல்லிநல்லதுகொண்டுவர்களுடைமைமெத்தவிலையுயர்ந்தது இவ்வளவுவிலைக்கு நான்போட்டு வாங்கப்படாது எங்கள்ராசனறிந்து வாங்கவேணுமாகையால் நீ வாங்கியபணத்தைக் கொடுத்துவிட்டுஉன் னுடைமையை வாங்கிக்கொண்டுபோவென்றுசொன்னார் அந்தவளையற்கா ரபோராங்கனுனவன் என்னையா நீங்களே வாங்க விட்டால்பின்னையார் வாங்குவார்களென்று கேட்கவதனால் எங்கள் விக்கிரமார்க்கராசன் கா டாறுமாதப்போயிருக்கிறார் அவர்வந்தபிற்பாடுநீவந்தால் அவர்வாங் கிக்கொள்ளுவாரென்று பட்டிசொல்ல அதற்கந்தவளையற்காரன்நான் போய் ராசனைக்கண்டு உத்தரவுகொண்டுவரட்டாவென்றுகேட்க அப் படியே செய்யென்று பட்டிசொல்லியிருக்க அதிவேகத்துடன் விக்கிர மார்க்கராசனிருக்குங் காட்டுக்குவளையற்காரன்வந்துபட்டணத்தில்ந டந்தசங்கதிகளையெல்லாஞ்சொல்லி வளையலைக்காட்டிவிலைகொடுத்து வாங்கின வளையலைக்கொடுத்துவிட்டானையாபட்டியானவரென்றுசொ ல்லவே ராசன்யோசித்து எல்லா சுதந்தரமுடையபட்டியானவர் ஏனி வனை இவ்விடத்துக்கனுப்பிவைத்தார் கொடுத்தவிலையையேன்வாங்கிக் கொண்டார் இவனிடத்திலேயேதோ ஒருவித சந்தேகங்கண்டாப்போலு மிருக்குதென்றுதன்புத்தியினாலறிந்து நடைநொடியனைதெரிந்து இ வன்மிருகாங்கனென்னும் ராட்சதன்போலுமிருக்குதென்று நிதானித் து திரிகாலக்கியானியாகிய வேதாளத்தை யழைத்து இவனாரென்று ரகசியமாய்க்கேட்டபோது இவன்தான் மிருகாங்கனென்னும் ராட்சத னென்று வேதாளஞ்சொல்லவே அதைக்கேட்டு உச்சினிமாகாளி யை வணங்கி மந்திரவாளையுருவிக்கொண்டு ஒரேவெட்டாய் வெட்டிய றிந்துப்போட்டு காடாறுமாதமுங்கழிந்து நாட்டுக்குவந்து சகலமான பேரும் எதிர்கொண்டழைத்து அரண்மனைக்குக் கொண்டு போம்படி யாய்ச்சென்று பட்டிமுதலியபேருக்குக்காட்டில்நடந்த ஆறுமாதத்து வேடிக்கையுஞ்சொல்லி ராட்சதனைவென்றதையுந் தெரிவித்து விசித்தி ரகலையையுங் கல்யாணம்பண்ணிக்கொண்டு சுகசீவியாயிருந்தார் இவ் வளவு யுத்தியும் புத்தியும் சாமார்த்தியமும் உமக்கிருக்குமானால் நீரிந்த ச்சிம்மாதன மேறலாமென்று இருபத்தொன்பதாம்படிப்பதுமைசொ ல்ல அதைக்கேட்டு போசராசன் வெட்கிப்போனான்.

இருபத்தொன்பதாம்பதுமைகதை முற்றிற்று.

முப்பதாம்படிக்குக்காவலாகிய

மணிமந்திரதந்திர சுந்தரப்பதுமைகதை.

முப்பதாநாட்காலமே போசராசனெழுந்து நித்திய ஸ்நானஞ்செ ய்து பூசைமுதலியதாவும்முடித்துக்கொண்டு தேவலாய விஷ்ணுவால யங்களையுந் தொழுது ஆசாரியரை வணங்கி ஐயா என்னுடைய பாக் கியமிப்படியாய் போச்சுதேயென்று மிகுந்த விசனமடைந்து தகுந்த முயற்சி பண்ணிக்கொண்டு தர்மதானங்களெல்லாம்கிரமமாய் முடித் துசிங்காதனத்தையும் பூசித்து சிந்திக்க நோக்கி விழுந்து வணங்கி தெய்வமே இனியாகிலு மென்மேலிரக்கி இந்தசிங்காதன மேறும்படி.

செய்வாயென்று இஷ்டதேவதையைப் பிரார்த்தனைசெய்துக் கொண்டு சிங்காசனமேறப்போம்போது அந்தப்படிக்குக்காவலாகிய மணிமந்திர தந்திர சுந்தரப்பதுமையெழுந்து கரத்தைநீட்டித்தடுத்து ஆ ஆ அரசனே சரசமாகச்சொல்லுகிறேன் விவரமாகக்கொள்ளாமல் சரசமாகக் கொள்ளும் எங்கள்ராசனாகியவிக்கிரமார்க்கராசன் பிரசைகள்மகிழும்படியாய்த்துரைத்தனம் நடந்துவருங்காலத்தில் ஒருநாள் ஆரியதேசத்திலிருந்து வீரியனொருவன்வந்துசிலகாரியங்களைச்சொன்னான் அந்தக்காரியத்தை விக்கிரமார்க்கனென்னுஞ்சூரியன்கேட்டுவேதாளத்தின் மீதேறிக்கொண்டு பாதாளத்திற்குப்போம்போது தேவபூதாள நகரத்தைக்கண்டாரென்று பதுமை சொல்லிக்கொண்டு வரும்போதுபோசராசன் பதுமையைநோக்கி ஆரியதேசத்திலிருந்துவந்தவீரியனென்னமோ ஒருகாரியஞ் சொன்னானென்றாயே அந்தக் காரியமென்னவென்றுகேட்க அப்பதுமை கைகொட்டி நகைத்து இதுதெரிந்துக் கொள்ளுகிறவரைக்கும் மனப்பொறுமையில்லாத மன்னவனே நீரெப்படி இந்தச்சிங்காதனமேறப்போகிறீர் போம்போமென்றுசொல்லிமேலுஞ் சொல்லத்தொடங்கியது.

அவனென்ன சொன்னானென்றால்ஒருதாசியிருக்கிறாள் அவளைக் கண்டால் நபுஞ்சகன்கூடஅவளிடத்திக்குப்படுக்கவிரும்புவானென்றும் அழகைப்படைத்தவள் அவளுடையபேரென்னவென்றுகேட்டால் கமலரேகைகன்னிகை என்பவள் அவளிடத்தில்ராத்திரிக்குப்போய்ப் படுத்திருக்கிற மனிதன் விடியற்காலத்திலிருப்பதில்லை இரப்பேதகாரணமா யிருக்கின்றமையால் இந்தஅதிசயத்தை நீர்வந்துபார்க்கவேணுமென்றுசொல்லியழைத்துப்போனான் அப்படியே அரசன்போய்விசாரித்தபோது அவளுடையபால்யபிராயமுதல்கொண்டு இதுவரையிலும் அவளிடத்தில்போனவர்கள் போரங்கன்போனானைபொழுதுவிடிந்துசெத்தான் வேங்பாந்தன் மெயினான் விடிந்தவுடனே முடிந்தான் வண்டிச்சாத்தான் மாண்டான் சாலைபதினஞ் சாய்ந்தான் மாலைமுடித்தமணைனான்போரடிராமன்கெட்டான்புகழும்விசையன்கையற்றான்குருட்டுக்கண்ணன் மகன் குன்றினான் திருட்டுமொண்ணைடன்ரியனானான் இவ்விதமாக அவளால் இறந்துபோனவர்கள்சுமார்ஆயிரத்துக்குமேலே இருக்குமென்றறிந்துக்கொண்டு அந்திராத்திரிக்குதான் வருகிறதாய் சொல்லியனுப்பிவைத்தாரென்று பதுமைசொல்லவே போசராசன் பதுமையைப்பார்த்து ஓ பிரதமையே இத்தனைபேரிறந்திருப்பதைக் கேட்டு இந்தவிக்கிரமார்க்கராசன தான்வருகிறதா யென்சொன்னானென்றுபோசராசன்கேட்க பதுமையானது சும்மென்றிருந்து ஓராசனே செத்தாலுஞ் சாகுறேமென்று அவளைச் சேராதவரில்லை என்பதாய் முன்னம்சொன்னனே அதைமறந்துபோய் விட்டீரோ நீர்தானோ இந்தச்சிங்காதனமேறவந்தீர் நல்லது முதற்படிப்பதுமை முதல் இருபத்தொன்பதாவதுபடிப்பதுமைவரைக்கும உம்மைத்தடுத்திருக்க நீரேன் மறுபடியும் வந்தீர் ஆசைவெட்கமறியாதென்னும் பழமொழிக்கிணங்க

வல்லவராவந்தீர் அதுபோல்யாவரும் அவள்பேரில்மோகங்கொண்டு வந்தார்களென்றுரைத்து மேலுஞ்சொல்லத்தொடங்கியது ஓஅரசனே எங்கள் விக்கிரமார்க்கராசன் சொல்லியனுப்பினவந்த வார்த்தையைக் கேட்டு கமலமோகினியும் அவள்கட்டில் மெத்தைமுதலிய யாவுந் திருத்தி சிற்றுண்டில் பன்னீர் வெந்நீர் தாம்பூலாதி பாலபழமுதலிய வெல்லாந் திட்டப்படுத்தி மூலைக்குமூலை தூண்டாவிளக்கேற்றிவைத்து அரசன்வரும்வழியைப் பார்த்திருந்தாள் இராத்திரி பத்து நாழிகைக்கு அரசன் புறப்பட்டுவந்து அந்ததாசியின் வீட்டுக்குட்புகுந்தார் இவரைக்கண்டவுடனே அவளெழுந்தெதிர்கொண்டுவந்து காலில்விழுந்து அம்சதூளிகா மஞ்சத்தின்பேரி லுட்காரச்சொன்னாள் அதற்கு அரசன் சொன்னது நான்கட்டிலின்பேரில் படுத்தறியாதவன் ஒருவேளைபடுத்தால் மயக்கந்தலைக்கேறி கீழேவிழுந்திறந்துபோவேன் ஆகையாலெனக்குப்படுக்கை பூமியிற்போடென்றான் அதைக்கேட்டு அந்த மாதுவானவள் குலுக்கென்றுநகைத்தாள் அவள்நகைத்தகருத்தை எங்களரசனறிந்து ஒன்றுந்தெரியாதவர்போற் பூமியிலரசன் அவளேன்நகைத்தாள் எனவேயிராசனறிந்த கருத்தென்னவென்றுகேட்க ஐயா உமக்கிந்த சிம்மாசனம் ஆகாது ஆகாதென்றுசொல்லி அவள்நகைத்ததற்குக்காரணம் தெரிவிக்கிறேன் கேளுமென்றுசொல்லியது அதாவது பொழுதுவிடிந்தா லிறந்துபோகிறவன் கட்டிலிலிருந்து மயக்கமேறி கீழேவிழுந்திறந்து போவேனென்றானே பலி பீடத்துக்குக் கொண்டுபோன ஆடானது உச்சன்னையிலிருக்கிற தழையைக்கண்டு தான்தின்றுவரமூலாமென்றாசைகொண்ட அதுபோலிருக்குதே யென்றவள் நினைத்ததை யறிந்துகொண்டாரென்றுசொல்லி அப்பாலிராத்திரி பதினைந்துநாழிகை வரைக்கும் சசதசாமுதலிய கதம்பப்பொடிகளைக் கலந்து தேகத்திற்றடவி பன்னீர்குளித்துப் பசுமஞ்சட்பூசி பசும்பொன்மணிச் சரிகைப்பட்டுடுத்திபஞ்சவி நடயமலரித்து அரசனுக்குப் பக்கத்தில்வந்து படுத்தாள் அவளுக்குக் கொடுக்க வேண்டியது ஆயிரம் பொன்னுங் கொடுத்தான் அவளா லாலிங்கனஞ் செய்தலைத்தொரு முத்தங்கொடுத்தாள் கலவிக்கிரீடைகொடுத்தா ளதைத்தவிர்த்தான் இப்படியிருக்க பொழுதுவிடியுமுன்னமே கிராமத்தார் பணிசெய்வோன் அம்பட்டன் வண்ணான் சலவாதி வெட்டியான் முதலிய தொழிலாளிகளும் பாடைகொப்பு பட்டுநாப்தாபரமப்தசலல சந்தனக்கட்டை கெந்தபொடி புஷ்பம் சட்டி பொரி முறம்வெற்றிலை தோண்டிசாரை பூரி தப்பட்டை முதலியயாவும் மாமூலாகக் கொண்டுவருகிற குத்தகைக்காரர் கொண்டுவந்துவைத்து வாசலிற்காத்துக்கொண்டிருந்தார்கள் இப்படியிருக்க இராத்திரிமுழுமையும் நித்திரையற்றிருக்க ராசனுக்குப் பக்கத்தில் பலவிதபாடல்களைப்பாடிக்கொண்டிருந்த கமலமோ

கைக்கு ஒருவிதமயக்கம்வந்துபடுத்துக் கண்மூடி நித்திரை போனான் அப்போதரசனெழுந்து ஒருதலைக்கணையை அவனுக்கருகாமையிலேத் துவைத்துவிட்டுத்தான் சற்றப்புறம்போய் மறைந்துபார்த்துக்கொண்டிருந்தார் அந்தவேளையிலவளுடையமூக்கிலிருந்து மாற்றுயர்ந்தசொர்ணநிறச் சிறுபாம்பு புறப்பட்டுப்படம்விரித்து பக்கத்திலிருந்த தலைக்கணையை ஏத்தியோத்திபடித்து வெடுக்கென்றுகடிப்பதை விக்கிரமார்க்கராசனுணர்ந்து இதுவரையிறந்துபோன பேர்களுக்குக் காரணந் தெரிந்துக்கொண்டு தன்னுடைய மந்திரவாளையுருவி ஒரேவெட்டாக வெட்டியெறிந்து அவளுடன்படுத்து கலவிக்கிரீடை தொடுத்துமுடித்து கச்சாயவர்க்கமுங்குடித்து காலையிலெழுந்து ஸ்நானசெபதப முதலிய யாவுமுடித்துக்கொண்டு போசனமுண்டு புகழுடன்மகிழ்ந்து வெளியில்வருவதை கமலரேகையும் மற்றவர்களுங் கண்டு ஆச்சரியங்கொண்டு பிணத்துக்குவந்த பொருளையெல்லாமபோக்கி அரசனையடுத்துப் பணிந்து ஐயா இந்தகமலரேகை புத்தியறிந்த சோபனமபண்ணியநாள்முதல் இந்நாளிதுவரைக்கும் இவளிடத்திற் போனவர்களெத்தனை பேரிறந்துபோனார்களேயல்லது பிழைத்தவரில்லையே அப்படியிருக்க இன்றுநீர் பிழைக்கக்கண்டோம் இதனுடையவரலாறெங்களுக்குச் சொல்லவேண்டுமிறைவனேயென்று யாவரும்வினவ கரதலைச் சிங்காதனத்திற் பொருந்தியிருந்த இவ்விடத்திலிருந்த குணதோஷத்தையும் குமுதமலர்போன்ற அவளுடைய மூக்கிலிருந்துபுறப்பட்ட பாம்பினுடைய செய்கையும் மாற்றுயர்ந்த தங்கம்போல அந்தப்பாம்பை தான் வெட்டி எறிந்துவிட்ட விதத்தையுந் தெரியப்படுத்தி அந்தப்பாம்பின் துண்டத்தையுங்காட்டினார் அப்போ தெல்லோரும் புகழ்ந்து மகிழ்ந்து இறைவனைப்பணிந்து ஏற்றிப்போற்றிவாழ்த்தினார்கள் கமலரேகையானவள் என்செய்வமே இன்னாளிடத்திற் போனவிறந்து போவார்களென்றும் வசைமொழிமாத்தி இசைமொழிஎனக்குத்தந்தவேந்தனேயென்றும் இரண்டு திருவடிகளையுஞ் சிரத்தில்வைத்துக்கொண் டிறைஞ்சினாள் அந்தத்தாசிக்குவேண்டிய வெகுமதியுஞ்செய்து அவ்வூரார் யாவரும் வாழ்த்திக்கொண்டுவரத்தடிக்க விடைபெற்றுக்கொண்டு உச்சினி பட்டணம்வந்துசேர்ந்து உலகத்தையாண்டிருந்தார்போசராசனேதேவரீரும் இவ்வாறாகில் இந்தச்சிங்காதனம் உம்மைத்தாங்குமென்று பதுமைசொல்ல கதைக்கேட்டு மறுமொழி சொல்லாமல் மதிமயங்கிச்சொன்ன வார்த்தையைநோக்கி மன்னவன்கண்டான்.

முப்பதாவதுபதுமைசொல்கதைமுற்றிற்று.

முப்பத்தோரும்படிக்குக்காவலாகிய பதுமையின்றெளிப்பதுமைசொல்கதை

மற்றநாட்காலமே வித்வசிரோன்மணியாகிய போசமகாராசனெழுந்து ஸ்நானஜெபதபபூசைமுதலிய சகல கருமங்களுமுடித்துக்கொண்டு கந்தாட்சதை தாம்பூலம் தூபதீபம் நைவேத்தியங்களுங்கொண்டு சகலசம்பிரமவைபவத்துடன் வந்து சிங்காதனத்துக்குப்பூசைசெய்து முகமலர்ந்து அகமகிழ்ந்து பெரியோரைப்புகழ்ந்து பணிந்து மனந்துணிந்து படிமேலடிவைக்கப்பார்க்குஞ்சமயத்தில் அந்தப்படிக்குக்காவலாகிய பதுமையானது போசராசனைநோக்கி ஐயா பொரும்பொரும் இந்த சிங்காதனமேறிசெங்கோல்செலுத்தியவிக்கிரமார்க்கராசன் காடாறுமாதத்திற்கண்ட அதிசயம்போகநாடாறுமாதத்தில் நான்குதிசையிலுந் தூதரையனுப்பி அதிசயச்சங்கதிகளைத்தெரிந்துகொண்டு எந்தெந்தக்காரியங்களை எப்படி நடத்தவேணுமோ அப்படி நடத்தி ஆனந்தம்பெற்றிருக்குநாளையில் ஒருநாள் நடத்திய அதிவிக்கிரமத்தைக்கேளும் திருமால்புரியென்னும் பட்டணத்தை யாண்டுவந்த தநராயனென்றொரு ராசனுண்டு அவருக்குத் தொண்டுசெய்தவரக்கண்ட பெண்டுசமுத்திர தேவியென்பவளுண்டு இவர்களிருவருக்கும் அலர் தவற்றவத்தாற்பெற்ற வீமசூரன் இலக்கொடுசூரன் மகாசூரனென்று மூன்றுகிரதக்கலையென்றொரு பெண்ணுமுடையவர்களாய் அகண்டசாம்பிராச்சியத்தை யனுபவித்து வந்தார்கள் இந்தப்பெண்ணும் பிள்ளைகளும நானுகவாசித்துதருமசாஸ்திரமுதலிய சந்திடநெறியுலுத்தம ராஜூர்கள் இந்தபாக்கியத்தைப்பெற்றவர்கணடுபெருமையாய்மகிழ்ந்து மற்றவர்கபசகு விவாகநடத்திப் பத்தாவருஷபரியந்தங்குடனிருந்து பேரன்பேத்தி பருகக்கண்டு மருமகன் மருமகள் வாஞ்சையுங் கொண்டு மைந்தர்கள் வல்லமை மனதுட்கொண்டு தரைபாக்கொடியுந்திரைபாம்மறையப இருமலாம்பிரயாண பெருமுழக்கமும் கட்டெலாம் விட்டு காலுங்கெட்டு ஒன்பதுவாசலும் ஒளிபெறத்திறந்து நானுர்ப்பர் காற்றமாமுடலே பெண்ணுவிடுத்து உமபர்பிணம்போய் தன் துதி துணைநும் நாள்வந்ழைக்க அரசனுமரசியும் அகன்றனைந்தற புத்திரரெல்லாமெத்தவருந்தி மந்திரிமார்களோல மனம்வலுவேறி சமாதிக்கடனெல்லாமுடித்துப படியுள்ளோர்புகழமுடிபுனைந்திருந்துபரிபாலனையாணட சிறியோர்மூவரும தங்களுக்குள்ளேதளத்திலெல்லைகளும் அக்குள்ளகுதைகளும் அரசர்சப்பங்களும மலையுந்தோப்பும் மாளிகைகூட்டமும் பார்த்தறிந்து வரள்ளவேணடுமென்று பஞ்சகலியாணிகுதிரைமேலேறிக்கொண்டு கிழக்குதெற்குமேற்குமூன்றுதிக்கையும்பார்த்துசிலநாளகிருந்துவடதிசைநோக்கிப்பார்க்குமபடியாய் அந்தகட்பிரயாணமநடந்து பிரமாண்டமாகியவாசஸ்தலமும் மூன்றுமண்டபமும் மூன்றுகுளமும் மூன்றுசோலையும் மூன்றுசாலையும் ஒரிடத்திலிருக்கக்கண்டு இனியிராத்திரிக்கியவிடத்திற்றங்கியிருக்கவேணடுமென்று மங்களகரமாகியபனைமகிழ்ச்சிய

டன் அவ்விடத்தின் அலங்காரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் அவ்விடத்திலிருப்பவர்களில்யாரெனில்மூன்றுபேர் தேவகன்னிகைகள்பகற்காலங்களில்தெய்வலோகத்திலிருந்து திருநாட்டியமுதலியகுடவரிசைகளுமெடுத்துராத்திரிவேளையில்இவ்விடத்தில்வந்து வாசம்பண்ணிக்கொண்டிருப்பார்கள் அந்தகன்னிகைகள் இன்றைபதினம் சாயங்காலந் தாங்களிருக்கும இவ்விடத்திற்குவந்துபார்க்கும் போதுராசகுமாரர்மூவருமிருக்கப்பார்த்து அங்கசரத்துலாவியசுந்தரரோருனரமனைக்குமேலாகியபெண்கள் இந்தராசகுமாரர்பேரில்ஆசைகொண்டு தேவனோமனிதனோ சித்தனோவென்று தியங்கிமயங்கிமயங்கி மூவருமிச்சையுடையவர்களாய் இசையிட்டு மூத்தவள் மூத்தவனையும் இளையவள் இளையவனையும் நடுப்பிறந்தாள் நடுப்பிறந்தோனையும் கூடிக்கலந்து இணங்கிச்சந்தன பரிமளலமிட்டுக்குலசம்பிரமங்கள்விளங்கிதங்கணங்கொண்டுகாலையில்சற்றுன்றாகச்சமைந்து தெய்வலோகத்திற்போயிருந்து சாயுங்காலம்வந்தனப்போதும்போலெழுப்பிக்கொண்டு சம்பந்தித்தலத்தங்கானஞ்செய்வித்துதிவ்வியபோசனம் சிறந்ததாம்பூலமசுகந்தபரிமளமாமுதலியதுங்கொடுத்து ராத்திரிக்கனுப்பிவித்து விடியற்காலையிற் கல்லாக்கிப்போனார்கள் இப்படியிருக்கஒருநாளிராத்திரி இளையகாளையாக்கி மனோகுரன்தோப்பிலவந்து மலவாதைக்கிருந்துகுளத்திற்சாலைக்கிமண்டபத்தின் கரைவழிவரும்போது அம்மண்டபத்துத்தூணிலிருக்கும் மணிப்பிரதமைகளானது மனஸ்தாபத்துடனழுது ஆஆ அனியாயமாவென்று சொன்னசொல்லை திடுக்கிட்டுதிரும்பிப் பார்த்தப்ரது ஒருவரையுங்காணமல்இதென்னவிந்தைஎன்று சிந்தைநொந்தும்பதுமையை ஓ அம்மே இந்தாறுமெனறுயழைக்க அந்தஓசைவழியேவந்துபார்த்தால இந்தப்பொம்மையிருக்கக்கண்டுஎன்னகாரியமென்று இந்தவண்டீச்சட்கல பிரதமைசொல்லுகின்றது.

ஐயாநீங்கள்யார்பெற்றபிள்ளையோ ஆருடையசெல்வமோ அனங்கராயனைப்போல் அழகாயிருக்கிறீர்கள் உங்களை இந்தக்கன்னியர்கள்கர்மலையில்போட்டுக்கொண்டு இராத்திரிக்கு மாத்திரம் மோகத்தையும் தேகத்தையுங்காட்டி பகலிற்றுங்களை கல்லாக்கிவிட்டு தெய்வலோகம் போகுரர்கள் ஆகையால் உங்களுக்குவந்திருக்கும் அவதியைக்குறித்து அவஸ்தைப்பட்டு அழுதேனென்று பொம்மைசொல்ல அதையக்குமாரர்கேட்டு நாங்கள் தப்பிப்போகும் உபாய முண்டாவென்று கேட்க உண்டென்று பிரதமைசொல்ல அவ்வளவு உதவிசெய்தால் நாங்களுமுனக்குபகாரமென்று அரசனபொம்மைக்கு உபசாரஞ்சொல்ல அதற்கு சந்தோஷமடைந்து ஏழுருளைக்கல்லாகேன அதைக்கல்லை வையல்வையத்தக்கொண்டு இராத்திரிக்கு அவளிடத்தில் நானுருகயின்பமுடிந்து அந்த அவட்டல்லறைஅவளயர்ந்துநித்திரைபோகுஞசமயத்தில நீங்கள் மூவருமெழுந்துகுறும்பாகமேவழி திருக்குவழியாகவழுந்துபோங்கள அந்தக்கன்னியர்கள் உங்களைத்தேடப்பெற்றலாட்டர்ந்துவருவார்கள்

நீங்களவர்களுடன்பேசிமகிழ்ந்தால் என்னென்றைக்கும் கல்லாய்போக சபிப்பார்கள் ஆகையால் அவர்கள்கிட்டநெருங்கப்பார்த்து ஒருகல்லைப் போடுங்கள் அந்தக்கல் அவர்களைத்தடுக்கும் அதற்குள்ளாகநீங்கள் அப்புறம்போகலாமென்று குளிகைகல்லைக்கொடுத்து உங்கள் பட்டணத்தையுந்தாய்தகப்பன்மார்களிடத்திற்போய்ச்சேருங்களென்று அநேகபுத்திகளைச்சொல்லிவிடுக்கபிரதமையாகியசோணாதேவதையென்றவளைய்விடைபெற்றுக்கொண்டுமூவருமொரேமனோதாவெழுந்துகுதிரையேறி புறப்பட்டு வேகமாய்வரும்போது அந்தக்கன்னியர் மூவரும்விழித்துப் பார்த்துத்தங்கள் தங்கள் கணவரைக்காணாமையால் கண்மூடிகண்திறப்பதற்குமுன் அந்தக்காவலர்போம்வழியைக்கண்டுபிடித்து பின்தொடர்ந்தார்கள் இவர்கள்வருவதை அவர்களறிந்து ஒருகுளிகைகல்லைவிட்டெறிந்தார்கள் அந்தக்குளிகையின்மகத்துவமானதுகாடுஞ்செடியும் பூண்டுபுல்லுங் கல்லுஞ்செல்லும் வனமும்புனமும் ஆறுந்தூறுமாயடர்ந்திருப்பதைத்தாண்டி இக்கன்னிகைகள் வருமுன்னமே இவர்கள்மூவரும் நெடுந்தூரம்போனார்கள் அந்த தேவமாதர்மறுபடியுந் தொடர்ந்து இதோவந்தோம் விட்டோமா உங்களையென்றுவரக்கண்டுமறுபடியும் ஒருகுளிகைக்கல்லை யெடுத்தெறிந்தார்கள் அந்தக்குளிகையானதுகருங்கடல் வெண்கடல்செங்கடல்பெருங்கடலென்னும் நாலுகடலாச்சுது வேசரி மார்க்கத்திலெழுந்து அதையுங்கடந்தோடிவேகமாகநடந்துதொடர்வதைகண்டுபின்னொருகுளிகைபோட்டார்கள் அதுவானதுகரடிபுலிகாட்டானை சிங்கம்பல்லியாளிமுதலியகண்டபேரண்டங்களுமாய்நிறைந்துமலித்தபோது அதுகளைக்கடந்துவருவதற்குச்சற்றுநேரஞ்சென்றது இதற்குள்ளே கொஞ்சதூரமிஞ்சிப்போனார்கள் இக்கன்னியரும் அஞ்சாமற்றொடர்ந்தபோதுபின்னையுமொருகுளிகையைப்போட்டார்கள் அதாவதுபாம்புதேள்கட்டுவாய்காலிபூரான்முதலிய விஷஜந்துக்களெல்லாமுண்டாச்சுது அவைகளெல்லாம நீங்கிவருவதற்குமுன்னே அரசர்கள வெகுதூரம்போனார்கள் இத்தக்கன்னியரும் விடோமென்று வேகமாய் வரும்போது இளையவனாகியமகாசூரன் இன்னொருகுளிகைக்கல்லையெடுத்து வீசினான் அதைவீசினவுடனே கன்னிகைகளுக்குக்கண்கெட்டார்போலதடுமாறிகைகால்நடுக்கிமெய்சோர்ந்துகண்ணாவிருக்குந்தக்காவலு பூரமல்பொழுதுவிடிந்துபோச்சுதே என்னசெய்வோமென்று நின்றுவிட்டார்கள்காவலர்மூவருங்காதவழிபோய்விட்டார்கள் அப்போதுசரஸ்வதியைப்பாடி அந்த அம்மனருளால் கண்முதலியதுந்தெரிந்துசோகப்பட்டுமனோதுக்கமுடையவர்களாய்க்கன்னியர் மூவருங்கலங்குமுக்தயள் சொல்லுகிறாள் நம்மிடத்திலிருந்து நாயகர்மூவரும இளையவனுடையஆதரவில்போனார்களேயல்லாது அவர்களிடத்தில்குளிகைகல்லில்லை இளையவனிடத்தில் அந்தக்குளிகைக்கல்லேது இந்தசமயமீடவிட்டு லகுளிகையிடத்திற்குமேல இருந்தது இதை இளையவனெடுத்துதன்மாப்பிள்ளைக்குக்கொடுத்தது இந்தவளவுசாமர்த்தியமனுப்பினான் இவனைவிடவேறொருவருமில்லையென்று மூத்தவளிருவருஞ் சோர்ந்து ஆச்சிரப்பட்டு

மகாரூரன் வைப்பாகிய ரூபகன்னிகையைமயிரைப்பிடித்திழுத்துமண்மேற்றள்ளி இடித்து எலும்பையொடித்து கால்வேறு கைவேறாகக்கிழித்தெறிந்துபோட்டு இந்தக்கன்னிகையிண்டுபெருந்தெய்வலோகசபைக்குகாலப்பிரமாணத்தப்பாமற்போய்நாட்டியமாடினார்கள் இப்பால்மகாரூரன் தனக்குரியகன்னிகையாகியரூபகன்னிகையிறந்ததைக்கண்டு அதிகவிசாரங்கொண்டு அன்னைமாரிருவரையும் நோக்கி எனக்கிந்தகுளிகையிலாவைச்சொன்னவளிவளென்று அக்கினியாய்க்கொன்றுவிட்டார்கள் என்னிமித்தியமாய் அவளிறந்தது அல்லாமலும் எனக்குமுன்றுவேளை விரித்தின்பங்கொடுத்தாள் அவள்துன்பமுறும்படிக்குநாங்கண்டு என்பிராணனை வைத்திருக்கமாட்டேன் அவளுடன்கூட நானுமிறப்பேனென்று சொல்லிப்போகின்றதம்பியைப சுகையனிரண்டுபேருந் தடுத்து அப்பா ஐயா அந்தக் கன்னியர்கள் மெத்தக்கெட்டவர்கள் அவருன்னைக்கண்டால் கல்லாச்சமைத்துவிடுவார்கள் நீபோகவேண்டாமென்று எத்தனைவிதசருமங்களைச் சொன்னாலும் அவைகளைக்கேளாமல் சரசுத்துவசிந்தனுக்குசமுத்திரமுழங்காலென்னுந்தன்மையையுடையவன்னை நீங்கள் பிழைக்கச்சொல்லித்தடுக்க வேண்டாமென்று அவர்களைவாயடக்கச்செய்து அவர்கள்பேச்சைக்கேளாமல் அந்தரூபகன்னிவிழுந்துகிடக்கும் இடத்திற்குவந்து கைவேறுகால்வேறு யிருப்பதையெடுத்துப்பொருந்திதன்பேரில்போர்வையிருந்த பச்சைவடத்தால் அவளைமூடி இவள்பக்கத்திலிருந்துக்கொண்டு அவளிருந்ததந்தையின்பத்தையும் எனக்கு அவள் உதரபானந்தத்தையும் அவளிப்போது பட்டதுன்பத்தையும் தாங்கள் வந்ததையும் இப்போது நடந்ததையும் அன்னைமார்பட்டணம்நோக்கிப்போய்விட்டதையும்நினைத்து கரைந்துபெருமூச்சுவிட்டு மனம்வெறுத்தெழுந்து கட்டைமுட்டைகள்சேர்த்து அக்னிதகனம்பண்ணிநானுமிறந்துவிடுவதென்றுதேறி சகலமுந் திட்டப்படுத்திநெருப்புமூட்டப்போகிறசமையத்தில்கயிலாசபதியானவர்ரிஷபவாகனரூடராய் பார்வதிசமேதராய்வந்து ஏனப்பா விசனப்படுகிறாயென்றுகேட்க தன்னைமறந்து ஆனந்தம்பெருகும்படியாயழுது அடிவணங்கித்தொழுது ஆதியே அனாதியே பரஞ்சோதியே நீதியே உமையாள் பதியே ஜகப்பிரக்கியாதியே கடசமயவாதியே எல்லாவுயிரையும்பெற்றயிறைவியேயென்றுபணிந்துதன்குறையைச்சொல்லிக்கொண்டான் பரமேஸ்பரன் மனமிரங்கிமகிழ்ந்து அந்தரூபகன்னிகையைஎப்போதும்போலெழுந்திருக்கச்செய்தார்

அந்தப்பெண்ணும்நித்திரைசெய்துவிழித்தவளைப்போலெழுந்து கர்த்தரையும் கடாட்சவீட்சண்ணிய கமலக கன்னியையும் வணங்கி வாழ்த்தியபோது அவர்களாசீர்வதித்துப்போய்விட்டார்கள் அப்போது அந்தரூபகன்னிகையானவள் தானடிபட்டிறந்ததும்இப்போதுபிறந்ததும இதுகளையெல்லாம் தெரிந்துக்கொண்டு இந்த மகாரூரனை வணங்கி எத்தா சிலநாள் ளங்கிருந்தோம் இன்றைக்கு யினைக்கப் பிரிந்தோமென்று போயவிடலாம் வணக்கிவந்து முகைகெட்ட கன்னியர்கள் என்னைக்கொன்றதாரிது பின்பட்டபடியுனையுடைய வென்னுட

ல் உடன்கட்டையேறத் துணிந்த உமதுபாக்கியத்தால் செகதிசனரு ளைப்பெற்றுத்தயான் இன்றுமுதற்கொண்டு உமக்குரிய ஆசைநாயகி யானேன் நீரெனக்குரிய நேசபுருஷதெய்வமென்று விளம்பி ஆனால் நான் இரவும்பகலும் உம்மிடத்திற்றானே யிருக்கலாகாது இந்திரலோ கத்துக்குபோகவேண்டியிருப்பதால் ஒரு தந்திரஞ்செய்கிறேன் அதா வது என்னுடைய மந்தரசுந்தரமிருந்தவிணையை வரவழைத்துத்தா ரேன் நான்வரவேணுமென்னும் இஷ்டம் எனக்கெப்போது தோணு தோ அப்போது அந்தவிணையைமீட்டு அதுஎன்னை உம்மிடத்திற்கூ ட்டும் நான்வந்து கலந்து பிரிந்து புணர்ந்துபோகிறேன் மற்றகாரியங்க ளும் கலந்துபேசிக்கொள்ளலாமென்று ஒருதந்திரஞ்சொல்லி தன்னு டைய விணையை வரவழைந்துக்கொடுத்து பத்திரம் பத்திரம் பிறர்கை யிற்கொடாமல் காப்பாற்றிக்கொள்ளுமென்று தேவேந்திரனுடைய ச பைக்கு நாட்டியமாடப்போனாள் அவ்விடத்திலிருந்த மற்ற இரண்டு கன்னியரும் இவனைக்கண்டு இவனுடன் பேசவெட்கமாயிருந்தார்கள் இவள்மாமூல்படிக்கு எல்லாரிடத்திலும்பேசி வேடிக்கையாயிருந்தாள் இப்படியிருக்க இந்த மகாசீலனாகிய ராசகுமாரன் அவள் பிரிந்துபோ னதைக்குறித்து கொஞ்சம்மனதுநொந்து நமதுகையில்வீணையிரு க்க நெய்க்கழுவானேனென்று உடனே சந்தோஷங்கொண்டு தங்கள்ப ட்டணத்தைநோக்கிச் சிலதூரம் நடந்து அவ்விடத்தில் இவனுடைய வியாபகங்கொண்டு சாயங்காலவேளையில் ஒரிடத்தினிற் றங்கிவிணையை மீட்டினான் அப்போதவ்விடத்தில் ஒருசடாகமும் தங்கப்படிக்கட்டுக ளும் நீராழிமண்டபமும் நந்தனமச்சோலைகளும் கேத்தியாகியசாலை களுஞ் சவுக்கடிமேடைகளுஞ் சாய்ப்பானதிண்ணைகளும் பளிங்குமாம ணிமண்டபமும் பற்பலவிசித்திரவேலைகளுமாக அமைந்திருக்கக்கண்டு அந்தமண்டபத்திற்போய் மகாகுரணிக்கியிருக்கும்போது தேவகன் னிகையாகிய ரூபகன்னிகையானவள் பஞ்சகச்சாயபரயான்னமும் வி ருப்புறும்படியாகிப் பருப்புநெய்யும் பாலுந்தயிரும் பாக்குவெற்றிலை யும் பஞ்சவிடையங்களும் புட்டசந்தனகஸ்தூரிசவ்வாது இன்னம்பல விதபக்குவமணங்களுடன் அந்த மண்டபத்தில் வந்திறங்கி நாயகனு க்கு ஸ்நானமாட்டிவைத்து தானுங்குளித்து சந்தனாதிபூசி அட்சதை பொட்டிட்டு புட்பமுடித்து ரோசனமுட்டி தாம்பூலந்தரித்து தாங்க ளிருவருந்தனித்து சரசஞ்செய்யுங்காலையில் அந்தமண்டபத்தின் பக்க த்தில ஆலவிருட்சத்தடியில் நெடுநாளாய்த்தவஞ்செய்துகொண்டிருந் த ஒருபெரியவர் அந்தப்பெண்ணைக்கண்டு மோகங்கொண்டு காமாக்கி னியாற்றலங்கியெறிந்து கண்ணீர்சொரிந்து தவத்தை யவதிலவிடுத் து டலதையடுத்து படபடத்து விடவிடத்துமனங்கூசி மகாகுரூரனுக் கெதிர்லவந்து அண்ணலே இன்றைக்கென்னைக்காத்திரட்சிக்கமனு ம் நீதயைசெய்யாவிட்டால மன்மதனென்னும் பாவியால் ஆவியிழப் பேன் ஐயா உமதொருகச்சிதமானவச்சிரவாள் தருவேனென்னைவெச்சா தீர இந்தபச்சைக்கிளிப்போன்ற கன்னிகையைத் தாருமென்று காலடி யில்வீழ்ந்து வேண்டினார் அந்தவசனத்தை மகாகுரூரன்கேட்டு நலல

தையா நீர்கொடுக்கும் வச்சிரவாளினுடைய மகிமையென்னவென்று கேட்க இந்த வாளையுருவி உன்மனதுக்காகாதபேரில் விடுத்தால் உடனே அவர்களைச்சங்கரித்து உன்னிடத்தில் வந்துறையுமென்று சொல்ல அப்பேர்ப்பட்ட வச்சிரவாளைத்தாரும் பார்ப்போமென்று கரத்தில் வாங்கி அந்தவாளாயுதத்தை உறைவிட்டுருவி விதிதப்பிகேட்ட சந்நியாசியைவெட்டென்றுவிடுத்தான் அப்படியேசந்நியாசியையிரண்டுதுண்டாகவெட்டிப்போட்டுவந்து உறையுட்புகுந்தது அப்பாலிந்த மகாசூரன்மனமகிழ்ந்து ரூபகன்னிகையுந் தானும் துணையாகிய கலவி அமளியில கலந்திருந்து விடைபெற்றுக்கொண்டு தெய்வலோகமேபோனாள்.

இந்தராசகுமாரன் மறுநாள்வழிநடைகொண்டு வரும்போது சூரியன்அஸ்தமானங்கண்டு கடுகாட்டிலிறங்கி வீணையைமீட்டினான் அவ்விடத்திலும் நேற்றையதினங் கண்டவிதத்தைப்போல மண்டபங்கள் முதலிய தோப்பையும்பார்த்து அதிலிறங்கியிருக்கான் அந்த ரூபகன்னிகையானவள் தேவாமிர்தத்திற்கொப்பாகிய நவநீதமும திவ்வியகனிவர்க்கமுங்கொண்டுவந்து கணவனையலங்கரித்து தனதுடைய கண்குளிரப்பார்த்து போசனந்தியமூட்டி புட்பசந்தனாதி பொருந்தியபூரணச்சந்திரோதயத்தில் புணரப்போம்போது அந்தயிடத்திலயோகரு செய்துகொண்டிருக்க ஒருபெரியவர் இந்தப்பெண்ணினுடைய வாசனையும் தேககாந்தியையும் முகவிலாசத்தையும் இவளுடைய உல்லாசத்தையுங்கண்டு த்லேமயக்கங்கொண்டு உனக்குநான் தொண்டுபுரிவேனென்று மகாசூரனிடத்தில்வந்து ஓராசபுத்திரனே நான் செய்துப்போகிறேன்கோபமில்லாமல் என்னுபத்வையுந்தீர்க்கவேணும் பூபாலனே உனக்கொருசோளிப்பைதருகிறேன் அதனாலுமக்கு வெகுசவுக்கியமுண்டு எனக்கிந்தக்கன்னிகையைக் கொடுமென்றுகேட்டான் அப்போது மகாசூரன்சந்தோஷமடைந்து நீர்கொடுக்குஞ் சோளிபானது என்னலாபத்தைத்தருமென்றுகேட்க யோகபுருஷன் சொல்லுகிறார் அரசனே இந்தச்சோளியிற் கையைப்போடுவாயாகில் உனக்குவேண்டிய சொர்ணமணிப்பாத்தியங்களுமுவருமென்றுசொன்னான் எங்கே அந்தப்பையையெடுமென்றுவாங்கிகொண்டு முன்னிருந்தவச்சிரவாளையுருவிபிச்சைக்காரயோகபுருஷனை வெட்டிவிடென்றுவிட்டுவிடவே அவனை அப்படியே துண்டாகவிரண்டாக்கிவிட்டுவந்தது அப்போது இந்தக்கன்னியுமன்னனும் நன்மையமாகக்கலந்து பொழுதவிடியளவு மிருந்து புணர்ந்து விடைபெற்றுக்கொண்டுபோனாள் இந்தப்பூபதியும் வழிப்பிரயாணமாய் வரும்போது சாயங்காலம்வரைக்கும் நடந்து இராக்காலம் நெருங்கவேயிலோரத்திலிருந்த மந்திரித்தவீணையைமீட்டினான் அவ்விடத்திலும் முன்சொன்னவண்ணம் அலங்காரமண்டபம் அமைந்திருக்க அந்தபீடத்திற்சிற்றுண்டிமுதலியதிவ்வியபோசனங்கொண்டு ரூபகன்னிகைவந்து நாயகனுக்களித்து உவந்துமகிழ்ந்து புகழ்ந்து இருவருங்கலந்துவிளையாட எத்தனிக்கும்போது அவ்விடத்திலொரு அதிதிவந்து ஐயா மதிப்பயனென்னவாட்டுமுன் உயிரோட்டுமுன் இந்தப்பெண்ணையெனக்கு

க்கொடுப்பிராகில் உனக்கொருவித்தை காட்டுகிறேனென்று சிந்தை நைந்துரைத்தான் அந்தவார்த்தையை இந்த மகாசூரன்கேட்டு அதென்ன வித்தையென்றுகேட்டான் என்னிடத்திலொருயெந்திரபடியிருக்குது அதன்மீதேறிக்கொண்டு எவ்வளவுதூரம் போகநினைத்தாலும் அந்தயிடத்திற்கொண்டுபோய் சேர்க்குமென்றுசொல்லவே எங்கே அந்தபிடிபடியைப் பார்ப்போம் என்று கேட்டுவாங்கிக்கொண்டு வச்சிரவாளையுருவிச் சித்தைநாடிய விதிவழிதப்பி உதிமதிகாலில்வீழ்ந்த அந்த உநிதினைப்வெட்டியெறிந்துவந்து வாவென்றான் அப்போதே அவனை வெட்டியெறிந்து மன்னனிடத்தில் வந்தடைந்த வாளைக்கண்டு மன்மதனவேலைக்கின்று நல்லகாலமென்றுவந்த ஆலகாலம் போன்ற விருள்களுமவனைக்குந் தேய்ந்த ஆய்ந்த அறிவினையுடையவன் அவ்விடத்தியனுப்பிவைத்துக்கொண்டு அன்றுமுப்பது கடந்த நின்பட்டணத்துக்காருகானமையில் வந்திறங்கி அந்தமலையிலடிக்கனைசெய்து வினையைமீட்டினான் எங்கும்புகழ்ந்தநதிகள் சிங்காரஞ்சாலையுஞ்சித்திரமணிமேடையுந் திருக்குளமும் தோப்பு மமைந்திருப்பதைக்கண்டு அந்தவிடத்திற் போயிருந்தான் அதுகாலையில் ரூபகன்னிகை யானவள் அமிர்தமுதலாகிய அலங்கார ஆபரணமணிபணிப்பணிகளுங்கொண்டு வந்து அலங்காரஞ்செய்து இருவரு மிளப்பாறி யுண்டு இங்கிதங் கொண்டிருக்கும்போது ஒருசிறு புருஷன்வந்து மெத்தவருத்தி சித்தசன்பானதாம்பிக்கிட்டபார்த்து பேசலுற்ற பிரபுவே மகாசூரவல்லாசனேநான் ஒருவரந்தருகிறேன் அதனுடையசெய்கை என்னவென்றால் சிதைந்துபட்டுப்போனபேர்களெவர்களானாலும் அவர்களைச்சேர்த்து இந்தப்பிரம்பினாற்றட்டினால் உயிர்பெற்றுவாழ்வார்கள் இப்பிரம்பை நான்வெகு அருமையாய்சம்பாதித்தேன் பிராமணனுக்குமிஞ்சிப்பொருளில்லாமையால் இந்தப்பெண்ணால் என்பிராணன்போகுது ஆகையால் அப்பிரம்பைக் கொண்டு எனக்கொருவரம் கைக்கொடுமென்றான் அப்போதந்த மகாசூரன் சந்தோஷித்து என்னவரம்வேண்டுமென்றான் அப்போதந்தச்சித்தன் இந்தப்பெண்ணைவிவாகமாகத்தாருமென்றான ஆஆ நல்லதெனக்கே அந்தப்பிரம்பைதருகேட்க அந்தச்சித்தசன் சித்ரப்பிரம்பை எடுத்துக்கொடுத்தானே அதைப் பெற்றுக்கொண்டு செத்தவர்களைப்போலவனையுஞ் சேர்க்கும்படியாய் வாளைவிடுத்துமடித்து பாவையோடியுடன்கூடி பத்துமுதலியவெல்லாமடித்து இந்தபண்டபக்குளமுதலியயாவும் உடனே மறைந்து போகும்படி செய்து இறைவனைநோக்கி நான்கொடுத்த விளைபத்திரம நீர்தவிரமற்றொருவரும் இதைத் தட்டாதிருக்கும படியாய் பாதுகாத்துக் கொள்ளுமமாற்றசாயான்களை யொருவருக்குங் காட்டாதிர் பத்திரம் பட்டணமபோய்சேரும் காலமில்லாதகாலத்திலெல்லாக கருதாதிரென்றுவேண்டியநீதி புத்தியுத்திகளையுஞ்சொல்லி விடைகொடுத்துவிட்டுதேவலோகம்போனான் விடியற்காலையிலெழுந்து மகாசூரன நித்திய செபதபபூஜைமுடித்துக்கொண்டு பஞ்சகல்யாணி குதிரைமேலேறிவருவதைப்பட்டணத்துசெனங்கண்டு மந்திரிசாமந்தர் முதலியபேருடனே தாயன்

மார்களும் எதிர்கொண்டுபோய் அரண்மனைக்கு அழைத்து வந்து ஒருவர்க்கொருவர் க்ஷேமசமாச்சாரத்தைகலந்து பேசிக்கொண்டுதாய் தந்தைதமையன்மார்களுடன் சம்பிரமமாய்வாழ்ந்துக் கொண்டிருந்தார்கள் தான்கொண்டுவந்த சாமானமுதலிய யாவற்றையும் ஒருசிங்காரவனத்திலிருக்கும் பெரியபங்களாவிற்போட்டுசாவியிட்டுக்கொண்டெந்த வேளையில் தனக்கிஷ்டமோ அந்தவேளையில் வீணையைத்தட்டி ரூபகன்னியைக்கிட்டி இருகாதநாலு மணித்துக் ட்டிகாடனமுதலியதுக்கலைமலட்டுக்கட்டி இஷ்டமாயிருக்குங்காலையில் ஒருநாள்மகாகுரனானவன் புதுசிலிருந்து கட்டுபாடில்லாமல கொஞ்சமசூதர்ப்பார்த்தானிருக்குற அறையைபலட்டுகிறதுமசில்வேளைபூட்டாமலும்இப்படியிருந்தார் இவனுடைய தங்கையாகிய அமிர்தக்கிரணகலையானவள் அண்ணனிருக்கும் அரண்மனைக்குவந்தாள் அப்போது மகாகுரன் மான்வேட்டையாகிய தோட்டத்தைச்சூழ்ந்து பார்க்கப்போயிருந்தான் அந்தச்சமயத்தில் அவனுடைய அறையிலபுகுந்துபார்க்கும்போது இந்த சோளியைமாட்டியிருந்தது இதி லேகாகிலும் பணமுதலிய மணிகளிருக்குமென்று கையைப்போட்டாள் வேண்டியமணியும் பணமு மிருந்தது அதையெடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போவோமென்று திருமபினாள் பக்கத்திலிருந்த பாதத்தாட்டில் கால்வைக்கவே இவளரண்மனைக்குகொண்டுபோயவிட்டது ஆச்சரியமடைந்து ஐயோ அண்ணன் கண்டால் திட்டுவானேயென்று அங்கிருந்தபடியே அண்ணன் அறை விட்டுக்குப்போவென்று நினைக்கவே இங்கே கொண்டுவந்து விட்டது அந்தமிதியடியை இருந்த இடத்திற் விட்டுவிட்டு வாளையுருவினாள் அது பளபளத்தொழ்ப்பி இவளுடையகையை யிழுத்தது அப்போது ஒருஎலியொன்றுஓடக்கண்டு அதனமேல்வீட்டினாள் அந்தஎலிதுண்டாகவிழுந்தது அந்தவாளை யுறையிற்போட்டுக்கொண்டு பிரம்பையெடுத்து ஒன்டாய்நடக்கிற எலியை யடித்து வெளியிற் றள்ளினாள் அது பிழைத்தோடிப் போச்சுது இதுகள் ஆ ஆ நமமண்ணனவிந்தையாகியசாமான்கள் கொண்டுவந்து வைத்திருக்கிறானென்று சிந்தைகளித்து அந்தவீணையையிட்டி இசைகூட்டினாள் அப்போதுபகற்பதினைந்துநாழிகையாகையால் நமதுசிந்தவங்கணக்காரனுக்கு என்னமோ ஆபத்தாமோ வேளையென்று அங்குயிருக்குமொருவருக்குந் தெரியாமலோடி வந்து அறையிற்புகுந்தா னறையிற்காணுமலேங்கி பக்கத்திற்பபந்துமறைவெளிறான் இல்லையென்றுதங்கைசொன்னாள் இப்போது அவரெங்கேயென்றுகேட்டான் அவரிந்த சிங்காரத் தோட்டம்போ யிருக்கிறுரென்றுதங்கைசொல்ல நீ இங்குவந்தது அவருக்குத்தெரியுமா வெனறுதேவகன்னிகைகேட்டாள் தெரியாதென்று ராசகுமாரத்தி சொனனாள் என்கையந்தவீணையை இப்படிதாவென்று வாங்கி கொறுக்கி உடைத்தப்பல்லகசிறுத்தென்றுகடித்து வீணையை வீசியெறிந்து இன்று முதலியமைத்தை யிருந்தாலொன்று உன்தமையனுக்குச் சொல்லெனறுசொல்லிப்போக ரூபகன்னிகை கோடிசூரியப் பிரகாசம்போற் ஜொலிக்கும்படிக்குத்தேவேந்திர உலகத்திற்குப் போய்விட்டாள்

அப்பாலிந்த அமிர்தகிரணகலையானவள்பயந்து ஆருடனுஞ் சொல்லாமல் திருடனைத் தேள்கொட்டினதுபோல் தன்வீடுபோய்ச் சேர்ந்தாள் அதன்பின்பு மகாசூரன்வந்து அறையிற்புகுந்து வீணைமுறிந்து கிடப்பதைப்பார்த்து முகம்வியர்த்து பூமியில்விழுந்து கடகடவென்று புரண்டழுது மூர்ச்சை யடைந்து முறித்தெழுந்து ஸ்நானபூசை சாப்பாடில்லாமல்தயங்கி அழுஞ்சமையத்தில் தாய்தந்தை தமயன் சகலரும்வந்து இவ்வசனங்களெல்லாங் கேட்டு நாங்களொன்று மறியோமென்று உடனுயிர்த்திருந்து அம்மாகுழந்தாய் நீயறிவையா வென்று கேட்கும்போது தங்கையும் நடந்தசங்கதி சொன்னாள் அங்கவள் கேட்டு அறிஞர் முதலிய பேர்களுடன்சொல்லி நான்போய் அந்தப்பெண்கள் பெருமானைக் கண்டு கைக்கொண்டுவந்தால் வருவதேயல்லது இல்லாவிட்டா லென்னைக்காணமாட்டீர்க ளென்று யாவருக்குஞ் சொல்லவே அவர்களெல்லாருங் கண்ணிருதிர்த் தழுது அப்பா பூலோக மல்லவே தெய்வலோகத்திலிருப்பவர்கள் உனக்கு வசப்படுவார்களா நீயிவ்விடத்திற்போகலாமா உன்னால்கூடாதே ஒருவேளை யெப்படியிருக்குமோ தெரியாது போனதுபோகநமதுகுலத்தில்நல்லபெண்ணைக்கலியாணம் பண்ணிவைக்கிறோம் பாக்கியத்துடனிருக்கலாமென்று எத்தனைவிதத்திற்றடுத்தாலுங்கேளாமல் ஒரேபிடிவாதமாகப் புறப்பட்டு பாதக்குறட்டின்மேலேறிக்கொண்டு ஜோளிவாள் பிரப்புமுதலிய தெல்லா மெடுத்துக்கொண்டு ஒருவருக்குந்தெரியாமல் தெய்வலோகத்திற்குப் போய் தேவ ாசன்சபையில் நடக்கும் நாட்டியங்களைப் பார்த்துக்கொண்டு நின்றான் அப்போதவ்விடத்தி லிருக்குந் தேவதூதாள்பார்த்து யாருங் காணும்மானிடதூதன் தேவசபைக்குள்வந்திருக்கிறாய் அப்பால் போவென்றதட்டினார்கள் இந்திரனுக்கு தந்த தொந்திரவெல்லாம் மானிடமனிதரால்தீர்ந்ததா அல்லது தேவமனிதரால் தீர்ந்ததா என்ன தம்பி தன்னைமறந்துபேசுகிறாயென்று மகாசூரன் சொல்லவே அந்தச்சொல்லை இந்திரனிடத்திற்போய்ச் சொன்னார்கள் அந்தப்புரத்தான்யோசிக்காமல் வந்த மனிதனைக் கொல்லுங்களென்ற கோடாகோடி சுந்தரன் வாசகரைத் தொந்தோமென் றனுப்பினான் அவர்கள் வருவதை ரூபகன்னிகைகண்டு ஐயோநம்மாலல்லவோ இவன் பிராணன்போகப் போகுதென்றுகலங்கி ஒஓ வச்சிரவாள்முதலிய வஸ்துக்களிருக்கவில்லையா அதனால் நமதிஷ்டனுக்கு யாதொரு குறைவு மில்லையென்று மனந்தேறியிருந்தாள் இப்பாலரக்கர்கள் கோடிபேரு மீறித்தூறினார்கள் அவர்களைக்கண்டு சாந்தவார்த்தைகளாகச்சொல்லியுங்கேளாமல் மகாசூரன் கோபங்கொண்டு வச்சிரவாளையுருவிக்கொண்டு இக்ஷணமிந்த ராக்ஷதரையெல்லாம் பக்ஷணம்பண்ணிப்போடென்று பிரயோகஞ் செய்தான் தக்ஷணமே அலட்சியமாய்கட்சிசெய்துவந்த அரக்கரைக் கண்டதுண்டமாய் கால்மாடுதலைமாடாய் விழச்செய்து மகாசூரனுடைய வாளுறையில்வந்துநுழைந்ததைத் தப்பிப்பிழைத்தோராகிய வானவர்கண்டுதேவேந்திரனிடஞ்சென்று அகிலாண்டகோடி பிரமாண்டநாயகாபராக்கு

தேவரீருத்தாரப்படிக்கு ஜெயம்பெறச்சென்ற ஒருகோடி ராட்சதரும்
ஒரு நொடிப்போதிறந்து போம்படிக்குக் கூர்மையாகிய வச்சிரவாளை
விடுத்து வெட்டி மடித்து இன்னம் வரத்தக்கபேர்க ளுண்டானால் வா
ருங்களென்று யாருமெதிரில்லாமல் அஞ்சா நெஞ்சுடையவனு யிருக்கி
றானையாவென்று சொல்ல அந்த வசனத்தைக் கேட்ட ஆகண்டலவன்
மேகமண்டலத்தைப்பார்க்கிலும் மேலாகவிரைந்துமுப்பத்து முக்கோ
டி தேவர்களுட னெதிர்த்த இப்பேர்ப்பட்ட வல்லமைசாலி எப்பேர்ப்
பட்டவனோ அவனைப்பார்ப்போமென்றுநோக்கியபோ தந்தமகாசூரன்
இந்திரன் முதலாகியபேர்களுக்கடிவணங்கி வந்தனஞ்செய்து வணக்க
த்துடனின்றான் இந்தமைந்தனைப்பார்த்துசிந்தைகளித்து அப்பா நீயா
ர் உன்பெயரென்ன உங்களூரெது உன்தாய்தந்தையின்பெயரென்ன நீ
இவ்விடத்திற்கு வந்த காரண மென்னவென்று தேவேந்திரன் கேட்க
மகாசூரன்மகிழ்ந்து வச்சிராயுதனைப் புகழ்ந்து வணங்கி மகாதுரந்தர
மண்டலேஸ்வரா விண்டலத்தையாளு மெய்தெய்வப்பொருளே எழை
யாகிய என்னுடையமனுவைக்கேளும் தர்மாபுரியையாளும் தாமேந்தி
ரனுடைய பிள்ளைகளமூவரில்நானிளையவன்என்பேர்மகாசூரன் தேவ
ரீ ரிடத்துக்கு நானொருகாரியமாய் வந்தேன் அதென்னவெனில் தங்க
ளுடையசமூகத்தில் நடந்துவந்தமுறைமையின்னதென்று சொன்னான்
அந்தசங்கதிகளையெல்லாம் இந்திரன்கேட்டு வந்தமனிதனை யழைகது
நீர்சொல்லிய கன்னிகைகள் பத்துலக்ஷம்ஸ்திரீகளில் எங்கிருக்கிறார்க
ளவர்கள் நீர் நன்றாய்ப் பாருமென்று சொல்ல அவருத்தரவின்படிக்கு
இந்திரனுடைய ராசகொலு மண்டபத்தில் இந்த கன்னியர் மூவருங்
கை சேர்த்துக் கலந்தாடுவதைக்கண்டு இதோ இருக்கிறார்களே அவர்
கள்தானென்று மகாசூரன் சொல்ல தேவேந்திரனவர்களை வரவழைத்
து பூலோகபுருஷர்பேரி லாசைவைத்து நீங்களிவ்விடத்துக்கு வரலா
மா நீங்கள் மகாகாமிகளா நீங்கள் ஆகையா லினிமே லிவ்விடத்திற்கு
நீங்கள் வரவேண்டிய தில்லை நீங்கள் மூவரும்போய் இந்த மகாசூரன்
சொற்படி கேட்டு வாழக்கடவீர்களென்று வேண்டிய ஆடையாபரண
முடுக்கை யுச்சிதங்களுங் கொடுத்தனுப்பிவிட்டு மகாசூரனைப்பார்த்து
அப்பா நீயாரோஎவரோவென்றுதெரியாமல் ராட்சதரை யனுப்பிவை
த்தே னந்தராட்சதர் கோடிபேரையுங் கொன்றுவிட்டையே நீயாகிலு
ம் முன்னடி தெரிவிக்காமற்போனாய் ஆனாலுமெனக்குமெத்தந்த அமி
ர்தகிரணக்கலையைக் கண்டு நீயாரென்று தேவமங்கைகேட்டாள் நான்
மகாசூரனுடைய தமக்கையென்று நங்கை யுரைத்தா ளதைக் கேட்டு
நல்லது உன்தமையன் இந்தவினையை மீட்டச்சொன்னார் கஷ்டமாச்
சுதென்று இந்திரன் சொன்னான் அதைக்கேட்டு ஐயா இறந்துபோன
இத்தனைபேரையுமெழுப்பித்தருகிறேனென்று சஞ்சியாசிகொடுத்தப்பி
ரம்பாற் றட்டினன் வாளினல் வெட்டிய ராட்சதர்களெல்லாம் தூங்கி
யெழுந்தவரைப்போல் எழுந்து மகிழ்ந்தார்கள் இந்திரன் முதலிய தே
வர்களும் புகழ்ந்து வச்சிரக் கொழுந்து கச்சிதமணிகள் உச்சிப்பணி
கள் அச்சஸ்திரமுதலியதெல்லாம்கொடுத்தனுப்ப அவர்களிடத்தில்

விடைபெற்றுக்கொண்டு கன்னியர்மூவரும் தானுங் காடுகள் செடிகள் முதலியயாவுங்கடந்து திருமால்புரியையோக்கிவரும்போது இவன்பெண்சாதியாகிய ரூபகன்னிகைபயந்து வீணையைமுறித்துவிட்டு வந்தோமே மனதில்வைத்துக்கொண்டு துன்பப்படுத்துவாரோ ஐயோ தெய்வலோகத்தையுமிழந்தோம் இவர்களையுஞ்சிறந்தோமினியேதாய் முடியுமோ எப்படி விளையுமோ தெரியவில்லையே தெய்வமேயென்று மெத்த தீனளாய்நடந்துக்கொண்டிருக்கும்வழியில்நடந்தவிந்தையைக்கேளும் பூர்வோத்திரத்திலிருந்த தேவேந்திரன் தேவகன்னிகையைக்குறித்து ஒரு சாபமிட்டிருக்கிறன் அதாவதுராட்சதவுபத்திரவமுடையவனுகையால் எந்தராசனவது எவ்வுலகின்மனிதனவது என்னுலகத்திலிருக்கும்வஸ்துக்கள்முதலாகிய ஸ்திரீகளைக்கைக்கொண்டுபோவாராகில் அவர்களை அக்கினிவளைக்கக்கடவதென்று சொல்லியிருக்கிறர் இதுஒருவருக்குந் தெரியாது ஒருவேளைதெரிந்தவர்களிருந்தாலுங்கியாபகமில்லை அப்படியிருந்த இந்தமகாசூரனுகியராசகுமாரன் இந்தக்கன்னியர்களையழைத்துக்கொண்டு அவர்களுடன்பேசாமல் மௌனமாய்வரும்போது பழய இந்திரன்கூறியிருக்கிறவாக்கியப்படிக்கு அக்கினிமலைவந்துசுற்றிக்கொண்டது இந்தக்கதைஇவ்விடத்திலிப்படியிருக்க இந்தமகாசூரனுடைய தாயுந்தந்தையும் தமயன்மாரும் விசனப்பட்டுத் தம்பிபோய்சிலநாளாச்சுதே இன்னம்வரக்காணோமென்றிரங்கி சோதிடநூல்வல்லோரையழைத்துபிரசனைகேட்டார்களவர்கள்கேட்ட லக்கினத்தையுந்திசையையுங்கட்டிவாசித்துப்பகுத்துசொல்லுகிறர் ஐயாபிள்ளைபோன காரியம் ஜெயம்வருகிறவழியில் அக்கினியாலபஜெயம் இரண்டாம்பாதத்திற்கு இப்போது நெருப்புக்குமத்தியிலகப்பட்டுக்கொண்டுமூன்றுமொன்றுந்தானும் ஒருசாமத்திற்குள் இரக்கப்போகிறர்களென்று சொன்னன் அதைக்கேட்டுதாய்தந்தைதமையன்முதலியபேரும்வேகமாய்வாகனத்திலேறிச்சென்றந்தமலைக்குநேரே போகும்போது அவ்விடத்தில்இரத்தினமயமாகிய ஒருகோவிலைக்கண்டுசதுரங்கசேனைகளையும்வெளியேநிறுத்தி வைத்துப்போட்டு தாங்கள்மாத்திரம் அந்தக் கோயிலுக்குள் நுழைந்து பார்க்கும்போதுஅதற்குக்கிழக்கே ஒருசமுத்திரப்போல்திருக்குளமிருந்தது அந்தக்குளத்தினடுவே நெருப்புமயமாயெரிகின்றது அங்கேஒருகல்லெழுதிநாட்டியிருக்கின்றது அதிலென்னவெழுதியிருக்கிறதென்றால்இந்தக் கோயிலின்மேலேறி அந்தஅக்கினிகுளத்திற்குதித்தால்அவர்களை பாதாளலோகத்திற் கொண்டுபோய் அங்கேஜெகதீஸ்வரனிருக்கிறர் அவரைதெரிசனஞ்செய்துக்கொண்டா லவர்களுக்கு நேரிட்டஆபத்துதீர்ந்துவேண்டியவரமும்பெறுவார்கள் ஒருஜாமத்திற்குள்நடக்கவேண்டியதென்று ஒருகல்லெழுதியிருக்ககண்டுதாய்தந்தைதமையன்முதலியபேரும் நீபோனான்மாட்டேனென்றுபசச்சரவுபட்டு

க்கொண்டிருக்கிறார்கள்ஐயோயினியென்னசெய்வோமென்று பெற்றவர்கள்போகத்துணிந்துப்பிராணன்யாவருக்குங்கரும்புக்கட்டியாகையால்பயந்துமிருக்கிறார்களென்று வடக்கேபோனதூதன் இந்தச்சங்கதிகளையெல்லாம் எங்கள் விக்கிரமார்க்கராஜனுக்குச்சொன்னால்இதைக்கேட்டவுடனே சந்தோஷங் கொண்டு பட்டியினிடத்தில் பட்டணத்தைப் பாதுகாக்கும்படி ஒப்பிவைத்துவேதாளத்தின்மீதேறி விண்ணுலகிற்றாவிஉச்சினியோங்காளியை உள்ளத்திற்கொண்டு வைரவர்பூசைமுடித்து அந்தக்கோயிலின்மேலேறி. அந்தக்குளத்திற்குதித்துஉள்ளேமூழ்கிபாதாள பரமேஸ்வரரைக்கண்டுதரிசித்துமந்திரவாளைக்கொண்டுநான் வந்தகாரியஞ் சித்திக்கவேணுமென்று வருந்தித் தொழுது வாழ்த்திய போது மங்கையர்கள் விடைமேலெழுந்தருளி நாலுகுளிகையை ராஜன்கையிற்கொடுத்துஉனக்குவேண்டியகாரியங்களுக்குஒரு குளிகையைப்போட்டால் எண்ணியஎண்ண முடியுமென்று அண்ணலுக்கருள் புரிந்துகண்ணுதல்மறைந்தார்மறுபடியு மந்தவழியேவந்துமகாசூரனைவளைத்துக்கொண்டஅனல்பருவதத்தைநோக்கி ஒருகுளிகையையெறிந்தார் உடனேஅதுதண்ணீர்போற்குளிர்ந்துபோச்சுது அப்போது அந்தமகாசூரனுந்தேவகன்னிகைகளும்வெளியேவந்தார்கள்இவ்விடத்தில்மகாசூரனுடைய தாய்தந்தைதமையன்ராஜராஜேஸ்வர பிரபுடனாகிய விக்கிரமார்க்கமகாராசனுமிருக்ககண்டுஎல்லோருக்குந் தீர்க்கதெண்டன்சமர்ப்பித்துசிந்தைகளித்துவந்தமகாசூரனை இந்திரனென்றுபுகழ்ந்துவிக்கிரமார்க்கராசன்மகிழ்ந்து இந்தகன்னியர்களால் வழியிலிறந்துவிட்டசன்னியாசிகளையெல்லாமெழுப்பி அவர்களுடைய சோளி பாதக்குறடுபிரம்புமுதலியவெல்லாங்கொடுத்து நீங்கள்போங்களென்றுசொன்னாரவர்கள்ஐயா அரசேநாங்கள்சன்னியாசிபாய்போனஎங்களுக்கு இந்தகன்னிகையர்பேரிலிச்சைவைத்துலச்சைகெடுவேனந்தகொடுமையினால்எங்களுயிரும்போய்எங்களுக்குப்பிராணபதமாய்ச்சம்பாதித்துவைத்திருந்த ஆயுதங்களும்போய்விட்டதுஎங்களுக்கிதுநல்லபிராயச்சித்த மாகிலுமின்னமிந்தகர்மபூமியிலெங்களுடையவினையையொழித்துவிடும்படியிழைப்புகூட்டிவிட்டபுண்ணியனாகியஉமக்குகொடுக்கிறோம் நீர்பெற்றுக்கொள்ளுமென்றுபெரியோர்விடைகொண்டுபோனார்கள் இப்பால்விக்கிரமார்க்கராசன் இந்தக்கன்னியரைமூவருக்குங்கொடுத்துஇந்தப்பெரியோர்கொடுத்தஆயுதநான்கையுமகாசூரனுக்குகொடுத்துபாதாளஈஸ்வரன் கொடுத்த மீதிக்குளிமூன்று ராசகுமாரர்களுக்குக்கொடுத்துஅவர்கள் தாய்தந்தையுடன்பட்டணத்துக்கனுப்பிவைத்துத்தானும்வேதாளமும் தன்னகரம்வந்துசேர்ந்தார் தேவரீரும் இப்பேர்ப்பட்ட இளமனதும்பரோபகாரமும் அளவில்லாத அன்புடையவராகி இந்தச்சிங்காதனமேறுமென்றுசொல்லிய பதுமைவாக்கியத்தைக்கேட்டுப் போசராசன்வெட்கித் தன்வாசஸ்தலத்திற்குப்போனான்.

முப்பத்தோராம்படிப்பதுமைசொல்லியகதை முற்றிற்று.

முப்பத்திரண்டாம்படிக்குக் காவலாகிய

மதனாபிஷேக ஜனரட்சகமோகினிப் பதுமைசொல்கதை.

முப்பத்திரண்டாநாட்காலையிலெழுந்துஸ்நாநசந்திசபதபமுடித்துக்கொண்டு ஆலயங்களெல்லாந்தொழுது அன்னதானமுதலானசொர்னதானங்களும்நடத்தி சிங்காதனத்திற்குப் பூசைசெய்வித்துதிக்குநோக்கித்தெண்டநிட்டெழுந்துமங்களகரமாய்ச்சிங்காதநமேறியபோது அந்தப்படிக்குக்காவலாகிய பதுமையானது எழுந்துபளிச்செனமின்னிகுலுக்கெனநகைத்து அரசனைத்தகைந்துவையகங்காக்குமகாராசபோசனே எங்களரசனைப்போல ராசனுமுண்டோ தெய்வந்தொழுதல் தேசம்புரத்தல் சத்தியவிரதந்தவந்தானம் உண்மை சீவகாருண்யஞ் செபம் தபம் பாக்கியம் மந்திரம் தந்திரம் மதியூகி யெந்திரம் அட்டமாசித்தி அணிகலாசித்தி இன்னமநேகம் அத்தனைவிதமும்பெற்ற எங்கள்கோமான் பெரும்புலியாண்டான் ஆகினுள் தன்னில் அருந்தவம்புரிந்து தெய்வத்தவமும் திரிக்காலக்கியானமும் புலி பட்சி முதலிய பாஷைகளெல்லாந்தனக்குத்தெரியும் தன்மையையும்பெற்றுமூந்நூற்றைம்பது நாளிற்பிறந்த ஒருகன்னிகைக்கு அந்தலக்கினத்தின்படி தலைச்சன்பிறந்தால் அவன்கையால் இவன் மரணமடைவானென்று அனுக்கிரகம்பெற்றான் இதுவுமல்லாமல் தன்னுட்டிலுள்ளயாவருக்கும் துற்போகம்துர்வியாதி துர்மரணம் துர்பயங்கரம் துற்குணமுதலிய துன்மையில்லாமற்பெற்றான் தேவேந்திரனால் முப்பத்திரண்டு பதுமைதாங்கியசிங்காதனமும்பெற்றான் இத்தன்மையாகச் சிறப்புடனிருந்த எங்கள்விக்கிரமார்க்கராசன் ஒருநாள் நகர்சோதனைவரும்போது மழைக்காற்றுதூற்றலும் இடியும்மின்னலும் யிருட்டுமாயிருந்தது இந்தமழைக்குச் சற்றுநேரம் ஒதுங்கியிருந்துபோவோமென் றோர்வீட்டின் தெருத்திண்ணையிலொதுங்கினர் அந்தவேளையில் பத்திரகிரியிலிருந்து வியாபாரஞ்செய்த பாக்கியவானாகிய மெள்ளாஞ்செட்டிதுறவுபூண்டுபரதேசியாய்தேசமெல்லாந்திரிந்து சிவானுபவம்பெற்று திகம்பரமூர்த்தியாய் இந்தவிக்கிரமார்க்கராசனுக் கனுக்கிரகம்பண்ணவேண்டுமென்று எங்கள்ராசனுடைய ஊழ்வினை சம்பந்தத்தால் அந்தப்பெரியவருக்கு இந்தநினைப்புவந்து உச்சினிபட்டணத்து வீதியில்வரும்போது நடுராத்திரியும்நடுமழையுமானதால் எங்களிராசனொதுங்கியிருக்குந் திண்ணையிற்போயிருங்கினர் எங்களிராசனதுகண்டு தானிருப்பதுதெரியாமற்பேசாதிருந்தார் அவ்விடத்தில் விக்கிரமார்க்கராசனிருப்பதை உன்னித்தெரிந்துக்கொள்ளாத பெரியவர்கண்ணைமூடிக்கொண்டு மௌனமாயிருந்தார் அப்போது அவ்விடத்திலொரு கௌவுளிநச்சு நச்சென்று சொல்லியது அதைக்கேட்டு அந்தப்பெரியவர் இந்தப்பட்டணத்தைச்சூழ்ந்த ஆறுபெருகிவருகிறதில் பிரவாகத்தில் ஒருபிணம்மிதந்து வருகிறதென்று சொல்லுகிறாயல்லவா அந்தப்பிணத்தைஇந்தவூராளுகிற விக்கிரமார்க்கராசனு மிருண்டாக்குவானென்றார் இவராரோ பெரியவரென்று உடனேயிராசன்பெரியவரை வணங்கி சுவாமி நான் விக்கிரமார்க்கனென்று

விளம்பினர் அப்பாமெத்தசந்தோஷமென்று ஆசீர்வதித்தார் அப்போது அரசன்பெரியவரைப்போற்றி ஆண்டவனே இப்போது தேவரீருரைத்த கெவுளிசாஸ்திரக்குறிப்பை நாமிருவரும்போய்ப்பார்க்கலாமென்ருர் அப்படியே பார்க்கலாமென்ருர் அப்படியே பார்க்கலாமென்று அம்மழையிலும் இருட்டிலும் வரும்போது ஒருநரி கூவியது இதென்னசுவாமியென்று இறைவன்கேட்க அதற்கந்தபெரியவர்சொல்லுகிறார் அப்பனேமுன்சொன்னபிணத்தின்மடியில் பன்னீராயிரம்பொன்னிருக்கிறது அந்தப்பாளுவினல் சலத்தில்மூழ்கியிரந்தானென்று சொன்னரந்தடையாளப்படிக்கு இருவரும்போய்ப்பார்த்தார்கள் அப்படியேபிணமிதந்துவந்து அதையெடுத்துக் கரைமேல்விட்டு அவனுடைய மடியைச்சோதிக்கும்போது அரைப்பையில்பன்னீராயிரம்பொன்னுமிருந்தது அதைக்கண்டுராசன் சந்தோஷமடைந்துமகாபெரியவரை வந்தித்துச்சிந்தித்து ஒதெய்வமே இந்தப்பிணத்தைநாமிருவருங்கண்டுசும்மாய்ப்போய்விடலாமா இதையெப்படியாகிலும் பிழைப்பூட்டுமென்றுராசன்சொல்ல அந்தப்பெரியவர் செத்தப்பிணத்தை பிழைக்கச்செய்யஅந்த மிருதசஞ்சீவிமந்திரசத்தியை அரசனுக் கருள்புரிந்து அதிரகசியமாய்ப்போய்விட்டார் அப்பால் இராசன் மிகவும்மெலிந்து கலிந்துமுகம்வாடி நான்குபுரமுமோடி பெரியவரைத்தேடிக்காணுமல்மனம்வருந்திவந்துயர்பெற்றெழுந்த இவ்வொருவனைப் பார்த்து உன்னூரேதுபேரேதுயென்று விசாரித்து அவனுக்குச் சிலநன்மைகளைச்செய்து காவலாளிகளைக்கூட்டி அவனூருக்கு அனுப்பிவித்துவிட்டு அதிகவுல்லாசத்துடன் அரசுபுரிந்து புஜனங்கள்மகிழவிருந்தார் போஜமகாராசனே கேளும் இதுவனாயினும் நீர் கொண்ட வாசையை நிராசையாக்கிக்கொள்ளும் இந்தச்சிங்காதனம் கைலாயபதியினுடைய கருணையினலுண்டானது இதைத்தேவேந்திரனுக்குக்கொடுத்திருந்து அந்தத்தேவேந்திரனிந்தச் சிங்காதனத்தின்பேரில் ஆயிரவருஷமிருந்து அரசாளக்கடவதென்று இந்தவிக்கிரமார்க்கராசனுக்குக்கொடுத்தார் இந்தமகாராசன் தன்சகோதரனுகிய பட்டியென்றுமந்திரியினல் இன்னூராயிரவருஷம்பெற்றுக்கொண்டுசிங்காதனத்தி லாறுமாதமிருந்துவாழ்ந்துவருவதும் நாட்டாலுங்காட்டாலும் ஆறுமாதமிருந்தநலத்தைப்பெறுவதுமாக இரண்டாயிரவருஷமிருந்துவாழ்ந்துமேற்சொன்னகன்னிகையின் பிள்ளையினல் காரணப்பட்டுமுடிந்தார் இப்பால்முப்பத்திரண்டுகன்னிகைகளாகிய எங்களுக்கு இப்பேர்ப்பட்டசாபம்வந்தது இந்தச்சாபம் எப்படி தீருமென்று கேட்கும்போது ஒப்பில்லாத உம்மால் தீருமென்றுரைத்தார்.

அப்படியே தேவரீரிங்கிவந்தீர் இனி யெங்களுக்கு நல்லகாலம் வந்தது ஐயனே யென்று சொல்லவே அந்த வார்த்தையைக் கேட்ட போசராசன் உங்களுக்குச்சாபம் வந்தவிதத்தை சொல்லுமென்று கேட்டார் பதுமைசொல்லத்தொடங்கியது வாருவ்விசால தேசவாச விசுவாச மகாபோசமகாராசனேகேளும் சிங்காரசிரோன்மணி-க, விசித்திரசிந்தாமணி-உ, மரசிலாமணி-ங, தெய்வசிந்தாமணி-ச, மனோரஞ்சிதா

ரு, அபரஞ்சி-௬, கருணாநிதிமணி-௭, தங்கநிதிமணி-௮, பதுமநிதிகலாமணி-௯, சற்குணமணி-௰, சகலகலாமணி-௰௧, விவேகசிந்தாமணி௰௨, நீதிசிந்தாமணி-௰௩, மதுரநிதிமணி-௰௪, சுந்தரமணி-௰௫, சத்தபரிபூரணமணி-௰௬, அணிமணி-௰௭, பரிபூரணகலாமணி௰௮, சரசசல்லாபவுல்லாசமணி-௧௯, இந்திரலீலாவதிமணி-௨௰, குணபூஷணி-௨௧வேளபார்த்த விரத்தினமணி-௨௨, மாணிக்கவாசகவல்லிமணி-௨௩ சுரதலீலமரகதமணி-௨௪, கற்பகவல்லிமணி-௨௫, அமிர்தவல்லிமணி-௨௬, சிவவாக்கியமணி-௨௭, பூங்காவனப்பொன்மணி-௨௮, சிரோன்மணி௨௯ மணிமந்திரசுந்திரமணி-௩௰, மின்னொளிமணி-௩௧, சுனகாட்சவல்லிமணி-௩௨. இந்தநாமங்களையுடைய முப்பத்திரண்டு பெண்களும் தேவதேவனாகியகைலாயபதியினுடைய மந்திர போகசபைக்குரியவர்களாய் சகலவைபவங்களையு மனுபவித்துக்கொண்டு படியேறிச்சேவித்துவந்த நாளையில்ஒருநாளெங்கள்வினைவசத்தால்செகதீசனாகியபரமேஸ்வரனையண்ணயும்படிக்கிச்சைகொண்டோம் அந்தக்குறிப்பைஅதிபாண்டரங்கனறிந்துநீங்கள்யாவருந்தகுதியில்லாயோசனைகளைச்செய்தபடியால்மயங்காமல் பிரதுமையாய் நிற்கக்கடவதென்று சபித்தார்நாங்களெல்லோரும் பூமியில்விழுந்து புரண்டழுது எழுந்து எங்களைக்காருமென்றிறந்தோம் அப்போதிறங்கி அந்தச்சிங்காதனமேறித் துரைத்தனஞ்செய்யப்போகிற நிரசிங்கமாகிய விக்கிரமார்க்கனுடைய திறமும் அறமும் மறமும் அறிந்துக்கொண்டு இரண்டாயிரவருஷம் இருந்தால் அப்புறம் இந்த சிங்காதனம் பூமியில் அழுந்திப்போம் அப்படி சிலநாளிருந்து மறுபடியும் பூலோகத்திற்கு நீங்கள் அனுபவத்திற் கண்டிருந்த விக்கிறமார்க்கனுடைய பெருமைத்திரங்களாகிய சரித்திரத்தை நீங்கள் முப்பத்திரண்டுபேரூஞ் சொல்லுவீர்க ளாகில் உங்களுக்குச் சாபவிமோசனமாகுமென்று சொல்லியிருந்தார் அந்தப்படியே நாங்களும் அனுபவித்துக் கடைசியில் தேவரீருக்கு விக்கிரமார்க்கனுடையகதையுஞ்சொல்லி உம்மையுந் தரிசித்தோம் எங்கள்சாபம் நீங்கியது இனி நாங்கள் சிங்காதனத்துடன் கைலாயத்திற்குப் போகிறோம் நீர் சகலகுணசம்பன்ன சாம்பிராச்சியராய் வாழக்கடவதென்று விடைபெற்று தெய்வலோகத்திற்கு நேராய் சிங்காதனத்துடன் எழும்பவே போசராசன் பார்த்து பூரித்து ஓ பொம்மையாகிய புண்ணியவதிகளே உங்கள் வாக்கியப் பிரகாரம் இந்தக் கதையை எழுதினோர் படித்தோர் கேட்டோர் முதலிய யாவருஞ் சுகமும் புத்தியும் பெறும்படிக்கு நித்தியவரங் கொடுமென்று போசராசன் கேட்க அப்படியே வரங்கொடுத்து கைலாயத்தைநோக்கிப் போய்விட்டார்கள் அப்போது இராசன் கண்ணிற்கண்டு கைக்கொள்ளப்போகிற பொருளை யிழந்த கருணையில்லாதவர்களைப்போல் தன்னரண்மனைக்குப்போய்ச் சேர்ந்தார்.

முப்பத்திரண்டாம்பதுமைசொல்கதை

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

கதையின் விபரம்.

கதையின் விபரம் முற்றிற்று.